
P. N. APPUSWAMI AIYAR



சிலப்பதிகாரம்

பிரஜோத்பத்தி வரு தை மீ முதல்
ஆங்கிரஸ வரு ஆனி மீ வரை

——o——

பகுதி க—சு

மதராஸ் லா ஜர்னல் பிரெஸ்
மயிலாப்பூர்
1932

P. N. APPROVED AMT. AIRAL

1-ஆம் பகுதி முதல் 6-ஆம் பகுதிவரையிலுள்ள பொருளடக்கம்

அநுபந்தம்:

பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை இயற்றிய ஸ்ரீ பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது—உ. வே. சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ... 1—18

ஆசிரியர் அறிவிப்பு: ... 343

முன்னுரை ... 5

இலக்கியம்:

கண்ணப்பர்—எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை ... 144

கலைகள்—உ. வே. சாமிநாத ஐயர் ... 7

கலைமகள்—பி. ஸ்ரீ. ... 175

சரஸ்வதி அல்லது மனோதத்துவம்—டி. கே. சிதம்பரநாதமுதலியார் ... 609

சைவசமயம்—எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை 67

தமிழ் வசனம்—ஸ்ரீ. ... 72

தாயுமானவர்—ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை 467, 615

நமது கல்விப்பயிற்சி—கே. ஸி. வீராசாமையர் ... 369

நமது கிராமவாழ்க்கை—கே. எஸ். வேங்கடரமணி 351

நாமும் வள்ளுவரும்—டி. கே. சிதம்பரநாத முதலியார் ... 79

பண்டைத் தமிழ்நாட்டு அணிகலன்கள்—ச. சோமசுந்தர தேசிகர் ... 284

மணிமேகலையும் புத்தஜாதகமும்—மு. இராகவையங்கார் ... 159

மலர்வனம்—ஒரு கவிமலர்—பி. ஸ்ரீ. ஆச்சார்யா ... 395

மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயரவர்கள்—டி. எஸ். இராமச்சந்திர ஐயர் ... 64

முஹம்மதுநபியும் அவரது மார்க்கமும்—பா. தாவூத் ஷா ... 382

லௌகிகதர்மம்—வே. ஸாரநாதன் ... 377

வண்டானம் முத்துசாமி ஐயர்—உ. வே. சாமிநாத ஐயர் ... 273

ஸ்ரீகாளஹஸ்தி ஸ்தல மாஹாத்ம்யம்—எஸ். அனவரத விநாயகம் பிள்ளை ... 474

கதை:

அநுபவநாடகம் அல்லது "தப்பிலி கப்"—ரா. கிருஷ்ணமூர்த்தி ... 528
அவலக்ஷணத்தின் விலை— கி. வா. ஜகந்நாதன் ... 623
அன்பின் ஜோதி—ஸ்ரீ. ... 317
எலியாழ்குடித் தலபுராணம்—பி. ஸ்ரீ. ஆச்சார்யா 291
கல்பகம்—கே. சாவித்திரி அம்மாள் ... 200, 304
கலெக்டர் எம்டன்—ந. இராமசாமி ... 644
கூளிப்பேயும் கட்டுச்சோறும்—கி. வீரபாகுப் பிள்ளை ... 633
கோபால செட்டியார் கோதானம்—ஆங்கீரஸர் ... 209
சங்கராந்தி தேவன் பிறந்த நாள்—கார்க்கியர் ... 93
சோதிடப்புலி சோணைசலம்—டி. எஸ். இராமச்சந்திர ஐயர் 321, 434, 548, 640
முதுமை நிலயம்—வி. விசாலாக்ஷியம்மாள் ... 192
விகடமஞ்சரி—கோணங்கி ... 455
வீண்வம்பு—பெ. கோ. சுந்தரராஜன் ... 439
ஜ்வரத்தால் விளைந்த கேடு—வி. வி. நாராயண ஐயர் 542

கவி:

கபாலீசர் தோத்திரம்—எஸ். வையாபுரிப் பிள்ளை ... 567
கலிமகள் வணக்கம்—ஊ. சா. வேங்கடராம ஐயர் 109
கலிமகள் வாழ்த்து—கி. வா. ஜகந்நாதன் ... 3
கலிமகள் வாழ்த்து—என். கோடீசுவர ஐயர் ... 341
கற்பகவல்லி தோத்திரம்—எஸ். வையாபுரிப் பிள்ளை 569
திருமகள் துதி—என். கோடீசுவர ஐயர் ... 465
திருமயிலைக் கபாலீசர் பஞ்சரத்தினம்—உ. வே. சாமிநாத ஐயர் ... 459
திருமயிலைப்பதிகம்—டி. எஸ். இராமச்சந்திர ஐயர் 229, 339
தொழிற்சிறப்பு—ரா. இராகவையங்கார் ... 171, 281
நான் கண்ட நாற்பறவைகள்—ஆ. வ. பதுமநாப பிள்ளை ... 478, 619
புதற் மகனையிழந்த தாயின் மனந்தேறச்செய்தல்—எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை ... 362
'வருக, கலிமகள்'—சுகவனம் சிவப்பிரகாசன் 456
வாழ்த்து—ரா. இராகவையங்கார் ... 1

குறிப்புந்திரட்டும்: 105, 224, 330, 457, 559, 667

சரித்திரம்:

அச்சுவித்தையின் வரலாறு—எஸ். வையாபுரிப் பிள்ளை ... 83

அரசியல் முறை—தி. சிவராமசேதுப் பிள்ளை ... 89, 189, 270, 429, 525, 591

உத்தரதுருவத்திலிருந்த பூர்விக ஆரியர்கள்—வி. சுப்பிரமணிய ஐயர் ... 522

தமிழ்வேந்தரின் இமயப்படையெடுப்பு—மு. இராக வையங்கார் ... 56, 663

,, மறுப்புரை—தி. இளையாழ்வான் ... 657

பண்டைத்தமிழரசர்கள்—ஊ. சா. வேங்கடராம ஐயர் ... 516

பராந்தகபாண்டியன் சாஸனம்—எஸ். தேசிக விநாயகம் பிள்ளை ... 585

பாஹியன்யாத்திரை வரலாறு—ஜி. தாத்தாச்சாரி 423, 508, 576

மனிதவர்க்கத்தின் முதற் புத்தகங்கள்—ஒ. பி. தேசிகன் ... 134, 259

ராணி ராஜஹிம்ஹன்—கே. ஜி. சங்கர் ... 265

சாஸ்திரம்:

இந்தியாவின் பொருள்நிலை—ஜே. எஸ். பொன்னையா நாடார் ... 412, 598

இரஸவாதம்—கே. வி. வீராராகவையர் ... 500

குழலற்ற கிரந்திகள்—எண்டோக்ரைன் அங்கங்கள்—என். ஆர். ரகுநாதாச்சாரி ... 398

சில வேடிக்கை அல்லது வேட்டுவப் பிராணிகள்—எம். ஏகாம்பரநாத ஐயர் ... 124

செடிகளும் மிருகங்களின் தொண்டும்—எம். எஸ். சபேச ஐயர் ... 124

செங்கிறப்பூ—பி. என். அப்புஸ்வாமி ஐயர் ... 30

நம் ஆகாரப்பொருள்களின் குணதிசயங்கள்—டி. என். எஸ். இராகவாச்சாரி ... 253

பண்டைத்தமிழர் காலங்கணித்த வகை—பிரான்சிஸ் கிங்ஸ்பரி ... 256

பாம்புகள்—எம். ஏகாம்பரநாத ஐயர் ... 47

பிராணிகள் தாமே உண்டாகுமா ?—வி. ஆர். துரை ஸ்வாமி சாஸ்திரி ... 604
பிராணிகளுள் கூட்டுவாழ்க்கை—எம். ஏகாம்பர நாத ஐயர் ... 247
பூச்சிமகாநாடு—டி. கே. விசுவநாத ஐயர் ... 36
பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம்—பி. ஆர். சிதம்பர ஐயர் ... 131
போரிடும் செடிகள்—எம். எஸ். சபேச ஐயர் ... 239
மனித சரீரத்தின் இரசாயனம்—காந்தேகர்—பி. என். அப்புஸ்வாமி ஐயர் ... 593
மிருகங்களின் தோல்—எம். கிருஷ்ணன் ... 53
வழக்கமும் சூழ்வும்—பி. என். அப்புஸ்வாமி ஐயர் 117, 235
வைரமும் அதன் குணதிசயங்களும்—எச். நாராயண ராவ்—பி. என். அப்புஸ்வாமி ஐயர் ... 401, 485

சிறுவர் பகுதி:

குரங்குகள் தோட்டத்துக்கு ஜலம் விட்டது—பி. என். அப்புஸ்வாமி ஐயர் ... 556
குருபக்தி—தமாஷ்வாலா ... 327
சிறு கதைகள்—வே. நாராயண ஐயர் ... 221
தந்திரமுள்ள திருடன்—ச. கு. கணபதி ஐயர் ... 653
மீன்கள்—சி. கே. லக்ஷ்மி அம்மாள் ... 99, 215

நற்கலை:

காஞ்சீபுர மதிலோவியங்கள்—எம். எஸ். சுந்தர சர்மா ... 462
குரங்காட்டி—எம். எஸ். சுந்தர சர்மா ... 231
குழந்தைகளுக்கு ஸங்கீதம் கற்றுக்கொடுக்கும் முறை—பவானி ஸ்வாமிநாதன் ... 112
தமிழ் நாடகத்தின் தற்காலநிலை—சிவ. கண்ணுசாமி 570
பகீரதன் தவம்—மகாபலிபுரம்—க. அ. நீலகண்ட சாஸ்திரி ... 20
பல்லவச் சிற்பங்களில் தேவிக்கு இடும் தலைப்பலி—க. அ. நீலகண்ட சாஸ்திரி ... 416
ரஹிகபுரத்து இசைவிஞ்ஞர்—கே. வி. இராமச் சந்திர ஐயர் ... 344
ஸரஸ்வதி—தி. கோ. ஆராவமுதன் ... 110

மதிப்புரை: 108, 227, 337, 458, 563, 669

மாதர் பகுதி:

பின்னலிச் சித்திரம்—வி. விசாலாக்ஷி அம்மாள் ... 324
மாதர் கடை—வி. விசாலாக்ஷி அம்மாள் ... 650
முன்னுரை—வி. விசாலாக்ஷி அம்மாள் ... 96
வடாம்—வி. விசாலாக்ஷி அம்மாள் ... 553
வேனில் உடை—வி. விசாலாக்ஷி அம்மாள் ... 452
ஸ்திரீகள் மகாநாடு—காட்சிவிநோதம்—வி. விசாலாக்ஷி அம்மாள் ... 211

கட்டுரை எழுதியவர்கள்

பி. என். அப்புஸ்வாமி ஐயர்

குரங்குகள் தோட்டத்திற்கு ஜலம் விட்டது ... 556
செங்கிறப்பூ ... 30
மனித சரீரத்தின் இரசாயனம் ... 593
வழக்கமும் சூழ்வும் ... 117, 235
வைரமும் அதன் குணதிசயங்களும் ... 401, 485

எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை

கண்ணப்பர் ... 144
சைவசமயம் ... 67
ஸ்ரீகாளஹஸ்தி மாஹாத்ம்யம் ... 474

ஆங்கீரஸர்

கோபால செட்டியார் கோதானம் ... 209

பி. ஸ்ரீ. ஆசார்யா

எலியாழ்குடித்தலபுராணம் ... 291
கலைமகள் ... 175
மலர்வனம்-ஒரு கவிமலர் ... 395

தி. கோ. ஆராவமுதன்

ஸரஸ்வதி ... 110

டி. என். எஸ். இராகவாச்சாரி

நம் ஆகாரப்பொருள்களின் குணதிசயங்கள் ... 253

மு. இராகவையங்கார்

தமிழ் வேந்தரின் இமயப்படையெடுப்பு ... 56, 663
மணிமேகலையும் புத்தஜாதகமும் ... 159

ரா. இராகவையங்கார்

தொழிற் சிறப்பு ... 171, 281
வாழ்த்து ... 1

டி. எஸ். இராமச்சந்திர ஐயர்

சோதிடப்புலி சோணசலம் 321, 434, 548, 640
திருமயிலைப்பதிகம் ... 229, 339
மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர்வர்கள் ... 64

கே. வி. இராமச்சந்திர ஐயர்
ரஹிகபுரத்து இசைவினைதர் ... 344
ந. இராமசாமி
கலெக்டர் எம்டன் ... 644
தி. இளையாழ்வான்
தமிழ் வேந்தரின் இமயப் படையெடுப்பு—ஒரு மறுப்புரை ... 657
எம். ஏகாம்பரநாத ஐயர்
சில வகிகாரி அல்லது வேட்டுவப் பிராணிகள் ... 124
பாம்புகள் ... 47
பிராணிகளுள் கூட்டுவாழ்க்கை ... 246
சிவ. கண்ணுசாமி
தமிழ் நாடகத்தின் தற்கால நிலை ... 570
ச. கு. கணபதி ஐயர்
தந்திரமுள்ள திருடன் ... 653
காந்தேகர்
மனித சரீரத்தின் இரசாயனம் ... 593
கார்க்கியர்
சங்கராந்தி தேவன் பிறந்த நாள் ... 93
ரா. கிருஷ்ண மூர்த்தி
அநுபவ நாடகம் அல்லது "தப்பிலி கப்" ... 528
எம். கிருஷ்ணன்
மிருகங்களின் தோல் ... 53
என். கோடீசுவர ஐயர்
கலைமகள் வாழ்த்து ... 341
திருமகள் துதி ... 465
கோணங்கி
விகட மஞ்சரி ... 455
கே. ஜி. சங்கர்
ராஜராஜவலிம்ஹன் ... 265
எம். எஸ். சபேச ஐயர்
செடிகளும் மிருகங்களின் தொண்டும் ... 24
போரிடும் செடிகள் ... 239
உ. வே. சாமிநாத ஐயர்
கலைகள் ... 7
திருமயிலைக் கபாலீசர் பஞ்சரத்தினம் ... 459

வண்டானம் முத்துசாமி ஐயர் ... 273

ஸ்ரீபத்மகிரி நாதர் தென்றல் விடு தூது (அநுபந்தம்) 1—18

கே. சாவித்திரி அம்மாள்

கல்பகம் ... 200, 304

பி. ஆர். சிதம்பர ஐயர்

பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம் ... 131

டி. கே. சிதம்பரநாத முதலியார்

சரஸ்வதி அல்லது மனோதத்துவம் ... 609

நாமும் வள்ளுவரும் ... 79

சுகவனம் சிவப்பிரகாசன்

'வருக, கலிமகள்' ... 456

தி. சிவராம சேதுப்பிள்ளை

அரசியல் முறை 89, 189, 270, 429, 525, 591

எம். எஸ். சுந்தர சர்மா

காஞ்சீபுரமதிலோவியங்கள் ... 462

குரங்காட்டி ... 231

பெ. கோ. சுந்தரராஜன்

வீண் வம்பு ... 439

வி. சுப்பிரமணிய ஐயர்

உத்தர துருவத்திலிருந்த பூர்விக ஆரியர்கள் ... 522

ச. சோமசுந்தர தேசிகர்

பண்டைத் தமிழ்நாட்டு அணிகலன்கள் ... 284

தமாஷ் வாலா

குருபக்தி ... 327

ஜி. தாத்தாச்சாரி

பாஹியன் யாத்திரை வரலாறு 423, 508, 576

பா. தாவூத் ஷா

முஹம்மது நபியும் அவரது மார்க்கமும் ... 382

வி. ஆர். துரைஸ்வாமி சாஸ்திரி

பிராணிகள் தாமே உண்டாகுமா ? ... 604

எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை

பராந்தக பாண்டியன் சாஸனம் ... 585

புத்தர் மகனையிழந்த தாயின் மனந்தேறச் செய்தல் 362

ஓ. பி. தேசிகன்

மனிதவர்க்கத்தின் முதற் புத்தகங்கள் ... 134, 259


ஸி. வி. நாராயண ஐயர்
ஜ்வரத்தால் வந்த கேடு ... 542
வே. நாராயண ஐயர்
சிறு கதைகள் ... 221
எச். நாராயண ராவ்
வைரமும் அதன் குணதிசயங்களும் ... 401, 485
க. அ. நீலகண்ட சாஸ்திரி
பகீரதன் தவம்-மகாபலிபுரம் ... 20
பல்லவச் சிற்பங்களில் தேவிக்கு இடும் தலைப்பலி ... 416
ஆ. வ. பதுமநாப பிள்ளை
நான் கண்ட நாற்பறவைகள் ... 478, 619
பவானி ஸ்வாமிநாதன்
குழந்தைகளுக்கு ஸங்கீதம் கற்றுக்கொடுக்கும் முறை ... 112
பிரான்சிஸ் கிங்ஸ்பரி
பண்டைத் தமிழர் காலங்கணித்தவகை ... 256
ஜே. எஸ். பொன்னையா நாடார்
இந்தியாவின் பொருள் நிலை ... 412
ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை
தாயுமானவர் ... 467, 615
என். ஆர். ரகுநாதாச்சாரி
குழலற்ற கிரந்திகள் ... 398
சி. கே. லக்ஷ்மி அம்மாள்
மீன்கள் ... 99, 215
வி. விசாலாக்ஷி அம்மாள்
பனை ஓலைச் சித்திரம் ... 324
மாதர் கடை ... 650
முதுமை நிலயம் ... 192
முன்னுரை ... 96
வடாம் ... 553
வேனில் உடை ... 452
ஸ்திரீகள் மகாநாடு-காட்சி விநோதம் ... 211
டி. கே. விசுவநாத ஐயர்
பூச்சி மகாநாடு ... 39

சி. வீரபாகு பிள்ளை
கூளிப்பேயும் கட்டுச்சோறும் ... 633
கே. ஸி. வீரராகவையர்
இரஸவாதம் ... 500
நமது கல்விப் பயிற்சி ... 369
கே. எஸ். வேங்கடரமணி
நமது கிராம வாழ்க்கை ... 351
ஹ. சா. வேங்கடராம ஐயர்
கலைமகள் வணக்கம் ... 109
பண்டைத் தமிழரசர்கள் ... 516
எஸ். வையாபுரிப் பிள்ளை
அச்சுவித்தையின் வரலாறு ... 83
கபாலீசர் தோத்திரம் ... 567
கற்பகவல்லி தோத்திரம் ... 569
கி. வா. ஜகந்நாதன்
அவலக்ஷணத்தின் விலை ... 623
கலைமகள் வாழ்த்து ... 3
ஸ்ரீ.
அன்பின் ஜோதி ... 317
தமிழ் வசனம் ... 72
வே. ஸாரநாதன்
லௌகிக தர்மம் ... 377

படங்கள்

		பக்கம்
அர்த்த சந்திரவலை	...	219
ஆட்டர்	...	54
ஆறு	...	132
ஆறுபட்டைக்கட்டி	...	404
இளஞ்செடி சாய்தல்	...	243
ஈ	...	36
எட்டுப்பட்டைக்கட்டி	...	404
கட்டையினுள்ளே நூல் பரவுதல்	...	242
கடல் அனிமோனி	...	250
கண்ணப்ப நாயனார் (புனையா ஓவியம்)	...	144
கண்ணுடி விரியன்	...	52
கஸ்கூடா	...	244
கஸ்கூடா உணவெடுத்தல்	...	244
காஞ்சீபுரம்கைலாசநாதர்கோயில்ஓவியம்(ஆப்டோன்), 1-5		462-4
காஞ்சீபுரம் கைலாசநாதர் கோயில் ஓவியம் (வர்ணப் படம்), 6	...	464
குரங்காட்டி (புனையா ஓவியம்)	...	231
குழலற்ற கிரந்திகள்	...	398
குழிப்பன்னி	...	127
குழிப்பன்னியும் பொனலும்	...	128
கொசு	...	44
சங்கு நண்டுகள்	...	216
சன்யாஸி நண்டு	...	250
சன்யாஸி நண்டும் கடல் அனிமோனியும்	...	251
சிலந்தியின் கால்	...	126
சிலந்தியின் நூலரும்புகள்	...	124
சிலந்தியின் வலை	...	125
சிலந்தியின் விஷக்கருவிகள்	...	126
ட்ஸெட்ஸி ஈ	...	43
டிரட்ஜ் வலை	...	220
டிராஸிரா	...	245
தியாகராஜ சுவாமிகள்	...	227

தியானப் பூச்சி	...	130
திருச்சிராப்பளளிக கீழ்க்குகையிலுள்ள சிற்பம் (ஆப் டோன்)	...	418
தூண்டில் மீன்	...	128
தெள்ளுப்பூச்சி	...	37, 248
தொன்கு பட்டைக் கட்டி	...	404
நூல்கள் உள்ளே பரவுதல்	...	242
நெபந்திஸ்	...	246
பாம்பின் எலும்புக்கூடு	...	48
பாம்பின் செதில்கள்	...	47
பாம்பின் பற்கள்	...	50
பாம்பின் விஷக்கருவிகள்	...	51
பீச்சாங்குழல் மீன்	...	129
புள்ளமங்கைச் சிவன் கோயிலிலுள்ள சிற்பம் (ஆப்டோன்)		419
பூச்சிகள் மகரந்தப் பொடியை எடுத்தல்	...	29
பூஞ்சக்காளான்	...	240
பேன்	...	37, 247
மகாபலிபுரச் சிற்பம் (ஆப்டோன்)	...	21
மகாபலிபுரம்	....	108
மகாபலிபுரம்—பகீரதன் தவம் (ஆப்டோன்)	...	20
மரத்தின்மேல் காளான்	...	241
மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி உ. வே. சாமிநாத ஐயரவர்கள் (ஆப்டோன்)	...	64
மாமல்லபுரம், திரௌபதி இரதத்திலுள்ள துர்க்கையின் உருவம் (ஆப்டோன்)	...	416
மாமல்லபுரம், வராகமண்டபச் சிற்பம் (ஆப்டோன்)	...	417
மீன்கள்	...	100
மீன்பிடித்தல்	...	218
முள்ளம்பன்றி	...	54
மூட்டைப்பூச்சி	...	38
ரசிகர் ஞாபகம் (ஆப்டோன்)	...	567
ரம்பாயிட் வலை	...	219
வரிக்குதிரை	...	55
ஸர்ப்பம்	...	51
ஸரஸ்வதி (ஆப்டோன்)	...	110
ஸீல்	...	54



வாழ்த்து

ரா. இராகவையங்கார்

தமிழ்மணம் பரப்பி யறிவோளி விரித்துச்
சாந்தநல் லருணெறி தழுவி
அமிழ்தமென் னடைச்சொற் றேர்மிசை மதிதோ
றணிபெற மயிலெயி னேழுந்தீண்
டிமிழிசை முழங்கப் பெருங்கலை மகணீ
டினிதுலா வருவளா லிவளைக்
கமழ்தரு பரிவி னெதிர்கொடு போற்றிக்
களித்துளந் தளிர்க்குநல் லுலகே.

நிலைமகளாய **'கலைமகள்'** என்று தெய்வத் திருப்பெயர் பூண்ட இவ் வினிய பத்திரிகை என்னுஞ் செந்தமிழரசி தனக்கியல்பாக வுள்ள மணத்தைப் பரவச் செய்து இருள் நீக்கி அறிவொளியை விரியச்செய்து யாவர்க்குஞ் சித்தம் உபசாந்தம் அடைவதற்குரிய அருள்வழியைத் தழுவி மெல்லிய நடையுடன் இயல்கின்ற அமிழ்தம் போன்ற மொழியாகிய தேர்மிசைத் திருவிழாக் கொள்பவளாகி மதிதோறும் புதிய அணிபூண்பவளாய்த் திருமயிலை நகரத்தெழுந்து வாயாற் பரவுகின்ற புகழ் எல்லாருடைய செவியிலும் முழங்க இந் நாட்டில் நெடிதாக இனிதாக உலாக்கொண்டு வருவளென்றும் இவளை நல்லுலகம் கமழ்கின்ற அன்புடன் போற்றி மகிழ்ந்து மனந் தளிர்க்குமென்றுங் கூறி வாழ்த்தியவா றிஃதாகும்.

இதன்கண் இப்பத்திரிகை தானெடுத்துக்கொண்ட நன் மொழியின் மணங்கமழச் செய்வதும், யாவர்க்கும் அறிவொளி பெருகச் செய்வதும், உபசாந்தத்தைப் பயனுகக் கொண்ட அருள் வழியை வளரச்செய்வதும், தலைமையாகக் கொள்வதென்றும், இவற்

றைப்பற்றிய வியாசங்கள் மெல்லிய நடையில் அமிழ்த மொழியில் ஒரு பெருந்தேர்போல் அலங்கரிக்கப்பெற்று வனப்புடையனவாய் வெளிவருமென்றும், இவ்வாறு மாதந்தோறும் புதிய புதிய அழகு பெற்று எங்கும் கீர்த்தி முழங்க உலகம் மகிழ்ந்துபோற்ற உலாவு மென்றும், இந் நல்வரவின் பயனுக யாவர்க்கும் நல்லொழுக்கங்க ளாலும், நற்குணங்களாலும் மனந்தழைக்குமென்றுங் குறித்துள் ளது காணலாம். தெய்வ அரசி உலாவரற்கேற்ப மணமும் ஒளியும் நெறியும் மெல் நடைத்தேரும் இசைமுழக்கமும் போற்றி மகிழ்ந்து மனந்தளிர்த்தலும் கூறப் பெற்றன.

கற்றோர்க்குப் பேரின்பம் பயக்க வல்ல இவ்வரிய பெரிய பத்திரிகைத் திருப்பணி உலகம் மகிழ இனிது நிறைவேறும்வண் ணம் எல்லாம்வல்ல இறைவன் அருள அவன் திருவடிகளை மன மொழி மெய்களால் இறைஞ்சுகின்றேன்.

கலைமகள் வாழ்த்து

கி. வா. ஜகந்நாதன்

அறுசீர்ச்சழிநெடிலடியாசிரிய விருத்தம்

1. பார்வளரும் அறுபத்து நான்குகலை யாங்கதிரைப்
பரப்பி யோவாச்
சீர்வளரும் தூறிதழ்சேர் வெண்கமலத் தவிசினிலே
சிறக்க மேவி
ஏர்வளரும் அறிவுயர்வு பெறவருள்செய் கலைமகளாம்
எம்பி ராட்டி
வார்வளரும் இயலினொரு டகத்தினினைந் திசைவாழ்த்தி
வணங்கு வோமே.

2. வெள்ளைத்தண் டாமரையில் மேவிடுவாள் புவிபடைக்கும்
வேதன் நாவில்
கொள்ளைத்தண் ணமுதூற வீற்றிருப்பாள் ஞானமனக்
கோயிற் குள்ளே
மெள்ளத்தன் திருவருளின் ஒளிவீசி யிருந்திடுவாள்
விழைவார் பாலே
பள்ளத்திற் பாய்புனல்போல் அறிவுநிறைந் துறச்செய்வாள்
பாதம் போற்றி.

3. உரையினிலே உள்ளத்தே தூய்மைநலம் மேவிடினங்
கோங்கு மின்பத்
திரையினிலே ஞானமெனும் வெண்மலரிற் கலைமகள்பூந்
திருத்தாள் வைப்பாள்
புரையினிலே நின்றவர்தம் போக்கினிலே வீண்பெருமை
புகட்டும் எட்டிச்
சுரையினிலே யவளிருத்தல் இல்லையில்லை மற்றிதுவே
துணிவு கண்டீர்.

4. எச்சமயத் தவர்களுநங் கலைமகளை வணங்குறுவா
ரென்னின் ஞான
நிச்சயமே யருள்தெய்வம் அவளல்லாற் பிறருண்டோ
நிலையா வாழ்வில்

அச்சமிலா வறிவும்பின் மறுமையிலின் படையுமுயர்
அறிவும் ஆர்ந்த
விச்சைகளுந் தருமவளை யனுதினமும் புகழ்பாடி
வேண்டு வாமே.

5. புத்தகத்தைப் புரட்டிடலாற் புதுமலரால் வணங்குதலாற்
பொற்பொன் றில்லை
ஒத்தகத்தைச் சுத்தமுற வைத்துப்பின் கலைமகளை
உருகும் அன்பிற்
சித்தமிசை யெழுந்தருளச் செயவல்ல பேரறிஞர்
சீரார் பூவில்
எத்தகைய கலைகளைத்தா மறியார்மற் றெதுவுமவர்க்
கெளிது மாதோ.

6. அறிவில்லை யெனிலொருவ னழுங்கியருந் துயர்படுதல்
அறியார் யாரே
செறிவுள்ள செல்வந்தா னறிவுடையோன் பாலிருந்தாற்
சிறக்கு மன்றே
மறிவில்லாப் பேரறிவை வழங்குகலை மகளருளே
வாய்ப்பின் எல்லாம்
நெறியுள்ள வின்பமும்நற் புகழும்விளைப் பனவன்றே
நீணி லத்தே.

முன்னுரை

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."—குறள்.

கற்றறிந்தவர்களின் கடமை தாங்கள் கற்ற கல்வியினால் உலகம் இன்பமடையச் செய்வதேயாகும். கல்விச்செல்வம் ஒன்றே மற்றைச் செல்வங்களைப்போல எல்லாருக்கும் கொடுப்பதனாற் குறையாமல் வளருமென்பது யாவருமறிந்ததே. இதைக் கருதியே நம் நாட்டிலிருந்த பெரியோர்கள் தாங்கள் கற்பதும் கற்றவற்றைப் பிறருக்குச் சொல்வதுமாகியவற்றையே தங்கள் தொழிலாகக் கைக்கொண்டிருந்தார்களேயன்றி வேறுவிதமான தொழில்களைச்செய்து பொருளீட்டல் முதலியவற்றில் முயலவில்லை. அறிவைப் பரவச் செய்வதற்கு வேண்டிய சாதனமொன்றும் இல்லாமல் இருந்தும் அவர்கள் இத்தேசத்தில் கன்னியாகுமரி முதற் காசி வரையிற் கால்நடையாகச் சென்று உபதேசித்து வந்தார்கள்.

இக்காலத்தில் அறிவை விருத்திசெய்வதற்கான சாதனங்கள் பலவுள்ளன; அவற்றுள் பத்திரிகைகள் மூலமாய் அரிய விஷயங்களை எல்லாரும் தெரிந்துகொள்ளும்படி செய்வது சுலபமெனக் காண்கிறோம். பிறதேசங்களிலும், நம் தேசத்தில் வங்காளம் மகாராஷ்டிரம் ஆந்திரம் முதலிய இடங்களிலும் அறிவை வளர்ப்பதற்கென்றே ஏற்பட்ட உயர்தரப்பத்திரிகைகள் பல இருப்பதுபோல் நம் தமிழ்நாட்டிலும் இருக்கவேண்டுமென்று கலைகள்வல்ல கனவான்கள் தீர்மானித்ததற்கிணங்க, 'கலைமகள்' என்ற பெயருடன் இப் பத்திரிகையை வெளியிடத் துணிந்தோம். பிரபலமான தமிழ் வித்துவான்களும் ஆங்கிலபாஷையிலும் தமிழிலும் தேர்ச்சியடைந்த பல கலைஞர்களும் இதற்கு விஷயதானம் செய்துவருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நம் தாய்மொழியாகிய தமிழில் உள்ள பலநூல்களின் அருமைபெருமைகளை எடுத்துக்காட்டி யாவரும் இன்புறச் செய்வதோடு வேறுபாஷைகளிலும் வேறுதேசங்களிலும் உள்ள அரிய சாஸ்திர விஷயங்களையும் நம் தேசத்துக்கு அவசியமான சரித்திர ஆராய்ச்சி விஷயங்களையும் கல்விமான்களுடைய உதவியினால் இப் பத்திரிகை மூலமாய் வெளிப்படுத்தலாமென்று நினைக்கிறோம்.

அன்றியும் நீதிதருமங்களை உணர்த்தும்படியான கதைகளும், சிறுவர்களும் பெண்களும் களிப்படையக்கூடிய விநோத விஷயங்களும் அமைக்கவேண்டுமென்பது எமது கருத்து. இவ்விஷயங்களெல்லாம் கூடியவரையில் எல்லாரும் எளிதில் அறிந்துகொள்ளும்படியான நடையிலேயே அமைத்து இருக்கும். இதில் நம் தேசத்திலுள்ள சிற்பம், ஓவியம், சங்கீதம் முதலிய கலைகளின் மேம்பாட்டைப் படங்களுடன் எடுத்துக்காட்டவும் முயல்வோம். தமிழர்கள் அனைவரும் இப்பத்திரிகையை ஆதரித்து விருத்தியாகும்படி செய்வார்களென்று நம்புகிறோம்.

கலைகள்

உ. வே. சாமிநாத ஐயர்

வேண்பா

"இமையவர்கண் மோலி யிணைமலர்த்தாள் சூடச்
சமயந் தொறுநின்ற தையல்—சமய
மலைமடந்தை வாச மலர்மடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்."

'கலைமகள்' என்னும் இப்பத்திரிகைக்குப் பொருத்தமான ஒரு விஷயம் எழுதும்படி பத்திராதிபர் விரும்பினமையால், கலைகளைப் பற்றிய சில விஷயங்கள் இங்கே எழுதலாயின.

கலைகளுக் கெல்லாம் தெய்வமாக விளங்கும் தேவியைக் கலைமக ளென்று வழங்குகின்றோம்.

"ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்"

என்ற செய்யுளால் கலைகள் அறுபத்துநான்கென்பதனையும் அவற் றைக் கலைமகள் அருளிச்செய்பவ ளென்பதனையும் அறியலாம்;

"எண்ணெண் கலையு மிசைந்துடன் போக"
"எண்ணுன் கிரட்டி யிருங்கலை" (சிலப்பதிகாரம்)
"யாழ்முத லாக வறுபத் தொருநான்
கேளிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக்
கலையுற வகுத்த" (பெருங்கதை)
"செம்மறையா ரணமுதலு லீரொட்டுக் கலைமுழுதுந்
தெரிந்தா ளந்த
மெய்ம்மறையார் கலையனைத்து மேகலையா மருங்கசைத்த
விமல யம்மா" (திருவிளையாடல்)

என வருவனவற்றாலும் அறுபத்து நான்கு கலைகளுண்மை பெறப் படும்; அவை அக்கர இலக்கண முதல் அவித்தைப் பிரயோகம் வரை உள்ளனவாகும்; வேறுவகையாகக் கூறுவதும் உண்டு. அறுபத்து நான்கு கலைகளையன்றி அவற்றைப் பின்பற்றிய கலைகளும் உள்ளன என்பர். அந்தணர்க்குரிய கலைகள் இவை, மன்னருக்குரிய கலைகள் இவை, வணிகருக்குரிய கலைகள் இவை, வேளாளர்க்குரிய கலைகள்

இவை, மகளிருக்குரியன இவை, பொது இவை யென அவற்றுள் வேறுபாடுண்டு. தமிழிலுள்ள பழைய நூல்களில் தமிழ்நாட்டிலும் பிற நாட்டிலும் இருந்த கலைகளைப்பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. அத்தகைய கலைகளிற் பலவற்றிற்குரிய நூல்கள் அக்காலத்தில் தமிழில் இருந்தன வென்று தெரிகிறது; இக்காலத்தும் சில உள்ளன.

தமிழ் நாட்டுக் கலைகளில் மிகச்சிறப்பாக இருந்து வந்தவை இசையும் நாடகமுமாம். பழைய நூல்களிற் காணப்படுகின்ற பல வகை இசைக் கருவிகளைப்பற்றிய செய்திகள் இக்காலத்தில் எந்த வகையாலும் அறியமுடியாமல் இருக்கின்றன. தோற்கருவி வகைகளில் அளவிறந்தனவும், யாழ்வகைகளிற் பலவும், தாளம் முதலியவற்றில் அவ்வாறே பலவும் இருந்தனவென்று தெரிகின்றது. இசையானது மூன்று தமிழ்களுள் ஒன்றாகக் கூறப்படுவதிலிருந்தே அக்கலை மிக விரிவுடையதென்று தோற்றுகின்றதன்றோ? இசைச்சங்கமொன்று பண்டைக்காலத்திலிருந்ததென்றும், அதிற் பலபுலவர்கள் இருந்து இசைப்பயிற்சியும் ஆராய்ச்சியும் செய்து வந்தார்களென்றும், இசையைப்பற்றிய பல நூல்கள் அவர்களால் இயற்றப்பெற்றிருந்தனவென்றும் பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய பழைய நூல்கள் அறிவிக்கின்றன. பிற்காலத்திலும் அரசர்களிடத்தும் பிரபுக்களிடத்தும் சங்கீதவித்துவான்கள் பலர் இருந்து வந்தார்கள்.

நாடகக்கலையையும் தமிழர்கள் நன்கு போற்றி வந்தார்களென்பதை அது முத்தமிழிலொன்றாக வைக்கப்பட்டிருப்பதால் அறியலாகும். நாடகம் பலவகைப் படுதலையும், அதற்குரியவர்களுடைய இலக்கணங்களையும், பிறவற்றையும் விரிவாகக்கூறும் நூல்கள் பல முன்பு இருந்தன; இப்பொழுது அழிந்து விட்டன. சிலப்பதிகாரத்தால் மட்டும் சிலசெய்திகள் தெரியவருகின்றன.

ஓவியக்கலை அல்லது சித்திரசாஸ்திரம் மிகவுயர்ந்த நிலையில் இருந்தது.

"ஓவியச் செந்தூ லுரைநூற் கிடக்கையும்"

என்ற மணிமேகலை யடியினால் ஓவிய சம்பந்தமான நூல் இருந்தமை அறியப்படுகின்றது. சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் ஓவிய நூலென ஒன்று கூறி அதிலிருந்து சில விஷயங்களை எடுத்துக் காட்டுகின்றார். ஓவியம் வல்லார் பலர் தமிழ் நாட்டில் நிறைந்திருந்தனர்;

"எவ்வகைச் செய்தியு மூவமங் காட்டி
நண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும்"

என்ற மதுரைக் காஞ்சிப்பகுதியால் இது விளங்கும். மாடங்களில் அழகிய சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன :

- "மாடக்குச் சித்திரமும்"

என்பதனால் மாடங்களுக்கு அழகு செய்வது சித்திரமென்ற தமிழ் நாட்டார் கொள்கை அறியப்படுகின்றது.

- "சுடுமண் ணெங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் மூதலா
எவ்வகை யுயிர்களு மூவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவ ரோவியங் கண்டுநிற் குநரும்" (மணிமேகலை)

என்பதில் மாளிகைகளிற் பலவகை ஓவியங்கள் காண்போர் கண்களைக் கவர்ந்து நின்றமை கூறப்படுதல் காண்க. ஆடைகளிற் சித்திரங்களை எழுதும் வழக்கம் பழமையானது ; படமென்னும் பெயர் இக்காரணத்தாலேயே வந்தது (படம்-வஸ்திரம்.). ஒத்த அன்பினளாகிய தலைவி யொருத்தியைப் பெற முடியாமையால் வருந்தும் தலைவன் தனக்கும் அவளுக்கும் உள்ள அன்பை வெளிப்படுத்த எண்ணிப் பூமமடலாற் செய்யப்பட்ட குதிரை யொன்றில் ஏறிவருவானென்றும் அப்பொழுது தலைவியைப்போன்ற படமொன்றை யெழுதி அதில் வைத்துக் கொண்டு வருவானென்றும் அகப்பொருள் நூல்கள் தெரிவிக்கின்றன. அந்தப்படத்தைக் கண்ட ஊரார் இன்னமங்கையிடம் இவன் அன்பு பூண்டுள்ளானென்று ஐயமற அறிவாராம். இச்செய்தியால் ஒருவரைப் பார்த்து அவரைப்போலவே சித்திரம் எழுதும் வன்மை அக்காலத்தில் இருந்ததென்று அறிந்து கொள்ளலாம். ஓவியம் எழுதுபவர்கள் முதலில் தாம் கருதியிருக்கும் உருவத்தைக் குறித்துக்கொண்டு பின்பு வர்ணங்களைக்கொண்டு அதனை அழகு படுத்துவார்கள். அவ்வாறு முதலில் எழுதப்படுவதனைப் பூமையா ஓவியம் என்று வழங்குவர். நெடுநல்வாடையிலும் மணிமேகலையிலும் பூமையா ஓவியம் உவமையாக எடுத்தாளப்பட்டிருக்கிறது. திரைச் சீலைகளில் சித்திரங்கள் அமைக்கப்பெற்றிருந்தன ; பாயற்கட்டிலைச் சுற்றிக்கட்டப்படும் திரைகளிலும் படுக்கையின்மேல் விரிக்கும் துணிகளிலும் மேற்கட்டியிலும் சித்திரங்கள் இருந்தன ; ஆடைகளிற் சித்திரங்கள் எழுதப்பட்டன ; நெய்யும் பொழுதே ஆடைகளிற் சித்திரங்களை அமைத்துவந்தார்கள்.

"குரவமு மரவமுங் குருந்துங் கொன்றையும்
திலகமும் வகுளமுஞ் செங்கால் வெட்சியும்
நரந்தமு நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமுந் தளவமு முடமுட் டாழையும்

குடசமும் வெதிரமுங் கொழுங்கா லசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி
வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய வுவவனம்'' (மணிமேகலை)

என்று கூறப்பட்ட அடிகளினுல் இயற்கை யெழிலே அவ்வாறே எடுத் துக்காட்டும் சித்திரப் படாங்களே அமைக்குந் திறனைத் தமிழ் நாட் டார் அறிந்திருந்தமை புலப்படுகின்றதன்றே?

சிற்பக்கலையில் வல்லுநர்கள் மண்ணினுலும், செம்பு பொன் முதலிய உலோகங்களாலும், கல்லாலும், சுண்ணும்பினுலும், மரத் தினுலும், தந்தத்தினுலும் பலவகைப் பாவைகள் முதலியவற்றை அமைத்தார்கள். மண்ணுற் பாவை அமைப்பவர் மண்ணீட்டாள ரெனப்பட்டனர். தந்தத்தினுல் தேர் முதலியன அமைக்கப்பட் டன. கல்லிலமைந்த சிற்பங்களில் தமிழ்நாடு மிகச்சிறந்ததென் பதை யார்தாம் மறுப்பார்? பிற்காலத்திற் பல்லவர்கள் சோழர்கள் முதலியவர்களுடைய அரசாட்சியில் தமிழ்நாட்டுக் கோயில்கள் சிற் பத்திறனமையக் கட்டப்பட்டன. அக்காலத்தில் பல சிற்பிகள் அவ்வரசர்களால் முற்றாட்டுப்பெற்று வாழ்ந்து வந்தனர். அவர் களுடைய கைவன்மையை இன்றும் வெளிப்படுத்திக்கொண்டு விளங்கும் கோயில்களைக் காணும் பிறநாட்டார் வியப்படைகின் ரூர்கள். சோழநாட்டுச் சிற்பிகள், 'திருவலஞ்சுழிப் பல்கணி, திருவீழிமிழலை வெளவானத்தி மண்டபம், ஆவுடையார் கோயிற் கொடுங்கை என்னும் மூன்றைப் போலச் செய்ய இயலா; மற்றவற் றைப் போலச் செய்வோம்' எனவும், கொங்கு நாட்டில், 'தாரமங் கலம், தாடிக்கொம்பென்னும் இரண்டிலுள்ள சிற்பங்களைப்போல இயற்ற எங்களால் இயலா' எனவும் உடன்படிக்கை யெழுதிக் கொடுக்கும் வழக்கமுண்டென்னும் கர்ணபரம்பரைச் செய்திகள் அவ்விடங்களில் உள்ள சிற்பத்தின் உயர்வை வெளிப்படுத்துகின்றன.

மரத்தினுலும் உலோகங்களினுலும் பலவகை வண்டிகள் செய் யப் பெற்றன. அவை, வையம், பாண்டில், தேர் முதலிய பலவகை யானவை. தாமரைமலரைப்போன்ற வண்டி யொன்றின் வருணனை பெருங்கதையிற் காணப்படுகிறது;

''யவனக் கைவினை யாரியர் புனைந்தது
தமனியத் தியன்ற தாமரை போலப்
பவழமு மணியும் பல்வினைப் பளிங்கும்
தவழ்கதிர் முத்துந் தானத் தணிந்தது

விலைவரம் பறியா வெறுக்கையுண் மிக்க
தலையள வியன்றது தனக்கிணை யில்லது
தாயொடு வந்த தலைப்பெரு வையம்''

என அதன் இயல்பு உரைக்கப்படுதல் காண்க.

பொன்னாலும் வெள்ளியினாலும் நவமணிகளாலும் செய்யப் பெற்ற பலவகை அணிகள் அக்காலத்தில் அணியப்பட்டு வந்தன. அவற்றை இயற்றும் பொற்கொல்லர்கள் தங்களுக்குரிய நூலில் நல்ல தேர்ச்சியுடையவர்களாக விருந்தார்கள்; நவமணிகளைப்பற்றிய இலக்கணங்களையும் நன்கு அறிந்திருந்தார்கள். அவற்றிற்குரிய நூல்கள் பலவிருந்தன. சிலப்பதிகாரத்திலும் அதன் உரையிலுள்ள மேற்கோட் சூத்திரங்களிலும் நவமணிகளைப்பற்றிய வரலாறுகள் பல கூறப்படுகின்றன. கல்லாடத்திலும், திருவிளையாடற் புராணங்களிலும், பழைய சாஸனங்களிலும் நவமணிகளுக்குரிய குணங்களும் குற்றங்களும் சொல்லப்படுகின்றன.

நெய்யுந்தொழிலிலும் தமிழ்நாட்டார் சிறப்பெய்தியிருந்தனர். பருத்தியினாலும், எலிமயிர் ஆட்டுமயிர் முதலியவற்றாலும், பட்டினாலும் ஆடைகள் நெய்யப்பெற்று வந்தன. கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிரும் பிறரும் பஞ்சினை நூற்று வந்தனர்.

''ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
நூணங்குநுண் பனுவல்'' (நற்றிணை)

''பருத்திப் பெண்டின் பனுவ லன்ன'' (புறநானூறு)

என வருவனவும்,

''நுண்ணிய பலவாய பஞ்சு நூனிகளாற் கைவன் மகடூஉத் தனது
கைமாண்பினுல் ஓரிழைப் படுத்தலாம் உலகத்து நூல் நூற்றலென்பது''

என்ற இறையனாரகப்பொருளுரையும் மகளிர் நூற்றுவந்த வழக்கத்தை விளக்குகின்றன. ஆடைகளிற் பலவகை உண்டு. நீல நிறம் முதலிய பலநிறக் கச்சுக்களும், ஆடைகளும், பூத்தொழில் அமைந்த கலிங்கங்களும், முடிச்சுக்களையும் மணிகளையும் விளிம்பிலேயுடைய பட்டுடைகளும் இருந்தன:

''சிறந்த கருமை நுண்வினை நுணங்கறல்
நிறங்கவர்பு பூனைந்த நீலக் கச்சினர்'' (மதுரைக்காஞ்சி)

''நீலக் கச்சைப் பூவா ராடை'' (புறநானூறு)

''கொட்டைக் கரைய பட்டுடை'' (பொருநராற்றுப்படை)

பாம்பின் உரியையும் மூங்கிலில் உரித்த தோலையும் பாலாவியையும் புகையையும் ஆடைகளுக்கு உவமையாக நல்லிசைப் புலவர்கள் கூறியிருப்பதனால் மிக மெல்லிய ஆடைகளைத் தமிழ்நாட்டார் அணிந்து வந்தனரென்பது வெளியாகின்றது;

"நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிங்
தாவுரி யன்ன வறுவை" (பொருநாற்றுப்படை)
"இழைமருங் கறியா நுழைதூற்கலிங்கம்" (மலைபடுகடாம்)
"இழையணி வாரா வொண்பூங் கலிங்கம்" (புறநானூறு)

என்பன ஆடைகளின் நுண்மையை வெளிப்படுத்துகின்றமை காண்க.

"பொருந்துபூம் பொய்கைப் போர்வையைப் போர்த்து"
(சீவகசிந்தாமணி)

என்பதில் பொய்கைவடிவு எழுதின படமொன்று சொல்லப்படுகின்றது.

மாலைகளைத் தொடுப்பதிற் பலவகையான விசித்திர முறைகளைத் தமிழ்நூல்கள் தெரிவிக்கின்றன. "மலராய்ந்து தொடுத்தல்" என்று சீத்தலைச்சாத்தனரும், "கடிமலர்ச் சிப்பம்" என்று கோங்குவேளிரும் அத்தொழிலைக் குறிக்கின்றனர். இண்டை, கண்ணி, தார் முதலிய பலவகைகள் மாலைகளில் உண்டு.

உணவு சமைக்கும் முறைகளைக் கூறும் நூல் 'மடைநூல்' எனப்படும். அதைப்பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, மணிமேகலை, பெருங்கதை முதலிய நூல்களிற் கூறப்படுகின்றன. பலவகை உணவுவகைகள் தமிழ் நூல்களிற் காணப்படுகின்றன. காலத்திற்கேற்ற உணவுகளையும் சாதி, நிலம் முதலியவற்றிற்கேற்ற உணவுகளையும் அந்நூல்களால் அறிந்துகொள்ளலாம். சீவகசிந்தாமணியில் முத்தியிலம்பகத்தில் இருதுதுகர்வென்னும் பகுதியில் சில பெரும்பொழுதிற்குரிய உணவுவகைகள் கூறப்பட்டுள்ளன.

சோதிடம், நிமித்தம்பார்த்தல் முதலிய கலைகள் தமிழில் இருந்தன. அக்கலைத்திறனுடையார் காலக்கணிதரென்றும் கணிகளென்றும் கூறப்படுவார்கள். கணிதத்திற் சிறந்த சிலர் சங்கத்தேயிருந்த நல்லிசைச் சான்றோர்களுள்ளும் காணப்படுகின்றனர். அரசன் போர்புரியச் செல்லும்பொழுது, நற்சொல், காக்கை கரைதல் முதலியவற்றால் நிமித்தம் பார்ப்பது வழக்கம். அகத்திணையுள்ளும் பலவகை நிமித்தங்கள் சொல்லப்படுகின்றன. விரிச்சி (நற்சொல்), தோள் கண் முதலியன துடித்தல், காக்கை கரைதல், பல்லி ஒலித்தல் முதலிய நிமித்தங்கள் உண்டு. கட்டுவிச்சி யென்னும் வெறியாடு பவளாற் கட்டுப் பார்த்தலும் வெறியாடுபவனுகிய வேலனாற் கழங்கு பார்த்தலுமாகிய நிமித்தங்கள் தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டுள்ளன.

வான சாஸ்திரப் பயிற்சியும் அக்காலத்து இருந்தது. சந்திரன் பரிவேடங் கொள்ளுங் காலத்தில் குறிஞ்சி நிலத்தார் மணம்

செய்வார்கள். நெடுநல்வாடையில், கட்டிலுக்குமேலே கட்டியிருக்கும் மேற்கட்டியில் பன்னிரண்டு ராசிகளும் எழுதப்பட்டிருந்தன வென்னும் செய்தி காணப்படுகின்றது. நட்சத்திரங்களின் பெயர்களிற் சில சங்கநூல்களில் வந்துள்ளன. அரசர் முதலியவர்கள் பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டாடும் வழக்கம் முன்பே இருந்து வந்தது. கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரலிரும் பொறை இறக்குங்காலத்தைக் கூடலூர்கிழார் ஏழு நாட்களுக்கு முன் ஒரு விண்மீன் விழுந்தமையால் அறிந்தனர். அவன் துஞ்சிய காலத்து, "இதனை முன்னரே அறிந்தேன்" என்று கூறி வருந்தி ஒரு செய்யுள் கூறியுள்ளார். அதில் மீன் விழுந்த நாளில் இருந்த நட்சத்திரங்களின் நிலை காணப்படுகிறது (புறநானூறு, 229.). இவற்றால் நட்சத்திரங்களைப்பற்றிய அறிவு இருந்தமை உணரப்படுகின்றது.

மருத்துவ நூல்களும் மருத்துவம் வல்ல நல்லிசைப் புலவர்கள் பலரும் இருந்ததைப் பழைய நூல்களால் அறியலாம். மூலிகைகளைப்பற்றிய ஆராய்ச்சி விரிவுற்றிருந்தது. தமிழ் வைத்தியம் சித்த வைத்தியமென்னும் பெயரால் இப்பொழுது வழங்கப்படுகிறது. இப்பொழுதுள்ள நூல்கள் பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டிற் பயின்றுவந்த முறைகளை அறிந்த பிற்காலத்தார் எழுதியவை. அவை மிகச் சிறப்புடையன. ஆயுள்வேதத்தைப்பற்றிய செய்தி சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டுள்ளது.

நகரமைப்பு, வீடுகட்டுதல் முதலியவற்றைப்பற்றிய சிறந்த அறிவும் தமிழ்நாட்டார்க்கு இருந்துவந்தது. நகரங்களில் உள்ள வீதிகள் ஒழுங்காக அமைந்திருந்தன. பல கடைகள் வகைவகையாக இருந்தன. சந்தி, சதுக்கம், அம்பலம், மன்றம், பொதியில் முதலிய இடங்கள் இருந்தன. அசுத்தநீரை ஊருக்கு வெளியே போக்குதற்குரிய கரந்துபடை அல்லது கரந்துறை யென்னும் சலதாரைகள் வீதியின் நடுவிற் கீழே (*underground drainage*) இருந்தன. கற்களால் அவை மூடப்பட்டிருக்கும். நீர் வேண்டின் நிரப்பியும் வேண்டாவிடிற் போக்கியும் விடுதற்குரிய வாவிகள் இருந்தன. அவை எந்திரவாவி யெனப்படும்:

> "எந்திர வாவியி லிளைஞரு மகளிரும்
> தந்தமி லாடிய சாந்தகழி நீரும்" (மணிமேகலை)

மாலைக்காலங்களிலும் வேனிற்காலத்திலும் புகுந்து மகிழ்தற்குரிய பல சோலைகள் இருந்தன. செய்குன்றங்கள் இருந்தன:

> "சேணுயர் கருவி தாழ்ந்தசெய் குன்றமும்
> வேணவா மிகுக்கும் விரைமரக் காவும்" (மணிமேகலை)

இவற்றை யன்றி,

"எந்திரக் கிணறு மிடங்கற் குன்றமும்
வந்துவீ ழருவியு மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீர்க் கேணியும்
ஒளித்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும்"

(மணிமேகலை)

ஆகிய பல இடவகைகளும் உண்டு. அரசர் முதலியவர்களுக்குத் தனித்தனியே வீதிகள் இருந்தன. பலவகைத் தொழில் செய்வாருக்குரிய வீதிகள் முறைப்படி அமைக்கப்பட்டிருந்தன. மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் மதுரை, காவிரிப்பூம்பட்டினம், வஞ்சிமாநகர், காஞ்சி முதலிய நகர அமைப்புக்களைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ளவற்றால் அக்காலத்தில் நகரங்கள் அமைக்கப்பட்ட முறைகள், அவற்றிலிருந்த தெருக்கள், இடங்கள் முதலியவற்றைப்பற்றிய பல செய்திகளை அறியலாம். அப்பகுதிகள் படிக்கப்படிக்க இன்பத்தை அளிப்பனவாகும். மதுரை நகரத்திலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் நாளங்காடி அல்லங்காடி யென்ற இருவகைக் கடைத்தெருக்கள் இருந்தன. நாளங்காடி காலைக்கடை; அல்லங்காடி மாலைக்கடை. அவ்விரு நகரங்களிலும் பலவகைக் கோயில்கள் இருந்தன. காவிரிப்பூம்பட்டினத்திற் பண்டசாலைகளும் சுங்கம் வாங்கும் நிலையங்களும் கலங்கரை விளக்கமும் (*Light house*) இருந்தன:

"இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்"

(சிலப்பதிகாரம்)

அரசர்கள் வாழும் நகரங்களில் அகழியும் மதிலும் இருந்தன. மதிலின்மேற் பகைவர்களைத் தடுத்தற்குப் பலவகைப் பொறிகள் அமைக்கப்பெற்றிருந்தன. கோட்டைவாயில்கள் இருந்தன. ஊருக்குள் பிறரறியாதவாறு வெளியிலிருந்து புகுதற்குரிய துழைவழிகளும் இருந்தன. பெரும்பாணாற்றுப்படையில் காஞ்சிநகர் தாமரை மலர்போல அமைந்துள்ள தென்று காணப்படுகிறது.

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவு மிதழகத்
தரும்பொகுட் டனையதே யண்ணல் கோயில்" (பரிபாடல்)

என்பதில் மதுரையை அவ்வாறு கூறுதல் காண்க. பெருங்கதையில் இராசகிரிய மென்னும் நகரத்தைத் தாமரை மலராகவும் பலவகைத் தெருக்களைப் புறவிதழ் புல்லிதழ் அகவிதழ் முதலியவைகளாகவும் அரசன் அரண்மனையை நடுவிலே யமைந்த கர்ணிகையாக

வும் ஆசிரியர் உருவகம் செய்துள்ளார். இவற்றுல் நகரங்கள், அழகும் ஒழுங்கும் சிறந்த வீதிகளாலமைந்திருந்தனவென்பது உணரப்படுகின்றதன்றே ?

வீடுகளை அமைப்பதில் சிலமுறைகள் அக்காலத்தில் உண்டு.

"பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"

(நெடுநல்வாடை)

என்பதனுல் அவரவர்களுக்கேற்றபடி மனைகள் அமைக்கும் வழக்கமிருந்ததென்பதைத் தெரிந்துகொள்ளலாம். வீடுகளைக் கட்டுவதற்காக அஸ்திவாரம்போடும் காலம் நெடுநல்வாடையிற் காணப்படுகின்றது. கோபுரங்களும், வாயின்மாடங்களும், நிலாமுற்றங்களும், தெற்றிகளும், அறைகளும் அமைக்கப்பட்டன. வீடுகளின் நிலைகளிற் சித்திரவேலைகள் செய்யப்பட்டிருந்தன. கஜலக்ஷ்மியின் திருவுருவம் நிலைக்குமேலே மத்தியில் முற்காலத்தும் அமைக்கப்பட்டமை நெடுநல்வாடை முதலியவற்றுல் அறியப்படும். மாடங்களாகவே சிலவீடுகள் கட்டப்பட்டிருந்தன. வீட்டின் சுவர்களிற் பலவகைச் சாளரங்கள் வைக்கப்பட்டன. 'காலதர்' என்று அவை கூறப்படும் ; காற்றுப்போகும் வழியென்பது அதன்பொருள். இதனுல் சுகாதாரமும் கவனிக்கப்பெற்று வந்தமை தெரிகின்றது.

கிணறுகளை வெட்டும் முறைகளை யறிவிக்கும் **கூபநூல்** ஒன்று உண்டு. இன்ன இடத்தில் வெட்டினுல் நல்ல ஜலமிருக்குமென்பதை எளிதில் அறியும் வழி அதிற் கூறப்படும்.

காவல் காத்தற்குரிய **காவல்நூல், கரவடநூல்** முதலிய பலநூல்களின் பெயர்கள் தெரியவருகின்றன. நூலேணியை அரையிற் சுற்றியவர்களாய்க் கறுப்புடையை அணிந்துகொண்டு கள்வர்கள் பதுங்கிவருவார்களென்றும், அவர்களை ஒற்றி யறிந்து காவலர்கள் பிடிப்பார்களென்றும், அக்காவலர்கள் காவல்நூல், கரவடநூல் என்னும் இரண்டிலும் வல்லவர்களாக இருந்தார்களென்றும் மதுரைக்காஞ்சியும் அதன் உரையும் அறிவிக்கின்றன. **தக்கயாகப் பரணி** உரையாசிரியர்,

'உடன்கள்ளரும் ஒற்றிக் கொடுப்போரும் பெருநிலை நிற்போரும் கரவட சாத்திரமும் வேண்டும்'

என்று ஓர் இடத்திற் களவுக்குரிய உபகரணங்கள் சிலவற்றைத் தெரிவிக்கின்றூர்.

போருக்குரியகலை தமிழ்நாட்டில் தனி இலக்கணத்தோடு இருந்தது. தொல்காப்பியம் புறத்திணையியலிலும் பன்னிரு படலத்திலும் புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களிலும்

கூறப்பட்ட புறத்திணைத் துறைகளிற் பெரும்பாலன போரையும் அதனைச்சார்ந்தவற்றையும் பற்றிய செய்திகளைக் கூறுவனவாம். பகைவர்களுடைய நாட்டிலுள்ள பசுக்கள் மகளிர் மூதலியோருக்குப் போரினால் ஏதம் வருமென்று அஞ்சி, "நாம் போர் செய்யப்போகிறோம்; மகளிர்முதலியோர் இந்நாட்டை நீங்கிக் காவலுடைய நாட்டிற்குச் சென்று விடுங்கள்" என்று போர் புரியச் செல்வோர் பறையறைவிப்பார்கள். தாமே செல்ல ஆற்ற லில்லாத பசுக்களை அப்பகைவர் நாட்டிலிருந்து தம் நாட்டிற்குக் கொண்டுவந்து விடுவார்கள். அதுமுதல் போர்தொடங்கப்படும். நிரைகவர்தல், போர்செய்யப் புறப்படுதல், மதிலை வளைத்தல், போர் செய்தல், வெற்றியுறுதல் என்ற பல பெரும் பிரிவுகள் வகுக்கப்பட் டுள்ளன. அவற்றை வெட்சி முதலிய திணைகளாக நூல்கள் வழங் குகின்றன. அவ்வத்திணைக்குரிய மலர்களைச் சூடிக்கொண்டு போர் புரிதல் வழக்கம். ஒவ்வோரரசருக்கும் தனித்தனி அடையா ளப் பூக்கள் உண்டு. போர்புரிகையில் அவற்றை அணிந்து கொண்டமையால் வீரர்களை இன்னருடைய படையைச் சேர்ந்தவர் களென்று தெரிந்துகொள்வார்கள். அத்தகைய பூக்களைப் பொன் னால் செய்வித்து அணிந்துகொள்வதும் உண்டு. புறத்திணைகளுள் ஒவ்வொன்றிலும் பலதுறைகள் உண்டு. அகழில் தோணிகளில் ஏறிப் போர் புரிதலும், மதில்மீதேறிப் போர்புரிதலும் ஆகிய பல வகைப் போர்கள் உள்ளன. வீரர்களுக்குள் படைத்தலைவர்கள் முத லிய பல வேறுபாடுகள் உண்டு. சேனாபதிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பெற்றன. அவற்றுள் ஏனாதி யென்பது ஒன்று. அப் பட்டத்திற்குரிய மோதிரம் ஏனாதி மோதிரமென்று வழங்கப் பெறும்.

> "போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்
> கார்க்கடல் பெற்ற கரையன்றே—போர்க்கெல்லாம்
> தானாதி யர்கிய தார்வேந்தன் மோதிரஞ்சேர்
> ஏனாதிப் பட்டத் திவன்"

என்பது இங்கே அறிதற்குரியது. வீரர்களுக்குரிய பல ஆயுதங் களின் பெயர்கள் நூல்களில் வழங்கப்படுகின்றன. வேல், வாள், அம்பு, கிடுகு என்பவற்றிற் பல வகைகள் உண்டு.

கப்பற்றொழில்: தமிழ் நாட்டார் கப்பல்களைச் செய்து அவற் றைப் பலவகையிற் பயன்படுத்திக்கொண்டமையை நூல்கள் அறி விக்கின்றன. பட்டினப்பாலையில் காவிரிப்பூம்பட்டினத்துக் கடற் கரையிற் பல பண்டசாலைகள் இருந்தனவென்றும், அவற்றிற் பல நாடுகளிலிருந்து வந்த பண்டங்கள் இருந்தனவென்றும் காணப்படு

கிறது. பிறநாட்டிலிருந்து கப்பல்களிலும் பல பண்டங்கள் வந்து குவிந்தன.

"வாலுளைப் புரவியொடு வடவளந் தருஉம்
நாவாய் சூழ்ந்த நளிகீர்ப் படப்பை"

என்ற பெரும்பாணாற்றுப்படையடிகளால் குதிரைகள் முதலிய வடநாட்டுப் பொருள்கள் தமிழ் நாட்டுக்கு நாவாய்களில் வந்தமை பெறப்படுகிறது.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்" (பட்டினப்பாலை)

"பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய்" (மதுரைக்காஞ்சி)

என்பவை இங்கே அறிதற்குரியன.

'கட்டுரை வகை' என்ற ஒரு கலையின் பெயர் மணிமேகலையிற் கூறப்படுகின்றது. தொடுத்துக்கூறும் சொல்வன்மையே அது. பெருங்கதை யாசிரியர் 'வாக்கின் விகற்பம்' என அதனைக் குறிப்பர். இன்னாரிடம் இன்னபடி பேசவேண்டுமென்பதும், இன்ன பொருளை இவ்வாறு அமைத்துப் பேசவேண்டு மென்பதுமாகிய பல வரையறைகளை இலக்கியங்களை நுணுகி ஆராய்வதனால் அறியலாம். அரசர் முதலியவர்களிடத்தில் ஒரு துயரச் செய்தியையோ, அறிவுரையையோ கூறப்புகுங்காலத்து அவர்களை வாழ்த்தி அவர்களுடைய பெருமையைச் சொல்லிப் பாராட்டிய பின்னரே அவற்றைச் சொல்லுதல் புலவர்கள் வழக்கம். வாழ்த்தின் வகைகளிற்குரிய இலக்கணங்கள் சில உண்டு.

அளவை நூல், எண்ணூல், கனு நூல், கோழி நூல், குதிரை நூல், யானை நூல், புதையல் நூல், யோக நூல் முதலிய நூல் வகைகளும், கரந்துறைகணக்கு, கோலங் கோடல் முதலிய வேறு பலகலைகளும் இருந்தன.

தங்களுடைய கருத்துக்களைப் பிறருக்கு அறிவிப்பதற்குரிய பலவழிகள் தெரியவருகின்றன. மாதவி, கோவலனுக்குத் தாழை மடலில் செம்பஞ்சுக் குழம்பிற்றோய்த்த பித்திகையரும்பினால் ஒரு திருமுகம் எழுதி அனுப்பினளென்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. வாஸவதத்தையின் வண்ணமகளாக விருந்த மானனீகை யென்பவளும் உதயணனும் தத்தம் உள்ளக்கருத்தை வாஸவதத்தையின் முகத்தில் யவன பாஷையில் ஒருவருக்கொருவர் எழுதி விடுத்த சித்திர வெழுத்துக்களால் அறிந்துகொண்டார்களென்ற ஒரு செய்தி பெருங்கதையில் காணப்படுகிறது. அந்நூலில், இவ்வரலாற்றைக் கூறும் பகுதி முகவெழுத்துக்காதை யென்றே பெயர் பெறும்.

அரண்மனையில் இருந்த நாகமாலை யென்பவள் அங்கே நடை பெறும் நிகழ்ச்சிகளை மந்திரணமாகச் சீவகனுக்கு அறிவித்து வந் தாள். அவள் ஒரு குவளை மலருக்குள் ஒரு திருமுகம் அனுப்பினா ளென்றும், அக்குவளையின் காம்பே அத்திருமுகவோலையின் சலா கையாக அமைந்திருந்ததென்றும், அவ்வோலை அகவிதழ்க்குட் பொருத்தப் பெற்றிருந்ததென்றும், அதனுள் எழுதப்பட்டவை துகிலிகைக் கணக்காலெழுதப்பட்டவையென்றும், அதனை அதற்கு அமைந்த முறைப்படி சீவகன் பிரித்துக் காம்பிற் சுற்றி வாசித் தறிந்தானென்றும் சீவகசிந்தாமணியால் அறியலாம்.

இவ்வாறு பலவகைக் கலைகளும் அவற்றிற்குரிய நூல்களும் தமிழ் நாட்டில் மலிந்திருந்தன. அவற்றில் வல்லாரும் பலர் இருந் தனர். பிற நாட்டுக் கலைவல்லார் இந்நாட்டில் வந்து தம் ஆற்றலைப் புலப்படுத்தி வந்தனர்.

> "மகத வினைஞரு மாட்டக் கம்மரும்
> அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
> தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி" (மணிமேகலை)

வாழ்ந்து வந்தனர். பிற நாட்டாரிடமிருந்து கற்றவற்றையன்றித் தமிழ்நாட்டாரே அறிந்து பயின்ற கலைகளும் நூல்களும் பல உண்டு. வடமொழியிலுள்ள கலை நூல்களையும் தமிழிற் பெயர்த்துக் கொண்டார்கள்.

இன்னும் கலைகளைப்பற்றியும் அவற்றிற்குரிய நூல்களைப்பற்றி யும் எழுதுவதெனில் மிக விரியும். சமயம் நேரின் ஒவ்வொரு கலை யைப்பற்றியும் தனித்தனியே எழுதலாம்.

இக்காலத்தில் மேனாட்டாருடைய உதவியினாற் பல புதுக்கலை கள் உலகில் உலவுகின்றன. அவற்றிற்குரிய நூல்கள் பல ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ளன. அவற்றைத் தமிழில் மொழி பெயர்த்து வருதல் வேண்டும். பண்டைக் காலத்தினர் பிறமொழியி லுள்ள கலை நூல்களை மொழிபெயர்த்துக்கொண்டது போல இக் காலத்துக்கேற்ற நூல்களையும் பிறமொழிகளிலிருந்து அறிஞர்கள் பெயர்த்தமைத்தல் முறையேயாகும். நம் நாட்டிற் சிறந்தோங்கி யிருந்த சிற்பம் முதலிய கலைகளின் திறத்திலும் நம்முடைய முயற்சி சிறக்கவேண்டும். ஏட்டுச் சுவடிகளில் உள்ள கலைநூல்களை யாராய்ந்து அறிந்து வெளிப்படுத்தவேண்டும். நான் ஏடுதேடச்செல் லும் பொழுது முதன்முறைகண்ட பலவகைக் கலைநூல்களிற் பெரும்பாலன மறுமுறை சென்றபொழுது அருமை யறிந்து பாதுகாப்பார் இன்மையாற் சிதைந்துபோயின; பல காணப்பட

வில்லை. அதை நினைக்கையில் இப்பொழுது கிடைப்பவற்றையே னும் அறிஞர்கள் பாதுகாத்து ஆராய்ந்து வெளியிட்டால் நலமா யிருக்குமே யென்று தோற்றுகிறது. கலைவல்லார்களுடைய குடும் பங்களிலுள்ளோரிடம் பலசெய்திகளை வாய்மொழியாகக் கேட்டறி யலாம். அவ்வாறு அறிந்து பலவற்றைத் தொகுக்கலாம். எனக்கு இருந்த ஐயங்களிற் சில, வேறு ஊர்களுக்குச் சென்றிருந்த பொழுது அங்கங்கேயிருந்த முதியவர்களால் நீங்கின. என்னு டைய இளமையில் திருவீழிமிழலையில் சிறந்த சிற்பியொருவர் இருந்ததைப் பார்த்திருக்கிறேன். அவர் பல விஷயங்களைத் தெளி வாகச் சொன்னர். சீவகசிந்தாமணியில் வந்துள்ள யானைப்பேச்சு இப்பொழுதும் வழங்கி வருகின்றனவா வென்று திருவிடைமருதூரி லிருந்த ஒரு யானைப்பாகனைக் கேட்டேன். அவன், அவை அப் படியே வழங்குகின்றனவென்றும், யானையின் இலக்கணங்கள் முத லியனவற்றைப்பற்றித் தமிழில் எழுதப்பெற்றுள்ள சுவடியொன்று இருக்கின்றதென்றும் கூறினான். இப்பொழுது கிடைத்துள்ள பழைய நூல்களிலும் சாஸனங்களிலும் கலைகளைப்பற்றிய விஷயங் கள் பல உள்ளன. அவற்றை ஆராய்ச்சிசெய்து வெளியிட்டால் உலகத்திற்குப் பயன்படும்.



பகீரதன் தவம்
மகாபலிபுரம்


க. அ. நீலகண்ட சாஸ்திரி

"கலங்களியங்கும் மல்லைக் கடல்மல்லையில்" பல்லவ அரசர்கள் காலத்திற் செதுக்கப் பெற்ற குகைக்கோயில்களும் இரதங்களும் அவைகளில் ஒவ்வொன்றிலும் அமைக்கப் பெற்ற வெகு நேர்த்தியான சிற்ப வேலைகளும் கல்வெட்டுக்களும் இதுகாறும் தப்பிப் பிழைத்து நல்ல ஸ்திதியில் இருப்பது நமது பெரும் பாக்கியங்களில் ஒன்று. மகாபலிபுரமென்ற பேருடன் இப்பொழுது ஒரு சிற்றூராயிருக்குமிடம் முன்னாட்களில் மல்லை யென்ற இயற்பெயரும், மஹாமல்லனென்று பிரஸித்தி அடைந்த பல்லவ அரசனுகிய முதலாம் நரஸிம்ம வர்மனுடைய காலத்தில் அவனுல் அழகுபடுத்தப் பெற்ற தனுல் மாமல்லபுரமென்ற காரணப்பெயரும் பெற்று ஓர் பெருந் துறை முகப்பட்டினமாக விளங்கிக்கொண்டிருந்ததென்பது யாவருமறிந்த விஷயம். இம் மகாமல்லன் காலத்திலோ அல்லது சற்று முன் பின்னுகவோ, சுமார் ஏழாம் நூற்றாண்டினிறுதியிலோ அல்லது அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்திலோ, ஒரு பெரும் பாறையில் செதுக்கப்பெற்ற வெகு நேர்த்தியான சிற்ப வேலை ஒன்று இருக்கிறது. இந்தச் சிற்பமானது சுமார் 29 கஜ நீளமும் 10 கஜ உயரமும் முள்ள இடத்தை அடைத்துக்கொண்டு மனிதர்களும் ரிஷிகளும் தேவர்களும் மிருகங்களுமாகச் சுமார் 150-க்கு மேற்பட்ட உருவங்களமையப் பெற்றது. சமுத்திரத்திலிருந்து அடிக்கும் உப்புக்காற்றினுலும் மழை முதலியவற்றுலும் சிற்சில உருவங்கள் சிறிது மழுங்கிச் சீர் குலைந்து போயிருப்பினும், வெகுவாக நல்ல ஸ்திதியில் காணப்படுவன இப்போதும் பல உள.

இந்தச் சிலையில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியவை என்னவென்றுல், இரண்டு பக்கங்களிலும் பெரும் பாறைகளால் அடைக்கப்



மகாபலிபுரம்—பகீரதன் தவம்.



மகாபலிபுரச் சிற்பம்.

பட்டு அவைகளுக்கு நடுவே ஏற்பட்டிருக்கும் ஒரு பெரும் பிளவும், அத்தப்பிளவிற் காணப்படும் நாகர்களும் நாக கன்னிகைகளுமே யாம். இந்த அருவி போன்ற பிளவுதான் இந்தச் சிற்பத்திற்கு நடு நாயகமென்பது அடுத்துள்ள ஓர் அத்தாட்சியாற் புலப்படும். இதே மாதிரி இன்னொரு சிற்ப வேலை இதற்கு ஒரு பர்லாங்கு தூரத்திலே செய்ய ஆரம்பிக்கப்பெற்று ஏதோ ஒரு காரணத்தால் முடிவு பெறா மல் நின்று போய்விட்டதென்பது மகாபலிபுரம் போனால் யாவருக்கும் தெற்றெனத் தெளியக்கூடிய விஷயம். முடிவுபெறாத இக்குறை வேலை யடங்கிய பெரும்பாறையிலுங்கூட நட்ட நடுவில் முற்கூறிய பாறை யில் காணப்படுவதைக்காட்டிலும் இன்னும் கொஞ்சம் அகன்றதாக வே ஒரு பிளவு இருக்கிறது. மேலும், வேலை முடிந்த பாறையிலும், அஃது அரைகுறையாயுள்ள பாறையிலும், ஒரே மாதிரியாக எல்லா உருவங்களும் இந்தப் பிளவை நோக்கியே செல்வது போலக் காணப் படுகின்றன. இந்த அருவி போன்ற பிளவுக்குத் தென்புறம் (அதா வது பாறையை நோக்கி நிற்பான் ஒருவனுக்கு இடது கைப்புறம்), நீண்ட சடையோடும் தாடியோடும் ஒரு காலால் நின்று கொண்டு ஊர்த்வ பாகுவாய்த் தவம் புரியும் ஒரு முனிவனும் அவனுக் கெதிரில் நிற்கும் ஒரு கடவுளும் காணப்படுகிறார்கள். உற்று நோக் கின் இக்கடவுள் மழுவேந்திய சிவபெருமானென்பது புலப்படும். இவர்களுக்குக் கீழே ஓர் அழகிய சிறு பல்லவக்கோயிலும், அக் கோயிலுக்குள் ஒரு மூர்த்தியுருவமும், அதன் வெளியே அக்கோயிலை நோக்கி உட்கார்ந்துகொண்டு ஏதோ ஒரு நியமத்திலிருக்கும் ஒரு முனிவனுருவமும் காணப்படுகின்றன. வடபுறம் ஒரு பெரிய யானை தன் துதிக்கையை அருவியினிடத்து நீட்டிக்கொண்டு நிற்பதைக் காண்கிறோம்; மற்றோர் யானை அதன் பின் வருவதும் தெரிகிறது. இதா மிருகங்களையும் பறவைகளையும் மற்றும் காட்டப்பட்டுள்ள நானவித ஜீவராசிகளையும் பற்றி விரிவாக உரைக்கவேண்டியது அனுவசியம்.

இந்தச் சிற்பம் எதைக் குறிக்க வந்ததென்பது நன்றாக விளங்க வில்லை. இதைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் பலவாயுள்ளன. சிலர் இந்தச் சிற்பமானது பண்டைக்காலத்து நாக ஆராதனம் செய்யும் வழக்கத்தை விளக்குவதென்றனர்; இன்னும் சிலர் இஃது ஒரு பௌத்த ஸம்பந்தமான ஆராதனத்தைக் குறிப்ப தென்று அபிப்பிராயப்பட்டார்கள்; மற்றும் சிலர் இஃது ஏதோ ஒரு பெரியதேவதையை எல்லா ஜீவராசிகளும் வணங்கு வதைக் குறிக்க ஏற்பட்ட சிற்பமென்றும், இந்தப் பெருந்தெய்வத் தின் உருவொன்று இப்போது நமக்கு ஒரு பிளவு போலக் காணப்

படுகிற நடு இடத்தில் இருந்திருக்கவேண்டுமென்றும், அவ்வுருவம் ஏதோ ஒரு காரணத்தாற் காணுமற்போயிற்று என்றும் ஓர் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் இவ்வபிப்பிராயங்களி லொன்றும் பொதுவாக அங்கீகரிக்கப்படவில்லை. நெடு நாட்களாக இந்தச் சிற்பமானது அருச்சுனன் பாசுபதம்பெறப் பூண்ட தவநிலை யைக் குறிக்க வந்ததென்றே பலராலும் கருதப்பட்டுவந்தது. ஆனால், சில வருஷங்களுக்கு முன் சில பிரஞ்சு (*French*) அறிஞர்கள் நம் நாட்டுச் சிலையுருவங்களைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று தங்களுக்கிருந்த ஊக்கத்தினால் மகாபலிபுரம் சென்று இந்தப்பாறையை உற்று நோக்கும்போது அவர்களுக்கு இதை அருச்சுனன் தவநிலையாகக் கொள்வதில் அநேக ஐயப் பாடுகள் நிகழ்ந்தன. அவையாவன: உயர்த்திய கையோடு ஒற்றைக் காலால் நின்று தவம் புரிபவனே அருச்சுனனாகவும் அவனெதிர் நிற்கும் சிவபெருமானே அவனுக்குப் பாசுபதம் கொடுக்க வந்த வராகவும் கொண்டால், இந்தச்சிற்பத்திலுள்ள மற்றப் பாகங் களுக்கு என்ன பொருத்த மிருக்கக்கூடும்? அருவி பாய்வதற்காக ஏற்பட்டதுபோல் இருக்கும் பிளவு ஏன் குறிக்கப்பட்டிருக்கிறது? அதில் ஏன் நாககன்னிகைகள் இருக்கவேண்டும்? மற்ற உருவங்க ளெல்லாம் இருபுறமிருந்தும் ஏன் இந்த இடத்தை நோக்கி வந்துகொண்டிருக்கவேண்டும்? இவற்றைத் தவிர நாம் யோசித் தால் நமக்கு இன்னும் சில சந்தேகங்களும் ஏற்படலாம். சிவபெரு மான் கிராத வேடத்துடன் இருப்பதாக ஒரு குறியும் காணேம். அவருடன் சில கணங்கள் காணப்படுவதைத் தவிரப் பார்வதி தேவி யையும் காணேம். மேலும் அருச்சுனன் தவநிலைக்கதையில் ஒரு பன்றியும் ஒரு சண்டையு முண்டு; எந்தச்சிற்பியும் அந்நிலையைக் குறிக்க ஒரு சிற்பமியற்றுமிடத்துப் பன்றியுருவுடைய மூகதானவனை யும் சிவபெருமானுடன் அருச்சுனன் புரிந்த போரையும் குறிக்காம லிரான் என்பதை ஒருவாறு துணிந்து கூறலாம். இந்தச் சிற்பம் அருச்சுனனையே குறிக்கிறதென்று கருதுவோர் சிலர் ஒரு பன்றியும் இதிற் காணப்படுகிறதாகக் கூறினும், அதைக் காண்பது அவ்வளவு சுலபமாக இல்லை. இவைகளை எல்லாம் உத்தேசித்தால் வேறு ஏதா வது ஒருவழியில் இச்சிற்பத்திற்குப்பொருளமைப்பது நலமென்று தோன்றலாம். நாம் மேற்கூறிய பிரஞ்சு ஆராய்ச்சியாளர் இதைப் பகீரதன் தவம் என்றும், நடுவில் அருவிபோல் இருக்கும் பிளவு யதார்த்தமாகவே அருவி தான் என்றும், அது கங்கையின் வீழ்ச்சி யைக் குறிக்க ஏற்பட்டதென்றும், மழை காலத்தில் அதன் வழியே பாயும் தண்ணீரும் இப்பாறையின் மேல் தங்கும் மேகமும் மின்ன

லும் மஹாபாரதத்திலும் இராமாயணத்திலும் கங்காவதார சமயத்தில் ஏற்பட்டதாகக் கூறப்பட்ட மின்னலொடு கலந்த மழையைக் குறிக்குமென்றும், அதே மாதிரியாக சகல ஜீவராசிகளும் முனிகளும் அமரரும் பகீரதன்தவப்பயனைச் சிவபெருமானின் அருளினால் கங்காதேவி பூமிக்கு எழுந்தருளும் சமயத்தில் படும் சந்தோஷத்தைக் குறிக்க அவர்களெல்லாம் இந்நதியைப் பார்க்கப்போகிறது போல் சிற்பி இவ்வுருவங்களை அமைத்திருக்கிறானென்றும் மிக நயம்படக் கூறியிருக்கிறார்கள். மற்றுமொரு பொருத்தமும் அவர்கள் காண்பிக்கிறார்கள்; அதாவது: இந்தப்பாறைக்குத் தென்பக்கத்தில் ஒரு குகைக்கோயிலில் கிருஷ்ணபகவான் கோவர்த்தனத்தைத் தூக்கி நந்தகோபனுக்கும் ஆயர்களுக்கும் அவர் நிரைகளுக்கும் அடைக்கலம் கொடுத்த கதை சிற்பத்திலமைக்கப்பெற்றிருக்கிறது. இருபெருந்தேவர்களான விஷ்ணுவும் சிவனும் உலகத்திற்குச் செய்த பேருபகாரத்தைப் பக்கத்திலமைக்க வேண்டுமென்று கருதியே கிருஷ்ணன் கல்மழை தாங்கியதும் சிவபெருமான் கங்கையைத் தாங்கியதும் ஆகிய சிற்பங்களை இம்மாதிரி அடுத்தடுத்து நிருமிக்கும் ஏற்பாடு பல்லவ அரசராலோ அவர்களது சிற்பிகளாலோ செய்யப்பட்டிருக்கவேண்டும். இவ்வழகிதான கொள்கையே இப்போது பெரும்பாலும் சிற்ப அறிஞரால் அங்கீகரிக்கப் பெற்று வருகிறது.



செடிகளும் மிருகங்களின் தொண்டும்

எம். எஸ். சபேச ஐயர்

செடிகளுக்கு மிருகங்கள் தொண்டு செய்வதென்பது கட்டுக் கதையாகத் தோன்றலாம். ஆனல் மிருகங்களைக்கொண்டு தம் காரியத்தைச் செடிகள் முடித்துக்கொள்கின்றன. மிருகங்கள் செய்துவரும் உதவி மிகப் பெரியது. மிருகங்களைப்போல் செடிகள் இடம் விட்டு இடம் செல்லக்கூடியவை யல்ல. வேரூன்றி ஓரிடத் திலே நிற்கும் நிலையிலிருப்பதால் செடிகளுக்குப் பல அசௌகரி யங்கள் நேரிடுகின்றன. முதலாவது, பருவ வேறுபாடுகளாலும் திடீ ரென்றேற்படும் சீதோஷ்ண ஸ்திதி வேறுபாடுகளாலும் பீடிக்கப் படாது தம்மைக் காத்துக்கொள்வதெப்படி? இரண்டாவது, தளி ரைத் தின்னும் ஆடுமாடுகளினுலுண்டாகும் கேட்டை விலக்குவ தெவ்வாறு? மூன்றுவது, விதைகள் உண்டாவதற்கு மகரந்தப் பொடியை (*Pollen*) அண்டாசயம் அல்லது கருப்பப்பை (*Ovary*) யினிடம் சேர்ப்பதெப்படி? கடைசியாக, கர்ப்பாதானத்தால் பூக்களில் தோன்றும் கனிகளையோ விதைகளையோ உரிய இடத்தில் சேரச்செய்வதெப்படி? மேற்கூறிய இடையூறுகளை நீக்கிக்கொள்ள வழியில்லாவிடில் செடிகளின் வாழ்வு கடினமாகும். கால வேறுபாடுகளால் அதிகமாய்ப் பாதிக்கப்படாமல் செவ்வை யாய் வளர்வதற்குச் செடிகளிலேயே சில சாதனங்களிருக்கின்றன. விதைகளை யுண்டு பண்ணவும், கனிகளை எடுத்துப் போகவும் வெளி யுதவி வேண்டியதாகிறது. இக் குறைகளை ஒழிக்க உபாயங்க ளில்லையானல் செடிகளின் வாழ்வு பயனற்றதாகும்; சந்ததி யேற் பட வழியில்லாமல் உயர்தரச் செடிகளெனப்படும் பூவினச் செடி கள் நசித்துப்போம். விதைகள் தோன்றுவதற்கும் பரவுதற்கும் மிருகங்கள் சாதகமாயிருக்கின்றன.

மகரந்தப்பொடியை யெடுத்துச் செல்லல் (*Pollination*).

மகரந்தப் பொடியிலுண்டாகும் நாதம் (*Sperm*) அண்டா சயத்தில் வளரும் அண்டத்திலுள்ள கரு (*Egg*) வுடன் கலத்தலால்

விதையுண்டாகிறது. அண்டமோ கருப்பையை விட்டு வெளி வருவதில்லை; பையினுள்ளேயே வளர்ந்து வருகிறது. மகரந்தப் பொடி மகரந்தப் பையில் ஏராளமான தூளாகத் தோன்றிப் பருவத் தில் பை வெடிப்பதால் வெளியே வருகின்றது. கர்ப்பாதானம் (*Fertilisation*) ஏற்படுமுன்பு மகரந்தப்பொடி அண்டாசயத்தின் முனையை (*Stigma*) அடையவேண்டும். முனையை எவ்விதத்தா லாவது அடையக்கூடுமானால், மகரந்தப்பொடியில் கருவுடன் சேர் வதற்கான மாறுபாடுகள் தோன்றக்கூடும். அண்டாசயத்தின் முனை (கீலாக்ரம்) சற்றுப் பரந்தும் பசையுடையதாயும் இருப்பதால் மகரந் தத்தூள்கள் இலகுவாய் ஒட்டிக்கொள்ளலாம். மகரந்தத்தூள் தானாகவே நகரக்கூடியதன்று. கீலாக்ரத்தை மகரந்தப்பொடி எவ் வாறடைவ தென்பதை நாம் அறியவேண்டும். மகரந்தப்பொடியை எடுத்துச் செல்ல வெளியுதவி வேண்டியதே. பூக்களைக் கவனித் தால் வெளியுதவியின் அவசியம் தெரியவரும். கொட்டைமுத்து, பூசணி முதலிய செடிகளின் பூக்களில் மகரந்தப்பையைத் தாங்கும் மகரந்தத்தாள்களும் அண்டாசயமுமாகிய இருவகை உறுப் புக்களும் ஒரே பூவில் சேர்ந்திருப்பதில்லை. வெளியுதவியின்றி மகரந்தப்பொடி கீலாக்ரத்தைச் சேரமுடியாது. பெரும்பாலும் இவ்விரண்டுறுப்புக்களும் ஒரு பூவினுள்ளேயே நெருங்கியிருப்பன வாயினும் வெளியுதவி அவசியம். ஒரு பூவிலுண்டாகும் தூளின் நாதம் அதே பூவில் தோன்றும் கருவுடன் கலக்கும் தன்மையதா யில்லை. அதே செடியிலுள்ள மற்றொரு பூவின் கருவுடன் கலந்து பலனைக் கொடுக்கக்கூடியது. ஆகையால் மகரந்தப்பொடியை எடுத்துச்செல்ல வெளியுதவி வேண்டும். பூச்சிகளே விசேஷமாய் மகரந்தப்பொடியைப் பூவினின்றும் பூவிற்குச் சேர்க்கின்றன. சில சிறிய பக்ஷிகளும் உதவிபுரியலாகும்.

பூக்கும் காலத்தில் ஆயிரக்கணக்காய் வண்டுகளும், குளவிகளும், வண்ணத்திப்பூச்சிகளும், தேனீக்களும் ரீங்காரஞ்செய்து கொண்டு செடிகளினிடம் பறப்பதை நாம் பார்க்கிறோம். பூவினின்றும் பூவிற்கு வேகமாய்ப் பறந்து செல்வதையும் காண்கிறோம். இச்சமயங் களில் மகரந்தப்பொடி ஒரு பூவிலிருந்து வேறு பூக்களுக்குச் சேர்க் கப்படலாமென்று நாம் நினைக்கலாமல்லவோ? உயிர்தூலறிஞர்கள் (*Biologists*) இவ்விஷயமாய் ஆராய்ச்சிசெய்து தீர்மானித்திருக்கிறார் கள். பல பூக்கொத்துகளுள்ள செடியில் ஒரு கொத்திலிருக்கும் பூக்களின் மகரந்தத்தாள்களை (*Stamen*) நீக்கிவிட்டு மெல்லியதுணி யால் கொத்தைப் பூச்சிகள் அணுகாவண்ணம் மூடிவைக்கவே அக் கொத்தில் கனிகள் உண்டாவதில்லை. அவ்விதமே செய்யப்பட்ட

கொத்தொன்றை மூடாமல் விட்டிருந்தால் கனிகள் தோன்றுகின்றன. இதனால், பூச்சிகள் பூக்களை அடையும்போது மகரந்தப்பொடி சேர்க்கப்படுவதென்பது நன்கு விளங்கும்.

பூச்சிகளைக்கொண்டு தம்காரியத்தைச் செடிகள் எவ்வாறு நிறை வேற்றிக்கொள்கின்றன? பூக்களில் காணக்கூடிய பல வேறுபாடு களும் பூச்சிகளின் வரவினின்றும் பெரிய லாபத்தை அடைவதற்கனு கூலமா யிருப்பதைக் காணலாம். பூக்களிருக்குமிடத்தைப் பூச்சிகள் முதலில் கண்டறிய வேண்டும். ஆகவே செடிகள் பூக்களை எடுத்துக் காட்டுவது அவசியம். பலநிறங்களோடுகூடிய இதழ்கள் பூக்களில் இருக்கின்றன அல்லவா? பூக்களை நாம் வர்ணங்களால் கண்டுபிடிப் பதுபோல் பூச்சிகளும் பூக்களிருக்குமிடத்தை அறிந்துகொள்கின் றன. பசுமையான இலைகளின் நடுவே நிறங்களோடு கூடிய பூக்கள் பகட்டாய்த் தோன்றுகின்றன. மேலும் பூக்கள் கொத்துக்கொத் தாயிருப்பதால் பூச்சிகள் எளிதில் அவற்றைக் கண்டுகொள்கின்றன. சில பூச்சிகள் சில செடிகளின் பூக்களையே நாடிவரும். சில செடிக ளின் பூக்கள் மலரும் சமயம் சிலவகைப் பூச்சிகள் வெளிவரும் காலத்தை ஒத்திருக்கிறது. மல்லிகை, முல்லை, பாரிஜாதம் போன்ற பூக்கள் வெண்மையாயும், வாசனை யுடையனவாயு மிருக்கின்றன. இருட்டில் மலர்கிறபடியால் வர்ணங்கள் பயன்படா. வாசனையைக் கொண்டே இரவில் பறக்கும் பூச்சிகள் மல்லிகை முதலிய பூக்களைத் தெரிந்தடைகின்றன.

தம்மையடைந்த பூச்சிகளை நல்லவாவேற்பதுபோல் பூக்கள் காணப்படுகின்றன. பூச்சிகள் சிறிதுநேரம் பூக்களில் தங்குவதற் கான பல உபாயங்கள் பூக்களில் பார்க்கிறோம். வெயிலில் அலைந்த பூச்சிகள் இதழ்களில் தங்கி இளைப்பாறலாம். மழையிலகப்படின் இதழின் குழாயில் நுழைந்துகொள்ளலாம். விரிந்த இதழ்கள் பூச்சி கள் தங்குதற்குரிய இடமாகவுமிருக்கின்றன. 'பூக்களைக் கண்டபோ தெல்லாம் பூச்சிகள் அவைகளிடம் செல்வானேன்?' என்று கேட்க லாம். பூக்களில் தேன் சுரப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். தேன், பூச்சிகளின் முக்கிய உணவாகும். பூக்களைப் பார்க்கும்போது உணவைத் தேடும் எண்ணம் உண்டாகிறது. பூக்களையடையப் பூச் சிகளைத் தேன் தூண்டுவதுபோலும்.

தேனையடையப் பூச்சிகள் பூக்களினுள்ளே செல்லவேண்டும். போகும் வழியிலேயே மகரந்தத் தாள்களும் அண்டாசயமும் இருக் கின்றன. பூவினுள்ளேசென்று வெளியேவரும்போது பூச்சியினுடலில் பளபளப்பான மகரந்தப்பொடி ஒட்டிக்கொண்டிருப்பதைப் பார்க்க லாம். கருமையான வண்டுகளும் பொன்னிறத்தனவாய்த் தோன்று வனவாகும். இந்தப்பூச்சி உடனே மற்றொரு பூவையடைகிறது. அப்

போது முன்னே நிற்கும் அண்டாசயத்தின் முனையான கீலாக்ரம் பூச்சியினுடலோடு உரைகிறது. மகரந்தத்தூள்கள் கீலாக்ரத்தில் ஒட்டிக்கொள்கின்றன., ஒரு பூச்சி பல பூக்களைச் சற்று நேரத்தில் அடைகிறது. ஒரு பூவிலுள்ள பொடியையே அநேகம் பூக்களில் சேர்க்கலாம். பூக்களின் உருவமும், வாசனையும், அடுக்கு முன்றையும், வர்ணமும் நாம் சந்தோஷிப்பதற்காக ஏற்பட்டவையல்ல. மகரந்த ஸ்பரிச மேற்படுவதற்குரிய முக்கிய சாதனங்களென்று நாம் அறியவேண்டும். பூச்சிகளைக் கவர்ந்தும், வரவேற்றும், சந்தோஷப் படுத்தியும், இனிய உணவளித்தும் செடிகள் தம்முடைய முக்கிய காரியத்தை முடித்துக் கொள்வது விநோதமல்லவா? பூச்சிகளின் உதவியையே அநேகம் பூவினச் செடிகள் நம்பியிருக்கின்றன. சந்ததியுண்டாவதற்குப் பூச்சிகளின் உதவி அவசியம். சில பூக்களில் பூச்சிகளினுடைய குறிப்பிட்ட ஒரு பாகத்தில் மகரந்தப்பொடி படியும்படி செய்யத்தக்க அருமையான அமைப்பையும் காணலாம்.

கனிகள் பரவுதல் (*Dispersal of fruits*).


விதைகள் தோன்றினபின் அவைகளைச் செவ்வையாய் மூளைக்கக்கூடிய இடத்திற் சேர்க்கவேண்டும். ஒரு மரத்திலுள்ள பழங்கள் பக்கத்திலேயே விழுந்து தங்கிவிடின், அவைகளிலுள்ள விதைகள் சரியாக முளைப்பதில்லை. நெருக்கமான இடத்தில் விதைகள் முளைப்பதும் செடிகள் வளர்வதும் அருமையானவை. அரும்பாடுபட்டுத் தோன்றிய விதைகளைச் செடிகள் இழக்கலாமா? காலியிடங்களுக்குப் பரவக்கூடுமானால் விதையுண்டானதின் பலனைக் செடிகள் அனுபவிக்கலாம். பழங்களைப் பரவச்செய்யவும் மிருகங்கள் உதவியாயிருக்கின்றன. பக்ஷிகள் செய்யும் உதவி பேருதவியாகும். பக்ஷிகளாலெடுக்கும்படியான கனிகள், சதையோடுகூடிய தசைக்கனிகள். இக்கனிகள் முதிர்ந்திருக்கும்போது வர்ணங்களுடன் காணப்படும். பிஞ்சாயிருக்கும்போது நிறமேற்படுவதில்லை. முதிர்ந்த பழங்களைப் பக்ஷிகள் இலைகள் மத்தியில் எளிதில் கண்டுகொள்கின்றன; இரசத்தோடு கூடிய சதையை உணவாகக்கொள்கின்றன. பழங்களைத் தின்றதும் பறவைகள் வெகுதூரம் பறந்து சென்று பின்பு மரத்தின் பொந்துகளிலோ கோபுரங்களிலோ இளைப்பாறும்பொழுது மலத்துடன் விதைகளைக் கழிக்கின்றன.

இவ்வாறு விதைகள் மரப்பொந்துகளிலும் கோபுரங்களிலும் தங்குவதாலே பிற்பாடு இவ்விடங்களில் செடிகள் வளர்வதைக்காண்கிறோம். சாலையில், மா, புளி முதலிய மரங்களின்பேரில், வேம்பு, ஆலம், நுணை முதலிய செடிகள் வளர்வதை யாவரும் கண்டிருக்கலாம். பக்ஷியினுள்ளே தங்கியிருந்த விதைகள் கெட்டுப்போவ

தில்லையென்று தெரியவருகிறது. பலவிதைகள் வேறிடங்களிலும் மலத்துடன் வெளிவரக்கூடுமாதலால், தசைக்கனிகள் பக்ஷியின் உதவியால் எங்கும் பரவக் கூடும். மேலும், பறவைகள் வேறுவகைக் கனிகளையும் எடுத்துச் செல்லலாம். குட்டைகளில் குளிப்பதற்குப் பறவை அடிக்கடி செல்வது வழக்கம். ஜலத்திலும், மண்ணிலும் சிறிய கனிகள் இருக்கின்றன. இறக்கையைத் தண்ணீரிலடிக்கும்போது சிறிய கனிகளும் விதைகளும் ஒட்டிக்கொள்ளலாம். கால்களில் மண்ணொட்டிக் கொள்ளலாம். வேறு குட்டையை அடையும்போது இக்கனிகள் வெளியே வரக்கூடும். ஒரு பக்ஷியின் காலிலிருந்து எடுத்த மண்ணில் சுமார் எண்பத்திரண்டு செடிகள் இருந்ததாகக் கனம் சார்லஸ் டார்வின் (*Charles Darwin*) அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

ஆடு மாடு முதலிய மிருகங்களும் கனிகளை இடம்விட்டு இடம் சேர்க்கக்கூடும். இக்கனிகள் பெரும்பாலும் உலர்ந்த கனிகள். இவைகளில் கொக்கிபோன்ற பல 'சிலும்புகள்' (*Bristles*) பார்க்கலாம். இவை மிருகங்களின் தோல்மயிரில் தொத்திக்கொள்கின்றன. நெடுந்தூரஞ் சென்றபின் ஆடுமாடுகளுக்குக் குத்துகின்ற உணர்ச்சி ஏற்படுகிறது. அப்பொழுது தேகத்தை உராய்ந்து கொண்டு கனிகளை உதிர்த்துவிடுகின்றன. ஓட்டடைச்செடி யெனப்படும் ஒரு சிறிய செடி சம்பா அறுவடையானதும் வயல்களில் ஏராளமாய் வளர்கிறது. இதனுடைய கனியில் பல கொக்கிகள் உண்டு. முதிர்ந்த கனி செடியினின்றும் இலகுவாய்ப் பிரிந்து விடுகிறது. மாடுகள் மேயும்போது வாலைச் செடியில் அடிக்கக் கனிகள் செடியைவிட்டு நீங்கி வாலில் தொத்திக்கொள்கின்றன. காலியிடங்களில் நெருஞ்சில் செடியைக் காணலாம். காலில் முள் தைக்கும்போது கோபத்துடன் முள்ளோடு கூடிய கனியைப் பிடுங்கி வெகுதூரத்திற்கப்பால் போகும்படி எறிகிறோம். செடி வேண்டுவதும் அதுவே.

செடிகளுக்குச் செய்துவரும் உதவியின் அளவை மிருகங்களே அறிந்துகொண்டதாகத் தெரியவில்லை. விதைகளை உண்டுபண்ணும் வகையிலும் விதைகளைப் பரவச்செய்யும் வகையிலும் மிருகங்கள் தொண்டு செய்து வருகின்றன. வேறு வகையிலும் தொண்டு செய்தல் கூடும். வேலமரவினத்தைச் சேர்ந்த ஒரு செடியில் பெரிய முட்களுள. அவை போலாயிருப்பன. அவைகளினுள்ளே ஒரு வகை எறும்பு கூட்டமாய்க் குடியிருக்கிறது. இந்த எறும்புக்கூட்டம் செடியில் அமைக்கப்பட்டிருக்கும் அற்ப உணவை நம்பியிருக்கிறது. இலையைக் கத்தரிக்கும் வேறு எறும்போ பூச்சியோ செடியினருகில் வருமாயின் குடியிருக்கும் எறும்புகள் சண்டை செய்யத் தயாராகி, வந்தவைகளைத் துரத்திவிடுகின்றன. ஆகவே இந்த எறும்புகள் காவற்காரர்களாகத் தொண்டு செய்வது விளங்கும்.



"பூச்சிகளே விசேஷமாய் மகரந்தப்பொடியைப் பூவினின்றும் பூவிற் குச் சேர்க்கின்றன." (ப. 25).

. . . ஒரு வண்ணுத்திப் பூச்சி தன் நீண்ட நாவினுல் பூவினுள்ளிருக்கும் மதுவைப் பருகுவதை இந்தப் படம் காட்டுகின்றது. நீண்ட நாக்கில்லாத பூச்சிகள் இப்பூவினின்று தேனை உண்ண முடியாது. தமக்கு உபயோக மில்லாத பிராணிகள் தமது தேனை அபகரிக்காமலிருப்பதற்கும் தமக்கு உதவி செய்யக்கூடிய ஜந்துக்களை வரவேற்பதற்கும் வேண்டிய சாதனங்களைச் செடிகள் அமைத்துக்கொண்டிருக்கின்றன.

செந்நிறப் பூ

பி. என். அப்புஸ்வாமி

பல நிறங்கள் கொண்டது இவ் வுலகம். நம்மைச் சூழ்ந் துள்ள எல்லையற்ற ஆகாயத்தின் நிறம் நீலம். அதில் ஜொலிக்கும் சூரியனது நிறம் சிறிது செம்மை கலந்த வெள்ளை. இரவில் மினு மினுக்கும் அழகிய நக்ஷத்திரங்கள் பொதுவாக வெண்மையாத் தோன்றியபோதிலும் அவற்றுட் சில பச்சை, சில நீலம், சில சிவப்பு. நம்மைச் சுற்றியுள்ள கடலின் நிறம் நீலமே யாயினும், வெள்ளைக் கட லும், சிவப்புக் கடலும், கறுப்புக் கடலும், மஞ்சட் கடலும் இருக் கின்றனவல்லவா? நமது பூமியிலுள்ள மண்ணின் நிறம் எத்தனை வகையானது! மனிதர்களின் நிறம் எத்தனை! பூமியில் தோன்றிய ஜந்துக்களின் நிறம் எத்தனை! செடிகளின் நிறங்கள் எத்தனை! புஷ் பங்களின் நிறம் எத்தனை!

பல நிறங்கள் கொண்டது அழகு. வானவில்லின் நிறங்களைக் கண்டு மகிழாதார் யார்? வைரத்தின் ஜொலிப்பைக் கொண்டாடா தார் யார்? மயிலின் தோகையையும், பஞ்சவர்ணக்கிளியின் உடலை யும் பார்த்துக் களியாதார் யார்? புஷ்பங்களே அற்ற குரோடன் செடிகளை, அவற்றின் நிறநிறமான அழகிய இலைகளின்பொருட்டு, நாம் வாங்கிப் பாதுகாத்து வளர்க்கவில்லையா? பெண்ணின் அழகை வர்ணிக்கும்போது அவளது அழகிய மலர்ந்த முகத்தையும் கைகளை யும் பாதங்களையும் சிவந்த தாமரைப் புஷ்பத்துக்கும், கூந்தலைக் கரிய மேகத்துக்கும், நெற்றியை வெண்மையான சந்திரப் பிறைக்கும், செவ்வரி படர்ந்த கண்களை நீல நிறமான குவளைப்புஷ்பங்களுக்கும் கரிய வண்டுகளுக்கும், சிவந்த இதழைப் பவளத்துக்கும், வெள்ளை யான பற்களை முத்துக்களுக்கும் முல்லைப் புஷ்பங்களுக்கும் ஒப் பிட்டுக் கூறும் கவிகள், பன்னிறங் கொண்டதே அழகு என்று எண்ணுகிறார்கள் அல்லவா?

பல நிறங்கள் கொண்டது ஒளி. நமக்கு இவ்வுலகத்தையும் இவ்வுலகத்திலுள்ள அழகிய பொருள்கள் அனைத்தையும் அளிக் கின்ற சூரிய வெளிச்சமானது ஏழு நிறங்கள் கொண்டது. அவற் றுள் சிவப்பு, மஞ்சள், நீலம் மூன்றும் முக்கியமான பிரதம வர்ணங் கள். ஆரஞ்சு, பச்சை, கருநீலம், ஊதா ஆகிய பிற நான்கு நிறங்கள்

மூற்கூறிய நிறங்களின் சேர்க்கையால் உண்டாவன. இவ்வகையான ஏழு நிறங்களின் கலப்பால் வெண்மை நிறமாக மாறிய ஒளியின் குணத்தாலேயே இவ்வுலகில் நாம் காணும் வஸ்துக்கள் பற்பல நிறங்களோடு நமக்குத் தோன்றுகின்றன.

. ஏன் இந் நிறங்கள் அமைக்கப்பட்டன? நாம் பார்த்துப் பார்த்து மகிழ்வதற்காகவா? அல்லது ஊன்றி நினைத்து நினைத்து ஆச்சரியவலையில் மயங்குவதற்காகவா? அல்லது வேறு ஏதாவது பயனை எண்ணி இந் நிறங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா?

முன்னொரு காலத்தில் அறிவிற் குறைந்து இறுமாப்பில் மிகுந் திருந்த மனித வருக்கமானது இவ்வுலகிற் காணப்படும் சராசரங்கள் அனைத்தும்—வானிற் பறக்கும் பட்சிகளும், மண்ணில் வாழும் பிராணிகளும், புல் பூண்டு செடி கொடி மரங்கள் யாவும், நீருள் வாழ்வன எல்லாமும்—தனக்காகவே தன் அருமைத் தெய்வத்தால் படைக்கப்பட்டன வென்று எண்ணியிருந்தது. இப்பொழுது அறிவு முதிர முதிர, ஆராய்ச்சி மிக மிக, அப்பழைய கொள்கைகளை முற்றிலும் மறந்து, வேறு வகையான கண்களைக் கொண்டு இயற்கைத் தாயின் விசித்திர விநோதங்களைக் கவனிக்கிறது.

இவ்வுலகத்தில் காணப்படும் பிராணிகள் ஏன் நிறமாறுபாடுகளை உடையனவாய்த் தோன்றுகின்றன? ஏன் சில ஜொலிக்கும் நிறங்களை உடையனவாயும் சில மங்கலான போர்வைகளைப் போர்த்தனவாயும் காணப்படுகின்றன? புலியின்மேல் வரி ஏன்? சிங்கம் ஏன் மணல் நிறமாய்க் காணப்படுகின்றது? மிருகங்களுக்கு மேற்புறமாகிய முதுகுப் புறம் நிறமுடையதாயும் அடிப்புறமான வயிறு வெண்மையாயும் தோன்றுவதேன்? ஓந்தி ஏன் பல நிறமாய் மாறுகிறது? இவ்வாறான கேள்விகளைத் தாமே தம்மைக் கேட்டுக்கொண்டு பற்பல வகையாய் விஷயங்களை ஆராய்ந்து உண்மையை அறிய முயலுகின்றனர் அறிவாளர். ஆராய்ச்சி முறைகளையே மேற்கொண்ட அறிவாளர்க்கு இவ்வுலகமானது ஒரு பரிசோதனைச் சாலையாகவே ஆகிவிடுகிறது. அவர்கள் எந்தக் காட்சியைக் கண்டு களித்தாலும், எந்த ஒலியைக் கேட்டு இன்புற்றாலும், எந்த மணத்தை மோந்து மகிழ்ந்தாலும், எப்பொழுதும் அவர்கள் மனத்திலே அவர்கள் தூண்டுதலின்றியே "ஏன்? ஏன்?" என்ற வினாவானது எழுந்துகொண்டே யிருக்கிறது. ஜூலியன் ஹக்ஸ்லி என்னும் ஜீவதத்துவ சாஸ்திர நிபுணரை இதற்கு ஓர் உதாரணமாகக் கூறலாம்.

நாம் எல்லாரும் ஊரூராய்ப் போய்ப் பற்பல விஷயங்களைக் கண்டும் கேட்டும் மகிழ்வதுபோலவே அவரும் ஆப்பிரிக்காக் கண்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது பலவற்றைக் கண்டும் கேட்டும்

மகிழ்ந்து வந்தார். ஆப்பிரிக்காக் கண்டமானது பார்ப்பதற்குரிய காட்சிகள் பல உடையது. நினைவுக்கு எட்டாத காலத்துக்கு முன்னே நாகரிக முதிர்ச்சி அடைந்த எகிப்து தேசம் அதில் ஒரு சிறு பகுதி. அதில் ஓடும் நீல நதியின் அழகும் பெருமையும் பார்ப்போர் மனத்தைக் கொள்ளை கொள்ளும். அங்கே உள்ள பிரமிட் (*Pyramid*) என்று சொல்லப்படும் கோபுரக் கட்டிடங்கள் இப்பொழுது தோன்றுவதுபோலவே மூவாயிரம் வருஷங்களுக்கு மேலாக நிலையாக நிலைத்துத் தோன்றி வந்திருக்கின்றன. அங்கேயுள்ள ஸ்பிங்ஸ் (*Sphinx*) என்னும் சிற்பப்பொருளின் தத்துவத்தை இன்னும் தெளிவாக அறிவாளர் அறிந்து கொள்ளவில்லை. அங்கே அரசாண்ட அரசர்களின் பெருமையையும் இறுமாப்பையும் பற்றிப் பைபிள் (*Bible*) கூறுகின்றது. இப்பொழுதும் அவர்களுடைய ஐசுவரியத்தைக் காட்டக்கூடிய அடையாளங்கள் பற்பல பிரமிட்டுகளிலிருந்து தெரியவருகின்றன. அந்நாட்டின் பக்கத்திலுள்ள ஸஹாரா என்னும் பாலைவனம் மிகவும் விஸ்தாரமான மணற்கடல். அஃது இந்தியாவைவிட ஒன்றரை மடங்கு பெரியது. அக் கண்டத்திலே கார்தேஜ் நகரத்திலிருந்த வீரர் ரோமராஜ்யத்தையே கலக்கினர். அக் கண்டத்திலே பெரும் பெரும் ஏரிகள் பல காணப்படுகின்றன. பனி மூடிய பெரிய மலைகள் பல காணப்படுகின்றன. நீல நதி, காங்கோ நதி முதலிய பெரு நதிகள் காணப்படுகின்றன. ஆகாயத்தினின்று கங்கை சிவன் தலையிற் குதிப்பதுபோல் கர்ஜித்து வீழும் பெரிய நீர்வீழ்ச்சிகள் காணப்படுகின்றன. மரம்போலுயர்ந்த ஒட்டகைச் சிவிங்கியும், மலைபோலுயர்ந்த யானையும், யானையை நிகர்க்கும் காண்டாமிருகமும், நீர்யானையும், எருமையும், காட்டுப்பன்றியும், ஜமக்காளம் போர்த்ததுபோல் தோற்றும் வரிக்குதிரையும், விதவிதமான மான்களும், தேர்வடம்போல் நீண்ட மலைப்பாம்புகளும், மனிதனைப்போலவே தோன்றும் குரங்குகளும், இன்னும் விந்தை விந்தையான பிராணிகள் பலவும், இவை அனைத்துக்கும் அரசனைக் கொண்டாடப்படும் சிங்கங்களும் அந் நாட்டில் பற்பல இடங்களிற் சுலபமாகக் கண்ணுக்குத் தென்படுகின்றன. அதிலுள்ள மரம் செடி கொடி வகைகளும் எண்ணிறந்தவை. பொன்னும் வைரமும் விளையும் நாடு அது. அத்தேசத்தில் பிரயாணம் செய்யும் ஒருவன் அதன் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தும், திகைத்தும், பயந்தும், வியந்தும் நடப்பது சகஜம். அவன் மெய்ம்மறந்து அவனுடைய அனுபவங்களையே பெரியனவாக நினைப்பதுதான் இயல்பு. ஆப்பிரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்த ஹக்ஸ்லியும் இவ்வாறு அனுபவித்து வந்தாரெனினும் கேள்வி கேட்பதை வழக்கமாகக் கொண்டுவிட்ட அவர் மன

மானது அவரை அடிக்கடி பற்பல கேள்விகள் கேட்டுக்கொண்டே வந்தது.

ஆப்பிரிக்காவிற் சுற்றியபோது இப்படித் தம் மனம் கேட்ட ஒரு விஷயத்தைப்பற்றி அவர் சொல்லுவதின் சாராம்சமாவது :—

ஆப்பிரிக்காவின் கிழக்குப் பாகத்தில் பிரயாணம் செய்யும் ஒருவன் அங்கே சிவப்பு நிறமுள்ள புஷ்பங்கள் எங்கும் செறிந்து கிடப்பதைக் கவனிக்காமல் இருக்கமுடியாது. அப் புஷ்பங்கள் இங்கிலாந்திலும் சமசீதோஷ்ண நாடுகளிலும் உள்ள புஷ்பங்களைப்போல் சிவப்போடு வெளுப்புக் கலந்த ரோஜாநிறமுடையவைகள் அல்ல. சிவப்போடு நீலம் கலந்து தோன்றும் ஊதா நிறப் புஷ்பங்களும் அல்ல. அவற்றின் நிறம் கெருப்புப் போன்ற சுத்தமான சிவப்பு. அந்நாட்டிலே மலைச்சாரல்களில் நெருங்கி வளர்ந்த பெரிய மரங்களிற் பூத்த செந்நிறப் புஷ்பங்களைக் காணும்போது மலையே கெருப்புப் பிடித்து எரிவதுபோல் தோற்றும். புஷ்பங்கள் பூக்கும்போது அம் மரங்கள் பொதுவாக இலைகளை உதிர்த்து விடுகின்றன ; ஆதலால் பூவின் சிவப்பு நிறம் நன்றாக எடுத்துக்காட்டப்படுகிறது. அந் நாட்டிலே எங்கும் பெரிய மரங்களும் சிறிய மரங்களும் குறுஞ் செடிகளும் புதர்களும் பலவகை அல்லிப் புஷ்பங்களும் ஒரே சிவப்பு மயமாய் விளங்குகின்றன. அவற்றின் அழகை வருணிக்க இயலாது. எங்கும் நிறைந்த இச் செந்நிறக் காட்சியானது கண்ணைப் பறிக்கின்றது. 'ஏன் இச் செந்நிறச் செறிவு ?' என்று நான் கூர்ந்து ஆராயப் புகவில்லை; ஆயினும் என்னை யறியாமலே என் மனமானது அக்கேள்வியைக் கேட்டுக்கொண்டே யிருந்தது என்றே தோன்றுகிறது. அஃது எப்படியாயினும் சரி; திடீரென்று ஒரு நாள் அக் கேள்விக்கு விடை என் மனத்தில் உதித்தது; அதாவது இந் நிறத்திற்குக் காரணம் சூரிய பக்ஷிகள் எனப்படும் ஒருவகைச் சிறு பக்ஷியினம் என்பதே. இப் பக்ஷியினமும் இதுபோன்ற வேறு சிறு பக்ஷிகளும் இந்நாட்டிலே ஏராளமாகக் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் புஷ்பங்களிலுள்ள தேனை உண்டும், தேனைப் பருகுவதற்காகப் புஷ்பங்களின் இதழ்களில் வந்து உட்காரும் தேனீக்கள் வண்டுகள் முதலிய சிறு பூச்சிகளைத் தின்றும் உயிர் வாழ்கின்றன.

தேனீக்களின் கண்களுக்கு ஒரு விசேஷ குணமுண்டு. நமது கண்களுக்கு ஊதா நிறம் முதல் சிவப்பு நிறம் ஈறாக உள்ள ஏழு நிறங்களே புலனாகின்றன. ஊதாவுக்கு மேற்பட்ட நிறங்களின் கிரணங்கள் நமது கண்களுக்குப் புலனாவதில்லை. ஊதாவுக்குமேல் எவ்வகை நிறமும் இருப்பதாக நாம் உணருவதில்லை. நமது கண்

களுக்குப் புலனாகாத இந் நிறமானது தேனீக்களின் கண்களுக்கு எளிதில் புலனாகின்றது. ஆனால், இதற்கு எதிரிடையாக, நாம் சிவப்பு என்று கூறும் நிறமானது அவற்றின் கண்களுக்குப் புலனாவதில்லை. தேனீக்களுக்குச் சிவப்பு என்பது ஒரு நிறமாகவே தோன்றுவதில்லை; அது நிறமற்ற வெறுங் கறுப்பாகவே தோன்றுகிறது. பக்ஷிகளோ வெனில் சிவப்பு நிறத்தை நன்கு உணர்கின்றன. அவற்றிற்கு எல்லா நிறங்களைக்காட்டிலும் சிவப்பு நிறத்தின்மேல் அதிகப் பிரீதி உண்டா இல்லையா என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை. புஷ்பங்களின் நிறமும் மணமும் நாம் பார்த்துக் களிக்கும்பொருட்டும், மோந்து மகிழும்பொருட்டும் ஏற்பட்டன அல்ல. அவற்றைப் படைத்தவர் நம்மை மட்டிலும் பொருளாக எண்ணிப் பிற பொருள்கள் யாவற்றையும் நமது பிரயோசனத்துக்காக அமைக்கவில்லை. புஷ்பங்களுக்குப் பரோபகார சிந்தனை சிறிதும் கிடையாது. தமது இனம் பெருகும் பெரிய முயற்சியில் ஈடுபட்ட புஷ்பங்கள் அப் பெரு முயற்சிக்கு உரிய துணையாகவே நிறத்தையும் மணத்தையும் பெற்றிருக்கின்றன. பகட்டான நிறநிறமான ஆடைகள் உடுத்து, அணிகள் அணிந்து, வாசனைகள் பூசிப் பிறர் மனத்தைக் கவர முயலும் விலைமாதர் பிறர் பொருட்டா தம்மைச் சிங்காரித்துக் கொள்ளுகிறார்கள்? தம் பொருட்டே யல்லவா? அதுபோலவே புஷ்பங்களும்.

ஒவ்வொருவகைச் செடியும் அதன் அதன் இனம் பெருகும் பொருட்டுப் புஷ்பங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றது. ஒரு புஷ்பத்திலுள்ள மகரந்தத் தூளானது மற்றொரு புஷ்பத்தில் போய்ப் படியவேண்டும். அப்பொழுது அதிலேயுள்ள கருவோடு கலக்கும். அதனால் சந்ததி விருத்தி ஏற்படுகிறது. இவ்வாறு புஷ்பத்தினின்று புஷ்பத்துக்கும் செடியினின்று செடிக்கும் மகரந்தத் தூளை எடுத்துச் செல்லுவதற்குத் தகுந்த தூதர்கள் வண்டுகள், தேனீக்கள், வண்ணத்திப்பூச்சிகள், விட்டில் பூச்சிகள் முதலிய பூச்சியினத்தைச் சார்ந்த சிறு பிராணிகளும் சிற்சில பக்ஷிகளும் ஆகும். ஒவ்வொரு வகைப் புஷ்பமும் ஒவ்வொரு குறிப்பிட்ட பூச்சி வகையையோ, சிற்சில குறிப்பிடக்கூடிய பூச்சி வகைகளையோ, குறிப்பிட்ட பக்ஷி வகைகளையோ தனக்கு ஏற்ற துணையாகக் கொண்டு அவ்வச் சிறு பிராணியின் சுபாவத்துக்கும், உடலமைப்புக்கும், ஆகார முறைக்கும் தகுந்தபடி தனது உடலையும் குணத்தையும் மணத்தையும் மாற்றியமைத்துக்கொண்டிருக்கின்றது. இரவிற் சஞ்சரிக்கும் வண்ணத்திப்பூச்சிகளின் உதவியை நாடும் செடிகள் இரவில் எளிதிற் புலனாகக் கூடிய வெண்மை நிறமுள்ள நறுமணம் பொருந்திய புஷ்பங்களைத்

தாங்கி நிற்கின்றன. ஆதலால் முல்லை மல்லிகை போன்ற வெள்ளைப் புஷ்பங்கள் பொதுவாகச் சாயங்கால நேரத்தில் மலர்கின்றன. இரவில் ஒளிர்கின்றன; மணம் வீசுகின்றன. தாமரை, செவ்வல்லி, ரோஜா முதலிய நிறமுள்ள புஷ்பங்கள் காலையில் மலர்ந்து கமழ்ந்து பகலிற் சஞ்சரிக்கும் தேனீக்கள், வண்டுகள் முதலியவற்றின் மனங்கவர்ந்த நிறங்களாலும் மணங்களாலும் கவர்கின்றன. அவற்றைப் போலவே, பகலில் உலவி விளையாடும் பக்ஷிகளின் துணையை நாடும் செடிகளும் மரங்களும் அவற்றிற்கு விருப்பமான, தேனீக்களுக்குப் புலனாகாத செந்நிறப்பூக்களைத் தாங்குகின்றன. இதுதான் செந்நிறப்புஷ்பங்கள் பூப்பதின் காரணம்.

ஏன் இவ்வகைப் பூக்கள் குளிர் நாடுகளில் மிகுந்து காணுவதில்லை என்பதற்குக் காரணமும் இதுவேதான். ஒரு பக்ஷியினமானது இப்பூவையே ஆதாரமாகக்கொண்டு உயிர் வாழவேண்டுமானால் இப் புஷ்பமானது வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளும் புஷ்பிப்பது அவசியமல்லவா? குளிர் நாடுகளில் பனி பெய்யும் காலத்தில் மரம் செடி கொடி எல்லாம் குளிரின் மிகுதியால் கருகிப் போகும்போது இப் புஷ்பங்களுக்கு எங்கே போவது? ஆகையால் வருஷம் முழுவதும் புஷ்பிப்பதற்கு வேண்டிய சௌகரியங்களுள்ள மழைப் பாங்கான உஷ்ணப் பிரதேசங்களிலேதாம் இவ்வகையாய்ப் பக்ஷிகள் வாழ முடியும். ஆதலால் அத்தகைய பிரதேசமாகிய கீழ் ஆப்பிரிக்காவிலே செந்நிறப் பூக்களின் சோதி நாலா பக்கமும் சிறந்து விளங்குகின்றது.

பூச்சி மகாநாடு

D. K. விசுவநாத ஐயர்

தெள்ளுப்பூச்சிகள், ஈக்கள், மணல் ஈக்கள் (*sand flies*),
பேன்கள், மூட்டைகள், 'டிக்' பூச்சிகள், 'ட்ஸெட்ஸி' ஈக்கள்,
கொசுக்கள்—முதலியன.


வரிசையாக ஒவ்வொரு பூச்சி யினத்தைச் சேர்ந்த பிரதிநிதி களும் மகாநாட்டுக்கு வந்து ஆசனத்தில் அமருகிறார்கள்.



ஈ.—பூச்சிப்படைவீரர்காள்! நமது பொது இயக்கத்திற்காகச் சென்ற வருஷம் நாம் செய்துள்ள தீரச் செயல்களைக் கணக் கிட்டுப் பார்ப்பதற்கும் நிகழும் வருஷத்திற்கு இப் பெரும் படைக்கு ஏற்ற தலைவனைத் தேர்ந் தெடுக்கும்பொருட்டும் நாம் இப்பொழுது இச்சபை கூடி யிருக்கிறோம். நரச் சேதமே நமது பிரதானக் கொள்கையாகும். அக்கொள்கையை மேற்கொண்டு நமது படையில் ஒவ்வொரு வகுப்பினரும் அவரவர் கள் செய்துவரும் தீரச்செயல்களை இச்சுதினத்திற் சிறிதும் கூச்சமின்றி விஸ்தரித்தாலன்றி நமது ஜீவகாருண்யப் படைக்கு ஏற்ற மகா தீரனை தலை வனைத் தேர்ந்தெடுக்க எளாமற் போய்விடும். நேயர்களே! நமது படை ஜீவகாருண்யப்படை யென்றேன். அதற்குமொரு ஐயமுண்டோ? ஜீவ காருண்யத்தை மேற்கொண்டே நரசம்ஹார இயக் கத்தைக் கைக்கொண்டிருக்கிறோம். எவ்வாறெனில் கேவலம் மிருகங்கள் பூச்சிகள் முதலியனகூட வெட்கமுறுமாறு தற்காலம் மானிட வகுப்பினர் குழந்தை பெற்றுத் தம் குடும்பங்களை விருத்தி செய்து வருவதை நோக்குமிடத்து நீர்வளம் நிலவளம் பொருந்திய நமது பாரத நாட்டுத் தானியக் களஞ்சியங்கள்கூடக் காலியாகிவிடும்போல் தோன்றுகிறது. அவ்வாறுகக்கூடாது. அவரது தொகையை மட்டுக்குள் நிறுத்திவைக் கும்பொருட்டு, சமயம் பார்த்து நமது பாணங்களை எய்கிறோமேயல்லாது கேவலம் போராட்டக் கொழுப்பு மேலிட்டல்ல. உண்மையையே உரைப்பதென்ற நிபந்தனைகளுக் குட்பட்ட இச்சபையோர்களுக்கு மானிட வகுப்பின் தீவிர விருத்தியைக் குறித்து ரூபிக்கவேண்டியது அவசியமில்லை; ஆயினும் நமது எதிரிகளான டாக்டர்கள் கூடிய ஒரு சபையில் நமது முக்கிய

எதிரியாகும் 'ரஸ்ஸெல்' என்பவன் இரண்டு வருஷங்களுக்குமுன் செய்த உபந்நியாஸத்தையே சாக்ஷியாகக் கூறலாம்.


சகோதரர்களே! நமது முக்கிய நோக்கத்தை விட்டுவிட்டு வேறு விஷயங்களைப்பற்றி ஆராய்வானேன்? தவிரவும் ஒவ்வொரு வகுப்பினரும் அவரவர் தீர பராக்கிரமச் செயல்களை எடுத்துரைக்க ஆவலுடன் இருப்பீர்கள். ஆகையால் எனது பேச்சைச் சுருக்கி நமது தலைவனைத் தேர்ந்தெடுக்கும் வரை இச்சபைத் தலைவனாக இருக்கும்படி தெள்ளுப்பூச்சியை வேண்டுகிறேன். மற்றமொரே விஷயம்: நாம் தேர்ந்தெடுக்கும் படைத்தலைவன் எல்லா வகுப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். அப்பொழுதுதான் நமது இயக்கம் முன்னேறும். ஆகையால் ஒருவருக்கொருவர் ஏற்படும் அபிப்பிராய பேதங்களைப் பாராட்டாது பொது இயக்கத்தின்மீதே கண்ணோக்கங் கொண்டு தகுந்த தலைவனை எல்லாரும் சேர்ந்து ஒப்புக்கொண்டு தேர்ந்தெடுப்பது நமது முக்கிய கடமையாகும்.



பேன்.—நமது படையின் மிகவும் சுறுசுறுப்பான வகுப்பைச் சேர்ந்த ஈ, கர்ணமிருதமான மொழிகளால் உங்களை வேண்டிக்கொண்டவாறு தெள்ளுப் பூச்சியை இச்சபைத் தலைவனாக நியமிக்குமாறு நானும் விரும்புகின்றேன்.

பெருத்த காகோஷத்துடன் எல்லாப் பூச்சிகளும் தெள்ளுப்பூச்சியைச் சபைத் தலைவனாக ஒப்புக்கொண்டு 'மானிட வகுப்பினர் மாள்க! ஆண், பெண், சிசு, பிறந்த சிசு, பிறக்கப்போகும் சிசு எல்லாம் நசிக்க!' என்று கோஷித்தன. தெள்ளுப்பூச்சி சபைத்தலைவனாசனத்தில் பூச்சிகளின் இடைவிடாக் காகோஷ மத்தியில் அமர்ந்தது.


தெள்ளுப்பூச்சி.—பேர்பெற்ற நாஹூர்களே! என்னைச் சபைக்குத் தலைவனாக நீங்கள் நியமித்ததின்பொருட்டு நான் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்க வேண்டியவனாயினும் ஒரு விஷயத்தைக் குறித்துச் சிறிது தயங்குகிறேன். என்னெனில், சபைத்தலைவனாக நியமிக்கப்பட்டபின் நிகழும் வருஷத்திற்கும் என்னையே நமது வீரபராக்கிரமத்தால் மனிதனின் கொட்டத்தை அறவே அடக்கப்போகும் படைத்தலைவனாக நீங்கள் தெரிந்தெடுக்க வேண்டுமென்று அவ்வளவு கண்டிதமாக வற்புறுத்தமாட்டாதவனாகிறேன். ஆயினும் சற்று யோசிக்குமிடத்து அவ்வாறு ஐயம்கொள்ள வேண்டியதில்லை என்று புலப்படுகிறது. ஏனெனில் ஈ புகட்டிய சற்புத்தியின்படி, நம்மில் ஒவ்வொரு வகுப்பினரும் கூச்சத்தை அறவே யொழித்துத் தமது தீரச்செயல்களை முற்றிலும் இச்சபையோருக்குத் தெரிவிக்கத் தவறினால் கண்ணியமான படைத்தலைவன் யாரென்று ஊகிக்க இடமில்லாமல் போய்விடும். அவ்வாறு தெரிவிப்பது



தற்புகழ்ச்சி யென்று சில அறிவிலிகள் கருதவும் கூடும். அதைச் சிறிதும் கவனியாது பொது இயக்கத்தின் முன்னேற்றத்தைக் கருதி எங்கள் இனத்தார் செய்துவரும் காரியங்களை இப்பொழுது தெரிவிக்கிறேன்.

நேயர்களே! நாங்கள் கள்ளம் கபடமற்றவர்கள். எலிப்பூச்சி என்னும் எங்கள் ஆங்கிலப் பெயரே நாங்கள் வசிக்கும் இடங்களை ஐயம் திரிபறத் தெரிவிக்கின்றது. ஆயினும் எலியின் தோலே எங்கள் வாசஸ்தலம் என்று நமது எதிரிக்குத் தெரிந்திருப்பினும் எலியினத்தை அறவே யொழிக்க மானிடப் பேதையால் ஒருகாலும் சாத்தியமாகாது. எலியில்லா வீடுமுண்டோ? அறியாமை, அசிரத்தை, அழுக்கு முதலிய நமது கண்கண்ட குல தெய்வங்கள் மானிடப் பதரை ஆட்டி வைக்கின்றன. மேலும் கல்வி, பிரசாரம் முதலிய நமது சனியன்கள், அதிருஷ்ட வசத்தால், மனிதனுல் இளையாள் சேய்களாகவே இன்னும் மதிக்கப்பட்டு வருகின்றன. ஆதலால் நீடித்த காலம் வரை எங்கள் படைக்குக் கொழுத்த இரை அகப்படுமென்றே நாம் மதிக்க இடமாகிறது. எலிகளின் அபிவிருத்திக்கோ கங்கு கரையில்லை. திறந்து வைத்திருக்கும் தின்பண்டங்களே அவைகளது ஆகாரமாகும். எலி வளைகளை எங்கும் காணலாம். சந்தைகள், சாமானறைகள், வீட்டுக்கூரைகள், மண்தரைகள் முதலிய இடங்களில் எலி வளை செய்துகொண்டு வெகு காலம் வசித்துவரக் கூடும். ஒரு விஷயத்தைக் குறித்து மட்டும் நாங்கள் சிறிது கிலேசப்படுகிறோம். முக்கியமாக மனிதனுக்கென்றே தயாரித்து வரும் எங்கள் பாணங்கள் (பிளேக் கிருமிகள்) எலிகளை முதலில் தாக்கி மடியச் செய்கின்றன. ஆயினும் அண்ணன் தம்பி என்று பாண்டவர்கள் கௌரவர்களை யுத்தத்தில் கொல்லாது விடுத்தார்களோ? பகவான் தர்மக்ஷேத்திரத்தில் அர்ஜுனனுக்குப் புத்தி புகட்டியவாறு கிலேசத்தை முற்றிலும் விடுத்துப் பொது இயக்கத்தின் முன்னேற்றத்தையே முழு நோக்கமாகக் கொண்டு மேன்மேலும் நரபலி வாங்கி வருகிறோம். நாகரிகம் முன்னேற ஏற, வியாபாரத்தொழில் விருத்தியாகிவர வர, தானியம், பஞ்சு முதலிய சரக்கு மூட்டைகளில் புது ஊர்களுக்கு எலிகளின்மீது நாங்கள் பவனி போய் அவ்வூர்களிலும் எங்கள் பராக்கிரமத்தைக் காட்டி வருகிறோம்.

இன்னுமொரு விஷயம். எங்கள் குண்டுகள் வெற்றுக் குண்டுகளல்ல. அவை பட்டால் அநேகமாக எதிரி அதிசீக்கிரத்திலேயே மரித்து விடுகிறான். மேன்மேலும் எங்கள் இனம் இக் கைங்கரியத்தைச் செய்து வருமாறு கருணாமூர்த்தியாகிய நம் குல தெய்வம் கடாக்ஷிப்பாராக!



மூட்டைப்பூச்சி.—அக்கிராசனாதிபதியவர்களே மிகுந்த தாழ்மையோடு ஒரே கேள்வி கேட்க விரும்புகிறேன். அதாவது 'ஹாப்கின்' என்பவரை அறிவீரா?

தென்னூப்பூச்சி.—நண்பன் மூட்டைப்பூச்சி.....

ஈ.—மூட்டைப்பூச்சியாவது நண்பனுவது!

தெள்ளுப்பூச்சி.—வாஸ்தவமே. மூட்டைப்பூச்சியை இக்கேள்வி கேட்ட முறைக்கு நண்பனென்று சொல்வதற்கில்லைதான். நிற்க, ஹாப்கின் (மெல்லிய குரலில்) என்ற பேரைக் கேட்ட மாத்திரத்தில் என் ஹிருதயம் கொஞ்சம் துடித்தது. அவர் செய்திருக்கும் ஆராய்ச்சியின் பயனால் சில மனிதர்கள் பிளேக் வராமல் தடுக்கும் மருந்தொன்றை 'இனுகுலேஷன்' (*Inoculation*) செய்துகொள்ளுகிறார்கள். அம்முறை எங்கள் பாணங்களை எதிர்க்கக்கூடிய சக்தி வாய்ந்ததென்றே ஒப்புக்கொள்ள வேண்டியதாயினும் இச்சிறு தடையின் பொருட்டுத் தெள்ளுப்பூச்சிச் சகோதரர்களே, நமது மனத்தைத் தளர விட்டுவிடுவோமோ? [தெள்ளுப்பூச்சிகள்: (ஒரே மொத்தமாய்) ஒருகாலுமில்லை.] எனெனில் மானிடரில் பெரும்பாலாரின் கொள்கையென்ன? மண்ணிலே உதித்தபின் மண்ணோடு சேராது தடுக்கும் முறையை அநுசரிப்பதுமுண்டோ வென்பதே. பிறந்தபின் மரிப்பது அவரவரது பிறப்பு உரிமையாகுமென்று வாதிக்கும் இந்நாளில் கேவலம் இந்தத் தடுக்கும் முறையை மானிடர்கள் உபயோகிப்பார்களென்று நம்புவதற்கில்லை.

மற்றுமொரு வார்த்தை சொல்லிவிட்டு எனது நீடித்த பிரசங்கத்தை முடித்து விடுகிறேன். மானிடன் சாதாரணமாகக் கொடிய ஒரு சாபமிட வேண்டுமென்றால் ஆங்கிலத்தில் 'கொள்ளை நோய் கொள்க' (*Plague upon it*) என்கிறான். அதிலிருந்து எங்கள் பாணங்களைக் குறித்து எவ்வளவு பயப்படுகிறானென்பது தெளிவாய்ப் புலப்படுகிறது. ஆதலின் என்னை இந்த வருஷத்துக்குப் படைத்தலைவனாக நியமிக்குமாறு உங்களை வேண்டிக்கொள்வதுடன் தெள்ளுப்பூச்சிகளை, கூடுமானால் பூச்சிப்படையாளர்கள் அனைவரையும், மானிட வகுப்பின்மீது அதே சாபத்தை இடுமாறு கோருகிறேன்.

('கொள்ளை நோய் கொழுக்க', 'மானிடன் மரிக்க' என்ற பூச்சிகளின் கோஷம்.)

ஈ.—ஒரு காரணத்தைக் குறித்து உங்கள் மன்னிப்பையும் மற்றொரு காரணத்தைக் குறித்து உங்கள் தயவையும் நான் பிரார்த்திக்கவேண்டியிருக்கிறது. ஆரம்பத்திலேயே உங்கள் காலத்தைச் சிறிது போக்கியபின் மறுபடியும் உங்கள் முன்னிலையில் பேச வந்ததைப்பற்றி மன்னிப்பையும், ஈயினத்தைச் சேர்ந்த என்னை இவ்வருஷத்திய படைதலைவனாக நியமிக்க உங்கள் தயவையும் எதிர்பார்க்கிறேன். தெள்ளுப்பூச்சியார் கடல் மடை திறந்ததுபோற் பொழிந்த சொற்கள் உங்கள் மனத்தை அடியோடு கரைத்து விட்டிருக்கும்பொழுது என் சொற்களுக்கு ஒருகால் நீங்கள் செவிசாய்க்க முடியாமல் இருக்கக்கூடும். முதலாவது ஒரு விண்ணப்பம் செய்து கொள்ள விரும்புகிறேன். பொது இயக்கத்தில் தெள்ளுப்பூச்சியே அதிகச் சுறுசுறுப்புள்ளதென்று நினைத்து ஒருகால் இச்சபையார் எங்கள் இனத்தை மறந்து தெள்ளுப்பூச்சியைப் படைத்தலைவனாக நியமிக்கக்கூடும். ஆகையால் சபைத்தலைவனாக நியமித்து விட்டால் தெள்ளுப்பூச்சியின் வாயைக் கட்டி விடலாமென்ற மாய நோக்கம் நான் ஒருகாலும் கொள்ளவில்லை. அந் நோக்கம் கொள்வது தப்பென்று நான் சொல்ல வரவில்லை. "நான்தான்

பலஹீனமுற்ற எளிய எதிரிகளைத் தாக்கச் சமயோசித யுக்தி வாய்ந்திருக்கிறோம். சிறிது காலம் நாங்களே 'காலா ஆஸார்' என்னும் கொடிய விஷ ஜுரத்திற்குக் காரணபூதரென்று மானிடரை ஏமாற்றி வந்தோம். ஆனால் அந்நோய்க்குக் காரணமான மணல் ஈக்களுக்குத் துரோகம் செய்வதாகுமென்று கருதி அதிசிக்கிரத்தில் அந்தத் துராசாரத்தைத் தவிர்த்து விட்டோம். மூட்டைப்பூச்சியார் மட்டும் எங்களுக்குப் பின்னால் தாங்களே அந்நோய்க்குக் காரணமென்று சமீபகாலம்வரை ஏமாற்றிவந்தார். இதைப்பற்றி மணல்பூச்சியாரே எனக்குப் பின்னால் பேச விரும்புவாரென்று நான் நம்புகிறேன். எங்கள் நடவடிக்கை முக்கியமாக 'ரிலாப்ஸிங்க் ஜுரம்' என்ற முறையாக வந்து பிராணனைக் கொள்ளை கொள்ளும் ஒருவகை விஷஜுரத்தை உண்டாக்குவிப்பதே.

மூட்டைப்பூச்சி.—மிகவும் வாஸ்தவம். ஆனால் 'ஸால்வர்ஸான்' ஞாபகமிருக்கட்டும். தவிரவும் தலையை மொட்டையடித்தல், அல்லது தலை மயிரில் மண்ணெண்ணெயைத் தேய்த்தல், துணிகளை நன்றாகக் கொதிக்கும் தண்ணீரில் ஊறவைத்தல் முதலியவை செய்தால் பேன்களின் கதி என்னவாகும் ?

அக்கிராசனாதிபதி.—பேன் பேசி முடிக்கும்வரை மூட்டைப்பூச்சியார் பொறுமையுடனிருப்பது அவரது கடமையாகும்.

பேன்.—தொந்தரவின் அவதாரமாகிய மூட்டைப்பூச்சியார்.....

அக்கிராசனாதிபதி.—பேன் அவரது பிரசங்கத்தைக் குறித்துப் பேசலாமே யொழிய ஒருவருக்கொருவர் அஸம்பாவிதமான வீண் வார்த்தையாடலாகாது.


பேன்.—அக்கிராசனாதிபதி உள்பட இச்சபையோர் எல்லாரும் நினைக்கும் எண்ணத்தை நான் வெளியிட்டேனே யொழிய வேறில்லை. பொதுஇயக்கத்தில் முன்னேற்றத்தின்மீது கண்ணுள்ளவர் நமது மர்மங்களை ஒருகாலும் எதிரிக்குத் தெரியுமாறு வெளியிடலாகாது. ஆனால் ஒரு விஷயம் மூட்டைப்பூச்சியார் மறந்துவிட்டார். அதாவது 'ஸால்வர்ஸான்' என்னும் மருந்தை இஞ்செக்ஷன் செய்துகொள்ளச் சக்தியற்ற எளியார்களையே நாங்கள் தாக்கி,.....மூட்டைப்பூச்சிகளை நசுக்குவது போல் நாசஞ்செய்துவருகிறோமென்பதே.


அக்கிராசனாதிபதி.—மூட்டைப்பூச்சியார் இப்பெரும் சபையில் ஒரு பிரதிநிதியென்பதை சடைமாமுனியார் முற்றிலும் மறந்துவிட்டார் போலும். பேனின் கடைசி வாக்கியத்தை நான் ரத்துசெய்யக் கடமைப் பட்டவனாகிறேன்.

மணல் ஈ.—மூர்க்க மூட்டைப்பூச்சியின் தொந்தரவால் இச்சபை முழுதும் குழம்பியிருக்கும் மத்தியில் நான் பேச வந்தது என் துர்ப்பாக்கிய வசமே. புலித்தோல் போர்த்த கழுதைக் கொப்பான மூட்டைப்பூச்சி கிளைத்தால் கேடு வருமென்ற மர்மம் அறிந்தாரில்லை. கேவலம் சொற்பொழிவின் அழகுக்காக மூட்டைப்பூச்சியைப் புலித்தோல் போர்த்த கழுதை யென்று

நான் கூறவில்லை. அவ்வாறு கூறத் தகுந்த காரணமுண்டு. எனெனில் வெகு காலம்வரை 'காலா ஆஸார்' ஜுரத்தக்குத் தானே காரணமென்று மூட்டைப்பூச்சி எமாற்றி வந்தது. சிறிது காலத்திக்கு முன்புதான் நாங்களும் இப்படையைச் சார்ந்த சுத்த வீரர்களென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. கேவலம் பொதுஜனப்புகழ்ச்சியைச் சிறிதும் கருதாது இயக்கத்தின்மீதே கண் வைத்து, எங்கிருந்து குண்டுகள் படுகின்றன? எவ்விதக் குண்டுகள் அவை? என்றுகூடத் தெரியவிடாதபடி வங்காளத்திலிருந்து கன்னியாகுமரிவரை சமுத்திர ஓரத்திலுள்ள பிரதேசங்களிலெல்லாம் நாங்கள் எதிரியைத் தாக்கி வந்தோம். சமீப காலத்திக்கு முன்புதான் நாங்கள் எய்யும் பாணங்கள் காலா ஆஸார் கிருமிகளென்பது எதிரிக்குத் தெரிய வந்தது. தெரிந்தமென்ன பயன்? எங்கள் பாணங்கள் குறி தப்பாது தாக்கி வருகின்றன. அங்கங்கே சில வேளைகளில் பாணங்கள் எடுத்துக் கோயப்படுகின்றனவென்றாலும் இன்னும் வருஷந்தோறும் அநேகம் மனிதர்களை நாங்கள் மாயச் செய்கிறோம். எதிரியோடு செய்யும் பெரிய யுத்தத்தை நான் இதுவரை உங்களுக்கு விஸ்தரிக்கலானேன். அப்பொழுது நாங்கள் எதிரிபடையைத் தாக்கி உடல் நொடிக்க வலியும் ஜுரமும் (மணல் ஈ ஜுரம்) இரண்டு மூன்று நாட்களுக்கு வரச்செய்து பலஹீனப்படுத்துவதைப்பற்றி நான் விசேஷமாகச் சொல்வதற்கில்லை. ஆகையால், நேயர்களே! என்னைப் படைத்தலைவனாக நீங்கள் நியமித்தால் நான் கூடியவரை சேவை செய்யக் காத்திருக்கிறேன்.

அக்கிராசனாதிபதி.—தென் ஆபிரிக்கா தேசத்திலிருந்து விஜயம் செய்துள்ள ட்ஸெட்ஸி ஈ துயிலெழுந்து அவரினம் செய்துவரும் நன் முயற்சிகளைக் கொஞ்சம் வெளியிடுமாறு வேண்டுகிறேன்.





ட்ஸெட்ஸி ஈ.—(கண்ணைத் துடைத்துச் சோம்பல் முறித்து) அக்கிராஸனாதிபதி அவர்களே! அதிதி ஆயிற்றே என்று சிறிதும் கவனியாது தாங்கள் என்னைப்பற்றிச் சிறிது வித்தியாசமான சொற்களைச் செப்பியதாக என் நண்பரிடமிருந்து நான் அறிகிறேன். கொஞ்ச நேரம் களைப்பு மேலிட்டு

நான் இச்சபையில் தூங்கினேனென்று எளனம் செய்ய வேண்டாம். கொஞ்ச நேரம் நான் தூங்கிஞலும் எத்தனை நேரம் நான் எதிரிகளை ஒரே மொத்தமாகத் தூங்கச் செய்கிறேனென்பது உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும். என் குண்டு பட்ட எதிரி கொஞ்ச காலம் இம்மண்ணுலகில் தூங்கிப் பிறகு விண்ணுலகத்துக்குத் தூங்கப்போகிறான். ஆயினும் என்னைப்பற்றி உங்களுக்கு விஸ்தரிக்க நான் வரவில்லை. நான் ஓர் அதிதியே. அதோ மாதிரி என் நண்பர் 'டிக்' பூச்சியாரும். அவரது செயல்களைப்பற்றி உங்களுக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை. எங்கள் தேசத்தில் அவர் செய்து வரும் நடவடிக்கைகளை இங்கே பேன் செய்து வருகிறது. பேன் அதைப்பற்றி வீண் தற்புகழ்ச்சியோடு...

.....

'போதும், நிறுத்தும் உமது பிரசங்கத்தை. படைத்தலைவனை நியமிப்போம். இனி, பிரசங்கம் வேண்டாம்' என்று பூச்சிகளின் காதகோஷம்.

அக்கிராசனாதிபதி.—அதிதியை அவமதிக்கலாகாதென்று சபையோர் ஞாபகத்தில் வைப்பாராக.

ட்ஸெட்ஸி ஈ.—'பொறுத்தவர் பூமி ஆள்வார்' என்பது ஞாபகமிருக்கட்டும். பூச்சிப்படை அறவே நசித்துப்போவது சமீப காலத்துக்குள் ஏற்பட்டக் கூடும் என்பதும் ஞாபகமிருக்கட்டும். அதற்குள் ஒரே மொத்தமாகத் தாக்கி எதிரியின் வலியைக் குறைக்கவேண்டுமே யல்லாது வீண்பேச்சில் காலம் கழிக்கிறீர்கள். ஆனல் இப்பூச்சிப்படையில் அவ்வாறு செய்ய வல்லவர் ஓர் இனத்தாரே. நாடெல்லாம் பாழாக்கி நீர்வளம் பொருந்திய இடங்களைச் செழிக்கவொட்டாமற்செய்யும் வன்மை வாய்ந்தவர் அவரொருவரே. அவர் ஏனை இங்குக் காணப்படவில்லை?



கொசு.—அக்கிராசனாதிபதி அவர்களே! வெகு நேரமாக நான் பேச அவாக்கொண்டு உங்கள் அனுமதியைப்பெற முயன்றேன். ஆனல் அகஸ்மாத்தாக—வேணுமென்று நீங்கள் செய்வீர்களென்று சொல்வதற்கில்லை—நீங்கள் என் புறம் கண் நோக்கவில்லை.

ட்ஸெட்ஸி ஈ.—இவரே நான் குறித்த மகாவீரர்! அவரிருக்கும் பொழுது ஏனை நீங்கள் வீண்காலம் போக்குகிறீர்கள்?

கொசு.—ட்ஸெட்ஸி ஈக்கு என் மனப்பூர்வ வந்தனம். ஆயினும் எங்கள் படை பிறர் தயவை எதிர் பார்க்கவேண்டிய அவசியமில்லாத வலி படைத்தே யிருக்கிறது. இதுகாறும் சுற்றுத் தேவதைகளையே பூஜித்து வந்த இச்சபையோர் மூலதெய்வத்தை அசட்டை செய்வார் என்று நான் நம்பவில்லை. ஏதோ கொள்ளைநோய், காலரா, விஷஜ்வரம், முறை விஷஜ்வரம் முதலிய நோய்களால் ஏற்படும் வருஷாந்தரச் சாவுத்தொகையைக் குறித்து வேறுவேறு பூச்சியினங்கள் வெகுவாகப் புகழ்ந்து பேசலாயின. அவையெல்லாம் கூட்டிக் கணக்கிட்டுப்பார்ப்பின் ஒரு லக்ஷம்கூட மொத்தமாகாது. இந்நோய்களின் கொடூரம் ஒரு டெருத்த பாணவேடிக்கையைப் போலிருக்

கிறது. தவிரவும் இந்நோய்கள் ஜனங்களுக்குப் பயத்தை உண்டாக்கி அவை வரா வண்ணம் ஏதேதோ தடுக்குமுறைகள் செய்ய அவகாசம் தருகின்றன. எங்கள் இனத்தைச் சார்ந்தார் மெதுவாகக் குழி பறித்து ஜனங்களை வீழ்த்தி மண்ணைப்போட்டு மூடிவிடுகிறார்கள். முதலாவது நமது எதிரியின் சாதுரிய வழக்கத்தையே நாங்களும் அவலம்பித்து வருகிறோம். அதாவது, நோய் வந்தபின் சிகிச்சை செய்வதைவிட நோய் வராமல் தடுப்பதே மேன்மை என்ற எதிரியின் நோக்கத்தைப்போலவே நாங்களும் ஜனங்களைப் பிறந்த பின் வாட்டுவதைவிடப் பிறக்கு முன்னமே தாய் வயிற்றில் தாக்கு கிறோம். அவ்வாறு எங்கள் பாணங்களால் மடியும் சிசுத்தொகையையே எங்கள் பெருத்தபடையின் அரிய செயலுக்குச் சாட்சியாகக் கூறலாம். தவிரவும், காலரா, பிளேக், விஷஜ்வரம் முதலிய நோய் கண்ட மனிதன் சாதாரணமாக மறுபடியும் அந்நோய்கள் கொள்வதில்லை. மலேரியா ஜ்வரம் கண்ட மனி தனை வென்றால் திரும்பத் திரும்ப அந்நோயால் வாடி மெலிந்து வேறு நோய் கண்டு காலமாகிறான்: உண்மையான தொண்டருக்கொப்ப, மனிதன் வாழ்விற் கடைசிப் பாணத்தையும் நாங்களே எய்யவேண்டுமென்ற ஓர் அல்பக் கியாதியை நாங்கள் நாடவில்லை. குற்றுயிராக்கிவிட்டு இதர நோய்களால் மடியட்டுமென்று விட்டுவிடுகிறோம். ஆனால் ஒரே பாணத்தில் எதிரியைக் கொல்லும் சக்தியற்றவர்களில்லை என்று ரூபிக்கும்பொருட்டு 'மலிக்னண்ட் டெர்டியன் ஜ்வரம்' என்ற ஒருவகைச் சர்ப்ப பாணத்தைச் சிலவேளைகளில் மனிதனுடைய மூளையில் எய்து ஸ்மரணை தப்பச் செய்து அதிசீக்கிரம் உயிர் நீங்குமாறு செய்து வருகிறோம். இந்தப் பாரத நாட்டில் வருஷத்துக்குப் பத்து லக்ஷம் ஜனங்கள் எங்கள் பாணம் தாக்கி மடிகிறார்கள். இந்த ராஜதானியில் கூட ஒரு லக்ஷம் ஜனங்களுக்குக் குறைவில்லை. மேலும் நான் முன் சொன்ன படி குற்றுயிராய்த் துடிக்கும் ஜனங்கள் இன்னும் எத்தனையோ பேர்கள். ட்ஸெட்ஸி ஈ சொல்லியபடி நீர்வளம் நிலவளம் செழித்துள்ள மலைப்பிர தேசங்களில் நாங்கள் கூடிக் குலாவிக் காலம்கழித்து வருகிறோம். எங்கள் பாண வெப்பம் தாங்காமல் மானிடன் அப்பிரதேசங்களில் குடியேறமாட் டாது நாடெல்லாம் பாழாகி யிருந்து வருகிறது. இதுவரை எங்கள் இனத்தில் 'அனுபிலிஸ்' என்னும் வகுப்பினரால் ஏற்படும் மலேரியா ஜ்வரத்தைப்பற்றி மட்டும் சொல்லிவந்தேன். எங்கள் இனத்தில் 'ஸ்டெகோமயா' என்ற மற்றொரு வகுப்பினர் மஞ்சள்ஜ்வரம் என்னும் ஒரு கொடிய ஜ்வரத்திற்குக் காரணபூதராவர். ஆனால் அந்நோய் இன்னும் இத்தேசத்தில் காணப்பட வில்லை. அதிசீக்கிரத்திலேயே அவர்கள் நடவடிக்கைகளை இத்தேசத்திலும் காட்டி வருவார்கள் என்றே நான் நம்புகிறேன்.

ழட்டைப்பூச்சி.—கேவலம் பூச்சியினத்தைச் சேர்ந்தவனென்பதை மறந்து வீண் தற்புகழ்ச்சியோடு தம் பொல்லாச் சிறகுகளை அடிக்கடி ஆட் டிக்கொண்டு துதிக்கை போன்ற விஷ மூக்கை நாற்புறங்களிலும் நீட்டிக் கொண்டு வாதாடும் கொசு 'ஸர் ரோனல்ட் ராஸ்' என்றவரையும் 'சிங்கன்' என்றவரையும் அறிவாரா என்ற ஒரு கேள்வியை நான் கேட்க விரும்பு கிறேன்.

(இப்பேர்களைக் கேட்டமாத்திரத்தில் கொசு உடல் நடுங்கித் தள்ளாடிக் கீழே விழுகிறதுபோல் காணப்படுகிறது.)

மூட்டைப்பூச்சி.—அற்பக் கொசுவே! அறிந்தாயா உன் பேதைமையை?

கொசு.—(தெளிந்தெழுந்து) அக்கிராசனாதிபதி அவர்களே! சற்று மதிமயங்கி அக்கொடிய பேர்களைக் கேட்ட மாத்திரத்தில் கொஞ்சம் உடல் நடுங்கி மயிர் சிலிர்த்ததைப் பற்றி உங்கள் மன்னிப்பைக் கோருகிறேன். சிறிதுகாலம் நான் மயிர் சிலிர்த்தேனுயினும் என் நோயால் எத்தனை கோடி எதிரிகளைக் குளிர் கண்டு உடல் நடுங்கச் செய்ய வல்லவனென் பது மூட்டைப்பூச்சியாருக்கு ஞாபகமிருக்கட்டும். ராஸ், வாட்ஸன், சிங்கன் முதலியவர்கள் எனது மூக்கிய எதிரிகளே யாயினும் அவர்கள்கூட என் பாணம்பட்டு நோய் கண்டு துடிக்கவில்லையா? குலதெய்வத்தின் கருணை இருக்குமளவும் எங்களுக்கு யாதொரு பயமுமில்லை. அக்கருணை வசத்தால் ராஸ் என்பவர் புத்திகெட்டிருக்கிறரென்று அநேக ஜனங்கள் மதிக்கிறார்கள். வாட்ஸன் துரை மலேயா மாகாணங்களில் செய்துள்ள நடவடிக்கைகளை நாடெங்கும் செய்ய வேண்டுமென்றால் ஒருபெருந் தங்கச் சாங்கம் காணப் படவேண்டும். இந்நாட்டார் கதியோவென்றால் நாளுக்கு ஒரு வேளைகூட முழுவயிற்றுக்கு ஆகாரம் கிடைத்தபாடில்லை. ஆதலால் அந் நடவடிக்கைகள் இந்நாட்டில் சிறிதும் சாத்தியமில்லை. 'சிங்கன்' சீமாஞல் முதலாவது பிரபலப்படுத்தப்பட்ட கொயினு மருந்து அதிருஷ்ட வசத்தால் மிகவும் கசப்பு வாய்ந்த மருந்து. ஜனங்கள் அதைத் திருப்தியோடு ஒரு நாளும் சாப் பிடமாட்டார்கள். தவிரவும் பேதை ஜனங்கள் மனத்தில் கொயினு மிகவும் உஷ்ணமான மருந்தென்று ஒருவகை மூட எண்ணம் நன்றாகக் குடிகொண் டிருக்கிறது.

மூட்டைப்பூச்சி.—ஆமாம், கொசுவே! உன் வலையில் சிக்காதிருக்க ஒரு கொசுவலையை உபயோகித்தால் போதுமானதே.

கொசு.—வாஸ்தவமே. ஆனால் எத்தனை பேர்கள் அவ்வாறு கொசு வலையை உபயோகிக்கிறார்கள்? சூரிய வெப்பம் மிகுந்த இந்நாட்டில் இராக் காலத்தில் கொசுவலையை உபயோகித்தால் உடல் வேர்த்து நித்திரை வருவ தில்லை யென்று கற்றறிந்தவர்கள்கூட அதனை உபயோகிப்பதில்லை. மூட்டைப் பூச்சியார் வெகுவாக எனது பேச்சை நிறுத்தித் தொந்தரவு செய்து வந்த தையே என் படையின் மேன்மைக்கு ஒரு பெருத்த அத்தாட்சியாக நான் கூறு வேன். அவரது ஆக்ஷேபங்களை யெல்லாம் அறவே மறுத்துவிட்டேனென் பதற்கு யாதோர் ஐயமுமில்லை. ஆகையால் நீதியையே கைக்கொண்ட இந்தச் சபையோர் எங்கள் இனத்தையே இவ்வருஷம் கௌரவப்படுத்தக் கடமைப் பட்டவராவர்.

(மகாநாடு முடிகிறது.)

பாம்புகள்

எம். ஏகாம்பரநாத ஐயர்

இராமன்.—அக்கா! பிடாரனைப் பாம்புகள் கொண்டுவரச் சொன்னேமே; இதோ, அவன் அவற்றைக் கொண்டுவந்திருக்கிறான்; நாம் பார்ப்போம்.

கமலம்.—இதோ வந்துவிட்டேன். அப்பா, பாம்பாட்டி! கையிலுள்ளது என்ன பாம்பு?

பாம்பாட்டி.—அம்மணி! இது சாரைப்பாம்பு; இது விஷமற்றது. நீங்கள் பயப்படவேண்டாம்; அருகில் வரலாம்.


கமலம்.—அதற்கு விஷமில்லையென்று நீ சொன்னாலும், எனக்கு அதைப் பார்க்கும்போதே மயிர்க்கூச்சலிடுகிறது.

இராமன்.—அக்கா! சாரைப்பாம்புக்கு விஷமில்லை; நல்ல பாம்பு, கண்ணாடிவிரியன், கட்டுவிரியன் முதலானவைகள்தாம் விஷப்பாம்புகள். விஷப்பாம்புக்கு வாயில் விஷக்கருவிகள் உண்டு; விஷமில்லாத பாம்புகளுக்கு அவையில்லை.

கமலம்.—இப்பாம்பின் மேல்பாகத்தைப் பார்த்தாயா? தேகமெல்லாம் அரணை, ஓணான், முதலானவைகளுக்குள்ளன போலச் செதில்கள் இருக்கின்றன.

இராமன்.—அக்கா! இதன் செதில்களைப் பாருங்கள்; முதுகுப் பக்கத்தில் ஒரு விதமான செதில்களும், அடிப்பாகத்தில் வேறு விதமான செதில்களும் இருக்கின்றன. பாம்பாட்டி! இப்பாம்பின் அடிப்பாகத்தைச் சற்றுக் காட்டு.


பாம்பாட்டி.—இதோ பாருங்கள்.



பாம்பின் செதில்கள்.

இராமன்.—அக்கா! பாருங்கள் அடிப்பக்கத்தை; அகலமான செதில்கள் ஒன்றன்பின்னொன்றாக இருக்கின்றன.

கமலம்.—ஆமாம், தம்பீ! இதற்குக் கால்களைக் காணோமே; இது எப்படி அதிவேகமாக ஓடுகிறது?



பாம்பின் எலும்புக் கூடு.

இராமன்.—நமக்கு மார்புப்பாகத்தில் மாத்திரம் விலாவெலும்புகள் இருக்கின்றனவென்றும், அவைகள் மார்பெலும்புடன் இணைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் உங்களுக்குத் தெரியுமே. ஆனால், பாம்புக்குக் கழுத்துமுதல் வால்வரையிலும் விலாவெலும்புகள் இருக்கின்றன. மேலும், அடிப்பக்கத்தில் எதனுடனாவது சேர்க்கப்பட்டிருக்கின்றனவா? பாம்பாட்டி காட்டுகிறான், பாருங்கள். அடிப்பக்கத்தில் மார்பெலும்பு இல்லை. பெரிய செதில்கள் ஒவ்வொன்றும் இருபக்கங்களிலும் அவற்றிற்குச் சரியான விலாவெலும்புகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இச்செதில்களின் உதவியால்தான் பாம்பு ஓடுகிறது. பாம்புகள் விலாவெலும்புகளின் நுனிகளால் நடக்கின்றன எனலாம்.

கமலம்.—இஃது எப்படி?

இராமன்.—விலாவெலும்புகள் முதுகுப் பக்கமாக முதுகெலும்புகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றனவல்லவா? இவ்வெலும்புகளெல்லாம் வெகு சுலபமாக முன்னும் பின்னுமாக அசையும்படி அமைந்திருக்கின்றன. விலாவெலும்புகள் இப்படி அசையும்போது, அவற்றுடன் இணைந்துள்ள செதில்களும் அசைகின்றன. செதில்கள் இப்படி அசையும்போது பாம்பு இடம் விட்டு இடம் நகருகிறது.

கமலம்.—இச்செதில்களுக்குக் கீழே பற்றிக்கொள்ள ஓர் ஆதாரம் இருந்தால்தானல்லவா இரு பக்கங்களும் விலாவெலும்புகளின் உதவியால் அசையும்? இல்லாவிட்டால் முடியாதே.

இராமன்.—அக்கா ! வாஸ்தவந்தான் ; கீழே கரடுமுரடாக இருந்தால்தான் பாம்பு சுலபமாக ஊரும் ; வெகு மழமழப்பான கண்ணாடியின்மேல் ஊராது. கண்ணாடியின்மேல் பாம்பு தெளியும்.

கமலம்.—இவ்விதமாகத்தானே பாம்புகள் அதிவேகமாக நிலத்திலும், மரத்திலும், புதரிலும் ஓடுகின்றன ?

இராமன்.—ஆமாம்.

கமலம்.—இப்பாம்பு அடிக்கடி நாக்கை வெளியே நீட்டுவதேன் ?

இராமன்.—பூனைக்கு மீசை உரோமங்கள் ஸ்பர்சக்கருவிகளாவதுபோல், பாம்புக்கு நாக்கு ஸ்பர்சக்கருவியாகும். நாக்கு எவ்வளவு நீளமாக இருக்கிறது பாருங்கள். அதை வெளியே நீட்டவும் உள்ளே இழுத்துக்கொள்ளவும் முடியும். இழுத்துக்கொள்ளும் போது வாயினுள்ளே இருக்கும் ஒரு சிறு உறைக்குள்ளே அது அடங்கியிருக்கும். பாம்பின் வாய் மூடியிருக்கும்போதுகூடச் சிறு இடுக்கு இருப்பதால் அதன் வழியாக நாக்கை வெளியே நீட்ட முடியும்.

கமலம்.—பாம்பிற்கு நாக்கில் விஷமுண்டு என்கிறார்களே ; அது வாஸ்தவமா ?

இராமன்.—நாக்கில் விஷம் இருக்குமென்பது தப்பு.

கமலம்.—பாம்பிற்குக் காதுகள் இல்லை யென்றும், கண்களே சப்தங்களை உணர்கின்றனவென்றும், இது காரணமாகப் பாம்பைக் கட்செவி என்றும் கூறுகிறார்களே ; அது வாஸ்தவமா ?

இராமன்.—பாம்பு சப்தத்தைக் காதுகளாலேயே உணர்கின்றது. அதற்குச் சூக்ஷ்மமான உட்செவிகள் இருக்கின்றன. நமக்குள்ளவற்றைப் போலப் புறச்செவியும், மத்தியச் செவியும் இல்லை. சப்தங்களை உணர்வதற்கு இவ்வுட்செவிகளே முக்கியமாகும்.

கமலம்.—பாம்புக்கு ஆகாரம் என்ன ?

இராமன்.—இது, தவளை எலி முதலியவற்றை இரையாக உட்கொள்ளுகிறது. பாம்பு இவற்றைக் கடித்துக் கிழிக்காமல் அப்படியே விழுங்கிவிடும்.

கமலம்.—இதன் வாய் சிறிதாக இருக்கிறதே; தவளை முதலானவற்றை எப்படி விழுங்கமுடியும் ?

இராமன்.—நாம் வாயில் ஏதாவது பெரியவஸ்துவைப் போட்டுக்கொண்டால், வாய்கொள்ளாமல் கஷ்டப்படுவோம் ; ஆனால் பாம்பின் வாயிலுள்ள எலும்புகள் தளர்ச்சியாகச் சேர்க்கப்பட்டிருக்கின்

றன ; இதனால் பெரிய இரையை வாயில் உட்கொண்டாலும் வாய் பெரிதாகி விரிந்து கொடுத்துக் கொள்ளுகிறது. இப்படி வாயில் உட்கொண்ட ஆகாரத்தை விழுங்கின பிறகும், தேகத்தின் அடிப் பாகத்தில் எலும்பு இல்லாமையால், தேகம் விரிந்து கொடுக்கிறது. சிலவேளைகளில் இரை தின்ற பாம்பின் தேகத்தில், ஒருபாகமானது உள்ளிருக்கும் இரை காரணமாகப் பருத்திருப்பதைப் பார்க்கலாம்.

கமலம்.—பாம்பின் வாயில் பற்கள் இல்லையா ? ஆகாரத்தைக் கடிக்காமல் விழுங்கிவிடும் என்கிறாயே.

இராமன்.—பாம்பாட்டி ! பாம்பின் வாயைத் திறந்து காட்டு.

கமலம்.—அதோ ! பற்கள் நிறைய இருக்கின்றனவே.



பாம்பின் பற்கள்.

இராமன்.—இவற்றைக் கவனித்துப் பாருங்கள். இவைகளெல்லாம் ஒரே மாதிரியாகவும், கொக்கிபோல் எல்லாம் பின் பக்கமாக வளைந்தும் இருக்கின்றன. இம்மாதிரியான பற்கள் மேல்வாயிலும் கீழ்வாயிலும் இருக்கின்றன. இவற்றால் எலி, தவளை முதலான வற்றைக் கடித்துத் தின்னமுடியுமா ?

கமலம்.—சரிதான். ஆனால், வாயினுட் சென்ற ஆகாரத்தை வெளியே வராமல் இப்பற்கள் தடுக்கின்றனவா ?


இராமன்.—ஆமாம் இதுவே, இப் பற்களின் உபயோகமாகும்.

கமலம்.—சாரைப்பாம்பு ஸர்ப்பத்தின் ஸ்திரீ ஜாதி என்பது வாஸ்தவமா ?

இராமன்.—சாரைப்பாம்புகளிலும் ஆண், பெண் என்று இரண்டு ஜாதிகள் இருக்கின்றன. அதே மாதிரியாக ஸர்ப்பத்திலும் ஆண் பெண் என்ற இருஜாதிகள் உண்டு. ஆகையால் சாரைப்பாம்பு களெல்லாம் ஸ்திரீ ஜாதி என்பதும், ஸர்ப்பங்களெல்லாம் ஆண்க ளென்பதும் தவறு.

கமலம்.—சாரைப்பாம்புகள் முட்டைகள் இடுமா, அல்லது குஞ்சுகள் பொரிக்குமா ?


இராமன்.—சாரைப்பாம்பு முட்டைகள் இடும் ; அவற்றினின் றும் குஞ்சுகள் வெளியே வரும். இப்போது, இப்பாம்பாட்டி யினிடம் ஸர்ப்பத்தை எடுக்கச்சொல்லி அதன் வாயிலுள்ள விஷக் கருவிகளைக் காட்டச் சொல்லுவோம்.



ஸர்ப்பம் (நல்ல பாம்பு).

கமலம்.—ஆகா! பாம்பாட்டி அதை எடுக்கும்போதே, அது சீறி அவனைக் கடிக்கத் தலையைக் கீழே அடிக்கிறதே.

பாம்பாட்டி.—பயப்படாதேயுங்கள். நான் வெகு ஜாக்கிரதையாக இதைப் பிடித்துக் கொள்வேன். இதோ பாருங்கள்; வாயில் முன்னுல் இருபக்கங்களிலும் இரண்டு விஷப்பற்கள் இருக்கின்றன; இவை தாம் விஷப்பற்கள். சாரைப்பாம்புக்கு இவ்விதமான பற்கள் இல்லை. ஆனுல் சாரைக்கு இருப்பதுபோல் ஸர்ப்பத்திற்கும் கொக்கி போன்ற அநேக பற்கள் இருக்கின்றன.



பாம்பின் விஷக்கருவிகள்.

இராமன்.—இவ்விஷப் பல்லின் உள்ளே சிறு கால்வாய் ஒன்று உண்டு. இதன் நுனியில் ஒரு சிறு துவாரமுண்டு.

கமலம்.—விஷம் எங்கே உண்டாகிறது?

இராமன்.—பாம்பின் மேல்வாயில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு விஷப்பைகள் இருக்கின்றன. இவற்றில் விஷம் உண்டாகிறது. இவ் விஷம் ஒரு திராவகமாக இருக்கிறது. ஒவ்வொரு விஷப்பையிலிருந்தும் ஒரு சிறு குழல் அந்தப் பக்கத்து விஷப்பல்லின் அடியோடு சேர்ந்திருக்கிறது. விஷப்பையில் உண்டாகும் விஷமானது, இக்குழல் வழியாக விஷப்பல்லின் அடியிற் சேர்கிறது; பிறகு பல்லினுள்ளேயிருக்கும் கால்வாய் வழியாகச் சென்று நுனித்துவாரத்தின் மூலமாகப் பாம்பு கடிக்கும்போது இரைக்குள் செல்லும். பாம்பின் விஷப்பல்லானது டாக்டர்கள் இஞ்செக்ஷனுக்கு உபயோகிக்கும் சிரிஞ்சுக் குழல் (*syringe*) ஊசிபோல் இருக்கிறது. டாக்டர்கள்


மருந்தை இரத்தத்தினுள்ளே செலுத்துவதுபோலப் பாம்பானது விஷத்தை இரத்தத்திற் செலுத்துகிறது.

கமலம்.—இவ்விஷக்கருவிகள் விஷப்பாம்புகளுக்குமட்டுமே இருக்குமா?

இராமன்.—ஆமாம்; பச்சைப்பாம்பு, தண்ணீர்ப்பாம்பு, கொம்பேறிமூர்க்கன் முதலான பாம்புகள் விஷமற்றனவாதலால், அவைகளுக்கு இல்லை.

கமலம்.—தம்பீ! இதன் விஷம் இப்பாம்புகளைப் பாதிப்பதில்லையா?

இராமன்.—இல்லை.



கண்ணுடிவிரியன்.

கமலம்.—கண்ணுடி விரியன், கட்டுவிரியன் முதலான விஷப் பாம்புகளுக்கும் இம்மாதிரியான விஷக்கருவிகள்தாமா?

இராமன்.—ஆமாம்.

கமலம்.—ஆகா; இந்தப் பாம்பாட்டியின் உதவியால் நாம் அநேக விஷயங்களைத் தெரிந்து கொண்டோம். பாம்பாட்டி! இதை இனாமாக வைத்துக்கொள்.

பாம்பாட்டி.—கும்பிடு, அம்மா! போய்வருகிறேன்.

மிருகங்களின் தோல்

எம். கிருஷ்ணன்

பற்பல மிருகங்களின் சர்மம் பற்பல விதங்களில் விசித்திர மாய் அமைந்திருக்கிறதென்பது அறிந்துகொள்வதற்குரிய சாரமான விஷயம். பொதுவில் குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் மிருகங் களின் தோல் மயிர் செறிந்திருக்கும். இவைகளில் திமிங்கிலம் போன்ற கடலில் வாழும் மிருகங்களின் தோலில் சில மயிர்களே காணப்படும். சீதோஷ்ண நிலைமைகளின் கடுமைகளிலிருந்து மிருகங் களின் தோலே அவைகளைக் காப்பாற்றுகின்றன.

தோலின் தடிப்பு மிருகத்தைப் பொறுத்தது. ஆப்பிரிக்கா தேசத்து நீர்க்குதிரை (ஹிப்போ) யின் தோல் சில இடங்களில் ஒரு அங்குலத்துக்கு மேற்பட்ட கனமுள்ளது. இத்தோலைச் சிறு பாளங் களாகக் கிழித்து உலர்த்தியபின் கைப்பிரம்புகளாக உபயோகிக்க லாமாம். இந்தியக் காண்டாமிருகத்தின் தோல் கனத்த கேடயங்க ளாக அதன் உடலை மூடியிருக்கிறது. மற்றெல்லா மிருகங்களைவிட மனிதன் மெல்லிய தோலையுடையவன். ஆடுமாடுகளின் தோல் பத னிட்டபின் சுலபமாய் மடிபடுவதனாலும், வெகு நாள் தேய்வு தாங் கும் வலிவுள்ளதனாலும் ஒரு முக்கிய வியாபாரப் பொருளா யிருக் கிறது.

சீதப் பிரதேசங்களில் வாழும் மிருகங்களின் தோலில் மயிர் அடர்த்தியாய் வளர்ந்திருக்கும். இம்மயிர்க் கம்பளமே அவைகளுக் குக் குளிர்காலப் போர்வை. கரடி, ஆர்க்டிக் நரி, விலைமதிக்கப்பெற்ற அடர்ந்த சர்மங்களையுடைய ஆட்டர் முதலிய சிறு மிருகங்கள் இவையெல்லாம் இதற்கு உதாரணங்கள்.

குளிர்தேச ஜந்துக்களின் சடைமயிர்ப்பாங்குக்கு நேர் எதி ராக, உஷ்ண தேசங்களிலுள்ள மிருகங்களுக்குப் பளபளப்பான குட்டை மயிர் அடர்ந்திருக்கும். பலவகை மான்கள், குதிரை, வரிக் குதிரை முதலியன இதற்குத் திருஷ்டாந்தங்கள்.

உரோமத்தின் தடிப்பிலும் பல வித்தியாசங்களுண்டு. கீரிப் பிள்ளை, பெருச்சாளி முதலியவைக்கு மயிர் இடைவிட்டுக் கரடு முரடாக விருக்கும். வேறு சில மிருகங்களுக்கு மயிர் மிக நெருங்கிப்

பட்டுப்போன்ற மென்மை யுடையதாய் முளைத்திருக்கும். இப்பேர்ப் பட்ட மிருகங்களின் தோல்களை மேல்நாட்டு மாதர்கள் ஆபரணங் களாய் அணிவதால் அவைகள் விலையுயர்ந்த பொருள்களாய் வழங்குகின்றன. இம்மிருகங்கள் முக்கியமாய் வட அமெரிக்காவி லுள்ளவைகள்.


சின்சிலர் என்ற வட அமெரிக்கா அணில், கானடா தேசத்து லிங்க்ஸ் என்ற பெருங்காட்டுப் பூனை, கானடா தேசத்து பீவர், ஆட்டர் முதலியன, சில கரடி கள், சில முயல்கள், வீல்கள், இவையெல்லாம் விலைபெற்ற சர்மங்களைத்தருகின்றன. கடல்



ஆட்டர்.


ஆட்டரின் தோல் இவைகளெல்லாவற்றிலும் விலையுயர்ந்தது. ஒரு தோல் 100 பவுன்வரை விலைபெறும். இம்மிருகத்தின் அழகிய விலை பெற்ற தோலை நாடி இவற்றை அதிகமாய் வேட்டையாடுவதனால், இவை அபூர்வமான ஜந்துக்களாய் விட்டன.

நீரில் வாழும் மிருகங்களின் சர்மம் அவற்றின் வசிப்பிடத் திற்கு ஏற்றதாயிருக்கிறது. ஆட் டர், மீன்க், பீவர் முதலிய நீர்ப் பிராணிகளின் உரோமம் அடர்ந்து வளர்ந்து தோலைத் தண்ணீரில் நனைய வொட்டாமல் தடுக்கிறது.



ஸீல்.


சில மிருகங்களின் மயிர் ஒன்று சேர்ந்து திரிந்து கேடயங்க ளாகவும் முட்கவசங்க ளாகவும் மாறுகிறது. முள்ளம்பன்றி, முள் ளெலி முதலிய ஜந்துக் களின் அதி கூர்மை யான முட்கள், மயிர்க் கற்றைகளால் வாய்ந் தனவே. பங்கோலின், ஆர்மடில்லோ முதலிய வகைகளில், மயிர் சிறு



முள்ளம்பன்றி.

கேடயங்களாய் மாறி, தட்டுக் கவசம்போல் உடலை மூடியுள்ளது. காண்டாமிருகத்தின் வலி மிகுந்த கொம்பு உண்மையில் பல மயிர்கள் சேர்ந்து வாய்ந்ததே.

மிருகங்களின் நிறங்களும் பலவகைப்பட்டன. சில மிருகங்களின் தோலின் நிறம் அவைகளின் வசிப்பிடத்தின் பொது நிறத்துடன் இசைந்திருக்கும். வரிக்குதிரையும் ஒட்டகைச்சிவிங்கியும் காட்சிச் சாலையில்தான் கண்ணைப் பறிக்கும் தோற்ற முடையன. அவைகளின் இயற்கை வசிப்பிடமான ஆபிரிக்கா



வரிக்குதிரை.

தேசத்துக் காட்டு வெளியிடங்களில் வரிக்குதிரையின் கீற்றுக்களும் ஒட்டகைச்சிவிங்கியின் தடங்களும் புதர் நிழலொடு கலப்பதால் அம்மிருகங்கள் கண்ணுக்குப் புலப்படுவது அரிது. அதுபோல, இலேசான தவிட்டு நிறமுள்ள வெள்ளைக் கரடி, தான் வாழுமிடத்திலுள்ள பனிக்கட்டிகளை ஒத்திருப்பதால், ஆர்க்டிக் பிரதேசத்து அந்தி வெளிச்சத்தால் கண்ணுக்கப்படுவது அசாத்தியமென்னலாம். பனிக்கட்டிகளுடனே ஒட்டியொட்டிப் பதுங்கி வேட்டையாடி, தன் இரையான வீல்களுக்கு வெகு சமீபத்தில் வந்தபின்பே அவைகள்மேல் வெள்ளைக் கரடி பாய்வது வழக்கம்.

சில மிருகங்கள் பருவத்துக் கேற்றபடி நிறம் மாறுகின்றன. ஸ்டோட் என்ற கீரிப்பிள்ளை போன்ற மிருகம் கோடைகாலத்தில் தவிட்டு நிறமாயிருக்கும்; மாரிக்காலத்தில் நிறம் மாறி வெள்ளையாய் விடும். பனிக்காலத்தில் வெள்ளையாவதால், அது தன்னைச் சூழ்ந்திருக்கும் பனியை யொத்து எதிரிகளுக்கு இலேசாய்ப் புலப்படாது. இம் மிருகத்தின் மாரிக்காலச் சர்மத்திற்கு 'எர்மின்' என்று பெயர். இஃது அதிக விலைபெற்ற சர்மம். இத்தோலை மேல் நாட்டு அரசர்களணிவது வழக்கம்.



தமிழ்வேந்தரின் இமயப்படையெடுப்பு

மு. இராகவையங்கார்

பரதகண்டத்தின் தென்பகுதியானது பழங்காலமுதலே சேர சோழ பாண்டியர் என்ற மூவேந்தரின் ஆட்சிக்கமைந்த நில மாய்த் தமிழகம் என்ற பெயர் பெற்றிருந்ததாகும். 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' (தொல்காப்பியம்), 'இமிழ் கடல் வேலித் தமிழகம்' (சிலப்.) எனவரும் முன்னோர் கூற்றுக்களால் இதனை அறியலாம். மூவேந்தரும் ஆட்சி புரிந்துவந்த இத்தமிழ் நாடு அவர்களின் கூட்டுவலிமையால் சுதந்திரம்பெற்ற தனித்தேச மாய் முற்காலமுதலே பெருமைபெற்று விளங்கியது. பரதகண்ட முழுமையும் தன் ஒருகுடைக்கீழ் வைத்து ஆட்சிபுரிந்த மௌரிய சக்கரவர்த்தியாகிய அசோகனும் தமிழகத்தைத் தன்னுட்சிக்கடங் காத தனிநாடாகவே மதித்துக் கௌரவித்துவந்த செய்தியை அவன் சாஸன வாயிலாக அறியலாம். இம்மதிப்புக் கேற்றபடி, வட வேந்தர்களும் அஞ்சத்தக்க அரிய செயல்களைத் தமிழரசர் அவ்வக் காலங்களிற் காட்டி வந்தவர் என்பது பழைய நூல்களால் அறியக் கிடக்கின்றது. நெடுஞ்சேரலாதன் என்ற சேர வேந்தன், 'இமயவரம்பன்', 'விடர்ச்சிலை பொறித்தவன்' என்று முன்னூல் களிலே புகழப்படுகின்றான். இமயவரம்பன் என்பதற்கு, இமயகிரி யைத் தன் ஆணைசெல்லும் எல்லையாகக் கொண்டவன் என்பதும், 'விடர்ச்சிலை பொறித்தவன்' என்பதற்கு, இமயத்தில் தன் இலாஞ் சனையாகிய வில்லைப் பொறித்தவன் என்பதும் பொருள்களாம். பதிற்றுப்பத்தின் இரண்டாம்பத்தால் அச் சேரவேந்தனைப் பாடிய குமட்டூர்க்கண்ணனார் என்ற புலவர்,

> "ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
> தென்னங் குமரியொ டாயிடை
> மன்மீக் கூறுஉர் மறந்தபக் கடந்தே" (11)

என்று கூறுதல் காண்க. பரணர் என்ற புலவர் பெருமானும்,

"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தென்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்" (அகம். 396)

என்று புகழ்வர். இவற்றால், இமயமுதல் குமரிவரை தன் ஆற்றலைப் பரப்பியவன் இவ் வேந்தன் என்பது தெரியலாம். இவன் 'நயனில் வன்சொல் யவனரைப் பிணித்தவன்' என்றும் புகழப் படுவன்.

இவ்வாறே திருமாவளவன் என்ற சோழனொருவன் வடதிசை முழுதும் வெல்லவெண்ணிப் படையெடுத்துச் சென்று ஆங்குத் தன்னருந் திறலைக் காட்டி, இமயத்தில் தன் புலிப்பொறியை நாட்டி மீண்டனன் என்று முன்னூல்களும் பின்னூல்களும் ஒருங்கே புகழ்கின்றன. இவனைக் கரிகாலன் என்று கருதுவர்.

"செண்டு கொண்டுகரி காலனொரு காலி லிமயச்
சிகர மால்வரை திரித்தருளி மீள வதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற்
பாய்பு லிப்பொறி பொறித்தது மறித்த பொழுதே"

எனக் கலிங்கத்துப் பரணியில் இவன் செயல் புனைந்து கூறப்[illegible] காண்க.

இனி, பாண்டியமுன்னோருள் ஒருவனும் தன் குலசின்ன மாகிய மகரலாஞ்சனையை இமயகிரியிற் பொறித்தவன் என்று நூல் களும் சாஸனங்களும் புகழும். இவனை மலயத்துவசன் என்றும், உக்கிரகுமாரன் என்றும் புராணங்கள் கூறுகின்றன. 'பருப்பதத் துக் கயல் பொறித்த பாண்டியர் குலபதிபோல்' என்றார் பெரியாழ் வாரும். இவ்வாறாகத் தமிழரசர் மூவரும் இமயம்வரை சென்று தம் ஆற்றலைத் தோற்றுவித்த பெருமையுடையவர் என்பது முன் னோர் மொழிகளால் நன்கறியப்படுகின்றது.

தமிழ்வேந்தர்களைப்பற்றிக் கூறப்பட்ட இச்செய்திகளிலே, நவீன சரித்திரவறிஞர் பலரும் ஐயுறுவர். கிறிஸ்தவாப்தத்துக்கு முன்னும் பின்னும் பல நூற்றாண்டுகள்வரை இருந்த வடவேந்தர் கள் பேராற்றல் பெற்று விளங்கியவராதலாலும், தமிழரசரின் வட வெற்றியைக் குறிப்பிடத்தக்க பிரமாணமொன்றும் வடக்கே அகப் படாமையாலும், அவரது இமயப்படையெடுப்பைப்பற்றிய செய்தி முழுதும் வெறுங்கற்பனையேயன்றிப் பிறிதில்லை என்பது அன்னோர் முடிபு. அவர்கள் கூற்றைக்கொண்டு, சங்ககாலத்துச் சான்றோர் பலரும் ஒருமுகமாகக் கூறும் சரித்திர வுண்மையை நாம் புறக்கணித் தல் பெருங் குற்றமாகும். அசோகவர்த்தனன் காலத்தில் அவனுல்

மதிக்கப்பெற்ற சுதந்திரநாடுகளிலே ஒன்றுகத் தமிழகம் விளங்கிய தென்பதில், அச்சரித்திரவறிஞர் எவரும் சந்தேகங் கொண்டவர் அல்லர். பரதகண்டத்தின் பெரும்பகுதியையும் ஆண்ட அவ் வசோகனுக்கு, அதன் கடைக்கோடியிலுள்ள தமிழகத்தையுங் கைப் பற்றிக்கொண்டு, பொதுவற இக்கண்டமுழுமையும் ஆட்சிபுரியும் விருப்பம் இருப்பது இயல்பன்றே? தனக்குப் பணியாத கலிங்க தேசத்தை அவன் போரிற் படுத்தியபாடு சரித்திரப் பிரசித்த மானது. அவ்வாறே தனியே பிரிந்து நின்ற தமிழ் நாட்டினும் அவன் சிந்தை சென்றிருக்கக்கூடியதுதானே? அவ்வாறு அத னைக் கைப்படுத்த அச்சக்கரவர்த்தி ஒரு முயற்சியும் செய்யாது போனதென்னே? அன்றியும், தமிழ்நாட்டைப் பாரசீகம் கிரேக்கம் முதலிய அன்னிய தேசம் போலவே மதித்துத் தன் சமயதூதுவர் களைத் தமிழ் வேந்தரிடம் அவன் விடுத்திருப்பதும் குறிப்பிடத் தக்கது. இவற்றால் அச் சக்கரவர்த்திகாலத்துக்கும் முன்பே, தமிழரசரின் பேராற்றல் ஆரிய வேந்தரும் மதிக்கத்தக்க நிலையில் அமைந்திருந்ததென்பது நன்கு விளங்கும். அத்தகைய மதிப்பு வேந்தர் உள்ளத்தே ஊன்றியிருக்கவேண்டுமாயின், அதற்கு, [illegible]களும் அஞ்சும்படியான பெருஞ்செயல்கள் சிலவற்றைத் தமிழக வேந்தர் அவர்களறியக் காட்டி வந்ததே காரணமாதல் வேண்டும் என்றும், அச்செயல்களுள் ஒன்றுகவே அவர்களது இமயப்படையெடுப்பும் அமைந்திருத்தல் வேண்டும் என்றும் நாம் கருதல் தகும்.

பெருவீரனை சேரன் செங்குட்டுவன் ஆரியவரசரை வெற்றி கொள்ளவும், பத்தினிக்குக் கல்லெடுத்து வரவும் நடத்திய வடயாத் திரை வரலாறுகளைச் சிலப்பதிகார முதலியவற்றால் பலரும் அறிவர். அவன் யாத்திரைக்குக் காரணமாயிருந்த செய்தியொன்றை அச் சேரனுக்கு இளவலாகிய அடிகள் அடியில்வருமாறு கூறுகின்றார்:—

> "வடவாரிய மன்னராங்கோர் மடவரலை மாலைசூட்டி
> உடனுறைந்த இருக்கைதன்னில் ஒன்றுமொழி நகையினராய்த்
> தென்றமிழ்நா டாளும்வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து
> மின்றவழு மிமயநெற்றியில் விளங்குவிற்புலி கயல்பொறித்தநாள்
> எம்போலு முடிமன்னரீங் கில்லைப்போலும் என்றீவார்த்தை
> அங்குவாழு மாதவர்வந் தறிவுறுத்த" (சிலப். 29, உரை . . . டை)

எனக் காண்க.

வடநாட்டில் நடந்த இராசகன்னி யொருத்தியின் திருமணத் தில் விருந்தினராக ஆரிய மன்னர் பலர் ஒருங்கு கூடியிருந்த போது, "தமிழ்நாட்டரசர் போர்க்கோலம் பூண்டுவந்து இமயகிரியில்

தம் இலாஞ்சனைகளான வில் புலி கயல்களைப் பொறித்துச் சென்ற காலத்திலே, எங்களைப் போலும் வீரசூரர்களான வேந்தர் இருந்தனர் இல்லைப்போலும்'' என்று கூறி நகையாட, அவ்விகழ்ச்சியுரையை வடபக்கத்தினின்று வந்த மாதவர் சிலரால் அறிந்தனன் செங்குட்டுவன் என்பது மேற்கூறிய அடிகளினின்று தெரியலாம். இச்செய்தியைக் கொண்டு நோக்குமிடத்து, தமிழரசர் இமயத்தில் தம் சின்னங்களைப் பொறித்தவர் என்ற வரலாற்றில், நவீனர் சிலர்க்கு உள்ளதுபோல், செங்குட்டுவன் காலத்து வடவேந்தர்க்குச் சிறிதும் ஐயமிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், 'தம்போலும் வீரசூரர்கள் தமிழரை எதிர்த்துப் போராட அக்காலத்து இல்லைப்போலும்' என்பதே அவர்கள் தற்பெருமையாகக் கூறிக்கொண்டது. எனவே, பண்டைக்காலத்து ஆரிய வேந்தர் கருத்தாலும் தமிழ்மன்னரின் இமயப்படையெடுப்பு உண்மை வரலாறுகவே கொள்ளப்பட்டிருந்தமை தெளிவாகும். செங்குட்டுவன் சரிதத்தைப் பாடிய அவன்தம்பி இளங்கோவடிகள் கூறும் இச்செய்தியையும் கற்பனையாகப் பிறர் கருதுவதற்கில்லை. அச் சேரர்பெருமான் வடநாட்டிற் படையெடுத்துச் சென்றதற்குக் காரணம், மேற்கூறியபடி, வடவரசர் இகழ்ந்து கூறிய தமிழ்க்குலப்பெருமை தம்மவர்க்குண்டு என்பதை மெய்ப்பித்தற்காகவேயன்றே? அங்ஙனம் தமிழாற்றலை வடவர்க்கு வலியுறுத்திக் காட்டிய செங்குட்டுவனது அருஞ்செயலை, பிரமாணங்கள்சில தற்காலங் கிடையாமைபற்றிச் சிலர் எளியதாகக் கருதியிகழ்வராயின், அஃது அவ்வடவேந்தர் செயலினும் அதிசயிக்கத்தக்கது என்றே நாம் சொல்லத் தடையில்லை. ஆகவே, முன்னோர் கூற்றுக்களை எளியனவாகப் புறக்கணித்தற்குத் தமிழறிஞர் ஒருகாலும் ஒருப்படார் என்க. சேரநாட்டையடுத்து ஆட்சிபுரிந்த கங்கவமிசத்தரசர்கள் இமயச்சாரலில் உள்ள நேபாளத்தை அடிப்படுத்திப் பலதலைமுறை ஆண்டதுபோலவும்,[1] கலிங்கவேந்தான காரவேலன்[2] மகதம் அங்கமுதலிய வடநாடுகளை வென்று பெருமை பெற்றது போலவும், பிற்காலத்துத் தமிழ் வேந்தருள் முதலாம் இராசேந்திரன் கங்கைக் கரைவரையுமிருந்த வடநாடுகளையும் கடார முதலிய தீவாந்தரங்களையும் வென்று கங்கைகொண்டசோழன் என்ற பெரும்பெயர் பெற்றதுபோலவும்

---

1. Lewis Rice's *Mysore and Coorg from the Inscriptions*, p. 48.

2. இக்காரவேலன் வரலாறுகள், கரிகாலன்வரலாற்றுடன் சில அமிசங்களில் ஒற்றுமைப்பட்டிருத்தல் குறிக்கொண்டு ஆராயத்தக்கது.

ஒரு காலத்தில் மூவேந்தரது ஆற்றல் இமயம்வரை ஓங்கி யிருந்தது என்றே முன்னோர் கூற்றுக்களிலிருந்து நாம் கொள்ளத்தகும்.

மேற்கூறியவாறு சேரசோழபாண்டியர் மூவரும் இமயத்தில் இலச்சினை பொறித்த பெருமை தத்தமக்குரியதாகத் தனித்தனியே பாராட்டிக் கொண்டனராயினும், அம்மூவரும் ஒன்றுகூடி வடவ ருடன் போராடி அப்பெருமை படைத்தவர் என்றே நாம் கருதலாம்.

"தென்தமிழ்நா டாளும்வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து
மின்றவழும் இமயநெற்றியில் விளங்குவிற்புலி கயல்பொறித்தனர்"

என்ற இளங்கோவடிகள் வாக்கிலும், அம்மூவரும் ஒன்றுகூடிய வலியுடன் சென்று, பனிமலையில் தங்கள் சின்னங்களைப் பதித்த செய்தி குறிப்பிக்கப்படுதல் காணலாம். சேரமரபினரான அவ்வடி கள் தம் முன்னோர் செயலைமட்டுஞ் சிறப்பியாமல், மூவேந்தருமே தம் இலச்சினைகளைப் பொறித்தவர் என்று கூறுவராயின், அஃது அவர்கள் ஒருங்குகூடிச் செய்த செயல் என்பதை உணர்த்தக்கூடிய தன்றே? கூடிச்செய்த அருஞ்செயலை அவ்வவர் தம் குலப்பெருமை யாகப் பாராட்டிக்கொள்ளுதல் இயல்பேயாம். ஆகவே, தமிழரசரில் இமயஞ்சென்று பெருமை படைத்தவர் யாவர் என்பதுபற்றி நாம் விவாதிக்க வேண்டியதில்லை. அரசர்பலர் ஒன்றுசேர்ந்து பகைவர் மலையைக் கைப்பற்றுவராயின் அப்பலர் இலாஞ்சனைகளையும் சேர அம்மலையிற் பொறிப்பது பண்டை வழக்கேயாகும்.

"கொடுவரிக், கேண்மைக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே" (புறம். 58)

என, நட்பினராயிருந்த சோழபாண்டியரிருவர் சின்னங்களும், பகைவர் குன்றுகளில் ஒருங்கு பொறிக்கப்பட வேண்டும் என வாழ்த்திப் புலவரொருவர் பாடியிருத்தலும் இங்கறியத்தக்கது.

இங்ஙனம், மூவரசரும் கூடி நிகழ்த்திய இமயப்படையெடுப் பில், சோழனை திருமாவளவனே தலைமை வகித்தவனுதல் வேண்டும் என்று நாம் கருதல்தகும். அறிவு ஆற்றல் பெருமைகளில் அவன் தன்காலத்தில் இணையற்று விளங்கியவன். அவன் கடைச்சங்க காலத்துக்கு மூற்பட்ட சோழருள் ஒருவன் என்றே தோற்றுகின் றான். அவனது வடயாத்திரையைப்பற்றி இளங்கோவடிகள் கூறுவன வருமாறு :—

"செருவெங் கதலிற் றிருமா வளவன்
* * *
புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்

பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையெனக்
கொடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நூனெட்டுக்
கோணிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னெட்டு வான்வய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்
அவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றேரண வாயிலும்.'' (சிலப். 5, 90-104)

இவ்வடிகளில், இமயப்பக்கத்தும் அதற்கு அப்பாலுமுள்ள நாடுகளை வென்றுகொள்ள விரும்பித் திருமாவளவன் படையெடுத்துச் சென்ற காலத்தில், அவன் நோக்கம் கைகூடாதபடி இமயமலை தடைப்படுத்தியதென்றும், அப்போது அப்பெருமலையில் தன் புலிப்பொறியைப் பொறித்துத் தன் ஆணையை ஆங்கு நிறுவிவிட்டு அவன் திரும்புகாலையில், எதிர்த்துத் தன்னுடன் பொருத வச்சிர மகத வேந்தர்களை வென்று அவர்களிடம் விரும்பிய திறைகளைப் பெற்று மீண்டனன் என்றும் குறிக்கப்படுதல் தெரியலாம். இமயத்தினின்று திரும்பியதும் எதிர்த்துப் போராடிய வடவரசர், வச்சிரவேந்தனும் மகதமன்னனும் எனவே, அச்சோழன் சென்று வந்த இமயப்பகுதிக்கு அடுத்த நாடுகளாயிருந்தவை வச்சிர நாடும் மகத தேசமும் ஆகும் என்பது பெறப்படத் தடையில்லை. வச்சிர நாடு என்பது சோணை (*Son*) நதி சூழ்ந்த தேசமாகும். அதனையடுத்துள்ளதே மகதநாடு; இது கங்கையடுத்த பிரதேசமென்பது தெரிந்ததே. அவ்விருநாட் டரசரையும் வென்ற பின்பே, அவந்தி வேந்தனிடம் நட்பு முறையில் அவ்வளவன் சென்றவன் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுவர். இவற்றால், வச்சிரமகதநாடுகளையடுத்து அவற்றின் வடபக்கத்துள்ள இமயப்பகுதியே சோழன் தன் அடையாளத்தை நாட்டிய இடம் என்பது நன்கு விளங்கும். இமயத்துக் கப்பாலும் தன்னாணையை நிறுவ எண்ணியிருந்ததை அப்பனிமலை பழுதாக்கினமையால், அம்மலையின் தென்புறத்திற்றானே தன் இலாஞ்சனையைச் சோழன் பொறிக்கலாயினன் என்பது,

''இப்பா லிமயத் திருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டிழையதா எப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்
ஒருதனி யாழி யுருட்டுவோ னெனவே''

எனவரும் சிலப்பதிகார மங்கலவாழ்த்தால் அறியப்படும். இதனால், வச்சிரமகத நாட்டுக்கு அப்பாலுள்ள இமயப்பகுதியில் தீண்டுத்துச் செல்லும் வழியுள்ள பிரதேசமே அச்சோழன் நாடிச் சென்ற

இடம் என்பதும், அவ்விடம் அவன் சென்றபோது தீபெத்துக்குச் செல்ல ஏற்றதாகாமையால், திரும்பி வச்சிரமகத நாடுகளே அவன் அடையலாயினன் என்பதும் நாம் ஊகிக்கக்கூடியன.

இவ்வாறு, இமயப்படையெடுப்பு, சோழன் தலைமையின் கீழ்த் தமிழரசரால் ஒருகாலத்து நிகழ்ந்தது என்ற வரலாற்றை, யான் புதியதாகத் தெரிந்துகொண்ட அரிய செய்தியொன்றும் ஆதரித்து நிற்பதை இனிக் கூறுவேன். மேலே நான் கூறியவற்றையெல்லாம் ஒருசேரக் கொண்டு நோக்குமிடத்து, திருமாவளவன் சென்று வந்த இமயமலை, இப்போது ஸிக்கிம், புட்டான் என்ற ராஜ்யங்களுக்கு இடையிலுள்ள மலைப்பகுதியேயாதல் வேண்டும். என்னெனில், இப்பகுதியிற்றான் வங்காளத்துள்ள டார்ஜீலிங்கிலிருந்து தீபெத்துக்குச் செல்லும் கணவாய்கள் உள்ளன. இக்கணவாய்களிற் சில முற்காலத்தும் இக்காலத்தும் வியாபாரப் போக்கு வரத்துக்கு உரியனவாய் அமைந்துள்ளன. இவைகளும் பல மாதங்கள்வரை பனி மூடப்பட்டு அடைபட்டுக் கிடத்தலால், சில காலங்களே அப் போக்குவரத்துக்கு ஏற்றவாகின்றன. உலகத்துள்ள மலைகளிலே உன்னத சிகரமுடைய கிஞ்சின் ஜிங்கா என்ற இமயப்பகுதி இக்கணவாயை அடுத்துள்ளதே. 'கௌரீசங்கர்' என்று வழங்கப் பெறுவதும், கிஞ்சின்ஜிங்காவினும் அத்தியுன்னதசிகரம் வாய்ந்ததுமான மௌண்ட்-எவரெஸ்ட் (*Mount Everest*) இங்கு நின்று வடமேற்காக 70, 80 மைலில் உள்ளதே. வங்காள மாகாணத்தில் அடங்கியுள்ள வச்சிரமகத நாடுகளுக்கு வெகு தூரமில்லாததாய், இமயத்தைக் கடந்து செல்வதற்கு ஏற்ற வழியுடைய பிரதேசங்களுள் ஸிக்கிம்புட்டான்களுக்கு இடையில் உள்ள கணவாய்களே சிறந்தவை. ஸிக்கிம்ராஜ்யத்துக்குக் கிழக்கே, அதற்கும் தீபெத்துக்குமுள்ள எல்லையை வரையறுத்துநிற்கும் மலைத்தொடரானது, செங்குத்தாய் ஆகாசத்தை யளாவிக்கொண்டு, பெருங் கோட்டை மதில்போல நீண்டு செல்கின்றது. இம்மலைத்தொடரை அடுத்துச் செல்லுங் கணவாய், சமுத்திர மட்டத்துக்குமேல் 14,500 அடி உயரமுடையதாய், தீபெத் பிரதேசமாகிய சும்பிப் பள்ளத்தாக்கிற்குக் கொண்டுபோய் விடக்கூடியது. இம்மலைக்கும் இதனையடுத்த கணவாய்க்கும் வழங்கும் பெயர்களைக் கவனியுங்கள். சோழமலைத் தொடர் (*Chola range*), சோழ கணவாய் (*Chola pass*) என்பன அவற்றிற்கு இன்றும் வழங்கிவரும் நாமங்களாகும்.[1] மேற்கூறிய

1. Imperial Gazetteer of India—*Sikkim*, Vol. X p. 327, Vol. XXII p. 365; Hand Gazetteer of India, vide *Chola Pass*; Enyclopædia Britanica—*Sikkim*, Vol. V p. 667, Vol. XX p. 640.

வற்றைக்கொண்டு நோக்குமிடத்து, இமயப்பகுதி யொன்றற்கு வழங்கும் இப்பெயர் சோழன்தொடர்புபற்றி வந்ததாகக் கூடாதா என்பதே என் ஆராய்ச்சி. இம்மலையடியாகவே, இதனையடுத்துள்ள கணவாயும் அப்பெயர் பெற்றதாகவேண்டும். 'சோல' (*Chola*) என்பதற்கு ஹிக்கிம் தீபெத் பாஷைகளில் வேறு பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. **லா** என்பதற்குத் தீபெத் பாஷையில் கணவாய் என்ற பொருள் உண்டு. நது-லா (*Natu-la*) ஜெலப்-லா (*Jelap-la*) எனக் காண்க. ஆனால், சோல (*Chola*) என்பது அவ்வாறு இருசொல் லுடையதன்றி ஒரு சொல்லாகவே **மலைக்கு** வழங்கி யிருப்பதும், அச்சொற்கு வேறு நேர்பொருள் காணுமையும் நோக்கத்தக்கன. அதனால், திருமாவளவன் அப்பிரதேசத்தைக் கைப்பற்றி அங்குள்ள மலைச்சிகரத்தில் தன் புலிப்பொறியை நாட்டி அங்கே தன்ஆணையை நிறுவிய காலமுதலே, அம்மலை அவ்வாறு பெயர்பெற்றது போலும் என்று கருத இடந்தருகின்றது. இமயத்துக்கு அப்பாலும் அவ் வளவன் செல்லக் கருதியிருந்ததை அம்மலை தடுத்துவிட்டதாக இளங்கோவடிகள் கூறியிருப்பதற்கு, மேற்குறித்தபடி, அச்சோழன் சென்ற காலத்தே பனியால் முழுதும் மூடப்பட்டு அக்கணவாய் அடைபட்டிருந்தது என்பதே கருத்தாகவேண்டும். யான் முதன் முதலாகத் தெரிந்து வெளியிட்டுள்ள இச்செய்தியை அறிஞர்கள் மேலும் ஆராய்ந்துகொள்வார்கள் என்றே நம்புகின்றேன்.

இலக்கியம்



மஹாமஹோபாத்தியாய
உ. வே. சாமிநாத ஐயரவர்கள்

இராமச்சந்திர ஐயர்

தமிழெனும் அளப்பருங்கடல் கடைந்து பன்னூல்களாம் அமுதினை அருளினர் அருங்கவிப்புலவோர். அவ்வமுதினை யருந்தித் தாம் இன்புற்றவண்ணம் உலகமும் இன்புறுமாறு வெளியிட்டருளிப் பேருதவிபுரிந்த பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி சாமிநாத ஐயர் அவர்களை அறியாதார் இத்தமிழுலகில் இல்லை. ஐயரவர்கள் இளம்பிராயத்திலேயே அதிக ஊக்கத்துடன் பல பண்டிதர்களிடத்துத் தமிழ் பயின்றார்கள். பின்னர் மஹாவித்வானாகவும் விஸ்தாரகவியாகவும் விளங்கிய மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களிடத்தில் படித்தார்கள். அவர் காலத்திற்குப்பின் திருவாவடுதுறை மடத்தில் பலருக்குக் கல்வி பயிற்றிவந்தார்கள். பிறகு, கும்பகோணம் கவர்ன்மெண்டு கலாசாலையிலும் சென்னை இராஜதானிக் கலாசாலையிலும் தலைமைத் தமிழ்ப்பண்டிதராக இருந்தார்கள். பின்பு சிதம்பரம் மீனாக்ஷி தமிழ்க்காலேஜில் பிரின்ஸிபாலாக இருந்தார்கள். இப்பொழுது வயசு முதிர்ச்சியினால் அவ்வேலைகளினின்று நீங்கித் தம் காலமுழுமையும் நூலாராய்ச்சியிற் செலுத்திவருகிறார்கள்.

ஐயரவர்கள் சுமார் 50 வருஷகாலமாகத் தம்முடைய ஆசிரிய வேலைகளோடுகூட அருமை வாய்ந்த பல சங்க நூல்களையும் பழைய காப்பியங்களையும் பிரபந்தங்களையும் நன்கு ஆராய்ந்து பிழையறப் பதிப்பித்துத் தமிழருக்குச் செய்துவரும் உபகாரம் மறக்கற்பாலதன்று. அவர்களுடைய கல்விப்பெருமையையும் ஆராய்ச்சித் திறத்தையும் பாராட்டாதார் தமிழ்நாட்டில் ஒருவரும் இல்லை. கவர்ன்மெண்டாரும் இதுகாறும் தமிழ் வித்வான்களால் பெறப்படாத மஹாமஹோபாத்தியாயரென்ற பட்டத்தை அளித்திருக்கின்றனர். ஐயரவர்கள் இப்பெருஞ் சிறப்பும் புகழும் அடைவதற்கு



மஹாமஹோபாத்யாய—தாக்ஷிணாத்யகலாநிதி

பிரம்மஶ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்கள்.

ஆதாரமான அவர்களுடைய நற்குணங்கள் இன்னவையென்று தெரிந்து அவைகளை யாவரும் பின்பற்றுதல் தக்கதேயாம். சுமார் 25 வருஷகாலமாக ஐயரவர்களிடத்தில் யான் பழகியதனால் எனக்குத் தெரிந்த அவர்களுடைய மேன்மை குணங்களைச் சிறிது எடுத்துரைக்கலாமென்று நினைக்கிறேன்.

ஐயரவர்களிடத்திற் பாடங் கேட்கும் பாக்கியம் பெற்றிலனாயினும் அவர்கள் கற்போர் மனத்தைக் கவரும்படி சொல்லும் சக்தி வாய்ந்தவர்களென்பதை அவர்களுடைய மாணாக்கர்கள் பலராலும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் இலக்கணபாடஞ்சொல்லும் பொழுதுகூட மாணாக்கர்கள் அதிகவிருப்பத்தோடு கவனித்துக் கேட்பார்களென்று பலர் கூறுவர். இவ்வாறுனால் அவர்கள் இராமாயணம் முதலிய நூல்களைப் பாடஞ்சொல்லுகையில் எவ்வாறிருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். ஐயரவர்கள், பாடல்களைத் தக்க இசையுடன் படிக்கும்பொழுதே அவற்றின் சுவை பிள்ளைகளின் மனத்தில் நன்றாய்ப் பதியுமென்றால் அவர்கள் பொருள் விரித்துக் கூறின் எவ்வாறிருக்குமென்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஆழ்ந்து ஆராயும் தன்மையினால் பாடஞ்சொல்லும் நூல்களில் ஐயமறப் பொருளுணர்த்திக் கற்போர் மனத்திற் கலக்கமின்றிச்செய்வார்களென்றும், தமிழின் சுவையைக் கேட்போர்கள் என்றும் மறவாதிருக்கும்படி செய்வார்களென்றும் பலர் கூறியுள்ளார்.

தவிர, நான் நேரில் அவர்களிடத்திற் பழகியதனால் அறிந்ததென்னவெனில்: நூல்களை ஆராயுங்காலத்தில் ஆசிரியரின் கருத்து இன்னதென்று நன்றாய்த் தெரிந்து கொள்ளவேண்டுமென்றே பாடுபடுகிறார்களென்பதும் இக்காலத்தில் உள்ள வேறு சில வித்துவான்களைப்போல் தமக்குத் தோற்றியபொருள்களை நூலின்கண் ஏற்றியுரைப்பதில்லை யென்பதும் ஐயரவர்களுடைய சிறப்புக்குப் பெரிய காரணமாகுமென்பதே. அன்றியும், காலத்தைச் சிறிதுகூட வீண் போக்காமல் எப்பொழுதும் நூலாராய்ச்சியிலேயே உற்சாகத்தோடு வேலை செய்து அநேக நூதன விஷயங்களைத் தேர்ந்தெடுத்து உலகிற்குப் பயன்படுமாறு வெளியிடுகிறார்கள். பேசுங்காலத்தில் அவர்கள் சொல்லும் வார்த்தைகளாலும் விஷயங்களாலும் அவர்களது கல்வித்திறம் நன்கு விளங்கும். ஓப்புயர்வற்ற இக்கல்விச் சிறப்பு வாய்ந்திருந்தும் பிறரிடத்து அதைக் காட்டாமல் அதிவினயத்தோடு பேசுவார்கள். ஆயினும், யாரேனும் தமிழ்நூல் விஷயமாகப் பிழையான அபிப்பிராயங்களைக் கூறின் அவற்றைப் பொறுக்கமாட்டாமல் வினயத்துடன் மறுப்பார்கள். அவர்களுக்குப் பெருங்காப்பியங்களிலுள்ள பழக்கத்தால் அவர்களுடைய சம்பாஷணைக

லெல்லாம் மிகவும் ஆழ்ந்த பொருளைக்குறித்தே யிருக்கும். அவர்களிடத்திற் சிறிது நேரம் பேசினபோதிலும் அறியாதனவெல்லாம் அறிந்தோமென்னும் இன்பம் யாவருக்கும் உண்டாகும். வயசு முதிர்ச்சியினல் தேகம் தளர்ச்சியடைந்தபோதிலும் அறிவு கொஞ்சமேனும் தளராது அவர்கள் தமிழிற்கு உழைத்து வருகிறார்களென்பது எல்லாரும் வியக்கத்தக்கதே. அவர்கள் இப்பத்திரிகை வெளியிடுவதை அவசியமெனக் கருதி இதற்குக் கலைகளைக் குறித்து எழுதியிருத்தல் தமிழின் அபிவிருத்தியில் அவர்களுக்குள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது. அவர்கள் தமிழிற்குச் செய்திருக்கும் உபகாரத்திற்குத் தமிழபிமானிகள் செய்யவேண்டிய கைம்மாறென்னவெனின் அவர்களுடைய நற்குணங்களையும் விடாமுயற்சியினையும் பின்பற்றித் தமிழை விருத்தி செய்வதேயாம்.

இதுகாறும் ஐயரவர்கள் வெளியிட்ட நூல்களேயன்றி இன்னும் வெளியிடவேண்டியவை அநேகம் இருக்கின்றன. அவர்களுக்கு நீடித்த ஆயுளையும் தேக ஆரோக்கியத்தையும் கடவுள் அளிக்கவேண்டுமென்று பிரார்த்திப்போமாக.

சைவசமயம்

எஸ். அனவரத விநாயகம் பிள்ளை

சைவசமயத்திற்குச் சிறப்பியல்பாகிய சிவவழிபாடு எக் காலத்து ஏற்பட்டதென்பது சொல்லவியலாது. வடமொழி ஆதி வேதமாகிய இருக்கில் சிவ என்னும் சொல் ஈசனென்னும் பொருளிற்காணப்படவில்லை யாதலால் அவ் வேதம் ஏற்பட்ட காலத்தில் சிவ வழிபாடு இல்லை, அதனால் அவ்வழிபாடு அநாரியர்மத மென்பர் ஒருசாரார். அநாரியர் மிலேச்சரென்ற பொருளைக்கொண்டு அவர் அங்ஙனஞ் சொல்வாராயின் அது நேராகாது. ஆரியரின் வேறுகிய மக்கள் சிவவழிபாடு செய்துவந்தனரென்பராயின் அதிற் றவறொன்றுமில்லை. ஆயினும் இக்கொள்கையை மறுக்கும் நோக்கத்தோடு இருக்கு வேதத்தை ஆராய்ந்தோரும் அதனுட் சிவசப்தங் கண்டோரு முளர். சிறிதுகாண்முன் மொகெஞ்சோதாரோ முதலிய இடங்களில் நிலத்தின்கீழ் அகழ்ந்து கண்ட அரும்பொருள்களுட் சிவலிங்கம் போன்ற பெருந்தூண்கள் கிடைத்தனவென்றும், அவை இன்னும் ஆராயற் பாலனதென்றும் அறிந்தோர் எழுதியுள்ளார்.

ஆரியவாராய்ச்சியாளருள்ளும் தமிழறிந்தாருள்ளும் பலர் சிவன் தமிழரின் தெய்வமென்னுங் கொள்கையுடையார். 'சிவ' என்னுஞ் சொல் வடமொழியில் மங்கலப் பொருளை யுடையது. சிவப்பென்னும் பண்பினடியான தமிழ்ச்சொல்லே சிவனென்னுந் தெய்வத்துக்கும் அமைந்திருக்கவேண்டும், சிவன் செந்நிறத்தினன் மால் கருநிறத்தினன் என்றின்ன நியாயங்கள் பகர்வர். ஆயினும் சிவ வழிபாடு தமிழர்க்கே ஒருகாலத்தில் உரியதாயிருந்ததென்றற்குப் போதிய ஆதாரம் தமிழ்நூலகத்துக் காணுமாறில்லை. வடமொழி வேதத்து ருத்திரன் தமிழர் தெய்வத்தோடு சம்பந்தமுற்றப் பின் சிவனையினன் என்றலும் பொருந்தாதாகும்.

இனி, சிவன் ஆரியர்தெய்வ மாகுக, தமிழர்தெய்வ மாகுக; இரண்டாயிரமாண்டுகளாகச் சிவவழிபாடு தமிழகத்து நடைபெற்று வந்துளது. ஆயினும் நெடுங்காலம் சிவவழிபாடு அந்தணர்குழுவுள் மறைபொருளாக வைத்துப் போற்றப்பட்டிருக்கவேண்டும். ஆங்காங்குச் சிவனை வழிபடுஞ் சிறுகோயில்கள் அமைக்கப்பட்டு

அவற்றுள் அந்தணர் பூசை புரிய அவரிடத்துக் கௌரவமுடைய நல்லோர் அதைக்காண இவ்வாறு பன்னூற்றாண்டுகள் நிகழ்ந்திருக்க வேண்டும். பின் தேவாரகாலங்களில் சிவவழிபாடு காண்போர் பெருகினர். திருஞான சம்பந்தரைத் தொடர்ந்து தலயாத்திரை சென்றோர் ஆயிரக்கணக்கினரென்று புராணம் உரைக்கின்றது. திருநாவுக்கரையர் சிவவழிபாடு மேற்கொண்டதாற் பட்ட துன்பங்களும் அவர் அவற்றை வென்றுயர்ந்ததும் பலரை அவ்வழிபாட்டிற் செலுத்தியிருக்கவேண்டும். சுந்தரமூர்த்திகள் தங்காலத்தும் தமக்கு முற்பட்ட காலத்தும் இருந்த சிவனடியார் பெயர்களனைத்தையும் திருத்தொண்டத்தொகையில் எடுத்துரைத்தனர். மாணிக்கவாசகர், சிவவாக்கியர், பட்டினத்தடிகள் முதலிய பெரியாரும் வரகுண பாண்டியன் முதலிய அரசரும் சிவவழிபாட்டை நாடெங்கும் பரவச் செய்தனர். திருத்தொண்டத்தொகையிற் பெயரால் மாத்திரம் குறிக்கப்பட்ட அடியார்களின் சரித்திரத்தை நம்பியாண்டார் நம்பிகள் தமது திருத்தொண்டர் திருவந்தாதியிற் சிறிது விளக்கினர். சேக்கிழார் அதனை இன்னும் விரித்துப் பெரிய புராணஞ் செய்தனர். மூன்று அடக்கமாயிருந்த கோயில்கள் அருகில் வசித்த ஊர்மக்களெல்லாம் சென்று வழிபடும் இடமாயின. வேதமுழக்கமும் தேவாரமுழக்கமும் பலர்க்கும் அன்பை யூட்டின. வெளியூர்களிலிருந்தும் தலயாத்திரையாக மக்கள் வரத் தலைப்பட்டனர். அரசரும் செல்வரும் இக் கோயில்களை மிகப்பெரியனவாக்கி இக்காலத்துக் காணப்படுவன போலச் செய்தனர். இங்ஙனம் சிவவழிபாடு பரவியது.

தேவாரம்போலவே வேதங்களும் திருவாக்கியங்களையே பெரும் பான்மையுங் கொண்டன. சிவவழிபாட்டை அந்தணர் தமக்குத் தமக்கு ஆற்றிவந்த வரையில் அதற்கு ஒரு நெறியும், வேண்டாதிருந்தது. பிறர்க்காக ஆற்றத் தலைப்பட்ட காலத்து நெறி ஏற்பட்டு, அப்பிறர் பலராகவே, நெறியும் விரிந்தது. அவ்வழிபாட்டுமுறையையே ஆகமமென்றும் தந்திரமென்றும் உரைப்பர். மூர்த்திகளைப் பிரதிஷ்டிக்கும் முறையும், ஆலயங்களும் அவற்றுட்பிரிவுகளும் அமைக்கும் முறையும், உற்சவமுறையும் ஆகமங்களுள் விரிவாகக் கூறப்பட்டன. பிற்காலத்து, அவற்றைக் கற்றுணரும் ஆற்றலில்லார்க்குபகாரமாகப் பத்ததிகள் எழுதப்பட்டன. வேதங்களின் அந்தங்களாகிய உபநிடதங்களில் ஞானம் உரைக்கப்பட்டதுபோல ஆகமங்களிலும் ஒரு பகுதியில் ஞானம் உரைக்கப்பட்டது. வேதாந்தங்களைவிட ஆகமாந்தங்கள் உயர்ந்தனவென்பதும் இவை மயக்கந்தருதலின்றித் தெளிவாக உண்மையை உரைப்பனவென்பதும் சைவர் கொள்கை.

இவ்வாகமாந்தம்வல்லார் ஞானநிட்டை யுடையராய்ச் சீவன் முத்தராய் உலகின் மாந்தரோடு உறவில்லாராய்த் தனித்திருப்பர். தக்கார் வரின் அவர்க்கு உண்மையை உபதேசித்து அவரையுந் தம் போலாகச் செய்வர். இவ்வாறிருந்தார்க்குத் திருவியலூர் உய்யவந்த தேவரையும் திருக்கடவூர் உய்யவந்த தேவரையும் எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். பின், மெய்கண்டார் தலைப்பட்டுச் சிவஞான போத மெழுதி அதற்குப் பொழிப்பு முதலியவும் இயற்றினர். இச்சிவஞான போதம் வடநூன்மொழிபெயர்ப்பு என்பாரும் தமிழ் நூலே யென்பாருமாக இருதிறத்தினர் இக்காலத் தேற்பட்டனர். தமிழ்ச் சிவஞான போதத்தையே முதனூலாகக் கொண்டு சிவஞான சித்தியார் முதலிய வழிநூல்களும் சிவப்பிரகாசமுதலிய சார்பு நூல்களும் அருணந்தியார் முதலியோராலும் உமாபதியார் முதலியோராலும் இயற்றப்பட்டன. மெய்கண்டாரையும் அவர் தலைமாணாக்கர் அருணந்தியாரையும் அவர் மாணாக்கர் மறைஞானசம்பந்தரையும் அவர் மாணாக்கர் உமாபதியாரையும் திருக்கைலாயசந்தானந் திகழவந்த சந்தானகுரவ ரென்றுரைப்பர். உமாபதியார் காலத்துக்குப் பின் திருவாவடுதுறை தருமபுரம் முதலிய மடங்கள் ஏற்பட்டுச் சைவநெறியினைப் போற்றி வந்தன. திருவாவடுதுறையில் விளங்கிய பெரியாருட் சிலர் மேற்குறித்த சாத்திரங்களை ஒட்டி அனுபவ நூல்களாகச் சில நூல்கள் இயற்றினர். முன்னவை மெய்கண்ட சாத்திரங்களெனவும் இவை பண்டார சாத்திரங்களெனவும் வழங்குகின்றன. இவ்விரண்டுமன்றிச் சிற்றம்பலநாடிகள் முதலியோராலும் தருமபுரத்து முனிவர்களாலும் இயற்றப்பட்ட அனுபவ நூல்கள் பல உள. அவை யனைத்தும் சைவசித்தாந்தசாத்திரங்களெனப்படும். சைவமென்பது ஆகமமென்றும், சித்தாந்தம் அதன் முடிவென்றும், ஆகவே சைவசித்தாந்தம் ஆகமாந்தத்தி னுரைக்கும் பதிபசுபாசவிலக்கணத்தைத் தெளிவு படுத்துவ தென்றுஞ்சொல்வர்.

சாத்திரங்கள் தோன்றிய காலத்தை யடுத்து அவற்றிற்கு உரைகள் ஏற்பட்டன. வடமொழி தமிழ் மொழிகளில் வல்லாராகிய சிவஞான முனிவர் சிவஞான போதத்திற்குச் சிற்றுரை யொன்றும் பேருரை யொன்றும் கண்டனர். அப்பேருரையைத் திராவிட மாபாடிய மென்பர். அதில் உரைகாரர் எடுத்து விளக்கிய இலக்கணநூட்பங்களும் சாத்திர நுட்பங்களும் பல உள. சிவஞான சித்தியாருக்கு அவரே ஒரு பொழிப்புரையுஞ் செய்து வைத்தனர். முன்னரே மறை ஞான தேசிகர், சிவாக்கிரயோகிகள், ஞானப்பிரகாச முனிவர் முதலிய ஆகமம்வல்லார் செய்த உரைகள் அதற்குண்டு. மற்றைச் சாத்திரங்களுக்கும் பல பெரியார் உரை செய்துள்ளார். உரைகள்

ஏற்பட்டபின் அநுபூதிநூல்களாய் ஆசான் தன்னையடுத்த பக்குவர்க்கு உபதேசிப்பனவாயிருந்த சாத்திரங்கள் பலராலும் ஓதப்படுதற்கும் வாதங்கள் நிகழ்த்தற்கும் இடந் தந்தன. சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசித்தாந்திகட்கும் மாயாவாதிகட்கும் இடையில் நிகழ்ந்த வாதங்கட்கு அளவில்லை.

உரைகள் தோன்றிய காலத்திலேயே பல பெரியார் சைவசித்தாந்த உண்மைகள் இலக்கணவிலக்கியவறிவில்லாச்சாமானிய மக்கட்கு விளங்குமாறு கட்டளைப் பிரபந்தங்கள் பல எழுதி வைத்தனர். முன்னர் மாணாக்கர்க்காக எழுதப்பட்டுப் பின் பலர்க்கும் பயன்படும் அவற்றுட் சில அங்கையினெல்லியெனச் சாத்திரவுண்மைகளை விளக்குவன.

சிவனை வழிபடுஞ் சமயம் சைவசித்தாந்த மாத்திரமே அன்று. மாயாவாதமெனக் கூறப்படும் கேவலாத்வைதத்தைத் தங்கொள்கையாகக்கொண்ட வைதிகர் பலர் சிவனை வழிபடுவர். அன்னர் பிரமம் சிவமென்பர். அறவகைப்பட்ட மதங்களையும் நிலை நிறுத்திய சங்கராசாரியர் வழிவந்தோரது வேடம் சைவவேடமே யன்றோ? சிவபரத்துவத்தைப் பல நூல்களாலும் நாட்டிய அப்பைய தீக்கிதர் அந்தரங்கக்கொள்கை கேவலாத்வைதமென்று பலருஞ் சொல்வர். பிரமசூத்திரத்திற்குச் சைவபாடிய மியற்றிய சீகண்டர் சிவாத்வைதி யென்கின்றனர். இலிங்கத்தை யுடலிற் றரித்த வீரமாகேசுவரர்களின் கொள்கை சிவாத்வைதமே யன்றோ? சாந்தலிங்கர், சிவப்பிரகாசர், குமாரதேவர், திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் முதலியோரெல்லாம் வேடத்தாற் சைவரும் கொள்கையால் அத்வைதிகளுமாவர். காஷ்மீரத்தில் வழங்கும் சைவமும் அத்வைதத்தின்பாற் படுவதே. ஒழிவிலோடுக்கமென்னும் உத்தம ஞானநூலியற்றிய கண்ணுடைய வள்ளலாரை ஐக்கியவாத சைவரென்பர். கொள்கையிற் பேதமுடைய இவரனைவரும் சிவனை வழிபடுதலாற் சைவரென்றே சொல்லத்தக்கார்.

ஆயினும் இவரனைவர்க்கும் சைவசித்தாந்திகளுக்கும் ஒருபேதம் உண்டு. இவரனைவரும் சைவாசாரம் மேற்கொண்டவரேயாயினும் முத்தி நிலையில் சிவத்திற்கும் ஆன்மாவாகிய தமக்கும் பேதமின்றென்பாரும், எக்காலத்துமே தாம் சிவப்பொருளாயிருக்கின்றோமென்பாரும், ஆன்மாக்கள் சிவத்தினது பரிணாமங்களே யென்பாருமாகப் பலதிறப்படுவர். சைவசித்தாந்திகள் தாம் எப்பொழுதும் ஆன்மாக்களே, சிவத்தினதருளால் முத்தியடையுங் காலத்தும் தாம் சிவமாதலில்லை, சிவத்தினதின்பத்தை மாத்திரம் நுகர்ந்திருப்பேம்

என்பர். வைணவரைப்போலத் தாம் விசிட்டாத்வைதிகள் என் றேனும் மாத்துவரைப்போலத் தாம் துவைதிகள் என்றேனும் சொல் லிக் கொள்ளாது தாம் சுத்தாத்வைதிகள் என்பர்.

இவ்வாறு பேதம்பாராட்டுவது சைவசித்தாந்த சாத்திரங் கற்ற சிலர்க்குள் நிகழ்வதேயன்றிச் சிவவழிபாடாற்றும் பொது மக்களுள் நிகழ்வதில்லை. சிவன் பரதெய்வம், அவனே வழிபட்டு நாமுய்ய வேண்டும் என்றொரு சாதாரணக்கொள்கையே சாமானிய மக்களுட் பெரும்பாலுங் காணப்படுகின்றது. இதுவே சைவசமயத்தின் அடிப்படையான கொள்கை யென்பது நாம் பகரவேண்டா. இக் கொள்கையே முத்தியை யெளிதினடையச்செய்யும். பத்திநெறியிற் செல்வோர்க்குச் சிறந்த சாதனமாகும். இக்கொள்கையே தேவார திருவாசகங்களிற் பாசுரங்கள் தோறும் வற்புறுத்தப்படுவது. எல்லா மதங்கட்கும் பொதுவாகிய இக்கொள்கையின் நயத்தைக் கண்டுணர்ந்து சிவவழிபாடாற்றுவோர் சாத்திர நூட்பங்களுள் துழையாராயினும் பெரும்பயனடைவரென்பது ஒருதலை.

தமிழ்வசனம்

ஸ்ரீ

என் அறையில், மேஜையினருகில், பேனாவும் கையுமாய் உட்கார்ந்திருந்தேன். என் சிநேகிதி பாக்கியம் உள்ளே வந்தாள். (அவள் வரவை என் மனத்துள் நான் மழைமணம் வீசும் காற்றுக்கு ஒப்பிடுவதுண்டு).

"என்ன எழுதுகிறாய்?" என்று அவள் கேட்டாள்.

"ஒன்றுமில்லை. ஒரு வியாசம் எழுதப்பார்க்கிறேன். சரியாக வரவில்லை."

"படித்துக்காட்டு, பார்க்கலாம்."

"பிள்ளையார்சுழிதான் ஆயிருக்கிறது. *'பாலுந் தெளி தேனும் * * * * நான் தருவேன். நீ எனக்குச் சங்கத்தமிழ் மூன்றுந் தா' என்று எழுதியிருக்கிறேன்."

"எல்லாருக்கும் தெரிந்த பாடல்களை எடுத்தெழுதி இடத்தை நிரப்புவது கெட்ட வழக்கம். தொடக்கத்திலேயே, அப்படி ஆனால் எப்படி?"

"நீ தமிழில் எழுதுவதில்லை. குற்றம் சொல்லுவதில் கெட்டிக்காரி. தவிரவும், நான் எழுதப்போவது உனக்கு விளங்கவில்லை. 'தமிழ் மூன்றும் தா' என்று சொல்லி, பிறகு 'முத்தமிழ் என்றால், இயல், இசை, நாடகம் என்பவற்றைக்குறிக்கும்; அன்றி, இங்கிலீஷில் போல, வசனம் நமக்குள் ஒரு தனிப் பெரும்பிரிவாக ஏற்படவில்லை; வசனநூல்கள் தற்காலத்திலே தான் பெருகி வழங்குகின்றன; வசனத்துக்கேற்ற தமிழ்நடையின் இலக்கணங்கள் இன்னவை' என்று இப்படியெல்லாம் எழுதப்போகிறேன்."

"இதை யாராவது படித்தவர்கள் எழுதவேண்டும். நீ எழுதினால் நன்றாயிராது. நீ ஒரு கதை எழுது."

"பாதகமில்லை. எனக்குக் கதை எழுதவரவில்லை".

"இதுவரைமா? இதைப்பற்றி ஏதாவது புஸ்தகம் படித்திருக்கிறாயா?"

"அப்படி ஒரு புஸ்தகமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

"ஒன்றுமே தெரியாத விஷயத்தைப்பற்றி நீ எப்படி எழுதப் போகிறாய்? ஆனால் ஒன்று. தெரியாத விஷயத்தைப்பற்றி எழுதுவதுதான் எப்பொழுதும் எளிது. சுருக்கமாய், சந்தேகமில்லாமல், ஏதாவது சொல்லிவிடலாம்."

"உண்மைதான். உன் வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும். தமிழ்வசன்வரலாற்றை நான் சொல்லுகிறேன் கேள். ஆதிகாலத்தில் தமிழ்ப்பாஷை ஏற்பட்டதுமுதல் தமிழர்கள், தமிழ் வசனத்தில் வார்த்தையாடினார்கள். ஆனால், அவர்களுடைய முதல்நூல்கள் செய்யுள்களாகவே யிருந்தன. இசையுடன் சேர்ந்தது, சேராதது—பண்ணும் பனுவலுந் தாம் அவர்களுடைய முதற் கற்பனைகள்."

"எல்லாப் பாஷையின் சரித்திரமுதலிலும் இப்படித்தான் உண்டு."

"ஆமாம்; இதனால், கற்பனைசக்தியும் கவிபாடும் திறமையும் ஒன்றேயென்று ஜனங்கள் நினைத்தார்கள். கவிகளுக்கு மந்திர சக்தி உண்டென்று எண்ணினார்கள். இந்த எண்ணம் தமிழர் மனத்தில் வேரூன்றி மாறுபாடின்றி நீடித்து நின்றது. 'துங்குக்கண்முற்றி அடிக்கண் சிவந்து துனி கறுத்துப் பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே' என்று கவிபாடி, ஜாலவித்தை செய்ததாகச் சொல்லும் கதைகள் நமக்குள் எத்தனையோ உண்டு. பூர்விக ஜனங்கள் வசனத்தை இலக்கியங்கள் ஆக்குவதற்கேற்ற கருவியாக நினைக்கவேயில்லை. பாடுவதோ எளிது. கொஞ்சம் யாப்பிலக்கணம் கற்றுக்கொண்டு, சீர் தளை தப்பாமல், வார்த்தைகளை இசைத்துவிட்டால், கருமானும் குசவனும்கூட ஒட்டக்கூத்தரை எதிர்த்துப் பாடித் தப்பிவிடலாம். ஆகவே, முன்காலத்து வசனத்தை உரைகளில்தான் பெரும்பாலும் காணலாம். சிலர் இப்பொழுதுகூட வசனத்தை உரைநடை என்று சொல்லுகிறார்கள்."

"உரைகளைத் தவிர, வேறு வசனம் முன்காலத்தில் இல்லையா?"

"சாஸனங்கள் உண்டு. மணிப்பிரவாள நூல்கள் சில உண்டாம். எனக்கு விவரமாய்த் தெரியாது. ஆனால் முன்காலத் தமிழ்ப் பேச்சின் போக்கை, சாதாரண ஜனங்களறியும்படி ஆழ்வார்கள் பாடிய பாடல்களிற் காணலாம். இவைதாம் உரையாசிரியரின் நடையைவிடத் தமிழ்ப்பேச்சின் சுயப்போக்கை ஒட்டியுள்ளவை."

"இதை நிச்சயமாகச் சொல்லலாமா? வசனநடையின் இலக்கணத்தை வாசகத்தில் தேடுவதை விட்டுப் பாட்டில் கண்டுபிடிப்பது எப்படி?"

"நமக்குள் தற்கால வசன நூல்கள் இங்கிலீஷை ஒட்டி ஏற்பட்டிருக்கின்றன; அப்படியல்லாமல் சாதாரண ஜனங்களின் பேச்சையும், அவர்களுக்குள் வழங்கும் பாட்டுக்களையும் ஒட்டி ஏற்பட்ட ஒரு வசனம் உண்டு; அதைப் படித்தவர்கள் பாராட்டுவதில்லை. முன்காலத்தில் புலவர் எழுதிய உரைநடைக்கும் தற்கால வசன நடைக்கும் அநேகமாய் ஒரு தொடர்புமேயில்லை என்று நான் நினைக்கிறேன்."

"இதெல்லாம் நீ நினைப்பதுதானே?"

"'என்மனார் புலவர்' என்று மேற்கோள் காட்டமுடியாதென்கிறீயா? பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலியவர்களுடைய உரைநடையில் ஓர் அழகு சிறந்து விளங்குகிறது. அது சுருங்கச் சொல்லல். வீண்வார்த்தைகளை ஒழித்துக் கருத்தைச் சிறப்பித்துக் காட்டுவது அந்த நடை. எந்தக்காலத்திலாகட்டும்; பேச்சு நடைக்கும், புலவர் சிரமத்துடன் சுருக்கி எழுதிய அந்த நடைக்கும் வெகுதூரமென்று தெரியவில்லையா? அந்த நடையை நமது வித்துவான்கள் சிலர் வேண்டுமென்று பின்பற்றினாலொழிய, அதற்கும் தற்கால வசனநடைக்கும் தொடர்பொன்றுமில்லை."

"ஆனால் தமிழ் வசனநடை எதை ஆதாரமாகக் கொண்டது?"

"எல்லாரும் தலைமுறை தலைமுறையாகத் தமிழ் பேசவில்லையா? தமிழ்ப் பழமொழிகள் இல்லையா? பழைய நாடகங்களிலும், கூத்துக்களிலும் பாடல்களுடன் தமிழ் வசனம் கலந்து வரவில்லையா? தமிழ் வசனங்கள் செய்யுள்களில் பொதிந்து கிடக்கவில்லையா? இவைதாம் தமிழ் வசனத்தின் சுயப்போக்கைக் காட்டுவன. இங்கிலீஷ் நாகரிகக் கலப்பால், புதிய விஷயங்களை வசனநடையில் வெளியிடவேண்டுமென்று ஏற்பட்டபின், நமக்குள் வசன புஸ்தகங்கள் வருஷந்தோறும் ஆயிரக்கணக்காய்ப் பெருகி வழங்குகின்றன. ஆனால் தமிழ்வசன நூல்கள் இன்னும் சிறப்படையவில்லை. இலக்கியம் கண்டதற்கல்லவோ இலக்கணம் கூறமுடியும்?"

"இங்கிலீஷ் தொடர்பில்லாத தமிழ் நடையில் என்ன புஸ்தகங்கள் இருக்கின்றன?".

"விக்கிரமாதித்தன்கதை, பாரதக்கதை, ஸ்தலபுராணங்கள் முதலியவை. இவை இனிமேல் நிலைப்பது கஷ்டம். இந்தக் கதைகளைக் கொஞ்சம் இராகத்துடன், ஒருவன் உரக்கப்படிக்க, பிறர்பக்கத்திலிருந்து கேட்கவேண்டும். 'கேளீர், ஜனகமகாமுனிவரே! இதோ, இந்தநிற்கும் இராமன் மகாபராக்கிராமசாலியாயிருப்பதும்கூட வெகுவான இராக்ஷதர்களைக்கொன்று போட்டு விட்டு

எனது யாகசாலையை இராமுழுவதும் காத்துத் தசரதமகாராசனின் கண்மணிபோன்ற இவன்.' இதற்கேற்ற இராகம் எனக்கு வரவில்லை. இந்த வசனத்தில் இலக்கணப்பிழைகள் இருந்தால் பாதகமில்லை. வினை முற்றுக்கள் அநாவசியம்; புள்ளிகள்வேண்டாம். எதனையும் கோவை யாகச்சொல்லலாம். ஆனல் ஒருமூச்சுக்குள் எத்தனை வார்த்தைகள் அடங்கும் என்று தெரிந்துகொள்ளவேண்டும்.''

''இது ஒரு நடையா ? நீ கேலிபண்ணுகிறயா ?''

''இல்லவே யில்லை. நடையழகென்றால் என்ன? கருத்தும் சொல்லும் இசைந்திருப்பதுதானே? எனக்கு இந்தமாதிரி எழுதின புஸ்தகங்கள் மிகவும் பிடிக்கும். சாதாரண ஜனங்கள் எவ்வளவு சாரமாய் இந்தக்கதைகளைக் கேட்பார்கள், தெரியுமா? தற்கால வசன புஸ்தகங்களின் நடை, படிக்கத்தெரியாதவர்களுக்குத் தமிழ்நடை யாகவே தோன்றுவதில்லை. நான் சொன்னமாதிரியான கதைகளோ அவர்களுக்குக் கேட்கக் கேட்க இனிமையாயிருக்கும். ஆனல், அவை களைச் சட்டென்று கண்ணல்மட்டும் படித்தால், குற்றங்கள்மட்டுமே தெரியும். அவைகளின் காலம் போய்விட்டது.''

''ஏன், நமக்குள் எழுத்தறியாத ஜனங்கள் எத்தனையாயிரம் இருக்கிறார்கள் ? அவர்களுக்கென்று இராகத்துடன் வாசிக்கக்கூடிய நடையில், புதியபுஸ்தகங்கள் எழுதினல்என்ன ?''

''அவர்களுக்கேற்றபடி பாடல்கள் வெளிவருகின்றன. தமிழில் வசனநூல்கள் எல்லாம் சாதாரண ஜனங்களை நினைத்து எழுதப்பட வேயில்லை. ஏழைகளுக்குப் புஸ்தகம் வாங்கக் காசுகிடையாது. பணக் காரரில், கொஞ்சம் படித்தவர்கள்கூட இங்கிலீஷ் பத்திரிகைகளையும் நாவல்களையும் படிப்பார்கள். ஆகவே புதிய வசனபுஸ்தகங்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று மாணக்கர்களுக்காக எழுதப் படுவன. இரண்டு பெண்கள் படிப்பதற்கென்று எழுதப்படுவன. மூன்று புலவர், தம் திறமையை ஒருவருக்கொருவர் காட்டிக்கொள் வதற்காக எழுதி, சிலவேளை மாணக்கர் தலையிலும் சுமத்திவைப்பன.

''இவை ஒன்றிலுமே, பொதுவாக, நடையும் நன்றயில்லை; கருத்தும் சாரமாயில்லை.''

''ஏன் ? செந்தமிழ்க்கட்டுரைகளை நான் அதிகம் படித்ததில்லை. சில கதைகள் நன்றயிருக்கின்றன. பாரதசாரம் என்ற புஸ்தகம், மாமிகொலுவிருக்கை, கமலாம்பாள் சரித்திரம், இவையெல்லாம் நடையழகில்லாமல் இல்லை.''

''நான் படித்ததில் பாரதிவசனம் ஒன்றுதான் நன்றயிருக் கிறது.''

''பாரதி வசனநடையைப் பின்பற்றுவது கஷ்டம்.''

"கஷ்டமில்லை ; அனர்த்தம்."

"நீ கல்கியின் வியாசங்களை அன்று கொடுத்தாயே? அவை சாரமாயிருக்கின்றன. ஆனால், சிலகட்டுரைகள் பாரதியின் நடையைப் பின்பற்றித் தொத்தப்பார்த்துச் சுயலக்ஷணமில்லாமலிருக்கின்றன."

"பின் எப்படி? பாரதியின் போக்கு, தனி. அவர் ரஸிகர். விருந்துச் சாப்பாடுமுதல் பக்தி ஆவேசம்வரை, எதையும் மனமார அநுபவிப்பவர். குறும்பு, சந்தோஷ்டி, தாபம் எதையும் அவர் வெளியிடுகிற அர்த்தபுஷ்டியுடன் மற்றவரால் எழுதமுடியாது. அவர் மனப்போக்கை அவர் நடையிற் காணலாம். மற்றவர்கள் அவருடைய நடையைப் பின்பற்றலாம்; அவர்களுடைய மனப்போக்கு வேறுபட்டதானே இருக்கும்."

"தமிழ்வசன புஸ்தகங்களில், பொதுவாய், எழுதுபவரின் மனப்போக்கு ஒன்றும் வெளியாவதில்லை."

"அப்படியானால் அந்தப் புஸ்தகங்களுக்கு நடையழகு ஏது? அவைகளில், இலக்கணப்பிழைகளையே மதிப்பிடலாம்."

"சுயலக்ஷணமுள்ள புஸ்தகங்களையே இலக்கியங்களுடன் சேர்க்கலாம். சாதாரண வசனநூல்கள் இல்லையா? யாராவது பொழுதுபோக்காய்ப் படிக்கவேண்டி வேறு பொழுதுபோக்கில்லாத ஒருவர் எழுதுவது, சிறு கதைகள், நாவல்கள், சரித்திரங்கள், பலவிதக் கட்டுரைகள் முதலியவைகளில் வசனநடை நிலைப்பட வேண்டும். சொற்பொருத்தம், வசனப்போக்கு, விஷயத்தை வெளியிடும்பாங்கு இவைகள் இன்ன இன்ன விதமாக இருக்கவேண்டும் என்ற திட்டங்கள் முதலில் ஏற்படவேண்டும். இதுதான் வசன நடை இலக்கணம். இலக்கியம் எழுதும் மனோபாவம் உள்ளவர்கள் இந்த இலக்கணத்தை ஒட்டியும் வெட்டியும் எழுதுவார்கள். அவர்கள் நடைக்குச் சிறப்பிலக்கணம் வேறு."

"நீ சொல்லும் இலக்கணத்தின் விதிவிலக்குகள் இன்னவென்று உனக்குத் தெரியுமா?"

"விதிகள் தெரியாது. விலக்குகள் சில தெரியும். தமிழ் படிக்கும் பொழுது, உனக்கு எப்பொழுதெல்லாம் வெறுப்புவந்ததென்று நீயும் கூடச்சொன்னால், நானும் சொல்லுகிறேன்."

"நம் இருவருக்கும் பிடிக்காதவற்றையெல்லாம் பிழைகள் என்று சொல்லலாமா? இங்கிலீஷிலிருந்து தமிழில் பெயர்த்தெடுத்த வாக்கியங்களைப் படித்தால் எனக்கு எரிச்சல்வரும்."

"அது நியாயம்தான். எழுவாய் ஆரம்பத்திலும் பயனிலை அரைப்பக்கம் நீண்ட வாக்கியத்தின் கடைசியிலும் வருவது, செய்

வீனை எளிதில் வரக்கூடிய இடத்தில் செயப்பாட்டு வினை வருவது இவையெல்லாம் தமிழ்நடையில் அவலக்ஷணங்கள்தாம். அநேகமாய் மொழிபெயர்ப்பால் வருவன இவை.''

''தமிழ்ப் பதங்களை அகராதியிலிருந்து பொறுக்கி யெடுத்திருப்பது ஒரு குற்றமாகாதா?''

''வழங்கும் சொல்லிருக்க, வழங்காத சொல்லை அனாவசியமாய் உபயோகிப்பது நடைக்கழகில்லை. ஆனால் என்ன செய்வது? சூரியன் என்று சொல்லவேண்டும் பொழுதெல்லாம், சூரியன் என்றே சொல்லிவிட்டால், பரிதி என்று ஒருபதமிருப்பது உனக்கு எப்படித் தெரியும்?''

''தெரிய வேண்டாமே? செய்யுளில் அது வந்தால் அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம். ஆனால் ஒன்று. நமக்குள் தமிழ் அர்த்த புஷ்டியில்லாமலிருப்பதற்கும், இங்கிலீஷ படித்துத் தோன்றும் சில எண்ணங்களைச் சுயபாஷையில் எழுதமுடியாமலிருப்பதற்கும் இதுதான் காரணம். பெயர்ச்சொல்லுக்குப் பிரதிபதங்கள் இருக்கின்றன; செய்கைகளையும், மனத்தில் உள்ள எண்ணங்களையும் விவரிக்கவேண்டுமான வார்த்தைகள் இல்லை.''

''நமக்குத் தெரியவில்லை. அதனால் சொற்பொருத்தமில்லாத நடை ஏற்படுகிறது. பலர் எழுதும் தமிழில், சிலசொற்கள் கல்வி யாராய்ச்சி மணம் வீசிக்கொண்டும், மற்றவை கொச்சையாகவும் இருக்கின்றன.''

''நாம் சாதாரணமாய்ப் பேசும் தமிழ்வாக்கியங்களின் ஓசை யளவை ஆதாரமாய்க்கொண்டு, சொல்லழகுடனும் புதிய கருத்துக் களுடனும் தமிழில் கதைகளும் கட்டுரைகளும் இருந்தால் நன்றாயிருக்கும்.''

''புதிய கருத்தென்றால் என்ன? சுயமாக எண்ணுவது எவ்வளவு கஷ்டம் என்று உனக்குத் தெரியவில்லை.''

''நான், ஒவ்வொருவரும் புதிய புதிய கருத்துக்களை உண்டாக்கவேண்டுமென்று சொல்லவில்லை. சொல்லிக்கொடுத்துச் செய்கிற காரியம் இல்லை அது. ஆனால் இப்பொழுது இங்கிலீஷிலிருந்து, மொழிபெயர்த்தும் அமைத்தும் எழுதுகிறார்களே, அதைப் புது விதமாகச் செய்யலாமே என்று சொல்கிறேன்.''

''எனக்குச் சரியாக விளங்கவில்லை.''

''இதைப் பார். எத்தனையோ தமிழ் நாவல்கள் இருக்கின்றன. இந்தக் கதைகளில் ஒரு முக்கிய சந்தர்ப்பம் உண்டு. அதாவது, ஒரு துஷ்டன் தன்னை நெருங்க ஒரு பெண் தன் மானத்தைக் காப்பாற்றிக்

கொள்வது. இது சுயமாக ஆசிரியர் உண்டாக்கின சந்தர்ப்பம் அன்று. ஒவ்வொரு கதைக்கும், ஓர் இங்கிலீஷ் கதை முதல்தூல். இந்தச் சந்தர்ப்பம் நமது தற்கால வாழ்க்கைக்குப் பொருத்தமுள்ள தன்று. இது நடப்பதானலும் இனிமேல் ஒரு கதையிலும் இது வேண்டாம். இதற்குப் புதுமையில்லை.''

''அநேக கதைகள், சிலவிடங்களில் நிஜவாழ்க்கையையும், பேச்சையும், பெரும்பாலும் அதிசய சம்பவங்களையும் வர்ணித்து, விஷயப் பொருத்தமில்லாமலிருக்கின்றன. 'பழமொழிக் களஞ்சியம், மாமியார் மருமகள் சண்டை விநோதம், கதாநாயகியின் அதிசய தீரம்' என்று விளம்பரப்படுத்திவிடுவார்கள். ஆனல் இது விஷயத்தைக் குறித்தது. நடையைப்பற்றியதன்று.''

''விஷயம் வேறு, நடை வேறுகுமா ? மற்றென்று. பழமொழி, குறள், பாடல் ஒன்றும் வசனத்தில் விரவிவரவேண்டாம். தெளிவாக, சொல்லப்போகும் விஷயத்தை அவரவருக்கு முடிந்தபடி, தனி வசன நடையில் எழுதினல் போதும். அப்படிச் செய்தால் தான் குற்றங்கள் விளங்கும். நடையைத் திருத்த வழி யுண்டு. கட்டுரை எழுதுபவர்கள் இதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்''.

''இது அவ்வளவு முக்கியமில்லை. என் கட்டுரை எழுதியாகா தென்று தோன்றுகிறது. விஷயத்தை என் மனத்திலேயே சீர்ப் படுத்த முடியவில்லை. நாம் பேசிக்கொண்டதையே ஒரு சம்பாஷணையாக எழுதப்போகிறேன்.''

''அப்படி ஒரு சாரமுமில்லையே, நம் பேச்சில். இங்கிலீஷ் பதங்களுடன் சுபாவப் பேச்சிற்போலவே வார்த்தைகளை எழுதிப் பார். அது ஒரு புதுமையாயிருக்கும்''.

''இலக்கணப்பிழைகள் அதிகமென்று திருப்பியனுப்பிவிடுவார்கள். இங்கிலீஷ் வார்த்தைகள் தமிழில் கலப்பது எனக்கே பிடிக்கவில்லை. இங்கிலீஷில் பேசினதை மொழிபெயர்த்துச் சுருக்கி எழுதுவேன்.''

''நன்று யிராது.''

''ஏதாவது எழுதவேண்டுமல்லவா ?''

''வேண்டாமே'' என்று சிரித்து என் நினைவை போய்விட்டாள். நான் அவள் பேச்சைக் கேட்கவில்லை.

நாமும் வள்ளுவரும்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

ஐரோப்பிய மகாயுத்தம் முடிவடைந்து ஒரு வியாழவட்டம் ஆகிறது. யுத்தம் நடந்துகொண்டிருந்தபொழுது என்றும் காணாத உண்மைகள் சிலவற்றைக் கண்டோம் என்பது நம்மில் பலருக்கும் ஞாபகம் இருக்கும். அப்போது நெல் முதலிய தானியவகைகள் அபரிமிதமாக விலையேறிவிட்டன. பருத்தியும் பீரங்கிகளில் வைத்துச் சுடுவதற்கே முக்கியமாக உபயோகப்பட்டதனால் விலையேறிக் காசில் எல்லாம் பொன் விளையும் பூமியாய் மாறிவிட்டது. பீரங்கிகளை வார்ப்பதற்குச் செம்பும் வெள்ளீயமும் இன்றியமையாத உலோகங்களாய் இருந்த காரணத்தால் அந்த உலோகங்களுக்கும் அவைகலந்துள்ளபித்தளை வெண்கலம் முதலிய கலப்பு உலோகங்களுக்கும் என்றைக்கும் இல்லாத அவசியமும் கிராக்கியும் ஏற்பட்டுவிட்டன. உலகம் எல்லாம் ஒன்றுசேர்ந்து முற்றுகை போட்டதுபோல் சிக்கப் பட்டிருந்த ஜெர்மனி தேசத்தில் வீட்டுக் கதவுகளிலுள்ள கீல், தாள், ஆணி முதலியவைகள் பித்தளையால் செய்யப்பட்டிருந்தால் அவைகள் துரைத்தனத்தார் ஆணையால் உருவப்பட்டுப்போய்க் கதவெல்லாம் "அடையா நெடுங்கதவாய்த்" திறந்து கிடக்கவேண்டியதாய் நேர்ந்தது. மேலும் ஜெர்மனியர் பீரங்கிகளையே ஆராதனை செய்துவந்தார்கள் என்று எதிரிகள் எல்லோரும் சொல்லிக்கொண்டு இருந்தார்கள்; அவர்கள் செப்பு விக்ரகங்களையும் ஆராதித்து வந்திருந்தார்களானால் அவைகள் பீரங்கிகளோடு சாயுஜ்யபதவி அடைந்துதான் வழிபாட்டுக்கு உரியவைகளாய் இருந்திருக்கும்.

இவைபோலவே இதர சரக்குகளும் விலையேறிவந்த காரணத்தால் வியாபாரம் நாளுக்குநாள் விருத்தி அடைந்து வந்தது. எப்படியோ, யுத்தகளங்களில் மக்கள் உயிர் மடிய மடிய வியாபாரிகளுக்கு லாபம் அதிகரித்தது. ஏகம்பவாணரது பராக்கிரமத்தை வியந்து கூறியதுபோல, "சேனை தழையாக்கிச் செங்குருதி நீர் தேக்கி" வர்த்தகப்பயிர் செழித்தோங்கி வளர்ந்தது என்று நன்றாய்க் கூறலாம்.

பணமுடையால் வர்த்தகம் எல்லாம் ஓட்டம் இல்லாது தியங்கிக் கிடக்கிற தற்போதைய தரித்திர நிலைமையில், அப்போது பணம்

பெருக்கெடுத்து முக்குமுடைகளையெல்லாம் நிரப்பிக்கொண்டிருந்த செல்வநிலையை யூகித்தறிவது ஒருவகையில் கஷ்டந்தான். ஆனாலும் சாமானிய மனிதர்கள்கூடச்சிறுகச் சிறுக வியாபாரங்கள் செய்து காலந்து வருஷங்களில் செல்வவான்களாக ஆனார்கள் என்பது நாம் கண்கூடாகக் கண்டது. ஹாக்கர் சாய்பு தன் முதுகிலிருந்து சவாரி செய்து வந்த மூட்டையை ஒற்றைக் காளை வண்டியில் இறக்கிவைத்து வியாபாரம் நடத்த ஏற்பட்டார். அடுத்த வருஷம் அவர் ஜவுளிக் கடைசாய்பு ஆனார். அதற்கு அடுத்த வருஷமோ மளிகை முதலாளி ஆய்விட்டார். இவ்வாறு முதல் வருஷம் நூறு ரூபாய் லாபம், அடுத்த வருஷம் ஆயிரம் ரூபாய் லாபம், அதற்கு அடுத்த வருஷம் லக்ஷம் லாபம் என்றும் கடைசியாகக் கோடீசுவரப் பிரபு என்றும் பலபேர் சம்பந்தமாகக் கணக்குச் சொல்ல ஏற்பட்டது. இவ்வளவு செல்வப் பெருக்கைப்பார்ப்பதில் நமக்கு எவ்வளவோ திருப்தி. திருமகள் செந்தாமரை மலரைவிட்டு ஓரே குதியாய்க் குதித்துவந்து தன் அபூர்வநடனத்தை நாடெங்கும் ஆடிக்காட்டினதுபோல் இருந்தது.

இதுபோலவே சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் செல்வம் முதலில் சிறிது சிறிதாய்த் திரண்டு சில வருஷங்களில் பெருஞ் செல்வமாகப் பெருகி நிற்கும் நிகழ்ச்சிகள் பலவற்றைக் கண்டு திருவள்ளுவரும் களித்துக்கொண்டும் வியந்துகொண்டும் இருந்தார்.

இதுமாத்திரமா? அல்ல. நாடகம் ஆடுகிறதைப் பார்ப்பதிலும் பார்ப்பவரைப் பார்ப்பதிலும் நமக்கெல்லாம் இருக்கிறபடி அவருக்கும் இருந்தது உத்ஸாகம். நம்மைவிட உத்ஸாகம் அவருக்கு எவ்வளவோ அதிகம் என்று சொல்லவேண்டும். அக்காலத்திய நாடகங்களுக்குக் கொட்டகையெல்லாம் கிடையாது. ஊரை ஒட்டியுள்ள மைதானம் அல்லது மந்தைவெளிதான் ஆடும் இடம். மேலும் அந்த நாடகங்களுக்கு நடனம் இன்றியமையாத அம்சம். ராஜாவோ, ராணியோ, பிள்ளையாரோ யார் வந்தாலும் தூசி கிளம்பும்படி ஒரு ஆவர்த்தி நடனம் ஆடிவிட்டுத்தான் ஆஸனத்தில் அமருகிறது. நாட்டியப்பெண்களாவது குறவன் குறத்தியாவது வந்துவிட்டாலோ சொல்லவேண்டியதில்லை. இதுபற்றியே நாடகத்துக்குக் கூத்தாட்டம் என்று பெயர் வழங்கிவந்தது. இரவு ஒன்பதரைமணிக்கு ஆட்டம் ஆரம்பிக்கும். எட்டுமணிக்கே ஒருநாள் நாடகமைதானத்துக்குத் திருவள்ளுவர் வந்துவிட்டார். அத்தருணம் நாலைந்து பேர் அங்கு வந்து தள்ளித்தள்ளி உட்கார்ந்தார்கள். எட்டரை மணிக்கு நூறுபேர் வந்து சேர்ந்தார்கள். ஒன்பது மணிக்கு ஆயிரத்துக்கு மேற்பட்டுவிட்டது. திரையை அகற்றுகிற ஒன்பதரை மணி

நேரம் வந்ததோ இல்லையோ, கூட்டம் பதினாயிரத்துக்கு மேலாகவே வந்து மொய்த்துவிட்டது. உள்ளூரில் மாத்திரம் இருந்தல்ல, சுற்றுப் பக்கத்து ஊர்களிலிருந்தும் ஆண் பெண் பிள்ளைகளெல்லாம் வந்துவிட்டார்கள். எள்ளுப்போட இடம் இல்லை என்று சொல்லும்படி நெருக்கி உட்கார்ந்துகொண்டார்கள். திருவள்ளுவர் முன்னும் பின்னும் இருபக்கமும் கண் எட்டுமட்டும் பார்த்தார். நிலவின் ஒளிபட்டு ஒரே பரப்பாகத் தலைக் கடல் தோன்றியது. அவ்வளவுபேரும், நாடகம் ஆரம்பித்தவுடன் அதிலேயே கண்ணுங் கருத்துமாய் அசைவற்று இருந்தபடியே இருந்தார்கள். மணி ஒன்று, இரண்டு, மூன்றும் ஆய்விட்டது. ஆனால் என்ன? ஆணி தறையிட்டமாதிரி ஒரே இருப்பாய்த்தான் இருந்தார்கள்.

இதையெல்லாம் கண்ட திருவள்ளுவர் தமக்குள்ளே சொல்ல நேர்ந்தார்: "என்ன! எட்டு மணிக்கு ஏதோ நாலைந்து பேர் வந்தார்கள்; பிறகு நூறு, ஆயிரம், கடைசியாகப் பதினாயிரம் என்று கூடிவிட்டார்கள். ஐந்து மணி நேரத்துக்குமேலாகியும் வந்தவர்கள் அப்படியே இருக்கிறார்கள். ஆகா! இந்த அவைக்குழாத்தைப் போலத்தான் இருக்கிறது பெருஞ் செல்வம் சிலரிடத்தில் வந்து தங்குவதும். உண்மை, உண்மை" என்று இவ்வாறாக இரண்டு வேறுபட்ட பொருள்கள்—செல்வமும் கூத்தாட்டத்துக்குவந்த அவைக் குழாமும்—ஒன்றோடொன்று இணைந்து நிற்கும் உவமான நிலையை உளக்கண்ணால் கண்டு கண்டு களித்தவண்ணம் இருந்தார். கூத்தாட்டத்தில் மனம் செல்லவில்லை.

சிறிது நேரத்தில் கிழக்கே வெள்ளி எழுந்தது. கூத்து முடிவாகிவிட்டது. கூட்டம் கலைந்து எல்லோரும் தம் வீடுகள் நோக்கியும் ஊர்கள் நோக்கியும் போய்விட்டார்கள். ஒரு தொடியில் மாயமாய்ப் பறந்துபோய்விட்டார்கள். ஒரு குஞ்சு குறுமான் இல்லை.

ஆட்டம் ஓய்ந்து ஐந்து நிமிஷந்தான். உவமான உவமேயங்களின் உண்மையில் உள்ளாக ஆழ்ந்து முழுகிப்போய் இருந்த வள்ளுவர் மெள்ள வெளியே வந்து சுற்றுமுற்றும் பார்த்தார். வந்தவர்களில் மாதிரிக்குக்கூட ஆளில்லை. வீட்டுக்குத் தன்னந்தனியாய்த் தான் போகவேண்டும் என்றும் தெரியவந்தது. "ஆகா! மெள்ள மெள்ளவந்ததென்ன! இருந்ததென்ன! மாயமாய்ப் போனதென்ன! சிலரிடத்தில் வளர்ந்தேறிவந்த பெருஞ்செல்வம் எல்லாம் ஒரேநாளில் இல்லாது ஒழிந்துபோவதையும் பார்த்திருக்கிறோம்" (ஐரோப்பிய மகாயுத்தம் முடிவடைந்தபின் பொருளாதார நிலைமை மாறவும் பெரிய கடைகள் வர்த்தக நிலையங்கள் எத்தனையோ திடீர் திடீர் என்று மூறிந்து விழுந்தது நமக்கும் ஞாபகந்தான்.) "சரி சரி

பெருஞ்செல்வம் ஒழிந்துபோவதும் இங்கு இதுவரை கூடியிருந்தவர்கள் தரையைத் துடைத்தவண்ணமாக ஒரே போக்காய்ப்போன செயல்தான். விடிகிற சமயமாய் இருந்தாலும் இந்த இடமும் நேரமும் ஏதோ ஒருவிதமான பயங்கரத்தையோ அல்லது துக்கத்தையோ உண்டாக்குகிறது.'' இப்படியெல்லாம் சிந்தித்துக் கொண்டு பையப்பைய வீடுபோய்ச் சேர்ந்தார். நேரமும் விடிந்து விட்டது. மனத்தில் இதுகாறும் நிகழ்ந்த நிகழ்ச்சியெல்லாம் மெள்ள நெருங்கி நெருங்கி ஒன்றோடொன்று இணைந்து ஒலிவடிவாய்ப் பிறப்பு உற்றது. அதுதான் :

''கூத்தாட்(டு) அவைக்குழாத்(து) அற்றே பெருஞ்செல்வம்;
போக்கும், அதுவிளிந் தற்று.''

இந்தக் குறள் 'நிலையாமை' அதிகாரத்தில் இரண்டாவது செய்யுள். இதில் ஆசிரியர் பெருஞ்செல்வத்தின் வரத்து எப்படி என்று முதலில் சொல்லிவிட்டுப் போக்கைப்பற்றிப் பிறகு சொல்லுகிறார். மெள்ளமெள்ள வரத்து என்பதின் கருத்தை நான்கு சீர்களாலும், வல்லொற்று ஓசைகளிலே தியங்கி நிற்கச்செய்வதாலும், சாவகாசமாக இயங்கச்செய்து, பின்பு, போக்கு, காலாவட்டத்தில் அல்ல, கூணத்திலேயே, இல்லாமல் ஒழிந்துபோய்விடும் என்ற கருத்தை இரண்டு சீரில் சொல்லித் தீர்த்துவிடுகிறார். மேலும் மேன்மேலும் ஈளாது என்னும் பொருளைச் சோகம் கலந்த விளிதல் (=சாதல்) என்னும் சொல் தொனிக்கச் செய்கிறது. இந்தச் செய்யுளை ஆர அமர உள்ளக்கிடையான உண்மையோடு ஒட்டித் திரும்பத் திரும்ப ஓதுவோமாயின், உண்மையும் நயமும் புதிது புதிதாக நம்முள்ளத்தில் பிறந்து, ''நவில்தொறும் நூல்நயம்போலும்'' என்று சொல்லுவதற்கு இலக்கியமாய் இது நிற்கும்.

அச்சுவித்தையின் வரலாறு

எஸ். வையாபுரிப் பிள்ளை

கல்வியைப் பரப்புவதற்குரிய சாதனங்களில் அச்சுப்புத்தகங்கள் மிகச்சிறந்தன. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் வெளிவருகின்றன. அவை விரித்துணர்த்தும் பொருள்களும் பல வேறு வகைப்பட்டன. அவை விரைந்து பரந்து சென்று தம் நோக்கத்தை நிறைவேற்ற முயல்வதும் நாடு, நகரம், கிராமம், குக்கிராமம் முதலிய எல்லாப்பிரதேசங்களிலுமாம். சிறந்த நூல்கள், தாம் தோன்றியவுடன் மொழிபெயர்க்கப்பெற்று, பல அந்நிய தேசங்களிலுஞ் சென்றலவுகின்றன. இக்காலத்தில் ஒரே நூலின் பிரதிகள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் வெளிவருதலினாலே காலமென்னும் காலன் வாயினையும் தப்பி நின்று மக்களுக்கு நிலைத்த பயனுதவத்தக்க வலிமையினை அடைகின்றன.

இங்ஙனம் காலதேசாதி நியதியைக்கூடியவரை வெற்றிகொண்டு பொதுக்கல்வியை நாடெங்கும் ஆட்சி புரியச்செய்வது மாத்திரமேயன்றி, அறிவென்னும் தெய்வச் சுடரொளியை மேன்மேலும் பிரகாசங்கொள்ளும்படிசெய்து உலகெங்கும் அதன் தேஜோமயமாக்குதற்கும் அச்சுப்புத்தகங்களே சிறந்த கருவியாய் உள்ளன. நமது மூதாதையர் கனவிலும் நினைத்திராத பிரகிருதி சாஸ்திரப் பேருண்மைகளையெல்லாம் மிக எளிதிற் சாதாரண மக்களும் அப்போதைக்கப்போது அறிந்துகொள்ளுதற்குப் புத்தகங்கள் பயன்படுகின்றன. நூதன நூதனமாய் நிருமிக்கப்படும் அற்புத யந்திர விசேடங்களையெல்லாம் அனைவரும் உடனுடன் அறிந்து பயன்படுத்திக்கொள்ளும் சௌகரியங்கள் புத்தகங்களால் வாய்த்திருக்கின்றன. ஏக தேசத்தில் ஒருவரிருவருக்கு உரிமையாயிருக்கும் அறிவுச் செல்வத்தை அனைவரும் பகிர்ந்தனுபவிக்கும்படி புத்தகங்கள் செய்கின்றன.

இதன் மேலும், கல்வி யறிவால் உண்டாம் நிலைத்தவின்பத்தை நாம் நுகரும்படி செய்வதும் புத்தகங்களேயாம். எவ்வகை நிலையிலுள்ளார்க்கும் அறிவினால் விளையும் இன்பம் போற்றத்தகுவதாகவேயுள்ளது. இந்திரிய நுகர்ச்சி எத்துணை யின்றியமையாததோ அத்துணையாக அறிவு நுகர்ச்சியும் மக்கட்கு இன்றியமையாததே. கல்வி

யறிவில்லாது கேவலம் மிருகப்பிராயமாயிருப்போரும் இனிய கதை களை வாசித்துக் கேட்டவளவில் அதன் சுவையிலே லயித்து நின்று பரவச மெய்தி யின்புற்றிருப்பர். அவர்களுக்குச் சிறிதளவேனும் கல்வியறிவிருப்பின், அறிவு துகர்ச்சியை எத்துணையளவாகப் போற் றுவரென்பது கூறவும் வேண்டுமோ ?

ஆகவே அச்சுப்புத்தகங்கள் நமது வாழ்க்கையின்படித்திற்குக் காரணமாய், உயிரோடு உயிராயும், அறிவோடு அறிவாயும், உணர் வோடு உணர்வாயும் ஒன்றிக்கலந்துவிட்டன. அவைகளின்றி நாம் எவ்வாறு உயிர் வாழ்வது என்று நினைக்கவும் இயலவில்லை.

இவ்வண்ணம் மக்கள் வாழ்முலகை விண்ணுலகு என்றெண் ணும்படியாக்கி அவர்களை அறிவின்பப்பெருவாரியிலே திளைக்கும் படி செய்கின்ற புத்தகங்கள் அச்சிலியன்று வெளிவருமுறையைக் கண்டுபிடித்த பேருபகாரி இன்னரென நாம் தெரிந்து கொள்ளுதல் அவசியம். வேதகாலத்தேயே உருவங்கள் பொறித்துள்ள நாணயங் கள் இருந்தனவென்று அறிகின்றோம் (*D. R. Bhandarkar's Lectures on Ancient Indian Numismatics 68-69*). எனவே இங்கிலாந்து முதலிய மேலைத் தேசங்களில் நாகரிகம் என்ற மணங் கூட வீசியறியாத பண்டைக்காலத்திலேயே, கிறிஸ்துவப்தத் திற்கு மிகமிக முன்புதொட்டே, நமது பாரத தேசத்தில் நாணய முதலியவற்றில் உருவங்கள் முதலியன பொறிப்பதற்கு ஏற்ற அச்சுக் கருவிகள் இருந்தன. அக்கருவிகளை மேன்மேலும் நயம்பெற அமைத்துப் புத்தகம் அச்சிடும் முறையை நம் முன்னோர்கள் தெரிந்து கொண்டார்களெனக் கூறமுடியவில்லை. கிறிஸ்துவப்தம் ஆறாவது நூற்றாண்டில் சீன தேசத்தில் ஒரு வகையான அச்சுவேலை நடைபெற்று வந்தது. அத்தேசத்தில் மரப்பலகையிலே ஒவ் வொரு பக்கத்திற்கும் உரிய எழுத்துக்கள் முழுவதும் செதுக்கப் பெற்றிருந்தன. இதனால் ஒவ்வோர் அச்சுப்பலகையும் புத்தகத்தின் ஒருபக்கத்திற்கு மட்டுமேயுதவும்; பிறிதொன்றற்கு உதவமாட்டாது. ஆகவே புத்தகங்களைத் தற்காலத்திற் செய்வதுபோல் அச்சியற்ற முடியவில்லை. இப்போது ஒவ்வோரெழுத்தும் மிகப் பலவாய்த் தனித் தனியே வார்க்கப்படுகிறது. ஒரு பக்கம் அல்லது 'பாரம்' முழுமையும் அச்சுக் கோத்து அதனை அச்சியற்றிய பின்னர், பழைய படியும் அவ்வெழுத்துக்களைப் பிரித்துக் கோத்துப் பயன்படுத்த லாம். இவ்வாறே மேன்மேலும் செய்து கொள்ளலாம். தனித் தனியாக எழுத்துக்கள் வார்க்கப்படுதலின் பயன் இதுவேயாகும். இதற்குத் தக்கபடி யமைந்த எழுத்துக்கள் 'சலனவச்சு' (*Movable type*) என்று கூறப்படும்.

இவ்வகையான 'சலனவச்சு' ஜான் கூடன்பேர்க் என்னும் ஜெர்மனியரால் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் கி. பி. 1400-ல் ஜெர்மனி தேசத்திலே, ரயின் நதிக்கரையிலுள்ள மேயென்ஸ் நகரத்தில் பிறந்தவர். அந்நகரத்தில் ஏற்பட்டிருந்த உட்குழப்பத்தினால், இவரும் இவர் கட்சியாரும் நகருக்கு வெளியே பல முறை துரத்தப்பட்டனர். முடிவில் இவர் குடும்பச் சொத்தை அரசாங்கத்தினர் அபகரித்துக் கொண்டனர். இதன் பின் இவர் தமது நகருக்குத் திரும்பும் கருத்தை அறவேயொழித்துவிட்டு 'ஸ்ட்ராஸ் பெர்க்' என்ற நகரில் வசித்து வந்தார். அந்நகரத்து மக்களின் அன்பும் நன்மதிப்பும் பெற்று அங்கே வாழ்ந்துவரும் நாளில் அவர்கள் உதவியால் இவருடைய ஆஸ்தி இவருக்குத் திரும்பக்கிடைத்தது. இப்பொருளைப் பல விடங்களுக்குஞ்சென்று அழிவில்லாத கல்விப் பொருளை யீட்டுதற்குப் பயன்படுத்தி வந்தனர்.

ஹாலெண்டு தேசத்தில் ஹார்லெம் நகரில் இவர் இருக்கும் பொழுது, ஒருநாள் இவர் நண்பராகிய லாரென்ஸ் கோஸ்டெர் என்பவர் ஒரு மரப்பலகையிற் செதுக்கப்பட்டிருந்த லத்தீன் இலக்கணத்தை இவருக்குக் காண்பித்தார். அன்று முதல் அச்சுவித்தையைக் கண்டுபிடிக்கும் பெருங்காதலொன்று இவர் மனத்தில் வேரூன்றிவிட்டது. ஆண்மக்களுக்கு இயற்கையாயுள்ள பிறிதொரு பெருங்காதலும் இவரது உள்ளத்தை இப்போது கொள்ளை கொண்டது. நகர்ப்புறத்தேயுள்ள ஒரு சிங்காரவனத்திற்குச் சென்று அங்கே தம் காதலியை நினைத்துப் பாடுவதும் அவர் பெயரையும் தம் பெயரையும் மரப்பட்டைகளிற் பல முறை யெழுதிப் பார்த்து மகிழ்வதும் இவரது வழக்கமாயிருந்தன. ஒரு முறை அப்பெயர்களை ஈரமான இளம்பட்டையிற் செதுக்கி, அப்பட்டையைத் தம்மிடத்திருந்த தோற்கடுதாசியிற் சுற்றிவைத்திருந்தார். மறுநாள் தம் காதலியிடத்தில் அதனைச் சமர்ப்பிக்க வெண்ணிப் பிரித்துப் பார்த்தபோது, பசும்பட்டையிலுள்ள எழுத்துக்கள் தோற்கடுதாசியில் தெளிவாய்ப் படிந்திருத்தலைக் கண்டனர். இவருக்குண்டான மகிழ்ச்சி அளவிடக் கூடாததாயிருந்தது. தமது இயற்கைக்காதல் செயற்கைக் காதற்குரிய அரும்பொருளை யடைதற்கு உதவியதென்று நினைக்கும்போதெல்லாம் தமது ஒருயிரிற் பன்னூறாயிரங்கள் புகுந்து இயக்குவதுபோல் ஊக்கங்கொண்டனர். பெரிய பலகைகளில் எழுத்துக்களைச் செதுக்கி, மரப்பட்டைரசத்திற்குப் பதிலாகக் கறுப்புமையை அப்பலகையின்மீது தடவி அச்சியற்ற முயன்றனர். இரவும் பகலும் இத்தொழிலிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து எத்தனையோ முறைகளைப் பரியாலோசனை

செய்வதில் பல வருடங்கள் சென்றன. முடிவில் ஒவ்வோரெழுத்தையும் தனித்தனியே சிறு மரத்துண்டிற் செதுக்கி, வேண்டியபடி கோத்து அச்சியற்றுங் கருத்து இவர் மனத்தே திடீரென்று உதித்தது. இக் கருத்துத் தோன்றிய காலமுதற்கொண்டு, தனித்தனியே யெழுத்துக்களைத் திருந்திய வடிவிற் செதுக்குதற்கு வெகுகாலம் முயன்று அதிலே தக்கபயிற்சி பெற்றனர்.

பின்னர் ஹார்லெம் நகரத்தை விட்டு ஸ்விட்ஸெர்லாந்து சென்று மரத்துண்டில் அச்சுக்கள் செய்து வாக்கியமுறைப்படி அவற்றை நூல்களிற் கோத்து வரிவரியா யமைத்து அச்சுக்கள் விழுந்து விடாதபடி ஓரங்களில் முடிப்பிட்டுக் கட்டி ஒருபக்க முழுவதும் அச்சடித்துப் பார்த்தனர். தாம் எதிர்பார்த்ததற்கு மேலாகவே இது திருப்திகரமாயிருந்தது. இங்ஙனமே பலகாலும் முயன்று அப்பியசித்து வந்தனர். தாம் மேற்கொண்டுள்ள கருத்து முற்றவேண்டுமாயின், தொழிற்சாலையொன்று அவசியம் ஏற்படுத்தவேண்டுமென்று எண்ணினர். தொழிற்சாலை இவரது அறிவாற்றலாலும் இடைவிடாத வுழைப்பினாலும் மட்டும் ஸ்தாபிக்கக் கூடியதா? அதற்குப் பொருள் வேண்டு மன்றே? பொருள் பெறும்பொருட்டுப் பல தனவந்தர்களிடஞ் சென்றனர். அவர்களிடத்தே இவர் பெற்றவை நகைப்பும் இகழ்ச்சியும் இரக்கமுமேயன்றி வேறில்லை. இவருடைய 'ஆகாயக்கோட்டை' யெல்லாம் பொருளின்மையால் தொலைந்து விடும்போலிருந்தது. ஆனால் அச்சியற்றும் நுண்மதியும் பேருழைப்புமுடையவர் அத்தனை யெளிதில் தோல்வியுறுவரா? சில தொழிலாளிகளோடு கூடி வைர முதலியன செதுக்கி ஆபரணஞ் செய்யுஞ் சாலையொன்று நிறுவிப் பகல் முழுவதும் அவ்வேலையையே செய்து, இரவில் தமது ஆத்மார்த்தமான வேலையைச் செய்துவந்தனர். அச்சியற்றுந்தொழில் முழுமையுந் தாமாகவே செய்து முடிப்பது அசாத்தியமென்று தோன்றியபடியால், தமது தொழிலின் மர்மத்தைச் சிறிது சிறிதாகத் தம் கூட்டாளிகளுக்குக் கூற நேர்ந்தது. இவர் மேற்கொண்டுள்ள தொழிலின் அருமை பெருமைகளை அவர்கள் உடனே நன்குணர்ந்தனர். எனினும் அதனால் ஏற்படும் புகழும் பொருளும் இவரடையாதபடி தமதாகவே செய்துகொள்ள வேண்டுமென்ற கருத்து அவர்கள் மனத்திலெழுந்தது. அச்சுத்தொழிற்குரிய இரகசியங்கள் அனைத்தையும் தரங்கள் கிரகித்துப் பொருளிலாபத்தை தாமே அடையவேண்டுமென்ற நோக்கத்தோடு, இவருடைய கூட்டுத் தொழிலாளர்கள் இவர்க்குப் பொருள்முதலிய வுதவிசெய்ய முடியாதெனக் கூறினர். தமது பெருநோக்கம் நிறைவேறுந் தறுவாயில், உதவியை இழந்துவிட மனமின்றி அவர்களுடைய உட்கிடைக்கெல்

லாம் ஒருவாறு இணங்கித் தம் வேலையில் முயன்றுவந்தனர். அச்சு வேலையிற் பொருள் வருவாய் மிகுதியாயுண்டாயிற்று. அவ்வூதிய முழுமையும் கூட்டாளர்கள் தாமே யெடுத்துக்கொண்டது மாத்திர மன்றி, இவரைக் கேவலம் கூலியாளாகக் கருதி இழிவாய் நடத்தத் தொடங்கினர். பின்னர் அச்சுவித்தை இவருக்குரியதன்றென்றும் அவ்வித்தையைக் கைக்கொண்டு அச்சுத் தொழிலியற்றும் உரிமை இவருக்குக்கிடையாதென்றும் வழக்குத் தொடுத்தனர். இறைவ னருளால் இவ்விடையூறுகளெல்லாம் ஒருவாறு நீங்கின. தாம் முழு மனத்தோடும் காதலித்து வந்த அச்சுவித்தை இவரது உரிமைப் பொருளாகவே முடிந்தது. தமது தாய் நகரான மேயென்ஸுக்குத் திரும்பி வந்தனர். பிறிதொரு காதல் வெற்றியையும் கூடென் பெர்க் இப்பொழுது அடைந்தனர். துன்பமயமாகிய இவரது வாழ்க்கையிலே சிறிது இன்பவொளியும் தோன்றலாயிற்று. நெடுங் காலமாகத் தாம் காதலித்து வந்த மாதரசியை இப்பொழுது மணந்து மகிழ்வுற்றனர். எனினும் தம்பதிகள் தமக்குரிய செல்வ மாக அனுபவித்து வந்தது வறுமையேயன்றி வேறல்ல. பொருட் செல்வம்போன்றே மக்கட் செல்வமும் இவர்கட்கு இல்லாதாயிற்று.

மேயென்ஸில் மீண்டும் குழப்பம் உண்டாயிற்று. மீண்டும் கூடென்பெர்க் வெளியேற நேர்ந்தது. ஸ்விட்ஸெர்லாந்துக்கு மறு முறையுஞ்சென்று அச்சியந்திரசாலை தாபித்து விவிலிய நூல் முதலிய வற்றைப் பிரசுரஞ் செய்தனர். மீண்டும் இவருடைய வேலையாட்கள் இவரை மோசஞ்செய்து அலட்சியமாக நடத்த, மீண்டும் தமது தாய் நகருக்குத் திரும்பி வந்தனர். இத்துன்பங்களிலெல்லாம் இவருக்குத் துணையாய் நின்று மனம் சலிப்பின்றி உழைத்துவரும்படி தூண்டிக் கொண்டிருந்தவர் இவரது உத்தம பத்தினியாகிய ஆன்னெட் (*Annette*) அம்மாள் தான். தம் தாய் நகர் வந்ததும் வூஸ்டு (*Fust*), ஷோபெர் (*Schoffer*) என்பவர்களுடன் சேர்ந்து கிறிஸ்துமத நூல் கள் பலவற்றை அச்சியற்றி வெளியிட்டனர். துரதிருஷ்டம் இவர் காலடி வைக்கு மிடமெல்லாந் தொடர்ந்துகொண்டேயிருந்தது. அளவற்ற கஷ்ட நஷ்டங்கள் இவர்க்கு ஏற்பட்டன. பிரான்சு மன்னவராகிய லூயி (*Louis XI*) என்பவர் இவரைச் சிறிது காலம் ஆதரித்து வந்தனர். அப்போது புதிய கூட்டாளிகள் சிலரைத் துணையாகக்கொண்டு இவர் தம் தொழிலில் முயன்று வந்தனர். இக் கூட்டாளிகளும் இவரை வஞ்சிக்க நினைந்து முடிவில் அந்நோக்கம் கைகூடாதொழிந்தார்கள். மீண்டும் தம் நகரக்குழப்பத்தினால் இவரும் இவருடைய மனைவியாரும் வெளியே துரத்தப்பட்டு அகதிளாய் யாதொருபுகலிடமு மின்றி அந்நியநாடுகளில் அலைந்து

திரிந்துகொண்டிருந்தனர். இக்காலத்தில் நாஸ்ஸோ (*Nasso*) என்ற நாட்டின் அதிபதியால் ஆதரிக்கப்பெற்று வாழ்ந்து வந்து தமது அறுபத்தொன்பதாம் வயதில் மண்ணுலகிற் புகழ் நிறுவி விண்ணுல கடைந்தனர்.

இவர் இறந்த சிலவருடங்கட்குள்ளே ஐரோப்பாக் கண்டத்திற் பல நகரங்களிலும் அச்சுக்கூடங்கள் ஏற்படுத்தப்பெற்று அச்சு வித்தை பரவலாயிற்று. இங்கிலாந்தில் கி. பி. 1475-ல் காக்ஸ்டன் (*Caxton*) என்பவர் வெஸ்டுமினிஸ்டரில் முதன்முதலாக அச்சுக் கூடம் ஸ்தாபித்தனர்.

நாகரிகத்தில் மிக முற்பட்டதாகக் கருதப்படும் ஐரோப்பாக் கண்டத்தில் அச்சுவித்தையின் சரிதத்தை இதுகாறுங் கூறினேன். தமிழ் நாட்டில் இவ் வச்சுவித்தை பரவிய வரலாற்றினைப் பின்னொரு முறை விவரமாய்க் கூறுவேன்.

சென்னை அரசியல்முறை

டி. சிவராமசேதுப் பிள்ளை

தற்காலம், அரசியல் முறையைப்பற்றி எழுதுவதாயின் அதிற் பற்பல சங்கடங்கள் உள்ளன. அவைகளில் தலைமையுண்டு நிற்பன :—எதைச் சொல்லலாம்? எதை மறைக்கவேண்டும்? எதைச் சுருங்கச் சொல்லி நண்பர்கள் ஊகத்திற்கு விடவேண்டும்? என்பனபோன்ற சில. ஆகையால் நான் இங்கே எடுத்துக்கூற முயல்வது, தற்கால அரசியற்குரிய பலவேறு அங்கங்களின் அமைப்பைமட்டுமே யாகும். அதன் சீர்திருத்த விவரங்களை விரித்துரைப்பது எனது நோக்கமன்று.

நம்மவர் அரசாட்சியின் அமைப்பினை நன்குணர, நமது தேச சரித்திர அறிவு அவசியம். தமிழ்நாட்டின் பண்டைக்காலச் சரித்திர நூல்வல்லார் கூட்டத்தில் சேர்ந்து உழைக்கும் பாக்கியம் எனக்கு இல்லை. எனினும், என் அறிவிற்கு எட்டின அளவு, நம் ஆட்சி பழையகால மன்னர்கள் நாட்டிவைத்த அரசியல் அமைப்புகளுக்கு ஒட்டியுள்ளதாய்ப் புலப்படவில்லை. ஒட்டினதாய் இருப்பினும், அதன் சூட்சுமங்களை நன்குணர்தற்கு, ஆங்கில அரசு நிலைபெற்ற நாள் முதல் நம் ஆட்சித் திட்டம் எவ்வாறெல்லாம் உருமாறி வந்துள்ளது என்பதை நோக்குவது மாத்திரமே போதும் என்பது என் துணிபு.

நமது இந்திய தேசம் சுமார் 35 கோடி மாந்தர்கள் உயிர் வாழும் ஒரு பெரிய நாடு. அதன் ஒருபாகம் சென்னை மாகாணம். இந்தியதேச முழுமையும் ஒரே ஆதிபத்தியத்திலுள்ளது. இங்ஙன மிருக்க, இப்பெரும்பாகத்தில் ஒரு பகுதியாய் விளங்கும் சென்னை ஆட்சியைப்பற்றி, இந்திய ஆட்சியைவிட்டுத்தனியே பிரித்து விளக்குவது ஏலாது. நம் அரசியலின் அமைப்பு முழுவதையும் பொது நோக்காக முதலாவது அறிந்துகொள்ளுதல் வேண்டும். எனவே, இந்த இதழில் இந்திய ஆட்சியைப்பற்றி ஒருவாறு சுருங்கச் சொல்லி, பின்னர் சென்னையின் ஆட்சிமுறையை விளக்குகிறேன்.

நமது தேசத்தில் ஆங்கிலர் புரிந்துவந்துள்ள அரசாங்கத்தின் சரித்திரம், தெளிவாய் வரையறுக்கக்கூடும் மூன்று பெரும் பகுதியாய் அமைந்துள்ளது. திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் பெருந்

தொழிலே மேற்கொண்டு, உலகமெலாம் ஓடித்தேடி, கொடிநாட்டிச் சேவகம் புரிந்து, கங்கை வள நாட்டினை அதிரச்செய்த ராணுவக்கலக நிகழ்ச்சிவரை, இராச்சியம் என்ற கனவுகூடக் காணுதிருந்த காலம் ஒரு பகுதி. மாட்சிமைதங்கிய விக்டோரியா மகாராணியார், "வியாபாரம் பண்ணுவோர் பூமியை ஆள அமைந்தோரல்லர்" என்று ஆணையிடுவித்து, மேல்நாட்டுச் சீமான்களோடு நாமும் உடன்மதிக்கத் தக்கவர்கள் என்றும், சட்டம், நியாயம், கல்வி முதலியன அவர்கட்கும் நம்மவர்கட்கும் ஒரே முறையாகவே இருத்தல்வேண்டும் என்றும் கூறின காலப்பகுதி மற்றொன்று. உலகப் பெரும்போரின் பின், 1917-ம் வருஷத்தில், உலகத்தில் வாழும் மக்களெல்லாம் சகோதரர்களேயாவர் என்று முரசறைவித்து இந்திய ஆட்சி சுய ஆட்சியாகவே அமைக்கப் படவேண்டும் என்று மாண்டேகு பிரபு வற்புறுத்திக்கூறி, சர்ச்சில் முதலியோர் யாவரும் முன்பின் பார்த்து மலைத்து நிற்கும்படி செய்த காலப்பகுதி மூன்றுவது. இம்மூன்று பகுதிகளின் முக்கிய அமைப்புகளை ஒருவாறு கூறி முடித்தால் எனது சிற்றுரை முடிவுபெறும்.

வாணிகம் புரிய வந்த ஆங்கில வர்த்தகர்கள், பல சுதேச மன்னர்களுடைய அறிவாற்றற் குறைவினால் நாடு கலங்கினதைக் கண்ணுற்றார்கள். வியாபாரம் வலிபெற அமைதி அவசியம். ஆகவே கிளைவ் *(Clive)* யுத்தம் புரிந்து நாட்டை ஆங்கில வணிகர் வசம் ஆக்கினர். வணிக சங்கத்தின் அரசாட்சி தடுமாற்றத்தில் மயங்க, பிட் பிரதமர் *(Pitt)* 1784-ம் வருஷத்தில் பார்லிமெண்டு சபையின் மூலமாய் ஒரு 'நிர்வாக சங்கம்' நியமித்தார். வர்த்தகர் சங்கத்தின் நடத்தைகள் மேன்மேலும் கெடுதியுற, 1857-ம் வருஷத்தில் ராணுவக் கலகம் ஏற்பட்டது. இங்கிலாந்தில் ஆளும் அமைச்சர்கட்கு, இந்தியாவையும் தாம் நேர்முகமாய் ஆளவேண்டும் என்ற அறிவு மேலிட்டது. இதன் பயனாய் 1858-ம் வருஷம் வெளிவந்த சட்டந்தான் இந்தியாவிற்கு முதல்முதற் சட்ட முறையில் ஆட்சியொன்றை ஏற்படுத்தியது. அந்த ஆட்சியின் அமைப்பு, சற்று உற்று நோக்கத் தக்கது. பார்லிமெண்டிற்கு உத்தரவாதம் செய்பவன் 'ஒரு காரிய அமைச்சன்.' அவ்வமைச்சன் இந்தியாவை ஆளுதற்கு, அவனுக்குத் துணைபுரியும் உதவியாளர் பதின்மர். இச் சிறிய சங்கம் இந்திய நாட்டை ஆறுயிரமைலுக்கப்பால் இருந்து அரசுபுரிந்துவர ஏற்படுத்தப்பட்டது.

இந்தியாவிலோ, 1773 முதல் 1858-க்குள் ஒருமுறையான அரசியல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சென்னை, பம்பாய், வங்காளம் இவைகளுக்கு ஏனைய மாகாணங்களைப் போலல்லாமல்,

தனித்தனி அரசாங்கம் அமைக்கப்பட்டன. தலைமையாகக் கவர்னரும் அவருக்கு உதவிபுரியும் நிர்வாக சபையும் சேர்ந்து, நாட்டை அமைதிக்குக் கொண்டுவர முயன்றனர். இம்மூன்று பெரிய மாகாணங்கள் தவிர, மற்றவைகளும் நாளடைவிலே ஏற்படுத்தப்பட்டன. அவைகளின் போக்கை இந்தியா அரசினர் அக்காலம் கல்கத்தாவிலிருந்து ஓர் ஒழுங்குக்குக் கொண்டுவந்தார்கள்.

இவை யிவ்வாறாக, 1858 முதல் 1909-ம் வருஷம் வரை, இங்கிலாந்திலுள்ள சீமான்கள், இந்தியாவை அமைதிக்குக் கொண்டுவரவும் ஒரு வரையறைக்குள் அடங்கக்கூடிய ஆட்சிக்குக் கொண்டுவரவும் பலபல முயற்சி செய்தார்கள். அவற்றை விரித்தால் வளரும். ஆயினும், ஏற்படுத்தப்பட்ட கவர்ன்மெண்டின் இயல்பை ஒருவாறு சுருக்கிக் கூறலாம். எல்லாவற்றிற்கும் முடிவாக உத்தரவாதஞ்செய்பவர் லண்டனில் வெள்ளை அரங்கில் *(White Hall)* அரசாளும் இந்தியா மந்திரி. இந்தியாவில் உள்ள அரசப்பிரதிநிதி முதற்கொண்டு, கடையான கணக்கன்வரை அவர் உத்திரவிற்கு உட்பட்டவர்களே. இந்நாட்டில் அரசப் பிரதிநிதிக்கும் அவர் ஆட்சிக்கும் உட்பட்டவர் ஏனையவர். ஆனால் சட்டப்படி ஏற்பாடு இவ்வண்ணமிருப்பினும், எல்லா விஷயங்களிலும் லண்டனிலிருக்கும் அமைச்சர் தலையிடுவதில்லை. இந்தியாவில் ஆண்டு வரும் அரசாங்கத்தினருக்கு வேண்டிய சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. ராணுவ இலாகா, பொருள் இலாகா இவ்விரண்டின் கடைசி முடிவு மாத்திரம் ஆங்கில அமைச்சர் கையில் அமைந்திருந்தது.

1909-ம் வருஷம் மார்லி பிரபு—ஆங்கில பாஷையில் என்றும் அழிவில்லா அழகிய வசன நடையில் பல விஷயங்களை அமைத்திட்ட பெரியார்—இந்தியர்களையும், ஆங்கில உத்தியோகஸ்தர்களுடன் சேர்த்து அவர்கள் சொல்லுவதைக் காதினாலாவது கேட்டருளல் நியாயம் என்று எண்ணி, சட்ட சபை நியமித்தார். அவருக்குமுன் டல்ஹௌசி பிரபுவும், இன்னும் சில பிரபுக்களும் சிற்சில வழிகளில் இந்தியர்களைக் சேர்த்துக்கொண்டது உண்டு. ஆனால் இந்தியா என்று சொல்லப்படும் ஒரு பெரிய தேசத்தில் ஆங்கிலர்கள் மாத்திரம் செல்வம் சேர்ப்பது முக்கிய கடமையல்லவென்றும், இந்தியர்களென்ற ஒரு பெருங் கூட்டத்தார் 'எங்கள் நாடு எங்களுக்கே' என்று கூக்குரல் இடுகிறார்கள் என்றும் கவனித்து, பார்லிமெண்டு முதல் முதல் இந்தியா ஆட்சியைக் கவனிக்கத் தொடங்கினது மார்லியின் முயற்சியாலே தான். மார்லியின் சட்டமே, நம் நாட்டிற் சட்ட சபைகளுக்கு அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்தல் அவசியம் என்றும், இந்தியர்களும் சர்க்கார் ஊழி

யத்தில் அதிகமாகப் பங்கு கொள்ளவேண்டும் என்றும் ஒருவாறு ஒத்துக்கொண்டது. ஆனால் ஆட்சிப் பொறுப்பு ஆங்கிலருடையதே. வேலை செய்ய இந்தியர்களை அரசாங்க உத்தியோகங்களில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமே யன்றி மற்றப்படி அவர்களுக்குப் பொறுப்பளித்தல் இந்திய தேசத்திற்கு ஒருகாலும் பொருந்தாது என்று மார்லி வற்புறுத்தினர்.

இதன்பிறகுதான் 1914-ம் வருஷத்தில் அதுவரை உலகம் கண்டிராத பெரும்போர் நிகழ்ந்தது. அதில் இந்தியர்கள் செய்த உதவியாலும், மேல்நாட்டின் உயிரையும் மானத்தையும் காப்பாற்றின வீரத்தாலும் மனமுவந்து, இவ்வகை உதவியையும் வீரத்தையும் கண்டு இந்தியதேச முழுவதிலும் பொங்கியெழுந்த களிப்பையும் உற்றுக்கவனித்து, இந்தியர்களிடத்தில் மிக்க அன்பு பூண்டவராய் மாண்டேகு பிரபு 1917-ம் வருஷத்தில் சீர்திருத்தம் ஒன்று செய்தார். இது நம் ஆட்சியின் அமைப்பிற்கு மிக முக்கியமான பத்திரமாகையால், அடுத்த இதழில் வகுத்துரைக்க நேயர்கள் விடை கொடுக்கவேண்டும்.

(தொடரும்)

சங்கராந்திதேவன் பிறந்த நாள்

கார்க்கியர்

வானூரில் சூரியனுர் மாளிகையில் சங்கராந்திதேவன் பிறந்த நாள் உற்சவம் தைமாதம் முதல் தேதியில் கொண்டாடப் போவ தாயும் அன்று அவன் உடன்பிறந்தார்கள் பன்னிருவர்களும் தங்கள் மனைவி மக்களுடன் அங்கு வந்திருப்பார்களென்றும் அக்காட்சி அதிக விநோதமாயிருக்குமென்றும் கேள்விப்பட்டு அங்குச் சென் றேன். மாளிகையில் நுழைந்து கொஞ்ச தூரம் சென்றபின் ஒரு பெரிய மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். அதன் நடுவில் கரும்புக்கால்களைத்துச் செவ்வந்திப் பூவினுல் பந்தல் போடப்பட்டிருந்தது. அதில் மஞ்சள் இஞ்சிக்கொத்துகள் முதலி யவை தோரணமாகக் கட்டப்பட்டிருந்தன. அப்பந்தலின் கீழ் வெண்பட்டுடுத்து மலர்மாலை யணிந்து சங்கராந்திதேவன் வீற்றி ருந்தான். அவன் செவிகளில் மகரகுண்டலங்கள் தொங்கிக்கொண் டிருந்தன. அருகில் அவன் மனைவி மகரந்தி என்பவள் மாந்தளிர் போன்ற நிறமுடையவளாய் நின்றுகொண்டிருந்தாள்.

அவ்விருவர்களைச் சுற்றி உடன்பிறந்தார்கள் தங்கள் பரிவாரங் களோடு தனித்தனியா யிருந்தார்கள். அவர்களைக் காணவேண்டி வலமாகச் செல்லுகையில் முதலில் ஒருவரைக் கண்டேன். 'நரை திரை யுடன் மூப் பொரு வடிவு' கொண்டாற்போல அவர் உட்கார்ந்திருந் தார். அவர் வெண்ணிறச் சால்வை போர்த்துக் குளிரினுல் உடல் நடுங்கிக் கொண்டிருந்தார். அவர் மனைவியாகிய ஆதிரையாள் தட்டிற் களியும் எழுகறியும் ஏந்தி நின்றுள். அவர்களைச் சூழ்ந்து நின்ற மக்க ளிற் சிலர் கையில் பொங்கல் வைத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந் தார்கள்; பின்னுஞ் சிலர் உபவாஸத்தால் மெலிந்திருந்தார்கள்.

அவர்களைக் கடந்து செல்ல, அங்கு முருகனென அழகு வாய்ந்த ஒருவர் கையில் வேல் பிடித்திருந்தார். அவர் மனைவி கிருத்திகாம் பாள் ஒரு தட்டிற் பொரி உருண்டையையும் மற்றொரு தட்டில் விளக்குகளையும் வைத்து நின்றுள். அவர்களுடைய மக்களனைவரும் மிக்க களிப்புடன் வாணங்களைக் கொளுத்திக்கொண்டும் உலர்ந்த சருகு முதலியவைகளை எரியவிட்டுக்கொண்டும் இருந்தார்கள்.

அவர்களைத் தாண்டிச் சென்றவுடன் ஒருவர் மங்களஸ்நானம் செய்து புது வஸ்திரமணிந்து நெற்றியிற் சந்தனமிட்டு அதன்மேற்

குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டிருந்ததைக் கண்டேன். அவ ரருகில் அவர் இல்லாள் ரேவதியம்மாள் புதுப்பட்டுடுத்துப் பலகா ரங்களை வைத்த தட்டொன்றை ஏந்தி நின்றாள். அவர்களைச் சுற்றி லும் பலர் அநேக வெடிகளைக் கொளுத்தி எறிந்து கொண்டிருந்தார் கள். சிலர் மழையினால் நனைந்தவர்களைப்போல் ஈர வஸ்திரத்தோ டிருந்தார்கள்.

அவர்களை விட்டுச் சென்றேன்; அப்புறம் ஒருவர் பன் னிரு திருநாமமணிந்து பட்டுக்கரை வேஷ்டி கட்டிக்கொண்டு உட் கார்ந்திருந்தார். அவர் மனைவி கன்னியம்மாள் கையில் மாவிளக் கேற்றி வைத்திருந்தாள். அவர்களைச் சூழ்ந்திருந்தவர்களிற் சிலர் வேத பாராயணம் பண்ணிக்கொண்டும், சிலர் ராமாயண பாரா யணம் பண்ணிக்கொண்டும் இருந்தார்கள். பின்னும் சிலர் அம்பி கையை வைத்துப் பூஜை செய்துகொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் விளக்கேற்றி வைத்து அதைப் பூஜித்துக் கொண்டிருந்தனர்.

பின்னர்ச் சிறிது தூரம் சென்றேன்; அங்கே ஒரு வேதியர் ஹோமம் செய்து கொண்டிருந்தார். அவர் மனைவி சிங்கம்மாள் அருகில் தருப்பையை அவர்மீது படும்படி பிடித்து நின்றாள். அவர் களைச் சுற்றியுள்ள யாவரும் வேதமோதினர். சிலர் மோதகங்களை யும் சிலர் சீடை முறுக்கு அவல் முதலிய தின்பண்டங்களையும் தின்றுகொண்டிருந்தார்கள்.

அதற்கப்பால் ஒருவர் கறுத்த மேனியும் வியர்த்த முகமுமாய்க் கையில் விசிறி வைத்து விசிறிக்கொண்டே உட்கார்ந்திருந்தார். அவர் பார்வையிலிருந்து ஆஷாட பூதியோவெனத் தோற்றிற்று; கோடைகாலத்து மேகம் கர்ச்சிப்பதேயன்றி மழை பெய்யாதிருக்கு மாபோல் அவர் பார்வைக்குத் தயாளுவாகத் தோன்றினாலும் கடுமை யானவரென்று தெரியவந்தது. அவர் மனைவி பூர்ணம்மாள் ஆகாய வர்ணமான புடைவை யுடுத்துக் கறுத்த விழிகளில் மையிட்டுக் கையில் உண்டிவகைகளை வைத்திருந்தாள். அவர்களுடைய மக்க ளெல்லாம் வெயிலால் மெலிந்த மேனியராய்ச் சோர்ந்திருந்தார்கள்.

அதற்கப்பால் மணக்கோலங்கொண்ட தம்பதிகள் சேர்ந்துட் கார்ந்திருந்தார்கள். அவர்களைச் சூழ்ந்திருந்தவர்க ளெல்லோரும் நல்விருந்துண்டுகொண்டிருந்தார்கள். மற்றவிடங்களைக் காட்டி லும் இவ்விடத்தில் மக்கள் அதிகமாக இருந்தார்கள். சிலர் சந்தனம் பூசிக்கொண்டும் சிலர் தாம்பூலம் போட்டுக்கொண்டும் இருந்தார்கள்.

அப்பால் விசாகப்பெருமாளென விளங்கும் ஒருவர் மணம் பொருந்திய மாலையணிந்து வீற்றிருந்தார். அவருக்கு அருகில்

வஸந்தை கையில் தயிரன்னம் வைத்துக்கொண்டும் விசிறியினால் வீசிக்கொண்டும் நின்றனள். பக்கத்திலிருந்தவர்களிற் சிலர் சித்திரான்னம் சாப்பிட்டுக்கொண்டும் சிலர் நீர்மோர் குடித்துக்கொண்டும் சிலர் பானகம் அருந்திக்கொண்டும் விடாயாற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஆதைக் கடந்து செல்லவும் அஜமகாராஜனைப்போல அலங்கார வேடத்துடன் ஒருவர் உல்லாஸமாய் அமர்ந்திருந்தார். அவர் பக்கத்தில் அவர் மனைவி, 'சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தது போல்' சித்திரா வென்னும் தன் பெயருக்கிசைந்தபடி சித்திரவேலையமைந்த பட்டுடுத்திக் கையிற் பலவகைப் பழங்களை யேந்தி நின்றாள். சுற்றி யிருந்தவர்களிற் சிலர் மாம்பழமும் சிலர் பலாச்சுளையும் சிலர் வாழைப்பழம் முதலிய பழவர்க்கங்களையும் புசித்துக்கொண்டிருந்தனர்.

அதற்கு அப்புறம் பங்குனியுத்திர நாளிற் கூடியிருக்கும் பார்வதியும் பரமேசுவரனும் போன்ற இருவர் ஏகாதனத்தில் வீற்றிருந்தார்கள். அவர்களைச் சூழ்ந்து 'பங்குனி மலர்ந்தொளிர் பலாச' வனத்தைப்போல் செந்நிற மயிரையுடைய மக்கள் வீற்றிருந்தார்கள். அவர்களிற் சிலர் கையிற் காரடை வைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அதன் பிறகு பனி மூடிய மலைபோல் நீறு பூசிய மேனியராய்த் தவவேடங்கொண்ட முனிவரொருவர் வீற்றிருந்தார். அவர் மனைவி ஈசுவரனுக்கு அபிஷேகத்திற்கு வேண்டிய பொருள்களையும் நிவேதனங்களையும் ஏந்தி நின்றாள். உடனிருந்த மக்களிற் சிலர், 'சிவராத்திரிப் போது கண்டுயிலோம்' என்ற விரதியர்போல் ஆடியசைந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

அப்பால் சங்கராந்திதேவனது இடப்பக்கத்தில் மகரவேலையரசனென நீனிறமேனியரொருவர் வெண்ணுரை போன்ற ஆடை போர்த்து வீற்றிருந்தார். அவர் மனைவி தைலம்மாள் சங்கராந்திதேவனுக்கு உபசாரம் செய்யவேண்டிய பண்டங்களோடு சர்க்கரானம் முதலிய நிவேதனங்களை ஏந்தி நின்றாள். பக்கத்திலிருந்தவர்களிற் சிலர் கரும்பு தின்றுகொண்டும் சிலர் பழங்கள் சாப்பிட்டுக் கொண்டும் இருந்தார்கள்.

இவ்வுற்சவத்தைக் கண்டவுடன், இப்பன்னிருவரும் வருஷத்திலுள்ள பன்னிரண்டு மாதங்களுக்கும் அதிதேவதைகளோ வென நினைத்தேன்; அவர் மக்கள் அம்மாதங்களின் தினங்களெனவும் தெரிந்துகொண்டேன்.



வி. விசாலாக்ஷியம்மாள்

முன்னுரை

மாதர் பகுதி என்றால் என்ன ?

நகையையும், புடைவையையும், பாத்திரங்களையும், பக்ஷண வகைகளையும் பற்றிய குறிப்புகள் முக்கியமாய்ப் பெண்கள் படித்தற் குரியன என்பது சிலர் கொள்கை ; இவைகளைப்பற்றிய நவநாகரிகக் குறிப்புகளே, அநேக பத்திரிகைகளில் வெளியாகின்றன. "வித்தை யைப் படிப்பியுங்கள்—தயவு செய்து வித்தையைப்படிப்பியுங்கள். பாட மாட்டோமோ—வீணை மீட்டோமோ ?" என்று பெண்கள் கூறுவதாக வேதநாயகம் பிள்ளை பாடிப் பல வருஷங்களாயின. பெண்கல்வி, சங்கீதம், ஸ்திரீ சுதந்திரம் முதலிய விஷயங்களைப் பற்றி, மாதர்பகுதியில் எழுதுவதே சரி என்பார் சிலர். அழகுப் பரிசு பெற்ற மங்கையரின் படங்களைப் பிரசுரம் செய்யும் பத்திரிகை கள் பல உண்டு ; அரசாங்கத்தில் தலையிட்டு மேன்மைபெற்ற கிழவி களின் படங்களைப் பிரசுரம் செய்யும் பத்திரிகைகளும் உண்டு. மாதர்பகுதிக்குரிய விஷயம் இதுதானென்று இங்கிலீஷ் பத்திரிகை களிலுங்கூட ஸ்திரப்படவில்லை. நம் நாட்டிலோ, வம்புப்பேச் சொன்று தவிர வேறொரு பொதுவிஷயமும், பெண்களுக்குச் சார மாகத் தோன்றுது என்று நினைப்பார் பலர் ; கலைமகள் பெண்ணல் லவோ என்று பெண்பாலைச் சிறப்பித்துக் கூறுவாரும் உண்டு. பெண்கள் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் எவை? பெண்கள் விரும்புவது எது? என்பன பெருங்கேள்விகள். இவற்றிற்குப் புருஷர் கூறும் பதில்களைவிட்டுப் பெண்கள் கூறும் பதில்களையே எடுத்துச் சொல்லுகிறேன்.


பெண்களுக்கு எல்லா விஷயங்களும் தெரிந்திருக்கவேண்டும். குழந்தைகளைப் பேணுதல், குடித்தனப் பாங்கு, அலங்காரம்

முதலியன முக்கியமாய் அவர்களுக்குரியன ; சாஸ்திர ஞானத்திலும் உலகவியவகாரத்திலும் அவர்களுக்கு வேண்டாத விஷயம் ஒன்று மில்லை. பரத்தைமைத் தொழிலில், கேவலம் பொருள் சம்பாதிப் பதற்கு, மாதர் தெரிந்த கொள்ளத்தக்கவை, " . . . சுந்தரச்சுண்ண மூம் தூரீராடலும் . . . வட்டிகைச் செய்தியும் மலராய்ந்து தொடுத்தலும் . . காலக்கணிதமும் கலைகளின்றுணிவும்" . . . இன்னும் பலவுமென்று, மாதவியின் தோழி அவளிடம் சொன்னதாகக் கதை சொல்லுகிறது. "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்ற சிறப்பிற்குரிய கற்புடை மாதர் அறியவேண்டாத விஷயம் ஒன்று மில்லை. எழுத்தறியாத ஒரு கிழவி, வெகு சாமர்த்தியமாய்ச் சுமார் முப்பதுபேருள்ள குடும்பத்தின் தலைமையை வகித்தவள், தன் பேத்திக்கு அடிக்கடி புத்திமதி சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன். "களவும் கற்று மற" என்பதே அவளுடைய உபதேசம். அந்தப் பழமொழிக்கு வெகு சாரமாய் அவள் வியாக்கியானம் செய்வதுண்டு.

பெண்கள் விரும்புவது எது ?

அழகென்பார் சிலர் ; சம்பத்தென்பார் சிலர். இதைப்பற்றி ஒரு கதை நினைவுக்கு வருகிறது. முன் காலத்தில், ஒரு வீரன், ஏதோ அரசாணையை மீறி மரணதண்டனைக்கு உட்பட்டானும் ; அப்பொழுது, அரசன் மனைவி, அவன் விதிக்கிரங்கி, அவனுக்கு ஒரு வருஷத் தவணை கொடுக்கும்படிக்கும், அதற்குள் எல்லா மாதர்களின் முதல் விருப்பம் எது என்ற கேள்விக்கு அவன் சரியான உத்தரம் சொன்னால் அவனை மன்னித்து விடும்படிக்கும் அரசனைக் கேட்டுக் கொண்டாளாம். அரசன் இதற்குச் சம்மதித்துவிட்டான். வீரன் தான் கண்ட பெண்களை யெல்லாம், இந்தக் கேள்வியைக் கேட்டான். ஒவ்வொருத்தி சொன்ன பதிலின் உண்மையையும் மற்றொருத்தி மறுத்து விட்டாள். அவன் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தான். அப்பொழுது ஒரு குரூபி, தன்னை அவ் வீரன் மணந்து கொண்டால், தான் சரியான விடை கூறுவதாகச் சொன்னாள். அப்படியே ஒப்பந்தமான பின், அவள் விடை கூறினாள். அதைக்கேட்ட பெண்பாலருள் யாரும் அதன் உண்மையை மறுக்க முடியவில்லை. அவளால் வீரன் உயிர்ப்பிச்சை பெற்றான். வாக்கு மாறுமல், அவளை விவாகம் செய்து கொண்டான். பிறகு மந்திர பலத்தால் அவள் அழகு பெறவே, இருவரும் சுகமாய் வாழ்ந்தார்கள் என்பது கதை. அவள் கூறிய விடையாவது: எல்லாப் பெண்களுக்கும் முதல் விருப்பம், தமக்குப் பிறர் மேல், முக்கியமாய்ப் புருஷர் மேல் அதிகாரம் (செல்வாக்கு) வேண்டு மென்பதே ! அழகாலும், அலங்காரத்தா

லும், சாதுரியத்தாலும், கல்வியாலும், குணத்தாலும், அன்பாலும் பெண்கள் மேம்பாடடைந்து, தம் சக்தியை உலகத்தில் நிலவச்செய்கிறார்கள்; புது வித ஊறுகாய், கூந்தலை வளர்க்கும் விதம் இவை முதல், ஸோவியத் ருஷியாவில் பெண்களின் தீரத்தால் தேசத்துக் கேற்பட்ட நன்மைகள் வரை எனக்குச் சாரமாகத்தோன்றும் விஷயங்களையெல்லாம், இந்த மாதர் பகுதியில் எழுதிப்பார்க்கலாம் என்று உத்தேசிக்கிறேன்.



மீன்கள்

சி. கே. லக்ஷ்மி அம்மாள்


முன்னுரை

மூன்று தினங்களாக நல்ல மழை பெய்தது; இப்பொழுது பளிச்சென்று சூரிய வெளிச்சம் பிரகாசிக்கிறது. இருந்தாலும், நல்ல மழை பெய்ததின் அடையாளம் நாலாபக்கமும் காணப்படுகிறது; வயல்களிலும், தாழ்ந்த நிலங்களிலும் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இப்படித் தேங்கியிருக்கும் ஒரு குட்டையின் அருகே போய், அந்த நீரைக் கவனிப்போம். அதில் சிறு ஜந்துக்கள் நீந்தி விளையாடுவதை நாம் பார்க்கலாம். இவைகள் சிறிய மீன்கள். இந்த மீன்களை விளையாட்டுக்குப் பிடித்துக் குழந்தைகள் சில வேளைகளில் கொன்றுவிடுவார்கள். சிறிய மீன்கள் தண்ணீரில் நீந்தி விளையாடுவது, பார்வைக்கு வேடிக்கையாக இருக்கும்.

மழைத் தண்ணீர் தேங்கி உண்டான குட்டைகளில் மிகவும் சிறிய மீன்களே இருக்கும். எப்பொழுதும் தண்ணீர் உள்ள குளங்களிலும் ஆறுகளிலும் பெரிய மீன்கள் வசிக்கும். மீன்களில் பல வகைகள் உண்டு. சில தட்டையாக இருக்கும்; சில உருண்டையாக இருக்கும்; சில மீன்களுக்கு எலும்புகள் கிடையா; மீன்கள் பல வர்ணங்களில் இருக்கும். சிறு பிள்ளைகள் எப்பொழுதும் ஓடிக் குதித்துக்கொண்டே இருக்கிறார்கள் அல்லவா? மீன்களும் தண்ணீரில் நீந்தியும், விளையாடியும், துள்ளிக்கொண்டும் இருக்கும். சில வேளைகளில் எல்லாவற்றையும்விடப் பெரிய மீன் ஒன்றைப் பார்க்கலாம். இது தாய்மீன். தன்னைச்சுற்றிப் பல குஞ்சுகள் வர, இது ஜலத்தில் மெதுவாக நீந்தும். மனிதர், மிருகங்கள், பறவைகள், மரம், செடிகள் இவைகளுக்கெல்லாம் பூமிதான் இருப்பிடம்; அதுபோல் தண்ணீர்தான் மீன்களுக்கு வசிக்குமிடம்.

நாம் சமுத்திரக்கரை ஓரமாக நடந்து போகலாம், வாருங்கள். சமுத்திரத்தையும், அதில் எழும்பும் அலைகளையும் பார்க்கும்

போது நமக்குச் சந்தோஷமாக இருக்கிறது. சில நண்டுகளைத தவிர, வேறு ஒரு பிராணியும் நம் கண்களுக்குத் தென்பட வில்லை. ஆனால், லக்ஷக்கணக்கான மீன்கள் சமுத்திரத்தில் வசிக் கின்றன. இவைகள் அநேக வர்ணங்களாயும், அநேக வகைகளா யும் இருக்கின்றன. இவைகளில் சில மிகவும் பெரியனவாக இருக்



கின்றன. இவ்வளவு பெரிய ஜந்துக்களை நிலத்திற் காண்முடியாது. மீன் காட்சிச்சாலைகளிற் பல வகையான மீன்களைப் பிடித்து வைக் கிறார்கள். அவைகளைப் பார்ப்பதற்கு ஜனங்கள் போகிறார்கள். மீன் காட்சிச்சாலையில் உள்ள பலவர்ணமான மீன்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

முக்கிய குணாதிசயங்கள்

மீன்கள் முதுகு எலும்பு உள்ள பிராணிகளிலே கீழ்வகுப்பைச் சேர்ந்தவைகள். மற்றைப் பிராணிகளுக்கும் மீன்களுக்கும் ஒரு முக்கிய பேதம் உண்டு. மீன்களால் பூமியில் ஜீவித்திருக்க முடியாது. சிறிது நேரத்துக்குமேல் தண்ணீரில் மூழ்கி இருக்க நேரிட்டால், மூச்சுத் திணறி நாம் இறந்து விடுவோம் அல்லவா? அப்படியே மீன்கள் சிறிது நேரத்துக்குமேல் பூமியில் இருந்தால் இறந்துவிடும். சமுத்திரத்தில் வலையை வீசி, அநேக மீன்களைப் பிடித்து, அவைகளைக் கரையில் செம்படவர்கள் கொட்டுவார்கள். அப்பொழுது அந்த மீன்கள் மூச்சுவிட முடியாததனால் வாயைப் பிளந்து, பிறகு இறந்துவிடுவதை நாம் பார்க்கலாம்.

மீனின் ஒவ்வோர் உறுப்பும் தண்ணீரில் வசிப்பதற்குச் சௌகரியமாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. மற்ற ஜந்துக்களுக்கு இல்லாத ஓர் உறுப்பு மீன்களுக்கு உண்டு. இவைகளுக்கு மீன்சிறகு என்று பெயர். இவைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். முதுகின் மத்தியிலும், வயிற்றிலும், வால் ஓரத்திலுமாக இருக்கும் சிறகுகள் ஒருவகை. நிலத்தில் வசிக்கும் ஜந்துக்களுக்கு உள்ள முன்னங்கால்கள் பின்னங்கால்களுக்கு ஒப்பாக, ஜதை ஜதையாக இருக்கும் சிறகுகள் மற்றொருவகை.

நிலத்தில் வசிக்கும் ஜந்துக்களுக்கு உடம்பெல்லாம் மயிர் மூடிக்கொண்டிருக்கிறது. மீன்களுக்குச் செதில் மூடி இருக்கும். காளாங்கொளுத்தி (மாகரீல்), கவலை (ஸார்டின்) முதலியன செதில் மூடின இனத்தைச் சேர்ந்த மீன்கள். திருக்கைமீன், சுறா மீன் இவைகளின் உடம்பு வெற்றுடம்பாக இருக்கும். நண்டு, பெரிய இறால் மீன் முதலிய வேறு சில மீன்களுக்கு, சிப்பி அல்லது ஓடு உடம்பெங்கும் மூடி இருக்கும்.

நிலத்தில் வாழும் ஜந்துக்களுக்கும் மீன்களுக்கும், இன்னும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. சுவாசிப்பதற்கு, நுரையீரலுக்குப் பதிலாக, தண்ணீரில் உள்ள வாயுவை இழுக்கக்கூடிய கில்ஸ் என்ற சுவாச உறுப்பு மீன்களுக்கு இருக்கிறது.

மீன்களுக்கு ஒரு விநோதமான சக்தி உண்டு. சுற்று நிலைக்குத் தக்கபடி தங்கள் நிறத்தை இவைகள் மாற்றிக்கொள்ளும். பாறைகளின் அருகில் இருந்தால், கல்லின் நிறத்தை ஒத்தாற்போல் ஒருவிதத் தவிட்டு நிறமாக மீன்கள் மாறிவிடும். நடுச்சமுத்திரத்தில் கருநீல நிறம் எடுத்துக்கொள்ளும். பின்னும், இருக்கும் இடத்துக்கு ஏற்ற நிறத்தை மாற்றிக்கொள்ளும். இப்படிச் சுற்று நிலைக்குத் தக்கபடி

நிறத்தை மாற்றி, எதிரிகள் கண்ணுக்குப் புலப்படாமல் மீன்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும். இவ்விதம் நிறம் மாறுதவற்குத் தற்காப்புநிறம்மாறல் என்று பெயர். நிலத்தில் வாழும் சில ஜந்துக்களும் இவ்விதம் நிறம் மாறுவதுண்டு. ஆனால் மீன்களிடந்தான் இந்தச் சக்தி விசேஷமாகக் காணப்படுகிறது. நிறம் மாறி இப்படிக் காத்துக்கொள்ளாவிட்டால் சிறிய மீன்களை எல்லாம் பெரிய மீன்கள் இரையாக விழுங்கி விடும். இந்த வர்ணங்கள் மீன்களின் தோலின் கீழே சிறிய பைகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன. சதையின் உதவியால் இவைகளைக் குறுக்கியும் விரித்தும், இஷ்டப்படி மீன்கள் நிறம் மாறும். ஸெபியா என்ற ஒருவித மீனுக்கு மைபோன்ற திராவகம் நிறைந்த பை ஒன்று இருக்கிறது. பகைவன் அருகில் வந்தவுடன் அந்த மையை அது தண்ணீரில் கொட்டிவிடும்; ஜலம் தெளிவதற்குள் ஓடி ஒளித்துக்கொள்ளும். இந்திரதனுசில் உள்ள எல்லா வர்ணங்களையும் சில மீன்களின்மேல் பார்க்கலாம்.

சிறகு

ஆகாயத்தில் பறக்கவும் கீழே விழாமல் இருக்கவும் பறவைகளுக்கு இறகுகள் உதவுகின்றன. தண்ணீரில் நீந்தவும், திரும்பவும், சமமாக மிதக்கவும் சிறகுகள் மீன்களுக்கு உதவுகின்றன. ஒரு மீனின் ஒரு பக்கத்துச் சிறகுகளை நறுக்கி, அதை மறுபடியும் தண்ணீரில் போட்டு விடுவோம்; இப்பொழுது அதனால் சமமாக மிதக்க முடியவில்லை; அது சிறகு உள்ள பக்கமாகத் திரும்புவதை நாம் பார்க்கலாம்.

மீன்கள் சிறகுகளின் உதவியால் சுமார் ஆறடி தூரம் வரையில் தண்ணீரைவிட்டுக் காற்றிற் செல்லமுடியும். பறக்கும்மீன் என்ற ஒருஜாதி மீன் இருக்கிறது. இதன் சிறகுகள் இரண்டு பக்கத்திலும் இறகுகள்போல் பெரிதாக வளர்ந்திருக்கும். இந்த மீன் ஒரே தடவையில் 500 அடி தூரம்வரையிற் பறந்துபோகும். மணிக்குப் பத்துமைல் செல்லும் கப்பலைவிட வேகமாக இது சில வேளைகளிற் பறக்கும். ஆனால் பறவைகளின் இறகுகளுக்கும், மீன்களின் சிறகுகளுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு. பறவைகளால் இறகுகளை அடித்து, அந்த வேகத்திலல் பறக்க முடியும். மீன்சிறகுகள் காற்றில் அசைந்து கொடுப்பதில்லை. குடைபோல் மீனைக் காற்றில் தாங்கமட்டுமே செய்யும்.

ஜதை ஜதையாக இருக்கும் சிறகுகள் சில வேளைகளில் விரல்போல் நீண்டிருக்கும். இவைகளின் உதவியால் மீன்கள் தொட்டு

உணர்ந்துகொள்ளும். மேலும் நீரின்கீழே தரைமட்டத்தில் ஊர்ந்து செல்லுவதற்கு இவைகள் உபயோகமாகின்றன. சமுத்திரத்தின் தரைமட்டத்தில் வசிக்கும் மீன்களுடைய சிறகுகள் இப்படி நீண்டு இருக்கும். சில மீன்களுடைய மோவாய்க்கட்டை, தாடைச் சிறகுகளும் இப்படி இருப்பதுண்டு.


சில மீன்களின் சிறகுகள் நன்றாக வளர்ந்திருக்கும்; சில சிறியனவாகவே இருக்கும். அநேகமாகச் சிறகுகள் மெல்லிய கெட்டியான எலும்புகளால் அமைக்கப்பட்டிருக்கும். வாத்து, தவளை இவைகளின் கால்களில் இருப்பதுபோல் சிறகுகளின் இடையே மெல்லிய தோல் ஒட்டிக்கொண்டிருக்கும். சாதாரணமாகச் சிறகுகள் பார்வைக்கு விரித்த விசிறிபோல் இருக்கும். காளாங்கொளுத்தி (மாகரீல்), கவலை (ஸார்டின்), கெளுத்தி (காட்மீன்) இவைகளின் சிறகுகள், உடம்பின் இருபக்கமும் மூடின விசிறிபோல் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுறுமீன், நாய்மீன் இவைகளுடைய சிறகுகள் தடித்துச் சதைப்பற்று உள்ளனவாக இருக்கும். பொட்டுமீனின் சிறகுகளில் அழகிய பொட்டுக்கள் அமைந்திருக்கும். வண்ணாப் பூச்சிமீனின் சிறகுகள் பார்வைக்கு வண்ணாப்பூச்சியின் இறகுகள் போல் இருக்கும். சிலவிதத் தட்டைமீன்களுடைய சிறகுகள் ஒழுங்காக ஜதையாக இருப்பதில்லை; அவை உடம்பு எங்கும் அமைக்கப்பட்டிருக்கும்.

சில மீன்களுடைய வாலின் சிறகு பிளவுபட்டு இரண்டாக இருக்கும். சில ஒன்றாகவே இருக்கும். சில மீன்களின் வாலின் சிறகு பகைவர்களுடன் சண்டைபோட ஆயுதமாக உபயோகப்படுகிறது. மனிதர் நிறைந்த பெரிய படகுகளைக்கூட, திமிங்கிலம் போன்ற மிகவும் பெரிய மீன்கள் தங்கள் வாலினால் தூக்கிக் கவிழ்த்துவிடும். சுறுமீன், நாய்மீன் இவைகளுடைய வாலின் சிறகு, சதை திரண்டு தட்டையாகவும் சிறிது நீண்டும் இருக்கும். திருக்கை மீன் வாலின் சிறகு உருண்டையாகவும் கடினமாகவும், 3 அல்லது 4 அடி நீளமுள்ளதாகவும் இருக்கும். திருக்கைமீன் வாலின் சிறகில் ஒரு விசேஷம் உண்டு. ஒரு விஷமுள் எலும்பு அதில் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த மீன் அந்த முள்ளினால் பகைவர்களைக் குத்திவிடும். கை கால்களினால் நாம் நம்மைக் காத்துக் கொள்ளுகிறோம். மீன்களுக்கு இந்த முள் எலும்புகளைத் தற்காப்புக்குச் சுவாமி கொடுத்திருக்கிறார். சில மீன்களின் வாயின் அருகில் இருக்கும் மீசை போன்ற மெல்லிய முள் எலும்புகளும் இதைச் சேர்ந்தனவே.

செவுள் அல்லது சுவாசக் கருவி

செவுள்கள் மூலமாகவே மீன்கள் மூச்சு விடும். செவுள் பார் வைக்கு சுருக்குப்பிடித்தாற்போல் இருக்கும். ஒரு பக்கத்துக்கு நாலு செவுள் இருக்கும். பின் பக்கம் துவாரம் உள்ள செவுள் மூடி இவைகளை மூடிக்கொண்டிருக்கும். வாயினுல் ஜலத்தை இழுத்து, அதைச் செவுள் அறைகளுக்கு மீன் அனுப்பும். அங்கு, ஜலத்தில் உள்ள நல்ல காற்றுனது இரத்தக் குழாய்களால் கிரகிக் கப்படும். கெட்டகாற்று வெளியே விடப்படும். இப்படியாக மீன்கள் செவுள்களால் மூச்சு விடுவதைக் குமிழ் அடிப்பது என்று சொல்லுவார்கள்.

(தொடரும்)



மனித உடலிலுள்ள ரஸாயனப் பொருள்கள் :—சமீபகாலத்துக்கு முன்பு காக்ஸ்டன் ஹாலில் பிரசங்கம் செய்த டாக்டர் தாமஸ்லாஸன் என்பவர் மனித உட்லிலுள்ள இரசாயனப் பொருள்களைப்பற்றிப் பின் வருமாறு கூறினர். 'மனிதனுடைய உடலானது சராசரி 140 பவுண்டு கனமுள்ளது. அதில் காணப்படும் இரசாயனப் பொருள்களைக் கடையில் வாங்கினோமானால் ஐந்து ஷில்லிங்குக்கு வாங்கலாம். மனிதனுடைய உடலில் சுமார் 10 காலன் ஜலம் இருக்கிறது ; 7 ஸோப்புக்கட்டிக்குப் போதுமான கொழுப்பு இருக்கிறது ; 9000 காகிதப்பென்சிலுக்குப் போதுமான கரிப் பொருள் இருக்கிறது ; 2200 தீக்குச்சிகளுக்குப் போதுமான பாஸ்பரஸ் இருக்கிறது ; ஒரு வேளை மருந்துக்குப் போதுமான மக்னீசியம் இருக்கிறது ; ஓர் ஆணி செய்வதற்கு வேண்டிய இரும்பு இருக்கிறது; ஒரு கோழிக் கூட்டுக்கு அடிக்கப்போதுமான சுண்ணாம்பு இருக்கிறது; ஒரு நாயின் மீதுள்ள உண்ணிகளைத் தொலைப்பதற்குப் போதுமான கந்தகம் இருக்கிறது. ஆக மொத்தம் விலை சுமார் ஐந்து ஷில்லிங்.' நமது நாட்டினர் ஆங்கிலேயரைக் காட்டிலும் உடலளவிலும் கனத்திலும் குறைந்தவர்கள். ஆதலால் நம் தேசத்தாருடைய உடலிலுள்ள இரசாயனப் பொருளின் விலை இன்னும் குறைவு.

அ.

மிருகங்களின் கர்ப்பகால அளவு:—பூனை—50 நாள் ; நாய்—60 நாள் ; பன்றி—115 நாள்; ஆடும் வெள்ளாடும்—150 நாள்; பசு—285 நாள்; எருமை—310 நாள்; குதிரை—345 நாள் ; கழுதை—380 நாள்; யானை—615 நாள் என்று பி. எஸ். பார்த்தஸாரதி ஐயங்கார், சுதேசமித்திரன் வாரப்பதிப்பில் எழுதுகிறார்.

டில்லி எருமை:—'உலகிலுள்ள எல்லா எருமைகளிலும் டில்லி எருமையே மிகவும் பெரியது. அதிகப் பால் கொடுப்பது. ஒவ்வோர் எருமையும் சுமார் 1000 பவுண்டு எடை இருக்கும். டில்லி எருமை நம் எருமைகளைப் போல் இருப்பதில்லை. இதன் கொம்புகள் ஆட்டுக்கிடாயின் கொம்புகளைப் போல் சற்றுச் சுருண்டு வளைந்திருக்கும். சிற்சில நேரங்களைப் போல் பருத்துக் கறுத்து உருண்டிருக்கும். சில டில்லி எருமைகளுக்கு மடியில் ஐந்து முலைக்காம்புகள் உண்டு. எல்லாவற்றிலிருந்தும் பால் வரும். டில்லி எருமைகள் நாள் ஒன்றுக்கு 12 மதராஸ் படிக்காப்படி கூடப் பால் கொடுக்கும். இப்போது அநேக சர்க்கார்ப் பண்ணைகளிலும் பட்டாளங்களிலும் இந்தியா முழுவதிலும் டில்லி எருமைகளை வளர்க்கின்றனர். சென்னைப்பட்டணத்தில்கூட, கோட்டை மைதானத்தில் இவைகள் மேய்வதை அனேகர்

பார்த்திருக்கலாம். சாதாரணமாய் ஒரு டில்லி எருமை, கான்பூர் முதலிய இடங்களில் 70 முதல் 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

சுதேசமித்திரன்—வாரப்பதிப்பு.

சதுரகராதி :—வீரமாமுனிவர் (Father Constantius Joseph Beschi S. J. 1680—1747) தஞ்சாவூர் ஜில்லா காவலூரில் சதுரகராதி என்னுஞ் சிறந்த நூலை, கி. பி. 1732-ல் எழுதிமுடித்தார். இவர் இந்நூலை எழுதுவதற்குமுன் செந்தமிழ் அகராதிகள் சில தூற்பாவில் இருந்திருப்பினும், இது தமிழ்கற்க விரும்பும் பிறநாட்டவர்க்கு மிக்க பலன்தருவதாய் இருக்கிறது. இவ்வகராதியைப் பின்பற்றியே பெப்ரூ சியஸ், ரட்லர், வின்ஸ்லோ முதலிய மேல் நாட்டவரும் பல கீழ் நாட்டவரும் ஏனைய பேரகராதிகளை எழுதியிருக்கிறார்கள். இத்தாலிய தேசத்தவரான இந்தத் தூரிய சந்நியாசி கோவை, கேரளம், மதுரை, ஐயம்பேட்டை, குருக்கள்பட்டி, கல்லிடைக்குறிச்சி முதலிய பலவிடங்களில் வசித்து, பல தமிழ் வித்துவான்களிடம் கல்வி பயின்று, கொடுந்தமிழ் செந்தமிழ் ஆராய்ந்து, புலமைவாய்ந்து, இருபத்தேழு தமிழ்நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றுள் சதுரகராதி இருநூறாண்டுகளுக்குமுன் எழுதப்பட்டது. இது நெடுங்காலம் அச்சேறாமல் இருந்தபடியால், தமிழறிஞர் பலர் இதனைப் பனையோலையிலும் கறடாக்காகிதத்திலும் எழுதிப் பேணிவந்தனர். அத்தகைய ஏடுகளை ஸ்டாக் ஹோம், பாரீசு, புதுச்சேரி, சென்னை, சிதம்பரம் (சிதம்பரநாதமுதலியார் புத்தகசாலை) முதலியவிடங்களில் இன்றும் காணலாம்.

நமது நாட்டில் முதல்முதல் அச்சுக்கூடம் 1712-ம் ஞ்ஞ தாரங்கம் பாடியில் ஸ்தாபிக்கப்பெற்றது. அவ்வச்சுக்கூடத்துக்கு ஓர் அச்சியந்திரமும் தூறு ரீம் காகிதங்களும் இங்கிலாந்திலிருந்து வந்தன. தமிழ் எழுத்துக்கள் ஹல்லே பட்டணத்தில் முதல்முதல் வார்ப்பிக்கப்பட்டுவந்தன. 1746-மஞ்ஞத்தில் முதல் முதல் பொறையாற்றில் காகிதங்கள் செய்யப்பட்டன. அது செய்யப்பட்ட இடத்துக்கு இன்றும் கடதாசிப்பட்டரை என்று பெயர் வழங்கும். அதுமுதலாகப் பந்தணைநல்லூர் முதலிய சுற்றுப்பக்கங்களிலும் அத்தொழில் பரவிற்று. சதுரகராதி முதல் முதல் சென்னைத்துரைத்தன கலாசாலையாரால் எல்லிஸ், ரிச்சர்டு இளார்க்கு இவர்களால் 1819-ம் ஞ்ஞத்திலும், பிறகு கிரீர்சன் துரையவர்கள் சொல்லுகிறபடி (Linguistic Survey of India, Vol. IV) 1827-ம் ஞ்ஞத்திலும், ஸ்மித் அவர்களால் 1835-ம் ஞ்ஞத்திலும், பிறகு 1845, 1848, 1860, 1872, 1875, 1880 முதலிய பல ஆண்டுகளிலும் அச்சில் பிரசுரிக்கப்பட்டது. இவ்வாறு இருநூறு ஆண்டுகளாக இவ்வகராதி வழங்கி வருகிறது.

ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை.

எம். வி. சி:— இங்கிலாந்திலே நெசவுத்தொழிலுக்குப் பெயர் போன மான்செஸ்டர் நகரத்திலே மெட்ராபாலிடன்விக்கெர்ஸ் என்ற தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. இதன் கியாதியைத் தெரிந்து கொள்ளாதவர் இக்காலத்தில் குறைவு என்றுதான் கூறவேண்டும். உயிரளிக்கும் மழைத்துளிகளை


வருஷிக்கும் மேகத்தைப்போல் உயிரை மாய்க்கும் வெடிகுண்டுகளைப் பொழிகின்ற மெஷீன்கள் (Machine guns) செய்வதில் இதுமிகவும் பெரிய பெயர்பெற்று இருக்கிறது. இக் கம்பெனியின் தொழிற்சாலையில் இவ்வகையான வேலைகளுக்கு உபகாரமாகவிருக்கும்பொருட்டு எப்பொழுதும் பலவிதமான ஆராய்ச்சிகள் நடந்துகொண்டேயிருக்கும். இங்கே நடந்த ஆராய்ச்சிகளின் பயனாக புதியஉலோகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென்று டெய்லி ஹெரால்டு பத்திரிகை கூறுகிறது. இந்த உலோகத்துக்கு இன்னும் ஒழுங்காக நாமகரணம் செய்யவில்லையாம். தற்போது அதற்கு எம். வி. கீ. என்று பெயரிட்டிருக்கிறார்கள். இது மெட்ராபாலிடன் விக்கர்ஸ் கம்பெனி என்னும் கம்பனியின்பெயரின் முதலெழுத்துக்களால் அமைந்த பெயரேயன்றி வேறல்ல. இந்த உலோகமானது மிகவும் விந்தையானது; ஆச்சரியகரமான குணங்களுள்ளது; அலுமினியம் கலந்தது; ஆயினும் அதைக் காட்டிலும் கனம் குறைந்தது வார்த்த இரும்புபோன்ற வலிவுள்ளது, ஆனால் அதைப்போல் எளிதில் உடைந்து போகாது. குளிர்ந்திருக்கின்ற நிலைமையிலேயே இதை வட்டமாக வளைக்கமுடியும்; இதைத்தறையவோ, காய்ச்சி அடிக்கவோ, உருட்டவோ, நீட்டவோ, கம்பியாக இழுக்கவோ, கயிறுபோல் பின்னி முறுக்கவோ முத்திரையிடவோ கூடும். கடலின் உப்பு நீரும் இதற்கு ஒரு கெடுதலும் செய்கிறதில்லை. இதுவெயில்காலத்திலும் மழைகாலத்திலும் துருப்பிடிக்காமல் பளபளவென்று இருக்கிறது. பித்தளையைக் காட்டிலும் விலையில் மலிவு. இதனை இயற்றுவதற்கு வெகுகாலமாகப் பாடுபட்டு வந்திருக்கின்றனர். இப்பொழுதுதான் அவர்கள் நீண்டகாலமகச்செய்த முயற்சியானது கைகூடிற்று. இதைச் சுமார் 1000 மணி நேரம் இடைவிடாமல் உலோகசாஸ்திர நிபுணர்கள் கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தினர். அவற்றால் இதன் குணங்களை நன்கு அறிந்து கொண்டனர்.

அதன்மேல், இப்பொழுது பிரிட்டிஷ் கப்பற்படை அதிகாரிகளும் ஆகாயவிமானப்படை அதிகாரிகளும் இந்த உலோகத்தை உபயோகிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ வழிகளிலும் இப்புதிய உலோகமானது பயன்படுமென்பதற்கு ஐயமில்லை.


அ.



மகாபலிபுரம் [Mahabalipuram or Seven Pagodas by D. R. Fyson: Publishers, Higginbothams, Madras 1931. Pages 31.] இச் சிறுபுத்தகமானது மகாபலிபுரம் போக உத்தேசிப்பவர்க்கு உதவிபுரியும்படியாகவும் அவ்வழகிய இடத்திற்குப் போய்வந்ததன் அறிகுறியாகவும் இயற்றப் பெற்ற ஒரு சிறிய ஆங்கில நூல். இதில் அவ்வூரின் சரித்திரமும் அங்கே பார்க்கத் தகுந்த சிற்பங்களும் அவைகளை யொட்டிய கதைகளும் எளிய நடையில் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன. கோயில்கள், மண்டபங்கள், துவாரபாலகர்கள், விக்கிரகங்கள், இன்னும் மற்றுமுள்ள சிற்பங்கள் ஆகிய இவைகளிற் பலவற்றின் சித்திரங்களும் நேர்த்தியான மாதிரியில் கையால் எழுதப்பட்டு அக் கையெழுத்துப் பிரதிகளினின்றும் அச்சிடப்பட்டிருக்கின்றன. நல்லகாகிதத்தில் நேர்த்தியாய் வெளியிடப்பட்டிருக்கிற இச்சிறுநூலைப் படிப்பவர் யாவரும் சந்தோஷிப்பார்களென்பது நிச்சயம். இது சரித்திர நூலாக இயற்றப்பெருவிடினும், கி. பி. 1023 முதல் 1064 வரை இராஜராஜ தேவனென்ற பெயருடன் ஒரு சோழ அரசன் அரசாண்டானென்றும் அவ்வரசனுடைய வெற்றிகள் கடற்கரை யோரத்திலிருக்கும் ஜலசயனமென்னும் கோயிலில் உள்ள ஓர் சாஸனத்தால் அறியக்கிடக்கின்றனவென்றும் இதில் கூறப்பட்டிருப்பது (பக்.29) ஒரு வியப்பேயாகும். சோழவரசராகிய முதலாம் இராஜராஜன் காலம் கி. பி. 985 முதல் 1044 வரை ஆகும்; ஜலசயனத்துச் சாஸனமும் அவனதுதான். 'திருமகள் போல' என்னும் தொடக்கத்தையுடைய மெய்க்கீர்த்தியை அது பெற்றுள்ளது.



க. அ. நீ.



கலைமகள் வணக்கம்

ஊ. சா. வேங்கடராம ஐயர்

நேரிசையாசிரியப்பா

உயிரொருங் காக்குஞ் செயிர்தீர் மலரோன்
மனையே கலைகட் கணையே நாற்கவி
பாடுந் திறலொடு கூடிய புலவோர்
உலகக் கடன்மாட் டிலகும் பொருணீர்
முகந்தணி பெறுவான் றகுந்தவா றமைத்துச்
சொல்லுஞ் சிறந்த நல்லியல் வாய்ந்தொளிர்
கவிமழை சிந்தக் கண்டுளங் களிக்கும்
கலாவ மயிலே நிலாவி னெழிலே
போன்றெளி பரப்பு மான்றசீ ரார்ந்த
வெண்டா மரையிடங் கொண்டருள் வித்தகீ
செந்தா மரையிலு வந்தமர்ந் துறையும்
செல்விக்கு முற்றும் புல்லிநின் றகலாச்
செல்வமீந் தருளுவ தொல்வதொன் றன்றென்
றுன்னிநின் றுலகோர்க் கந்தலம் புணர்ப்பான்
வேண்டியாய்ந் தழியா தீண்டிய புகழே
தருமுயர் கல்விப் பேரு மொருபெருஞ்
செல்வமீந் தருளுந் தொல்புகழ் வல்லீ
அன்பருக் குயர்பே ரின்புசெய் தாயே
இன்பினி தளித்தா ளன்பறி வெனைத்தும்
கொள்ளா தமைந்து வெள்ளோயா யிலங்கும்
என்னுளக் கோயிலி லின்னருள் சுரந்து
மேவியாண் டருளுந் தேவிநா யடியேன்
மண்டலம் புகழுந் தண்டமிழ் மொழியாற்
போற்றின னஃதுவந் தேற்றரு ளாற்றிசை போற்றற் கேற்றவா றருளே.



ஸரஸ்வதி

திருச்சேறை குடிக்கந்தாடை கோ. ஆராவமுதன்

நம் எதிர் விளங்கும் உருவம் 'ஆய கலைகள் அறுபத்து நான் கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை' யுடையதாம். இவ் வுருவம் மைசூர் ராஜ்யத்தில் சாமராஜநகர மாகாணத்தில் உள்ள பாகளே என்னும் சிற்றூரில் எட்டு அல்லது ஒன்பது நூற்றாண்டு கட்கு முன்னர் இருந்த சிற்பியின் கைவேலை; அச் சிற்றூரைப் பேர் ஊர் ஆக்கிய அணிகலம். சிலையில் வருத்தினேனும் இது மருப்பில் அறுத்ததோ வெண்கலத்தில் வார்த்ததோ என்னும் ஐயத்தை நிகழ் விக்கும் அருமைவாய்ந்தது. உயர்ந்த சிற்பவேலைக்கு இதுவே இலக் கியம் என்று கூறுமாறு சிற்பி இதனை அமைத்துள்ளான்.


'பாவும் தொடையும் பதங்களும் சீரும் பல விதமா மேவும் கலைகள் விதிப்பாலே'க் கல்லில் உருவமைத்தல் எளிது அன்று.

தொன்மையான ஆகமங்களும் 'சமயந்தொறும் நின்ற தைய லின்' உருவத்தைப் பல்வேறுவிதமாகக் கூறுகின்றன. அவள் 'வந்து என் மனத்தே இடம் கொண்டாள்' என்று எண்ணங் கொண்ட புலவர்களும் தத்தம் மனத்திற் கண்ட வடிவை வேறு வேறுகக் கூறுகின்றனர்.

"புத்தகம் அக்க மாலை வராபயம் பொருந்து கையாள்
முத்தணி அணிவாள் வெள்ளை முளரிஆ சனத்தாள் மண்ணில்
சத்தமோ டத்தம் கண்ட தவளமெய் வாணி வேதா
உத்தம மனைவி வெண்தூ சுடையவள்"

என்றனர் புலவர் ஒருவர்.

"புத்தகமு ஞானத்து முத்திரையும் பொற்பளிங்கும்
வைத்த கமண்டலமும் வன்னிகையும்-முத்து
வடம்கொண்ட பூண்முலையாள்"



ஸரஸ்வதி.

என்றனர் மற்றொரு பெரியார்.

'என் உள்ளத்தின் உள்ளே இருப்பாள்' என்று நம்பிய நற் புலவரும் 'எண் எண் கலை மடந்தை'யின் பேரெழிலைப் பெருக ஓத இயலாதவராய், 'தூய உருப் பளிங்கு போல்வாள்' எனச் சுருங்கவே கூறிவிட்டனர்.

மனத்தில் எழும் எண்ணத்தை எல்லாம் அவ்வண்ணமே காட்டும் பளிங்கை ஒத்த செந் நாத்திறம் மிக்க புலவோரின் பா வன்மையே இவ்வாறு தயங்கிற்று எனின் சிற்றுளி கொண்டு கல்லைச் செதுக்கும் சிற்பியால் அவ்வழகை அமைக்கவும் இயலுமோ ?

"படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்"

கல்லில் காட்டல் ஆகுமோ ? அன்றி,

"வெள்ளைக் கலைஉடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப் பாளை"

வெள்ளைக் கல்லில் உருப்படுத்திய போதிலும் அப் பெண், தெய்வப் பெண் என்று சற்றேனும் மயங்க நேருமோ ?

கல்வியின் தூய்மையும் கலைகளின் பெருமையும் அவைகட்கு உயிர் நிலை ஆகிய சத்தியத்தின் வன்மையும் ஒருங்கே பொலிய இவ் வுருவத்தை அமைத்துள்ள சிற்பியின் திறமை நாம் பாராட்டற் பாலதே.

இவ்வம்மையை 'அல்லும் பகலும் அனவரதமும் துதித்தாற் கல்லும் சொல்லாதோ கவி' என்று அறைந்த புலவர் பெருமான் போலவே இச் சிற்பியும் சலியாது துதித்தவனே என்பது திண்ணம். அவ்வாறு மெய் அடிமை பூண்டவர்க்கும் பொய்யாப் பயன் உண்டு என்பதற்குக் காளமேகப் புலவரே நற்சாட்சியாவர். 'அரி ஆசனத்தில் அரசரோடு என்னைச் சரி ஆசனம் வைத்த தாய்' என்று அவர் கூறியுள்ளதைத் தமிழ் நாட்டார் மறத்தல் இயலாது.

குழந்தைகளுக்கு ஸங்கீதம் கற்றுக் கொடுக்கும் முறை

பவானி ஸ்வாமிநாதன்

நமது வீடுகளில் பாட்டு விஷயமாகப் பெரியோர்கள் ஆயிரக் கணக்காகப் பணத்தைச் செலவழித்தும் நூற்றுக்கு எண்பது குழந்தைகளுக்குக்கூடச் சரியாகப் பாட வருவதேயில்லை. குரல் குயிலைப்போலிருந்தால் தாளம் இல்லை. தாளம் இருந்தால் தொண்டை புரளுவதில்லை. ஸ்வரஞானம் மிக்க அபூர்வமாக ஏதோ சிலருக்கு உண்டாகிறது. சுருதிஞானம், ஸ்வரஞானம், தாளஞானம், குரலின்மேன்மை ஆகிய எல்லாம் ஒன்றுய் ஒரு குழந்தைக்கு அமைவது 'அதிர்ஷ்டம்', 'தலைஎழுத்து', 'கொடுத்துவைத்தது' என்று பெரியோர்கள் தலையை ஆட்டிக்கொண்டு சொல்லிவிடுகிறார்கள். இது சரியில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

ஸ்வர ஞானமில்லாத ஒருவனுக்கு, சிறுவயதிலேயே சரியான மனேதத்துவ (*Psychological*) முறைப்படி பாட்டுச்சொல்லிக் கொடுத்திருந்தால், அந்த ஞானம் வராமலா போய்விடும்? சுருதியில் சேர்ந்து பாடுவது, தாளத்துடன் தப்பாமல் பாடுவது, கஷ்டப் படாமல் சுகமாய்ச் சாரீரத்தை எச்சுஸ்தாயி மந்தரஸ்தாயி இவைகளில் எட்டவைத்து, கேட்போர் மனத்தை இளக்கி உருக்கத்தக்கதாகச் செய்துகொள்வது, ஒரு பையிலிருந்து உயர்ந்த முத்தை உதிர்ப்பதுபோலத் தொண்டையிலிருந்து 'ரவை' ஜாதி ஜில்லென்று உதிரவைப்பது ஆகிய இவையெல்லாம் செப்பிடுவித்தையல்ல. இவற்றையெல்லாம் முதலிலிருந்தே சிறிது சிறிதாய்க் கற்பித்தால் கொஞ்சம் புத்திசாலித்தனமும், தேகபலமுமுடைய குழந்தைகளுக்கு வருவதற்குச் சந்தேகமேயில்லை.

ஸங்கீதநாதமும் மூளையும்

ஸங்கீத நாதம் காது, கண் இவை இரண்டின் வழியாகவும் மூளைக்கு எட்டுகிறது. வாய்ப்பாட்டு, வாத்தியப்பாட்டு இவைகளைக் கேட்டு ஸங்கீத நாதத்தை அறியலாம். கண் இழந்த குருடன் ஒருவன் கேள்விமூலமாகவே ஸங்கீதத்தைப்பற்றிய அபிப்பிராயங்களை அறிந்துகொண்டு அதனுடைய பிரயோஜனங்களையும்

பெறலாம். இதற்கு உதாரணமாகப் புல்லாங்குழல் சரபசாஸ்திரிகள் அவர்களைச் சொல்லலாம்.

மேலும், ஸங்கீத ஞானத்தைப் புஸ்தகத்திலிருந்து கண்ணுற் பார்த்துப் படித்தும் அடையலாம். ஜெர்மனி தேசத்திற் பிறந்த பிரசித்தி பெற்ற பீதோவன் (*Beethoven*) என்ற ஸங்கீதவித்வான் மூழுச்செவிடராயிருந்தபோதிலும், தம் கண்களினால் பாட்டுக்களைப் பார்த்துப் படித்தும், தாம் புதிது புதிதாய் மிக உயர்ந்த ரத்தினங் களைப்போன்ற பாடல்களை எழுதியும் தாம் ஆனந்தக்கடலில் மூழ்கிப் பிறரையும் மூழ்குவித்தார். இவரைப்போன்றவர்கள் கண்களா லேயே பார்த்துப் புதியபாட்டுக்களைப் படிப்பதற்கு முடிந்ததென்றால், அப்பாட்டுக்கள் எவ்வளவு சிரத்தையுடன் கோடு, புள்ளி முதலிய அடையாளங்களை உபயோகப்படுத்தி எழுதப்பட்டிருக்கவேண்டு மென்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

நமது வழக்க மென்னவென்றால், கண்ணுக்கு அதிக வேலை கொடுக்காமல், காது வழியாகவே ஸங்கீதத்தை ஏற்றுவதாகும். இதனுடன் கண்ணுக்கும் கொஞ்சம் அதிக வேலைகொடுத்துச் சய முயற்சிக்கும் இடங்கொடுத்தால் மிகவும் நன்மையாக இருக்கும்.

பாலரின் இயற்கை

குழந்தைகளுக்குச் சுமார் 4½ அல்லது 5 வயது ஆகும் காலத் தில், ஸங்கீதம் கற்பிக்கத் தொடங்கலாம். இந்த வயதில் விளையாட்டு யுக்தி அதிகம். இது சுறுசுறுப்பாய் ஓடித்திரியும் காலம்; புதிதான உணர்ச்சிக்காக அலையும் காலம். தொடர்ச்சியாக அரை மணி நேரம் கூட குழந்தைகளுக்கு ஒரேவிதமான விஷயத்தைக் கவனிக்க முடியாது. ஆகையால் இப்பருவத்தில் ஐந்து நிமிஷத்துக்கொருமுறை நாம் அவர்களுக்குச் சொல்லுவதை மாற்றிப் புதிதுபோலத் தோன் றும்படி செய்துகொண்டிருக்கவேண்டும். விளையாட்டுக்கும் அவ காசம் கொடுக்கவேண்டும். ஆனால், விளையாட்டு மனப்போக்குகளை அனுசரித்து இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

இப்பொழுது ஓர் உதாரணத்தைக் கூறுவேன்: ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தியை எடுத்துக்கொள்வோம். அவள் பெயர் ஜயா என்று வைத்துக்கொள்வோம். ஜயா நாலு வயதிலிருந்தே பள்ளிக் கூடம் போக ஆரம்பித்து இப்பொழுது பாலர்வகுப்பைத் தாண்டி முதல் வகுப்பிலிருக்கிறாள். பாட்டு நன்றாய்ச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று அவள் பெற்றோர்க்கு ஆசை. அதன்பொருட்டு வேண்டிய பணம் செலவு செய்யவும் தயார். ஆதலால் அவர்கள் செய்த ஏற்பாட்டின்மேல் ஒரு வயதான உபாத்தியாயர் வந்து

வீணை கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். பத்து நாளில் குழந்தை மெலிந்து, கைவீங்கி, விரல்கள் அறுபட்டு, 'பாட்டு வாத்தியார் வருகிறார்' என்றால் ஓடி ஒளிய ஆரம்பித்துவிட்டாள்.

இதைப்பார்த்து, வேறோர் உபாத்தியாயரை நியமித்தார்கள். அவர் ஆர்மோனியம், வாய்ப்பாட்டு இரண்டையும் ஆரம்பித்து, குழந்தையின் இனியகுரலை கீச்சுமூச்சென்று ரெயில்வே எஞ்சின்போல விகாரம் பண்ணிவிட்டார்.

பெற்றோர், அவரையும் நிறுத்தி, பிறகு என்னசெய்வதென்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, ஒருவர் வந்து தாம் குழந்தைக்கு ஒரு புதியவழியில் பாட்டுச் சொல்லிக்கொடுப்பதாகச் சொன்னார். அவர் எல். டி. வகுப்பில் மாண்டிஸோரி, பிராக்பெல், பெஸ்தலோஸி (*Montessori, Frocbel, Pestolozzi*) இவர்களைப் பற்றிப் படித்திருந்தபடியால் ஸங்கீதப்பயிற்சிக்கும் இந்த மூவருடைய முறைகளை உபயோகிக்கலாம் என்று எண்ணங்கொண்டவர். ஆகையால், ஜயாவின் பெற்றோர்களிடம் தாம் தம் இஷ்டப்படி ஜயாவுக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுக்க அனுமதி வேண்டுமென்று கேட்டுப் பெற்றுக்கொண்டார்.

புதுமுறை

அவர் ஜயாவைத் தோட்டத்திற்குக் காலை ஏழு மணிக்கு அழைத்துச் சென்று அங்கே சற்றுநேரம் ஒருபத்து நிமிஷம் பந்து, இழுக்கும் வண்டி இவைகளை வைத்துக்கொண்டு குழந்தையைப் போலத் தாமும் அவளுடன் விளையாடிவிட்டுப் பிறகு, நிழலில் அவளுடன் உட்கார்ந்து கொண்டார். அங்கு ஜயாவுக்கு அவள் பொம்மையைத் தூங்கப்பண்ணுவதற்காக வார்த்தைகள் சுலபமாய் அமைத்துள்ள ஒரு சின்னப் பாட்டுப்பாடினார். பொம்மை தூங்கிவிட்டது. அந்தப்பாட்டை ஜயா மறுநாளே தான் பாட ஆரம்பித்து விட்டாள். பிறகு, பொம்மையைச் சாப்பிடவைக்கும் பாட்டு, குளிக்கவைக்கும் பாட்டு, அதன் உடுப்புகளையும் நகைகளையும் குறித்த பாட்டு இவைகள் ஒவ்வொன்றாய் ஜயாவுக்குச் சீக்கிரத்தில் கற்றுக்கொடுத்துவிட்டார். ஏனென்றால், பாடாவிட்டால் பொம்மை சாப்பிடாதே ! தூங்காதே !!

இப்படிச் சிறிய பாட்டுக்கள் வந்த பின்பு, உபாத்தியாயர் ஸ, ரி, க, ம, ப, த, நி, என்ற ஸ்வரங்களை அழகிய அட்டைகளில் விதவிதமான வர்ணங்களில் எழுதி வைத்துக்கொண்டு அந்த எழுத்துக்களை அவளுக்குக்காட்டி அவற்றின் நாதத்தையும் பாடிக் காட்டி அவள் ஸப்தஸ்வரங்களை ஒரு சுருதிக்குச் சரியாகப்பாடும்படி செய்தார். பின்பு, அழகிய ஒரு வீணையைத் தாம் வைத்து வாசித்துக்

கொண்டு ஜயாவைத் தம் கையைப் பார்த்துக்கொண்டே பாடச் சொன்னர். இடையில் சுருதியை அவளெதிரிலேயே கொஞ்ச நேரத்துக்கொருதரம் கலைத்து விளையாட்டுக்காக, அவளையும் கலைக்கச் சொல்லுவார். பிறகு சரியாகச் சேர்ப்பார். பிருடையை ஒரு விதமாகத் திருப்பினால் தந்தி தளரும், இன்னமொரு விதமாகத் திருப்பினால் தந்தி கெட்டிப்பட்டு நாதம் உயரும் என்பது இந்த விளையாட்டால் ஜயாவுக்கு வெகு சீக்கிரத்தில் தெரிந்துவிட்டது. எடுத்த ஒரு சுருதிக்குச்சரியாய் ஸா, பா, ஸா பாடுவது அவளுக்கு ஒரு விளையாட்டாகப் போய்விட்டது.

இவ்வாறு இலகுவாய் அலங்காரம் வரை வாயில் பாடவந்தவுடன் ஜயாவுக்கு ஓர் அழகிய, இலேசான வீணை தருவித்து, அதைக் கற்பிக்கத்தொடங்கினர். முதலில் வலக்கை மீட்டு வந்தபிறகு இடக் கையால் ஸப்தஸ்வரங்களையும் முறையே மெதுவாக அமுக்கிக் கொண்டு மீட்டுவதையும் கற்பித்தார். பத்து நிமிஷந்தான் ஒரு பாடம்; அதற்கப்புறம் விளையாட்டு. ஒரு மாதத்தில் விரல் நுனிகள் கெட்டிப்பட்டுப் பழகிய பின் பாடம் பத்திலிருந்து இருபது நிமிஷ மாயிற்று. மூன்று நான்கு மாதத்திற்குப்பின் அரை மணி ஆயிற்று. இப்படிக் கொஞ்சங்கொஞ்சமாகக் காலத்தை அதிகப்படுத்திக் கொண்டுவந்தார்.

ஜயாவுக்குத் தாளங்களின் பெயரைச் சொல்லி, அதனதன் அங்கங்களுக்குத் தகுந்தாற்போலத் தேக அப்பியாசங்கள் (*Drill exercises*) சொல்லிக் கொடுத்தார். இப்பொழுது, ரூபக தாளம் என்றால், ஒன்று இரண்டு, ஒன்று இரண்டு மூன்று நான்கு என்று இவர் சொல்ல, குழந்தை இரண்டடி இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு நாலடி முன்னுக்கு நடக்கும். இது ரூபகதாளப் பயிற்சி. இப்படிக் கையை ஆட்டுவதும், காலை ஆட்டுவதும், நடப்பதும், குதிப் பதும், ஓடுவதுமாக எல்லாத்தாளத்திலும் அப்பியாசங்கள் வந்து விட்டன. லயத்திற்குரிய காலநிதானமும் கூடவே வந்துவிட்டது.

ஸரிகம, ரிகமப, கமபத—என்று வரிசையாய்ச் சுலபமாக வரச் செய்வதற்காக, ஏழு ஜலதரங்கக் கிண்ணங்களை வைத்துக் குச்சியால் நாலு நாலு ஸ்வரங்களாகத் தட்டி விளையாடச் சொன்னர். ஸ்வர ஞானம் வரும்பொருட்டு அலங்காரங்களை அகாரமாகப் பாடச் செய்தார். அப்போது தாம் ஓர் ஆவர்த்தம், ஜயா ஓர் ஆவர்த்த மாக மாற்றி மாற்றிப் பாடும்படி பழக்கினர். அலங்காரங்களை அகாரமாய் இரண்டாங் காலத்திற் பாடுவது தொண்டை நன்றாகப் புரளுவதற்கு ஏதுவாயிருந்தது.

இந்த அலங்காரங்களையே சங்கராபரணம், தோடி, கல்யாணி, காமவர்த்தனி, கரகரப்ரியா என்னும் ராகங்களில் மாற்றி மாற்றிப் பாடிவந்ததனால், எந்த எந்த ராகத்துக்கு எந்த எந்த ரி, க, ம, த, நி பிடிப்பதென்று ஆறுமாதத்திற்குள் ஜயாவுக்கு நன்றாய்த் தெரிந்து விட்டது.

கீதங்கள், சிறிய கீர்த்தனைகள் இவைகள் சொல்லிக்கொடுப் பதற்காக, ஸாஹித்தியத்தின் அர்த்தத்தைக் கதைபோல முன்னுற் சொல்லி, பிறகு பாட்டு ஆரம்பித்தார். ஸ்வர ஸாஹித்தியம் சரியாக மனத்தில் ஒன்றுபட்டுப் பதியும்படி சில விளையாட்டுக் கருவிகளை ஜயாவுக்குக் கொடுத்தார். இப்பொழுது மலஹரிராகப் பிள்ளையார் கீதத்திற்கு—"மபதஸஸரி", "ரிஸதபமய", "தபமகரிஸ"—என்று இப்படி நீள அட்டைத்துண்டுகளில் எழுதிக் கும்பலாக வைத்து, "ஸ்ரீ கணநாத," "விக்நராவர்ண", "கருணாகர", "கரிவதன" என்று இன்னும் சில அட்டைகளில் எழுதிவைத்து, ஜயாவை ஸ்வர ஸாஹித்திய அட்டைகளை ஒன்றுக்கடியில் ஒன்றாய்ச் சரியாகச் சேர்த்துவைத்துப் பாடிக்காட்டும்படி சொல்லுவார்.

பிறகு, வீணையில் வாசிக்கக்கூடிய கஷ்டமான பிடிகளில் ஒரு நாளைக்கு ஒன்றாக விளையாட்டுப் போல இப்பொழுதே கொடுத்து வந்தார். உதாரணமாக: 'த' வில் 'நி' பிடிப்பது வந்தவுடன், 'த' வில் 'ஸ' பிடிக்க ஒரு வாரத்தில் சரியாக வந்துவிட்டது. கீதம் வாசித்தாலும் அதிலேயே அபூர்வமான வீணைப் பிடிகள் இரண்டு மூன்று பிடிக்காமல் ஜயா வாசிக்கமாட்டாள்.

குழந்தைக்குப் பாட்டு வருவதோடு, புத்தி அநேக வழிகளில் விசாலிப்பதைக் கண்டு பெற்றோர்கள் களித்தார்கள். தேகஸௌக்கி யத்திலும் ஜயாவுக்குக் குறைவேயில்லை.

உபாத்தியாயர் வருமுன் தானாகவே ஆசையுடன் வாத்தியம் வாசிக்கவோ, வாய்ப்பாட்டுப் பாடவோ வேண்டிய உத்ஸாகம் ஜயா விற்கு உண்டாய்விட்டது. அதனோடு வீட்டுக்கு வருகிற நண்பர் கள் கேட்டபோது கூச்சமில்லாமல் பலமுறை பாடவேண்டிய சந்தர்ப்பங்களும் நேரிட்டபடியால் ஜயாவுக்கு அப்பியாஸத்திற்குக் குறைவேயில்லை. மற்றைப்படிப்புடன் பாட்டும், வீணை வாசிப்பதில் திறமையும் சுலபமாகவே வந்தன.

ஸங்கீதம் கற்பிக்க இஃது ஒரு முறை. இம்மாதிரி வேறு முறை களும் இருக்கக்கூடும். பாலபோதகர்கள் இது விஷயமாகத் தம் அனுபவமுறைகளை எழுதித் தெரிவித்தால் பலருக்கும் மிக்க உபயோகமாயிருக்கும்.



வழக்கமும் சூழ்வும்

பி. என். அப்புஸ்வாமி

மானுடராகிய நாம் அனைவரும் நாள்தோறும் வேளைதோறும் பற்பல காரியங்களைச் செய்து வருகிறோம். அவ்வாறே கீழ்த்தர உயிர் என்று நாம் கருதுகின்ற பிற உயிரினங்கள் எல்லாம் பற்பல செயல்களைச் செய்து வருகின்றன. அச் செயல்களில் சில, நாமும் அவையும் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதன. இச் செயல்களை நாம் செய்யாமல் இருந்தால் நம்முடைய உயிரானது நிலைக்காது; நாமும் மடிந்து போவோம். வேறு சில செயல்கள், நாம் மேன்மேலும் இன்புற்று வாழ்வதற்கு உரிய காரியங்களேயன்றி நாம் உயிர் தரித்தற்கு அவசியமானவை அல்ல. இவற்றுள் முன்னவை பிறவியால் வருவன; பின்னவை வழக்கத்தால் வருவன.

ஆகவே, ஓர் இனத்தாரோ, அல்லது ஓர் இனத்திற் பெரும் பகுதியைச் சார்ந்தாரோ, தம் பிறவித் தன்மையால் மட்டும், ஒரே வகையாய், அதிக வேற்றுமைகளின்றிக் காரியங்களைச் செய்து வருவதை அவருக்கு இயற்கை யென்று கூறலாம். ஓர் இனத்தில் ஒரு சிறு பகுதியைச் சார்ந்தாரோ, சிற்சில நாட்டினர் மட்டிலுமோ, அல்லது அவருள்ளும் ஒரு சிறு வகுப்பினரோ, அல்லது தனித்தனியான ஆட்கள் மட்டிலுமோ, ஒவ்வொரு நாளும் ஒரே ஒழுங்காகக் காரியங்களைச் செய்து வருவதை அவருக்கு **வழக்கம்** என்று கூறலாம். வழக்கம் என்பது பிறவியால் இயற்கையாகச் செய்துவரும் தொழில்களைக் குறிக்காது; செயற்கையால் அவரவர், பிறர் செய்து வருவதைப் பார்த்துப் பின்பற்றியோ, தமது சுய விருப்பத்தை மட்டிலும் கருதியோ, அல்லது வேறெந்தக் காரணத்தை முற்கொண்டோ, விசேஷமாகத் தனிவழியாகச் செய்து வரும் செயல்களையே குறிக்கும். இயற்கை பிறவியால் ஏற்பட்டது; அது பிறவி வாசனை. வழக்கம் ஒழுக்கத்தால், செயல்களால் வருவது; அது செயற்கை வாசனை.

இவ்விரண்டுக்கும் உள்ள வித்தியாசமானது ஓர் உதாரணத்தால் விளங்கும். பசி என்னும் உணர்ச்சியைப் பெறுவதும் உணவை உண்பதால் அவ்வுணர்ச்சி நீங்குவதும் எல்லாப் பிராணிகளுக்கும் பொதுவானவை. பசி தீர உண்பது யாவருக்கும் இயற்கை. தாகம் என்னும் உணர்ச்சியைப் பெற்று அது தீருவதற்காக நீரைப் பருகுவதும் அவ்வாறே. ஆனால் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட ஒன்றிரண்டு வேளைகளில் விசேஷமான தாக உணர்ச்சி உண்டாவதும், அப்படி எழுகின்ற தாகத்தைத் தீர்க்கும்பொருட்டுக் காபீ, டீ, கோக்கோ முதலிய விசேஷ பானங்களைப் பருகுவதும், அவற்றையே நாடுவதும் சிலரிடம் மட்டிலும் உண்டு. இவை ஒழுக்கத்தால், நாள்தோறும் செய்துவந்த செயல்களின் பற்றால், உண்டாவன; இவை அவருக்கு வழக்கம்.

இனி இங்குச் சூழ்வு (*Environment*=பரிஸரம்) எனப்படுவது, இவ் வுலகில் வாழும் ஒருவனைச் சுற்றி நிகழ்ந்து வரும் நிகழ்ச்சிகளையும், அவனைச் சூழ்ந்துள்ள பொருள்கள், மனிதர்கள், பிராணிகள் முதலியவற்றின் குணம் நிலை நடை உடை பாவனைகளையும் ஒருங்கு சேர்த்து ஒன்றாகக் குறிக்கும் மொழியாகும்.

ஒருவனுடைய சூழ்வும் வழக்கங்களும் அவனது நடை உடை பாவனை முதலிய யாவற்றையும் மாறுபடுத்தவல்லன, அவ்வாறே செய்கின்றன என்பன யாவரும் அறிந்த விஷயம். ஆயினும் பிறவிக் குணத்தின் (*Heredity*=வமிசார்ஜித குணம்) வலிமை எவ்வளவு? வழக்கங்களின் வலிமை எவ்வளவு? இவ்விரண்டில் எது மிகுதியான வலிமை பொருந்தியது? ஒருவனுடைய சூழ்வானது ஒருவனை எந்த அளவு மாற்றுகின்றது? என்னும் விஷயங்களைப் பற்றி இன்னும் வரையறுத்து நிச்சயமாகக் கூறுதற்கியலவில்லை. ஆதலால், பிரத்தியேகமான வழக்கங்களும் சூழ்வுகளின் மாறுபாடுகளும் பேதங்களும் எவ்வாறு எவ்வகையாக எவ்வளவு ஒருவனைப் (*Individual*) பாதிக்கின்றன? அவை இனத்தின்மீது (*Race*) எத்தகைய சக்தியைச் செலுத்தி வருகின்றன? என்ற வினாக்களை அறிவாளர் தம்மைத் தாமே அடிக்கடி கேட்டுக்கொண்டு அவ் விஷயங்களை மேன்மேலும் நுட்பமாய் ஆராய்ந்து அவ் வினாக்களுக்குச் சரியான விடைகளைத் தேடி வருகின்றனர்.

ஒருவனைப் பார்த்த அளவிலேயே அவனது உடலினின்றும் உடையினின்றும் பேச்சினின்றும் கையாளும் கருவிகளினின்றும், அவன் இன்ன இனத்தான், இன்ன நாட்டான், இன்ன தொழிலான் என்பவற்றைப்போன்ற விஷயங்களைப் பொதுவாக அறிந்து

கொள்ளுவது இயலும். நீண்ட கறுப்புச்சட்டையும் தலைப்பாகையும் அணிந்து கையில் நீண்ட காகிதக் கட்டைத் தாங்கி வெகு பரபரப்பாகப் பற்பல வேலைகளை ஒழுங்கொழிவின்றிச் செய்து வருபவன் போல் நடிக்கும் ஒருவனை வக்கீல் என்றும், நாடியறி கருவி (*Stethoscope*), சீதோஷ்ணமானி (*Thermometer*) முதலியவற்றை வைத்துக்கொண்டிருக்கும் ஒருவனை வைத்தியன் என்றும், கத்தரிக்கோலும் அளவு நாடாவும் உடையவனைத் தையற்காரன் என்றும், இதுபோலவே பலரை அவரவர் தொழிற்கு உரிய விசேஷ உடையாலும் கருவிகளாலும் நிச்சயிக்க முடியுமல்லவா? அம்மாதிரியாகவே, கணைக்காற்புறத்திலும் முதுகிலும் அல்லது மார்பிலும் தழும்புடைய ஒருவனது தொழில் மரம் ஏறுதல் என்பதையும், கைகளில் சிவப்பு நீலம் முதலிய நிறங்கள் ஏறியிருக்கும் ஒருவனது தொழில் சாயம் போடுவது என்பதையும், உடையின்மீது தோய்ந்திருக்கும் எண்ணெய் மெழுக்கால் ஒருவனது தொழில் எண்ணெய் ஆட்டுவது அல்லது விற்பது என்பதையும் சாதாரணமாக யாவருமே எளிதில் அறிந்துகொள்ளலாம். அதிதுட்பமான கவனமும் மிகக் கூரிய புத்தியும் ஊகமும் உள்ள சிற்சிலர், கூர்ந்து கவனிப்போர்க்கன்றிச் சாதாரணமாய் யாவர்க்கும் எளிதிற் புலப்படாத நுண்ணிய அடையாளங்களைக் கொண்டு இவன் பாடுபவன், இவன் வீணை வாசிப்பவன், இவன் எழுத்துவேலை பார்ப்பவன், இவன் 'டைப்ரைடிங்' அடிப்பவன் என்றெல்லாம் ஊகித்தறிந்து கொள்கின்றனர். ஒவ்வொரு தொழிலுக்கும் உரிய பிரத்தியேகமான செயல்களால் ஒருவனது உடலிலும் உடையிலும் நடையிலும் பாவனையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவற்றுள் சில வெளிப்படையாய் யாவர்க்கும் புலப்படுவன; சில நுணுகிக் கவனிப்போர்க்கே தோன்றுவன. ஷெர்லக் ஹோம்ஸ் என்னும் துப்பறி நிபுணனைச் சிருஷ்டித்த ஸர் ஆர்தர் கானன் டாயில் என்றவருடைய குருவாகிய டாக்டர் ஜோசெப் பெல் என்பவர் இவ்வகையான அதிதுட்ப கவனமும் கூரிய புத்தியும் உள்ளவர். அவரிடம் வைத்தியத்துக்கு வரும் ஒருவனைப் பார்த்து இரண்டொரு வார்த்தை பேசிய உடனே அவன் இன்ன ஊரான், இன்ன தொழிலான் என்று அவர் எளிதில் சொல்லி விடுவாராம். ஒருவன் பேசும் பேச்சிலிருந்து நாம் கூட அவனைப்பற்றி இவன் மலையாளி, இவன் தெலுங்கன், இவன் தமிழன், இவன் படித்தவன், இவன் படிக்காதவன் என்றெல்லாம் சொல்லுகிறோமல்லவா?

ஒருவன் வசிக்கும் தேசமும் புரிந்து வரும் தொழிலும் அவனைச் சிறிதளவோ பெரிதளவோ பாதிக்கின்றன. ஆகையால்

இடம் தொழில் முதலியன ஒருவனது நடை உடை பாவனைகளில் நன்கு புலப்படக் கூடிய மாறுபாடுகளை உண்டாக்குகின்றன என்பது மறுக்கமுடியாத விஷயம்.

மனித இனத்தை மட்டுமன்றி, மற்ற உயிர்ப் பிராணிகளையும் செடி கொடி முதலியவற்றையும் இவ்வாறே அவ்வவற்றின் வழக்கங்களும் சூழ்வும் மாறுபாடுகள் அடையச் செய்கின்றன. ஓர் இடத்திலுள்ள மரங்களின் கிளைகள் வீசிப் பரவுவது அங்கு வீசும் காற்றின் போக்கையும் அங்குள்ள நீர்வளநிலவளங்களையும் பொறுத்திருக்கிறது. ஒரேவகைச் செடியானது அமைதியான குளத்து நீரில் மூளைத்த காலத்து ஒருவகையான இலைப் பரப்பையும், அலை வுற்று ஓடும் வாய்க்காலின் நீரில் மூளைத்தபோது மற்றொரு வகையான இலைப் பரப்பையும் உடையதாகிறது. சமமான பிரதேசத்தில் மூளைத்து வளரும் ஒரு செடியை மலைச் சாரலில் கொண்டு போய் நட்டால் அதன் புறத்தோல் தடித்துப் போகிறது. அத்தோலின்மேல் காணப்படும் மெல்லிய மயிர்போன்ற உறுப்புக்கள் அதிகமாகச் செறிந்து வளர்கின்றன. பொன்னிளை வீசும் அழகிய சிறிய மீன்களை இருண்ட இடத்தில் இரண்டு மூன்று வருஷ காலம் வைத்து வளர்த்து வந்தால், இருட்டில் அவற்றிற்குப் பயனில்லாத அவற்றின் கண்கள் குருடாகப் போய்விடுகின்றன. ஓடி ஆடி விளையாடிப் பருக்கும் நீர்நத்தைகளை நீந்தி விளையாடுதற்கு இடமில்லாச் சிறு இடத்தில் அடைத்து வைத்தால் அவை தமக்கு உரிய முழு வளர்ச்சியை அடையாது குறுகிப்போகின்றன. கூட்டுக்குள் அமைத்திருக்கும் சுழல் சக்கரத்தை இடைவிடாது சுற்றும்படி தூண்டப்படும் வெள்ளெலிகள் சாதாரணமாய்ச் செய்யும் வேலையைவிட மிகவும் அதிகமான வேலை செய்வதால் அவற்றின் இரத்தாசயம் (*Heart*) கல்லீரல் (*Liver*) சிறுநீர் ஊற்றுப்பை (*Kidney*) முதலிய உறுப்புக்கள் அளவிலும் கனத்திலும் சாதாரணமாய் இருப்பதைவிடப் பெரியனவாகின்றன. ஆதலால், உறுப்புக்கள் செய்துவரும் தொழில்கள் மாறுவதற்கும் சூழ்வின் தன்மைக்கும் ஏற்பப் பிராணிகளின் உடலும் உடலுறுப்புக்களும் பலவகையாய் மாறுபடுகின்றன என்பதில் ஐயமில்லை.

மாற்றங்கள் (*Modifications*) என்று சொல்லத்தகும் இவையாவும் ஒவ்வொரு பிராணியும் தானாகவே சம்பாதித்துக்கொண்ட குணவேறுபாடுகளாகும். இவை புறநிகழ்ச்சிகளால் உண்டாகின்றன; உள்ளிருந்து தம் இயற்கைக் குணத்தால் வெளியே தோன்றுவன அல்ல. அன்னிய பதார்த்தம் தாக்குதலால் ஒரு பாத்திரத்தில்

உண்டாகும் அதுக்கல்கள் அல்லது நசுக்கல்களுக்கு இவற்றை ஒப்பிடலாகும். ஆகையால் இவற்றைப் புறத்தால் பிறப்பன அல்லது **புறப்பிறவிகள்** (*Exogenous* = பஹிர்ஜந்நியம்) என்று கூறலாம். இவை தம் இயல்பால் உள்ளிருந்து பிறப்பன அதாவது **அகப்பிறவிகள்** (*Endogenous* = அந்தர்ஜந்நியம்) அல்ல.

ஒவ்வொரு பிராணிக்கும் உறுப்புக்கும் ஒருவகையான விசேஷத் திறமை ஓர் அளவில் உண்டு. அதாவது, புறநிகழ்ச்சிகளால் அது தாக்கப்பட்டபோது உரு மாறி நிலைமை மாறித் தன்மை மாறிய போதிலும், அத்தகைய புறநிகழ்ச்சிகள் நின்றுபோனவுடன் அது தனக்கு இயற்கையான உருவம் நிலை தன்மைகளை மீண்டும் எளிதில் பெற்றுவிடுகின்றது. உதாரணமாக, நாய் வாலை நேராக்கவேண்டி மட்டை வைத்துக் கட்டினால் மட்டை இருக்கும்வரை நாய் வால் நேராக நிற்கிறது; மட்டையை எடுத்ததும் நாய் வாலானது மீண்டும் பழைய வளைந்த வடிவத்தையே எளிதில் பெற்றுவிடுகிறது. ஆயினும் சிற்சில வேளைகளில் இவ்வாறு தாமாக நிகழும், அல்லது செயற்கையால் நிகழ்த்தப்படும் புறநிகழ்ச்சிகள் தம்முடைய வன்மையின் மிகுதியால் அவை தாக்கும் உறுப்பிலும் உடலிலும் அவற்றின் உருவத்திலோ நிலையிலோ தன்மையிலோ அல்லது இவை அனைத்திலுமோ நிலையான மாறுபாடுகளைச் செய்து விடுகின்றன. உதாரணமாக, ஒரு ரப்பர்த் துண்டை இழுக்கும்போது அது நீளுகிறது; விட்டால் அது மறுபடியும் தன் குறுகிய வடிவத்தைப் பெற்றுவிடுகிறது. இந்தக் குணத்துக்கு எலாஸ்டிசிடி (*Elasticity*) என்று பெயர். ஆனால் ஓர் அளவுக்குமேல் அந்த ரப்பர்த் துண்டை இழுத்தால் அது அறுபடுகிறது; அல்லது மறுபடியும் தன் குறுகிய அளவாகச் சுருங்கமுடியாமல் நீண்டுவிடுகிறது. அப்பொழுது அது தன்னிலை யடைவரையை (*Limit of Perfect Recovery*) மீறி விட்டதென்றுவது, தன்னிலைகெடுவரையை அடைந்து விட்டதென்றுவது சொல்லலாம். அந்த வரையை மீறுதவரை அஃது எவ்வளவு மாறுபட்டாலும் மீண்டும் தன் சுயநிலையை அடைந்துவிடும். அந்த வரையைத் தாண்டிவிட்டால் அது தன்னிலை மாறி மீண்டும் அதனை அடையமுடியாமல் வேறொரு நிலையைப் பெற்று நிற்கும். ஒவ்வோர் உயிருக்கும் உறுப்புக்கும் அத்தகைய வரை ஒன்று உண்டு. மேற்கூறிய வகையாய் உறுப்புக்களும் பிராணிகளும் புறநிகழ்ச்சிகளால் ஓர் அளவு தாக்கப்பட்டு மாறுபாடுகள் அடைந்தபோதிலும் அந்நிகழ்ச்சிகள் அற்றுப்போனதும் அவை தம் பழைய உருவம் நிலை தன்மைகளை மீண்டும் பெறுகின்றன. ஆயினும் உயிர்க்கு உயிர் வித்தியாசப்படுகின்ற ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் அவை தாக்கப்

படின், அவை தன்னிலைகெடுவரையைத் தாண்டி மீண்டும் தம் வடிவம் நிலை முதலியவற்றைப் பெற முடியாது மாறுபட்டே நின்று விடுகின்றன. இவைதாம் சூழ்வாழ் ஏற்படும் மாற்றங்கள். ஆகவே, ஒவ்வோர் உயிரின் வாழ்விலும் அதன் தொழில் உணவு சூழல் முதலியவைகளில் ஏற்படும் விகற்பங்களால் உண்டாகி, அவ் விகற்பங்களின் காரணமாகப் பிராணியானது தன்னிலைகெடு வரையைத் தாண்டியதால் அவ் விசேஷ நிலைமைகள் மாறிய பின்பும் பிராணியின் உடலுறுப்பமைப்புக்களின் மாறுபாடுகளாக நிலையாக நின்றுவிட்டவைதாம் மாற்றங்கள் என்பன. இவற்றுக்கும், உயிர் வித்தின் பேதாபேதங்களாலும் சேர்க்கை பிரிவுகளாலும் ஜந்துவில் தோன்றும் உருவம் குணம் நிலைகளுக்கும் மிகுந்த வேறுபாடுண்டு. ஒன்றைத் தோற்றம் என்றும் மற்றொன்றை மாற்றம் என்றும் வேறுபடுத்திச் சொல்லலாம். ஒன்று பிறவிக் குணத்தின் தன்மையால் தோன்றுவது; அது வமிசார்ஜிதம். மற்றொன்று வழக்கங்களாலும் சூழ்வுகளாலும் மாறி அமைவது; அது சுயார்ஜிதம். இயற்கையால் வருவது ஒன்று; செயற்கையால் வருவது மற்றொன்று.

மாற்றங்கள் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டே யிருக்கின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவற்றால் ஜந்துவுக்கு உண்டாகும் பிரயோஜனத்துக்கு அளவேயில்லை. பெரும்பாலும் அவை ஜந்துவின் உயிரையே காக்கின்றன. உதாரணமாக, எலும்புந் தோலுமாயிருக்கிற ஒரு குழந்தைக்குச் சரியான மருந்தும் உணவும் கொடுத்து வந்தால் அது சிரித்து விளையாடி இன்பம் விளைக்கும் அழகிய குழந்தையாகி விடுகிறது. குழந்தையின் உடலில் உண்டாகும் இம் மாறுபாடு புற நிகழ்ச்சிகளால் ஏற்பட்டதல்லவா ?

இதினின்றும் போஷணை முதலியவற்றால் எவ்வகையான மாறுபாட்டையும் வேண்டியபடி யெல்லாம் உண்டாக்கிவிடக் கூடுமென்ற அபிப்பிராயத்தை ஒரு கக்ஷியார் கொண்டுவந்தனர். இப்பொழுது வேறொரு கக்ஷியார், பிறப்பால் தோன்றும் குணநிலைமைகளைச் சிறிதுகூட மாற்றமுடியாது என்று, நேர் எதிரிடையான கொள்கையைக் கையாளுகின்றனர். இவர் கக்ஷிக்கு ஆதாரம் விதைத்தொடர்ச்சிக் கொள்கை (*Theory of Germinal Continuity*) என்று சொல்லலாம். அதாவது பெட்டைக்கோழியிட்ட முட்டை முக்கியமன்று. முட்டைக்கு முதலாகிய கருவே (*Cell*) பெட்டைக்கோழி அதன் முட்டைகள் ஆகிய அனைத்துக்கும் மூலம்; அதுதான் முக்கியம். மேலும் இதுவரை மாற்றங்களுக்கு ஆதாரமாகச் சொல்லப்பட்டுவந்த உதாரணங்களை எல்லாம் சோதித்துப்

பார்த்ததில் அவை யாவும் வெறுங் கட்டுக்கதையாகவே முடிந்தன. பின்னும், தன்னந் தனியாகக் காணப்பட்ட சில அவயவ விசேஷங்கள் பல தலைமுறைகளாய் ஒரே வகையாயிருந்து வருவதும் பல வகைப் புறநிகழ்ச்சிகள் அவற்றை மாற்ற முயன்றும் அவை சிறிதும் மாறுபடாமல் மீண்டும் மீண்டும் முன்போலவே தோன்றி வருவதும் தெரியவந்தன. உதாரணமாகச் சிலருக்குள்ள விரல்களெல்லாம் இரண்டு கணுக்களேயுள்ள கட்டை விரல்களாகத் தலைமுறை தலைமுறையாக இருந்துவரும் விந்தையும், சாதாரணமாய்க் கண்ணின் விழியின் நிறமும் அதே மாதிரி தலைமுறை தலைமுறையாக மாறாமல் இருந்துவருவதும் விதைத்தொடர்ச்சிக் கொள்கையையே பலப்படுத்தின. ஆகவே பிறவிக் குணமானது தன்னியல்பு மாறாத் தன்மையை யுடையது என்னும் கொள்கையில் ஜனங்களுக்கு ஒரு விசேஷப்பற்று உண்டாயிற்று. வழக்கம் சூழ்வு முதலியவற்றில் ஏற்படும் விகற்பங்கள் அவ்வப்போது ஏதோ சிறிதளவு மாறுபாடுகளை ஒரு பிராணிக்கு விளைவிப்பினும் அம்மாறுபாடுகள் தலைமுறை தலைமுறையாகப் பிராணியினது வமிசாவளியில் இறங்கக்கூடாதன, அவை வமிசார்ஜிதங்களாக மாட்டா, என்ற எண்ணமானது வலியடைந்தது. இதனை இனி ஆராய்வோம்.

(தொடரும்)

சாஸ்திர சம்பந்தமான தமிழ்ச் சொற்கள்.


Cell—கரு.
Endogenous—அகப்பிறவி.
Environment—சூழ்வு.
Exogenous—புறப்பிறவி.
Habit—வழக்கம்.
Heart—இரத்தாசயம்.
Heredity—பிறவிக்குணம், வமிசார்ஜிதகுணம்.
Individual—ஒருவன், தனிமனிதன்.
Kidney—சிறுநீர் ஊற்றுப்பை.
Limit of Perfect Recovery—தன்னிலையடைவரை.
Liver—கல்லீரல்.
Modification—மாற்றம்.
Race—இனம்.
Stethoscope—நாடியறிகருவி.
Thermometer—சீதோஷ்ணமானி.
Theory of Germinal Continuity—விதைத்தொடர்ச்சிக் கொள்கை.

சில வேட்டையாடும் அல்லது வேட்டிவப் பிராணிகள்

எம். ஏகாம்பரநாத ஐயர்

ஆகாயமார்க்கமாகப் பறந்து செல்லும் வௌவால்களையும் வேறு சில பக்ஷிகளையும், வேடர்கள் மரங்களில் வலைகள் கட்டிக் கைப்பற்றுவதை, இதைப் படிப்போர் பார்த்திருக்கலாம்; காடுகளில் பெரிய படுகுழிகள் தோண்டி அவற்றினுள்ளே யானைகள் விழுவதற்கு உபாயங்கள் செய்து அவற்றை ஜனங்கள் பிடிப்பதைப் பலர் கேட்டும், சிலர் பார்த்தும் இருக்கலாம்; தூண்டில்கள் போட்டு ஜலத்தில் வாழும் மீன்களைப் பிடிப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. மனிதன் தாழ்ந்த பிராணிகளைக் கைப்பற்ற இங்குக்கூறிய உபாயங்களை அனுசரிப்பதுபோல், பிராணிவர்க்கத்துள்ளும் சில, அவற்றின் ஆகாரமாகும் வேறு பிராணிகளைக் கைப்பற்றுவதற்கு இம்மாதிரியான சில உபாயங்களை அனுசரிக்கின்றன.

ஆகாயத்திற் பறந்து செல்லும் சிறிய பூச்சிகளை வலைகட்டிப் பிடிக்கும் வஞ்சக வேடனுகிய சிலந்திப்பூச்சியைப் பார்த்திராதவர் இரார். அப் பிராணியானது வலையைக்கட்டி, அதில் ஒரு மூலையிற் பதுங்கியிருந்து, தனக்கு உணவாகும் பூச்சிகள் அவ்வலையில் அகப்பட்டுக்கொண்டவுடன் பற்றிக்கொள்ளுவதைக் கவனித்துப்பார்த்தால், அதன் வலைவீசும் திறமையை மெச்சாமல் இருக்கமுடியாது. வலைகட்டுவதற்கு வேண்டிய சாதனங்கள் சிலந்தியின் தேகத்திலேயே இருக்கின்றன. வலை பின்னுவதற்குவேண்டிய நூல் சிலந்தியின் தேகத்தில் ஒரு திரவப்பொருளாக உண்டாகிறது. இது காற்றில் பட்டால் கெட்டியான நூலாகிறது. வயிற்றின் அடிப்பாகத்தில் பின்புறமாகச் சிறிய அரும்புகள்போன்ற அமைப்புகள் இருக்கின்றன. இவற்றை நூலரும்புகள் (*Spinnerets*) என்று கூறுவோம். இந்நூலரும்புகளின் முனைகளில் வெகு நுட்பமான பல மெல்லிய குழல்கள் இருக்கின்றன. இந்நூற்குழல்கள்வழியாக வயிற்றினின்று




சிலந்தியின் நூலரும்புகள்

வெளியே வரும் நூல்கள் பலவற்றைத் தனக்கு வேண்டியபடி ஒன்று சேர்த்து முறுக்கிச் சிலந்தி தன் வலையைக் கட்டுகிறது.

சிலந்திப்பூச்சி வலைகட்டுவதைக் கவனித்துப் பார்த்தால் முதலில் வீடுகளுக்கு நாம் அஸ்திவாரம் பலமாகப்போடுவது போல், நாலு பக்கங்களிலும் **அஸ்திவார ரேகைகள்** *(Foundation lines)* என்று கூறத்தக்க அழுத்தமான நூல்களை மரங்களிலோ, சுவர்களிலோ, வேலிகளிலோ, மற்றவிடங்களிலோ கட்டுகிறது. மரங்களிலோ, வேலிகளிலோ வலைகட்டும்போது, முதலில் ஓரிடத்தில் தன் நூலரும்பிலிருந்து உண்டாகும் பிசினை ஒட்டி, பக்கத்துக்கிளையின்மேலோ, முள்ளின்மேலோ நடந்துகொண்டே சென்று, அந்நூலை இழுத்து மற்றொரு முனையை எதிர்ப்பக்கமாகச் சேர்க்கும். சில வேளைகளில், சுலபமாக நடந்து செல்வதற்குக் கிளைகள்போன்ற வழி கிடைக்காமல், நடுவில் பெரிய பள்ளங்கள் இருக்கலாம்; இச்சமயங்களில், சிலந்தியானது ஒரு முனையை முதலில் ஓரிடத்தில் இணைத்துவிட்டு, அங்கிருந்து பலமான ஒரு நூலில் ஆகாயத்தில் தொங்கிக்கொண்டு இருக்கும்; இப்படி தொங்கிக்கொண்டிருக்கும்போது, ஸைகரிய மான காற்றினால் எதிர்ப்பக்கம் அடித்துக்கொண்டு போகப்பட்டு, அங்கு நூலின் மற்றொரு முனையை இணைக்கும்.

இம்மாதிரியாக, அஸ்திவார இரேகைகளைக் கட்டின பிறகு, ஓர் இரேகையின் மத்தியிலிருந்து மற்றோர் இரேகையின் மத்தியபாகத்திற்குக் **குறுக்குநூலொன்றை** நூற்றுக் கட்டும். பிறகு இந்நூலின் மத்திய பாகத்தின்வழியாகப் பல குறுக்கு நூல்களை நூற்று, வண்டிச் சக்கரத்தின் இலைகள் போன்ற பல **இலைரேகைகளை** நூற்கின்றது. இதற்குப் பிறகு, சக்கரத்தின் குடத்திற்குச்சரியாக, இலை ரேகைகள் சந்திக்கும் இடமாகிய மத்திய பாகத்தைச் சுற்றி, சில நூல்களை வட்டாகாரமாக நூற்கிறது. இச்சுழல்களைப் **பிரதமசுழல்கள்** என்று சொல்லலாம். இவைகள் இலைகளுக்குச் சாரங்கள் போல் கெட்டியாக இருப்பதற்கு ஆதாரமாகின்றன. இதற்குப் பிறகு, இப்பிரதமசுழல்களுக்கு வெளியிலே, பிசினுள்ள நூல்களால் வெகு நெருக்கமாகச் சில நூல்களைக் கட்டுகின்றது; இச்சுழல்களைத் **துவிதீய சுழல்கள்** என்று கூறலாம். நெருக்கமாக நூற்கப்பட்ட இந்த நூல்களே முக்கியமான வலையாகும். இந்நூல்கள் பிசினுள்ளனவாக இருப்பதால், ஈ, கொசு முதலான




சிலந்தியின் வலை.

பிராணிகள் சுலபமாக ஓட்டிக்கொண்டு வலையில் மாட்டிக்கொள்ளுகின்றன.



சிலந்தியின் கால்.

சிலந்தியின் காலானது மெல்லிய நூல்களின்மேல் துரிதமாக ஓடுவதற்கேற்றபடியும் நூல்களை வேண்டியபடி முறுக்கியோ, நறுக்கியோ செய்வதற்கேற்றபடியும் அமைந்திருக்கிறது. இவ்விதம் வலையைக் கட்டின பிறகு, வலையினருகே தான் தங்குவதற்கு ஓரிடத்தை நிருமித்துக்கொள்கிறது. மழையிலும் வெயிலிலும் திறந்துள்ள இவ்வலையில் வசிப்பது அசௌகரியந்தானல்லவா? இது காரணமாக வலையினருகிலேயே, ஒரு மறைவில் தன் வாசஸ்தானத்தைக் கட்டிக்கொண்டு தன் இருப்பிடத்துக்கும், வலைக்கும் ஒரு நூலிணைப்பைச் செய்துகொள்கிறது. வலையில் ஏதாவது ஒரு பூச்சி சிக்கிக்கொண்டால், இந்நூலிணைப்பினுல் தனது கிருகத்திலிருந்துகொண்டே இந்தச் சமாசாரத்தைத் தெரிந்துகொள்ளும். சிலந்திப்பூச்சி தன்வலையையும், கிருகத்தையும் கட்டி முடித்தபிறகு, தன் ஆகாரத்தை எவ்விதம் கைப்பற்றுகிறதென்பதைக் கவனிப்போம்.




சிலந்தியின் விஷக்கருவிகள்.

காலைவேளைகளில் புஷ்பங்களுள்ள தோட்டங்களில் சிலந்தி தனது வலையில், எட்டுக் கால்களையும் எட்டு இலைகளுக்குச் சரியாக நீட்டிக்கொண்டு இறந்துபோனதுபோல் பதுங்கி வலையுடன் வலையாக இருப்பதைப் பார்த்திருக்கலாம்; காலைவேளைகளில் மலர்ந்துள்ள புஷ்பங்களைத் தேடிக்கொண்டு தோட்டங்களுக்குச் சிறு பூச்சிகள் பறந்துகொண்டுவரும் காரணத்தால், இச்சமயங்களில், சிலந்தி தன் உணவை எதிர்பார்த்துக்கொண்டு இவ்விதம் வஞ்சகமாகத் தங்கியிருக்கும். சிலந்தியின் அதிர்ஷ்டவசத்தால் ஏதாவது ஒரு பூச்சி, வலையில் அகப்பட்டுக்கொண்டால் இது சரேலென்று பூச்சியிடம் சென்று நூல்களால் அதைச் சுற்றி விஷக்கருவியினுல் அதைக்கொன்றுவிடும்; சிலந்திக்குப் பசியாக விருந்தால் உடனே அதன் சாரத்தை உறிஞ்சிச் சக்கையை எறிந்துவிடும். பசிக்குப் போதுமான அளவிற்குமேல்

ஆகாரம் வந்து விழுந்தால், அவற்றை நூல்களாற் கட்டித் தனது கிருகத்திற்குக் கொண்டுபோய் ஜாக்ரதையாக வைக்கும். இவ்விதம் செய்த பிறகு, வலைக்கு சேரிட்டு கெடுதலை உடனே பழுதுபார்க்கும். சில சமயங்களில் வலையின் மத்தியில் இராமல், தனது கிருகத்தில் பதுங்கி யிருக்கும்; அப்போது வலையில் ஏதாவது விழுந்து அகப்பட்டுக்கொண்டால், நூலிணைப்பினால் சமாசாரம் தெரிந்து, அதனிடம் செல்லும்.

காடுகளில் குழிகள் வெட்டி மனிதர்கள் யானைகளைப் பிடிப்பது போல், ஆன்ட் லையன் (*Ant-lion*) என்று கூறும் ஒரு வகைப் பிராணி, தன் ஆகாரமாகும் எறும்புபோன்ற சிறிய ஊரும் பூச்சிகளைக் குழிதோண்டிக் கைப்பற்றுகின்றது. இப்பிராணியைச் சாதாரணமாக 'எறும்புகளுக்குச் சிங்கம்' என்று பொருள்படும்படி ஆங்கிலத்தில் ஆன்ட் லையன் என்று கூறுகின்றனர். தளர்ந்த மெல்லிய மண்ணுள்ள இடங்களில் பொனல் (*Funnel*) போன்ற சிறு குழிகளையும், அவற்றினுள்ளிருந்து குழிப்பன்னி என்று கூறும் சிறு பூச்சிகளைச் சிறுவர்கள் எடுத்து, "பன்னி, பன்னி, உச்சுக் கொட்டு" என்று சொல்லி விளையாடுவதையும் பலர் பார்த்திருக்கலாம். இந்தப் பூச்சி காலக்ரமத்தில் தும்பி அல்லது தட்டாரப் பூச்சியைப் (*Dragonfly*) போன்ற ஒரு பிராணியாக மாறும். கம்பளிப்பூச்சி வளர்ந்து வண்ணத்திப் பூச்சியாக மாறுவதுபோல் இந்தக் குழிப்பன்னியும், இறகு முளைத்துப் பெரிதாகிறது. இக் குழிப்பன்னியின் தலைப்பாகம் மண்ணைப் பறிப்பதற் கேற்றபடி தட்டையான கரண்டிபோலிருக்கிறது. இதன் கால்கள் பலமற்றனவாக விருப்பதால், தன் உணவாகும் பிராணிகளைப் பின்தொடர்ந்து செல்லும்படியான ஸ்திதியில் இஃது இல்லை. ஆகையால் ஆகாரத்தைக் கைப்பற்ற வேறு உபாயத்தை அனுசரிக்கிறது. இக்குழிப்பன்னி பறக்கமுடியாமல் குழந்தைப் பருவத்திலிருக்கும்பொழுது பூமியில் பொனல்போன்ற குழிதோண்டி அதனுள்ளே வசிக்கிறது. முதலில் உடலின் பின்பாகத்தைப் பூமியில் அமுத்திக்கொண்டு தேகத்தைச் சுற்றிச் சுற்றிப் பொனல்போல் குழி செய்யும். பிறகு தட்டையான தலையினாலும் கால்களினாலும் மண்ணைத் தோண்டும். இவ்விதமாகக் குழிசெய்து அதனடியில் மண்ணினுள்ளே தலையை மேற்புறமாகவும் தேகத்தை மண்ணில் புதைத்துக்கொண்டும் மறைந்து கிடக்கும். எறும்புகள் சாதாரணமாக




குழிப்பன்னி.

எங்கும் நடமாடுவதால், அவ்வழியாகச் செல்லும் ஓர் எறும்பு அக்குழியைக்கண்டு தன்புற்றுக்குவேண்டிய ஆகாரம் ஏதாவது கிடைக்காதா வென்று எட்டிப் பார்க்கும்போது மண் தளர்ந்து குழியினுள்ளே விழ நேரிடுகிறது. இம்மாதிரி விழுந்த எறும்பு வெளியே தப்பித்துக்கொண்டு போகத் தத்தளிக்கையில், குழியின் உள்ளேயிருந்து குழிப்பன்னி மண்ணைக் கிறு கிறு வென்று பறித்து எறும்பை மேலேறவொட்டாமலும், மண்ணினுள்ளே புதையும்படியும் செய்கிறது. உடனே தன் கூர்மையான தாடைகளால் எறும்பைக் குத்திக் கொன்று அதன் சாரத்தை உறிஞ்சும்.




குழிப்பன்னியும் போனலும்.

தூண்டில்கள் போட்டு மனிதர்கள் மீன்கள் பிடிப்பதுபோல், ஒரு விதமான மீன் மற்றச் சிறுமீன்களைத் தூண்டில் போட்டுப் பிடித்துத் தின்னுகிறது. இதற்குத் தூண்டிலானது தன் தேகத்திலேயேசேர்ந்து ஒருசதையாகவளர்ந்து இருக்கிறது. இம்மீனின் தலை வெகு பருமனாகவும், வாய் வெகு அகலமாகவும் இருக்கும். இதன் தலையில் நீண்ட மெல்லிய நூல்கள்போன்ற அமைப்புகள் இருக்கின்றன. இவற்றுள் ஒன்று மிகவும் நீண்டு தனியில் சிறு குஞ்சத்துடன் கூடியிருக்கிறது. இந்தக் குஞ்சமும், நூலமைப்பும் தண்ணீரில் மிதக்கும் போது தூண்டிற் கயிற்றில் வைக்கப்பட்டிருக்கும் புழுவின் தோற்றத்தை ஒத்திருக்கும். இம்மீனைது சமுத்திரத்தில் தேகத்தை மணலில் புதைத்தக்கொண்டு தூண்டில்போன்ற குஞ்சத்தை வெளியே



தூண்டில் மீன்.

நீட்டிக்கொண்டு பதுங்கியிருக்கையில் மற்றச் சிறு மீன்கள் இக் குஞ்சத்தைக் கடலில் வாழும் புழுவென்று நினைத்துத் தின்பதற்கு ஆவலுடன் அருகே வருகின்றன. அந்தச் சமயத்தில் இம்மீன், அச்சிறுமீன்களின் மேல் சரேலென்று பாய்ந்து அவற்றை விழுங்கி விடும்; அவற்றை விழுங்குவதற்கேற்றபடி அம்மீனுடைய வாய் மிகப் பெரிதாகவும், விழுங்கிய மீன்கள் வெளியே தப்பித்துக் கொண்டு வராமல் இருக்கும்பொருட்டுக் கூரிய பற்கள் அநேகம் வாயினுள்ளே பின்புறமாக வளைந்தும் இருக்கின்றன. தவிர, இந்த மீனுக்கு வாயைச் சுற்றிலும் சில சதைகள் வளர்ந்திருப்பதால், இது தேகத்தை மண்ணினுள்ளே மறைத்துக்கொண்டிருக்கும் போது, ஏதோ கடற்பாசி வளர்ந்திருப்பதுபோல் தோன்றுமேயொழிய மீன் என்று தோன்றுவதில்லை.




பீச்சாங்குழல் மீன்.

படத்தில் காட்டியுள்ள ஒரு விதமான மீன் நீரோடைகளில் வசிக்கிறது. இதன் வாயானது குழல்போல் சிறிது நீண்டிருக்கும். பீச்சாங்குழல் வழியாகத் தண்ணீர் பீச்சுவதுபோல், இம்மீனானது தன் வாயினின்றும் தண்ணீரை அடிக்கக்கூடும். இம்மீன் ஆகாரத்தின் பொருட்டு, தண்ணீருக்கு மேலாகச்செடிகள் வளர்ந்திருக்கும் கரையோரத்தில் வந்து, நாணல்போன்ற அச்செடிகளின் மேல் வாயினின்றும் ஜலத்தைப் பீச்சி, அவற்றைத் தண்ணீரில் வீழ்த்தித் தின்கிறது.

காடுகளில் வேட்டைக்குச் செல்லுகிறவர்கள், காட்டுமிருகங்களுக்குத் தங்கள் இருப்பைப் பகிரங்கப்படுத்தாமல் இருக்கும் பொருட்டுத் தகுந்த உடைகளைத் தரித்து, மறைவிடங்களில் அசைவற்றுப் பதுங்கியிருந்து, அவைகள் அருகே வந்தவுடன் பாய்ந்து அவற்றைக் கொல்வதுபோல், பல பிராணிகள் தங்கள் ஆகாரத்தைக் கைப்பற்ற வஞ்சக வர்ணங்களைத் (*aggressive colours*) தரித்து, அசைவற்றுப் பதுங்கியிருந்து ஆகாரமாகும் பிராணிகள் அருகே வந்தவுடன் அவற்றின்மேல் பாய்ந்து கொல்லுகின்றன. படத்தில் காட்டியுள்ள பூச்சியானது பார்வைக்குப் புல் போன்றதாகவும், மூன்கால்கள் மிக நீண்டதாகவும் இருக்கும். இதன் மூன்கால்கள் இரண்

டையும் சேர்த்தாற்போல் வைத்துக்கொண்டு அசைவற்றிருக்கும் போது, இதை வைக்கோல் தரும் பாகக் கருதுவாரேயொழிய, பிராணியென்று அவருக்குப் புலப்படாது. தியானம் செய்யும் போது நாம் கைகளைச் சேர்த்துக் கொள்வதுபோல் இப்பூச்சி முன் கால்களைச் சேர்த்து வைத்துக் கொள்வதால் ஆங்கிலத்தில் தியானப்பூச்சி என்று அர்த்தமாகும்படி இதற்குப் பேரிட்டுளர். இம்மாதிரி இருக்கும் நிலையில் வேறு சிறிய தத்துக்கிளிபோன்ற பிராணிகள் இதன் இருப்பைக் கவனியாது அருகே வந்தால், தியான நிலையிலிருந்த கைகள் கொலைக்குத் தயாராகின்றன; உடனே அக் கைகளால் தத்துக்கிளி பிடிக்கப்பட்டு வாயினிடம் செல்லும்.



தியானப்பூச்சி.

இத்தியானப்பூச்சியின் வஞ்சக வுபாயமும், இவ்வியாசத்தில் கூறிய உபாயங்களும் மனிதர்கள், தாழ்ந்த பிராணிகளுக்குக் கற்பித்தனரோ? அல்லது மனிதர்கள் அவற்றினின்றும் கற்றுக்கொண்னரோ? அல்லது இவ்விருவர்களும் 'அவசியமே யுக்திக்கு முக்கிய காரணம்' என்ற பழமொழிக்கிணங்கப் பிராணதாரப் போராட்டத்தின் (*Struggle for existence*) கொடுமையால் ஜீவாதாரத்திற்கு இவ் வுபாயங்களைத் தனித்தனியே கண்டு பிடித்தனரோ?

பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம்

பி. ஆர். சிதம்பர ஐயர்


இந்தப் பூமியில் வசிக்கும் நமக்குச் சூரியனும் சந்திரனும் மிகவும் பிரதானமானவை. ஆகாயத்தில் பிரகாசிக்கும் ஆயிரக் கணக்கான ஜோதிகளில் சூரியனும் சந்திரனும் மிகப்பெரியனவாக நமக்குக் காணப்படுகின்றன. சூரியன் இல்லாவிட்டால் நமக்கு வெளியே சென்று யாதொருவேலையும் செய்ய முடியாதென்பதும், சூரியனது ஒளியினால் தான் இவ்வுலகில் எல்லாப் பிராணிகளும் தாவரங்களும் உயிர் பிழைத்திருக்கின்றன என்பதும் எல்லோருக்கும் தெரிந்தனவே.

இரவில் சந்திரன் உதித்தால் நமக்கு மிகவும் ஆனந்தமாய் இருக்கிறது. சிறுவர் சிறுமிகளுக்கு மிகவும் கொண்டாட்டம். நிலவில் விளையாட ஆரம்பித்தால் அவர்களுக்கு உறங்கக் கூட மனம் வராது. ஸ்ரீராமரும் தம் இளம் பிராயத்தில் சந்திரனைப் பார்த்து அதைப் பிடித்துத் தரவேண்டுமென்று அழுதார் என்று நாம் இராமாயணத்தில் படித்திருக்கிறோமல்லவா? இப்போப்பட்ட சந்திர சூரியர்கள் நமக்கு எவ்வளவு தூரத்தில் இருக்கிறார்களென்பதை நீங்கள் அறிவீர்களா? சந்திரன் சமீபத்திலும் சூரியன் மிக்க தூரத்திலும் இருப்பதாகத் தோன்றுகிறது. ஆகையினால் சந்திரனையே முதலில் நாம் கவனிப்போம்.

சந்திரன் சூரியனைக் காட்டிலும் பூமிக்கு அருகில் இருக்கிறதென்று நாம் சொன்னோமல்லவா? எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? நாம் ஒரு மேஜையின் ஓர் ஓரத்திலிருந்து மற்றோர் ஓரம் எவ்வளவு தூரம் என்று பார்க்கவேண்டுமானால் ஓர் அடிக் குச்சியால் அளந்து கணக்கிடுகிறோம். நமது வயல்களின் எல்லைகள் ஒன்றுக்கொன்று எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன வென்று பார்க்கவேண்டுமானால் 'ஸர்வேயர்கள்' உபயோகிக்கும் சங்கிலியைக் கொண்டு அளந்து கணக்கிடுகிறோம். ஆனால் பூமியிலிருந்து சந்திரனுக்கு யாராகிலும் ஒரு சங்கிலியை இழுத்துக் கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்களா? அல்லது ஆகாயத்தில் பறக்கும் ஆகாய விமானத்தில் (*Aeroplane*) ஏறிச் சென்று பார்த்து வந்திருக்கிறார்களா? இல்லையே. முன்காலத்தில் தசரதசக்கரவர்த்தி தன்

விமானத்தில் ஏறிச் சனிமண்டலத்திற்குச் சென்று சனி பகவானுடன் யுத்தம் புரிந்ததாகப் புராணங்களில் படித்திருக்கிறோம். ஆனால் அத்தகைய வல்லமையுள்ள மானிடர்களோ, பூமியின் வாயு மண்டலத்தைத் தாண்டிச்செல்லும் திறமையுள்ள விமானங்களோ அதற்கப்பால் இதுகாறும் இருந்ததாகத் தெரியவில்லை. இனி வருங் காலத்தில் இருக்கும் என்று நம்புவதற்கும் இடமில்லை. ஆனால் அப்படிப் பிரயாணம் செய்தோ சங்கிலி மூதலியவற்றினால்அளந்தோ தான் சந்திரனுடைய தூரத்தை அறிய முடியுமா, அல்லது வேறு உபாயம் ஏதேனும் உண்டா? எனின், உபாயம் ஒன்று உண்டு என் பதற்கு ஓர் உதாரணம் கூறுவோம்.

இங்கே காண்பித்திருக்கும் படத்தைப் பாருங்கள். *A B* என்பது ஒரு பெரிய நதி. *C* என்பது அந்த நதியின் அக்கரையில் நிற்கும் ஒரு மரம். *D* என்பது இக்கரை யில் நாம் இருக்கும் ஸ்தா னம் என்று வைத்துக்கொள் வோம். நதியில் வெள்ளம் வந்திருக்கிறது. *D* என்ற இடத்தில் நின்று ஒரு சர்வே சங்கிலியை இழுத்துக் கொண்டு ஆற்றைத் தாண்டி மரத்திற்குச் செல்லமுடியாது. ஆனால் *D* என்ற ஸ்தானத்திலிருந்து *C* என்ற மரத்தினுடைய தூரத்தைத் தெரிந்து கொள்ள, சர்வேயர் என்ன செய்வார்? *D* யிலிருந்து சிறிது தூரத்திற்கப்பால் இக்கரையி லேயே E என்ற ஒரு ஸ்தானத்தை வைத்துக்கொண்டு *D E* என்ற ஒரு நேர் கோட்டைக் கிழிப்பார். *D* என்ற இடத்தில் தம் கருவி *(Theodolite)* யை வைத்து அதன் வழியாய் *C* என்ற மரத்தைப் பார்ப்பார். அப்போது *D C* என்ற திசையில் செல்லும் நேர் கோட்டிற்கும் *D E* என்ற நேர் கோட்டிற்கும் இடையிலிருக்கும் *C D E* என்ற கோணம் எவ்வளவு என்பதை அவருடைய கருவியி லிருந்து அறிந்து விடலாம். அதேமாதிரியாக அந்தக் கருவியை *E* என்ற இடத்தில் நகர்த்திவைத்துக்கொண்டு *E C* என்ற திசைக் கும் *E D* என்ற நேர் கோட்டிற்கும் இடையிலுள்ள கோணத்தின் அளவையும் கண்டு பிடித்து விடலாம். *D E* என்ற நேர் கோட்டின் நீளத்தை அக்குச்சியினாலோ சங்கிலியினாலோ அளந்து சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். இப்போது *CDE* என்ற திரிகோணத்தைக் கவனித்தால் அதன் ஒரு பக்கமாகிய *D E* என்ற நேர் கோட்டின்



நீளமும் அதனிருபக்கத்திலுமிருக்கும் $C\ D\ E$, $C\ E\ D$ என்ற கோணங்களின் பரிமாணமும் தெரிந்துகொள்வோம். இம் மூன்றும் ஒரு திரிகோணத்தில் நாம் அறிவோமாயின், அதனுடைய மற்றிரு பக்கங்களாகிய $D\ C$, $E\ C$ என்பவற்றின் நீளங்களையும் திரிகோண மிதி (*Trigonometry*) என்ற கணித சாஸ்திரத்தின் உதவியால் எளிதில் அறியலாம். ஆகவே, இவ்வாறு ஆற்றைங்கடக்காமலே ஆற்றின் அக்கரையில் நிற்கும் ஒரு மரத்தைக் கண்டு பிடித்து விடலாமல்லவா? இது போலவே சந்திர மண்டலத்துக்குப் போகாமலே நமக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தையும் கணக்கிட்டறியலாம். அஃது எப்படி என்பதை அடுத்தமுறை கூறுவோம்.



மனிதவர்க்கத்தின் முதற் புத்தகங்கள்

ஓ. பி தேசிகன்

ஆறறிவு படைத்த மனிதன், தன் மனத்தில் அரும்பிய எண்ணங்களை அக்ஷர வடிவில் வெளிப்படுத்துவதற்கு நெடுங்காலம் முன்னிருந்தே மனித வர்க்கத்தின் இலக்கிய வளர்ச்சியின் வரலாறு ஆரம்பமாகிறது.

உலக நாகரிகத்தின் அருணோதய காலத்திற்கு முற்பட்ட ஆதி காலத்தில் மக்கள் காடுகளில் வசித்து, தமது மனக்குறிப்புகளைச் சாடைகளாலும் அங்க சேஷ்டைகளாலும் உணர்த்தியும், மரப் பட்டைகளையும் தழைகளையும் அணிந்தும், வேட்டையாடியும், மீன் பிடித்தும், தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தேடி அவற்றைச் சமைத்துத் தின்பதற்கு வகையறியாது பச்சையூனைகவும் காய் கனி கிழங்குகளாகவும் அவற்றைத் தின்றும், சுனை நீரையருந்தியும், கல்லினாலும் செம்பினாலுமாய மூரட்டுக் கருவிகளை உபயோகித்தும் வந்தனர். இங்ஙிலையில் தம்மைச் சூழ்ந்திருந்த வனவிலங்குகளின் இயற்கைக் குணம் மாறப்பெறுத ஆதி மனிதன் மூர்க்கத் தன்மையும் போர்க்குணமும் மேலிட்டவனாய், தன்னைச்சேர்ந்தாரோடு இடைவிடாது சண்டையிட்டு வந்ததுமன்றி, மிருகங்களையொத்த வாழ்க்கையினையே நடத்தி வந்தான்.

நாமறிந்த கலைகளிலே நாட்டிய சாஸ்திரம் ஒன்றே மிக மிகப் பழமை வாய்ந்ததாகும். ஆதிமனிதன், தனது பகைவர்கள் தன்னிடம் தோல்வியுற்று உயிர் துடித்து மடிவதைக் கண்டு மனங் கலங்காமல் பெருமகிழ்ச்சியுற்றுக் களிப்பெய்தினன். அந்தச் சந்தோஷ மிகுதியால் கூத்தாடி ஆனந்த பரவசமாயினன். துஷ்ட மிருகங்கள் களிப்பினால் உறுமி ஊளையிடுவதைப் போன்றதோர் பெருங் கூச்சலிட்டுத் தன் மகிழ்ச்சியின் பெருக்கை அவன் வெளியிட்டான். முதலில் பொருளும் பேதமும் அற்ற இவ் வெற்றிக் கூச்சலும் ஆரவாரமும் நாளடைவில் ஏதோ ஒருவிதமான மனக்

குறிப்பை யுணர்த்துவனபோல் காணப்பட்டன. அதன்பின் அவ னுடைய கூத்துக்கும் அரை குறையான பொருட் குறிப்பை யுணர்த் தும் இப் பெருங் கூச்சலுக்கும் ஒன்றோடொன்று பொருந்துவது போன்ற சம்பந்த முண்டாயிற்று. உலகில் முதன் முதலாகத் தோன்றிய யுத்த கோஷமும் அதன் பின்னர் யுத்தப் பாட்டும் இவ் வாறுதான் உண்டாயின.

எத்தனையோ காலத்திற்கப்பால், மனிதகோடியின் விகாஸ முறையில் அவர்கள் பல் வேறு பகுதியினராகப் பிரிந்து ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிராமல், ஆடுகளையும் மாடுகளையும் வளர்த்து, அவைகளினின்றும் தமக்கு வேண்டிய இருப்பிடம், உடை, ஆகாரம் முதலியவைகளைத் தேடிக் கொண்டு, நெடுங்காலம் வரையில் கூட்டங் கூட்டமாகச் சஞ்சரித்து, உல்லாஸமாகப் பொழுது போக்கி வந்தனர்.

முடிவில் அவர்கள் இவ்வலைச்சல் வாழ்க்கையிலும் வெறுப் படைந்தவராய்ச் சீதோஷ்ணமும் நிலவளமும் மிக்க நாடுகள் பல கண்டு பூமியைத்திருத்தி வளப்படுத்தி, தமக்கென உறைவிடங்கள் பல அமைத்துக்கொண்டனர்; தமது நானாவிதமான சக்திகளைப் பல துறைகளிலும் பயன் படுத்துவதற்கேற்ற நகரங்களையும் கிராமங் களையும் நிருமாணித்து அவற்றை இயற்கையாலும் செயற்கை முறைகளாலும் அரண் செய்து வந்தனர். நாளடைவில் அவர்கள் பயிர்த்தொழில், பண்டமாற்றுதல், முதலிய நாகரிகத்திற்கனுகுண மான நற்றொழில்களைக் கற்பனை செய்யத்தொடங்கினர்.

இதனிடையில் பல நாட்களாயின. மக்களிடையே கடவு ளுணர்ச்சி மெல்ல மெல்ல அரும்பி மலர்ந்தது. "மனிதசக்திக் கும் மேம்பட்டதோர் சக்தி உள்ளது; சராசரங்களனைத்தையும் இயக்கும் ஈசன் ஒருவன் உளன்; அவன் வணங்குதற்குரியவன்" என்பன போன்ற சாமானிய எண்ணங்கள் மனிதவர்க்கத்தின் மனத்தை அலைக்கத் தலைப்பட்டன. கடவுளைக்குறித்து வேண்டு கோள்களும் வணக்கங்களும் செய்யப்பட்டன. அந்த வேண்டுகோள் களும் துதிகளும் கர்ணபரம்பரையாக வழங்கிவரலாயின. தலை முறைக்குப்பின் தலைமுறையாக மனிதவர்க்கம் அவற்றை மனப் பாடம்செய்து ஒப்பித்து வந்தது. ஒவ்வொரு தலைமுறையும் தனக் குச் சிறந்தனவாகத் தோன்றியவற்றைப் புதியனவாக அதனுடன் சேர்த்துக்கொண்டது.

இவ்வாறாக மிருகப்பிராயம் நீங்கி நாகரிக உணர்ச்சியென்பதை முதன் முதலாகப்பெற்றவுடன் ஆதிமனிதன் தனது மனக்குறிப்புக் களையும் உள்ளக்கிளர்ச்சியையும் புற உலகிற்கு எளிதில் உணர்த்த

வல்ல சாதனங்கள் எதையேனும் கண்டுபிடிக்க ஆவலுள்ளவன் ஆயினன். மூன்றுவித முக்கியமான காரணங்களால் அவன் அவ்வாறு செய்யவேண்டியது இன்றியமையாததாயிற்று : மறக்க முடியாத—மறக்கவுங்கூடாத—எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்தன; அவைகளைப்பற்றிய நினைவை மறந்துவிடுவது மிகுந்த ஆபத்துக்கிடந்தருவதாயிருந்தது; ஆதலின், அவற்றை நெடுங்காலம் வரையில் நினைவினின்றும் அகலாமலிருப்பதற்காகப் பதிந்துவைத்திருக்கவேண்டியது அத்யாவசியமாக ஆயிற்று. அன்றியும் தன்னிடமிருந்து பிரிந்து தூரத்தில் இருக்கும் மக்களுக்குச் செய்தி ஏதேனும் அறிவிக்கவேண்டும். தன்னுடைய சொத்துகளையும், உடைமைகளையும், ஆயுதங்களையும், கால் நடைகளையும் மற்றவர்களுடையவற்றினின்றும் வேறுபடுத்திக் காட்டுவதற்குத் தெளிவான அடையாளம் ஏதேனுமோர் முறையில் செய்யவேண்டும். இவ்வாறுதான் ஆதிமனிதன் தனக்குத்தானே அகூரங்களையோ அல்லது தனது உள்ளக்கருத்தை வெளியிடும் அறிகுறிகளையோ உபயோகப்படுத்துவதற்குக் கற்பனை செய்துகொண்டான். தனது சொந்த நன்மையையும் ஆத்மலாபத்தையும் முற்றிலும் மனத்திற் கருதியே அவற்றின்பொருட்டு எழுதுவதற்குக் கற்றுக் கொண்ட பூர்விகமனிதன், முதலெடுப்பில் தான் வணங்கிய கடவுளரின் வந்தனை வழிபாட்டையும், அவரைக்குறித்த தோத்திரங்களையும், யுத்தப்பாடல்களையும் வெகுகாலம் வரையில் பாதுகாத்துவைப்பதற்குரிய அருஞ்சாதனமொன்றைத் தேடிக்கொண்டவன் ஆனான். ஆனால் ஆதிமக்களிடையே இவ்வாறு தாமாக எழுதுவதற்குக் கற்றுக் கொண்டவர் மிகச் சிலரே. அவர்கள் எழுதியவற்றை அறிந்துகொள்ளக்கூடியவர் அதனினும் மிக மிகச் சிலரே யாவர்.

சால்டிய நாட்டுக் களிமண் புத்தகங்கள்
(*Clay Tablets of Chaldea*)

பூர்விக மனிதன் தனது மனத்தோற்றங்களை எழுத்தளவிலேனும் உருவங்களாகவேனும் வெளிப்படுத்தக் கருதியபோது, அவைகளை முதன் முதலாகக் கற்பாறைகளின் மீதே கோணல் மாணலாகச் செதுக்குவித்தான் என்று சொல்லிலக்கண நூலாசிரியர்களும் மொழியாராய்ச்சியாளர்களும் கூறுவர். இந்தக் கல்வெட்டுகளை எழுத்தாளியொருவன் முதலில் வரைந்துகொண்டே செல்லுகையில், இவற்றைக் கல்தச்சன் ஒருவன் தனது ஆயுதங்கொண்டு மிகவும் ஆழமாகச் செதுக்கிக்கொண்டே சென்றிருக்கவேண்டும். தான் செதுக்கும் வடிவங்களின் பொருள் யாதென்பதை இவற்றைச் செதுக்கும் மனிதன் அறிந்தானில்லை. அதன் பிறகு களிமண்ணைப் பிசைந்து சதுரவடிவமாகச் செய்து வெயிலிற் காய

வைத்து அதன் மீது எழுத்தாணி கொண்டு எழுதுவித்தான். புராதன மனிதன் எழுதிய இக் களிமண் புத்தகங்கள் பலவற்றை ஸர் ஹென்றி லேயார்ட் என்பவர் சால்டியா (*Chaldea*) நாட்டினின்றும் கண்டெடுத்தார். தொன்மை வாய்ந்த இக் களிமண் புத்தகங்களில் ஒன்று தற்சமயம் பிரிட்டிஷ் மியூஸியம் என்னும் கண்காட்சி சாலையிலுள்ளது. நமக்குத் தெரிந்தவரையில் இதுவே உலகத்தில் மிகமிகப் பழமை வாய்ந்த எழுத்துக்குறிப்பாகும். களிமண் பலகைகளில் (*Clay Tablets*) பொறிக்கப்பட்டுள்ள வரலாறுகள் கிருஸ்து பிறப்பதற்கு 4000 ஆண்டுகளுக்கு முன், அதாவது இற்றைக்கு 6000 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டிருத்தல் வேண்டுமென இது போழ்து கருதப்படுகிறது. விவிலிய வேதத்தில் (*Bible*) காணப்படும் 'மஹாப்பிரளயத்தின்' (*The story of the flood in the Book of Genesis*) வரலாற்றையும், பைபிள் தோன்றுவதற்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் சால்டியர்கள் எழுதி வைத்திருக்கும் குறிப்புக்களைத் தழுவியே யூதர்கள் எழுதியிருக்க வேண்டுமெனக் கருதுவதற்கும் இடமுண்டு.

இந்நிலவுலகமெங்கும் உயிர் வாழ்ந்து வருகின்ற பல்வேறு மக்கட் குழுவினருள், தொன்று தொட்டு நாகரிகம் உடையவராய்ச் சிறப்புடன் திகழும் வகுப்பினர் சிலரேயாவர். அவர்கள் எகிப்தியர், பாபிலோனியர், சால்டியர், அஸிரியர், யூதர், பாரஸீகர், ஆரியர், தமிழர், பெரூவியர், மெக்ஸிகோ நாட்டினர் என்பவரேயாம். அவர்களிடையே சால்டியர் புராதன காலத்திலேயே ஏனைய எல்லார்தம் நாகரிக வாழ்க்கையினும் மிக்க பழமையும் சிறப்பு முள்ளதோர் நிலைமையினை யெய்தி இற்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாக அரசியல் துறையிலும் சமயவுணர்ச்சியிலும் செல்வப்பெருக்கிலும் வியக்கத்தக்க மேம்பாடு அடைந்திருந்தனர்.

சால்டியர்கள் தமது அக்ஷரங்களை ஒரு விசித்திரமான முறையில் அமைத்து வந்தனர். அந்த அக்ஷரங்களில் ஒவ்வொன்றும் ஓர் ஆப்புப் போன்ற (*wedge*) உருவமுடையது. இவ்வாறு ஓர் ஆப்பினாலோ, அல்லது பல ஆப்புத் துண்டுகளாலோ இடது புறத்திலிருந்து வலப்புறமாகச் சதுரமுனையுள்ளதோர் எழுத்தாணி கொண்டு வரையப்பட்ட எழுத்துக்கள் அல்லது வடிவங்களே சால்டியர்களின் மொழிக்குறிப்பாகும்.

எழுத்தாளிகளும் புரோகிதர்களும்

சால்டிய எழுத்தாளிகள் அத்தேயத்து அரசாங்கத்தில் சம்பளம் பெற்று வந்தனர். அரசர்கள் போர்க் கோலங்கொண்டு யுத்த

முனைக்குச் செல்லுங்கால் அவர்களைப் பின் தொடர்ந்து சென்ற திரளான ஜனங்களில் எழுத்தாளியும் ஒருவனுவான். உண்மையில் மற்றத் தொழிலாளிகளையும் ஊழிய வர்க்கத்தினரையும் காட்டிலும் எழுத்தாளியே அரசர்களுக்கு அக்காலத்தில் பேருதவியாக இருந்து வந்தானென்பதில் ஐயமில்லை; ஏனெனில் யுத்தத்தில் எத்தனை பட்டணங்கள் பிடிக்கப்பட்டன, பகைவர்களில் இறந்துபட்டோரின் எண்ணிக்கை எவ்வளவு, யுத்தத்தில் தாம் கைப்பற்றிய பொருள்களின் அளவும் மதிப்பும் எவ்வளவு என்பவற்றைப் பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுப்பது அவனுடைய கடமையே யாகும். இதனிடையில் தமது மன்னர்களின் பராக்கிரமத்தையும் ஆற்றலையும் குறித்துப் புகழ்மாலை பாடுவதும் அவனுடைய தொழிலேயாம்.

சால்டியச் சமய நூல்களை இயற்றிய ஆசிரியர்களும் புரோகிதர்களும் அரசாங்கப் பொக்கிஷத்தினின்றும் ஊதியம் பெற்று வந்தனர். யுத்த அறிக்கைகளையும் தெய்வ வணக்கப் பாடல்களையும் தவிர்த்துச் சால்டியக் களிமண் புத்தகங்களிடையே பயிர்த்தொழில், சோதிடம், அரசியல் முதலியவைகளைப் பற்றி உரைக்கும் நூல்களும் பல வுள. ஸ்ரீமான் லேயார்டும், பிற அவிரியச் சிலாசாஸன ஆராய்ச்சியாளர்களும் கண்டு எடுத்திருக்கும் களிமண் பலகைகள், வெகு காலத்திற்குமுன் நினேவே (*Nineveh*) என்னுமிடத்திலிருந்த ஸெனஞ்சரிப் (*Sennacherib*) என்பவரது புத்தகசாலையை அலங்கரித்திருக்கவேண்டுமென்று பலர் கருதுகிறார்கள். ஸென்ஞசரிப் என்பவர் கிருஸ்து பிறப்பதற்கு 681 ஆண்டுகளுக்கு முன் மரித்தாகக் கூறப்படுகிறது.

எகிப்தியர் நாகரிகம்

நாகரிக வாழ்க்கையில் சால்டியர்களுக்கு அடுத்தபடியாகத் தலை சிறந்து நின்றவராகச் சொல்லப்படுவதற்கு ஏற்ற மெய்ச்சான்று வாய்ந்த பண்டை நாகரிகமக்கள் எகிப்தியரே என்பது வரலாற்று நூலாசிரியர்களின் முடிபாகும். எகிப்தியர் தமது நூல்களைப் பாபிரஸ் (*Papyrus*) என்னும் பொருளின்மீது எழுதி வந்தார்கள். பாபிரஸ் என்பது நைலநதிப் பள்ளத்தாக்குகளில் ஏராளமாகச் செழித்து வளர்ந்த ஒரு வகை நாணற் புல்லினத்தைச் சேர்ந்ததாகும். அதனுடைய சோறு அல்லது உள்பட்டையைக் காகிதம் போலச் செய்து, அதன்மீது மூங்கில் பிரம்பு அல்லது புற்களால் செய்யப்பட்ட எழுதுகோலைக்கொண்டு எழுதுவித்தனர்.

மரித்தோர்களின் புத்தகம் (*The Book of the Dead*)

இதுகாறும் நமக்குத் தெரிந்த வரையில், எகிப்திய நூல்களினிடையே மிகவும் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படுவது 'மரித்

தோர்களின் புத்தகம்' (*The Book of the Dead*) எனப் பெயர் வழங்கும் தொகைநூலேயாகும். எகிப்தியர்கள் குவியல் கோபுரங்களையும் (*Pyramid*) நிலத்தின்கீழ் புதைந்த அரண்மனைகளையும் கட்டுவித்த பன்னெடுங்காலத்திலேயே மரித்தோர் புத்தகமும் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். அப் புத்தகத்தின் பிரதியொன்று பிரிட்டிஷ் மியூஸியத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுளது. அந்நூலை விரிவாக ஆராய்ச்சி செய்திருக்கும் ஜார்ஜ் பட்ணம் (*Mr. George Putnam*) என்னும் அறிஞர் அப்புத்தகத்தில், எகிப்தியக் கடவுளர்களைக் குறித்து வணக்கமும், வாழ்த்துப் பாடல்களும், பிரார்த்தனைகளும் இம் மண்ணுலகில் உயிர் நீத்தவர்களின் ஆவி மறுவுலகை யடையுமுன் எவ்விதமான அனுபவங்களுக்குட்படுகின்றன வென்பதும், அவர்களுடைய பூர்வ ஜன்ம வரலாறுகளின் சுருக்கமும், பின்பு மறுபிறப்பு எய்துமுன் அவர்களுக்கு விதிக்கப்படும் தீர்ப்புக்களின் வருணனைகளும் அடங்கியிருப்பதாகக் கூறுகிறார்.

எகிப்தியர்களின் சடங்குகளில் 'மரித்தோர் புத்தகம்' சிறப்பானதோர் இடம் பெற்றிருக்கிறது. பூர்வீக எகிப்தியர்களின் சமாதிகளில் அவர்களுடைய சவங்களுடன் இப்புத்தகத்தின் பிரதியொன்றையும் அடக்கம் செய்வார்கள். மறுவுலகில் மனிதனது ஆத்மாவானது பிரயாணம் செய்வதற்கு இப்புத்தகம் ஒரு நல்வழிகாட்டியாக இருக்குமென்று எகிப்திய மக்கள் நம்பி வந்தனர். இப்புராதன வழக்கத்தைக் கவனிக்குமிடத்து எகிப்து நாட்டுச் சவ அடக்கம் செய்தவர்களையே சரித்திரத்திலே முதலாவது புத்தக வியாபாரியாகக் கொள்ளலாம்.

எகிப்தியக் கடவுளர்களிடையே தோத்-ஹெர்மீஸ் (*Thoth-Hermes*) என்பவர் எழுத்தறியும் பெருமாளாகவும், புத்தகாலய மண்டபத்தின் அதிபதி (*Lord of the Hall of Books*) யாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். அந்நாட்டு மக்களின் அறிவுணர்ச்சி கோயில்களிலும் பிரதிபலித்ததற்கு இஃதோர் அறிகுறியாம். எண்ணிக்கையிலும் விஷயக்குறிப்பிலும் பெரிதும் பரந்தனவாக இருந்த எகிப்திய நூல்களில் மிகச் சிலவே நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றிலும் பெரியதோர் பகுதி மதச் சார்புடையதாக இருக்கின்றது. அரசியல் நூல்களும் ராஜாங்கத்திற்குப் பெரிதும் பயன்படுவதான லௌகிக நூல்களும் மட்டுமேயன்றிக் கற்பனைக் கதைகளும் ஜனசமுதாய நூல்களுங்கூட எகிப்திய இலக்கியங்களிடையே மிளிர்ந்தன.

அதனைத்தொடர்ந்த நூற்றாண்டுகளில் மதம், ஒழுக்கம், சட்டம், தர்க்கம், கணித சாஸ்திரம், பீஜகணிதம், வைத்தியம் முதலிய

ஒவ்வொரு துறையிலும் விரிவான நூல்கள் எகிப்திய நாட்டினின்றும் வெளிப்போந்தன. தேசசஞ்சாரம் நாவல் என்பனபோன்ற விஷயங்கள்கூட அலக்ஷியம் செய்யப்படவில்லை. அப் பெருநூற்பெருக்கத்தில் இப்பொழுது எஞ்சியுள்ளன மிகச்சிலவே. வெகு காலத்திற்குப்பின்தோன்றிய—உலகத்தின் முதல் நூல் நிலயமாம்—அலெக்ஜாந்திரியா புத்தகசாலையிற்கூட எகிப்திய நூல்களிருந்தனவெனக் கூறுவதற்கியலவில்லை. ஏனெனில், அப்புத்தகாலயத்தில் கிரேக்க நூல்களே மிகவும் அருமையாகச் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

மரித்தோர்களின் புத்தகங்களுக்குஅடுத்தபடியாக உலகில் பழமை வாய்ந்ததாகக் கருதக்கூடிய வேறொரு புத்தகமும் அந்நாட்டில் உளது. அதற்கு தா-ஹாதெப்பின் உபதேசங்கள் (*The Precepts of Ptah-Hotep*) என்று பெயர் வழங்குகிறது. இப்பூமண்டலத்திலேயே அஃதொன்றுதான் மிகத்தொன்மை வாய்ந்த கிரந்தமெனக் கூறப்படுகிறது. தா-ஹாதெப் என்பவர் மெம்பிஸ் (*Memphis*) என்னுமிடத்தில் ஏசுகிருஸ்து பிறப்பதற்கு 3550 ஆண்டுகளுக்கு முன் உயிர் வாழ்ந்திருந்தனராம்.

மோஸஸ் என்பவர் உலகில் ஜனிப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன், இந்திய வேதங்கள் புத்தகவடிவில் வெளித்தோன்றுவதற்கும் 2000 வருஷங்களுக்கு முன்னதாகவே, இப்புத்தகம் எழுதப்டிருக்கவேண்டுமென்பது அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்படுவதிலிருந்து, அஃது எத்துணைப் பழங்காலச்சிறப்புடையது என்பதை நாம் ஒருவாறு அறியலாகும். பிரசித்திபெற்ற ஹோமர் என்னும் கிரேக்ககவியானவர் இலியட் என்னும் தமது அரிய காவியத்தை இயற்றுவதற்கு 2000 வருடங்களுக்கு முன்னும், ஸாலமன் என்னும் அறிஞருடைய பழம்பெருமொழிகள் பிரசித்தியடைவதற்கு அத்தனை நெடுங்காலத்திற்கு முன்னதாகவும் அப்புத்தகத்தை எகிப்தியர்கள் எழுதியுள்ளாரென்றால் அதனுடைய மாண்பினை என்னவென்று உரைப்பது? ஸாலமனுக்கும் நமக்கு மிடையேயிருக்கும் காலப்பகுதியைக் காட்டிலும் ஸாலமனுக்கும் தா-ஹாதெப்பிற்கு மிடையேயுள்ள காலப்பகுதியே மிகவும் அகன்றதாகும்.

அந்த உபதேசங்கள் யாவும் 23 அடி 7 அங்குலம் நீளமும், 5 அடி அகலமு முள்ள பாபிரஸ் பட்டைகளில் எழுதப்பட்டுள்ளன. பாரிஸ் நகரத்துத் தேசீயக் கண்காட்சி சாலையில் (*Biliotheque Nationale*) அவைகளை இன்றும் காணலாம்.

கன்பூஷியஸின் மதக்கிரந்தங்கள்

ஐரோப்பிய இலக்கியங்கள் தலையெடுப்பதற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு முன், சீன தேசத்தில் புத்தகங்கள் பெருவாரியாக

இயற்றப்பட்டன. கிருஸ்து பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்குமுன் சீனாவில் தோன்றிய கன்பூஷியஸ் என்னும் பெரியார், பண்டையுலகில் மிகவும் உயர்ந்த தத்துவ சாஸ்திரியெனப் பெருமை பெற்றிருந்தார். சீன இலக்கியங்களுக்கும் ஒழுக்க நூல்களுக்கும் அடிகோலியவர் அவரே. சீனக்கிரந்தங்கள் மூங்கிற் சோற்றிலும் செய்யப்பட்ட காகிதம் போன்ற வஸ்துக்களில் எழுதப்பட்டன. இப்புத்தகங்களை ஒவ்வொரு சமயம் எழுத்தாணி கொண்டும், அல்லது 'இந்தியன் இங்க்' என வழங்கும் கருப்புமையால் தூலிகை கொண்டும் எழுதுவித்தனர். சீனமக்கள் பட்டாடைகளின் மீதும் புத்தகங்கள் பல வரைந்தனர். கிருஸ்து பிறப்பதற்கு 100 ஆண்டுகளுக்கு முன் சீன தேசத்தில் காகிதங்கள் முதன் முதலாகச் செய்யப்பட்டன. கிருஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்தில் மர அச்சுக்களைத் (*Solid Blocks*) தயாரித்து அவற்றின் உதவியால் சீனமக்கள் அச்சடித்து வந்தார்கள். அன்றியும் ஐரோப்பாவில் அச்சு எழுத்துக்களின் உபயோகம் ஜனங்களிடையே பரவுவதற்கு 300 வருடங்களுக்கு முன்னதாகவே அச்சு எழுத்துக்களை அவர்கள் ஏராளமாகப் பயன்படுத்திவந்தனர். சீனமக்களின் பண்டை நூல்கள் யாவும் ஸன்மார்க்கத்தைப் புகட்டும் நல்லுபதேசங்களேயாம். மக்களிடையே வெகு காலமாகக் கர்ணபரம்பரையாக நீதி நெறியைப்பற்றியும் நல்லொழுக்கத்தைப்பற்றியும் வழங்கி வந்தவைகளெல்லாம் ஒருங்கே நூல்கள் வாயிலாகத் தொகுக்கப்பட்டன. நெடுங்காலம் வரையில் மனிதவர்க்கத்தினர் இப்பூவுலகில் நல்வாழ்வு எய்தி, மறுவுலகில் இதனினும் இன்பம் பயக்கக் கூடிய மேலானதோர் வாழ்க்கை நிலையினை அடைவதற்குத் தகுதியுள்ளவராக ஆகவேண்டுமென்னும் உயர் நோக்கங்கொண்டே சீனர்கள் தமது பழைய நூல்களை வரைந்தனர். சீன நூலாசிரியர்கள் நகர மாந்தர்களில் சிறந்தவர்களாகக் கருதிக் கௌரவிக்கப்பட்டனர். நூல்களைத் தேசியச்செல்வமாகவே அது காலை சீனர்கள் கருதிப் போற்றி வந்தனர். ஆனால் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சி-ஹ்வாங்-டி (*Che-Hwang-ti*) என்னும் பெயர் வாய்ந்த சீனச்சக்ரவர்த்தியொருவன் பயிர்த்தொழில், வைத்தியசாஸ்திரம் என்னும் இருகலைகளைப்பற்றி உரைக்கும் நூல்களைத்தவிர மற்றப் புத்தகங்களனைத்தையும் நெருப்பிலிட்டுப் பொசுக்கவேண்டுமெனக் கொடுமையானதோர் உத்தரவைப் பிறப்பித்துவிட்டான். இதுவரை இவ்வுலகத்திலுள்ள வேறு எந்த நாட்டிலும் தமது இலக்கியங்களையும் பூர்விகக் கிரந்தங்களையும் இரக்கமின்றி வேண்டுமென்றே அழித்துப் பாழ்படுத்திய இச்சம்பவத்திற்கீடாக மற்றொன்று

நிகழ்ந்தது கிடையாது என்று பட்னம் (*Putnam*) என்பவர் கூறுகிறார். ஆனால் இச்செய்கையால் சீனர்களின் பூர்விக நூல்கள் முற்றிலும் அழிந்துவிடவில்லை. அதிருஷ்டவசமாக அப்பாடல்களில் பெரும்பான்மையானவை மனப்பாடம் செய்யப்பட்டிருந்தமையால் ஜனங்கள் அவற்றைத் திரும்பவும் அப்படியே ஒப்பிக்கும் திறனுடையவர்களாய் இருந்தனர்.

அக்கொடுங்கோன் மன்னனது மரணத்திற்குப் பிறகு அவைகள் யாவும் மீண்டுமோர் முறை எழுதப்பெற்றுப் புத்தக உருக்கொண்டன. சீன நூலாசிரியர்கள் தமது புத்தகங்கள் வியாபக மடைவதன் பயனுகத் தமக்கு விசேஷ ஊதியம் கிடைக்குமென எதிர்பார்க்கவில்லையாயினும், அரசாங்க ஆதரவு ஓரளவிற்குத் தமக்களிக்கப்படுமென நம்பியிருந்தனர். உண்மையில் உலகிலுள்ள வேறு எந்த நாட்டு அரசாங்கமும் அறிஞர்களையும் புலவர் பெருமக்களையும் சீன நாட்டினர் ஆதரித்துப் போற்றி வந்ததுபோல அவ்வளவு சிரத்தையுடன் ஆதரவு அளித்து உதவியிருப்பதாகக் கூற முடியாது. பூர்விக சீன ஆசிரியர்களில் சீன இலக்கிய மறு மலர்ச்சிக்குப் பேருதவி புரிந்த பான்-சௌ (*Pan-chao*) என்ற பெண்மணியின் பெயரைக் குறிப்பிடவேண்டியது அவசியமாகும். கிருஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நாட்களில் அவர் சரித்திர நூல்கள் பல இயற்றி வந்தார்.

பூர்விக சீனக்கிரந்தங்களின் தொகை ஏராளமானது; வாழ்க்கை நலன்களுக்கின்றியமையாத ஒவ்வொரு இலௌகிகத் துறையிலும் நூல்கள் இயற்றப்பட்டிருந்தன. தற்காலச் சீனப் புத்தகங்களை, புராதனந்தொட்டு வழங்கிவரும் கிரந்தங்களுக்கு உரை எழுதியனவாகக் கருதலாமே யன்றி வேறன்று. சீனமக்களின் தேசீய ஸமுதாய நாகரிக வாழ்க்கையில் உருப்படுத்துவதில் அந்நாட்டு இலக்கியங்கள் எந்த அளவிற்கு உதவிபுரிந்திருக்கின்றன என நாம் கூறிவிடுவது எளிதல்ல. ஏனெனில் சீன தேசத்து ஜனங்கள் தமக்குரிய தனித்தன்மையுடனும், மாறுதல் வேண்டாதவராகவும், மிகவும் வைராக்கியமும் பிடிவாதமுமுள்ளவராகவும் காணப்படுவதற்கு அவர்கள் தமது நாட்டுப் பூர்விக நூல்களிடத்தேயும், அவற்றிலடங்கியுள்ள உபதேசங்களிடத்தேயும் அளவு கடந்த பற்றுதல் கொண்டிருப்பதே காரணமாம். ஆனது பற்றியே தமது பூர்விக இலக்கியங்களின் பெருமைக்குப் பங்கமுண்டாக்கக் கூடிய நவீன நூல்களனைத்தையும் அவர்கள் பக்திஹீனமானவைகளென்றும், இறுமாப்புணர்ச்சியும் அதிகப்பிரஸங்கித்தனமும் வாய்ந்தவைகளென்றும் விரும்பத்தகாதவைகளென்றும் கருதி யொதுக்குகின்றனர். சீனர்கள் இத்

தகைய பிடிவாத நோக்கம் வாய்ந்தவர்களாயிருப்பதால், ஆதிகாலந் தொட்டு வழங்கிவரும் நூல்களிலேயும், தற்காலமியற்றப்படும் நூல் களிலேயும் இன்று வரையிலும் நடையிலும், அமைப்பிலும், சுவை யிலும், குறிப்பிடத்தக்க யாதொரு மாறுதலும் அபிவிருத்தியும் ஏற்படக் காணேம். 500 ஆண்டுகளுக்கு முன் சாஸர் (*Chaucer*) கவியால் எழுதப்பட்ட கவிகளைத் தற்காலத்தில் ஆங்கிலேய பாஷை யுடனும், அதனுடைய நடையுடனும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவ் விரண்டுக்கு முள்ள வேற்றுமை தெளிவாகப் புலப்படும். ஆனால் அதற்கும் எத்தனையோ காலத்திற்கு முற்பட்ட சீன பாஷையின் போக்கு, சிறிதளவேனும் மாறுதலடையாமல் அதன் ஆதித் தோற் றத்திலேயே இருந்து வருவது ஆச்சரியமாகவே யிருக்கிறது.

(தொடரும்)

இலக்கியம்



கண்ணப்பர்

எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை

கண்ணப்ப னெப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னெப்பதோ ரன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
ரூரறியு மன்பன் றது. (திருக்களிற்றுப்படியார்)

'கண்ணப்ப னெப்பதோ ரன்பின்மை கண்டபி, னென்னப்ப னென்னெப்பி லென்னையுமாட் கொண்டருளி' என்றவர் 'திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளை'யாகிய மணிவாசகனார். 'மனங் கரைத்து மலங்கெடுக்கும் வாசக' மருளிய அவ்வாதவூரடிகளே வியக் கற்பாலதா யிருந்த தலையன்பை யுடையராயிருந்த கண்ணப்பர் வரலாற்றைப் பலபெரியார் கூறியுள்ளார். தேவாரங்களுள்ளும் வனியடியார் வாக்குக்களுள்ளும் அவர்வரலாறு ஆங்காங்கே சுட்டப் பட்டுளது. நக்கீரதேவரும் கல்லாடதேவரும் அருளிய கண் ணப்பதேவர்திருமறங்கள் பதினொராந் திருமுறையிற் காணப் படுவன. நம்பியாண்டார்நம்பி அருளிய திருத்தொண்டர்திருவந்தாதி யினுள்ளே கண்ணப்பதேவர்வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டது; பெரியபுராணத்துள்ளே விரிவாகக் கூறப்பட்டது.

காளத்தித் தலமான்மியங் கூறும் நூல்கள் தமிழில் இரண்டு உள. ஒன்று திருக்காளத்திப்புராணம்; மற்றையது சீகாளத்திப் புராணம். இவ்விரண்டனுள் வீரை ஆனந்தக்கூத்தர் இயற்றிய திருக் காளத்திப்புராணம் மூற்பட்டதாகுமெனத் தோன்றுகின்றது. இவர், ஸ்காந்தமஹாபுராணத்துத் தீர்த்தவைபவகண்டத்தில் பொன் முகரிக்கதையிற் சிலவும், சூதசங்கிதையிற் சிலவும், வாசிட்டலிங்கத் திற் சிலவும் சேர்த்துக் காளத்திமான்மியமெனத் தாம் இயற்றிய தாகப் பாயிரத்துள் உரைத்தனர். நூலகத்து எங்கும் கண்ணப்பர் கதை வந்திலது. இந்நூலைப் பதிப்பித்த மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி உ. வே. சாமிநாதையரவர்கள் அனுபந்தமாக 'ஐந்தாவது கண்ணப்பர் சிவகோசரியார் முத்தியடைந்த அத்தியாயம்'



கண்ணப்ப நாயனார்.

மதுரை ஆயிரக்கால் மண்டபத்தில் உள்ள ஒரு சிற்பம்.

By courtesy of the artist Mr. M. S. Sundara Sarma, B.A.

என 88 விருத்தங்களுள்ள ஓர் அத்தியாயத்தைப் பதிப்பித்து, அடிக்குறிப்பில் 'இந்த அத்தியாயம், கிடைத்த கையெழுத்துப் பிரதிகளுள் ஒரே பிரதியில் மட்டும் இருந்தமையாலும் இந்த நூலின் மூதனூலாகிய வடமொழிப் புராணத்தில் இந்தச் சரித்திரம் காணப்படாமையாலும் இந்த அத்தியாயச் செய்யுளை இந்நூலாசிரியருடைய செய்யுளைப்போல் சிறிதும் ஒவ்வாமையாலும் பத்திமானாகிய யாரோ ஒருவர் இடையே இயற்றிச் சேர்த்திருக்கலாமென்று எண்ணுதற்கிடமாக இருந்தமையாலும் இது தனியே பதிப்பிக்கும்படி நேர்ந்தது' என்று கூறினர்.

மற்றைய புராணமாகிய **சீகாளத்திப்புராணம்** கருணைப்பிரகாச சுவாமிகள் சிவப்பிரகாச சுவாமிகள் வேலைய சுவாமிகள் ஆகிய மூவரும் செய்தருளியது. இவர்கள்காலம் கி. பி. பதினேழாம் நூற்றாண்டாகும். இவர்கள் செய்த புராணத்திற்கு மூதனூல், விஜயநகரத்து வேந்தராகிய கிருஷ்ணதேவராயர்காலமாகிய கி. பி. பதினாறும் நூற்றாண்டில் விளங்கிய ஸ்ரீமந் மஹாகவி தூர்ஜடியால் ஆந்திரமொழியிற் செய்யப்பட்ட **ஸ்ரீகாளஹஸ்தி மாஹாத்ம்யம்** என்னும் நூலாதல் வேண்டும். இவ்வாந்திரநூல் நான்கு ஆசுவாஸங்களுடையது. மூன்றும் ஆசுவாஸத்தில் கண்ணப்பர்கதை கூறப்பட்டுளது. இந்நான்கு ஆசுவாஸங்களிலும் வந்த வரலாறுகளே சீகாளத்திப்புராணம் ஒன்பது அத்தியாயங்களிலும் முறைபிறழாது கூறப்பட்டன. கற்பனைகளில் பேதங் காணப்படுதல் இயல்பே. ஆந்திரநூலில் கண்ணப்பர்கதை கூறும்பகுதியில், கண்ணப்பனென்னும் திண்ணனுடைய ஜன்மபூமிவர்ணனம், திண்ணன்ஜனனம், திண்ணன் வில்வித்தை பயிலல், திண்ணன் பரிஜனங்களோடுகூடி வேட்டைக்குப் போதல், ஸ்வப்நத்தாலும் வேட்டைவியாஜத்தாலும் ஈசுவரன் திண்ணனை வசஞ்செய்து கொள்ளல், திண்ணன் சிவலிங்கத்துக்குச் சேவைசெய்தல், திண்ணனைக் கண்டு வேடர்கள் தக்கித்தல், திண்ணன் சிவனுக்கு அதுதினமும் ஆகாரங்கொடுத்தல், சிவப்பிராமணன் ஆலயத்திலுள்ள ஆபாசத்தைக் கண்டு சிந்தித்தல், சிவன் திண்ணன்பக்தியைச் சிவப்பிராமணனுக்குக் காட்டல், திண்ணன் பரமேசுவரனுடைய நேத்ரரோகத்திற்குச் சிகிச்சைசெய்தல், சிவன் திண்ணனுக்குப் பிரத்தியக்ஷமாதல் என்றவிஷயங்கள் கூறப்பட்டன.

இனி, **ஸ்ரீகாளஹஸ்தி ஸ்தலமாஹாத்ம்யம்** என்னும் வடமொழி ஸ்ரீகாளஹஸ்தி ஸ்தலபுராணம் கி. பி. 1893-ல் தெலுங்கு லிபியில் வேங்கடகிரிநகரத்தில் அச்சாகி வெளிவந்தது. இது வேதவியாசரால் செய்யப்பட்ட அஷ்டாதசபுராணங்களி லொன்றாகிய சிவபுராணத்திலுள்ள சிவரகசியத்தினுள் ஸ்ரீ ரோமசபரத்வாஜ

ஸம்வாதரூபமாகிய பிரமாமுதல் பத்மஸேநன்வரையுள்ள மஹா ஜனங்களின் அற்புதசரித்திரத்தை விசித்திரமாகக் கூறும் பாகமாம். இந்நூல் 90 அத்தியாயங்களுடையது; 9,430 சுலோகங்களாலாயது. இதனுள் 6-ம் அத்தியாயத்திலே பதிஞ்ஞருவர் ஸ்ரீகாளத்தியில் தவஞ் செய்து சிவப்பிரசாதத்தால் மனோரதங்களையடைந்தார்கள் என்றும், அன்னர் பெயர் அரி, பிரமன், இலக்குமி, கந்தன், இராமன், மார்க் கண்டன், வேடன், சிலந்தி, பாம்பு, யானை, சக்கிரம் என்றும் கூறப் பட்டிருக்கிறது. இவருள் வேடன் என்றது கண்ணப்பரையே. கண் ணப்பர் சரித்திரம் 53, 54 என்னும் இரண்டு அத்தியாயங்களிற் கூறப்பட்டிருக்கிறது. இவ்வரலாற்றுக்கும் தமிழ்நூல்களிற் காணும் வரலாற்றுக்கும் பேதம் பெரிதுண்மையின் தமிழ்மக்களுக்கு உகப் பாமென்னுங் கருத்தோடு இஃது இங்கு மொழிபெயர்த்துத் தரப் படுகின்றது.

வேடன் இலிங்கத்தைக் காத்தது

"தக்ஷிணகைலாசத்திலே சிவபூசையாலும் பரமபக்தியினாலும் ஒரு வேடன் சிவ்சாயுச்சியத்தை அடைந்தானென்று சொன்னீர். அவனுடைய சரிதம் எத்தகையது? அவன் பூசை எப்படிப்பட்டது? அவன் பக்திதான் எப்படிப்பட்டது? விவரமாய்ச் சொல்லியருளல் வேண்டும்" என்று பரத்துவாச முனிவர் கேட்ப உரோமச முனிவர் சொல்லுவார்:

பதினாயிரம் யானை வலியினையுடைய மணிமான் என்னும் இயக்கன் மதம்பிடித்தவனைய்க் குபேரன் நகரத்துக்குப் பக்கத்தி லுள்ள உத்தியானத்திலே நின்ற, குபேரனுக்குப் பிரியமானதும் பொன்மயமான மயிரோடுகூடியதும் விளையாட்டுக் கருவியானது மான புள்ளிமானைப் பிடித்து விளையாட்டாகக் கழுத்தை முரித்துக் கொன்றான். அந்த மானைப் பார்த்து அவனையுங் கண்டு, துக்கப்படு பவர்களிடத்தில் தயையுடையவராகிய நந்திபெருமான் சிறிது கோபங்கொண்டவராய், 'துர்ப்புத்தியே! நிரபராதியாயும் அழகிய பார்வையுள்ளதாயும் ரூபசம்பத்தோடு கூடியதாயுமிருந்த மானை நான் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே கொன்றதனாலே நீவேடனாய் விடுவாயாக. பூமியையடைந்து பலவீனனையும் ஊன் தின்பவனையும் காட்டில் சஞ்சாரஞ்செய், போ' என்றார். இதைக் கேட்டு அவன் பலவீனனையும் நடுக்கமுள்ளவனையும் அச்சமேலிட்டுக் கைகூப்பிச் சொல்வான்: 'இக் கிராதப் பிறவியிலிருந்து எப்பொழுது நிவிர்த்தி உண்டாகும்? பூமியில் எனக்கு எங்கு வாசம்? சொல்லவேண்டும். துர்ப்புத்தியினாலே காரணமின்றி உம்மெதிரிலேயே யான் இப் பாபத்தைச் செய்தேன். பொறுத்தருள வேண்டும்.' இவ்வாறு

பிரார்த்திக்கப்பட்ட நந்திபெருமான் தயையோடு சொல்வார் : 'இயக்கனே ! நீ பூலோகத்திலே மஹாபிரசித்தமான பாரதவர்ஷத்தில் சேர்வாய். கணிசையென்னும் பெயருடைய அதிமநோஹரையாகிய வேடப்பெண்ணை மணந்துகொண்டு ஸ்வர்ணமுகரிக்கரையில் குடும்பியாயிருப்பாய். இதற்குமேல் ஐந்தாவது யாண்டு சிவபக்தருள் தலைவனுகிய ஒரு பிள்ளை அப்பெண்ணிடத்தில் உனக்குப் பிறப்பான். உடனே நீ சாபம் தீர்ந்தவனுவாய். அதுமுதல் உனக்குத் தீர்ணனென்கிற பெயர் பிரசித்தமாகும். மஹாபுத்திமானுகிய உன்பிள்ளைக்குக் கணிசையா லிடப்பட்ட கண்ணனென்னும் பெயரானது உலகத்தில் வெகுவாகப் பரவும். பிள்ளைபிறக்கிற தினத்தில் நீ வேடவுரு நீத்து இங்கு மீள்வாய். பூலோகத்தில் பாரதவர்ஷத்தில் ஸ்வர்ணமுகரிக்கரையில் தக்ஷிணகைலாசத்தின் தக்ஷிண பாகத்தில் ஒரு யோசனையெல்லையில் வாசம் பண்ணிக்கொண்டிரு.' அவ்வார்த்தையைக் கேட்டு மணிமானும் உடனே பூலோகஞ் சேர்ந்து சுவர்ணமுகரிக்கரையிற் கணிசையோடு வசித்துப் புத்திரன் பிறந்த அந்நாளே தன்பழைய அழகான தேகத்தைப்பெற்று அளகாபுரியை மீண்டும் அடைந்தான்.

நீண்ட கண்களையுடைய அப்பிள்ளைக்குக் குலத்துக்கேற்றபடி பந்துக்களோடு கூடிக் கணிசை தன் புத்திக்கியன்றவரை யாலோசித்துக் கண்ணன் என்று பெயரிட்டாள். அவனும் சுக்கிலபக்ஷத்துச் சந்திரன் போல வளர்ந்து பரமாத்மாவாகிய ஈசுவரனிடத்தில் பக்தியோடிருந்தான். பார்ப்பவர்களுக்குப் பயங்கரமாகிய நாணேற்றிய வில்லையும் அம்பறாத்தூணியையும் தாங்கிக்கொண்டு எப்போதும் செருப்புக் காலுடையவனுயும் கொக்குமந்தாரைத்தழையைத் தலையிற் சூடியவனுயும் கைலாச சிகரத்துக்கு நாலுபக்கங்களிலும் சஞ்சரித்தான். அவன் பயமில்லாதவன்; பயங்கரமானவன்; பெருங் கண்களுடையவர்கள் என்று கர்வப்படுபவர்களுள்ளே என்கண்களே எல்லாவற்றிலும் பெரியன என்று கர்வப்படுந் தலைவன். அவன் நாடோறும் வில்வபத்திர முதலிய சாதனங்கள்கொண்டு சிரத்தையோடு அங்கிருக்கின்ற வாயுலிங்க சிவனைப் பூசை செய்துகொண்டிருந்தான். சிவனைப் பூசைசெய்யாமல் தீர்த்தபானங்கூடப் பண்ணுவதில்லை. மஹாபக்தியுடன் எப்பொழுதும் விபூதிருத்திராக்ஷதாரணம் பண்ணிக்கொண்டிருந்தான். காட்டிலேயே எப்போதும் வாசஞ்செய்தான். தினந்தோறும் தான் ருசிபார்த்து ருசிபார்த்துப் பக்தியுடன் நைவேத்தியமாகச் சுத்த மாம்ஸத்தைச் சிவனுக்குச் சமர்ப்பித்தான். புஷ்பங்களாலும் வில்வபத்ரங்களாலும் வாயிலிருக்கிற ஜலத்தாலும் மிக்க பிரயத்தினத்தோடு சிவபூசை செய்தான். இப்போர்ப்பட்ட

வேடனை முனிவர்கள் பார்த்தனர். வாய்ஜலத்தினாலே அபிஷேகஞ் செய்துகொண்டிருப்பதைக் கண்டு வருத்தமடைந்தனர். 'இம்மூடன் வாயாலே ஜலத்தைக் கொண்டுவந்து நித்தியம் அபிஷேகஞ் செய்கிறான். மாம்ஸத்தை நிவேதிக்கிறான். தினந்தோறும் மஹா நியமத்தோடு அழகான வில்வபத்ரங்களால் பூசைசெய்கிறவன் வாயில் ஜலத்தால் அபிஷேகம் செய்கிறானே; என்ன துர்ப்புத்தி! வேடனே! இது செய்யற்க என்றாலோ கையில் அம்பும் வில்லுமுடைய குரூரன் நம்மைக்கொன்றே விடுவான்' என்றெண்ணித் தினந்தோறும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களாய் முனிவர்கள் சும்மாவிருந்தனர். அவன் பாட்டிற்கு நித்தியம் பூசை செய்துகொண்டிருந்தான். முனிவர்கள் தவம் பாழாகுமென்று சாபங் கொடுத்திலர். அவன் பக்தியைப் பார்த்தும் சும்மாவிருந்தனர். 'சதாசாரனே, துராசாரனே நியமமாய் விடாமல் சிவபூசைபண்ணுகிறான். ஆதலால் நம்மால் பூசிக்கத் தகுந்தவன்; சுவரவிக்கத்தகுந்தவன். இவன் விஷயத்தில் நிஷ்டுரஞ்சொல்லக் கூடாது' என்றிருந்தனர். இப்படியிருக்கையில் ஒரு நாள் அவன் வெயிலால் பீடிக்கப்பட்டுத் தபித்தவனையும் தாக முள்ளவனையும் இருந்தான். அக்காட்டில் அவன்சமீபத்திலே ஒரு வராலும் குடிக்கப்படாத குளிர்ந்த ஜலம்நிறைந்த சிறிய பள்ள மொன்றிருந்தது. அந்த ஜலத்தைப் பார்த்துத் தாகத்தால் வருந்தியவனைப் அவன் நினைத்தான் : 'பிரமாதியராற் பூசிக்கப்பட்ட வாயுலிங்கமாகிய சம்புவை இன்று வில்வபத்ராதிகளாற் பூசிக்கவில்லை; நான் ஜலத்தை எப்படிக் குடிப்பேன்! எல்லாப்பாபங்களையும் போக்குகிற சுத்தமான விபூதியையும் பதினைந்து இடங்களில் நான் தரிக்கவில்லை; எப்படி ஜலத்தைக் குடிப்பேன்! சிவசந்நிதியில் சிவ பஞ்சாட்சரத்தைச் செபிக்கவில்லை; தாகத்தால் வருந்தினும் எப்படி ஜலத்தைக் குடிப்பேன்! தாகத்தால் பிராணன் போவதானால் இப் பொழுதே போகட்டும். தேகம் போனாலும் ஈசுவராஞ்ஞையாலே எனக்கு நரகவாசங் கிடையாது. பூசை முதலியவற்றை விட்டு ஜலத்தைக் குடிப்பேனாகில் நரகந்தான் எனக்குக் கதி. விபூதிதரிக்காமல் ஜலபானம் பண்ணினவர்கள் தப்தமூத்திரமென்னும் நரகத்தில் இன்றுவரை துக்கத்தோடிருந்துகொண்டிருக்கிறார்கள். சிவார்ச்சனைசெய்யாமல் போசனம் பண்ணினவர்கள் சதா துக்கிதர்களாய்த் தப்தமலத்தைப் புசித்துக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாட்சர செபத்தைவிட்டு ஜலத்தைக் குடித்தவர்கள் நரகசமூத்திரத்திலே பெருந்துக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் சிவார்ச்சனையை விட்டு விபூதி தாரணமுமின்றிப் பஞ்சாட்சர செபமுமில்லாமல் ஜலத்தைக் குடிக்கப்படாது. பிராணனும் தேகத்தாலும் எனக்கு என்ன

உபயோகம்? இவற்றைக்கொண்டு என்ன செய்யவேண்டியிருக்கின்றது? இப்பொழுது ஜலத்தைக் குடித்துத் தேகத்தைக் காப்பாற்றினேனுல் அநேக அபாயங்களோடு கூடியதும் சீ இரத்தம் மூத்திரங்களோடு கூடியதும் மலத்தோடு கூடியதுமான இத்தேகம் கற்பம்வரை யிருக்குமா? இந்தச் சரீரம் துர்க்கந்தமுடையது. இதனுல் எனக்கு என்ன சுகம்? குடல் எலும்பு நாடி தோல் மயிர் புழு இவற்றுல் நிறைந்ததும் நாசமடைவதும் அபாயங்கள் மலிந்ததுமான இச்சரீரம் எனக்கு ருசிக்கவில்லை. முன் என்னுல் அளவற்ற சரீரங்கள் விடப்பட்டன. இப்பொழுதும் தாகமுள்ள என்னுல் இச்சரீரம் விடத்தகுந்ததே. அரையிற் கட்டிய வஸ்திரங்கள் எத்தனை நாசமடைந்தன; அது போலவே எத்தனை சரீரங்கள் போயின. இதனுல் எனக்கு வருத்தமில்லை. முன் நான் சங்கரனை ஆராதிக்காமலிருந்தது உண்மை; ஆகையாற்றுன் அநேக சரீரங்களெடுத்தேன். சிவபூசைதான் பிறவியொழிதற்கு உபாயமென்று சொல்லுகிறார்கள். அப்படியானுல் நான் மனத்தாலே இப்பொழுதும் சங்கரனைப் பூசிப்பேன்' என்று எண்ணி மானசிக பூசை செய்யத் தொடங்கினன்:

ஸர்வவியாபியாயும் ஸர்வபூதங்களுக்கும் அந்தராத்மாவாயும் ஸாக்ஷியாயும் ஞானஸ்வரூபியாயும் நிர்க்குணனுயும் ஈசுவரனுயும் உமாஸமேதனுயும் நித்தியனுயும் நிர்விகாரனுயும் ஆத்மாவாயுமிருக்கிற நீலகண்டன் என்னை எப்போதும் மனைதுக்கத்திலிருந்து காக்க. (1)

மாயையைக் கடந்தவனுயும் எல்லா வுலகங்களையும் மோகிக்கச் செய்கிறவனுயும் ஸாமோபாயஸ்வரூபனுயும் ஸாமவேதஸ்வரூபனுயும் எல்லாராலும் விரும்பத்தக்கவனுயும் ஸர்வஸ்வரூபனுயும் மகேசுவரனுயுமுள்ள நீலகண்டன் என்னை மனைதுக்கத்திலிருந்து காக்க. (2)

எந்தச் சம்புவை வேதாந்தங்கள் அறியாவோ, எவனிடத்திலிருந்து நித்தியங்களான வேதவாக்குக்கள் பிறந்தனவோ, எவனைப் பிரமன் முதலிய தேவர்களும் அறியவே மாட்டார்களோ, அப்பேர்ப்பட்ட இந்த நீலகண்டன் என்னை மனைதுக்கத்திலிருந்து காக்க. (3)

எவனுடைய வலப்பக்கத்திலிருந்து சிருஷ்டிகர்த்தா உண்டானனை, எவனுடைய இடப்பக்கத்திலிருந்து விஷ்ணு உண்டானனை, எவன் ஸர்வேசுவரனை, அப்பேர்ப்பட்ட இந்த ஆதியந்தமில்லாத நீலகண்டன் என்னை மனைதுக்கத்திலிருந்து காக்க. (4)

எவனுடைய திருவடித்தாமரையிலிருந்து தேவர்கூட்டங்களெல்லாம் உண்டாயினவோ, எவனுடைய மூச்சுக்காற்றே எல்லா வேதங்களுமோ, எவன் யஞ்ஞேசுவரனை, அப்பேர்ப்பட்ட அம்பா

சமேதனுகிய இந்த நீலகண்டன் என்னை மனைதுக்கத்திலிருந்து காக்க. (5)

எந்த ஸர்வேசுவரனை உண்மையாய் யோகநிஷ்டர்கள் இறைவனை அறிந்து ஆதரத்துடன் பூசிக்கின்றார்களோ, அப்பேர்ப்பட்ட இந்த ஸர்வவியாபியும் ஸர்வ வேதாந்தங்களாலு மறியத் தகுந்தவனுமான நீலகண்டன் என்னை மனைதுக்கத்திலிருந்து காக்க. (6)

எவனுடைய கடைக்கண் அசைந்த மாத்திரத்திலேயே எப்பொழுதும் பிரமா விஷ்ணு இந்திரன் முதலியோர் நடுங்கிக்கொண்டு தூரத்திலிருக்கிறார்களோ, அப்பேர்ப்பட்ட ஈசுவரனுகிய நீலகண்டன் என்னை மனைதுக்கத்திலிருந்து காக்க. (7)

எவனை நினைத்தால் பாபக்கூட்டங்களெல்லாம் நாசமாகுமோ, எவனைப் பூசித்தால் கடுமையான பிறவியறுமோ, எவனைத் துதித்தால் முத்தி கிடைத்தல் தப்பாதோ, அப்பேர்ப்பட்ட நீலகண்டன் என்னை மனைதுக்கத்திலிருந்து காக்க. (8)

இப்படி வேடன் ஆனந்தக் கண்ணீரால் விளங்குகிற முகத்தையுடையவனுய்த் துதித்து மஹாதேவனை அமிர்தமயதேகமுள்ளவனை மனத்தில் தியானித்தான். மந்தாரபுஷ்பங்களுக்குச் சமானமான மழை அப்பொழுது உண்டாயிற்று. குளிர்ச்சியான அம்மழையாலே அவன் உடல் நனைந்தது. அழகான மழைபெய்த அச்சமயத்தில் அவன் வாயை மூடிக்கொண்டு என் வாயுள் ஜலம் போகக்கூடாதென்றிருந்தான். ஜலபானமில்லாமலே அவ்வேடனுக்குத் தாகசாந்தி கிரமமாக ஆயிற்று. ஈசுவரனுடைய ஆஞ்ஞையால் வாயில் வந்த ஜலத்தைக்கூட அவன் குடித்திலன். ஸ்வர்ணமுகரி நதியில் ஸ்நானஞ்செய்து மரவுரியால் செய்த நூதனமான வஸ்திரத்தையணிந்து, சாஸ்திரப்படி பஸ்மோத்தூளனம்பண்ணித் திரிபுண்டரமுந் தரித்து, சிறந்த புஷ்பங்களோடுகூடிய இளைய வில்வபத்திரங்களையும் ருசிபார்த்த மாம்ஸத்தையும் நாணேற்றிய வில்லையும் கையிற் பற்றி, ஸ்வர்ணமுகரி ஜலத்தை வாயில் பக்தியுடன் எடுத்துக்கொண்டு, பரமேசுவரனுடைய உன்னதமான வாயுலிங்கத்தைச் சிந்தித்து மலர்ந்த முகமும் கண்களுமுடையனுய் மெல்ல ஆலயத்தைப் போயடைந்தான்.

இலிங்கத்தைப் பார்த்து மனத்தால் வணங்கிச் செருப்புக்காலுடையனுய் வாயிலிருந்த ஜலத்தால் அபிடேகஞ்செய்து, வில்வபத்திர புஷ்பங்களால் அர்ச்சனை செய்து, பஞ்சாக்ஷரத்தையுச்சரித்துக்கொண்டே தன் எச்சிலாகிய மாம்ஸத்தை நிவேதித்து, வந்தனம் முதலிய எல்லாவற்றையும் முடித்து, சிவபஞ்சாட்சரத்தை இயன்றவளவு செபஞ்செய்து, பரமாத்மாவாகிய சிவனுக்குத் தன்

ஆத்மாவை அர்ப்பித்து எல்லாப்போகங்களிலும் விருப்பம் விட்டவனைப் முன்போலவே பரமேசுவரனைத் தியானஞ் செய்துகொண்டு காட்டில் சஞ்சரித்துவந்தான்.

தக்ஷிண கைலாசத்திலே ஒருகாலத்தில் சிவபக்தர்களும் வேதவித்துக்களுமான முனிவர்கள் சாயங்காலத்தில் பிரதோஷ பூஜையின் பொருட்டுக் கோடிக்கணக்காக வந்தார்கள். வேடனுடைய பக்தியை இவர்களுக்குக் காட்ட வேண்டுமென்ற எண்ணத்தோடு சிவபெருமான் தம் ஆலயம் விழுவதாகக் காண்பித்தார். அச்சிவாலயத்தின் நிலைமையைப் பார்த்து முனிவர்கள் வெளியே ஓடிப்போனார்கள். ஈசுவரனிருக்கிற கர்ப்பக்கிருகத்துக்குச் சமீபத்திலிருந்த வேடன் இச்சமயத்தில் தன்னுற் செய்யத்தக்க தென்னவென்று மிக வேகமாக ஆலோசித்தான்: 'பாறை நழுவிச் சிவலிங்கத்தின்மேல் விழப்போகிறது. அதனால் சிவலிங்கத்துக்கு அடிபடும். அந்த அடியை நான் பிழைத்திருக்கும்போது எப்படிப் பார்ப்பேன்! நழுவுகிற அப்பாறையையும் என்னால் சுமக்கமுடியாது. ஏனென்றால் எனக்கு அப்பேர்ப்பட்ட திடசக்தியில்லை. என்னுடைய தேகத்தைப் பரப்பி வைத்துச் சிவலிங்கத்தை மூடிக்கொள்வேனுகில் என் முதுகின்மேல் அப்பெரும்பாறை விழும். அந்தப் பாறையின் பளுவால் என் சரீரம் ஒழியுமானால் சிவலிங்கத்தின் துனிமேல் எனக்கு மரணம் சித்தித்தாகும். அதற்குப் பிறகு பல பாறைகள் விழும். ஆயினும் சிவலிங்கத்துக்கு ஒருவித அபாயமும் உண்டாகாதன்றே! எந்த விதத்திலாவது சிவலிங்கத்துக்கு அடியில்லாமல் நான் பண்ணவேண்டியது. நான் வெளியே ஓடிப்போனேனானால் இச்சரீரத்தைக் காத்துக் கொள்ளக்கூடும். ஆயினும் இதனைக் காப்பதில் என்ன லாபமிருக்கிறது. தேகத்தைக் காத்தல் மாத்திரத்தாலேயே ஒருபயனு மில்லை. இதைக் காக்க எவன்தான் முயல்வான்! வெளியே போனேனானால் எனக்குச் சுகம் சிறிதும் கிடையாது. சிவலிங்கத்துக்கு அடிபடுவதற்குக் காரணத்தைப் பார்ப்பதனாலே எப்படிச் சுகம்வரும்? இதில் என்னுடைய பாக்கியத்தினாலே சரீரம் போய்விடுமேயானால் பிரமாதிகளுக்குக் கிடைக்காத மோக்ஷம் எனக்கு இப்பொழுதே கிடைத்துவிடும். சிவலிங்கத்தினுடைய சந்நிதானத்தில் மனிதர்க்கு மரணங் கிடைத்தல் அருமை. புண்யாத்மாக்களுக்கு அது கிடைக்குமானால் மறுபிறப்புக் கிடையாதன்றே? அழியுந்தன்மையதாகிய இவ்வுடலைக் காப்பது மோக்ஷத்தில் இச்சைவைத்த என்னால் இச்சமயத்தில் எப்படிச் செய்யத்தகுந்தது? யமன் வருவனேயானால் இவ்வுடலைக் காப்பது கோடிக்கணக்காகச் செய்யும் பலவுபாயங்களாலும் சாத்தியமன்று. யமன் வரும்பொழுது எங்கே ஓடமுடியும்? ஓடினாலும் அவன்

என்னவோ விடமாட்டான். மிருத்யுஞ்சயனை விட்டு மரணபீதியை ஒழிப்பவன் எவன்தான். எவனுக்கு மிருத்யுபய மில்லையோ அவன் தான் மிருத்யுஞ்சயன். மகேசனொருவனுக்கே யமபயங் கிடையாது; நிச்சயம். பிரமன் முதலிய தேவர்களெல்லாம் யமபாசத்தில் அகப் பட்டவர்களே. ஆகையால் மிருத்யுஞ்சயனைப் பஜிப்பதால் மனிதர் களுக்கு மிருத்யுபயம் ஒழிகிறது. ஆகையால் மிருத்யுஞ்சயனுடைய பூஜையன்றே பக்தியுடன் செய்யற்பாலது. தேகத்தைக் காத்தற்காக நான் வெளியே போவேனானால் அப்பொழுது எனக்கு மிருத்யுஞ்சய னிடத்தில் என்ன பக்தியிருக்கப்போகிறது! ஆகையால் நான் மனத் தெளிவுடையவனாய்ச் சிவசந்நிதானத்திலே இருக்கவேண்டியது.' இம்மாதிரி அவன் ஆலோசித்து உறுதிகொண்டு மறுபடியும் சிவபூசை செய்கிறவனாய்ச் சிவலிங்கத்தின்மேல் தன்தேகத்தை விஸ்தாரமாகப் பரப்பியிருந்தான். அப்பொழுது பாறைகள் நழுவுவதாலுண்டான ஒரு பேரோசை உண்டாயிற்று. ஆயினும் வேடன் மிக்க தைரியத் தோடு சுகமாயிருந்தான். அப்பொழுது அப்பேர்ப்பட்ட வேடனை முனிவர்களெல்லாம் பார்த்து ஆச்சரியமுற்றவர்களாய் ஆதரத்துடன் துதித்தார்கள்: 'நீயே பெருஞ்செல்வன், நீயே செய்யற்பாலனவற் றைச் செய்துமுடித்தவன், நீயே பயன்பெற்றவனாயும்; ஐயமில்லை. ஏனென்றால் உன்னிடத்தில் எப்பொழுதும் இப்பேர்ப்பட்ட சிவபக்தி காணப்படுகின்றதே! ஏ வேடனே! உன் பெரும்பாக்கியத்திற்கு முடிவே கிடையாதென்பது நிச்சயம். உன் தேகம் வெகுபாக்கியம் பெற்றது; உண்மை உண்மை! ஐயமில்லை. உன்னுடைய தாயே பாக்கியவதி; உண்மை உண்மை! ஐயமில்லை. உன்னுடைய குலமே உத்கிருஷ்டமானது; உண்மை உண்மை! சந்தேகமில்லை. இப்பேர்ப் பட்ட பக்தி மனிதர்களிடத்துக் காணப்படாதது. இப்பேர்ப்பட்ட தைரியமும் மனிதரிடத்தில் இல்லாதது. இவ்விதமான பக்தி லோகத் தில் எங்கும் கேட்கப்படவில்லை; நிச்சயம். தேவர்க்கெல்லாம் தலைவ னாகிய மஹாதேவனிடத்தில் எவனுக்கு இப்பேர்ப்பட்ட பக்தியிருக் கிறதோ அவனுக்கேயன்றே முத்தியாகிற ஸ்திரீ கையில் அகப்பட்ட வள்! நீ உலகத்தார்போல எப்பொழுதும் மனுஷரூபத்தைத் தரித் திருக்கிறாய். நீ ஒரு புண்ணியாத்மாவாகிய தேவனென்பது நிச்சயம். தேவர்களுள்ளும் சங்கரனுக்கு இப்பேர்ப்பட்ட பக்தனாயிருக்கிறவர் ஜகார்த்தனர். உண்மையை யறிந்த ஹரி எக்காரணத்திற்காகச் சிவார்ச்சனபரராகினாரோ அக்காரணத்திற்காகவே அவர் தேவதேவ னாகிய சதாசிவனை உண்மையாயறிந்து தவத்தோடுகூடி வெகுவாகப் பூசைசெய்தார். விஷ்ணு தம் நேத்திரகமலத்தைப் பிரயத்தின பூர்வ மாகப் பிடுங்கி நிரம்ப சந்தோஷத்தோடு பக்தியாகச் சிவபாதங்களை

முற்காலத்திலே அர்ச்சித்தார். பூர்வத்தில் நாராயணர் அநேக கற்பங்கள் வரை சங்கரனைக்குறித்துத் தவத்தைப் பிரயத்தனத்துடன் செய்தார். சைவேந்திரனை அவ்விஷ்ணுவே மனுஷ்ய தேகத்தை யெடுத்துக் கொண்டு சிவபாத பூசையில் ஆவலுள்ளவராய் இங்கு இருக்கிறார். சந்தேகமில்லை. இப்பேர்ப்பட்ட தைரியம் மனுஷ்யனுக்கு எப்படி உண்டாகும்? பாறைகள் நழுவிக்கொண்டிருக்கையிலும் மனம் உறுதி யாயிருந்ததே!' இவ்வாறு முனிவர்களெல்லாம் வேடனைத் துதித்திருந்தனர். பிறகு அவர்கள் சிவாலயம் முன்போலவே இருத்தலைக்கண்டனர். ஆகாயத்திலிருந்து அக்கணத்திலேயே பூமழை பொழிந்தது. பின்பு அவ்வேடன் மகிழ்ந்தவனைச் சங்கரன் மறுபடியும் அர்ச்சித்து விஸ்மிதனைச் சிவன் இருதயத்தில் சிந்தித்துக் கொண்டு மெல்லப் புறப்பட்டுப்போனான். சிவபக்தகணங்களுள் தலைவனாகிய வேடனை முனிவர்கள் பார்த்து விநயத்தால் தலைவணங்கிய அவனைப் புஷ்பாதிகளாற் பூசித்தனர். அங்குத் தேவேசனை வில்வபத்ர முதலியவற்றால் நன்கு பூசித்து முனிவர்கள் அவன் பராக்கிரமத்தைப் புகழ்ந்துகொண்டு தங்கள் தங்கள் ஆச்சிரமங்களுக்குப் போனார்கள். அத்தலத்தில் பக்தர்கள் கோடிக்கணக்காக இருக்கிறார்கள்; நிச்சயம். வேடனுடைய சரிதத்தில் சிறிது உனக்குச் சொன்னேன் முனியே.

ஸ்ரீ சிவபுராணத்திலுள்ள சிவரஹஸ்ய சங்கிரகத்தில் ஸ்ரீ காள ஹஸ்தி ஸ்தல மாஹாத்ம்யத்தில் சபரசரித்திரத்தில் 'லிங்கரகஸ்யத்தைச் சொல்லுகை' யென்னும் பெயரிய ஐம்பத்துமூன்றும் அத்தியாயம் முடிந்தது.

வேடன் முத்திபெற்றது

"கிராதனுக்குச் சங்கரனிடத்தில் என்ன அசஞ்சலமான பக்தி! ஆச்சரியம்! மஹாத்மாவாகிய அவனுக்கு என்ன தைரியம்! என்ன காம்பீரியம்! அவனுடைய சரித்திரங்களை நீர் சொல்லக் கேட்டதால் எனக்குச் சொல்லமுடியாத சந்தோஷமுண்டாகிறது. அவ்வேடன் முற்பிறவியில் யாவன்? அவன் எங்கிருந்தான்? சிவனிடத்தில் இப்பேர்ப்பட்ட பக்தி அவனுக்கு எப்படி உண்டாயிற்று?" என்று பரத்துவாசர் வினவலும் உரோமசர் சொல்வார்:

அவன் முற்பிறவியில் ஓர் ஊனருந்துங் கோழி. அஃது இமயமலையில் ஒரு வேடனால் நன்றாக வளர்க்கப்பட்டது. அவ்வேடன் தினந்தோறும் வில்லாளியாகக் காட்டில் அநேக மிருகங்களைக் கொன்று நல்ல மாம்ஸத்தை எடுத்து அதைப் பாகஞ்செய்து பிரீதி பூர்வகமாக நெய்யோடு அதை நியமத்துடன் சங்கரனுக்கு நிவேதனஞ்செய்து நிர்மாலியமுழுதையும் தானே சாப்பிட்டுக்கொண்டு பரி

சுத்தனுய்ச் சஞ்சாரஞ் செய்தான். ஈசுவரனுடைய நிர்மாலியத்தைக் கொஞ்சங்கூட வேறொருவருக்குக் கொடுத்தவனல்லன். அவனுல் தின்னப்படுகிற மாம்ஸத்தின் ஒரு துண்டு ஒருகால் பூமியில் விழ அதைக் கோழி தின்றது. அவ்வேடனும் கோபாக்கிராந்தனுய் அக் கோழியைக் கொன்றுன். அக்கோழி உடனே வேட ஜன்மத்தை யடைந்தது. பூர்வஜன்மஞானவுடன் சிவ பூஜாபரனுயிற்று. கோழிக்கு மாம்ஸபக்ஷணவாசனை முன்ஜன்மத்திருந்தது. அவ்வாசனையோடு பக்தியாகப் பிரயத்தினத்துடன் மாம்ஸத்தைச் சம்பாதித்துப் பிரதி தினமும் அதைச் சங்கரனுக்கு நிவேதனஞ் செய்து வேடன் சாப் பிட்டுக் கொண்டிருந்தான். ஆதரத்தோடும் பக்தியோடும் அந்த லிங்கத்தில் மகேசுவரனைப் பூசைசெய்து அவ்வேடன் நல்லஞானி யாய் விட்டான். அவனுக்கு வருங்காலஞானம் இல்லாமற்போன தற்குக் காரணத்தைச் சொல்லுகிறேன்: எவன் சிவனுக்குப் பிர யத்தினத்தோடு அன்னத்தை நிவேதித்து எப்பொழுதும் சாப்பிடு கிறனை அவன் அடுத்த பிறவியில் ஸர்வஜ்ஞனுகவும் ராஜாவாகவும் பிறக்கிறன்; சிவநைவேத்தியத்தை உண்டலினுலே இறந்தகால எதிர் காலவுணர்ச்சியும் சாசுவதமான ராஜத்வமும் பூர்வஜன்மவாச னையும் சௌந்தர்யமும் உண்டாகின்றன. வேறொருவன் எச்சிலாகிய நிர்மால்யத்தை எவன் அதிகமாகவோ மிதமாகவோ உண்கிறனை அவனுக்குப் பவிஷ்யத்ஞானந்தவிரக் கீழ்ச்சொல்லப்பட்ட எல்லாம் உண்டு. இதில் சம்சயப்பட வேண்டிய அம்சமொன்றுமில்லை. முற்பிறவியிலே கோழி தற்செயலாய் அந்நியன் எச்சிலாகிய சுப மாகிய சிவநிர்மாலியத்தைக் கொஞ்சம் சாப்பிட்டது. அதனுலே இறந்தகால உணர்ச்சியும் சிவனிடத்தில் சாசுவதமான பக்தியும் முற் பிறவி யுணர்ச்சியும் ராஜத்வமும் ஸர்வஜ்ஞத்வமும் ஆகிய எல்லாம் உண்டாயின. அவன் வேட அரசனுகிச் சம்பூர்ணமான ஞானயோ கத்தாலே லக்ஷம் ரத்நங்களாலும் எட்டுலக்ஷம் ஸ்வர்ணங்களாலும் ஆதரத்தோடு நித்தியம் சிவபூசை செய்தான். காராம்பசுவின் நெய் யால் நிறைக்கப்பட்ட லக்ஷதீபங்களையும் கர்ப்பூரதீபங்களையும் சிவனுக்குச் சமர்ப்பித்தான். இப்படி மிக்க பிரயத்தினத்துடன் சிவார்ச்சனபரனுய்க் காளனென்கிற பிள்ளையிடத்தில் ராஜ்யத்தை யொப்பித்துவிட்டுக் கண்ணனென்கிற பெயருள்ளவனுய்க் கையில் வில் அம்பு தூணி முதலியவற்றைக்கொண்டு ஆசையற்றவனுய் ஞானி யாய்ச் சிவபக்தகணங்கட்குத் தலைவனுயிருந்து அத்விதீயமான அந்த ஸ்தலத்தில் வாயுமயமான சிவலிங்கத்தில் சிவனைப் பூசை செய்தான். இப்படிச் சஞ்சாரஞ் செய்துகொண்டிருந்த மஹாத்மாவான வேட னுக்கு இருபத்தைந்து வருஷங்கள் இவ்விதமாகக் கழிந்தன.

ஒரு காலத்திலே பங்குனிமாசத்தில் சந்திரகிரகணம் வந்த பொழுது கோடிக்கணக்காக முனிவர்களெல்லாம் வந்துசேர்ந்தார்கள். அந்தத்தினத்தில் அவர்களுக்குச் சதாசிவன் வேடனுடைய பக்தியை அறிவிப்பதற்கும் அவர்களுடைய அகங்காரத்தை யடக்குவதற்கும் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே தம் ஒரு கண்ணைக்கருவிழிதோன்றுமலும் நீர்கொட்டும்படியாகவும் மாற்றிக் காட்டினர். 'ஐயோ இலிங்கத்திலிருக்கிற ஈசுவரனுக்குக் கண் இப்படிக் கருவிழி தோன்றுமல் நீர்கொட்டுகின்றதே! நேற்று இல்லை, இன்று தான் நாம் இதனைப் பார்க்கிறோம். இது உலகத்திற்கு இன்றே கேடு நேருமென் பதைக் காட்டும் குறியாகும். சிவனுடைய கண்ணைய் நீங்குவதற்கு இங்கு நம்மாற் செய்யற்பாலதென்ன?' என்று இவ்விதமாக ஈசுவர னுடைய அபிப்பிராயத்தை யறியாமல் மனங்கலங்கி முனிவர்கள் சொல்லிக் கொண்டிருந்தபொழுது, தான் அபிமானித்ததும் போக மோக்ஷப்பிரதையென்னும் பெயருடையதுமான ஸ்வர்ணமுகரி ஜலத்தில் ஸ்நானஞ்செய்து வில்வக்கொழுந்துகளை எடுத்துக்கொண்டு ருசியான மாம்ஸங்களை ருசிபார்த்தெடுத்துக் கொண்டு வாயுள் ஜலத் தைக் கிரகித்துக் கொண்டு செருப்பு விளங்குகிற பாதங்களை யுடைய வனுய் வில்லை யேந்தியவனுப் கூர்மையான பாணங்களின் வரிசை யால் பிரகாசிக்கிற அம்பறாத்தூணி பக்கத்தில் விளங்கவும் தேகத்தில் பதினேந்து இடங்கள் திருநீற்றுத் திரிபுண்டரத்தால் பிரகாசிக்கவும் தான் பெருங் கண்களையுடையவன் என்கிற அபிமானம் நிறைந்த மனத்தை யுடையவனுகிய வேடன் சிவபாதங்களை ஸ்மரித்துக் கொண்டு முன்போலவே வந்தான். அதிவேகத்தோடு வருகிற அவ் வேடனை முனிவர்கள் பார்த்து, 'சிவசந்நிதானத்திலே வருகிற இந்த வேடன் யாவன்? பயங்கரவேஷத்தோடு கூடிய இவன் நம்மைக் கவனித்திலன்; பிராந்தன்போற் றோற்றுகிறன்; இவனுடைய செய் கையாலே சிவனுடைய கண் விகாரத்தை யடைந்ததோ? இல்லை யாயின் மகேசனுடைய கண் இப்படி யாவானேன்?' என்று ஆலோ சித்துக் கொண்டிருந்தபொழுது, கம்பீர நடையை யுடையவனுய் அவன் மனத்தாலே சிவனை வணங்கிச் சிவன் சமீபத்தில் வந்தான். வாயில் ஜலத்தாலே அவ்வயனுகிய சிவனை யபிடேகித்துப் பஞ்சாட் சரத்தை உச்சரித்துக்கொண்டே வில்வபத்திரத்தாலே பூசித்து ருசி பார்த்த மாம்ஸத்தை நிவேதித்துச் செருப்புக்காலோடு கூடியவனுய்த் தேகத்தாலே வணங்கி எழுந்து நின்று அவ்வேட அரசன் ஈசுவர னுடைய நீர்கொட்டுகிற உருமாறிய ஒற்றைக் கண்ணைப் பார்த்தான். 'ஐயோ என்ன! ஈசுவரனுடைய கண் இப்படியாய்விட்டதே! ஒரு பொழுதும் திரிகரணங்களாலும் நான் ஒரு தவறுஞ் செய்ய

வில்லையே ! அஞ்ஞானியாகிய நான் இதன் காரணத்தை இப்போது அறிகிலனே! என் பிராணேசனுடைய நேத்திரம் எப்படி விகாரமாகக் காணப்படுகிறது! இன்று இப்படிப் பார்த்துக்கொண்டிருக்கிற என்னுடைய இருதயம் பிளக்கவில்லையே ! ஈசுவரனுடைய இம்மாதிரியிருக்கிற நேத்திரத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிற என் தேகத்தில் இன்னும் பிராணன் எதனுற் போகாமலிருக்கிறதோ ! ஆதலால் ஃ ! என்பக்தியும் என்விரதமும் என்குலமும் இருந்தவாறு !' இம்மாதிரி மனத்தில் வருந்துபவனும் பிராணனை விடவேண்டுமென்று விரும்புபவனுமாகிய அவனுக்குச் சிவனருளால் எப்படியோ ஒரு புத்தி பிறந்தது. 'பக்தனையிருந்தும் ஒருவன் அகங்காரப்பேயாற் பிடிக்கப்பட்டவனுனல் அவனுக்கு நான்கு புருடார்த்தங்களும் துர்லபமென்றே சொல்லுகிறார்கள். ஆகையால் முமுக்ஷுக்களனைவரும் அகங்காரத்தை விடவேண்டும். இவ்வேடன் என் பக்தன், விடயங்களிற் பற்றில்லாதவன், என்னையே எப்போதும் சரணமாகக் கொண்டவன், மோக்ஷத்தை விரும்பி இவ்வாறு திரிந்துகொண்டிருக்கிறான், ஸம்ஸாரமென்னும் பயங்கரமான சமுத்திரத்திலிருந்து எப்பொழுதும் காக்கத் தக்கவன், நீண்ட கண்களையுடைய இவன் நேத்திராபிமானத்தாற் பிடிக்கப்பட்டவன்போல் திரிந்துகொண்டிருக்கிறான், இப்பேர்ப்பட்ட அபிமானம் தொலையவேண்டுமென்றே ஜகதீசுவரன் என்னுடைய கண்ணை வாங்கிக்கொள்ளும் பொருட்டுத் தம் கண்ணை இவ்வாறு மாறுபடச் செய்தார். என்னைக் காத்தலில் உறுதியுடைய சிவனை நேத்திரத்தை அர்ப்பித்தலால் நான் சந்தோஷப்படுத்துகிறேன். என் கண்ணை அர்ப்பித்தும் சிவன் திருப்தியடையாராயின் நான்கூச்சமில்லாத மனத்தோடு பிராணனுல் அவரை ஆராதிக்கிறேன்' என்ற புத்தியால் அவ்வேடன் சந்தோஷத்தோடு, முனிவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், கூர்மையான பாணத்தாலே தன் கண்ணைப்பறித்துச் சம்புவின் முகத்தில் நேத்திரஸ்தானத்தில் ஆதரத்தோடு வைத்தான். அப்பொழுதே தேவனுடைய அக்கண்ணானது முன்போல ஆகிவிட்டது. அக்கண்ணைப் பார்த்து வேடனும் மிக்க சந்தோஷத்தை யடைந்தான். மறுபடியும் அவனுடைய பக்தியைச் சோதிக்க அக்கணத்திலே ஈசுவரன் தம் மற்றொரு கண்ணை நீர் கொட்டுவதாகவும் கருவிழி மறைந்திருப்பதாகவுஞ் செய்தார். அவ்வேடர்சிகாமணியும் அதைப் பார்த்து, கூச்சமில்லாத மனத்தோடு ஈசுவரனுக்குக் கண்ணை அர்ப்பிப்பது இஷ்டமென்றே யறிந்து செருப்போடு கூடிய ஒரு காலை அறிகுறியாக ஈசுவரனுடைய தலையில் வைத்து மற்றொரு கண்ணைக் கூர்மையான பாணத்தாலே அத்தியந்தப்பிரீதியோடும் பறிக்க இச்சித்தான். பகவான் ஈசன் மிக

மகிழ்ந்தவராய் அவனே அகங்கார மில்லாதவனுக எண்ணி இலிங்க மத்தியத்திலிருந்து தோன்றி அவனுடைய கையைத் தம் கையாற் பற்றிக்கொண்டு அவனுக்கு முன்போலவே கண்ணைக் கொடுத்து இனிய வார்த்தை சொன்னர்: "வேடனே! உன் பக்தியாலும், நியமத் தாலும்,பூசையாலும்,நீ எப்பொழுதும் விபூதிருத்ராக்ஷங்களைத்தரிப் பதனாலும், உன் வாய்ஜலத்தாலும், நீ எச்சில் பண்ணிய மாம்ஸத்தா லும்,நேத்திரத்தை அர்ப்பித்தலாலும்,உன்மனோதிடத்தாலும்,செபத் தாலும்,நானவித உபசாரங்களாலும், நிரந்தரதியானத்தாலும்,எங்கு முள்ள சமஸ்த விஷயங்களிலும் நிராசையாலும் மகிழ்ந்தவனானேன். இங்கு அதிகமாகச் சொல்லுவதால் என்ன உபயோகம்? உனக்குச் சமானமானவன் பூதலத்தில் இல்லை" என்று சொல்லி அவனைக் கண் ணப்பா என்றுசொல்லித் தழுவிக்கொண்டு, அவனுடைய பக்திமிகுதி யைப் பார்த்துக்கொண்டிருந்த முனிவர்கள் வெட்கத்தால் தலைவணங்க அவனுக்கு வரங்களைக் கொடுத்தார். "இந்தப் பங்குனி மாசத்தில் பூர்ணிமையாகிய சுபதிதியில் வெள்ளிக்கிழமை உத்திரநாளில் மஹா புண்ணியமானதும் நிர்மலமான ஜலத்தை யுடையதும் இராமதீர்த் தத்திற்கு வடக்கிலுள்ளதும் சதுர்விதபுருஷார்த்தங்களைக் கொடுப் பதும் புக்திமுக்திதமென்னும் பெயருடையதும் முனிவர் சித்தர் தேவர்களால் ஆசரயிக்கப்பட்டதுமான உன் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து எவர்கள் என்னை அர்ச்சிக்கிறார்களோ அவர்கள் என் சாரூப் யத்தை அடைக. உன்னுடைய இந்தக் கதையை எவன் ஆதரத் துடன் படிக்கிறானே கேட்கிறானே எழுதிக்கொடுக்கிறானே பூசிக்கி றானே அவனுக்கு என் ஆஞ்ஞையாலே சகல பாபங்களும் தொலைக. தேகாந்தத்தில் எல்லாராலும் விரும்பப்படும் என் உலகவாச மும் உண்டாகுக. உன் தீர்த்தத்தை ஒரு தடவை தியானஞ் செய் வதோ தொடுவதோ துதிப்பதோ பானம் செய்வதோ அதில் ஸ்நா னஞ் செய்வதோ கண்ணெடுத்துப் பார்ப்பதோ எவர்கள் செய்கிறார்களோ அவர்கள் நானே. இதில் சந்தேகம் வேண்டு வதில்லை. நீ பாக்கியவான்; செய்யவேண்டியதைச் செய்து முடித்த வன்; எல்லாத் தேவர்களாலும் பூசிக்கத்தகுந்தவன். உன்னுடைய இச்சரித்திரம் உலகத்தில் கற்பந்தோறும் யுகந்தோறும் எங்கும் புதுமையானதுபோலப் பிரசித்தமாகுக! பிரகாசமாகுக! இப்படியே இந்த லிங்கத்தில் என்னைப் பக்தியோடு பூசைசெய்துகொண்டும் என் உருவத்தை இருதயத்தில் தியானஞ்செய்துகொண்டும் ஐந்து வருஷங்கள் இருந்து மறுபடியும் முன் சொல்லப்பட்ட எல்லாச் சிரேஷ்ட குணங்களோடுங் கூடிய இத்தினம் வந்தபொழுது புற்றில் பாம்பு தோலை விடுதல்போலத் தேகத்தை விட்டு எல்லாத்தேவர்

களாலும் விரும்பப்படும் என்சாரூப்யத்தை யடைந்து கைலாய சிகரத்தில் என் அருகில் வாசஞ் செய்வாயாக!'' என்று சொல்லி முனிவர்கள் பார்த்துக்கொண்டிருக்க லிங்கத்தில் அந்தர்த்தானமாயினர். அவனும் சிவாஞ்ஞையால் அங்கு ஐந்து வருஷங்களிருந்து பிறகு சரீரத்தை விட்டு உத்தமமான சிவசாரூப்யத்தை யடைந்தான். அப்பொழுது அங்கிருந்த மஹாத்மாக்களாகிய முனிவர்களும் வேடனுடைய சுத்தமான சரித்திரத்தை ஒருவர்க்கொருவர் சொல்லி ஆச்சரியமுற்ற மனத்தினராய் அத்தலத்தையும் கொண்டாடிப் பிறகு சிவனுடைய வைபவத்தை ஸ்மரிப்பவர்களாய் வந்த வழியே சென்றார்கள். வேடன் முத்தியடைந்தான். அப்படியே அங்கு அர்ச்சனை செய்தவர்களும் முத்தியடைந்தார்கள். அதனை நம்பி எவன் பிரயத்தினத்தோடு நன்றாகப் பூசைசெய்கிறானோ அவன் அகிலராஜ்யத்தையு மநுபவித்து இறுதியில் முக்தியையும் அடைகிறான். அந்தத் தேவேசன் முக்தியைக் கொடுக்கிறவர் என்று நான் சத்தியமாகச் சொல்லுகிறேன். அவர் சரண்யர் (காப்பதிற் சமர்த்தர்). வேதங்களால் அறியப்படுபவர். போக மோக்ஷங்களைத் தருபவர். அவரின் வேறானவன் பிராணிகளுக்கு மோக்ஷத்தையும் போகத்தையும் தரவல்லவனல்லன். அவரையன்றி வேறொருவனை அர்ச்சிப்பதில் ஈடுபட்டவர்கள் ஜன்மந்தோறும் தரித்திரராய்ப் புண்ணியமற்றவர்களாய்ப் பலவகை நீச ஜாதிகளிற் பிறந்தவர்களாவார்கள். [பகவான்] எவனுக்கு அனுக்கிரகஞ் செய்யவிரும்புகிறாரோ அவனுக்கு ராஜ்யத்தையும் சுகத்தையும் கொடுத்து முடிவில் மேலான மோக்ஷத்தையும் கொடுக்கிறார். இதில் சந்தேகமில்லை. பாபமற்றவரும் ஸம்ஸார பந்தத்தை யொழிப்பவரும் போக மோக்ஷங்களைத் தருபவருமாகிய அவரையே பக்தியுடன் எப்பொழுதும் [மாந்தர்] வழிபடுகிறார்கள். அந்தத் தலத்தில் வசிக்கிறவர்களுக்கு [பகவான்] இறுதியில் மோக்ஷத்தைக் கொடுத்தேவிடுகிறார். பிரமாண்ட மண்டலத்தில் அத்தலத்திற்குச் சமானமானது கிடையாது. எல்லாத் தேவர்க்குந் தேவராகிய சூலிக் கொப்பானவன் எவன்? எவர்கள் எல்லா நன்மைகளையும் விரும்புகிறார்களோ அவர்கள் அங்கிருக்கிற சிவனை வழிபடுக. முனியே! இன்று நான் அவ் வேடனுடைய அத்தியற்புதமான சரித்திரத்தை உனக்குச் சொல்லினேன். காருண்யநிதியாகிய சிவனுடைய பிரபாவத்தையும் சொன்னேன். நீயும் பாக்கியவானனாய்; நிச்சயம்.

ஸ்ரீ சிவபுராணத்திலுள்ள சிவரஹஸ்ய சங்கிரகத்தில் ஸ்ரீ காளஹஸ்தி ஸ்தல மாஹாத்ம்யத்தில் 'சபரனுக்கு முத்தி கொடுத்தலைச் சொல்லுகை' என்னும் பெயரிய ஐம்பத்துநான்காவது அத்தியாயம் முடிந்தது.

மணிமேகலையும் புத்தஜாதகமும்

மு. இராகவையங்கார்

அரைநூற்றாண்டுக்கு முன்பு நம் தமிழ்க்கலைமகள் அடைந்திருந்த தோற்றத்தினும் இப்போதுள்ள நிலை அதிசயப்பொலிவுள்ளதென்றே சொல்லலாம். அக்காலத்தே அவள் தன் சீரிய அணிகளிற் சிறந்தனவற்றை அணிந்து விளங்கியவள் என்று சொல்வதற்கில்லை. அவற்றுள் ஒரு சிலவற்றைத் தமிழுணங்கு அப்போது தரித்துவந்த வளாயினும், தன் செவ்விநலத்துக்கேற்ற திருந்திழைகளை முழுதியும் பூண்டு பொலிவது இக்காலமேயாம். அச்சிங்காரவணிகள் சங்க நூல்களே என்பது சொல்லவும் வேண்டுமோ? அப்பேரணிகளிலே, இழுமென்னும் இன்னிசை கொண்டு, தமிழ்ப்பாவையின் விழுமிய நடையழகைச் சிறப்பித்து நிற்பவை இரண்டாம். அவை சிலப்பதிகாரம் மணிமேகலை என்பன. இந்நூல்கள் வெளிவந்த காலந் தொட்டுத் தமிழ்மக்களின் உள்ளங்களை இவை கவர்ந்துவரும் அளவு பிற நூல்கள் கவர்ந்தனவல்ல. இப்பேரணிகளை மாசுநீக்கித் தூய்மைசெய்து செப்பனிட்டுத் தமிழ்த்தெய்வத்துக்கு அணிந்து உதவிய பெரியாரை நாம் வந்திப்போமாக. இவர்களாராய்ச்சியால் இந்நூல்கள்பற்றித் தெரியவந்த அரிய செய்திகள் அளவிறந்தன. இச்சங்க விலக்கியங்களில் ஈடுபட்ட தமிழறிஞர்களும் அறிந்த செய்திகளை அவ்வப்போது வெளியிடலாயினர். சமீபத்தில் புத்த ஜாதகக்கதைகளை யான் படித்துவந்தபோது இந்நூல்கள் சம்பந்தமான பௌத்தச் செய்திகள் சில எனக்குத் தெரியவந்தன. அவற்றை இப்போது வெளியிட விரும்புகின்றேன்.

1. மணிமேகலையும் ஜாதகக்கதைகளும்

சிலப்பதிகார மணிமேகலைகள் இரண்டும் ஒருகாலத்தவரான இளங்கோவடிகள், சாத்தனார் என்ற புலவர்பெருமக்களால் முறையே இயற்றப்பெற்றவை என்பதும், முன்னது கோவலன்கண்ணகிகளின் வரலாற்றையும், பின்னது அக்கோவலன் காதற்கணிகையான மாதவியின் மகள் வரலாற்றையும் கூறுவன என்பதும், அவற்றுள் மணிமேகலை சிலப்பதிகாரத்துக்கு முன்பே செய்யப்பட்டதென்பதும் பலரும் அறிந்தவை. மாதவிமகள் பௌத்தபிக்ஷுணியாகி நிகழ்த்திய அருஞ்செயல்கள் மணிமேகலை நூலிற் கூறப்படுகின்றன. இவள்

வரலாறுகளை நோக்குமிடத்து, அவை பெரும்பாலவும் உண்மை நிகழ்ச்சிகள் என்று இக்காலத்தவர் ஒப்பக்கூடியனவல்ல. புத்தபகவானது முற்பிறவி வரலாறுகளைக்கூறும் ஜாதகக்கதைகளைப் படித்து வருவோர்க்கு, அவற்றின் போக்கைத்தழுவியே மணிமேகலைச்செய்திகள் மிகுதியும் அமைந்துள்ளன என்பது எளிதில் விளங்கும். மணிமேகலையின் அமானுஷ்ய சிருத்தியங்களாகக் கூறப்பட்டவை யாவும் உண்மையாக நிகழ்ந்தனவாயின், சாத்தனார்க்குப்பின் தம் நூலைப் பாடி முடித்த இளங்கோவடிகள் அவற்றிற் சிலவற்றையேனும் கூறிச் சிறப்பிக்கத் தவறார் அன்றே? அவ்வாறு ஒன்றுங்கூறாமல், கோவலன் இறந்ததும், மாதவியும் அவள்மகளும் புகாரில் பௌத்தசங்கத் தலைவராயிருந்த அறவணவடிகளைப் புகலடைந்து பிக்ஷுணிகளாயினர் என்ற வரலாறொன்றையே அவர் கூறிப்போதல் காணலாம்[1]. பண்டைக் காலத்துப் பௌத்தர்கள் தம் முற்பிறவி நிகழ்ச்சிகளை அறியமுயல்வதில் அதிக உற்சாகங்காட்டி வந்தவர்கள். அந்நிகழ்ச்சிகளை மிகுதியும் புனைந்துரைத்து, அவற்றின்மூலம் தம் சமயக் கொள்கைகளை உலகிற் பரப்பிவரலாயினர். இம்முறை, சைனரும் கொண்டதேயாம். இவை ஜாதகக்கதை முதலியவற்றால் விளங்குதல் போலவே, மணிமேகலையாலும் அறியப்படுகின்றன. தாம் எடுத்துக் கொண்ட நூல்வரலாற்றை உலகியல்புகளுக்கு ஒப்பக்கூறும் பெருநோக்கமுள்ள இளங்கோவடிகளும் தம் காலநிலைக்கேற்றபடி சன்மாந்தர நிகழ்ச்சிகளைப் புனைந்து கூறுவதிற் பின்வாங்கவில்லை. இவற்றால் இத்தகைய புனைவுரைகள் சங்ககாவியங்களில் அதிகம் எனின், அது, பண்டைத் தமிழ்மக்களின் மனங்கட்கேற்ற 'காப்பியவமைதி' என்றே நாம் கருதல்தகும். இனி, முதலில் மணிமேகலை வரலாறுகள் சிலவற்றை நோக்குவோம்.

2. மணிமேகலா தெய்வம்

கோவலன் தன் ஒன்பதாந்தலைமுறை முன்னோனும் புண்ணிய சீலனுமான வணிகனொருவன், தேசாந்தரஞ்செல்லுதற்கு ஏறிச் சென்ற மரக்கலங் கவிழ்ந்தமையால் கடலிடையே ஆதரவற்று அவன் வருந்தி நின்றபோது, மணிமேகலை என்ற தேவதை ஆங்குத் தோன்றி அவனைக் காத்துதவினள் என்றும், அப்பேருதவியைப் பாராட்டியே, கோவலன் தனக்கு மகள்பிறந்ததும் அத்தேவதையின் பெயரை அவளுக்கு இட்டுவழங்கினன் என்றும் சாத்தனாரும் இளங்கோவடிகளும் கூறுவர்[2]. இம்மணிமேகலா தெய்வத்தைப்

1. சிலப்பதிகாரம், 30, 10—36.
2. மணிமேகலை, 29, 14—31 ; சிலப்பதிகாரம், 15, 28—37.

பற்றி, ஜாதகக்கதைகளினும் வரலாறுகள் வழங்குகின்றன. உலக பாலரான தேவர்களால் மணிமேகலை என்பாள் சமுத்திர தேவதை யாக நியமிக்கப்பட்டு, தருமசீலர்கள் கடலிடையே கலங்கவிழ்தல் முதலியவற்றால் வருந்துமிடத்து, அவர்களை உற்ற சமயங்களிற் காத்ததவும்படி ஆணையிடப்பட்டிருந்தனள் என்பதும், அம் முறையே, அந்தணனை சங்கன் என்பவனும், அரசகுமரனை மஹா ஜனகன் என்பவனும் மரக்கலச்சிதைவால் கடலிடையே வருந்தி நின்றபோது, ஏழாநாளில் அம்மணிமேகலா தெய்வத்தாற் காக்கப் பட்டனர் என்பதும் அந்த ஜாதகக் கதைகளிற் கூறப்பட்டுள்ளன.[1] இச்செய்தியை நான்கு வருஷங்கட்குமுன்னர் நான் எழுதி வெளியிட்ட சேரன் செங்குட்டுவன் சரித்திர நூலிற் குறிப்பிட் டுளேன் (பக். 43-4). இவ்வொற்றுமையைச் சரித்திராசிரியரான டாக்டர்-ஸில்வன் லெவி (*Dr. Sylvain Levi*) என்பாரும் கண்டு கொண்டு, மற்றுஞ்சில விசேடச்செய்திகளுடன் சென்றவாண்டில் கட்டுரைகள் வரைந்திருக்கின்றனர்[2]. இந்து-சைனு, சீயம், பர்மா, இலங்கை முதலிய பிரதேசங்களில் மணிமேகலாதெய்வத்தின் வர லாறுகளாக வழங்குவன சில அவர் விசாசத்தால் அறியப்படுகின் றன. அவற்றினின்றும், கன்னியாகுமரிக்குக் கிழக்கேயுள்ள தீபாந் தரங்களெல்லாம் இந்தச் சமுத்திரதேவதையின் பரிபாலனத்துக்கு உட்பட்டிருந்தன என்பதும், போதிசத்துவராகக் கூடிய புண்ணிய சீலர் கடலிடையே வருந்துகின்றபோது இந்திரனேவலால் இத் தேவதை ஏழுநாள்களுக்குள் காத்து உதவிவந்தவள் என்பதும், புத்தபகவானிடம் இத்தெய்வத்துக்குள்ள பத்திமேலீட்டால் அப் பகவானுக்குச் சைத்தியங்கள் செய்வித்தும் மனமுருகி வழிபட்டும் வந்தவள் என்பதும் விளங்குகின்றன.

"நின்னுயிர்த் தந்தை நெடுங்குலத் துதித்த
மன்னுயிர் முதல்வன் மகர வேலையுள்
முன்னிய வங்க முங்கிக் கேடுற
* * *
ஆதி முதல்வன் போதி மூலத்து
நாத னுவோன் நளிநீர்ப் பரப்பில்
எவ்வமுற் றுன்றன தெவ்வந் தீரென"
"தீவ திலகையுந் திருமணி மேகலா
மாபெருந் தெய்வமும் வந்தித் தேத்துதற்கு

---

1. The *Jātaka* by Prof. E. B. Cowell, No. 442, 539.
2. Indian Historical Quarterly "More on Maṇimēkhala" Vol. iii, No. 2.

ஒத்த கோயி லுளத்தகப் புனைந்து
விழவுஞ் சிறப்பும் வேந்த னியற்ற'' (29,14—25)

என்பனபோலும் பகுதிகளால், மேற்கூறிய செய்திகள் மணிமேகலையினுங் கூறப்படுதல் காணலாம். புத்தபகவானிடம் வைத்த பத்திமிகுதியால் மனந் தன்வசமிழந்து, இறுதியெல்லையாகிய ஏழாநாளில் இத்தெய்வம் போதிசத்துவருடைய துன்பநிலையை உணர்ந்து உதவ முன்வருவள் என்பர். இவற்றால், ஜாதகக்கதைகளிலும் பௌத்த தேசங்களிலும் வழங்கும் மணிமேகலாதெய்வம், சாத்தனர் இளங்கோவடிகள் காலத்தே பிரபலமான கடற்றேவதையாகக் கருதப்பட்டு வந்தவள் என்பது பெறப்படுகின்றது.

3. பாண்டுகம்பளந் துளங்குதல்

''ஈண்டுநீர் ஞாலத் திவன்செய லிந்திரன்
பாண்டு கம்பளந் துளக்கியது'' (14, 28-29)

''தனது பாண்டு கம்பளம்
தானடக் குற்ற தன்மை நோக்கி
ஆதி முதல்வன் போதி மூலத்து
நாத னுவோ னளிநீர்ப் பரப்பில்
எவ்வமுற் றுன்றன தெவ்வந் தீரென'' (29, 14-25)

என்னும் அடிகளால், உலகில் போதிசத்துவர்கள் (=போதி மூலத்து நாதனுவோர்) தோன்றி அருஞ்செயல்கள் நிகழ்த்து மிடத்தும், அவர்கட்கு இடுக்கண் விளையும் காலத்தும் இந்திரனது ஆசனமாகிய பாண்டுகம்பளம் நடுங்கும் என்றும், அஃதறிந்து அவன் உரியவற்றைச் செய்ய முந்துவன் என்றும், அம்முறையே ஆபுத்திரனது தருமச்செயல்களும், கோவலன் முன்னோனது கடல்விபத்தும் இந்திரனது ஆசனத்தைக் கம்பிக்கச்செய்ய அஃதறிந்து அவ்விந்திரன் நேரிலோ பிறர்மூலமோ தன் கடமையைச் செய்யலாயினன் என்றும் கூறப்படுதல் தெரியலாம். பாண்டு கம்பளம் என்பது இந்திரனது கம்பளவடிவான ஆசனம் என்று இதுவரை கருதப்பட்டது. ஆனால், ஜாதகக்கதைகளில் இஃது ஒப்புயர்வற்றதும் மஞ்சணிறமுள்ளதுமான ஸ்படிகமணியால் அமைந்த சிங்காதனம் என்று கூறப்படுகின்றது.[1]

''ஹா ! பாண்டு கம்பல சிலா !
ஹா ! தேவஸபா''

---

1. The *Jātaka*, Vol. ii, p. 63; iv, p. 168.

என்ற திவ்யாவதானத் தொடரானும்[1], இவ்வாசனம் சிலாவடிவானது என்பது தெரியலாம். மேற்கூறியபடி, போதிசத்துவரால் உண்டாக்கப்படும் நிகழ்ச்சிகளால் இவ்வாசனங் கம்பித்ததென்று மணிமேகலை கூறியபடியே, ஜாதகக்கதைகளிலும் அடிக்கடி இச்செய்தி கூறப்படுதல் அறியத்தக்கது.

4. மணிபல்லவம்

மணிபல்லவம் என்ற தீவிற்கு மேற்கூறிய சமுத்திரதேவதையால் மணிமேகலை அழைத்துச்செல்லப்பட்டதும், அங்குள்ள புத்த பீடிகையால் அவள் தன் பழம்பிறப்பு உணர்ந்துகொண்டதும், அங்கே பொய்கையொன்றிற் பெற்ற அமுதசுரபி என்ற அக்ஷய பாத்திரத்தோடு அவள் வெளியேறி அறங்கள் பல செய்ததும், பிறவும் மணிமேகலைநூலால் அறியப்படும். இம்மணிபல்லவம், காவிரிப்பூம்பட்டினத்துக்குத் தெற்கே[2] மூப்பது யோசனையில் உள்ளதாகச் சாத்தனர் கூறுவர். இத்தீவு, இப்போது யாழ்ப்பாணப் பகுதிகளுள் ஒன்றுகவே பலரானும் கருதப்படுகின்றது. அவற்றுள்ளும் **காரைத்தீவு** என்றபகுதியே மணிபல்லவமாகக் கருதப் பொருத்தம் உண்டு. இதற்கும் புகார்நகர்க்குமிருந்த தொடர்பை அடியில்வரும் அகித்தி ஜாதகக்கதையால்[3] அறியலாம்.

காசியில், பெருஞ் செல்வமுடைய பிராமணகுடும்பமொன்றிற் பிறந்த அகித்தி என்பவர், தம் தந்தை இறந்ததும் தமக்குக் கிடைத்த செல்வமுழுமையும் ஏழுநாளில் தானதருமங்களிற்செலவு செய்துவிட்டுத் துறவியாய்த் தம் சகோதரியுடன் தமிளராஜ்யத்துக்குச் சென்று, காவேரிப்பட்டினத்தில் உள்ள உபவனமொன்றில் தங்கித் தியானத்திலிருந்தனர் என்றும், பின் அவ்விடமும் அவர்க்கு ஏற்றதாகாமையால், ஆகாசவழியே நாகதீபத்தின் வடபாலுள்ள **காரைத்தீவிற்குச்** சென்று, அங்கிருந்த காரைமரத்தின்கீழ்க் குடிலமைத்துக்கொண்டு அதனுளிருந்து தனியே நோற்றுவந்தனர் என்றும், அவரது அருஞ்செயல்கள் இந்திரனதுபளிங்காசனத்தை நடுங்கச்[4] செய்யவே, அவன் நேரில்வந்து அவரது பெருமையை அறிந்து உரியவற்றைச்செய்து சென்றான் என்றும் அந்த ஜாதகங் கூறுகின்றது. இலங்கையை நாகதீபம் என்ற பெயரால் ஜாதகங்கள் பலவும்

---

1. *Divyāvadāna*—University Press, Cambridge, pp. 194-5.
2. மணிமேகலை, 10, 57.
3. The *Jātaka*, Vol. v, p. 150.
4. இந்திரனது பளிங்காசனத்தைக் கொதிக்கச் செய்ததாக மொழிபெயர்ப்புக் கூறும்.

வழங்கும்[1]. இத்தீபத்தின் வடபால் உள்ள காரைத்தீவு பௌத்தர்களால் முற்காலத்தே பெரிதும் மதிக்கப்பட்டதென்பதற்கும், காவிரிப்பூம்பட்டினத்தோடு இதற்கு நெருங்கிய தொடர்பிருந்தது என்பதற்கும் இக்கதையே தக்க சான்றுதலால், மணிமேகலையிற்கண்ட மணிபல்லவம் இவ்வியாழ்ப்பாணத்தீவாகக் கருதற்குரியதன்றே ?

5. மணிபல்லவத்துப் புத்தபீடிகை

மேற்கூறிய தீவிலிருந்த புத்தபீடிகையின் தரிசனத்தால் மணிமேகலை தன் பூர்வஞானம் பெற்றவள் என்பது அவள் வரலாற்றால் தெரியலாம். இப்பீடிகையின் வரலாற்றை,

> "தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை
> பிறப்புவிளங் கலிமொளி யறத்தகை யாசனம்
> கீழ்நில மருங்கி னாகர் டாளும்
> இருவர் மன்னவ ரொருவழித் தோன்றி
> எமதீ தென்றே யெடுக்க லாற்றார்
> தமபெரும் பற்று நீங்கலு நீங்கார்
> செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்துத்
> தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் புரிகாள்
> இருஞ்செரு வொழிமின் எமதீ தென்றே
> பெருந்தவ முனிவ னிருந்தற மூரைக்கும்
> தரும பீடிகை" (9, 5 2-63)

என்ற அடிகளிற் காண்க. இவற்றால், நாக நாட்டரசர் இருவர் அம்மணிப்பீடிகையைப் பெறவிரும்பிப் பெரும்போர் புரிந்துவந்த போது, புத்தபகவான் ஆங்குத் தோன்றி, அது தமக்குரியதென்று கூறி, அதனில் வீற்றிருந்து அவர்கட்குத் தருமோபதேசம் புரிந்து அன்னோர் கொண்டிருந்த பகைமைநீக்கி உய்வித்தருளினர் என்பது விளங்கும். இவ்வரலாறே, இலங்கைச் சரித்திரமாகிய மகாவமிசத்தும் சிறுமாறுபாட்டுடன் கூறப்பட்டுளது. நாகதீபத்தில், மகோதரன் சூலோதரன் என்ற மாமனும் மருகனுமாகிய அரசரிருவர்க்குள் மணியிழைத்த சிங்காதனமொன்றன் விஷயமாக விவாதமுண்டாய்ப் பெரும்போர்நிகழப் புத்தபகவான் அதனைத் தடுக்கவிரைந்து அவர்கள் முன் பிரசன்னராகி, அன்னோரது அஞ்ஞானம் நீங்கும்படி தருமோபதேசம் புரிய, உடனே அவ்விருவரும் தம் பகைமை நீங்கி அவ்வாசனத்தைப் பகவானுக்கே சமர்ப்பித்தனர் என்றும், அம்மணியாசனத்தில் அவர் வீற்றிருந்து, அவ்வேந்தரளித்த தெய்வ வுணவை அமுது செய்தனர் என்றும், பின் ராஜாயதன (அரசு

1. The *Jātaka*, Vol. ii, 90; iii, 124 ; iv, 150.

போலும்) மரக்கலனை ஆங்கே அடையாளமாக காட்டி அம்மணிப் பீடிகையையும் அவர்க்கே திரும்பவளித்து அதனை வணங்கிவரும் படி ஆணையிட்டுச் சென்றனர் என்றும் அந்நூலுட் காணப்படுகின்றன[1]. இம்மகாவமிசவரலாற்றும் புத்தஜாதகங்களுள் ஒன்றுகவே கருதத்தக்கது. இவற்றுல் மணிபல்லவப் பீடிகைச்செய்தி, இலங்கை வரலாற்றுலும் ஆதரிக்கப்படுதல் அறியப்படும்.

6. இந்திரவிகாரம்

காவிரிப்பூம்பட்டினத்தில், ஏழரங்குகள் உடையதாய் மிகப் பிரபலம் பெற்ற பௌத்தவிகாரம் ஒன்றிருந்த செய்தி சிலப்பதிகார மணிமேகலைகளால் அறியப்படுகின்றது. இதனை ஆதியில் நிருமித்தவன் இந்திரன் என்று அந்நூல்கள் கூறும். அசோக சக்கரவர்த்தியால், பௌத்தமதப் பிரசாரஞ்செய்வதற்கு அனுப்பப்பட்ட அவன் இளவலும் பிக்ஷுவுமான மகேந்திரன் என்பான், தமிழ் நாடு சென்று சோணாட்டில் ஒரு பெரிய விகாரங்கட்டிக்கொண்டு அதனிற் சிலகாலம் வசிக்கலாயினன் என்றும், அவ்விகாரத்தின் இடிந்த பகுதிசில 7-ம் நூற்றுண்டில் இங்கு வந்து சென்ற யுவான் ஸுவாங் காலத்தும் காணப்பட்டன என்றும் கூறப்படுகின்றன[2]. இங்கே சோணாட்டிற் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுவது, காவிரிப்பூம் பட்டினத்தில் விளங்கிய விகாரமாகவே கொள்ளல் பொருத்தமாகும். ஆயின் இந்திரவிகாரம் என்பதற்கு மகேந்திரன் கட்டிய விகாரம் என்பதே பொருளாக வேண்டும். அரசகுலத்தவனை இந்திரன் அல்லது மகேந்திரன் கட்டியதொன்றே தேவனை இந்திரன் கட்டியதாகப் பின்னோரால் கருதப்படலாயிற்று என்பது இதனாற் பெறப்படும். மகேந்திரன் கட்டிய விகாரம் அமைந்த ஊரை வேறுகச் சிலர் கருதுவர்.

7. கச்சித் தருமதவனம்

மணிமேகலை, கச்சிமாநகர் சென்றபோது, அந்நகரின் தென் மேற்காகவுள்ள தருமதவனத்தை முதலில் அடைந்தனள் என்றும், அவள் வருகையறிந்த அந்நகரத்தரசனை இளங்கிள்ளி மணிமேகலையைச் சென்று வணங்கிய பின், அவளேவலால், மணிபல்லவப் பீடிகை போன்ற பீடிகையும், மணிமேகலா தெய்வம் வழிபடற்கேற்ற புத்தசைத்தியமும் வகுத்தனன் என்றும், அவ்வுபவனத்தே மணிமேகலை அறஞ்செய்து கொண்டிருக்கும்போது, அறவணவடி

1. *Mahāvaṁśa*, 1, 45-49.

2. V. A. Smith's *The Early History of India*, 3rd Edition, p. 185.

கலைத் தன் தாயுடன் ஆங்குச் சந்தித்தனள் என்றும் கூறப்பட்டுள்ளன. சீனயாத்திரிகரான யுவான் ஸுவாங்கும், கச்சிக்குத் தெற்கேயுள்ள சங்காராமம் ஒன்றைப்பற்றிக் குறிப்பிடுதல் இதனுடன் ஒப்பிடத்தக்கது. இவ்வாராமத்துள், அசோகனுற் கட்டப்பட்டதாகக் கருதப்பட்டதும் 100 அடி உயரமுள்ளதுமான ஸ்தூபமொன்று தம் காலத்து விளங்கியதாகவும் இதனுள் பௌத்தப் பெரியோரும் கற்றவர்களும் கூடும் இடமுள்ளதாகவும் அவர் குறிப்பிடுவர்[1]. அசோகன் கச்சியில் ஸ்தூபம் கட்டியதாகச் சொல்லப்படுவதற்கு வேறு தக்க சான்றின்மையால், அஃது இளங்கிள்ளி கட்டியவற்றுள் ஒன்றாகவே கருதத்தக்கது[2]. மயிலுருவமாக அமைந்த கச்சிமாநகர்க்குத் தோகைபோல் அமைந்த சோலையொன்று இருந்ததென்பது,

"எரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிரூக்
காருடைய பீலி கடிகாவாச்—சீருடைய
அத்தியூர்[3] வாயா அணிமயிலே போன்றதே
பொற்றோரான் கச்சிப் பொலிவு"

என்ற பழைய வெண்பாவால் அறியலாம். இதனுட் கூறப்பட்ட கடிகா மணிமேகலை கூறும் தருமதவனம்போலும்.

8. அறவணவடிகள்

காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிகாரத்திருந்த பௌத்த சங்கத்தாரின் தலைவரும் மாதவிமணிமேகலையிருவரையும் பிக்ஷுணிகளாக்கிய பெரியாருமாகிய அறவணவடிகள், புகாரைக் கடல்கொண்டதும் மாதவியுடன் கச்சிமாநகரடைந்து, மணிபல்லவத்தினின்று வந்த மணிமேகலையை ஆங்குச் சந்தித்து, அவளுக்குத் தருமோபதேசஞ்செய்துகொண்டு, அவளுடன் கச்சியிலே தம் இறுதிக் காலத்தைக் கழித்தவர் என்பது மணிமேகலையால் அறியலாம். இவ்வறவணவடிகளை,

'மறவண நீத்த மாசறு கேள்வி யறவணவடிகள்'
'கரைமுதிர் யாக்கை கடுங்காநாவி னுரைமூதாளன்'

என்றும் பிறவாறும் சாத்தனர் பலபடப் புகழ்வர். இப்புலவர் உள்ளுருகி அறவணவடிகள் பெருமையைத் தம் நூலிற் சிறப்பித்துக்கூறுவதை நோக்குமிடத்து, சாத்தனர்க்கும் ஞானகுருவாய் விளங்கியவர் இவ்வடிகளோ என்ற ஐயம் நிகழக்கூடியதேயாம். இவ்வடிகள் கச்சி

---

1. Beals *Siyu Ki*, Vol. ii, p. 230.
2. Buddhistic Studies—*Buddhism in Tamil Literature* by Mr. V. R. Ramachandra Dikshitar, M. A., pp. 687-8.
3. அத்தியூர்—சின்ன காஞ்சீபுரம்.

மாநகரில் தம் இறுதிக்காலத்தைக் கழித்தவர் என்பதற்கு மற்றொரு சிறந்த ஆதாரவும் உண்டு. பெரிய காஞ்சீபுரத்தில் அடிஸன் பேட்டைக்குச் சமீபத்தில் உள்ள தொண்டைமானத்தத்தை அடுத்து அறப்பணஞ்சேரி என்ற தெரு உள்ளது. இச்சேரிப்பெயர் அறவண வடிகள் நாமம்பற்றி வழங்கியதாக வேண்டும் என்பது அவற்றின் பெயரொற்றுமையால் எளிதில் உணரப்படும். அறவணன்சேரி என்பது அறப்பணஞ்சேரி என மாறுதல் தமிழ்வழக்குக்கு ஒத்ததே யாம். காஞ்சியில், கச்சபேசுவரர் ஆலயத்துக்கு வடபாலுள்ள தெரு புத்தேரி (புத்தச்சேரி) என்ற பெயரால் வழங்குதலும் அறியத் தக்கது. பௌத்தர்கள் ஒரு காலத்தே இத்தெருவில் மிக்கு வசித்தவர் கள் என்பது இதனால் அறியப்படும். ஏகாம்பரநாதர் கோயிலிலும் பிறவிடங்களிலும் அகப்பட்டுள்ள புத்தச் சிலைகளும், பிற பௌத்த அடையாளங்களும், யுவான்ஸுவாங் கூறியவாறே, 7-ம் நூற்றாண் டுக்கு முன்பே பௌத்தமயமாக ஒருகாலத்துக் கச்சிப்பதி யிருந்த நிலைமையைக் குறிப்பிக்கக்கூடியன.

9. ஏழு என்ற எண்வழக்கு

ஏழு என்ற எண், பௌத்தருள் சிறப்பாகக் கொள்ளப்பட் டிருந்த செய்தி மணிமேகலையால், அறியப்படும். இதனை,

> "எழுநா ளெல்லை யிடுக்கண்வந் தெய்தா" (29, 19)
> "இன்றேழ் நாளி லிந்நகர் மருங்கே, வந்து தோன்றும்" (7, 24)
> "இன்றேழ் நாளி லிடையிருள் யாமத்துத்
> தன்பிறப் பதனொடு நின்பிறப் புணர்ந்து" (7, 106-107)
> "எழுநா ளெல்லையு ளிரவலர்க் கீத்து" (28, 129)

என்பன முதலியவற்றால் அறியலாம். போதிசத்துவரது துயரை ஏழாம் நாளில் மணிமேகலா தெய்வம் தீர்த்துவைத்ததென்பதும், அப்புண்ணியசீலர் ஏழுநாள்களில் தம் செல்வத்தைத் தானவழியிற் செலவிட்டனரென்பதும், மற்றும் பல செய்திகட்கு ஏழு நாள்கள் கொள்ளப்பட்டிருப்பதும் புத்தஜாதகங்களிலும் பரக்கக்காணலாம்[1]. 'நெருநற்றுச் சென்றுநெங் காதலர் யாமும், எழுநாளே மேனி பசந்து' (1278) என்ற குறளும் இவ்வழக்குப்பற்றிக் கூறப்பட் டதுபோலும்.

10. பிக்ஷுக்களுக்குத் தாம்பூலம் உதவல்

அறவணவடிகள் கச்சியிலுள்ள தருமதவனத்தே மணிமேகலை யைச் சந்தித்தபோது, அவள் அவ்வடிகளை வணங்கி,

---

1. The *Jātaka*. See Index, *Seven*.

"நன்றென விரும்பி நல்லடி கழுவி
ஆசனத் தேற்றி அறுசுவை நால்வகைப்
போனக மேந்திப் பொழுதினிற் கொண்டபின்
பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து" (28, 240-43)

உபசரித்தனள் என்று சாத்தனர் கூறுவர். இதனுள் திரையல் என்பது வெற்றிலையும், பளிதம் என்பது கர்ப்பூரமும் ஆகும். இவ் வாறு, உணவளித்தபின் தாம்பூலம் படைத்துப் பிக்ஷுணியை உப சரிக்கும் வழக்குப் புத்தஜாதகம் ஒன்றினுங் காணப்படுகின்றது[1]. தாம்பூலந் தரிக்கும் வழக்கம் பிற்காலத்ததே என்று, சரித்திரகாரர் சிலர் கொண்ட கருத்துத் தவறுனது என்பது இந்த ஜாதகச் செய்தி யால் வெளியாகத் தடையில்லை. தாம்பூலத்திற் சுண்ணும்புக்குப் பிரதியாகக் கர்ப்பூரமிட்டுக் கொள்ளுதல் பண்டை முறையாகும்.

"அடகு புலால்பாகு பளிதமு முண்ணன்
கடல்போலுங் கல்வி யவன்" (தொல். இடை. 36, இளம்.)

என்ற பழைய குறள்வெண்பாவினும் கர்ப்பூரமே தாம்பூலத்திற்கு உரியதாகக் கூறப்படுதல் காண்க.

11. பிக்ஷுணிகளின் சமயவாராய்ச்சி

மணிபல்லவத்தினின்று வஞ்சிமாநகர்க்கு ஆகாயவழியே சென்ற மணிமேகலை, அந்நகரில் தங்கிச் சமயவாதியர்பலருடன் அளவளாவி அவ்வவர் கொள்கையை அறிந்துகொண்டனள் என்று கூறப்படு கின்றது. இவ்வாறே பௌத்தபிக்ஷுணிகள் முற்காலத்துச் சமய வாராய்ச்சியில் முனைந்துநின்றவர்கள் என்பது ஜாதகக்கதையாலும் விளங்கும். மதபேதங்களைத் தெரிந்து உண்மையறியவே மணிமேகலை சமயக்கணக்கருடன் அளவளாவியவளாயினும், சமயவாதப்போரை நேரில் நடத்திவந்தவர் பழைய பௌத்தமகளிர் என்பது ஜாதகக் கதையால் அறியலாம். குண்டலகேசி யென்பாள் பௌத்தசங்கத் தைச் சார்ந்தபின் இவ்வாறே வாதம் புரிந்து பிறசமயத்தவரை வென்று பௌத்தசமயத்தை நிலைநாட்டியவள் என்று அவள் வர லாறு கூறுகின்றது. சைனரிலும் இத்தகையோர் உண்டென்பது நீலகேசிவரலாற்றால் அறியப்படும். சமயவாதத்துக்குச் செல்லும் மகளிர் நாவல்மரக்கிளையைக் கையிற்கொண்டு சென்று அதனைக் குறித்த விடத்தே நட்டுப் பிறமதத்தவரை அறைகூவி வாதக் கழைப்பதுண்டு[2] என்பது குண்டலகேசி சரிதத்தால் அறியலாம். இவ்வழக்கு ஜாதகக்கதையொன்றிலும் நமக்குத் தெரியவருகின்

1. The *Jātaka*, Vol. i, pp. 132, 152.
2. செந்தமிழ்த் தொகுதி, 1, பக். 94.

றது.[1] அதனில், அறைகூவி நட்ட நாவற்கிளையைப் பிடுங்கியெறிந்து மிதிப்பாருடன் அவ்வாதம் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. நாவல் என்பதற்குப் போருக்கழைத்தல் என்ற பொருள் கூறுவர் மயிலை நாதர்[2]. 'நாவலோ நாவல்' என்பது அறைகூவும்போது வழங்குந் தொடர். 'நாவலிட் டழிதர்கின்றேம் நமன்றமர் தலைகள் மீதே' என்றூர் தொண்டரடிப்பொடிகளும்[3]. இத் தமிழ்நூல்வழக்கு நாவல் மரக்கிளையை நட்டு எதிரிகளை அறைகூவியழைக்கும் மேற்குறித்த செய்தியுடன் ஒப்பிட்டறியத்தக்கது. பிறரைத் தடைசெய்தலைக் குழைபிடித்தல் என்றதொடரால் யாழ்ப்பாணத்தார் வழங்குவதும் இந்நாவல்வழக்கைக் குறிப்பதுபோலும்.

12. பிற வழக்குக்கள்

இவ்வாறே ஜாதகக்கதையிற் கூறப்பட்ட பௌத்தச் செய்திகள் பலவற்றை மணிமேகலையிலும் நாம் காணலாகும். உதாரணமாக:—

1. இருத்திபெற்ற பௌத்தப் பெரியோர் ஆகாயவழியே சேறல் (ii, 70, 71, 191).
2. உபவனங்கள் பௌத்தமுனிவர் தங்குமிடங்களாக அமைதல் (vi, 37).
3. பிக்ஷாபாத்திரப் பெருமையும், அதுகொண்டு மன்னுயிர்க்கு உணவளித்தற் சிறப்பும்.
4. சக்கரவாளகிரிச் சிறப்பு (v, 137).
5. சக்காவாளக் கோட்டம் போன்ற நகரமயானங்கள் அறச்சாலையாதல்.
6. சதுக்கப் பூதர்க்கு (நாற்சந்தியிலுள்ள தேவதைகட்கு)ப் பலியிடும் வழக்கு (i, 187).
7. பளிக்கறைச் செய்தி.

என்பன முதலியன காண்க. பஞ்சகாலம் நேர்ந்தமையால் மணிமேகலை கச்சிமாநகர் சென்று, அமுதசுரபி என்ற தன் அக்ஷய பாத்திரத்தைக் கையில் ஏந்தியவளாய் 'உண்ணுதற்கு எல்லா உயிர்களும் வருக' என்றழைத்ததும்,

> "மொய்த்த மூவறு பாடை மாக்களிற்
> காணூர் கேளார் கான்முட மாளூர்
> பேணு மாக்கள் பேசார் பிணித்தோர்
> படிவ நோன்பியர் பசிநோ யுற்றூர்
> மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்

---

1. The *Jātaka*, Vol. iii, p. 1.
2. நன்னூல், 100, உரை.
3. திருமாலை, 1.

பன்னூ றுயிரம் விலங்கின் றொகுதியும்
மன்னுயி ரடங்கலும் வந்தொருங் கீண்டி''

அவ்வமுதசுரபியின் உணவை அருந்தி மகிழ்ந்தன என்றும், அவ் வறச்செயலால் எங்கும் மழைபெய்து நாடு வளம்பெற்றதென்றும் மணிமேகலை கூறும். கச்சிமாநகர்க்கு இத்தகைய அறச்செயல்கள் முற்காலத்துச் சிறந்திருந்தன என்பது மற்றொரு வரலாற்றாலும் தெரிகின்றது. அங்ஙகரிற் கோயில்கொண்ட ஸ்ரீகாமாக்ஷியம்மை சிவபிரானை நோக்கித் தவம்புரிந்த காலத்தே தான்பெற்ற இருநாழி நெற்கொண்டு எண்ணான்கறங்களையும் செய்து வறுமையால் வருந்திய மன்னுயிர்களைக் காத்தருளினள் என்பது அங்ஙகர்ப் புராண வரலாறு. இக்கதை, மேற்குறித்த மணிமேகலைவரலாற்றுடன் ஒரு வகையில் ஒப்பிடத்தக்கதாகும். மற்றும் புத்ததேவரது முற்பிறவி வரலாறுகளாக மணிமேகலை முதலியன கூறுவனவற்றை ஜாதகங் கள்மூலம் விரிவாக நாம் அறியலாம். அவற்றை இங்கு விரிப்பிற் பெருகும். இந்த ஜாதகங்களால் வேறு தமிழ்நூல்களிற் கண்ட வழக்குக்கள் சிலவும் அறிய இடமுண்டு. உதாரணமாக அடியில் வருவன காண்க :

''நாய்பெற்ற தெங்கம் பழம்.'' (பழமொழி. 216)—இது பயனின் மையைக் குறிக்க ஜாதகத்தில் (v, 206) வழங்கப்படுகின்றது.

''காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு'' (கலித்தொகை)—யானை யாழிசைக்கு வசப்படுதலை ஜாதகமும் (vi, 127, 130) கூறும்.

இவ்வாறு புத்தஜாதகம் போன்ற பௌத்த வரலாறுகளை அடிப்படையாகக்கொண்டு மணிமேகலைச் செய்திகள் அமைந்தவை யாயினும், அந்நூல் கூறுவன யாவும் கற்பனைகளே என்று நாம் கருதிவிடல் தகாது. மணிமேகலைகாலத்து அமைந்த அரசியன் முறைகளும், அவ்வச்சமயங்களின் நிலைமையும், மக்களின் வழக்க வொழுக்கங்களும், மற்றும் பல அரிய தமிழ்வழக்குக்களும் சரித்திர வாராய்ச்சிக்கு உற்றவைகளாகும். உண்மை நிகழ்ச்சிகளான செய்திகளும் அந்நூலுள் அநேகமுள்ளன. அவை இன்ன இன்ன வென்பதை எடுத்துரைத்தற்கு இஃது இடமன்று. இவற்றுல் ஜாதகக்கதைகள் போலும் பழைய பௌத்தநூல்கள், தமிழ்நூல் வழக்குக்களை அறிதற்கு ஏற்ற சாதனங்களா யிருத்தலால், அவற்றை அறிஞர்கள் தமிழில் மொழிபெயர்த்துதவல் பெரிதும் வேண்டத் தக்கது என்னலாம்.

தொழிற் சிறப்பு

ரா. இராகவையங்கார்

கடவுள் வாழ்த்து

எல்லா மலர்வ தெவன்கொப்பூ ழிவ்வுலகம்
எல்லாந் தரிப்ப தெவன்வயிறிவ்—வெல்லாம்
புரப்ப தெவனருளப் பொய்யாத தெய்வம்
இருப்ப வியங்கு மெலாம்.

1. எவனின்று மன்பதைகட் கிவணுதய மெய்தியதோ
இவைமுழுது மெவனுலே யினிதுநிறைந் துள்ளனவோ
அவனேத்தன் றொழிலானே யாராதித் தொருமனிதன்
இவர்தருவன் சித்தியினி லெனமுதுநூன் மொழிவதுவே.
(ஸ்ரீ கீதை-18-46.)

2. எல்லாமும் வினைசெய்தே யிருக்கவென வெல்லாஞ்செய்
வல்லா ளெனெண்ணியதான் மரங்கள்செடி கொடிமுதலாச்
செல்லாது நிற்பனவுந் திரிவனவு மாமெவையும்
சொல்லாமற் றொழில்புரிந்தே துலங்குவன கண்டீரே.

3. காரியங்குந் தீயியங்குங் கடும்பரிதி தானியங்கும்
ஊரியங்கு மொளிர்மதியு முடுவிசும்பின் மீதியங்கும்
பாரியங்கும் பிறகோளும் பகுத்தியங்கு மியங்காவேல்
நீரியங்கு மாறுளதோ நிலைத்திணையு மிலையாமே.
ஊர்-பரிவேடம். நீர்-இயங்கு திணையாகிய நீவிர்.

4. வினைபுரியாப் பொழுதத்தே வெறும்பிணமாய்ப் போவதுமெய்
எனையபல வினைசெய்தோ விருப்பதெனத் தெரிவீரால்
நினைவனவுங் கற்பனவு நிகழ்த்துதற்கே துணையென்று
மனையினிலும் வெளியினிலும் வளர்தொழிலே புரிவீரே.
மெய்-உடம்பு. எனையபல-எத்துணையோ பல.

5. மூச்சுவிடு முள்ளீர்க்கு முடுகுதிர நரம்போட்டும்
பேச்சியம்பு மலசலங்கள் பெயர்த்துவிடு மூளமடிக்கும்
நாச்சுவைகண் டுட்கொள்ளும் நனிசெரிக்கு மின்னபல
மீச்செயலா லன்றோநம் மெய்யிருப்ப தென்பதுவே.

6. ஒருமரமோ தன்னைத்தா னுண்டுபண்ணை வெத்துணையோ
பெருமுயற்சி செய்வதெனப் பெயர்த்துரை மாட்டாதார்
திருமயற்சி தானின்றிச் செல்லளவும் பிறர்மெய்யால்
வருமுயற்சி தருபொருளால் வயிறருத்தி வாழ்குவரே.
செல்லளவும்-உயிர்போம்வரையும்.

7. இவணுயிருக் கிதமாக வியல்வதனை யெவ்வெவனுந்
தவமுயன்று புரியானேற் றன்னிருணந் தவிரானுல்
அவமிகந்து வினைமுடித்தோ னகத்தினெழும் பெருமகிழ்வைப்
பவமுழுலும் வினைமுடியான் பரிப்பதுவு மிலையாலோ.
தவ-மிக. தன் இருணம்-தன் கடனை.

8. தோண்மீது மூடவனைத்தான் றாக்கிநெடுந் தூரம்போம்
கோண்மீது கொண்டவன்றன் குளிர்மனத்தின் றகைமையையவ்
வாண்மீது புக்கிருந்த வம்மூடவ னெய்தானுல்
நாண்மீது கொள்வதுட னனிதுயரு மூறுமன்றே.
கோள்-கொள்கை. உறும்-மூடவன் அடைவன்.

9. வயலெவையும் விளைவித்து வறிதாய பெருங்குளனும்
பயில்புனலே யிலையாய பாழ்ங்குளனு மொப்பாமோ [கைமை
இயல்வவெலாம் பிறர்க்கீத்திங் கின்மையுற்றோன் பெருந்த
அயலெவர்க்கு மீயாத வவ்வறிய னெய்துவனே.

10. கடனீந்திக் கரையமர்ந்தோன் கனமனத்தி னுவகையையவ்
விடனீந்தா தக்கரையி னிருந்தவனு மெய்துவனே
மடனீந்த மதியின்றி மடியாலே வினைமுடியான்
உடனீந்த மாட்டாதா லுறுதுயரக் கடலையரோ.
மடன் நீந்த—அறியாமையைக் கடக்க.

11. தானுண்டு பிறவுயிர்க டாமுண்டு மற்றெவையும்
ஈனுண்டு பண்ணியவோ ரிருங்கடவு ளுண்டிதனுல்
ஊனின்ற வுயிர்க்களித்த லொருதனக்குத் தவமியற்றல்
மேனின்ற கடவுளுக்கு வேள்விசெய லெனவிதித்தார்.

12. தவந்தானம் வேள்வியிவை தரையினுளா ரேவருக்கும்
உவந்தான முதற்றொழிலா யுரவோர்கள் விதித்தனரால்
அவந்தானிங் கடையாம லரியமனத் தருள்வளர்த்துப்
பவந்தானும் பயனுறவும் பண்ணினரிம் மூவகையே.

13. தனித்தனியா யெவ்வுயிருந் தவமியற்றிக் கொடைநல்கி
இனித்தபெருங் கடவுளையே யெப்பொழுதும் வழிபட்டுப்
பனித்தபெரும் பவநீங்கப் பண்ணியுல குள்ளமர்ந்தே
செனித்தவுயி ரிவைபுரிந்து சீவிக்கத் தொழில்விதித்தார்.

14. தானருந்தப் பெருந்தெய்வத் தனிவேள்வி யவிசொரிய
ஊனிருந்த உயிர்க்கெல்லா முணவுதவத் தக்கதெனக்
கானிருந்த நிலனெல்லாங் காறுழுது வயல்காக்கித்
தேனிருந்த நெற்பயிரே செயுமாறு முறைசெய்தார்.
காறு—உழுகொழு.

15. இதமான தொழிலெல்லா மிருங்கடவுட் கருச்சனையாய்
முதனூலின் மொழிந்தபடி முன்னோர்நற் றொழில்கூலப்பல்
விதமான பரம்பரையின் விடாதுபுரி கென்றிட்டு
நிதமாகத் தொழினிலைத்து நிகழுநெறி காட்டினரால்.

16. மக்களுட லாலுக மன்னுவது மற்றட்லோ
புக்கவுண வுண்ணுங்காற் பொன்றுவதென் றுள்ளுணர்ந்து
தக்கபயிர் விளைப்பதுவே தம்மினையென் றெண்ணுது
மிக்கபொலம் விளைப்பதிலே மெய்வருத்து வார்பலரே.
பொலம்—பொன்.

17. நெல்லுண்டு பண்ணுது நீருண்டு பண்ணுமெலாம்
செல்லின்று வறங்கூரிற் றிருந்துணவுக் கீவனவாம்
புல்லுண்டு பண்ணினும்பால் பொழியுநல கறவைகளும்
இல்லுண்டு பண்ணுவதோ வெதுதானென் றறியீரே.
செல்—மேகம்.

18. புல்லுண்ணும் பசுவெல்லாம் புலாலுண்ணும் புலியெல்லாம்
நெல்லுண்ணு முயிராயா நீளறிவின் மேம்படுவேம்
கல்லுண்ணும் புறவுண்டு கனலுண்ணும் புள்ளுண்டு
சொல்லுண்ட வுணவாற்பஃ றொகைகொண்ட வுலகமிதே.

19. வருத்துபசி வயிற்றட்லை வாசனையாற் பூசியென்ன
திருத்துபல கலன்களையுஞ் செறித்தென்ன தினம்புதிதாய்ப்
பொருத்துதுகி லுடுத்தென்ன பொற்கட்டில் கிடத்தியென்ன
பருத்தமனை யிருத்தியென்ன பயனறிந்து புரிவீரே.

20. பசித்தபெரும் படைதானும் பசியாத சிறுபடையை
ஒசித்துவிடு மெனவுணர்தற் கொல்லாது வில்லாண்மை
நசித்துவிடும் பசியெய்தி னசியாத பசியகற்ற
விசித்தபடை யுழுபடையே வெலுமென்று வேண்டுதிரே.

21. வேண்டளவிற் சிறிதுடுத்து மேதக்க மேழியினல்
ஈண்டளவி னிலனுழுதா லிருஞாலந் திருமலியும்
பூண்டகைய சீதையெனப் பொன்மாது சிறந்ததுதான்
காண்டகையோர் காணுரோ காட்டுவதும் வேண்டுவதே.
சீதை—உழுகொழுச்சாலின் பெயர்.

22. பாலியிலே பசித்தவன்பொற் பைபெற்று வெறுத்ததிறம்
காலியிலே கேட்டிருந்துங் கண்டறியார் வாய்மையினை
வேலியிலே முத்தெடுத்தென் வெற்பினிலே மணியெடுத்தென்
சாலியிலே யருந்துதற்குத் தமதென்றென் றின்றெனினே.

23. உடையாக்குஞ் செடியுண்டிங் குணவாக்கும் பயிருண்டு
படையாக்கும் வெதிருண்டு பகையாக்க மாட்டேமால்
நடையாக்க மறையுண்டு நமக்கென்ன குறையென்று
மடையாக்க முயல்வீரால் வயிறுக்கும் பசிக்கெதிரே.
படையாக்கும் வெதிர்—விற்படையாக்கும் மூங்கில்.
மடை—மடக்கும் உணவு.

24. வயலழித்து மனைகட்டி மனையுள்ளே யினிதருந்த
அயலிடத்துத் துப்புரவுக் கலைகிற்பீர் புரிகின்ற
செயலழிப்ப தல்லாது திருவினையுண் டாக்குவதோ
வியன்மரத்தி னடியிருந்தும் விளைபயிரை விளைப்பீரே.

25. உடலுக்குப் பொன்னாலே யுண்டாவ தொன்றில்லை
கடலுக்குட் புகுந்தாலுங் கார்வானம் பறந்தாலும்
இடலுக்கு வயிற்றினுக்கென் றெவ்விடத்தும் வேண்டுவதாண்
அடலுக்குத் துப்புரவா மதனைமுனம் புரிவீரால்.

26. பையாகச் சணல்விளைத்துப் பைந்நிறைக்க நெல்லின்றி
மெய்யான முயற்சியெலாம் வீணாக வினைபுரிவீர்
பொய்யான வொழுக்கத்தீர் பொன்வேண்டி நாடெல்லாம்
செய்யாத தீதுபுகச் செய்தென்ன கண்டீரே.

27. தற்பேணித் தன்வயிறு தாழியெனத் தனியுண்போன்
அற்பேணி யேறுமே யவன்வான மேறுலை
இற்பேணி நல்விருந்தை யினிதூட்ட விளைவெல்லாம்
முற்பேணிக் கொள்ளுவதே முதல்வினையாய் முயல்குவிரே.
அற்பு ஏணி—அன்பாகிய ஏணி.

28. தாகத்தி னீரருந்தித் தளர்பசிக்குச் சோறுண்டு
போகத்தி னினைவின்றிப் பொருடொகுத்துப் பிறர்க்குதவி
மோகத்தை யறமுனிந்து முழுப்பொழுதும் விழுத்தொழின்
சோகத்திண் கடல்கடந்து சுகநிலையின் வாழ்குவிரே. [மேளய்ச்

(தொடரும்)

கலைமகள்

பி. ஸ்ரீ.

நதிக்கரை நாகரிகம்

தற்காலத்தில் நாகரிகத்திற்கும் கலைச்செல்வத்திற்கும் ஒரு வளர்ப்புப் பண்ணையாக ஐரோப்பா விளங்குகிறது. ஆனல் சுமார் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்,

> "வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
> வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்"

என்று வருணிக்கப்பெறும் வெண்ணிற மேனியாளான சரஸ்வதி தேவி வெள்ளைக்காரர் நாடுகளை விரும்பி அடையவில்லை. நம்மை ஆளும் மக்கள் வர்ணப் பூச்சும் கொச்சைப் பேச்சுமாய்த் தோலாடை சுற்றிக் 'கற்காலக் கருவி'களோடு குகைகளிலே வசித்து வந்த காலத்தில், கலைமகள் நீல நதிக்கரையிலும் ஹ்வாங்கோ (*Hwangho*) சரஸ்வதி சிந்து கங்கை முதலிய நதி தீரங்களிலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள். பண்டைப் பழங்காலங்களில், 'சரசமும் மாதுரிய ஜலமு'முள்ள சரஸ்வதி அந்நதிக்கரையில் வேள்வி செய்துகொண்டு வாழ்ந்து வந்த வேத முனிவர்களின் நாகரிகவாழ்க்கைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் இன்றியமையாத வசதிகளை அளித்தது. எனவே ஆதியில் நதியின் பெயராக இருந்த சரஸ்வதி யென்பது நாளடைவில் அறிவுத் தெய்வத்தின் பெயராகப் பரிணமித்ததென்று கருதல் கூடும்.[1]

இவ்வாறு சரஸ்வதிநதிக்கும் சரஸ்வதி தேவிக்கும் ஏற்பட்டிருந்த தொடர்பு புராணங்களிலும் ஒரு விதமாகப் பிரஸ்தாபிக்கப் படுகிறது. ஒரு காலத்தில் சரஸ்வதியும் இலட்சுமியும் மாறிகொண்டு தங்களில் உயர்ந்தார் யார் என்று பிரமனைக் கேட்டனராம். பிரமன் சரஸ்வதியை நாயகியாகக் கொண்டு நாவிலே தரித்திருந்தும் அத்தேவியின் பெருமையை உள்ளவாறு உணர்ந்து கொள்ளாமல், இலட்சுமி தேவியே உயர்ந்தவள் என்று வாய் கூசாது பேசினனும். அப்பொழுது கோபம் கொண்ட சரஸ்வதி, பொங்கிக் கொதித்

---

1. வேத காலத்தில் 'சரஸ்வதி' ஒருநதியின் பெயராகவே யிருந்ததென்பது கவனிக்கத்தக்கது.

தெழுந்து நதியுருவாயினள் என்பது பௌராணிகர் கூற்று. நதி தேவி ஆயிற்று என்ற சரித உண்மை, தேவி நதி ஆயினள் என்ற புராணக் கதையாக உருமாறிப் பிறந்திருக்கிறது!

சரஸ்வதி என்னும் பெயர் பண்டைக்கால நதிக்கரை நாகரிகத் திற்கு நமது கவனத்தை ஈர்த்துச் செல்கின்றது. இத்தகைய நாகரிகம் வட இந்தியாவிலே பெரிய நதி தீரங்களில் பெருகி வளர்ந்தது போல், தென்னாட்டிலும் காவேரி வையை தாமிரவருணி (தண் பொருநை) முதலிய ஆற்றங்கரைகளில் தழைத்து வளர்ந்ததென்று ஊகித்தல் கூடும். இத்தமிழ் நாகரிகம், தொன்மை மாட்சியில் வட இந்தியாவில் வளர்ந்த ஆரிய நாகரிகத்தையும் வென்று விடுகிற தென்று கருதுவோரும் உண்டு.

இயற்கை யன்னை

பண்டைத் தமிழகத்தை நாம் சங்க நூல்களின் வாயிலாகக்கண்டு களிக்கிறோம். தொல்காப்பியர் கூறும் 'மைவரை யுலகம்' கை செய்து பிறப்பியாத இயற்கைப் பேரழகோடு மீண்டும் கட்புலனு கிறது. பகலிலும் இருள் தூங்கும் காடுகள், சுழிபலவாய் ஓழுகும் காட்டாறுகளோடு நம் கண்முன் வருகின்றன. காட்டாறு[1] தழுவிய அகன்ற காட்டிடங்களில் அங்கும் இங்கும் காடு கெடுத்து நாடாக் கும் நன் முயற்சி நீண்ட காலமாக நடைபெற்று வருவதையும் காண்கிறோம். மலைக்காடுகளில் தினைப் பயிரைச் சூழ்ந்து வளர்ந்த தமிழ் நாகரிகம், நதி தீரங்களிலே நெற்பயிரோடு வளர்வதையும் காண்கிறோம்.

ஒருகால், காட்டாறுகளில் முதலை முதலான பிராணிகளோடு நீர்மிதவைகளும் கட்புலனுகின்றன. ஒருகால், மலை முழைஞ்சு களிலே வீழ்ந்து ஒலிக்கும் ஆறுகளின் ஓசையோடு, கானவர் செய் யும் சப்த ஜாலங்களும் நம் காதில் விழுகின்றன. ஒருசமயம், காடு களில், கடும்புலிகள் கொடிய முள்ளம்பன்றிகள் யானைக்கூட்டங்கள் சஞ்சரிப்பதையும் கானவர்கள் விலங்கு தேர்ந்து சுழன்று திரிவதை யும் காண்கிறோம். வேறு சமயங்களில், எருமையேறுகள் பொரு கின்ற ஆரவாரமும் வேட்டை நாய்களின் கடுங்குரலும் கானவரும் காட்டு மிருகங்களும் தம்முள் பூசலிடும் ஓசைகளும் மக்கள் போருக் குத்திரண்டு செல்லும் பேரொலிகளும் நமது செவிகளில் விழு கின்றன.

---

1. இத்தகைய ஓர்ற்றினை நத்தத்தனர் என்ற புலவர் நிலமடந்தையின் முந்துவடமென்று வருணித்துள்ளார்.

சுருங்கக் கூறுமிடத்து இப்பழைய உலகில் சுந்தரியாகவும் பயங்கரியாகவும் ஒருங்கே திருவிளையாடல் புரியும் இயற்கை யன்னையையும், இவ்வன்னையின் நிலையையும் குணங்களையும் காலக்கிரமத்தில் சிறிது சிறிதாக அறிந்துகொண்டு வாழ்வு நடத்த முயலும் நம்முன்னோரையும் காண்கிறோம்.

இயற்கையின் 'கொற்றவை' வடிவம்

இயற்கையன்னையை ஆச்சரியத்தோடும் பயபக்தியோடும் நோக்கிய பண்டை மக்கள், இவ்வன்னையைப் 'பழையோள்' என்றும், 'மலை மகள்' என்றும், 'காடு கிழாள்' என்றும், 'கொற்றவை' என்றும் போற்றி வழிபடுவாராயினர். இவர்கள் 'கடவுள் அயிரை' என்றும், 'அணங்குடை நெடுங்கோடு' என்றும் தங்கள் மலைகளையும் மலைச் சிகரங்களையும் போற்றிப் பாராட்டினர். இயற்கையன்னை, தன் தெய்விகப் பெருமாட்சி தோன்றக் கொலு வீற்றிருக்கும் மலைகளிலே பண்டை மக்களுக்குத் தன் பயங்கரமான கோற்றவை வடிவத்தைக் காட்டியது இயல்பேயாகும்.

> "ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை
> அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப்
> பெருங்கல்"[1]

எண்பது போன்ற வருணனைகளை[2] வாசிக்கும் போது, குளிர்ந்த மலைகளும் சிருஞ்சிகரங்களும் இருள் தூங்கும் பெருமுழைகளும் நம் கண் முன் வருவதோடு, அவற்றைக் காக்கும் 'அருந்திறற்கடவு'ளாகிய கொற்றவைக் கடவுளின் சாயையுங்கூட நமக்குப் புலனாகின்றது.

வீர முரசினை முரசுறை கடவுள் என்றும் வெற்றியின் அறிகுறியாகிய வாகையினைக் கடவுள் வாகை யென்றும் வழிபட்ட வீரமக்கள் இயற்கையைக் கொற்றவையாக வழிபட்டு அக்கொற்றவை மேல் வீரவாளை நிறுத்தி நீராட்டி வாள்மங்கலம் கொண்டாடிப் பரவுக் கடன் செலுத்தினர். ஆதியில் அயிரை முதலிய மலைகளை உறைவிடமாகக்கொண்டிருந்த கொற்றவைக் கடவுள் (வனமும் வனப்பும் வாய்ந்த மலைகள் 'இயற்கை யழகனாகிய முருகக்கடவுளின் இயற்கைக்

---

1. புறநானூறு, 158.

2. இத்தகைய வருணனைகளில் பல, மலையாளக் காட்சிகளுக்கும் பெரிதும் பொருந்துவன ஆகும். மலையாள வாசிகள் இன்றும் கொற்றவையைக் கொற்றி யென்பர். முன்னாளில் மலையாளநாடு தமிழகத்தின் பகுதியாக அமைந்திருந்தது.

கோயில்கள்' என்று கருதப்பெற்ற) பின்னளில் வனதுர்க்கையாகப் பரிணமித்து நீரும் நிழலும் பெறுத பாலை வனத்தில் குடி புகுந்த தென்னலாம். எனினும் 'குறிஞ்சிக் கிழவன்' என்றும், 'செருவில் ஒருவன்' என்றும் தமிழுலகம் போற்றும் தமிழ்க் கடவுள் (முருகன்) கொற்றவையின் குழந்தையாகவே ஆதி மக்களால் மதிக்கப் பெற்றமை,

'கொற்றவை சிறுவ' (முருகாற். 258.)
'பழையோள் குழவி' (,, 259.)
'சேய் பயந்த.....செல்வி'

என்றிவ்வாறு வரும் ஆதாரங்களால் இனிது புலனாகும்.

'வெற்றி வெல்போர்க் கொற்றவை' முன்னளில் 'மைவரை யுலகம்' காக்கும் 'சேயோ'னுக்குத் தாயாக அமைந்ததோடு, 'காடுறை யுலகம்' காக்கும் 'மாயோ'னுக்குத் தாயாகவும் மதிக்கப் பெற்றுள்.

"நீனின்ற படிவத்தான் நெடியோனே முதற்பயந்த
தாயென்று முதுமுறை பரவினும்
யாய் என்றல்லாது யாம் துணியலமே"

என்று புலவர் கூறுவது காண்க.

இமயமலைக் காட்சிகளுக்கு அடுத்த படியாக ஆன்ம எழுச்சியும் அறிவுவிளக்கமும் அளிக்கவல்ல மேற்கு மலைத்தொடர்ச்சியின் அரும் பெருங்காட்சிகளை நினைத்துப் பாருங்கள். விண்முட்ட நிமிரும் நீலமலைகளோடு, கண்முட்ட வளம்படைத்த காடுகளையும் மனக் கண்ணால் உற்று நோக்குங்கள். இடையிடையே துகில் போல மின்னும் அருவிகளையும், அருள்போலப் பெருகிவரும் நீர்ப் பெருக்கையும் சிந்தித்துப் பாருங்கள். பழைய மலை நாடுகளிலும் பறம்பு நாடுகளிலும் காட்டு நாடுகளிலும் மனைசக்தியின் மகிமையால் சென்று சேர்ந்து சஞ்சரியுங்கள். அப்பொழுது இயற்கையன்னை, 'பார்பூத்த பச்சைப் பசுங்கொடியாகி' 'ஓங்குலகில் வாழும் உயிரனைத்தும் ஊட்டும் மெல்லியலாளா'கவும், பயபக்தியைத் தூண்டும் பராசக்தியாகிய கொற்றவையாகவும் காட்சிதருவதைக் கண்கூடாகக் காண்பீர்கள்.

இத்தகைய இயற்கையன்னையின் சந்நிதியிலே, தன்னை அழியாது காத்துக்கொள்ளும் பொருட்டு, உயிர்க்குலம் என்ன பாடுபட்டிருக்கிறது! எத்தகைய 'வாழ்க்கைப் போர்' (*struggle for existence*) விளைத்திருக்கிறது! இவ்'வாழ்க்கைப் போ'ரில் இயற்கையாய் ஒத்து வாழத் தெரியாத எத்தனை உயிரினங்கள் அடியோடு அழிந்துபோயின! இன்றும் நம் கண்முன் அழிந்து வருகின்றன!

இவ்'வாழ்க்கைப் போர்' என்றென்றும் தொடர்ந்து நடைபெறும் ஒரு பாரதமே யன்றோ ? இவ் வரும் பெரும் பாரதத்திற்கு உலகம் முழுமையும் குருக்ஷேத்திரமாக உதவுகிறது !

இக் குருக்ஷேத்திரத்திலே, இயற்கைக் கோற்றவையோடு மனிதனும் பலவேறு பிராணிகளைப்போல் முதல்முதல் ஒத்து இணங்கிவாழ முயல்கிறான் ; பிறகு அவன் காலப்போக்கில் சிறிதுசிறிதாகப் பெருகி வளர்ந்த தன் அறிவுத் திறமைக்கு ஏற்ப, கைக்கு எட்டிய துணைக் கருவிகளின் உதவியால் எதிர்த்துப் போராடி இயற்கையைத் தன்னோடு ஒத்து இணங்குமாறு செய்து வாழ்வுநடத்தவும் முயல்கிறான் ! இங்ஙனம் விலங்கு நெறியைக் கைவிட்டு ஆபத்தான—சத்திமுனைபோன்ற—அறிவு நெறியிலே துணிந்து செல்வதற்கு மனிதன் செய்த—செய்கிற—செய்யும் பகீரதப் பிரயத்தினங்கள் எத்தனை ! அவை ஏட்டில் அடங்குமோ ? எண்ணில்தான் அடங்குமோ ? வாழ்க்கைப் பெரும் போரில் வாகைசூடிவரும் மனிதன் இக்காலில் நாகரிக ஏணியின் உச்ச ஸ்தானத்திலே நின்று, இயற்கையன்னையின் சக்திப்பேய்களையே தனக்குத் தொண்டுபூண்டுழைக்கும்படி ஏவுகிறான் !

நாகரிக ஏணி

ஆனால் பழைய உலகிலே, உயிர் இருப்பதற்கு அடையாளம் ஓங்கிவளர்வதே என்ற உண்மை கண்ட நம் முன்னோர், வளைந்து வளைந்து செல்லும் மலை வழிகளில் வேடர்கள் நெறிபிடித்துச் செல்வதுபோலவும், செங்குத்தான பாறைகள்மீது ஏனவர் கண்ணேணி அமைத்து ஏறுவது போலவும், நாகரிக ஏணியிலே படிப்படியாக மெல்லமெல்ல ஏறி வந்தார்கள். மலைகளிலும் மரங்களிலும் சுடு காடுகளிலும் தெய்வங்களுண்டென்று நம்பிப் பலவேறு பேய்களையும், கூளி சூரமகளிர் கள்ளிநீழற்கடவுள் ஆதிய சிறு தெய்வங்களையும் நெல் உகுத்துப் பலிதூவி விழா எடுத்து வழிபாடுசெய்து ஆவேசமுற்று ஆடிய பண்டைமக்கள், அறியாமையின் சொரூபமாகிய மகிஷாசுரன் அல்லது 'எருமை' அசுரனை வென்று வலியழித்த மஹா சக்தியாகிய கொற்றவைக் கடவுளை வழிபடக் கற்றுக் கொள்வதற்குள், குறித்த நாகரிக ஏணியில் எவ்வளவு கஷ்டத்தோடு எத்தனைபடிகள் ஏறியிருத்தல் வேண்டும் !

வீரர் தெய்வமாகிய கொற்றவை அல்லது துர்க்கை, வித்யா ரூபம் தரித்து, மந்த புத்தியும் மிருகத்தன்மையும் வாய்ந்த 'எருமை யசுரனை'யும் வேறு தானவர்களையும் அவுணர்களையும் மாய்த்து மன்பதை காத்தனள் என்ற புராணக் கதை,

‘ விண்தோயு மணிநீல
வெற்பினிடை வேய்மிடைந்தாங்கு
எண்தோளும் இடுநீழல்
இளங்கிளிகள் களிகூரக்
கொதியாது கொதித்தெறிந்த
கோட்டெருமைத் தலையின்மிசை
மிதியாத சீறடி
மிதித்தன போல்தோன்ற
* * * *”

“ வாளுறழ் உயர்விசும்பின்
வாய்மடித்து விரற்சுட்டித்
தாள்சோர நினக்குடைந்த
தானவரை நினைக்குங்கால்
பூவைபார்ந் தெழில்எய்தப்
பொறியணை புரையும்நின்
தோளின தளவெண்ணில்
தோற்றரும் போலுமே ”

“ பெருந்தகைமை பிறிதொழியப்
பிடிக்கோடும் களிறேபோல்
அருஞ்சமத்து நினக்குடைந்த
அவுணரை நினைக்குங்கால்
கரும்புருவ நுதல்வியர்ப்பக்
கச்சிஞல் விசித்தநின்
மருங்குல தளவெண்ணில்
மாயமும் போலுமே ”

என்ற புலவர் வாக்குக்களால் அறியக்கிடக்கிறது.

நீலமலைகளில் நெருங்கிவளரும் மூங்கிற்காடுபோல் வளர்ந்தோங்கிப் பரந்து எட்டுத் திசைகளையும் போர்த்து நிற்கும் எட்டுத் தோள்களோடு காட்சிதரும் இயற்கை யன்னையாகிய கொற்றவை அறியாமையை வென்று அறிவைப் பரப்புகிறாள்; தீமையைக் கொன்று நன்மையைக் காப்பாற்றுகிறாள்; பொய்ம்மையை அழித்து உண்மையை நிலைநாட்டுகிறாள். பொய்யிருள் கெடுத்து உலகம் ஒளிநெறியாகிய செந்நெறி பிடித்து ஒழுகல் வேண்டுமென்பது அன்னையின் திருவுளம். இவ்வாறு நம் முன்னோர் கருதி, இயற்கையோடு இணங்கியும் தமது அறிவாற்றல்களுக்கு ஏற்ப இயற்கையைத் தம்மோடு இணங்குவித்தும் ஒருவாறு நாகரிக வாழ்க்கை நடத்திவந்தனர்.

பொய்யிருளாகிய தீமையை அரக்கரென்றும் அவுணரென்றும் அசுரரென்றும் இதிகாச புராணங்கள் இயம்புகின்றன. தேவரும் முனிவரும் மெய்யொளியாகிய நல்லறிவையும் நல்லறத்தையும் குறித்து நிற்கின்றனர். இயற்கையன்னை இருளின் சக்திகளான அவுண ராதியோரை அழித்து, ஒளிமேனியரான தேவரையும்,

> 'மன்பதை காப்ப அறிவு பலியுறுத்தும்
> நன்றறி யுள்ளத்துச் சான்றோர்'

ரையும் காப்பாற்றுகிறாள் என்பது, ஆரியதிராவிட நாகரிகங்களின் சமரச நன்னிலை கண்ட பண்டைப் பெரியோர் கொள்கை. இப் பெரியோர், தாயாகிய கொற்றவையை இயற்கையின் பயங்கரமான பேய்த் தோற்றங்களுக்கும் போர்ப்பெருங் கோலங்களுக்கும் அதி தேவதையாக்கி, காளி, துர்க்கை, பகவதி ஆகிய பலவேறு பெயர்க ளால் போற்றியதோடு, அவ்வியற்கைத் தெய்வத்தையே அறிவொளி பரப்பும் கலைத் தெய்வமாக்கியும் வழிபடுவாராயினர்.

மலைமகள்—கலைமகள்—திருமகள்

(இயற்கையின் இரண்டு நிலைகள்)

பயங்கர நிலையில், இயற்கையன்னையாகிய கொற்றவை, காளித்தாயின் கரும் பெரும் பூதவடிவில் காட்சி தருவதோடு, சாந்த நிலையில் மலைமகளாகவும் கலைமகளாகவும் திருமகளாகவும் காட்சி தருகிறாள். மஹிஷாசுரனுக்கு அஞ்சி, மும்மூர்த்திகளும் கூட மக்களைக் கைவிடத்துணிந்தனர் என்றும், அம்மூர்த்திகளின் தேவியரான மலைமகளும் கலைமகளும் திருமகளும் உலகமக்கள் மீது தங்களுக்கு இயற்கையாக எழுந்த கருணையின் மிகுதியால், அசுரனை எவ்வாறு கொல்வதென்று கலந்து ஆலோசனை செய்தனரென்றும் பிறகு அவர்கள் தங்கள் மூன்று உருவங்களையும் மறைத்து, வித்யா ரூபமாகிய ஒருருவமாகச் சமைந்து, அவித்தையின் வடிவமான மஹிஷாசுரனை[1] அழித்து உலகத்தைக் காப்பாற்றினர் என்றும் புரா ணம் கூறுகிறது. மலைமடந்தை கலைமடந்தை மலர்மடந்தை என்னும் மும்மைப் பெருந்தெய்வங்களும் சாராம்சத்தில் ஒன்றேயென்பதும் இத் தெய்வங்களின் உயர்ந்த உருவம் வித்யாரூபமே யென்பதும் புராணக்கதையின் திரண்டபொருள்.

---

1. மைசூர் ஆதியில் மஹிஷாசுரபுரமாயிருந்ததென்றும் மைசூரிலேதான் மஹிஷாசுரவதம் நிகழ்ந்ததென்றும் ஜனங்கள் நம்புகிறார்கள். மகிஷாசுர வதத்தைப் பற்றிய கதை தென்னாட்டின் பண்டைப்பழங்கதைகளிலே ஒன் றென்று ஊகிக்கலாம்.

இப்பொருள்,

"இமையவர்கள் மோலி இணைமலர்த்தாள் சூடச்
சமயந் தொறுநின்ற தையல்—இமய
மலைமடந்தை வாச மலர்மடந்தை எண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்" (தண்டி. மேற்.)

என்ற புலவர் வாக்காலும் அரண் செய்யப்படும்.

இயற்கையின் பேய்க்கோலங்களிலும் போர்க்கோலங்களிலும் துணிந்து தெய்வத்தன்மை கண்டதுபோலவே, நம்முன்னோர் இயற்கையன்னையின் அழகுத்தோற்றங்களிலும் இன்பக்காட்சிகளிலும் தெய்வத்தன்மை காண்பாராயினர். ஒளியும் இருளும், மந்தமாருதமும் சண்டமாருதமும், காதலும் சாதலும், இன்பமும் துன்பமும் அவர்கள் உள்ளத்திலே தெய்வகாட்டத்தைத் தோற்றுவித்தன.

"மூவிலை நெடுவேல் ஆதி வானவன்
இடமருங் கொளிக்கும் இமயக் கிழவி
தனிக்கண் விளங்கு நுதற்பிறை மேலோர்
மிகைப்பிறை கதுப்பிற் சூடி வலைக்கையின்
வாள்பிடித் தாளி யேறித் தானவன்
மாளக் கடும்போர் கடந்த குமரி
மூவா மெல்லடித் திருநிழல்
வாழி காக்கஇம் மலர்தலை யுலகே"

என்ற பாட்டில், இயற்கையன்னை, இமயமலைக்குரிய தேவியாகவும் வலைக்கையில் வாள்பிடித்து ஆளியேறித் தானவன் மாளக் கடும்போர் கடந்த குமரியாகவும் வருணிக்கப்படுகிறாள். அயிரை முதலிய மலைகளுக்குரிய அன்னையும் இமயமலைக்குரிய தேவியும் ஒன்றே. இவ்வியற்கைத்தேவி சேயோனையும் மாயோனையும் முதற்பயந்த முதியோளாயினும், அகிலாண்ட கோடிகளை ஈன்றெடுத்த அன்னையாயினும், இன்றும் என்றும் குமரியாகவே விளங்குகிறாள்.

இறவாத இளமையும் அழியாத அழகும் வாய்ந்த இயற்கை யரசியைக் களங்கமற்ற குழந்தையுள்ளம்கொண்ட தமிழ்ப் பெரியார் ஒருவர், "அகிலாண்டகோடி யீன்ற அன்னையே! பின்னையும் கன்னி யென மறைபேசும் ஆனந்த ரூபமயிலே!" என்று வாய்குளிர வாழ்த்தி அழைக்கின்றார்.

'வலைக்கையில் வாள்பிடித்து ஆளிஏறி'ய கொற்றவைக் கடவுளின் திருமேனியில், பயங்கரமான இயற்கைப் பெருஞ்சக்திகள் சீறிக் குமுறுகின்றன எனினும் அத்திருமேனியில் இயற்கையழகுகளும் கொஞ்சிக் குலாவுகின்றன. இக்கருத்து,

"படுமணி படும் ஒருகை ; பைங்கிளி யது ஒருகை
வடிநுதி வேல்ஒருகை; வாள்கொண்ட தகைத்தொருகை"

என்ற ஆன்றோர் வாக்கிலிருந்தும் உய்த்துணரத்தக்கது.

இயற்கை யன்னையின் பசுந்தளிர்க் கரங்கள்—காடுற்ற தோள்கள்—பல; இவை பலவேறு சக்திகளைத் தாங்குகின்றன. அன்னைக்கு அழகு பொழியும் செல்வக் கைகளும் உண்டு. போர்ப் பெருங்கோலம் பூண்டு புவனமுற்றும் அசைந்திடப் புடைக்கும் பேய்க் கைகளும் உண்டு. அமுதளாவிய பூந்தென்றலில் அம்மையின் அறக்கருணை பொலிகிறது. ஆலகாலவிஷம்போலச் சீறும் ஊழிக் கூத்தில், அன்னையின் மறக்கருணை பிரதிபலிக்கிறது. அருமருந்தன்ன அழகுச் செல்வியாக அமைந்து அருள் பொழியும் இயற்கை, அல்லல் விளைக்கும் பேய்க்கோலங்களிலும் வெளிப்பட்டு இடிக்குரலாலும் ஆணையிடுகின்றது. இவ்வாறு ஜகந்மோஹன சுந்தரியாகவும் அகில லோக பயங்கரியாகவும் ஒருங்கே காட்சி தந்து, அறக்கருணையும் மறக்கருணையும் பொழியும் இயற்கை யன்னையின் அருள் வடிவினைத் தமிழ்க் கவிஞர்,

"பெரு மட மான்பிணை வென்றது நோக்கு ;
சிறு மருங்கிற் கொல்கின மூல்லைக் கொடி"

என்று வருணித்துள்ளார். இவ் வற்புத அருள் வடிவம்—இயற்கையின் அருட்பெருஞ் சக்தி—அம்மையாகிய உமாதேவி (மலைமகள்) ஆகும். இவ் வம்மையின் அடி நிழலாகிய அருள் நிழலிலே உலகம் தங்கி வாழ்வு பெறுகின்றதென்பது பக்தர் கொள்கை.

இயற்கையின் அழகு சுமந்த செல்வ வடிவம், செய்யாள் அல்லது திருமகளாகும். இயற்கைப் பொருட் காட்சிகளிலே களிநடம் புரியும் திருமகள், மக்களது பொருட்செல்வச் சிறப்பிலே காட்சி தரும் பொன்னரசியாகவும், விளங்குகிறாள். 'யாவர்க்கும் செல்வ'மாகிய இவ்வழகுத் தெய்வம், இயற்கைப் பொற்கோயிலாகிய செந்தாமரை மலரில் செம்மாந்து கொலு வீற்றிருக்கிறதென்று கவிஞரும் பௌராணிகரும் கருதுவாராயினர். மலையிலும் காட்டிலும் நாட்டிலும் இத் தெய்வம் விளங்கும் இடங்களே வளமும் வனப்பும் சிறந்தோங்கும் தலங்களாகுமென்றும், கட்டழகிற் சிறந்த பாக்கியசாலிகளும் வீரமன்னர்களும் திருமகளின் கடைக்கண் நோக்கம் படைத்தவரே யாவரென்றும் நம் முன்னோர் நம்பி வாழ்ந்தனர்.

இவ்வழகுத் தெய்வத்தை எவ்வாறு உபாசிப்பது ?

"நெய்யொடு திரியொக்கச் செய்யாளைச் சேர்வார்க்குப்
பொய்யாத உள்ளமே மெய்யாதல் வேண்டுமே"

என்பது ஒரு பழம்பாட்டு. அழகுத் தெய்வமே மெய்யாகவும், உபாசகனுள்ளம் திரியாகவும், உண்மையொளி விளக்கமாகவும் அமையும்போது, வாழ்க்கை, அழகும் இன்பமும் தூய்மையும் பெருமையும் பெற்று விளங்கும் என்பது வெள்ளிடைமலை. இத் தகைய உபாசகன் வஞ்சமற்ற தொழில் புரிந்து வாழ்வு நடத்துவான் என்பது,

"வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தருஞ் சிவந்த தாமரையாள் தான்"

என்ற ஔவை வாக்கில் குறிப்பாக வெளியிடப்படுகின்றது.

இவ்வாறு இயற்கையின் அருட்செல்வம் மலைமகளாகவும் அழகுச் செல்வம் திருமகளாகவும் போற்றப் பெறுகின்றன. அவ்வண்ணமே இயற்கையின் அறிவுச் செல்வம் கலைமகளாகக் கருதப்படுகிறது.

கலைமகளின் வடிவம்

இனி, அழகுச் செல்வியாகிய திருமகளை அடைவதற்கு இன்றியமையாத மெய்யொளியும், அருட்செல்வியாகிய மலைமகளை அடைவதற்கு இன்றியமையாத அருளொளியும், அறிவுச் செல்வியாகிய கலைமகளை அடைந்து இன்புறுவதற்கும் இன்றியமையாதன என்பது நல்லறிஞர் கருத்து. ஈரமிலாத - உண்மையொளி பெறுத—மனக் கருங்கற் பாறைமீது அறிவுத் தெய்வம் கோயில்கொள்வதில்லை. மென்மலர்க் கோயிலாகிய நன்மனத்திலன்றே கலைமடந்தை குடிபுகுவதுண்டு? இக்கருத்து,

"என்னை யுடையாள் கலைமடந்தை எவ்வுயிர்க்கும்
அன்னை யுடைய அடித்தளிர்கள்—இன்னளிசூழ்
மென்மலர்க்கே தங்கும் எனவுரைப்பர் மெய்யிலா
வன்மனத்தே தங்குமோ வந்து" (தண்டி.)

என்னும் செய்யுள்மணியில் பொதிந்துள்ள கவிஞனது பொன்னுள்ளத்திலே ஆழ்ந்து பதிந்து கிடப்பது காண்க.

அழகுத் தெய்வம் சிவந்த தாமரைமலரில் வீற்றிருப்பதென்று கருதிய நம்மூன்னோர், அறிவுத் தெய்வம் வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பதென்று கருதுவாராயினர். மேலும், அவர்கள், கருநிறம் கொற்றவையாகிய காளிதேவியின் நிறமென்றும், பச்சை நிறம் அருட்பெருஞ் செல்வியாகிய உமாதேவியின் நிறமென்றும், பொன்னிறம் அழகுத் தெய்வத்தின் நிறமென்றும் கருதியதுபோல், அறிவுத் தெய்வத்தின் திருநிறம் தூய வெண்ணிறமேயாகுமென்று

துணிந்தனர். இந்நிறம் அறிவுச் செல்வியின் திருமேனி நிறமாகவும் அவளது இயற்கைக் கோயிலாகிய தாமரையின் நிறமாகவும் அமைவதோடு, அவளது கலை அணி ஆதியவற்றின் தூய்மையைக் காட்டும் நிறமாகவும் அமைந்துளது.

பூந்தாமரைமேல் வீற்றிருக்கும் புகழரசியாகிய கலைமகளின் கண்ணும் முகமும் கையும் காலும் பூந்தாமரைபோலவே யிருக்கின்றன. உடம்பெல்லாம் படிகநிறம்; வாய்மாத்திரம் சிவந்து பவளம் போலிருக்கிறது. வெண்ணிற மேனியில் விளங்கும் பவளச் செவ்வாய் கவிஞர்க்கு விரைந்து அருள்செய்யுமாறு துடிக்கின்றது! இந்த நம்பிக்கை,

> "படிக நிறமும் பவளச்செவ் வாயும்
> கடிகமழ்பூந் தாமரைபோல் கையும்—துடியிடையும்
> அல்லும் பகலும் அனவரதமும் தந்தால்
> கல்லும் சொல்லாதோ கவி"

என்ற புலவன் விஞ்ஞையிலே தொனிக்கின்றது.

இத்தகைய நம்பிக்கை வாய்ந்த புலவன்

> "ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
> எய உணர்விக்கும் என்அம்மை—தூய
> உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
> இருப்பள்இங்கு வாரா திடர்"

என்று துணிகின்றான். பளிங்குபோலக் களங்கமற்ற குழந்தையுள்ளத்தோடு தன்னை உபாசிக்கிறவர்களுக்கே, பரிசுத்தமான பளிங்கினை ஒத்து விளங்கும் கலைத்தெய்வம் விசேஷ நல்லருள் செய்யுமென்பது குறிப்பு.

நான்கு திசைகளையும் தழுவி ஆதரிக்கும் கலைமகளுக்கு நான்கு கைகள் உண்டு. ஒரு கையில் அவள் ஏடும் எழுத்தாணியும் வைத்திருக்கிறாள்; மற்றொன்றில் ஜபமாலை தரித்திருக்கிறாள்; வேறு இரண்டு கைகளிலும் வீணைவைத்து வாசிக்கிறாள்.[1] இவ்வாறு எழுந்தருளி யிருக்கும் தேவி எப்போழுதும் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் ஜபம் செய்துகொண்டும் ஆனந்தமாகப் பாடிக்கொண்டும் வீணை வாசித்துக்கொண்டுமிருக்கிறாள்.

---

1. இதனால் நம்முன்னோர் அழகுக் கலைகளை *(Fine Arts)* எவ்வாறு போற்றினர் என்பது ஒருவாறு புலனாகும்.

இத்தகைய கலைத்தெய்வத்திற்கு ஞானமே மேனி;[1] தூய்மையே ஆடை; வாய்மையே மெய்யணி; சாஸ்திரமே முகம்; கற்பனையே இதழ்; காவியமே இதயம்; சிற்பம் முதலான கலைகள் தேவியின் மலர்க்கரங்கள்; கவிஞர் செந்நாவே இவள் மலர்ப்பதம். இங்ஙனம் கவிஞரும் பௌராணிகரும் கலைத்தேவியை வருணித்திருக்கிறார்கள்.

கலைமகளைக் குறிக்கும் கதைகள்

கலைமகள் வடிவம் தாங்கி, இயற்கை யன்னை அறியாமையின் சொரூபமான மஹிஷாசுரனை மாய்த்த கதையைக் குறித்தும் கலைமகளுக்கும் 'சரஸ்வதி'க்குமுள்ள தொடர்பினை வெளியிடும் கதையைக் குறித்தும் முன்னமே பிரஸ்தாபித்திருக்கிறோம். சரஸ்வதி அல்லது கலைமகளைக் குறிக்கும் வேறு கதைகளுமுண்டு.

இக்கதைகள், கலைமகளாகிய சரஸ்வதியைப் படைப்புக் கடவுளான பிரமதேவனது மனைவியாக்கிப் பேசுகின்றன. படைப்பு அல்லது சிருஷ்டிக்கு அறிவு இன்றியமையாததல்லவா? எனவே, கலைமகள் நவராத்திரி காலத்தில் பிரமனை நோக்கித் தவம் கிடந்து, அவனுல் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டாளென்று புராணம் கூறுகிறது.

எனினும், பிரமன் சரஸ்வதியின் பெருமையை நன்குணர்ந்து கொள்ளவில்லை; அவளுடைய நிலைமையும் குணங்களும் கூட அவனுக்கு உள்ளவாறு விளங்கவில்லை. இதைக்குறித்து வழங்கும் புராணக் கதையின் சாரம் வருமாறு:—

ஒரு காலத்தில், பிரமன் சரஸ்வதிதேவியோடு கங்காஸ்நானத்திற்குச் சென்றான். அவர்கள் ஆகாயமார்க்கமாகச் செல்லுகையில், அவ்வழியில் ஒரு வித்தியாதரப்பெண் மின்னற்கொடிபோல நின்றுகொண்டு அழகிய குரலில் ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருந்தாள். அப்பெண்ணரசியின் மோகனப்பாட்டிலே நெஞ்சைப் பறிகொடுத்த சரஸ்வதி தன்னைமறந்தாள்; காசியாத்திரையை மறந்தாள்; தனது நாயகனையும் மறந்தாள்; லட்சியத்தையே மனத்தில் கொண்டிருந்த பிரமனோ, செவிகளைச் சிக்கென அடைத்துக் கொண்டு, கங்கையை அடைந்து நீராடி மீண்டான். பிறகு படைப்புக் கடவுள் கலைமகளை நோக்கி, "தேவியே! நீ ஸ்திரமான குணமில்லாதவள்; உன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை. உன் விளையாட்டே உனக்குப் பெரிதாக

1. 'மெய்ஞ்ஞானத்தின் தோற்றமென்ன நிற்கின்ற நின்னை'
—சகலகலாவல்லிமாலை.

இருக்கிறது. பாட்டிலும் கூத்திலும் அழகுப் பொருள்களிலும் ஆனந்தக்காட்சிகளிலும் உன்னை நீ இழந்துவிடுகிறாய்.[1] இன்று பாட்டிலே நெஞ்சைப் பறிகொடுத்த நீ மண்ணுலகில் புலவருரு வாகத் தோன்றுதல் வேண்டும்" என்று கூறிச் சாபம் கொடுத்தான். இதனால், பாவலர்களையும் நாவலர்களையும் சங்கீதம் முதலிய கலை களில் வல்லவர்களையும் சரஸ்வதியின் அம்சமென்றும் அவதார மென்றும் கூறுவர்.

"நாற்பத்தெட்டு அட்சரவடிவாகிய நீ தமிழுலகத்தில் நாற்பத் தெட்டுப் புலவர் உருவாகத்தோன்றிச் சிவபெருமான் தந்த சங்கப் பலகையில் வீற்றிருந்து தமிழ் வளர்த்து வருக!" என்று கலைமகளை நோக்கிப் படைப்புக் கடவுள் சாபம் கொடுத்ததாகவும் நம்மை ஆளும் அன்னையும் சந்தோஷமாகச் சாபத்தை ஏற்றுக்கொண்ட தாகவும் தமிழர் புராணக்கதையைச் சிறிது மாற்றிக்கூறுவர். சரஸ் வதி தேவியின் அம்சமாகத்தோன்றிய இப் பழந்தமிழ்ப் புலவர்களைச் சங்கப் புலவர்களென்று கூறுவதுண்டு. இவர்கள் அழகான பாடல் களைப்பாடி நந் தாய்மொழிக்கு அழியாத புகழைத் தந்திருக்கிறார் கள். சரஸ்வதியே சங்கப்புலவராக அவதரித்தாள் என்று கருதும் தமிழ் மக்கள், படைப்புக் கடவுளாகிய பிரமதேவனே திருவள்ளுவ ராகப் பிறந்தானென்று சொல்லுகிறார்கள்.

பெருந்தமிழ்க் கிழவியான ஔவையாரையும் நம் மக்கள் சரஸ் வதியின் அம்சம் என்று போற்றுகிறார்கள். கம்பர் முதலிய மகாகவி களும் காளி அல்லது சரஸ்வதியின் அருளால் கவிதாசந்நதம் பெற் றனரென்று கதைகள் வழங்குகின்றன. இத்தகைய கதைகள் காளி தாசன் முதலான வடமொழிப் புலவர்களைக் குறித்தும் வழங்குகின் றன. கலைமகள் படைப்புக் கடவுளின் நாவிலும் கற்பனை யுலகில் புதிய புதிய சிருஷ்டிகள் செய்யும் கவிஞர் நாவிலும், ஒருங்கே யிருந்து விளையாடுகிறாள் என்று நம்முன்னோர் கருதுவாராயினர்.

சகலகலாவல்லி

கலைமகள் வாக்கின் சக்தியாக இருப்பதால் **வாணி** யென்றும் **கலைவாணி** யென்றும் **நாமகள்** என்றும் அழைக்கப்படுவதுமுண்டு.

---

1. சரஸ்வதி பிரமனைக் குறித்துத் தவம் செய்த காலமாகிய நவராத்திரி யில் பெண்கள் 'அம்மன் கொலு' என்ற பெயரால் அழகிய பொம்மைக்கொலு வைத்துப் பாடுவதுண்டு. கிராமப் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்களும் மாணக்கர் மாணக்கியர்களும் பாடல்களோடு பின்னல் கோலாட்டம் முத லிய கோல் விளையாட்டுகள் விளையாடுவார்கள். இராஜதர்பார்களில் சங்கீதக் கச்சேரி முதலியன நடைபெறுவதுண்டு.

தமிழர் இத்தெய்வத்தைத் தமிழ்வாணி யென்று விசேஷமாகப் பாராட்டுவது மூண்டு. வட நாட்டிலே சரஸ்வதி, சிந்து, கங்கை, யமுனை முதலான நதி தீரங்களில் சரஸ்வதி தேவி வளர்ந்து வந்தது போல், தமிழ்நாட்டிலே வையை பொருநை காவேரி முதலான ஆறுகளின் கரைகளிலே தமிழ்வாணி தழைத்தோங்கினள் என்று கருதுதல் வேண்டும். பிறகு சங்க காலத்திலேயே சரஸ்வதியும் தமிழ் வாணியும் கருத்தொருமித்துக் கலந்து நமது நாட்டிலே கலைமகள் என்ற ஒருருவமாகச் சமைந்து விளங்குகின்றனள் என்னலாம். இதனலன்றே, குமர குருபரசுவாமிகளும்,

> "தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
> வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
> தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வழமும் தொண்டர்செந் நாவினின்று
> காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே"

என்று அருளிச் செய்வாராயினர்.

இங்ஙனமாக வடமொழி வாணியோடு இரண்டறக் கலந்து வளர்ந்த தமிழ்வாணி, இந்நாளில் மேற்றிசையிலிருந்து நவயௌவன செளந்தரியத்தோடு தோன்றியுள்ள ஆங்கிலவாணியைத் தழுவி வளர்கின்றனள். நதிக்கரை நாகரிகம், கடற்கரை நாகரிகத்தோடு கைகோத்து உலாவுகிறது! இனி, நமது தாய் நாட்டிலே கலைமகள் ஆங்கிலச் செல்வியோடு தோழமைபூண்டு சமீப எதிர்காலத்தில் பல வேறு புதிய கலைத்துறைகளிலும் வளர்ந்தோங்கி உண்மையிலேயே சகலகலாவல்லியாகக் காட்சி அளிப்பாளென்று நம்புகிறோம். அக்காலத்திலேதான், தமிழராயுள்ளார்,

> "விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பில்உன்போல்
> கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே"

என்று தமிழ்த் தெய்வத்தைப் போற்றிப் பாராட்டுதல் கூடும்.

அரசியல் முறை*

டி. சிவராமசேதுப் பிள்ளை

(92-ம் பக்கத் தொடர்ச்சி)

1917-ம் வருஷம் மாண்டேகு பிரபு தொடங்கிய முயற்சி 1919-ம் வருஷம் முடிவு பெற்றது. 1919-ம் வருஷம் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட சீர்திருத்தங்களின் முக்கிய நோக்கங்கள் ஊன்றிக் கவனிக்கத்தக்கன. முதலாவது: சட்டங்கள், தீர்மானங்கள் போன்றவை நிறைவேற்றும் சபை ஒன்று; அவைகளை அமுலுக்குக் கொண்டுவரும் பணியாளர்கள் அங்கம் மற்றொன்று. சட்டசபையும் அதிகார சபையும் தனித்தனியே ஏற்படவேண்டும்; சட்டசபை அதிகார சபையின் ஒரு பாகமே என்று கருதப்படும் கொள்கை அறவே நீக்கப்படவேண்டும். இரண்டாவது: இந்தியா கவர்ன்மெண்டின் அதிகாரம் ஒன்றே முதலில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இராஜதானியில் உள்ள ஏனைய வகுப்புக்களெல்லாம் இந்திய ஆட்சியின் உட்பிரிவுகளே. அவற்றின் அதிகாரங்கள் எல்லாம் இந்தியா கவர்ன்மெண்டு காட்டின வரைக்குள்தான். அவை ஒவ்வொன்றும் தனித் தனி அரசாங்கம் என்று சட்டத்தில் ஒப்புக் கொள்ளப்படவில்லை. இத்தகைய அமைப்பு இந்தியாவின் சுய ஆட்சிக்குத் தகுந்த ஏற்பாடல்ல. மாகாணங்கள் தனித்தனியே வளர்ந்து செல்ல ஏற்பாடு பண்ணவேண்டும் என்ற மற்றொரு முக்கிய தீர்மானத்துடன் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியை முடிக்கத் தொடங்கினர் மாண்டேகு மந்திரி.

என்னை? இட்டவேலையைச் செய்துவைக்க ஏற்படுத்தப்பட்டிருக்கும் பணியாளர்கள், தாமே எந்த வேலையைச் செய்யவேண்டும் என்று தீர்மானிப்பது எந்த அரசியலில்தான் இருக்கும்? பெரிய தேசமாய் விளங்கும் நம் நாட்டின் ஆட்சிக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும், கங்கை நதிக்கரையில் அமர்ந்திருக்கும் சிற்சில பெரியார்கள் வரை கட்டிவிட்டார்கள் என்றால், திருநெல்வேலியில் உழுதுண்டு உண்ணும் உழவர் எப்படி நம்புவது எனக் கேள்விகள்

---

*இவ்விஷயங்கள் இந்தியா முழுமைக்கும் உரியனவாகையால் சென்னை யென்பது எடுத்துவிடப்பட்டது.

பிறக்கலாம். ஆயினும், 1919-ம் வருஷத்திற்கு முன் சட்டப்படி அமைக்கப்பெற்றிருக்கும் அரசியலின் தன்மையை ஆராய்ந்தால் அது தெற்றென விளங்கும். நாளடைவில் நடந்தேறும் அமுல்களில் ஒவ்வொன்றும் இந்தியா கவர்ன்மெண்டினிடமிருந்து பிறந்தது என்று எண்ணுவது தப்பு. இன்னவின்ன காரியங்கள் இப்படி இப்படிச் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு, அவர்களுக்கு நம் பிக்கையுள்ள பிரதிநிதிகளை ஏற்படுத்தி, அவர்கள் வகுத்திட்ட வரை கடவாதபடி அரசியல் நடத்தப்பெற்றது. ஆனால் சட்டசபை வேறு, நிர்வாக சபை வேறு என்று பார்லிமெண்டு மூலமாய்த் தீர்மானிக்கப்படவில்லை. மேலும், 1833-ம் வருஷம் வர்த்தகச் சங்கத்தார் கையில் இருந்து விக்டோரியா அரசியின் கையில் வரும் போது இந்திய ஆட்சி எப்படி நடைபெற்று வந்ததோ அப்படியே பின்னும் நடந்தது. இதுவன்றி, இந்தியாவிற்குள் சென்னை ஆட்சி என்றும், பம்பாய் கவர்ன்மெண்டு என்றும், பார்லிமெண்டு ஒப்புக் கொள்ளவில்லை. மேலும், இந்தியாவில் வசூலிக்கப்படும் வரி முழுவதும் அரசரின் அமைச்சருக்கே உரியது. அவர் இட்ட கட்டளைப்படிதான் ஏனையோர் அந்தப் பொருளைச் செலவிடலாம். இந்தியா மந்திரியின் ஏவலின் கீழே இந்தியாவின் அரசாங்கம் நாளுக்கு நாள் நடக்கவேண்டியனவற்றிற்குச் சிற்சில சுதந்திரத்தை அடைந்துகொண்டது. மாகாணத்தில் உள்ள அரசாங்க ஏவலாளர்கள் செலவு திட்டத்திற்கும், கடன் வாங்குதற்கும், இந்தியா கவர்ன்மெண்டின் உத்தரவும் ஆங்கில அமைச்சரின் ஆதரவும் அவசியம்.

மூன்நூறு ஆண்டுகளாய் இம்மாதிரி இயற்றப்பட்டுக்கிடக்கும் வலிய கட்டிடத்தில் புதிய சித்திரம் தோன்றவைப்பது கடினம் என்று கடிதில் கண்டார் மாண்டேகு. 1917-ம் வருஷம் இந்தியர்கள் நாளடைவிலே தம் நாட்டைத் தாமே தம்மக்களின் உதவியாலும், அவர்கள் ஏற்படுத்தும் வரம்பிற்குள்ளும் ஆட்சி புரிய வேண்டும் என்று, பார்லிமெண்டின் சம்மதத்துடன், நம் மன்னர் மொழிந்த கொள்கையை முன் கட்டப்பட்டிருக்கும் கட்டிடத்திற்குள் அமைப்பது அசாத்தியம். ஆகவே அதனை ஒருவாறு அகற்றிவிட்டு, புதிய மண்டபம் தோற்றுவிப்பதுவே நலம். ஆனால் பற்பல ஆண்டுகளாய்ப் பழக்கப்பட்டுள்ளவைகளைத் திடீரென்று மாற்றுதல் புத்திமான்கள் வழியல்ல. ஒவ்வோர் அடியும் நன்றாக ஆலோசித்து வைக்கவேண்டும். எப்படிப் புறப்படவேண்டும்? எம்மாதிரிச் செல்லவேண்டும்? வழியில் ஏதேனும் களைப்பு ஆறும் மடம் நியமிக்க வேண்டுமா? என்று அரசியல் முறைக்கு வேண்டியனவற்றை ஒரு

வாறு வகுத்துக் கொள்ளவேண்டியது அவசியம். ஆகவே, அரசரின் கொள்கையை நிறைவேற்றுதற்கு உதவும்படி நான்கு பிரதான மார்க்கங்களை வகுத்தனர்.

(1) ஜில்லாத் தோறும் சுகாதாரம், கல்வி, பாதைகள் முதலியவற்றைக் கவனிக்க ஏற்பட்டிருக்கும் கழகங்கள் (*Local Boards*), தங்கள் இலாகாவில் கூடிய மட்டும் சுய ஆட்சி.

(2) மாகாணங்களில் தான் சுய ஆட்சியின் கல்விச்சாலை முதலில் ஏற்படுத்தவேண்டும். நாளடைவிலே, ஆழ்ந்த அறிவு அப்பியாசத்தில் ஏற்பட்ட பிறகு, மாகாணங்களில் சுயஆட்சி கொடுக்கவேண்டும். அக்காலம் வரும்வரை, இந்தியா கவர்ன்மெண்டார், தங்களிடம் ஒப்பித்திருக்கும் கடமைகளுக்குக் கெடுதியில்லாமல், கூடிய வரைக்கும், சட்டம் ஏற்படுத்தவும், அரசியலின் கடமைகளை நடத்திவைக்கவும், வருமானத்தைச் செலவு பண்ணவும் மாகாணங்களுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும் (*Legislative, Administrative and Financial devolution*).

(3) பார்லிமெண்டிற்கு, இந்தியா கவர்ன்மெண்டே இந்திய நாட்டின் நல்ல ஆட்சிக்கு உத்தரவாதம். மாகாணங்களில் புதிதாய் அளிக்கப்பட்டிருக்கும் ஆட்சியின் கவுரவத்தை இந்தியா கவர்ன்மெண்டே நற்கண்போல் பார்த்து வரவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டிற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்ட சபையை ஓங்கவைக்க வேண்டும். நாட்டின் பிரதிநிதிகளை அதிகமாய்ச் சேர்க்கவேண்டும்.

(4) மூன்று கூறின மூன்று மார்க்கங்களிலும் ஆட்சிமுறை ஊன்றி வர வர, இந்திய அமைச்சர் தம்முடைய ஆட்சிக் கயிற்றை மெல்ல மெல்லத் தளர்த்தி விட்டுக் கொண்டே வர வேண்டும்.

இந்நான்கு மார்க்கங்களையும் கையாளும் எண்ணம் கொண்ட பார்லிமெண்டில் 1919-ம் வருஷம் இந்திய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்தினால், அரசாங்கம் அமைந்த முறையைப் பின்னர்க் கூறுவோம்.

(தொடரும்)

முதுமை நிலயம்*

வி. விசாலாக்ஷியம்மாள்

சேகரனுடைய தேசத்தவருள் ஒரு புராதன வழக்கம் இருந்தது. குழந்தை பேசத்தொடங்கியதும் அதன் காலில் இருப்பு விலங்கைப் பூட்டி விடுவார்கள்; விலங்கிட்ட காலுடன் ஸ்திரீகள் போல் கொண்டிக்கொண்டே குழந்தைகள் விளையாடுவார்கள்; யௌவன பருவத்தில் இளைஞர்களும் யுவதிகளும் தளையிட்ட காலுடன் கஷ்டப்படுவது பரிதாபிக்கத்தக்க காட்சியாக இருக்கும்; வயோதிகர்களும், அநேக வருஷங்களாக இரும்பு காலில் உராய்ந்து உண்டான பல புண்களினால் வேதனை அடைந்து, காலை இழுத்து இழுத்து நடந்து துன்பப்படுவார்கள்; ஆனால், யாருமே மரண பரியந்தம் அந்த விலங்கைக் கழற்ற மாட்டார்கள்.

சேகரனுக்கு வயது பத்திருக்கும். அந்நிய நாட்டார் பலர் அந்தத் தேசத்தின் வழியாக வியாபாரார்த்தம் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். காலை வீசி அவர்கள் விரைவாய் நடப்பதைக் கண்ட சேகரன் வியப்புற்றான்; "இவர்கள் தடையில்லாமல் இஷ்டப்படி நடக்கிறார்களே! நாம் மட்டும் ஏன் விலங்கைப் பூட்டிக்கொண்டு கஷ்டப்படுகிறோம்?" என்று சிந்தித்தான்.

இதைக் குறித்து அவன் தத்துவம் உபதேசிக்கும் தன் மாமனைக் கேட்டான்.

"அப்பா, சேகரா! உன் விலங்கைப் பற்றிக் குறை சொல்லாதே. விலங்கு பூட்டிக் கொள்ளாத ஜன்மம் ஒரு ஜன்மமா? நம்மைப் போல் விலங்கைப் பூட்டிக் கொள்ளாதவர்கள் சந்தோஷமாக இருப்பதில்லை; அவர்கள் நல்லவர்களில்லை. தவிரவும் இதைப்பற்றி எல்லாம் நீ பேசக்கூடாது. உனக்கு எவ்வளவோ பெரியவர்களான நாங்கள் ஏதாவது சொல்லுகிறோமா? விலங்கைப்பற்றி முணு முணுத்தால் மஹாபாவம் வந்து சேரும்! விலங்கைக் கழற்றினால் உடனே தலையில் இடி விழுந்துவிடும்" என்று சொன்னான்.

"இந்தப் பிரயாணிகள் தலையில் ஏன் இடி விழவில்லை?" என்று சேகர் கேட்டான்.

---

*ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தமைத்தது.

"அவர்களுக்கு அறிவு போதாது; அதனால்தான் அவர்கள் வெறுங் காலாக இருக்கிறார்கள். இந்தப் பாபத்தை இன்னும் ஒரு ஜன்மத்தில் அனுபவிப்பார்கள். 'அரசன் அன்று கொல்லும், மரம் வம் நின்று கொல்லும்' என்னும் வசனம் நீ கேட்டதில்லையா?" என்றான் மாமன்.

"அவர்கள் மாதிரி எனக்கும் அறிவு இல்லாமலிருந்தால் நல்லது என்று தோன்றுகிறது. விலங்கு தடுக்கிறது; புண் வலிக்கிறது. அறிவு இல்லாமலிருந்தால் நானும் அவர்களைப்போல் விரைவாய் நடப்பேனே!" என்று சேகர் பெருமூச்செறிந்தான்.

"சீ, அவர்களைக் கண்டு பொறாமைப் படாதே. அவர்கள் பாவிகள்; அவர்களுக்குப் பகுத்தறிவு போதாது. ஐயோ பாவம்! அவர்களுக்காகப் பரிதவிக்கவேண்டும்! விலங்கு பூட்டிக் கொள்ளுவதால் உண்டாகும் ஆனந்தத்தை அவர்கள் உணரவில்லை! அவர்கள் கதியை நினைக்க என்மனது சஞ்சலமடைகிறது. உண்மையில், அவர்கள் இழிவான ஜன்மம் படைத்தவர்கள்; மனிதத்தன்மையை அவர்கள் இன்னும் முழுவதும் அடையவில்லை. மிருகங்களின் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்றாலும் பொருந்தும்! விலங்கு போடாதவன் மனிதனில் சேர்ந்தவனா? நீ அவர்களிடம் பேசாதே; பழகாதே; அவர்கள் துராத்மாக்கள்" என்றான் தத்துவ உபதேசியாகிய மாமன்.

இதைக்கேட்டது முதல், சேகரும் மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்து விலங்கு போடாமல் போகும் பிராணிகள் மேல் கல்லை எறிந்தும் அவர்களை வைதும் தன் ஜாதி வழக்கத்தைக் கைவிடாமல் நடந்து கொண்டான். இவ்வாறாக ஐந்து ஆண்டுகள் கழிந்தன. சேகரனுடைய பதினைந்தாவது பிறந்தநாளன்று மாலை அவன் நதி ஓரத்திலிருந்த ஒரு நந்தவனத்துக்குச் சென்றான். ஆகாயம் நிர்மலமாக இருந்தது; மரஞ்செடிகளில் பட்சிகள் பாடியும் ஆடியும் உல்லாசமாக இருந்தன; அலர்ந்த புஷ்பங்களின் வாசனை எங்கும் வீசிற்று; ஆற்றோரத்தில் ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து சேகர் தன் காலைத் தடவிக் கொடுத்தான். அன்று அவன் காற்புண் அதிகமாக வேதனை எடுத்தது. அருகிலிருந்த புதரின்பின் யாரோ குதித்துப் பாடும் சப்தம் திடீரென்று கேட்டது. சேகர் எழுந்து புதரை நீக்கிப் பார்த்தான். தன் ஊர்ச் சிறுவன் ஒருவன் விலங்கைக் கழற்றிக் கீழே வைத்து விட்டு வெறுங்காலுடன் குதித்துத் துள்ளி விளையாடும் காட்சியைக் கண்டான்!

"ஐயோ! நீ ஏன் விலங்கைக் கழற்றி விட்டாய்?" என்று கேட்டான்.

"ஐயையோ ! யார் ? சேகரனு ? உன்னை நான் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளுகிறேன் ; உன் மாமனிடம் சொல்லாதே" என்றான் அந்தப் பையன்.

"நீ ஏன் இடி விழுந்து சாகவில்லை ? என் மாமனிடம் ஏன் சொல்லக்கூடாது ?" என்று சேகர் வினவினான்.

"இடி விழும் என்பது வெறும் கதை ; சின்னக் குழந்தைகள் தாம் அதை நம்புவார்கள். எத்தனையோ தடவை இங்கு வந்து விலங்கைக் கழற்றிவிட்டு நாங்கள் விளையாடியிருக்கிறோம். ஒன்றுமாக வில்லை. ஆனால் உன் மாமனுக்குத் தெரிந்தால் அனர்த்தந் தான். அவரிடம் சொல்லாதே" என்று கூறி அந்தப்பையன் சென்றான்.

சேகரன் மனத்தில் பல புதிய எண்ணங்கள் உதித்தன. அவன் சுபாவத்தில் தீரமான மனமுடையவன். தன் விலங்கினால் உண்டான கஷ்டங்களை அதுவரை பொறுமையாகவே அனுபவித்து வந்தான். ஆனால், தான் இவ்விதம் ஏமாற்றப்பட்டது அவனுக்கு ஆத்திரத்தை விளைவித்தது. யாரும் அறியாமல், தன் ஊர் வழியாகச் செல்லும் பிரயாணிகளுடன் அவன் சம்பாஷிக்கலுற்றான். இருட்டு வேளைகளில் சாலை ஓரத்தில் ஒளித்து நின்று தங்களைப் பல கேள்விகள் கேட்கும் சேகருக்கு, தங்களுக்குத் தெரிந்ததை அவர்கள் சொன்னார்கள். விலங்கு பூட்டிக் கொள்ளுவது கடவுளின் கட்டளை இல்லை என்றும், தன் தேசத்தில் முதுகாட்டில் முதுமை நிலயத்தில் வசிக்கும் வெளுத்த முகமுடைய ஒரு மந்திரவாதியே இந்த வழக்கத்துக்கு மூலகாரண மென்றும் அவர்களிடமிருந்து சேகர் அறிந்து கொண்டான். அந்த மந்திரவாதியால் பல ரூபங்கள் எடுக்க முடியுமென்றும், அவ்வாறு எடுத்த போதிலும் அவனை இன்னாரென்று அறிந்து கொள்ளுவது சுலபமென்றும், அவன் இஷ்டத்துக்கு மாறுபட்டால் அவன் 'கொக்கரகோ' வென்று கோழி போல் கூவுவானென்றும் அவர்கள் சேகருக்குச் சொன்னார்கள். மேலும் அந்த மாந்திரீகனுக்கு மூன்று உயிர்கள் உண்டென்றும், மூன்று முறை அவனைக் கொன்று விட்டால் பிறகு அவன் மந்திரம் மாயமாகப் பறந்துவிடுமென்றும், விலங்குகள் தாமே கழன்றுவிழ, அந்தத் தேசத்தார்கள் சந்தோஷத்துடன் கூத்தாடுவார்களென்றும் கூறினார்கள்.

"உங்கள் ஊரிலோ ?" என்று சேகர் கேட்டான். ஆனால், அந்தப் பிரயாணிகள் யாருமே இதற்குச் சரியான விடை பகரவில்லை. அதிலிருந்து, ஒரு தேசத்திலுமே முற்றிலும் சந்தோஷமாகக் குறையற்று வாழும் மனிதர்கள் இல்லை என்று சேகர் எண்ணிக்

கொண்டான். ஆனாலும், விலங்கு போட்டுத் திண்டாடும் தன் தேசத்தவர்களைக் காணக் காண அவன் மனம் கிலேச முற்றது. சுயேச்சையாக ஓடி ஆட முடியாமல், கொண்டி கொண்டிக் குழந்தைகள் விளையாடும் காட்சி அவன் கண்முன் எப்பொழுதும் நின்றது. புண்களினால் வேதனையுற்று முனகுவாரின் சப்தம் அவன் காதில் சதா தொனித்துக்கொண்டேயிருந்தது. கடைசியில், தான் இந்த விலங்கிலிருந்தும் அவர்களை விடுவிப்பதன்பொருட்டே பிறந்தவன் என்ற எண்ணம் அவன் மனத்தில் உதித்தது.

சேகரனுடைய ஊரிலுள்ள கோயிலில் ஒரு கத்தி இருந்தது. அது தெய்வீகத் தன்மை வாய்ந்த கத்தி என்றும், மயனால் செய்யப்பட்டதென்றும், அதன் வெளிச்சத்தில் சத்தியம் விளங்கும் என்றும் சேகர் கேள்விப் பட்டிருந்தான். அந்தக் கத்திக்குப் பூஜை செய்வார்களே யன்றி அதை ஒருவரும் வெளியில் எடுப்பதில்லை. ஒரு நாள் இரவு யாரும் அறியாமல் கத்தியைத் திருடிக் கொண்டு சேகர் வெளியே கிளம்பினான்.

அவன் இரவெல்லாம் நடந்து, காலையில் கழனிக்குச் செல்லும் சில உழவர்களைக் கண்டான். அவர்களிடம் முதுகாட்டுக்கு வழி எது, மாந்திரிகனுடைய வீடு எவ்விதமானது? என்று விசாரித்தான். ஒருவன் கிழக்கே காட்டினான்; மற்றொருவன் வடக்கே காட்டினான்; இவ்வாறு அவர்கள் பலவிதமாக வழி சொன்னார்கள். அவர்கள் உண்மையைக் கூறாமல் தன்னை ஏய்க்க முயலுவதைச் சேகர் அறிந்து கொண்டான். பிறகு, யாரை வழி கேட்கும் பொழுதும் உறையினின்றும் கத்தியை உருவி அதை அவன் முன் பிடித்துக் கொண்டு கேட்டான். சேகரனுடைய கேள்விக்கு அவன் உத்தரம் பகருமுன், அவன் காலிலுள்ள விலங்கு 'டங்' என்று சப்தம் செய்தது; அவனுக்குப் பதிலாக அதுவே விடை அளித்தது; 'நேரே செல்' என்ற பதிலே எப்பொழுதும் கூறிற்று. ஆனால் இவ்விதம் தன் விலங்கு விடை அளிப்பதைக் கேட்டதும் அதை அணிந்திருப்பவன் கோபித்துக் கல்லால் சேகரை அடித்துத் துரத்துவான். இவ்விதம் பலரிடம் அடிபட்ட சேகருடைய தலையில் அநேக காயங்கள் ஏற்பட்டன.

கடைசியில், அவன் முதுகாட்டை அடைந்து அதனுள் புகுந்தான். அதன் நடுவில் ஒரு நிலயமிருந்தது. அதைச் சுற்றிலும் நாய்க்குடை முதலிய அநேகம் பூண்டுகள் முளைத்திருந்தன. அதன்மேல் பல மரங்களின் நிழல் விழுந்தது. சூழ இருந்த சதுப்பு நிலத்திலிருந்து ஆவி புகைபோல் கிளம்பிற்று. அந்த மனை இடுக்கு

முடிக்காய் ஒரு சீரில்லாமல் அமைக்கப்பெற்றிருந்தது. சில பாகங்கள் மிகவும் பழையனவாகவும், சில மிகவும் புதியனவாகவு மிருந்தன. ஒரு பாகமும் முழுவதும் கட்டி முடிந்திருக்கவில்லை. இருந்த பொழுதிலும் அது நன்றாகச் செப்பனிடப்பட்டே இருந்தது. அம் மனை காற்புறமும் திறந்திருந்ததால் எத்திக்கிலிருந்தும் உள்ளே பிரவேசிக்க வசதியாக இருந்தது. தான் முதுமை நிலையத்தை அடைந்து விட்டதைச் சேகரன் உணர்ந்தான்.

அவன் உள்ளே நுழைந்தான். அங்குப் பல அறைகள் இருந்தன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மனிதன் வசிப்பதற்கு அவசியமான பொருள்கள் மட்டும் இருந்தன. மேலும், ஒவ்வோர் அறையிலும் கைகால் கழுவ ஒவ்வொரு பாத்திரத்தில் தண்ணீரும் செம்பும் வைத்து, உண்ணுவதற்குத் தயாராகப் பலகை இலை போட்டுப் பரிமாறியும் இருந்தன. ஆனால் எங்குமே ஒரு பிராணியையும் காணவில்லை. "இந்த வீட்டில் அதிதிக்கு எல்லாம் தயாராகவே இருக்கின்றன. இருந்தாலும் சதுப்பு நிலத்தில் கட்டியிருப்பதால் அஸ்திபாரம் கெட்டியாக இல்லை என்று தோன்றுகிறது. நான் ஒவ்வோர் அடி வைக்கும்பொழுதும் வீடெல்லாம் நடுங்குகிறதே!" என்று சேகர் நினைத்துக்கொண்டான்.

சேகரனுக்கு நல்ல பசியுண்டாயிற்று; அவன் முதல் நாள் இரவு ஊரை விட்டுப் புறப்படுமுன் சாப்பிட்டதுதான்; பிறகு யாதும் அருந்தவில்லை. முதலில், அந்த மனையிலிருந்த உணவை உண்ண அவனுக்குப் பயமாக இருந்தது. கத்தியை உருவி அதன் வெளிச்சத்தில் அந்த ஆகாரத்தைப் பரிசோதித்தான்; குற்றமற்றதாகவே தோன்றிற்று; உண்டு களை தீர்ந்தான். "இந்த மந்திரவாதியின் வீட்டில் நல்ல ஆகாரம் இருப்பது அதிசயந்தான்" என்று எண்ணினான்.

அவன் இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருக்கும்பொழுது அவன் மாமனுடைய உருவம் அந்த அறைக்குள் வந்தது. தான் கத்தியைத் திருடி அங்கு வந்ததைக் குறித்துத் தன் மாமன் கோபிப்பானே என்று சேகர் பயந்தான். ஆனால், அவன் மாமன் அவனுடன் பகுமானமாகப் பேசி, கத்தியை அவன் தைரியமாக எடுத்து வந்ததற்காக அவனை மெச்சினான். அவர்கள் இருவரும் சற்று நேரம் உல்லாசமாகப் பேசினார்கள். இதுவரை சேகர் மேல் மாமன் இவ்வளவு அன்பு பாராட்டினதில்லை. சேகருக்குத் தன்னை அறியாமலே மாமன்மேல் வாஞ்சை உண்டாயிற்று.

"நீ செய்தது ஒரு வீரச் செயலே! கத்தியை அபகரித்துக் தனியே முதுமை நிலயத்துக்கு நீ வந்தது ஒரு தைரியமான காரியந் தான். உனக்குத் திருப்தியாகி விட்டதில்லையா? இனி நாம் இரு வரும் இரவுப் போஜனத்துக்கு வீட்டுக்குப் போகலாம்; நேர மாகிறது, வா!" என்று மாமன் அழைத்தான்.

"இல்லை, எனக்கு இன்னும் ஒன்றும் திருப்தியாகவில்லை" என்றான் சேகர்.

"ஏன்? உனக்குப் பசி தீரவில்லையா? இன்னும் கோபப்பாகவா இருக்கிறது?" என்று மாமன் வினவினான்.

"சாப்பாடு நன்றாகத்தான் இருந்தது. ஆனால் ஒரு மனிதன் தன் வலது காலில் விலங்கை ஏன் பூட்டிக் கொள்ள வேண்டும் என்பது விளங்க வில்லையே?" என்றான் சேகர்.

உடனே, அவன் மாமனின் உருவம் 'கொக்கரகோ' என்று கோழி போல் கூவிற்று.

"ஈசனே! இவனு மந்திரவாதி?" என்று சேகர் கத்தினான். அவன் நெஞ்சு படபடத்தது; அவன் கை எழவில்லை. தன் மாமன் என்ற பிரமையினால் எவ்வாறு அவனைக் கொல்லுவது என்று தயங்கினான். இருந்தாலும் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, கத்தியினால் அந்த உருவத்தின் தலையில் அடித்தான். மாமனது குரலுடன் கதறிக்கொண்டே அது கீழே விழுந்தது; அந்த அறை யினின்றும் ஒரு சிறிய வெளுப்பான உருவம் வெளியே ஓடிற்று.

அந்தக் கதறல் சேகரின் காதைத் துளைத்தது; அவன் கால்கள் நடுங்கின; அவன் மனச்சாக்ஷி அவனைத் துன்புறுத்தியது. இருந் தாலும் அந்த மாந்திரிகனைக் கொன்றுவிடவேண்டும் என்ற அவா அவனைத் தூண்டியது. "மந்திரவாதியை மூன்று தரம் கொன்றால் தானே விலங்குகள் நீங்கும்? இவனைக் கொன்று விட்டு வீட்டுக்குச் சென்று அங்கே சந்தோஷத்தினால் கூத்தாடும் என் மாமனை நான் பார்ப்பேன்" என்று தேறினான்.

அவன் அந்த வெளுத்த உருவத்தைப் பின் தொடர்ந்து மற் றொரு அறைக்குள் சென்றான். அங்கு, தன் தகப்பனின் உருவத் தைச் சந்தித்தான். அவன் தகப்பன் அவனைத் திட்டி அவன் கட மையை அவனுக்கு நினைவு மூட்டி, காலதாமதம் செய்யாமல் வீட் டுக்குப் போகும்படி சொன்னான்; "நீ இப்பொழுதே சென்றால் சூரிய அஸ்தமனத்துக்குள் வீடு போய்ச் சேரலாம்; அப்படிச் செய் தால் தான் உன்னை மன்னிக்க முடியும்" என்று சொன்னான்.

"சுவாமி சாக்ஷியாக, உங்களுக்குக் கோபம் வரும்படி நடப்ப தைப்பற்றி நான் விசனிக்கிறேன்; ஆனால், நீங்கள் கோபிப்பதால்

ஒரு மனிதன் தன் வலது காலில் ஏன் விலங்கு போடவேண்டும் என்பது ருசுவாகவில்லையே?'' என்று சேகர் சொன்னான்.

உடனே அவன் தகப்பனின் உருவம் 'கொக்கரகோ' என்று கோழி போல் கூவிற்று.

''ஜகதீசா! இதுவும் மந்திரவாதியா?'' என்று சேகர் திகைத்தான்.

தன் தகப்பன் என்ற பிரமையினால் அவன் தேகம் நடுக்குற்றது; அவன் கைகால்கள் சுவாதீனமற்றனபோல் தோன்றின. இருந்தாலும் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அந்த உருவத்தின் மார்பில் கத்தியால் குத்தினான். அந்த உருவம் அவன் தகப்பன் குரலில் அலறிக் கீழே விழுந்தது; அந்த அறையினின்றும் ஒரு சிறிய வெளுத்த உருவம் வெளியே ஓடிற்று.

அந்த அலறல் சேகரின் ஆத்மாவை ஊடுருவிப் பாய்ந்தது; அவன் மனம் சோகத்தால் இருண்டது. ஆனால், அவனுக்கு அதனுடன் ஆத்திரமும் கோபமும் உண்டாயின. ''நினைக்கச் சகிக்காத காரியத்தை நான் செய்துவிட்டேன். இனிப் பின் வாங்குவதில் பிரயோசனமில்லை. ஒன்று, இந்தக் காரியத்தை ஜயத்துடன் முடிப்பேன்; அல்லது இந்தப் பிரயத்தனத்தில் என் உயிரைத் துறப்பேன். நான் வீடு சேர்ந்ததும், இது ஒரு கனவாக முடியவேண்டும். என் தகப்பனார் விலங்கு நீங்கின சந்தோஷத்தினால் குதித்துக்கொண்டிருக்கும்படிக்கு என் முயற்சி முடியுமாறு சுவாமி கிருபை செய்வாராக'' என்று பிரார்த்தித்துத் திடமடைந்தான்.

தப்பி ஓடிய அந்த உருவத்தை மறுபடியும் பின் தொடர்ந்தான். ஓர் அறையில் தன் தாயின் தோற்றத்தைச் சந்தித்தான். அவள் அழுது கொண்டிருந்தாள். ''நீ என்ன காரியம் செய்துவிட்டாய்? நீ செய்திருக்கும் வேலையை என்னென்று சொல்லுவது? ஐயோ! வீட்டுக்கு வா. நீ இப்பொழுதே வந்தால் இரவு படுக்கைக்குப் போய் விடலாம். இன்னும் எனக்கும் என் இனத்தாருக்கும் தீங்கு செய்யாதே! என் சகோதரனையும், உன் தகப்பனையும் கொன்றது போதும்; வா'' என்றழைத்தாள்.

''ஐயோ, அம்மா! அவர்களை நான் கொல்லவில்லையே! அவர்கள் உருவம் எடுத்துக் கொண்ட அந்த மந்திரவாதியையே கொன்றேன். அப்படியே இருந்தாலும், அதனால் ஒரு மனிதன் வலது காலில் ஏன் விலங்கு போட்டுக் கொள்ளவேண்டும் என்பது ருசுவாகவில்லையே?'' என்று சேகர் சொன்னான்.

உடனே அந்த உருவம் 'கொக்கரகோ' என்று கோழிபோல் கூவிற்று.

அவன் அந்தக் காரியத்தை எவ்விதம் செய்தான் என்பது பிறகு அவனுக்கு நினைவேயில்லை : எப்படியோ கத்தியை ஓங்கி அந்த உருவத்தை வெட்டினான் ; அது அவன் தாயாரின் குரலுடன் ஓல மிட்டுக் கொண்டு கீழே விழுந்தது. உடனே வீடு மாயமாகப் போய் விட்டது. சேகரின் காலிலிருந்த தளை தெறித்து விழுந்தது. அவன் நடுக்காட்டில் தனித்து நின்றான்.

" சரி, மந்திரவாதியைக் கொன்றாய் விட்டது ; விலங்கும் நீங்கி விட்டது " என்று கூறிக்கொண்டான். இருந்த பொழுதிலும் அந்த அலறு சப்தங்கள் அவன் மனத்தைத் துளைத்தன ; பகல் இருண்டு இரவுபோல் தோன்றிற்று. " எவ்வளவு சிரமமாக இருக் கிறது! இந்தக் காட்டை விட்டுச் சென்று, என்னைத் தவிர மற்றவர்களுக்கு விளைந்திருக்கும் நன்மையைக் கண்ணாரக் காண்கிறேன் " என்று தீர்மானித்தான்.

முதலில், விழுந்த இடத்திலேயே அந்த விலங்கைப் போட்டுச் செல்ல உத்தேசித்தான். பிறகு, அதை எடுத்துத் தன் மார்புடன் அணைத்து வைத்துக்கொண்டு சென்றான். நடக்கும் பொழுது இரும்பு தோலில் உராய்ந்ததால் அவன் மார்பு புண்ணாகி இரத்தம் வடிந்தது.

அவன் காட்டை விட்டுச் சாலைக்கு வந்தான் ; கழனியினின்றும் வீடு திரும்பும் சில உழவர்களைச் சந்தித்தான். அவர்கள் வலது காலில் தளையில்லை. ஆனால் அத்யாச்சரியம்! இடது காலில் விலங்கு பூட்டி இருந்தது. அதன் கருத்து என்னவென்று அவர்களை வினவினான். " வலது காலில் விலங்கு போட்டுக் கொள்ளுவது ஒரு மூட பக்தியாம் ; இதுதான் சரியான முறையாம் " என்று அவர்கள் விடை அளித்தார்கள். சேகர் அவர்கள் கால்களை உற்று நோக்கி னான். வலது கால் புண்கள் இன்னும் ஆறவில்லை ; இடது காலில் புதிதாகப் புண் பட்டிருந்தது !

" வீட்டில் நான் எல்லாரையும் சௌக்கியமாகப் பார்ப்பேனா ? எல்லாம் சுவாமி கிருபை " என்று தயங்கினான்.

அவன் வீடு சென்றான் ; தலையில் காயம் பட்ட அவன் மாம னும், இருதயத்தில் குத்துண்ட அவன் தகப்பனும், உடம்பு இரண் டாக வெட்டுண்ட அவன் தாயும் அங்குப் பிணமாகக் கிடக்கக் கண்டான் ; யாருமில்லாத அந்த வீட்டில், அந்தப் பிரேதங்களின் மத்தியில் தன்னந்தனியாக உட்கார்ந்து சேகர் தேம்பி அழுதான்.

கல்பக்கம்

கே. சாவித்திரி அம்மாள்

சீர்காழித் தாலுக்காவிற்கருகே இரண்டு மூன்று மைல் தூரத்தில் உள்ள பூண்டி என்பது ஒரு சிறு கிராமம். அங்குப் பிராமணர் பிராமணரல்லாதாராகிய சில குடித்தனக்காரர்களைத் தவிர மற்றவரெல்லாம் பயிர்வேலை செய்து ஜீவிக்கும் குடியானவர்களே. அக்கிராமத்திற்கு நேரே ரெயில் கிடையாது ; சீர்காழியிலிறங்கி வண்டி வைத்துக்கொண்டுதான் செல்லவேண்டும். நவ நாகரிகம் சற்றும் எட்டிப்பாராத வெறும் குக்கிராமமா யிருப்பினும், சரீரத்திற்கு ஹிதத்தை யளிக்கக்கூடிய இயற்கைவிசேஷங்களையுடையதாய் அவ்வூர் விளங்கிற்று. அங்குச் சிதம்பரம் பிள்ளை யென்பவர் ஓர் எளிய வேளாளர் குடும்பத்திற் பிறந்தவர். கும்பகோணத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் லேவாதேவி செய்துவந்த ஒரு செட்டியினிடம் கணக்கெழுதும் குமாஸ்தாவாக அமர்ந்து அவர் வேலைபார்த்து வந்தார். தம் சாமர்த்தியத்தினாலும், ஊக்கத்தின்மிகுதியாலும் செட்டியளிக்கும் சொற்பச் சம்பளத்தைக்கொண்டு அவர் ஒருவாறு காலக்ஷேபம் செய்துவந்ததுமன்றி, மிக்க சிரமத்துடன் சிறிது பணமும் சேர்த்துக்கொண்டேவந்தார். அவர் நாணயத்தைக்கண்டு சந்தோஷித்துச் செட்டியும் அதற்குத் தக்கபடி அவரைக்கௌரவித்து உதவி புரியாமலிருக்கவில்லை. கடைசியில் அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு உடம்பு அசௌக்கியமென்று அவர் வேலையைவிட்டு நீங்கும் பொழுது, இவ்வளவுகாலம் யோக்கியமாய்த் தன்னிடம் வேலை பார்த்ததற்குநன்றி பாராட்டுவதற்கடையாளமாய்ச் செட்டி கொஞ்சம் பொருள் வெகுமதியாகவளித்ததுடன், அவர் உயிருள்ளமட்டும் தன்னிடம் பெற்றுவந்த சம்பளத்தை உபகாரமாக அடையும் படியும் திட்டம் செய்து அனுப்பினன். சிதம்பரம் பிள்ளையும் அத்தொகையைக் கையிலிருந்த பணத்துடன் சேர்த்துப் பூண்டிக்கருகில் ஐந்தாறு வேலி நிலம் வாங்கிவிட்டார். தம் குடும்பத்துடன் அங்குச்சென்று நிலத்தின் வருமானத்தைக்கொண்டும் செட்டியினிடமிருந்துபெறும் உபகாரச் சம்பளத்தைக்கொண்டும் நிம்மதியாயும் சுகமாயும் காலம் கழிக்கலானார்.

நமது கதை தொடங்கும்பொழுது அவர் இறந்து அநேக வருஷங்களாய்விட்டன. அவர் மனைவியின் பெயர் தாயாரம்மாள்.

அவர்களுக்கு ஐந்தாறு குழந்தைகள் பிறந்து இறந்துபோய்க் கடைசியில் தெய்வகதியாய் ஓர் ஆண்குழந்தை தங்கிற்று. ஆகவே அதை, பெற்றோர் கண்ணுக்குக் கண்ணுப்பா வித்தனரென்று சொல்லவும் வேண்டுமோ? அக்குழந்தையின் பெயர் மாசிலாமணி. சிறுவயதில் தந்தை பிறந்ததால் அவன் தாய்க்கு மிகவும் செல்வப் புத்திரனாய் விளங்கினான். அவனுக்கு இப்பொழுது வயது இருபத் திரண்டிருக்கும். ஏதாவது ஒருவேலை கற்றுக்கொள்ளட்டுமென்று தாயாரம்மாள் சென்னையில் தகுந்த ஸ்திதியிலிருக்கும் தன் சகோதர னிடம் பிள்ளையனுப்பிவைத்தாள். அவன் போய் ஏறக்குறைய இரண்டு வருஷகாலமாயிற்று. மாமனின் சிபார்சின்பேரில் பெரிய கம்பெனியொன்றில் வேலையில் அமர்ந்திருப்பதாகச் சமீபத்தில் தாயாருக்குக் கடிதமெழுதியிருந்தான்.

இக்கதை யாரம்பிக்கும்பொழுது தாயாரம்மாளுக்கும் வயது ஏறக்குறைய ஐம்பத்தைந்திருக்கலாம். பார்வைக்கு லக்ஷணமா யிருக்கமாட்டாள். குள்ளமாய் மிகவும் இரட்டைநாடி தேகமுடைய வளாயிருப்பாள். கடகடப்பின்றிச் சிரித்த முகமாய் அவள் காணப் படுவது மிக்க அபூர்வம். அடிக்கடிக் கலைந்து விழுவதனால் காரியம் செய்வதற்கு இடையூறுண்டாகுமென் றெண்ணித் தன் நரைத்த மயிரை இழுத்துச் சேர்த்து ஒருபக்கம் அவள் சொருக்கிட்டிருந்தது அவள் இயற்கையான குரூபத்தைப் பின்னும் அதிகரிக்கச்செய்தது. வீட்டுக்காரியங்களில் மிகவும் செட்டும் கட்டுமாயிருப்பாள். அநா வசியமாய் அரைக்காசும் அவள் செலவழித்து அக்கிராமத்தில் ஒரு வரும் கண்டவரல்லர். அதனால்தான் சிதம்பரம் பிள்ளை தம்மகன் கண்டபடி செலவழித்து இழித்து விடாவண்ணம் முன் ஜாக்கிரதை யாக மனைவியையே சொத்து முழுவதற்கும் யஜமானியாக நியமித்து அவளுக்குப் பிற்காலம் அது மகனைச் சேரும்படி உயில் எழுதி வைத்தார்போலும்.

அவளுக்கு அவ்வளவு சாமர்த்திய முண்டென்பதில் அவ ருக்குத் திடமான நம்பிக்கையிருந்தது. அந்நம்பிக்கை வீண்போகா மல் தாயாரம்மாளும் சொத்தை வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி வந்தாள். தன் நடவடிக்கைகளில் மிகவும் கண்டிப்புள்ளவளென்பு லும் அவளை முற்றிலும் தயை தாக்ஷிண்ய மற்றவளென்று நாம் சொல்ல முடியாது. தன்னைச்சேர்ந்த எளிய பந்துக்களுக்கு அவள் ஒவ்வொரு சமயங்களில் ஏதாவது உபகாரஞ் செய்வதுண்டு. ஆயி னும் அவ்வுபகாரத்தைத் தனக்காகத் தோன்றி அவள் செய்யவேண் டுமே யொழிய, அவர்கள் வாய்திறந்து கேட்டுவிட்டால் உடனே

அவள் மனம் கடினமாய்விடும். ஆகவே, அவளுதவியை விரும்புவோர் அவளுக்குச் சந்தோஷம் உதிக்காவண்ணம் மிகவும் சாமர்த்தியமாய் அவளிடம் நடந்துகொள்ளவேண்டும். ஒருவர் எதிர்பார்த்தபடி செய்வது தன் திடசித்தத்திற்குக் குறைவு என்பது தாயாரம்மாளின் கொள்கை. பணத்தில் எவ்வளவோ கண்டிப்புள்ளவளாயிருந்தும் அருமைப்புதல்வனை மாசிலாமணியிடம் அப்படியிருக்க அவளுக்கு மனம் வரவில்லை. அவனுக்கிஷ்டமான விடங்களுக்குச் செல்வதிலோ, ஆடைகளணிந்துகொள்வதிலோ செலவழியும் தொகையைப்பற்றி அதிகக்கவலை கொள்ளாமல் மௌனமாயிருந்து விடுவாள். ஆயினும், ஒரே புதல்வன், அவன் விஷயத்தில் உதாரமாயிருப்பது ஓர் ஆச்சரியமா? ஒரு விஷயத்தை நோக்கும் பொழுது தாயாரம்மாள் உண்மையாய் உதாரகுணமுடையவளென்றே கூறவேண்டும். நில சம்பந்தமான காரியங்களைக் கவனிக்கும் வேலையில் அவளிடம் தீனதயாளு என்ற ஒருவன் சில வருஷங்களுக்கு முன்னிருந்தான். அவனுக்கு ஒரு பெண் குழந்தையுண்டு. அதைப்பெற்ற சில மாதங்களுக்குள் அதன் தாய் இறந்து விட்டாள். அதற்கு மூன்று வயதாயிருக்கும்பொழுது தீனதயாளுவும் கடுஞ்சுரத்திலடிபட்டு உயிர் துறந்தான். அக்குழந்தைக்கு வேறு திக்கில்லாமற் போகவே அதியோசனையொன்றுஞ்செய்யாமல் தாயாரம்மாள் அதைத் தானே யெடுத்து வளர்க்கத் தொடங்கினாள். தனியாயிருந்த மாசிலாமணிக்கும் இப்பொழுது கூடவிளையாடுவதற்கு ஒருதுணை கிடைத்தது நிரம்பச் சௌகரியமாகவேயிருந்தது. அச்சிறுமியின் பெயர் கல்பகம். நாளடைவில் அவள் அங்குள்ளோரனைவருக்கும் மிக்க அருமையாயினள். மாசிலாமணிக்குக் கொஞ்சம் வயதானதும் அவளைத் தன் மனைவியாகவே கருதத் தொடங்கினன். இது தாயாரம்மாள் அறிவிற் படவில்லை. ஆனால் அவ்வூரிலுள்ளோர்மட்டும் இம்மாதிரி ஏதாவது நேருமென்று முன்பே எதிர்பார்த்தனர். கடைசியில், தன் ஒரே அருமைப் புதல்வன்—தான் எவ்வளவோ ஜாக்கிரதையாய்க் காப்பாற்றிவரும் சொத்திற்குப் பாத்திரமாயுள்ளவன்—தாய் தந்தையரற்ற ஓர் அநாதைப் பெண்ணை மணம்புரிய எண்ணங்கொண்டிருப்பது தாயாரம்மாளுக்கு வெளியாயிற்று. தன்னுடைய தர்மத்தில் வளர்ந்து வரும் ஏழைக் கல்பகத்தைக் கலியாணம் செய்துகொள்ள யாவரேனும் முன் வருவார்களென்ற எண்ணமே அவள் புத்திக்கெட்டவில்லை.

கல்பகத்திற்கு இப்பொழுது பதினைந்து வயதாயிற்று. இளைஞர்கள் கண்டாசைகொள்ளும்படியான அழகியாய் அவள் விளங்குவது

தாயாரம்மாளின் கண்களிற் சிறிதும் படவில்லை. வீட்டுக் காரியங்களுக்கு அவள் மிகவும் உதவியாயிருப்பதொன்றுமட்டுந் தான் அவளுக்குப் புலபட்டிருந்தது. ஆனால் அச்சிறுமியினிடம் அவளுக்கிருந்த அன்பும் கொஞ்சமல்ல. தன் வீட்டு விஷயங்களைப் பற்றி அவளைத் தவிர வேறொருவரிடமும் அவள் யோசனை கேட்கும் வழக்கம் கிடையாது; ஆயினும் கல்பகம் அழகும் இனிமையும் ஒருங்கே வடிவெடுத்தது போன்றிருப்பதைமட்டும் அவள் சிறிதும் அறிந்துகொள்ளவேயில்லை; அவளுக்கு விளங்கவில்லையென்றால் மாசிலாமணிக்கும் அவ்வண்ணமே யிருக்குமா? கல்பகத்தின் வடிவழகு அவன் மனத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. இளைஞர்களுக்குள்ள ஆர்வத்துடன் அவளை மிகவும் நேசிப்பதாய்த் தெரிவித்தான். கல்பகமும் அவ்வாறே அவளை மிகவும் நேசிக்கத் தொடங்கினாள்.

இதுவரையும் தன் விருப்பத்திற்கு மாறுகவொன்றும் தன்தாய் கூறுமலிருந்ததனால் இதற்கும் ஒன்றும் சொல்லமாட்டாளென மாசிலாமணி கருதியிருந்தான். ஆயினும், ஸ்திரீகளுக்கியல்பாயுள்ள அறிவுடன் கல்பகம் தாயாரம்மாள் சம்மதிக்க மாட்டாளென்றறிந்து அவளிடம் சொல்வதைப்பற்றி அஞ்சினாள். தக்கவிடத்தில் பெண் பார்த்து மகனுக்கு மணம் செய்விக்கவேண்டுமென்று பேராவல் கொண்டிருந்த தாயாரம்மாளோ சமாசாரத்தைக் கேட்டதும், முதலில் கண்டபடி கோபித்துக்கொண்டாள்; இரைந்தாள். பிறகு அச்சிறுமியினிடம் முகம் கொடுத்துப் பேசுவதையே நிறுத்திவிட்டாள். கல்பகத்தை அவ்விடத்தைவிட்டு எங்கேயாவது அனுப்பிவிடவேண்டுமென்று அவளுக்குத் தோன்றிற்று. மாசிலாமணியின் சந்தோஷ சௌக்கியங்களுக்குக் குறைவு நேரிடுவதாயிருக்கும் பொழுது கல்பகம் எக்கேடுகெட்டாலென்ன? ஆனால் அவள் கோபம் முற்றிலும் நீடித்திருக்கவில்லை. வெளிக்குக் கண்டிப்புள்ளவளாகத் தோன்றினும், உண்மையில் இளகிய மனமுடையவளல்லவா? தனது கோபம் சற்றுத் தணிந்த பிறகு வேறும் அந்நாதையாய் அச்சிறு பெண்ணை அவ்விடத்தினின்றும் எப்படி அனுப்பவதென்று யோசிக்கலானாள். அச்சிறுமியில்லாவிடின் தன் வீட்டுக்காரியங்களில் தனக்கே மிகவும் சிரமமாயிருக்குமென்று அவளுக்குத் தோன்றிற்று. இதுவன்றி முக்கியமான விஷயங்களில் அவள் யோசனை கேட்கும் அந்தரங்க நண்பன் ஒருவனுண்டு. இருவரிலொருவரை அவ்விடத்தைவிட்டு அப்புறப் படுத்தித்தானாகவேண்டுமென்னும் பக்ஷத்தில் மாசிலாமணியைக் கொஞ்சகாலம் எங்கேயாவது அனுப்பிவைப்பது நலம்; வீட்டைவிட்டு வெளிச்செல்வது அவனுக்கு நன்மையளிப்பதுடன், ஒன்று அல்லது இரண்டு வருஷங்கள் கல்பகத்தைப்

பார்க்காமலிருந்தால் அவன் அவளை எளிதில் மறந்துவிடக்கூடு மென்று அந்நண்பன் ஆலோசனை கூறினான்.

இவ்வாறு ஆலோசனை சொல்லக்கூடியவன் யாரென்பதை விசாரிப்போம் : நாராயணம்பிள்ளை யென்று பெயர்கொண்ட அவன் தாயாரம்மாளிடம் பத்து வருஷமாகக் காரியம் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ஏகாங்கி ; அவனுக்கு மனைவிமக்கள் இல்லை. முதலில் காரியமுள்ள வேளைகளில் மட்டும் வந்து போய்க்கொண்டிருந்தவன் சமீபத்தில் சில வருஷங்களாத் தாயா ரம்மாளின் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டு வசித்துவந்தான். ஊரில் அவனை யாவரும் 'பிள்ளை' யென்றே அழைப்பது வழக்கம். இதனால் அவன் சொந்தப்பெயர் வெகுபெயர்களுக்குத் தெரியாது. அவனுக்கு 45 வயதிருக்கும். ஆள் உயரமாய் லக்ஷணமா யிருப்பான். எப்பொழுதும் நிமிர்ந்து நடப்பான். ஒருகால் மட்டும் சிறிது ஊனமாயிருந்தது. கொஞ்சம் சாய்த்து நடப் பதைத் தவிர அவன் நடையில் வேறு குற்றம் கூறுவதற்கில்லை. தினந்தோறும் இரவில் சாப்பாடானதும் தாயாரம்மாளும் அவள் காரியஸ்தனும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு பிரிந்து படுக்கச்செல்லுவது வழக்கம். இவ்விதம் அவள் அவனைத்தனக்கு மிகவும் வேண்டியவனைக் கருதியதைப்பற்றி ஊரில் சிலர் விபரீத மாகவும் பேசிக்கொண்டார்கள். ஆனால் தாயாரம்மாள் அதை யொன்றும் சட்டைசெய்யவில்லை. அவன் யோசனையின்பேரில்தான் கல்பகத்திற்குப் பதிலாய் மாசிலாமணி வீட்டைவிட்டுச் சென்னைக் குத் தன் மாமனிடம் அனுப்பபட்டான்.

"அதிருக்கட்டும்; இதற்காக என் மகன் எவ்வளவுகாலம் வீட்டைவிட்டு வெளியிற் போயிருக்க முடியும்?" என்று தாயாரம் மாள் கவலைப்பட, அது முடியாததானென நாராயணம் பிள்ளையும் ஒப்புக்கொண்டான். ஆனால் இரண்டு வருஷம் கழித்து மாசிலாமணி திரும்பி வருவதற்குள் கல்பகத்திற்கு விவாஹத்தை முடித்துவிடலா மல்லவாவென, அவளை யாருக்குக் கல்யாணம் செய்துகொடுப்ப தென்னும் யோசனை இப்பொழுதுண்டாயிற்று. மாப்பிள்ளை தேடும் விஷயத்தில் தனக்கு அதிக அனுபவமில்லை யென்றும், தாயாரம்மாள் செலவை ஏற்றுக்கொள்ளும்பக்ஷத்தில் மாப்பிள்ளை அகப்படுவது எளிதாயிருக்குமென்றும் நாராயணம்பிள்ளை கூறினான்.

இவ்வாறு சிலமாதங்கள் சென்றன. பாபம்! கல்பகம் என்ன செய்வாள்? வாடிவதங்கிய உள்ளத்துடன் வீட்டுக்காரியங்களைச் செய்து கொண்டிருந்தாள். மாசிலாமணி சென்னைக்குப் புறப்படும்

பொழுது எது எப்படியானலும் அவளைத்தவிர மற்றெவரையும் விவாஹம் செய்துகொள்ளுவதில்லையென உறுதிமொழியளித்துச் சென்றிருந்ததொன்றே அவளுக்குச் சிறிது ஆறுதலை அளித்தது.

ஒருநாள் திடீரென்று தாயாரம்மாளுக்கு ஒரு யோசனை யுதித்தது. கல்பகத்தை நாராயணம்பிள்ளைக்குத்தான் கொடுத்தாலென்ன? இதுகாறும் நாராயணம் பிள்ளைக்கு இவ்வெண்ணம் தோன்றியதேயில்லை. தாயாரம்மாள் இதனைக் கூறும்பொழுது அவனுக்கு மிகவும் புதிதாகவே யிருந்தது. கல்பகத்தினிடம் தனக்கு வளர்த்த வாஞ்சையுண்டென்றும், அவளுக்கு ஸ்ரீதனமாக ஏதாவது கொடுக்கத் தான் தயாராயிருப்பதாகவும் தாயாரம்மாள் சொன்னாள். அவள் பின்னும் உதாரமனத்துடன் செய்ய ஒப்புக்கொண்டதென்ன வெனின், தன் மகன் கிராமாந்தரத்தில் வசிக்கப் பிரியப்படமட்டா னதலின் அவர்கள் உள்ளமட்டும் அவ்வீட்டைத் தம்முடையதாகவே பாவித்து அங்கிருக்கலாமென்பதே. அவ்விஷயம் அவ்விருவருள் அடிக்கடி பேசப்பட்டுக் கடைசியில் கல்பகத்திற்கும் ஒருவாறு அறிவிக்கப்பட்டது. தனக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கணவன் வயதானவனையும் ஒருகால் ஊனமுள்ளவனையும் இருப் பதைக்கண்டு அச்சிறுமி அதிகம் வருந்தவில்லை. ஊரில் அவளைப் போன்ற பெண்கள் எவ்வளவோ பெயர்கள் இரண்டாம் தாரமாக வயதான கணவர்களுக்கு மணம் செய்விக்கப்படுவதை அவள் பார்த் திருக்கிறாள். ஆயினும், மாசிலாமணியைத் தவிர வேறெருவருக்கும் மனைவியாவதில்லையென உறுதி கூறியபின் மற்றெருவனுக்கு வாழ்க் கைப்படுவ தெப்படி யென்று யோசிக்கலானாள். தன் காரியஸ்தனை விவாஹம் செய்துகொள்ளுவதிலேற்படும் சௌகரியங்களை ஓவ் வொன்றாய் எடுத்துக்கூறித் தாயாரம்மாள், அவள் அங்கு வேலை செய்வதை விட்டு இனித் தனக்கடுத்த யஜமானியாகவுமிருக்கலா மென்றதும், ஒன்றும் பதில்கூற அறியாதவளாய் அச்சிறுமி கண் களில் நீர் பெருக நின்றாள். "கவலைப்படாதே. நான் உன்னை நன்றாய் வைத்துக்கொள்ளுவேன்" என்று நாராயணம் பிள்ளை சொல்ல, கல்பகம் நீர்பெருகும் கண்களால் அவனை யொருமுறை நிமிர்ந்து நோக்கிவிட்டுப் பிறகு தலைகுனிந்து கொண்டாள். இதைப்பார்க்க அவன் மனம் இரங்கிற்று. "இன்னும் கொஞ்சநாள் போகட்டும். நாம் அவளை வற்புறுத்த வேண்டாம்" என்றான். எது எப்படி யானலும் ஒன்று மட்டும் நிச்சயம். மாசிலாமணி கல்பகத்தை விவாஹம் செய்துகொள்வதென்பதுமட்டும் மூடியாது. உலகில் அழகுவாய்ந்த ஒவ்வொரு பெண்ணும் தன் மனத்துக்கிசைந்த வனையே மணம்புரிவதென்றால் சாத்தியமா?

இவ்வாறு நாட்கள் செல்ல, கடைசியாக மாசிலாமணி ஊருக்குத் திரும்பிவரும் காலம் கிட்டிற்று. அவன் வருவதற்கு இன்னும் மூன்று மாதங்களே இருந்தன. அதற்குள் யாவற்றையும் யோசித்து ஒருவிதமாக முடிவு செய்துவிடவேண்டும். இல்லாவிடில் மீண்டும் கஷ்டமாக முடிந்துவிடும். தாயாரம்மாள் கல்பகத்தைக் கடுமையாக ஒரு பார்வை பார்த்து, "நீ இன்னும் மாசிலாமணியைத்தான் மணம் புரிவதாக மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறாயோ?" என்று அதட்டிக்கேட்க, அதற்குப் பதில் கண்ணீருதிர்ப்பதைத்தவிர அச் சிறுமி வேறென்னசெய்வாள்? கடைசியாக அவர்கள் ஒரு தீர்மானத் திற்கு வந்தனர். கல்பகம், மாசிலாமணி ஊருக்குத் திரும்பி வந்து தன்னை விவாஹம் செய்துகொள்ள இஷ்டப்படவில்லை யென்று அவன் வாயினாலேயே சொல்லிவிட்டால், பிறகு தான் நாராயணம் பிள்ளையை மணக்கச்சம்மதிப்பதாக ஒப்புக்கொண்டாள். "அத்தான் திரும்பி வந்து அதைத் தன்வாயினாலே என்முன் சொல்லிவிடட்டும். பிறகு ஆச்சி! நீங்கள் எதைச் செய்யச்சொன்னாலும் நான் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று கல்பகம் அழுதுகொண்டே சொன்னாள். முகம் வேறுபடாமற் கேட்டாலும் தாயாரம்மாள் மனம் இளகாமலிருக்கவில்லை. தன் மகனைக் கல்யாணம் செய்துகொள்ளும் எண்ணத்தைமட்டும் விட்டுவிட்டால் அவளைத் தன் பெண்ணாகவே பாவித்துத் தன்வீட்டில் சகலஸ்வதந்திரங்களுமளிப்பதாகச் சொன்னாள். இவையெல்லாம் கல்பகத்திற்கும் தெரியும். ஆயினும் ஒன்றே ஒன்றுமட்டும் இவ்வுலகில் யாவற்றிற்கும் மேலாக அவளுக்குத் தோன்றிற்று. அது மாசிலாமணியின் அன்பே யென்று நாம் கூறவும் வேண்டுமோ?

மேற்கண்ட சமாசாரங்களைக்குறித்து மாசிலாமணிக்கும் கடிதங்கள் சென்றன. கல்பகத்தைத் தான் வெகுவாய் நேசித்தபோதிலும் தாம் மணம் புரிந்துகொள்ளுவது இருவரில் ஒருவருக்கும் நன்மையில்லையென்பது நிச்சயமாகும் பக்ஷத்தில், அவர்கள் சொற்படி நடப்பதே யுக்தமென்று எண்ணுவதாகப் பதிலெழுதினான்; கல்பகத்தை நாராயணம் பிள்ளைக்கு மணம் செய்துகொடுப்பதைப்பற்றியும் தனக்குச் சம்மதந்தானென்று தெரிவித்திருந்தான். ஆஹா! ஆடவர்களின் மனமும் வாக்கும் இவ்வண்ணந்தானல்லவா? கடிதத்தைக் கல்பகத்தினிடமும் காட்டினார்கள். ஆனால் அவள் அதைப் பார்த்துச் சிறிதும் அஞ்சவில்லை. கடிதத்திலென்ன இருக்கின்றது? நேரில் கண்டு பேசினால் அவன் முகத்தினின்றும் குரலினின்றும் அவன் மனநிலைமை யெப்படி யென்பதைத் தான் கண்டு கொள்ளக் கூடுமென்றெண்ணினாள்.

ஊருக்குத் திரும்பிவந்து மாசிலாமணியே நேரில் சொல்லுவதாகத் தீர்மானமாயிற்று. கல்பகத்தைக் காட்டிலும் நாராயணம் பிள்ளைக்கு உலகானுபவம் கூடவிருக்குமன்றோ? தன்னைவிட்டு அவள் எங்குப் போகிறாளென்றெண்ணிக் கொண்டான். சென்னையில் இரண்டு வருஷம் இருந்த பிறகு மாசிலாமணி கல்பகத்தை லக்ஷியம் செய்வது சந்தேகம்; அங்குள்ள உற்சாகங்களிலுள்ள நினைவில் அவன் அவளை எளிதில் மறந்துவிடுவான்; பிறகு கல்பகமும் தான் கொடுத்துவைத்தது அவ்வளவுதானென்று பேசாமலிருந்து விடுவாளென்று நினைக்கலானான். மகன் ஊருக்குவரும் முதல்நாளிரவு தாயாரம்மாள் வழக்கம்போல் தன் காரியஸ்தனுடன் பேசிக்கொண்டிருந்தாள். சிறிதும் யோசனையில்லாமல் கல்பகத்தின் இஷ்டப்படி விட்டுவிட்டதைப்பற்றி அவள் இப்பொழுது சந்தேகிக்கத்தொடங்கினாள். அவ்விருவரும் மணம் புரிந்துகொள்வதும் கொள்ளாததும் இப்பொழுது அவர்களிஷ்டத்தைப் பொருத்தனவாகவல்லவா ஆய்விட்டன? இவ்வித ஏற்பாட்டிற்கு வருமென்று அவள் ஒருபோதும் எண்ணவில்லை. தான் விரும்பியபடி நடந்தால் அவள் மனமார ஆசீர்வதிப்பதில் தடையில்லை. அப்படிக்கின்றித் தன் விருப்பத்திற்கு மாறுக நடந்தால், அப்பொழுது அவளிடம் சாபங்களுக்குங் கணக்கு இராது. மாசிலாமணி கல்பகத்தைக் கலியாணம் செய்துகொள்ளுவதற்குமட்டும் அவள் ஒருகாலும் சம்மதிக்கமுடியாது; இது நிச்சயம்.

"என்னவோ எனக்குப் பயமாய்த்தானிருக்கிறது. மாசிலாமணி நான் சொல்லுவதைக் கேட்காவிட்டால் என்ன செய்வது?" என்றாள் தாயாரம்மாள்.

"அப்படியொருகாலும் செய்ய மாட்டான். அதைப்பற்றிக் கவலைவேண்டாம்" என்று நாராயணம் பிள்ளை தயங்காமற் சொன்னான். இக்கலியாணப் பேச்சிற்குப் பிறகு அவன் முன்னிலும் அதிகதாராளமாய்ப் பேசுவதையும் நடந்துகொள்ளுவதையும் தாயாரம்மாள் கவனித்துவந்தாள். அவளுக்கு அது பிடிக்கவில்லை. கலியாணமாகட்டும், பிறகு இவன் செருக்கை யடக்கி விடலாமென்று தீர்மானித்துக்கொண்டாள்.

"மாசிலாமணி கல்பகத்தின்மீதுதான் தனக்கு நாட்டமென்று கூறினானா?"

"நான் சொல்லுகிறேன்; அப்படியொன்றும் சொல்லமாட்டான். சென்னையில் கல்பகத்தைப்போல் அழகுள்ள பெண்கள்

பலரை அவன் பார்த்திராமலா இருப்பான்? தவிர, உங்களுக்கு அவன் எழுதின கடிதந்தான் இருக்கிறதே.''

''அதிலென்ன விருக்கிறது? எழுதிய கடிதத்தையா எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கப்போகிறான்? அவன் சுபாவம் எனக்குத்தெரியும்.''

''மேலும் சொத்தெல்லாம் தங்கள் அதீனத்தில்தானே யிருக்கிறது? தங்கள் இஷ்டத்திற்கு விரோதமாக நடந்தால் பணவிஷயத்தில் சிரமமேற்படுமென்பது அவனுக்குத் தெரியாதா?''

''ஆமாம்; பாபம்! அரைக்காசு என்னுத்தரவன்றியில் அவனுக்கேது?''

''மாசிலாமணிக்கு இப்பொழுது உலகம் சற்றுத்தெரிந்திருக்கும். சொற்பலக்ஷணத்தைக்கண்டு மயங்கி அதற்காக மற்றெல்லாவற்றையும் இழந்து விடத் துணிவானா? அதெல்லாம் புத்தியற்ற சிறுபையன்கள் வேலையல்லவா? இப்பொழுது அவன் வயதுவந்தவனாயிற்றே. நீங்கள் யோசிக்க வேண்டாம். எல்லாம் தங்கள் மனத்தின்படி நடக்கும்.''

''பாவம்! இதனால் கல்பகம் மனம் வருந்தி ஏங்கிப்போனால் என்ன செய்கிறதென்று கவலை ஒருபக்கம் தோன்றுகிறது.''

''உம்! இதற்காகவெல்லாம் பெண்கள் தங்கள் உயிரை விட்டு விடுவார்களா?'' என்று நாராயணம் பிள்ளை சற்று அசட்டையாய்க் கூறினான். அதனுடன் அவர்கள் பேச்சு நின்றது.

மறுநாட்காலை மாசிலாமணி ஊருக்குவந்து சேர்ந்தான். அவன் வருவதற்கு இரண்டுநாள் முன்புவரையில் கல்பகத்திற்கு அவனைப் பற்றி நம்பிக்கை குறையாமலிருந்தது. ஆனால் வரவர அந்நம்பிக்கை குன்றி மனத்தில் ஒருவித பயமேற்பட்டது. தாயாரம்மாளும் அவள் காரியஸ்தனும் தனக்கு விரோதமாய் ஆலோசனை செய்துகொண்டிருப்பதை யறிந்து உள்ளமொடுங்கினாள். முதல்நாளிரவு அவள் படுக்கச் செல்லும்பொழுது, தாயாரம்மாள் அவளைத் தன் சமீபமழைத்து அன்புடன் அவள் கன்னத்தைத் தடவிக்கொடுத்துப் பிறகு போகும்படி கூறினாள். இவ்வருமையின் காரணம் கல்பகத்திற்கு நன்றாய் விளங்கிற்று.

(தொடரும்)

கோபால செட்டியார் கோதானம்

ஆங்கீரஸர்

வெள்ளையூர் வயிரவன் செட்டியார் குமாரர் கோபாலசெட்டியார் தம் தாயார் அங்காளம்மாள் ஆகாரம் ஏற்காமல் அவஸ்தைப் படுவதைப்பற்றி என்னசெய்வதென்று ஆலோசிக்கலானார். அவரிடம் வந்திருந்த சோதிடர்கள், அம்மாளுக்கு வந்திருக்கும் நோயின் மூல காரணம், மூன்னர் வயிரவன் செட்டியார் சந்திரசேகரபுரத்திலிருந்த பசுக்களை அபகரித்து விட்டதென்றும், அதற்குப் பரிகாரமாக அப்பசுக்களைக் கன்றுகளோடு அவ்வூராருக்குத் திருப்பிக் கொடுத்து விட்டால் நோய் தீருமென்றும் கூறினர்.

அது கேட்டு அருகில் நின்ற மலைக்கொழுந்தென்பவன் தன் தமையனாராகிய கோபால செட்டியாரைப் பார்த்து வெகு கோபத்துடன் உரைக்கலானான்:

"அண்ணா! இவர்கள் சொல்லும் பொய்வார்த்தைகளை யெல்லாம் நம்பாதீர்கள். நம் தகப்பனார் பசுக்களை அபகரிக்கவே யில்லை. நம் தேகப் பிரயாசையினால் சம்பாதித்த பணத்தைச் செலவிட்டுச் சிறு கன்றுகளாக விருந்த இவற்றை வளர்த்துப் பயன்படும்படி செய்து வைத்திருக்கிறார். இவைகளுக்கும் சந்திரசேகரபுரத்தாருக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இவைகளை அவர்களிடத்தில் ஒப்பிப்பதாக நீங்கள் கனவிலும் நினைக்கக்கூடாது. அப்படி ஒப்பித்தால் பசுக்கள் நாசமடையுமென்பதிற் சந்தேகமேயில்லை"

அவன் இவ்வாறு கூறியதைக் கேட்ட மற்றொரு தம்பியாகிய சங்கரன்,

"மலைக்கொழுந்து கூறியவெல்லாம் உண்மையாக இருந்தபோதிலும் நம் அன்னையின் அரிய நோயைத் தீர்ப்பது அவசியமாகையால் அப்பசுக்களைத் திரும்பக் கொடுப்பதென்று சொல்லாமல் தானம் செய்வதாகத் கூறி விடலாம்" என்றான்.

அது கேட்டு மற்றொரு தம்பியாகிய பலதேவன் தானமாய்க் கொடுப்பதென்றாலும் இதுவரையில் நாம் அவற்றிலிருந்து அடைந்த பாலுக்குக் குறைவில்லாமல் இருக்கும்படியான ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும், அன்றியும் சந்திரசேகரபுரத்தார் நெடுநாளாய் மாடுகளில்லாமல் வாழ்ந்தவர்களாதலால் இப்பொழுது பசுக்களைப் பாதுகாக்கும் முறைமையை அறியாரென்றும், அல்லாமலும் அவ்வூராருக்குள் ஜனங்கள் பலவகைப்பட்டு ஒற்றுமையில்லாமல் இருக்கிறதனால் அப்பசுக்கூட்டங்களைப் பெற்றவுடன் அதிகச் சச்சரவுகள் உண்டாகுமென்றும், முதலில் பசுக்களைக் காப்பாற்றும் திறமை

அவர்களுக்கு நன்மை உண்டாகிவிட்டதென்று தெரியும் வரையில் தங்களுடைய ஆட்களை விட்டே பாலைக்கறந்து வந்துவிடவேண்டு மென்றும் சொன்னான். இவற்றை யெல்லாம் கேட்ட கோபால செட்டியார் எல்லாவற்றிற்கும் சந்திரசேகரபுரத்திலுள்ள முதன்மை யான சிலரை அழைத்து இவ்விஷயத்தைப் பற்றிக்கலந்து யோசிப்போ மென்று சொல்லி அவர்களை வரவழைத்து அவர்களிடத்தில் பல தேவன் சொன்ன விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தார்.

வந்தவர்களில் தலைமை வகித்திருந்த பிரபாகரனென்பவன், "பசுக்கள் எங்கள் ஊராருக்குச் சொந்தமே யொழிய உங்கள் குடும் பத்திற்கு அவைகளின் விஷயத்தில் யாதோருரிமையும் இல்லை; அவற்றை இது காறும் வளர்த்ததற்குத் தக்க பிரதிப் பிரயோ ஜனத்தை நீங்கள் அடைந்திருக்கிறீர்கள். எங்களுக்கு அப்பசுக் களைத் தானம் கொடுப்பது அவசியமில்லை; அவற்றை நாங்களே திருப்பி ஓட்டிக்கொள்ள லித்தமாகவிருக்கிறோம். அவற்றைப் பாதுகாக்கும் விஷயத்தில் எங்களுக்கு முன்னிருந்த சாமர்த்தியங் கள் இப்பொழுது குறைந்துவிடவில்லை" என்று கூறினான். அதைக் கேட்டவுடன் அவரருகில் இருந்த மூக்கணைக் கவுண்ட னென்பவன் தன்னைச் சேர்ந்தவர்களும் இன்னும் மந்தன் முதலியவர்களும் பசுக்களை மேய்த்துப் பாடுபடுவதற்குரிய சக்தியடையவில்லை யென் றும், தாங்கள் அந்நிலைமையை அடையும் வரையிற் பசுக்களைச் சந்திரசேகர புரத்திற்கு ஓட்டிவிடக் கூடாதென்றும் சொன்னான்.

இவ்வாறு உரைக்கவே மலைக்கொழுந்தென்பவன் எழுந்திருந்து "நான் சொல்லியது இப்பொழுதாவது தோன்றுகின்றதா?" என்று கோபால செட்டியாரைக் கேட்டதுடன், "இனி இந்த ஆலோசனை செய்வது கொஞ்சமேனும் சரியல்ல; பசுக்களைத் திருப்பும் யோச னையை நிறுத்திவிடவேண்டும்" என்று கூச்சலிட்டான்.

ஆயினும் செட்டியார் தம் தாயின் நிலைமையை நினைந்து அவளைத் தேற்றுவது அவசியமென்று எண்ணியவராகையால் தம் சகோதரன் சங்கரனையே சந்திரசேகரபுரத்திற்கு அனுப்பி அவ் விடத்திலுள்ள கலகங்களை ஒருவாறு நிவர்த்தித்துப் பசுக்களை அவ் வூருக்குத் திருப்புவதென்றும் அவைகளைப் பாதுகாக்கும் முறைகளை அவர்களுக்கு எடுத்துக்காட்டித் தக்க ஏற்பாடுசெய்யவேண்டுமெனத் தீர்மானித்தார். செட்டியார்மனத்தில் மாத்திரம் முன்செய்த பாபத் திற்குப் பரிகாரமாக இப்பொழுதாவது பசுக்களைத் திருப்பிக் கொடுத்துத் தாயைக் காப்பாற்றவேண்டுமென்பதுதான் கருத்து; தம்பியர்களின் கோபத்திற்குப் பயந்து அவர் தயங்கிவிட்டார்.

இவ்வாறு கோபால செட்டியார் கோதானம் மனோராஜ்யமாக முடிந்தது.



ஸ்திரீகள் மகாநாடு—காட்சி விநோதம்

வி. விசாலாக்ஷி அம்மாள்

நம் நாட்டுக்கு இப்பொழுது முக்கியமாய் வேண்டுவது ஒற்றுமையே. ஒற்றுமையைக் கோரியே, பஞ்சாப், ஹிந்து, திராவிடம், வங்காளம் என்ற பல பிரிவுகளையும் தன்னிலடக்கிய பாரத நாட்டுக்கு "ஜய ஹே" என்று நாம் வாழ்த்துப் பாடுகிறோம். இந்தப் பாட்டின் கருத்தை ஒரு சித்திரக் காட்சியாகப் பெண்பள்ளிக் கூடங்களில் அடிக்கடி காட்டுவதுண்டு. திரை நீங்கியவுடன், ஒரு பெண், சிவப்புப் பட்டுடுத்தி, மல்லிகைப் பூச்சரங்களுடன் கூந்தல் அவிழ்ந்து தோள்மேல் சரிய, வலதுகையை இடுப்பின்மேல் வைத்துக்கொண்டும், இடது கையால் முன்தானையை விரித்துப் பிடித்துக்கொண்டும் சிலைபோல் நிற்பாள். அவளைச் சுற்றிலும், அச்சிபோல முண்டணிந்தும், பஞ்சாபிப் பெண்போல நிஜாரும் முகத்திரையு மணிந்தும், இன்னும் பலவித வேஷ உடைகள் தரித்தும் சிறுமிகள் நிற்பார்கள்; பின்னறையிலிருந்து தேசீய கீதங்கள் தொனிக்கும். போன டிசம்பர் மாதம், அகில இந்திய ஸ்திரீகளின் மகாநாடு சென்னையில் கூடியதால், இந்தச் சித்திரக் காட்சி சிலநாட்களுக்குத் தெருக்காட்சியாய் நடைபெற்றது. வந்த ஸ்திரீகளில் அநேகமாய் எல்லாரும், ஒன்று மெல்லிய கதர் அல்லது விசித்திரமான சரிகைவேலை செய்த பட்டுக்களை உடுத்தியிருந்தார்கள். பந்தற்காலுக்குச் சுற்றியதுபோலவும், முன்கொய்சகம் வைத்து விரிந்த பாவாடைபோலவும், அவரவர் தேசாசாரத்துக்கு ஏற்றபடி அவர்கள் சேலை கட்டியிருந்த பாவனைகள் விநோதமாயிருந்தன. முன்தானையைத் தொங்கவிடும் விதத்திலேயே பத்துத் தினுசுகள் இருந்தன. காலில் சடாவும் தலைக்கு மூக்காடும் போட்டுக் கொள்ளாதவர்கள் இல்லை யெனலாம். கைத்தையலால் அழகிய

பூவேலைசெய்த சேலைகளையே வடஇந்திய ஸ்திரீகள் அதிகமாக உபயோகிக்கிறார்களென்று தோன்றிற்று. இதனால், தையல், பூவேலை, சடாவின்மேல் சரிகைவேலை முதலியன, ஏழைப்பெண்கள் சம்பாத்தியத்துக்காகவும் சீமாட்டிகள் ஆசைக்காகவும் கற்றுக்கொள்ளும் கைத்தொழில்களாக வடக்கே வழங்குகின்றனவாம். ஊசி கண்டறியாத பதினெட்டுமுழப் புடவையுடனும், வெறுங்காலுடனும், துணியால் மூடாத தலையுடனும் நம்மூர்ப் பெண்கள் விரைந்து நடப்பதைக் கண்டு அவர்கள், "தக்ஷிணம் வேறு, வடசீமை வேறுதான்" என்று சொல்லிக்கொண்டார்கள். நம் ஸ்திரீகளிற் சிலர், தங்களுக்குள்ளேயே, சுயபாஷையைவிட்டு அடிக்கடி இங்கிலீஷில் பேசிக்கொண்டது அவர்களுக்கு வியப்பாயும் வெறுப்பாயு மிருந்தது. இது நியாயமே; ஆனால் இனிமையெனும் பொருள்கொண்ட நமது தமிழ்ப் பாஷையையும் கர்ணகடோரமாய்த் தொனிப்பதாக நிந்தித்து விட்டார்கள்! இந்தியர் அனைவருக்குள்ளும் ஒரு பாஷை வழங்கும் படி, எல்லாரும் ஹிந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் செய்த பிரசாரம் கொஞ்சமல்ல.

வந்தவரிற் சிலர்

அகில இந்திய ஸ்திரீகள் மகாநாட்டின் தீர்மானங்கள் அவ்வப் பொழுதே தினசரிப்பத்திரிகைகளில் வெளியாய்விட்டன. சபை நடவடிக்கைகளைக்காட்டிலும் சபையோரின் நடையுடைபாவனைகளைக் கவனிப்பதுதான் எனக்குச் சாரமாயிருந்தது. அவர்களில் அநேகர் கொழுத்த பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்; பரம்பரையாக ஆண்டுவந்த ஆஸ்தியுள்ளவர்கள்; சம்சாரிகள்; திடீரென்று ஜனசமூகநிலையும் நோக்கங்களும் மாறுவதில் வெறுப்பும் அச்சமும் கொண்டவர்கள். இத்தகையவர்களே சபையிற் கூடினவர்களில் அதிகச் செல்வாக்குள்ளவர்கள். வேறு சிலர் பயமறியாத இளங்கன்றுகள்; பரீக்ஷைகளில் தேறி, வேலையிலமர்ந்து சுயசம்பாத்தியம் செய்பவர்கள்; 'கலகம் பிறந்தாலல்லவோ நியாயம் பிறக்கும்' என்று எண்ணுபவர்கள். ஆனால் இவர்கள் கூக்குரல் கட்டில்லை; இவர்கள் பெரியோர் சொற்படி கேட்டு நடக்கவேண்டியதாயிற்று. அநேகருக்குப் பிரசங்கங்கள் செய்வதிலும், தீர்மானங்களை நிறைவேற்றுவதிலும் உற்சாகமே யில்லை. 'நாம் ஒருவரையொருவர் கலந்துகொள்வதற்காகவே கூடுகிறோம். நம்மூரில் நம்மாலான மட்டும் செய்யவேண்டியதைச் செய்வோம். அதுவேயன்றி வாய்ப் பேச்சு கற்கண்டென்று நாமேன் ஏமாறவேண்டும்?" என்று கொல்லிக் கொண்டார்கள்.

அவர்கள் எல்லாருக்கும் பொதுவான ஒரு கொள்கை தேச பக்திதான். எவ்வாறுவது நம் நாடு ஒற்றுமை பெற்றுச் சிறப்படைய வேண்டுமென்று எல்லாரும் தம் பிரார்த்தனைகளில் சிந்தித்தார்கள். ஜனசமூகச்சீர்திருத்த விஷயங்களில் அவர்களுக்கிருந்த அபிப்பிராய பேதங்கள் அதிகம் வெளிவராததற்குக் காரணம், இந்த ஒரு விஷயத்தில் அவர்களுக்கிருந்த மன ஒற்றுமையே. பெண்கள் மானத்தை விற்றுப் பிழைப்பதைத் தடுக்கவேண்டும், எல்லாப் பெண்களுக்கும் எழுதப்படிக்கக் கற்பிக்கவேண்டும் என்ற அனைவருமே ஒப்பக்கூடிய, இரண்டு பொதுவிஷயங்களையும்பற்றி, அவர்களும் ஒத்த கருத்துடையவர்களா யிருந்தார்கள். மற்ற விஷயங்களில், தாகூர் சொல்லிய அழகிய உவமைப்படி சரத்தில் கோத்த நவமணிகளைப்போல, ஒற்றுமையில் வேற்றுமைகளே அவர்களிடம் சிறந்து விளங்கின. சிலர் பரான்னம் சாப்பிடாத வைதிகிகள்; சிலர் தீண்டாச்சாதியார்; தம் அந்தஸ்தை எண்ணிக் கர்வம் கொண்டவர்கள் சிலர்; குலம், பணம், பதவி எதையும் பெரிதெனப் பாராட்டாத நவநாகரிகக் கொள்கைகள் நமக்கே உண்டென்று கர்வம் கொண்டவர் சிலர்.


பெண்களுக்கு உயர்தரக்கல்வியும், உத்தியோகப்பதவியும் மேன்மேலும் கிட்டவேண்டுமென்று சிலர் விரும்பினர்கள். ஒருநாளும் கைசளைக்கக் காரியம் செய்தறியாத பணக்கார ஸ்திரீகள் சிலரும், வேறு சிலரும் பொதுவாய்ப் பெண்களுக்கு உயர்தரக்கல்வி அநாவசியமென்றும், வீட்டுவேலையே பெண்களுக்கு முக்கியமான கல்வியென்றும், குடித்தனப்பாங்கைப் பரீக்ஷைப்பாடமாகக் கலாசாலைகளில் கற்பிக்கவேண்டுமென்றும் அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள்.

கேலி நாடகம்

ஆனால் இத்தகைய அபிப்பிராயபேதங்களால் ஒரு மனஸ்தாபமும் ஏற்படவில்லை. எல்லா ஸ்திரீகளும் வேளைக்கொருவிதமாய் அலங்காரம் செய்துகொண்டு, ஒழிவுநேரத்தை விருந்துண்டும் கடைகளுக்குப்போயும், பாட்டுக்கேட்டும் சல்லாபமாய்ப் போக்கினர்கள். நான்காம் நாளிரவு, சில பெண்கள் பாடுவதற்குப் பதிலாக ஒரு கேலி நாடகம் நடித்துக் காட்டினர்கள். அந்த நாடகத்தின் விஷயம் அகிலஇந்திய ஸ்திரீகள் மகாநாடு கூடுவதே. சபையில் தலைமை வகித்த, ராணிகள் காரியதரிசிகள் முதலியோரின் தேக அமைப்பைச் சற்று ஒத்திருந்த மற்றப்பெண்கள், அவர்களைப்போல உடுத்திக் கொண்டு, அவர்களுடைய பேச்சையும் போக்கையும் நடித்துக் காட்டினர்கள். சபையில் ஸ்திரீகள் சிலவேளை தற்பெருமையாகப் பேசுவதைப் பரிகசித்து, "ஸ்திரீகளே இவ்வுலகத்தின் தாய்மார்;

ஆதலால் புருஷருக்குள்ள சர்வசுதந்திரங்களையும் ஸ்திரீகள் மட்டுமே இனி அநுபவிக்கத்தகுந்தவர் என்று இம்மகாநாடு கருதுகிறது'' என்று ஒரு கேலித்தீர்மானம் நிறைவேற்றினர்கள்.

சென்னைப் பெண்களுடன் கலந்து உறவாடினதும், மகாபலிபுரம் சென்று அங்குக் கண்ட சிற்பக்காட்சிகளும், நாம் ஒருநாளும் மறக்கமுடியாவென்று சொல்லி, இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் வந்துகூடின ஸ்திரீகள் அவரவர்கள் ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.



மீன்கள்

சி. கே. லக்ஷ்மி அம்மாள்

(104-ம் பக்கத்தொடர்ச்சி)


இது வரை எலும்பு உள்ள, எலும்பு இல்லாத இரண்டு வகை மீன்களையும் பற்றிப் பொதுவாகச் சொன்னேம். எலும்பு உள்ள மீன்களுக்கு உள்ளே எலும்புக் கூடும், அதன் மேல் சதையுமாக இருக்கும். இல்லாத மீன்களுக்கு உள்ளே எலும்புக் கூடு கிடையாது. அதற்குப் பதிலாகச் சதையின்மேல் எலும்பு மூடி போல் மூடிக் கொண்டிருக்கும். நண்டு, பெரிய இறால் மீன், சிப்பி மீன் ஆகிய எல்லாம் எலும்பு இல்லாத இனத்தைச் சேர்ந்தவைகள்.

சங்குநண்டுகள் (*Shell-Fish*)

மட்டி அல்லது சங்குநண்டின் மேல் மூடி கெட்டியானதாகவும் பச்சை நிறமுள்ளதாகவும் இருக்கும். இது தண்ணீரில் அசைந்து செல்லுவதில்லை. பாறையுடன் ஒட்டிக் கொண்டிருக்கும். நண்டுகளின் மேல்ஓடு இவ்வளவு கடினமானதில்லை. சமுத்திரக் கரை ஓரங்களில் ஆயிரக் கணக்கான நண்டுகள் விளையாடிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கலாம். நாம் அருகில் போனால், அவைகள் தங்கள் வளைகளுக்குள் ஓடி விடும். பெரிய இறால் மீனின் மேல் ஓடு மிகவும் மெல்லியதாகவும் கண்ணாடி போன்றும் இருக்கும். எப்பொழுதும் அது தண்ணீரிலேயே வசிக்கும்; நண்டைப் போல் கரை மேல் வராது.

பெரிய இறால் மீனுக்கும், நண்டுக்கும், சங்கு நண்டுகளுக்கும் மற்ற மீன்களைப் போல் சிதள்களும் சிறகுகளும் இல்லை. பெரிய இறால் மீனுக்கும் நண்டுக்கும் சிறகுகளுக்குப் பதிலாக ஜதை ஜதையான கால்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. சங்குநண்டுகளுக்குக் காலுக்குப் பதிலாகக் கனமான கட்டிச் சதைதான்

இருக்கிறது. சங்கு நண்டுகளின் உடம்பு எல்லாம் சிப்பியால் மூடப் பட்டிருக்கும். அநேக தினுசான சங்குநண்டுகள் (சிப்பி மீன்கள் சமுத்திரத்தில் வசிக்கின்றன. இவைகள் சாப்பிடுவதற்கு மிகவும்



சங்குநண்டுகள்.

ருசியாக இருக்குமென்றும் ஆனல் மற்றை மீன்களின் மாமிசத் தைப் போல் இலேசில் இவை ஜீர்ணமாகாவென்றும் சொல்வார்கள்.

முட்டை

சுற்று நிலைக்குத் தக்கபடி மீன்கள் தங்கள் நிறத்தை மாற்றிக் கொள்ளும் என்று முன்பு சொன்னேனும். ஆண் மீன்கள்தாம் பெண் மீன்களை விட அதிகப் பிரகாசமான நிறங்களை எடுத்துக் கொள்ளும். முட்டை இட்டுக் குஞ்சுகளைக் காப்பாற்ற வேண்டி இருப்பதால் பெண் மீன்கள் அதிகப் பளபளப்பான நிறங்களை எடுத்துக் கொள்ளுவதில்லை. மாப்பிள்ளை கலியாணத்துக்கு என்று நல்ல உடைகளை உடுத்தித் தன்னைச் சிங்காரம் செய்து கொள்ளுவான் அல்லவா? அப்படியே ஆண் மீன்களும் பருவ காலத்தில் தான் இப்படி மிகவும் பிரகாசமான நிறங்களை எடுத்துக்கொள்ளும்.

பெண் மீன் முட்டை இடும். ஒரே மீன் ஆயிரக் கணக்கான முட்டைகளை இடும். சில வேளைகளில் லக்ஷக் கணக்கான முட்டைகளைக் கூட இடும். ஆனால் இந்த முட்டைகளில் அநேகம் ஜல ஜந்துக்களால் ஆகாரமாக விழுங்கப்பட்டு நசித்து விடும். இப்படி நசிக்காமல் எல்லா முட்டைகளும் குஞ்சு பொரித்தால், சமுத்திரம், ஏரி, குளம் எல்லாம் மீன்களால் நிரம்பி விடும். அப்புறம் ஆகாரமும் காற்றும் போதாமல், இவைகள் லக்ஷக்கணக்கில் இறக்க நேரிடும்.

மீன் முட்டைகள் சிறியனவாகவே இருக்கும்; சில வகை மீன்கள் சற்றுப் பெரிய முட்டைகளை இடும்; ஆனால் இவைகள் ஆயிரக் கணக்கில் இடப்படுவதில்லை. இவைகளைக் கெட்டியான மேல் ஓடு மூடிக் கொண்டிருக்கும். ஆனதினால் இவைகள் மற்றை மீன் முட்டைகளைப் போல் அவ்வளவு சுலபமாக நசிப்பதில்லை. சுறு மீனின் முட்டை இப்படித்தான் இருக்கும். சமுத்திரத்தின் அடியில் வசிக்கும் மீன்கள் சமுத்திரத்தின் தரையிலேயே முட்டை இடும்; மற்ற மீன்கள் கரை ஓரங்களிலுள்ள வலைகளிலும், தண்ணீரில் உள்ள செடிகளுக்கு நடுவிலும் முட்டை இடும்.

மீன்களில் இரண்டு வகுப்பு உண்டு. அவை உப்பு நீரில் வாழும் மீன், நல்ல நீரில் வாழும் மீன் என்பனவாம். நல்ல நீரில் வாழும் சில ஜாதி மீன்களுடைய முட்டை உஷ்ணமான உப்பு நீரில் தான் முற்றிக் குஞ்சு பொரிக்கும். அப்படியே உப்பு நீரில் வாழும் சில மீன்களுடைய முட்டை குளிர்ந்த நல்ல நீரில்தான் குஞ்சு பொரிக்கும். ஆகையால் உப்பு நீரில் வாழும் மீன் நல்ல நீருக்கும் நல்ல நீரில் வாழும் மீன் உப்பு நீருக்கும் வருஷந்தோறும் மாறும். ஆகாரத்தைத் தேடிக் கொண்டு இந்த மீன்கள் இடம் மாறுவதும் உண்டு. இப்படி இந்த மீன்கள் இடம் மாறுவதைப் பக்ஷிகள் ஊர் விட்டு ஊர் போவதற்கு ஒப்பிடலாம்.

ஸால்மன் என்ற மீன், முட்டை இடுவதற்கு நல்ல நீரைத் தேடும் இனத்தைச் சேர்ந்தது. இது சமுத்திரத்தை விட்டு நதிகளில் சென்று கரை ஓரமாக முட்டை இடும். பெண் மீன் நதியின் கரை ஓரத்தில் மணலில் நெளிந்து போகும். அப்போது அங்கு உண்டாகும் பள்ளத்தில் தன் முட்டைகளை இடும். முதலில் சில முட்டைகளை இட்டு, அவற்றை இலேசாக மணலால் மூடிவிடும். பிறகு இன்னும் ஓர் இடம் பண்ணி முட்டை இட்டு மூடும். எல்லா முட்டைகளையும் இப்படி இட்ட பிறகு சமுத்திரத்தைவிட்டு நதியில் பிரயாணம் செய்த சிரமம் நீங்கும்படி ஆணும் பெண்ணும் சாப்பிட்டுக் களைப்பாறும். ஒரு வாரத்தில் இந்த முட்டைகள் பொரித்துச் சின்ன மீன் குஞ்சுகள் வெளியே வரும்.




மீன்பிடித்தல்.

பறவைகளைப் போல் மீன்கள் முட்டைகளை அடை காப்ப தில்லை ; குஞ்சுகள் தாமே பொரிக்கும். மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மீன்கள் எல்லா ஜாதியிலும் பெண் தான் குஞ்சுகளைப் பரிபாலிக்க வேண்டும் என்பது வழக்கம். ஆனால் மீன்களிற் சில இனத்தில் ஆண்களே குஞ்சுகளைப் பாதுகாக்கின்றன. இவை கள் முட்டைகளைத் தங்கள் வாயில் வைத்துக் காக்கின்றன. குஞ்சு பொரிக்கும் வரை ஆகாரம் சாப்பிடாமல் பட்டினியே கிடக்கின்றன. நாய்மீன் முட்டைகளாக இடுவதில்லை ; குஞ்சுகளாகவே பிறக் கின்றன.


சமுத்திரத்தில் அதிக ஆழத்தில் இருட்டாக இருக்கும். அங்கு வசிக்கும் மீன்களுக்குக் கண்கள் நன்றாகத் தெரிவதற்காகப் பெரியன வாக அமைக்கப்பட்டிருக்கும். இன்னும் அதிக ஆழத்தில் சூரிய வெளிச்சமே இருக்காது. அங்கு வசிக்கும் மீன்கள் சில குரு டாகவே இருக்கும் ; அல்லது மின்மினிப் பூச்சிக்கு இருப்பது போல் வெளிச்சம் தரக் கூடிய ஓர் அவயவம் உடையனவாக இருக்கும்.

மீன் பிடித்தல்


மீன் பிடிப்பது மனத்துக்கு விளையாட்டாக நன்றாகவே இருக்கும். ஆனால் பாவம், மீன்களுக்கு இது கஷ்டந்தான். குட்டை களில் மீன்கள் விளையாடுவதைக் குழந்தைகள் பார்த்தால் அவர்கள் மீன் பிடிக்க ஆசைப்படுவார்கள். ஒரு துணியை மீன்களின் மேல் போட்டும், தூண்டிலாலும் மீன் பிடிப்பார்கள். இப்படிச் செய் வதால் ஒரு தடவையில் ஒன்று அல்லது இரண்டு மீன்கள் பிடிக்க லாம். ஆனால் நிறைய மீன் பிடிக்க வேண்டுமானால் நல்ல கெட்டி யான வலை வேண்டும்.



1. 'ரம்பாயிட்' வலை.



2. அர்த்த சந்திரவலை.



3

3. 'டிராட்ஜ்' வலை.

சுலபமாகக் கை வலைகள் செய்யலாம். ஒரு கம்பியை வளைத்து ஓர் இரும்பு அல்லது பித்தளைக் குழாய்க்குள் அதனை நுழைத்துவிட வேண்டும். இந்தக் குழாய், கைபிடியாக உதவும். வலையை வளைத்த கம்பியுடன் சேர்த்துத் தைத்துவிடவேண்டும். முதற்படத்தில் இருப்பது போன்ற (ரம்பாயிட்) மாதிரியிலும் வலை செய்யலாம். ஒரு கோணத்தில் பிடியை வைத்துவிடலாம். மற்றைய கோணம் பாறையில் உள்ள இடுக்குகளில் நுழைத்துத் தேடுவதற்கு உபயோகமாக இருக்கும். அர்த்த சந்திரன் போன்ற வலையும் பாசிபடர்ந்த பாறைகளைச் சுறண்டுவதற்கு உபயோகமாக இருக்கும்.

வலை கெட்டியானதாக இருக்கவேண்டும். வளையைக் கம்பியில் தைப்பதைவிடக் கம்பியைச் சுற்றிக் காலிகோ துணியைத் தைத்து அதில் வலையைத் தைத்தால் பிய்ந்து போகாமல் இருக்கும். மேல் சொன்ன மூன்று தினுசான வலைகளாலும் அதிக ஆழம் இல்லாத இடங்களில் மீன் பிடிக்கலாம். அதிக ஆழமான இடத்தில் மீன் பிடிப்பதற்குப் பெரிய வலை வேண்டும். மூன்றும் படத்தில் உள்ளது (டிராட்ஜ்) போன்ற வலை இதற்குச் சௌகரியமாக இருக்கும். படகில் போய் இதைக் கீழே ஜலத்தில் முக்கி மீன் பிடிக்கலாம். பாறை முதலிய கரடு முரடான இடங்களில் உபயோகிக்க வேண்டி இருப்பதால் வலை நல்ல கெட்டியானதாக இருக்க வேண்டியது முக்கியம்.

சிறு கதைகள்

வே. நாராயண ஐயர்

1. மயிற் கண்

முன் காலத்தில் மயில்கள் நீல வர்ணமுள்ளவைகளாய் இருந்தன; அவைகளுக்குத் தோகைகள் இல்லை. பின்பு தேவேந்திரனுடைய வரத்தினாலே அவைகள் மயிற்கண்கள் என்று சொல்லப்படும் அழகிய தோகைகளைப் பெற்றன.

திரேதா யுகத்திலே இராவணன் என்ற ஒரு ராக்ஷஸன் இருந்தான்; அவன் அதிக பராக்கிரமம் வாய்ந்தவன்; யாரோடு யுத்தஞ் செய்யலாம் என்று பூமி எல்லாம் திரிந்தான். அப்பொழுது, ஓர் இடத்தில் மருத்தன் என்னும் அரசன் ஒருவன் தேவர்கள் சூழ இருந்து யாகம் செய்வதைக் கண்டான். இவனைக் கண்டதும் தேவர்கள் பயந்து அருகிலிருந்த பக்ஷிகளுள் புகுந்து கொண்டார்கள். இந்திரன் ஒரு மயிலாக மாறினான். இயமன் காக வடிவு கொண்டான். வருணன் அன்னப்பறவையானான். குபேரன் ஒரு பச்சோந்தியுள் புகுந்துகொண்டான். யாகஞ் செய்து கொண்டிருந்த அரசன் இராவணனோடு யுத்தம் செய்யாமல் இருக்கவே, அவன், "நான் ஜயித்தேன்" என்று சொல்லிக் கொண்டு போய்விட்டான். இராவணன் போன பிறகு தேவர்கள் தங்கள் சுய உருவங்களை எடுத்துக்கொண்டனர்.

அப்போது இந்திரன் மயிலைப் பார்த்து, "மயிலே! நீ எனக்கு இடங்கொடுத்ததால் உன் பேரில் எனக்குப் பிரீதி அதிகம். நீ இனிப் பாம்பினின்றும் பயப்படவேண்டியதில்லை. நான் மழை பெய்யச் செய்யும்பொழுது நீ இன்புறுவாய். அப்பொழுது உன்னுல் தோகையை விரித்து ஆட முடியும். உன் சிறகில் எனக்குள்ள ஆயிரம் கண்களும் தோன்றி உன்னை அழகுறச் செய்யும்" என்று வரம் அளித்தான். அது முதற்கொண்டே மயிலுக்கு ஆயிரம் கண்கள் அமைந்த அழகிய தோகை உண்டாயிற்று.

இயமனும் காக்கைக்கு வரம் கொடுத்தான். "என் உலகத்திலுள்ள பிதுருக்களுக்கு அன்னமிட விரும்பும் மனிதர்கள் 'வாயஸ பிண்டம்' என்று உனக்கு அன்னத்தை இட்டால் போதும். நீ உண்

டால் அவர்கள் திருப்தி அடைவார்கள்'' என்று அவன் சொன்னான். அதனாலேதான் சிராத்தம் முதலிய விசேஷகாலங்களில் பிண்டத் திரளைக் காக்கைக்கு இடுகின்றார்கள்.

2. காக்கை நோக்கு

காக்கைக்குக் கண்கள் இரண்டு இருந்தாலும் ஒரு சமயத்திலே ஒரு கண்ணாலேதான் பார்க்க முடியும்; அதனால் அது பார்க்க வேண்டிய புறமாகத் தலையைச் சாய்த்துக் கொண்டு பார்க்கும்.

முன்பு காக்கைக்கு இரண்டு கண்களும் சரியாக இருந்தன; இந்திரனுடைய பிள்ளை ஒருவன் காக்கை வடிவம் கொண்டு சஞ்சரித்தான்; அப்பொழுது சித்திர கூடத்திலே சீதா தேவியின் மடியிலே தலையை வைத்து இராமர் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான்; சீதா பிராட்டியின் மார்பில் தன் மூக்கால் கீறினான்; தேவியின் மார்பிலிருந்து இரத்தம் வடிந்து இராமர் மேல் விழவே, அவர் விழித்துக்கொண்டு, காக்கை கீறியதைக் கண்டு அதன் மேல் ஒரு புல்லை எடுத்து எறிந்தார். அந்தப் புல் கூரிய அம்பாகி அந்தக் காக்கையைத் துரத்திற்று. அனைத்துலகிலும் திரிந்தோடிய அந்தக் காக்கையைக் காப்பாற்றுபவர் ஒருவரும் இல்லை. எனவே, அது திரும்பவும் இராமரிடம் வந்து அவர் காலிலே விழுந்து அபயம் தர வேண்டுமென்று பிரார்த்தித்தது. அப்பொழுது இராமர் அதற்கு உயிர்ப்பிச்சை கொடுத்தார். தாம் விட்ட அம்பு ஒரு புல்லானாலும் அது வீணாகாது என்பது தோன்ற, அந்தக் காக்கையின் இரண்டு கண்களில் ஒன்றின் பார்வையை மட்டும் அந்தப்பாணத்திற்கு இரையாக்கினர். அது முதற்கொண்டு, இந்திரன் பிள்ளையான காக்கைக்கு மட்டு மல்ல, காக்கையின் குலத்திற்கே, ஒரு கண்பார்வை ஏற்பட்டது.

3. அணிற் பிள்ளை

அணில் ஓர் அற்பப்பிராணி. அணிலுக்கும் மலைக்கும் ஒரு காலத்தில் விவாதம் நடந்தது. அப்போது மலை, ''இதோ என் வலிமையைப் பார்; காடு காடாக மரங்களை நான் என் முதுகிலே தாங்கிக்கொண்டிருக்கிறேன்'' என்று பெருமை பேசிற்று. அதைக் கேட்ட அணில், ''மெய்தான். என்னால் முதுகிலே மரங்களைச் சுமக்க முடியாது. ஆனால் உன்னால் ஒரு பழக்கொட்டையையாயினும் கடித்துண்ண முடியுமோ? ஒவ்வொருவருக்கும் ஒன்று செய்ய இயலும்'' என்று பதிலளித்தது.

இவ்வாறு உருவிலே சிறிய அணிலின் முதுகிலே மூன்று விரல்கள் போன்ற வெள்ளை வரிகள் இருப்பது ஏன்?

ஸ்ரீராமரின் மனைவியான சீதையை இராவணன் தூக்கிக் கொண்டு போய்ச் சமுத்திரத்திற்கு அப்பாலுள்ள இலங்கைத் தீவிலே ஒரு வனத்திலே ஒளித்து வைத்திருந்தான். இராமர் அதை அறிந்து வானர சேனையுடன் இலங்கையின்மேல் படையெடுத்துச் சென்றார். அப்போது சமுத்திரத்தைத் தாண்டுவதற்கு ஓர் அணை கட்டினார். சேனையிலிருந்த குரங்குகள் எல்லாம் மலைகளையும் மரங்களையும் பெயர்த்துக்கொண்டு போய்ச் சமுத்திரத்திலே போட்டன. அங்கே சமுத்திரக் கரையோரத்திலிருந்த மரத்தில் விளையாடிக் கொண்டிருந்த அணில் ஒன்று இதைக்கண்டது. உடனே, தானும் இராமருக்கு அணை கட்ட உதவி புரியவேண்டும் என்று அதற்குத் தோன்றிற்று. அதன் முதுகிலே மண் துளிகள் ஒட்டிக் கொள்வதற்காக, முதலில் சமுத்திரத்திலே குளித்தது; பின்பு மணலிலே புரண்டது. புரண்டபோது முதுகிலே ஒட்டிக்கொண்ட மணலைச் சமுத்திரத்திலே உதிர்த்தது. மறுபடியும், குளித்துப் புரண்டு ஓடி உதிர்த்தது. இவ்வாறு தனக்கு இயன்ற அளவிலே உதவ முன் வந்த அணிலைக் கண்ட இராமர் அதனை அன்புடன் நோக்கி, "பிள்ளாய்!" என்று அதன் முதுகிலே தடவிக் கொடுத்தார். இராமருடைய விரல்கள் தடவினதாலே அணிலுக்கு முதுகில் விரல்கள் போன்ற வரிகள் காணப்படுகின்றன. அது முதற்கொண்டே, எல்லோரும் அணிலை "அணிற் பிள்ளை! அணிற் பிள்ளை!" என்று அழைக்கின்றனர்.



அணுவுளுள்ள அளவற்ற ஆற்றல்:—ஆடம் (Atom) என்று சொல்லப் படும் அணுவினுள் அளவு கடந்த ஆற்றல் தங்கியிருக்கிறதென்று இரசாயன சாஸ்திரஞானிகள் சிறிது காலமாகக் கூறிவருகின்றனர். அணுவானது உடைந்து சிதறும்போது இந்த ஆற்றல் வெளிப்படுகிறதென்பதும், பிரபஞ்ச சக்திகளின் முயற்சியால் அணுவானது இடையறாது தாக்கப்பட்டுத் தளர்ந்து உடைந்துபோகிறதென்பதும் அவர்கள் துணிபு. அமெரிக்க-விலே கொலம் பியா சர்வகலாசாலையார் முன்பாக டாக்டர் மில்லிகான் (Dr. Millikan) என்னும் பிரபல இரசாயன சாஸ்திரி தாம் அணுவை உடைத்துவிட்டதாகக் கூறினராம். அதனுள் உள்ள மின்சாரசக்தியின் வன்மை 30 கோடி வோல்ட் (Volt) என்று கணக்கிட்டுச் சொன்னராம்! 'இது 13 கோடி வோல்ட் வெளிவிடப்படுவதைக் காட்டுகிற படம்; இது 17 கோடி வோல்ட் வெளிவருவதைக் காட்டுகிற படம்' என்று படங்களையும் காட்டிப் பிரசங்கம் செய்தாராம்!

அ.

நியூபியாவில் ஆராய்ச்சி:—ஆப்பிரிக்காவிலே உள்ள நியூபியா (Nubia) என்னும் பாலைவனத்திலே அடிக்கடி பிரசண்ட மாருதங்கள் வீசிக்கொண் டிருக்கும். அங்கே வாடி ஹாபா (Wady Halfa) வுக்கு நாற்பது மைலுக்கு வடக்கே உள்ள கியாதிபெற்ற அபூசிம்பால் (Abusimbal) கோயிலுக்குச் சிறிது தென்புறமாகவுள்ள கோஹா மேடுகளைத் (Mounds of Goha) தோண்டி ஆராய்வதற்காக ஆராய்ச்சியாளர் சைனியம் ஒன்றுசென்றிருந்தது. அது சிறிது காலமாக வேலைசெய்து வந்தது. சமீபத்தில் சில ஆச்சரியமான காட்சிகளை அங்கே அவ்வாராய்ச்சியாளர்கள் கண்டார்களாம்.

இம் மேடுகள் எதியோபியா தேசத்தாரால் அவர் நாட்டில் மரித்தவர் களைப் பூமிக்குள் அடக்கம் செய்த சமாதிகளின் மீது இயற்றப்பட்டவை என்பது சிறிது காலமாகத் தெரிந்தவிஷயம். இப்பொழுது அவற்றைத் தோண்டிப்பார்த்ததில் ஒரு மேட்டினுள் குதிரைகள் ஒட்டகங்கள் நாய்கள் ஆகியவற்றின் எலும்புக்கூடுகள் பலவற்றைக் கண்டார்கள். பரலோகத்துக்குச் சென்ற யஜமானனுக்கு அவ்வுலகத்திலே உதவவேண்டுமென்று அவனுடைய சவாரிக்குதிரைகள் ஒட்டைகள் முதலியவற்றையும் அவனுடைய சொந்த நாய்களையும் அவன் செத்தவுடன் கொன்று அவன் பிரேதத்தோடு அடக்கம் செய்வது வழக்கம். இவைதவிர அவனுக்குக் குற்றேவல் செய்யப் போது மான அளவில் அடிமைகளையும் பணிப்பெண்களையும் மூச்சைப்பிடித்துக் கொன்று அவனுடைய சவ அறையில் போட்டுவிடுவது இந்நாட்டு வழக்கம். இப்பொழுது திறக்கப்பட்ட அறைகளில் அடிமைகளின் எலும்புக் கூடுகளும்

அகப்பட்டனவாம். சுருக்குப்போட்ட கயிறு அவர்களின் கழுத்தைச்சுற்றி அன்றுபோலவே காணப்பட்டதாம். விலையுயர்ந்த பளபளப்பான சிறந்த சேணங்கள் கட்டி வெள்ளிக் கடிவாளங்கள் கழுத்துப் பட்டைகள் வெள்ளிச்சங்கிலிகள் மணிகள் மூதலியவை குதிரை எலும்புகளைச்சுற்றிக் காணப்பட்டனவாம். கிரேக்க தேசத்துச் சித்திரவேலைகளும் எகிப்து தேசத்துச் சித்திரவேலைகளும் மிகுந்து காணப்பட்டனவாம். மேலும் மாத்தால் செய்த ஒரு சதுரங்கப்பலகையும் தந்தத்தாலும் கருங்காலியாலும் செய்யப்பட்ட சதுரங்கக் காய்களும் அகப்பட்டனவென்று ஹிந்துப் பத்திரிகை கூறுகின்றது.

அ.

மிளகுக் கொடி :—இது மலையாள தேசத்திலும், பிறமலைத் தொடர்களில் உயர உள்ள காடுகளிலும் காணப்படுவது. அனேக இடங்களில் பயிரிடப்படாது தானாகவே—அதாவது பசுஷி, காற்றுக்களின் உதவியாலே—மூளைத்து உண்டாகும். குடகு மூதலிய நாட்டு மலைகளிலும் ஏராளமாகக் காணப்படுகிறது. அங்கெல்லாம் இது மிகுதியும் தோட்டக் கொடியாகவே காணப்படுகிறது. இது மூதன்மூதலில் இந்தியாவில் மலையாள தேசத்தில்தான் செழித்து வளர்ந்ததெனினும் இதனை உலகெங்கும் உபயோகிக்கத் தொடங்கியதன் பிறகு பிற நாடுகளிலும் பயிராகி வருகிறது. இப்பொழுது மலாய் நாட்டிலும், கீழ் இந்தியத் தீவுகளிலும் ஏராளமாய் இக்கொடி பயிராகிவருகிறது. ஆயினும், மலையாளத்தில் விளைந்து தலைச்சேரியிலிருந்து ஏற்று மதியாகும் மிளகே மிகவும் உயர்ந்த மிளகென்று சொல்லுகிறார்கள். இந்த மிளகே ஐரோப்பியர் இந்தியாவுக்கு வந்ததற்குக் காரணம் என்பர். இந்தியா நாட்டில் ஐரோப்பாவிலிருந்து மூதல்மூதல் குடியேறிய ஜாதியாரான போர்த்துக்கல் நாட்டார் இதன்பொருட்டே இங்கு வந்தனர் என்றும், அதற்குப் பின் பிறநாட்டார் ஒருவரையும் இந்த வியாபாரத்தில் தலையிடவொட்டாது தனி ஒப்பந்தம் பேசி மிளகு வியாபாரம் முழுவதும் தாமே நடத்தி வந்த ஹாலண்டு நாட்டாரான டச்சுக்காரர் இதன்பொருட்டே இங்கு வந்து குடியேறினர் என்றும், அப்படி இவர் தனி வியாபாரம் நடத்தி மிளகின் விலையைத் தம்மிஷ்டம்போல் எல்லாம் உயர்த்திவந்தது கண்டு மனம் பொறாத சில ஆங்கில தனவான்கள் ஒன்றுகூடி இந்தியாவோடு நேரே வியாபாரம் செய்வதற்கென்று நிறுவிய சங்கமே ஈஸ்டு இந்தியா கம்பெனி என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். மிளகுக் கொடியானது நமது நாட்டின் சரித்தத்தை மாற்றிவிட்டது.

அ.

அழுது :—இது வடமொழியிலுள்ள 'அம்ருதம்' என்னும் சொல்லுக்கு நேர்; வடமொழியில் இதற்குத் 'தேவர்களின் பானம்' என்றும் 'நீர்' என்றும் பொருள். பிராமணர்கள் உண்ணும்போது, தொடக்கத்தில் உள்ளங்கையிலே சிறிதளவு ஜலத்தை யேந்தி "அமிர்தமே! நீ (உண்ணப்படும் உணவுக்கு) அடி விரிப்பாகிறாய்" என்றும், இறுதியில் அவ்வாறே "அமிர்தமே! நீ மேல் விரிப்பாகிறாய்" என்றும் கூறி ஜலத்தை உட்கொள்வதுண்டு; "உண்ணும் சோறும் பருகும் நீரும் எல்லாம் அமிர்தமாய் மாறு

கிறது'' என்பது இம்மந்திரங்களின் கருத்து. இது பற்றியே போலும் உண்டலே 'அமுது செய்தல்' என்னும் வழக்கம் எழுந்தது; "ஆடி அமுதி செய்; அப்பனும் உண்டிலன்; உன்னோடு உடனே உண்பான்" என்பர் பெரியாழ்வார்; இப்பழைய வழக்கத்தைநன்கு விளக்கும் பிரயோகங்களை வைஷ்ணவ பரிபாஷையில் இன்றும் காணலாம்; பருப்பமுது, கறியமுது, தயிரமுது, இலையமுது, திருக்கன்னலமுது முதலிய சொற்கள் இவ்வழக்கத்தை விளக்குகின்றன. சோறிடுதலுக்கு 'அமுது படைத்தல்' என்பதும் பழைய வழக்கு. அரிசிக்கு 'அமுது படி' என்றும், சமையலறைக்கு 'அமுது மண்டபம்' என்றும், புளியோரை தத்யோதனம் முதலிய உணவுப் பண்டங்களைப் பிரித்துக் கொடுக்கும் கோயில் மண்டபங்களிலுள்ள கற்பாறைகளுக்கு 'அமுதுபாறை' என்றும், உணவூட்டுவதற்கு 'அமுதூட்டுதல்' என்றும் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

வே. நா.



தலயாத்திரைப்படமும் படவிளக்கமும் : [சைவசித்தாந்த மகா சமாஜம், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை. விலை அணா, 4]

இப்படத்தில் தேவாரம் பெற்ற சிவஸ்தலங்கள், ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற திருப்பதிகள், திருப்புகழ் பெற்ற சுப்பிரமணியஸ்தலங்கள் என்பன இருக்குமிடங்களும் அவற்றிற்குரிய மார்க்கங்களும் யாவருக்கும் விளங்கும்படி காட்டப்பெற்றிருக்கின்றன. இப்படவிளக்கப் புத்தகம் ஒவ்வொரு தலத்திற்குமுரிய பெயர், இப்பொழுது வழங்கும்பெயர், நாடு, ரயில்வே ஸ்டேஷனும் கிளையும், ஸ்டேஷனுக்கும் கோயிலுக்கும் எத்தனை மைல், வண்டி வசதிகள் என்னும் விவரங்களை விளக்குகின்றது. இப் படமும், பட விளக்கப்புத்தகமும் தலயாத்திரை செய்பவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்.

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் சரித்திரம் : [மாந்தை. சா. கிருஷ்ணையர் எழுதியது; ஸ்ரீகிருஷ்ண பப்ளிஷிங் ஹவுஸ், மயிலாப்பூர். விலை அணா எட்டு]



சங்கீத வித்துவானுக விளங்கிய ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் சரித்திரத்தை ஒருவகைப் படுத்தி இடையிடையே தமிழ்ச் செய்யுள்களையும் வடமொழிச் சுலோகங்களையும் மேற்கோள் காட்டி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் பாடிய கீர்த்தனங்கள் பலவற்றின் சந்தர்ப்பமும் சிலவற்றின் பொருளும் இதிற் காணப்படுகின்றன. இது ஸ்ரீ சுவாமிகளின் சரித்திரத்தைச் சுருக்கமாக அறிந்துகொள்ள விரும்புவோர்க்கு உபயோகமாக இருக்கும். இப்புத்தகத்திலும் பலபடங்கள் உள்ளன.

சுகுணவதி அல்லது மனம்போல மாங்கல்யம்: [பக்கம் xvi + 168; விலை ரூ. ஒன்று]

இப்புத்தகமும் மாந்தை. சா. கிருஷ்ணையர் அவர்களால் எழுதி மேற் கூறிய நிலயத்திலேயே வெளியிடப்பட்டுள்ளது. இது நவீன முறையில் எழுதப்பட்ட ஒரு கதை. இடையிடையே நீதிகளைவிளக்கிச் சிறுவர் சிறு மிகளுக்கும் உபயோகப்படும் முறையில் இதனை ஆசிரியர் எழுதியுள்ளார். பலபடங்களுடன் நல்ல காகிதத்தில் நன்முக அச்சிடப்பட்டுள்ளது. இதற்குப் பலர் நல்லபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

சரீரமனோரஞ்ஜினி: [செ. வே. பாலகிருஷ்ணன், 1, சைபுல் முல்க் தெரு, கோமளீசுவரன் பேட்டை, சென்னை; இதன் விலை இரண்டணு]

இது தளவியின் இரகவியமென்னும் வேறு பெயர் கொண்டது. பாபா ஸர் யூதாஸ் ஜி மஹந்து அனுக்கிரகத்தின்படி ஸ்ரீமான் செ. வே. பால கிருஷ்ணன் அவர்களாற் பிரசுரிக்கப்பெற்றது. தளவியின் வேர்முதல் விதைவரையில் உள்ளவற்றைப் பலவகை மருந்துகளாக உபயோகிக்கும் 63 முறைகள் இச்சிறுநூலிற் கூறப்பட்டுள்ளன.



திருமயிலைப் பதிகம்

டி. எஸ். இராமச்சந்திர ஐயர்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

1. கலையுறு மதியி னோடு கதிரவற் சகட மாக்கி
மலையதைச் சிலைய தாக்கி மறைகளைப் பரிக ளாக்கி
அலைகட லரணங் காய்ந்தா னருளினு லவனி தன்னில்
மலைமகள் பாக னாகி மயிலையில் வைகி னானே.

2. கதிர்மதி குடைய தாகக் கழையது சிலைய தாகப்
பொதியவிழ் மலர்க ளேதாம் பொழிகணை மாரி யாக
எதிரெழுந் தெய்த வேளை யெரியெழ மூட்டி னன்றன்
மதிதுதல் தனைம ணந்தே மயிலையில் வைகி னானே.

3. மலையினை மத்தா நாட்டி வாசுகி கயிற தாக்கி
அலைகடல் கடைந்த வந்நா ளடர்ந்தெழு மாலந் தன்னை
நிலைகொளு மமரர் காண நெஞ்சிடைத் திகழ வைத்தான்
மலைமக ளொடுமு வந்து மயிலையில் வைகி னானே.

4. தக்கன்றன் வேள்வி தன்னிற் றங்கிய தேவ ராவி
கக்கிடும் வண்ணம் நெஞ்சு கலங்கிடக் கோபத் தோடே
உக்கிர வேடங் கொண்ட வுருத்திர மூர்த்தி தானே
மைக்குழல் பாக னாகி மயிலையில் வைகி னானே.

5. முன்னமே கொடுத்த வாயுள் முடிந்திட வஞ்சி வந்து
தன்னையே தஞ்ச மென்று சார்ந்தவந் தணனுக் காகத்
துன்னியே தொடர்ந்த காலன் தொலைந்திடச் செய்த தூயோன்
கன்னியோர் கூற னாகி மயிலையிற் கலந்து ளானே.

6. குன்றினை யெடுத்திட் டான்றன் குலவரைத் தோள்கள் வீயத்
தன்றிரு வடியை யூன்றித் தடிந்திட்ட செல்வன் ரூனே
மன்றலார் குழலி னுள்தன் மனத்துய ரொழித்து மேனுள்
ஒன்றுடல் தழுவ வந்து மயிலையில் ஒளிர்கின் ரூனே.

7. கரியின தூரிவை போர்த்துக் கையினிற் கபால மேந்தி
விரிகுழ லணங்க னுர்தம் வெள்வளை கவர்ந்து கொண்டு
திரிதரும் தோகை யாகித் தவஞ்செய்த சிறப்பி னுன்ற
வரிவளை பாகம் வைத்து மயிலையில் வைகி னூனே.

8. எனமோ டெகின மாகி யெய்திய விருவர் தாமும்
ஆனவம் மூடியி னோடு மடியினை காண வண்ணம்
தானொரு தாணு வாகித் தனியொளி மேனி கொண்டான்
மானினை யாகம் வைத்து மயிலையில் வைகி னூனே.

9. பேயுறுஞ் சுடலை தன்னிற் பெருநடம் புரிந்து தானே
பாயுறும் புலித்தோல் ஆர்த்துப் பையர வணியும் பூண்டே
ஆயுறும் மனத்தா ருள்ளத் தமர்ந்திடு மமரர் கோமான்
வேயுறு தோளி யோடு மயிலையில் விளங்கி னூனே.

10. விண்ணொடு மண்ணும் வேறு விரிந்தபூ தங்கள் நாசம்
நண்ணிய போது தானஃ தெய்திடா நம்பன் தன்னை
எண்ணியே யிறைஞ்சுந் தேவ ரிதயத்துள் வைகி நின்றூன்
பண்ணியல் மொழியி னோடு மயிலையிற் பயில்கின் ரூனே.



குரங்காட்டி.

By courtesy of the artist, Mr. M. S. Sundara Sarma, B.A.

§ 334
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
THIRUVANMIYUR, MADRAS-41.



குரங்காட்டி

எம். எஸ். சுந்தர சர்மா

கலைமகளின் கருணையால் நற்கலைகளாக வழங்கிவரும் கலைகளில் ஓவியக்கலையும் சிற்பக்கலையும் சிறந்து விளங்குகின்றன. உயிரின் போக்கைக் காட்டும் உருவங்களைக் கிரகிக்கக்கூடிய கண்கள் ஐம் பொறிகளில் விசேஷமானவையாதலால் இவை அச்சிறப்பு வாய்ந் துள்ளன. தமிழகத்தின்கண் இவ் விருகலைகளும் மிகக் கொண்டாடப் பெற்று உயர்ச்சி அடைந்திருந்தன வென்பதை இப்பொழுது கிடைக் கும் அபூர்வ நூல்களிலிருந்து நாம் அறிவதோடுகூட வானத்தி லுள்ள நட்சத்திரங்களைப்போல நமது தேசத்திற் சிதறிக் கிடக்கும் கோயில் குளங்கள் முதலியவைகளிலிருந்தும் அறியக்கூடும்.

நமது முன்னோர்கள் தங்கள் இயல்புவழக்கங்கள் முதலியவை களை நன்றாய் உணருவதற்கு நமக்கு அளித்திருக்கும் பல சாதனங் களுள் ஓவியங்களும் சிற்பங்களும் மிகச் சிறந்தனவாகும். ஆகையி னால் அவ்விரு கலைகளின் தன்மையை நாம் நன்றாக அறிய வேண்டும். அவ்வாறு அறிய அநேக இடையூறுகள் இக்காலத்திலிருந்து வருகின் றன. உருவ பேதங்களைக் கண்டு களிப்படையச் செய்யும் குண முள்ளன கண்கள். ஓசைகளையும் கண்களால் கண்டுணரும்படி குறிக ளாக அமைத்து வருகிறது இக்காலத்து நாகரிகம்! இதுவே முதன் மையான இடையூறாக இருந்து நமது நாட்டாருடைய கண்களுக்கு ஓவியச்சிறப்பும் சிற்பச்செல்வமும் புலப்படாது நிற்பதற்கு முக்கிய காரணமாகிறது.

கற்களில் இழைத்த சிற்பச்செல்வத்தைப் பெற்ற அநேககோயில் களும், சித்தன்னவாசல், தஞ்சை, காஞ்சீபுரம், அஜண்டா போன்ற விடங்களிற் காணப்படும் ஓவியச்சிறப்பும் தென்னிந்தியாவிற்கே உரியன. பஞ்சவலோகத்தில் வார்த்த ஆயிரக்கணக்கான படிவங்கள் சிதறிக்கிடக்கும் இடமும் இதுவே. இவ்வகையில் காணப்படுவன

வற்றைக் கண்டு அவைகளினுல் வெளியிடப்பட்ட உண்மைகளைக் கண்டறிய வேண்டியது மிகவும் அவசியம். ஆங்கில பாஷையிலும் பிற மொழிகளிலும் இவைகளைப்பற்றிச் சிலர் சில நூல்களை எழுதியிருக்கிறார்கள். ஆனல் அவற்றை எழுதி வெளியிட்டவர் களில் பெரும்பான்மையோர் அந்நியர்களாயிருக்கிறார்கள். அந்நிய நாட்டினராயிருந்தும் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் சிரத்தை மிகவும் மெச்சத்தக்கது. ஆனல் அவர்கள் அப்படிக் கஷ்டப்பட்டு சிரத்தை யெடுத்துக்கொண்டிருப்பது அவரவர் நாட்டிலுள்ள கலை களின் விருத்தியின்பொருட்டே யென்பதனையும், அவர்களால் நம்முடைய தேசத்தின் ஆழ்ந்த தத்துவங்களை அறிந்து எடுத்துக் காட்ட இயற்கையில் முடியாதென்பதனையும் வெளியாக்குகிறது. நாம் வாயை மூடிக்கொண்டிருக்குமளவும் அவர்களது வியாக்கியா னம் எவ்வளவு வேண்டுமென்றலும் நீட்டப்படலாம். நாமும் 'ஆமாப்பாட்டு'ப் பாடுவோமேயாகில் அவர்களது கட்டுரை வியாக்கி யானங்களுக்குக் கரையே இராது.

நமது நாட்டின் ஓவியங்களும் சிற்பங்களும் மேன்மை பெற்ற வைகளென்று நாமே அறிந்து பெருமைகொள்ளாமல் பிறநாட்டினர் மெச்சிக் கூறின பிறகு நாமும் ஆமோதிப்பதைக்காட்டிலும் கேவலம் யாதுளது?

கண்டு கேட்டறியவொண்ணுதவைகளை நமக்குத் தெளிவாய்ப் புலப்படும்படி செய்துவைத்திருக்கும் சிற்பசித்திரங்கள் நமது நாட் டில் அளவற்றுக் கிடக்கின்றன. அவைகளுள், பண்டைக்கால முதல் பெயர் பெற்றுவரும் பாண்டிய தேசத்திற்கு முக்கிய நகரமாக வாய்ந்த மதுரையின்கண் விளங்காநிற்கும் ஆலயத்தின் ஈசானிய மூலையில், பதினேந்தாம் நூற்றாண்டின் பிற்பாதியில் விமரிசையாக அரசுபுரிந்து வந்த நாயக்கவரசர்களில் மகாஜனங்களின் விருத்தியின் பொருட்டுச் சிற்றணை பேரணை முதலிய அணைக்கட்டுகளைக் கட்டு வித்துக் காத்துச் சிறந்தோங்கிவந்த விசுவநாத நாயகரின் அமைச்சர் அரியநாயக முதலியாரின் ஊக்கத்தினலும் ஏற்பாட்டினலும் கட்டப் பட்ட ஆயிரக்கால் மண்டபம் ஒன்று வாய்ந்துளது.

இஃது அளவில்லாச் சிற்பச்செல்வம் பொருந்தியுளது. ஒரே அளவு வாய்ந்த ஒவ்வொரு தூணும் விதவிதமாய்ப் பொளியப்பட் டிருப்பதோடுகூட அநேக தூண்கள் பெரும்சிற்பங்களுடன் அமைக் கப்பட்டிருக்கின்றன. இக்காலத்தில் சிற்பியென்று பெயர் வகித்து, வெண்ணெபோன்ற களிமண்ணில் உருவங்கள் உருட்டிப் பிறகு இட் டாலிக்கோ அல்லது வேறு எந்த நாட்டிற்கோ அனுப்பி அந்நாட்டி லுள்ள வல்லோரின் உதவியால் வெண்கலத்தில் வார்த்து

வரவழைத்து, தாம்செய்த சிற்பம் என்று பெருமை பாராட்டுபவர் களைப்போலன்றி, சிற்பியே கருங்கற்கள் நிறைந்தவிடம் சென்று தகுதியான கற்களைப் பெயர்த்தெடுத்து வெயில் நிழலென்று பாராது அவ்விடத்திலேயே பெருவெட்டிட்டுப் பிறகு நிறுத்த வேண்டிய விடத்தில் கொண்டு வந்து அங்கு, சிற்றுளிகளினால் தானே வெட்டிச் சீர்படுத்திச்செய்த சிறந்த சிற்பங்கள் அநேகம் இம்மண்டபத்தில் உள்ளன. அச்சிற்பங்களின் தொழிற்றிறமையை மெச்சாத தொழிலாளிகள் இவ்வுலகில் இல்லை. நமது முன்னோர்கள் ஆராய்ந்தறிந்து வெளிப்படையாய் அச்சிற்பங்களில் காட்டியிருக் கும் தத்துவங்களை இங்குத் திரட்டிக் கூற இயலாது. ஒரு நற்கலைக் காட்சிச் சாலையாக விளங்கும் இம்மண்டபத்தின் அருமை பெரு மைகளை ஒரு சிறு வியாசத்தில் எடுத்துரைப்பது எப்படி முடியும்?

ஆனால் இம்மண்டபத்தின் முகப்பிற் காட்டப்பட்டுள்ள சிலை களில் ஒன்றை இங்குச் சற்று கவனிப்போம். அச்சிலையின் உருவம் இங்குப் **புனையா ஓவியமாகக்** காட்டப்பட்டிருக்கிறது.

கடினமான கற்களை வெண்ணெய்போல் உருட்டித் திரட்டின சிறந்த தொழிலாளர்களின் பயிற்சியை விளக்குவதற்கு இதுவே போதும். உலகிலுள்ள எந்தச் சிற்பத்தைச் செய்தவனும் இதை இழைத்த சிற்பியினும் மேற்பட்ட திறமையுடையவனன்று. இஃது அளவும் அமைப்பும் பொருந்தியிருப்பதோடுகூட மிக்க அழகும் வாய்ந்துளது. இக்கடினமான கல்லில் வேலைத்திறமையைக் காட்டிய சிற்பிக்கு வெண்பளிங்கில் கண்ணை மூடிக்கொண்டே வேலைசெய்யும் திறமையுண்டென்பதில் ஐயமில்லை. கருங்கல்லில் இதைக்காட்டிலும் அருமையான வேலை செய்யவே முடியாது.

இது நிற்க; இச் சிலையைச் சற்றுக் கவனித்தால் இவ்வுருவத்தைப் போன்ற மக்களை இந்நாளிலும் நாம் வீதிகளில் குரங்கும் கோலும் கொண்டவர்களாய்க் காணலாம். கேவலம் ஒரு குரங்காட்டியி னுருவைச் சிறந்த இம்மண்டபத்தின் முகப்பில் காட்டியிருக்கும் தன் மை யாது? இவ் வுருவத்தின் பக்கத்தில் இதைப்போன்ற ஸ்தானம் பெற்றுள்ள மற்ற உருவங்களைக் கவனிக்குமிடத்து, சிவனது உருவமும், சிவனடியாரிற் சிறந்த கண்ணப்பரின் உருவமும்*, சிவ பக்தரான ஓர் அரசரது உருவமும், சிறந்த அமைச்சரான அரிய நாயக முதலியாரின் உருவமும், ஒரு குதிரை வீரனது உருவமும், கூடையும் குழந்தைகளும் தாங்கிய ஒரு மாதின் உருவமும் வரிசை

---

* இவ்வுருவத்தைக் 'கலைமகள்' 144-ம் பக்கத்துக்கெதிரிற் காண லாம்—ப-ர்.

யாக முகப்பிற் காணப்படுகின்றன. இவ்வாறு இவற்றை முகப்பில் ஒருங்கே காட்டியிருக்கும் தன்மை என்னவென்று ஊகித்தால் பல வெண்ணங்கள் தோன்றுகின்றன.

மனிதர் வேறுவேறு பிறப்பெடுத்து வேறுவேறு தருமத்தைக் கைக்கொண்டபோதிலும் ஈசனது சன்னிதியில் வித்தியாசம் கிடையாதென்பதையும், இக்காலத்தில் ஜாதிபேதத்தினால் ஆக்கப்பட்ட வித்தியாசக் குறைகளற்று எக்குடிப் பிறந்து எத்தொழில் செய்தோரும் இச்சம்சார சாகரத்தில் ஒரு நிலைப்பட்டவர் என்பதையும், வாயில்லாச்சீவனுகிய குரங்குடன் பழகி அதற்கு நாட்டியம் பயில்வித்து அதனுடன் தானும் ஆடிப்பாடிச் சீவனம் செய்பவனும், கூடை முடைந்து அதைச்சுமந்து குழந்தை குட்டிகளை ஈன்ற மாதும், குதிரையேறிப் போர்புரிந்து தேசத்தைக் காப்பாற்றும் போர் வீரனும், தந்திரமாய் இராஜ்யத்தைப் பரிபாலனம் செய்யும் மந்திரியும், பிரஜைகளை ஆதரிக்கும் மன்னனும், தனது கண்ணைக்கூடப் பறித்தளிக்கும் பக்தனும் ஆகிய யாவரும் வித்தியாசமற்றுச் சகோதர பாவத்தை அடைந்தவர்களென்று கருதியிருந்த நாகரிகத்தையும் காட்டுகிறது.

இவ்வாறுன எண்ணங்களையெல்லாம் மண்டபத்தின் முகப்பில் அமைத்துக் காட்டியுள்ள சிற்பங்களின் பெருமையை என்னென்று மெச்சுவது?

தொழிற்றிறமை வாய்ந்து, சிறந்த வாழ்க்கையின் உண்மைகளை வெளிப்படுத்தும் இக்கற்சிலைகளைச் செய்து காட்டிய நமது முன்னோரின் நாகரிகத்தை நாம் தழுவி அவர்கள் நமக்கு அளித்திருக்கும் செல்வத்தைப்போல் நாமும் நமது பின்னோருக்கு அளிப்பதைக் காட்டிலும் வேறு பெருமை நமக்குண்டோ?



வழக்கமும் சூழ்வும்

பி. என். அப்புஸ்வாமி

(123-ம் பக்கத்தொடர்ச்சி)

முற்கூறியவாறு உண்டாகும் மாற்றங்களிற் சில, பிராணிகளுக்கு மிக்க பிரயோஜனமுள்ளனவாய் இருக்கும். அப்பொழுது அவை, மீண்டும் மீண்டும், ஒவ்வொரு தலைமுறையிலும், ஏற்படும்படி முன்போன்ற வளர்ப்பு விகற்பங்களால் அமைத்துக்கொள்ளுவது நல்லதாகும். அப்படிப் பயன்தரும் மாற்றங்கள் ஒவ்வொரு தலைமுறையிலுள்ள ஜந்துக்களிலும் மீண்டும் மீண்டும் ஏற்பட்டுக்கொண்டே வந்தால் அவை அந்தஅந்த ஜந்துக்கள் தொலைந்துபோகாது தடுத்துக்கொண்டுவரும் ரக்ஷையாக அமைந்துவிடும். அப்படிச் சில தலைமுறைகளாக நடந்து வந்தால், பின்பு ஒருகால்—நல்ல வேளையாய்—அடுத்த தலைமுறையில் வமிசார்ச்சித குணமாக அத்தகைய மாற்றமானது தோன்றினலும் தோன்றக்கூடும். உதாரணமாக, உடலில் தோலில் காணப்படும் ஒருவகைக் கருநிறந்தான் தோலைக் கறுப்பாகத் தோன்றச்செய்கிறது. இதற்குப் பிக்மேண்ட் (*Pigment*=மை) என்று பெயர். இந்தப் பிக்மெண்ட் தோலில் இல்லாதவர் வெள்ளை மனிதர். இது தோலில் உள்ளவர் இதன் அளவுக்கேற்பத் தவிட்டு நிறமோ கருநிறமோ உள்ள கறுப்பு மனிதர். சூரியனுடைய கிரணங்கள் உடலைத்தாக்கிக் கெடுதி விளைவிக்காமல் இந்தப் பிக்மெண்ட் தடுக்கின்றது. இஃது ஒருவித ரக்ஷையாகும். வெயிலில் போய் உலவும் வெள்ளை மனிதரின் தோலானது சிறிது சிறிதாகத் தவிட்டு நிறமாய் மாறிவிடுகிறது. இக் கன்றிய நிறமானது அவர்களைச் சிறிது ரக்ஷிக்கின்றது. மூன்றெருகால் உலகம் முழுதும் பனி மூடியிருந்த காலத்தில் யாவரும் வெள்ளை நிறம் கொண்டவரே என்பதும், வரவர காளடைவில் உஷ்ண நாடுகளில் வசித்துலவி வந்தபோது முதன்முதலில் ஒரு தலைமுறையிலுள்ளவர்களுடைய தோல் மட்டிலுமே கறுத்து வந்தது என்பதும், அவர்களுடைய குழந்தைகள் அனைவரும் வெள்ளை

நிறமுடையவராகவே பிறந்து வந்தனர் என்பதும், பின்பு ஒருகால் காப்பு நிறமாகிய கறுப்பு நிறங்கொண்ட குழந்தைகள் பிறக்க, இக் கறுப்பு நிறம் வமிசார்ச்சிதமாகப் பெறப்பட்டதென்பதும், அக் குழந்தைகளின் சந்ததி கறுப்பாகவே இருக்கத் தொடங்கிற்றென் பதும், இவ்வாறு மீண்டும் மீண்டும் சூழ்வால் ஏற்பட்ட ஒரு விசேஷ நிறமாறுபாடானது இறுதியில் வமிசார்ச்சிதமாகவே தங்கிவிட்ட தென்பதும் ஒரு சாராரின் கொள்கை.

மாற்றங்கள் மேலே சொன்னபடி வமிசார்ச்சிதமாய் வராவிடி னும், அடுத்த தலைமுறையில் அப்படி அப்படியே தோன்றுவிடினும், அல்லது ஒரு சிறிது அளவாவது மாறுபட்டுச் சந்ததியில் காணவிடி னும், அவை சிற்றுயிர்க் கண்ணறைகளில் சிற்சில நேரல்லாத மாறு பாடுகளையோ அல்லது சார்பான மாறுபாடுகளையோ செய்தல் கூடும். அதாவது, மாற்றங்களே காரணமாகச் சிற்றுயிர்க் கண்ணறைகள் நஞ் சுற்றை, வலியற்றை, வலி குன்றியோ, வலிமிக்கோ ஆதல் கூடும். உதா ரணமாக, எலிகளின் உடலிலே உணவின் வழியோ அல்லது மூச்சின் வழியோ சாராயச் சரக்கை (*Alcohol*) அடிக்கடி சிறிதளவாக உட் புகுத்தினால் அவற்றின் சிற்றுயிர்க் கண்ணறைகள் கெட்டுப்போகின் றன. இஃது இராசயன முறையால் உண்டாகிற மாறுபாடோ அல் லது உயிர் முறையால் உண்டாகிறதோ என்பது நிச்சயமாகத் தெரிய வில்லை. ஆயினும் இம்முறையால் ஜந்துவின் சந்ததியின் குணநிலை தன்மைகள் மாறுபடுகின்றன என்பதில் ஐயமில்லை.

ஸ்தன்னியபான ஜந்துக்கள் சம்பந்தப்பட்டமட்டில் இதைப் பற்றி உறுதியாகச் சொல்லுவதற்கே இல்லை. சிற்றுயிர்க் கண்ணறை உடலின் உள்ளேயே தங்கி வளர்ந்து பிறக்கின்றது. அப்படி யிருக் கும்போது, சிற்றுயிர்க் கண்ணறையின் வமிசார்ச்சித குணம் இன் னது, தாயுடலில் தங்கும்போது சூழ்வு முதலியவற்றால் உண்டான மாற்றம் இன்னது என்பன யாரால் உறுதியாகச் சொல்லக்கூடும்?

ஆயினும், தொழிலின் இயல்பும் சூழ்வின் இயல்பும் ஜீவியை மிகவும் பாதிக்கின்றன என்பது உறுதி. சிற்றுயிர் சம்பந்தமான காரணங்களும் அதற்குரிய வளர்ப்பும் சேர்ந்து, முதிர்ந்த உயிர்ப் பிராணிகளிடத்தில் காணப்படும் ஒவ்வொரு குணத்தையும் உண் டாக்கியிருக்கின்றன. இயல்புகள் மாறுபடுவது சூழ்வால் என்பதற்கு ஐயமில்லை; அவை வளரும் சூழ்வைப் பொறுத்துள்ளன அவ்வவற் றின் தனி இயல்புகள். சூழ்வுக்கு ஒப்ப இயல்புகள் மிகவும் மாறுபடு கின்றன. இஃது ஓர் உதாரணத்தால் விளங்கும். மூடுற்ற ஓரிடத்தில் கருவுற்ற முட்டைகள் இருக்கின்றனவென்று வைத்துக்கொள்வோம். நாம் செயற்கையால் அந்த இடத்துள்ள முட்டைகளின் எண்ணைக்

கூட்டவோ குறைக்கவோ முடியாது. ஆயினும் சொத்தையான முட்டைகளை வளர வொட்டாது செய்யவும், நல்ல முட்டைகளில் சிலவற்றை நன்கு வளராது தடுக்கவும், அவற்றுள் வேறு சிலவற்றை நன்கு போஷித்துச் செம்மையாகவும் செழிப்பாகவும் வளரச் செய்யவும் கூடும். சிற்சிலவகையான இயல்புகளை நாம் இவ்வாறு மாற்றுதல் முடியாது. வேறு சிலவற்றை நாம் மனங்கொண்டவாறெல்லாம் மாற்ற முடியும். உதாரணமாக, சைனு பிரிம்ரோஸ் (*Chinese Primrose*) என்னும் ஒருவகைப் பூச்செடியானது 15, 20 டிகிரி சூடுள்ள இடத்தில் வளர்க்கப்பட்டால் அதன் புஷ்பங்கள் சிவப்பாக இருக்கின்றன. அதே செடியை 30, 35 டிகிரி சூடுள்ள இடத்தில் வைத்து அங்கு ஈரமும் நிழலும் செறிந்திருக்கச் செய்தால் அப் பொழுது அதன்புஷ்பங்கள் வெள்ளைவெளேரென்று இருக்கின்றன.

அரிந்த தைராய்ட் பொருளை (*Thyroid*) உணவாக உண்ணும் வால் நீண்ட தவளைக் குஞ்சுகள் வளர்ந்து வால் உதிர்ந்து முற்றிய தவளைகளாகின்றன வெனினும் அளவில் சிறியனவாகவே இருக்கின்றன. அரிந்த தைமஸ் (*Thymus*), ஸ்பிலீன் (*Spleen*) என்பவற்றையே உணவாக உண்டு வளரும் தவளைக் குஞ்சுகளோவெனின் அளவில் பெரியன வாகின்றனவாயினும் வாலிழந்து உரு மாறுவதில்லை.

காமரூபி என்று பெயரிடத்தக்க ப்ரோடியஸ் (*Proteus*) என்னும் ஒருவகை ஜந்துவானது டால்மேஷியா (*Dalmatia*) நாட்டுக் குகைகளிலுள்ள இருண்ட நதிப்புறங்களில் வாழும்போது நிறமற்று வெளுத்துக் காணப்படுகின்றது. ஆனால் அதைப் பிடித்துச் சாதாரணமான ஒரு நீர்ப்பிராணிக் காட்சிச்சாலையில் (*Aquarium*) கொண்டு வைத்தால் அது சிறிது சிறிதாய் நிறமாறுகிறது. முதலில் உடலில் புள்ளிகள் தோன்றுகின்றன. பிறகு அதன் உடல் முழுவதும் கறுத்துப்போகிறது. இப் புது இடத்தில் அதற்குப் பிறக்கும் சந்ததியும் அவ்வாறு கறுப்பாகவே பிறக்கின்றன.

ஆகவே 'மாற்றங்களுக்குக் காரணம் பிறப்பா? அல்லது வளர்ப்பா?' என்று கேட்பது அவ்வளவு சரியான வினு அல்ல. 'அலைக்குக் காரணம் காற்று? அல்லது நீரா?' என்பது போன்றதே யாகும் அக் கேள்வியும். அலைக்குக் காரணம் காற்றும் நீரும். இவற்றுள் யாதாயினும் ஒன்றில்லாவிடின் அலை யென்பது கிடையாது. அதுபோலவே, பிறப்பும் வளர்ப்பும் ஆகிய இரண்டும் சேர்ந்தே மாற்றங்கள் தோன்றுகின்றன. இவற்றுள் எதுமேல் என்பதும் எளிதில் சொல்லமுடியாது. சிற்சில வேளைகளில் சிற்சில உயிர்ப் பிராணிகள் எவ்வகையான வளர்ப்பாலும் சிறிதும் மாறுபடாது இருப்பதையும்

காணலாம்; சூழ்வுக்கு ஏற்றபடி நிமிஷத்துக்கு நிமிஷம் நிறமாறும் பச்சோந்தியைப்போன்ற ஜந்துக்களையும் காணலாம்.

சாதாரணமாய் ஜீவிகள் அனைத்தும் வளர்ப்புக்கும் சூழ்வுக்கும் ஏற்றபடி மாறுபடக் கூடியன என்பது உறுதி. ஆனால் அவற்றை எவ்வளவு மாறுபடுத்தக் கூடும் என்பதும், ஒரு ஜீவியில் உரிய காரணங்களால் ஏற்படும் மாறுபாடுகள் எவ்வாறு எவ்வளவு அதன் சந்ததியை மாறுபடுத்தவும் வமிசார்ச்சிதமாய்த் தலைமுறை தலைமுறையாய் இறங்கவும் வல்லன என்பதும் இன்னும் வரையறுத்து அறிந்துகொள்ளப்பட வில்லை.

சாஸ்திர சம்பந்தமான தமிழ்ச் சொற்கள்

Aggressive colour—வஞ்சக வர்ணம்.
Alcohol—சாராயச்சரக்கு.
Aquarium—நீர்ப்பிராணிக் காட்சிச்சாலை.
Association—கூட்டுவாழ்க்கை.
Beet root—சிவப்புச் சர்க்கரைக் கிழங்கு.
Biologist—உயிர் நூலறிஞர்.
Bristle—சிலும்பு.
Commensalism—ஆகாரமித்ரபாவம்.
Dragon fly—தட்டாரப்பூச்சி.
Ectoparasite—புறத்தொத்தி.
Endoparasite—அகத்தொத்தி.
Fat—கொழுப்புச் சத்து.
Fertilisation—கர்ப்பாதானம்.
Foundation line—அஸ்திவார ரேகை.
Germ body—சந்ததித் தூள்.
Hermit crab—சந்யாசி நண்டு.
Hook worm—கொக்கிப்புழு.
Insectivorous plant—பூச்சியைக் கொல்லும் செடி.
Light house—கலங்கரை விளக்கம்.
Mineral salt—உப்புச் சத்து.
Parasite—கொள்ளைச்செடி, தொத்துப்பிராணி.

போரிடும் செடிகள்

எம். எஸ். சபேச ஐயர்

மனிதர்களும் ஆடுமாடுகளும் செடிகளை அழித்து வருவதை நாம் பார்க்கிறோம். மிருகங்களுக்குச் செடிகள் சாதாரணமாய்த் தீங்கு செய்வதில்லை. ஆயினும் சிலவகைச் செடிகளால் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பெருத்த நஷ்டமேற்படக்கூடும். இத்தகைய செடிகள் போரிடத் தயாராயிருப்பதுபோல் தோன்றக் கூடும்.

(1) மற்றைய செடிகளைத் தம் நடுவே வளரவொட்டாது தாமே எங்கும் பரவும்படியான செடிகள் சில.

(2) மனிதர்களுக்கு உணவாகும் தின்பண்டங்கள், கனிகள், தானியங்கள் முதலியவற்றைக் கெடுக்கக்கூடிய செடிகள் சில.

(3) வியவசாயிகளின் பயிர்களையும் கட்டிடவேலைக்குரிய காட்டில் வளரும் மரங்களையும் அழிக்கக்கூடிய செடிகள் சில.

(4) வாந்தி பேதி பிளேக் என்பன போன்ற கொடிய நோய்களால் வருத்தி நாசஞ்செய்யும் செடிகள் மற்றுஞ் சில.

(5) பூச்சிகளிலுள்ள உணவுப்பொருளை அடைவதற்காக அவைகளைக் கொல்லும் செடிகள் சில.

பலவிதத்தில் நமக்குத் தொந்திரவுசெய்து மிகப்பெரிய நஷ்டத்தை விளைவிக்கக்கூடிய இத்தகைய செடிகள் பலவற்றின் வாழ்க்கையை நாமறியவேண்டியது அவசியம்.

1. எங்கும் பரவுதல்

'வாடர் ஹயாஸிந்து' *(Water-Hyacinth)* என்னும் செடி சில வருஷங்களுக்கு முன்புதான் இந்நாட்டையடைந்தது. இது நாடெங்கும் குட்டைகளிலும் கால்வாய்களிலும் கூட்டமாய்ச் செழித்து வளர்வதைக் காண்கிறோம். நீர்மட்டத்தையே மறைக்கும் படியாயடர்ந்து வளர்வதால் வேறு செடிகள் புகுதற்கு வழியில்லை.


கால்வாய்களில் நெருங்கிவளர்வதால் தண்ணீர் விரைவாய்ச் செல்லாது தடுக்கப்பட்டு வயல்களுக்கு ஜலம் பாய்வது கடினமாகிறது. வாய்க்கால்களும் சீக்கிரத்தில் மேடிடுகின்றன. இந்தச் செடியால் குடிகளுக்கு மிக்க கஷ்டமுண்டாவதாகத் தெரியவருகிறது.

நாகதாளி *(Prickly Pear)* அல்லது சப்பாத்திச் செடி எங்குப்பார்த்தாலும் பரவிச் செவ்வையாய் வளர்கின்றது. ஆஸ்திரேலியாவிலிருந்து சமீபத்தில் கொண்டுவரப்பட்டப் பூச்சியில்லாவிடில் சப்பாத்தியை ஒடுக்குவது அசாத்தியம்.

லாண்டானா *(Lantana)* என்னும் செடியும் வெளியூரிலிருந்து சில வருஷங்களுக்கு முன்பு இங்காடு புகுந்தது. ஆயினும் நாட்டுப் புறங்களிலும் தடையின்றிப்பரவுவதைப் பார்க்கலாம். இத்தகைய செடிகள் வேறுவிதச் செடிகளைப் பரவமுடியாமல் தடுத்து வருகின்றன.

2. உணவுப்பொருளைக் கேடுக்குஞ் செடிகள்

இவ்வகைச் செடிகளில் முக்கியமானது 'பூஞ்சக்காளான்' *(Mould)*. மழைநாளில் ரொட்டி, தின் பண்டம், பழம், புத்தகம், செருப்பு முதலியவற்றின் மீது மெல்லிய நூல் பரந்திருப்பதை யாவரும் பார்த்திருக்கலாம். அதுவே 'பூஞ்சக்காளான்' என்னும் செடி. அதனுடல் மிகவும் மெல்லிய நூல் போன்று வெண்மையாயும் அங்கவேறு பாடின்றியும் காணப்படும். உயிருள்ள செடியானபடியால் அதற்கு உணவு வேண்டும். ரொட்டி, பழம் முதலியவற்றிலடங்கியிருக்கும் உணவுப்பொருள்களை மாற்றித் தனக்கு வேண்டியதை யெடுத்துக் கொள்ளும். திறந்துவைக்கப்பட்ட ரொட்டி முதலியன ருகி கெட்டுப்போவது பூஞ்சக்காளானாலேயே. அச்செடி மேன்மேல் வளர உணவுப்பொருள் இருந்தவிடந் தெரியாமல் மறைந்துபோம். பூஞ்சக்காளானைப் போன்ற செடிகள் இல்லாவிடில் உணவுப்பொருள்களை வெகுநாள் கெடாமல் வைத்திருக்கலாம். தின்பண்டங்களைப் பூஞ்சக்காளான் எவ்வாறு அடையக் கூடுமெனச் சிலர் கேட்கலாம். பூதக்கண்ணாடியால் நூல் தொகுதியைக் கவனித்துப் பார்த்தால், சில கிளை நூல்கள் நிமிர்ந்து வளர்வது தெரியவரும். இந்நூல்களின் முனைகள்




பூஞ்சக்காளான்.

கொண்டை அல்லது பைபோன்று உப்பியிருக்கின்றன. ஒவ்வொரு கொண்டை (*Sac or Sporangium*) யிலும் அநேகம் சிறிய தூள்கள் தோன்றுகின்றன. இத்தூள்கள் வெளியே சென்று சந்ததியுண்டு பண்ணும் சந்ததித்தூள்களாம் (*Germ-body or Spore*). இவைகள் காற்றுலெடுக்கப்பட்டுத் திறந்து கிடக்கும் தின்பண்டங்களில் படியக் கூடும். பிறகு ஒவ்வொரு தூளினின்றும் நூல் தொகுதியுண்டாகிறது. உணவுப்பொருளைக் கெடுத்து விடுகிறபடியால் பூஞ்சக்காளானைப் போன்ற செடிகள் நமக்குச் சத்துருக்களே.

3. பயிரழிக்கும் செடிகள்


பூஞ்சக்காளானென்பது காளான் என்னும் பெரிய கூட்டத்தைச் சேர்ந்தது. காளான் (*Fungus*) கூட்டத்தைச் சேர்ந்த செடிகளில் பசுமைநிறம் தோன்றுவதேயில்லை. இவற்றிற் சில, பூஞ்சக்காளானைப் போன்று தின்பண்டங்களிலிருந்து உணவையடையலாம். ஆயினும் இக்கூட்டத்தைச் சேர்ந்த பல செடிகள் உயிரோடிருக்கும் பசும் பயிர்களோடு நெருங்கி வளர்கின்றன. தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பசுமை நிறச் செடிகளினின்றும் அபகரிக்கின்றன. ஆகவே இத்தகைய காளான் செடிகளை **'கொள்ளைச் செடிகள்'** (*Parasites*) எனலாம். இவைகளின் வளர்ச்சியால் பயிர்கள் அழிய வேண்டியனவே. வியவசாயிகளின் பயிர்கள் பலவிதக் கொள்ளைச் செடிகளால் தாக்கப்பட்டு மடிகின்றன. நெல், கரும்பு, வெங்காயம், திராக்ஷை முதலியன அழிவதால் வியவசாயிகளுக்கு நஷ்டமேற்படுகிறது. பிரான்சு (*France*) தேசத்தில் திராக்ஷைச்செடி, நோயால் வருந்துவதால் சில வருஷங்களில் முக்காற்பாகம் நஷ்டமாகிறது. ஒருசமயம் நியூயார்க்கில் (*New York*) உருளைக்கிழங்கு சாகுபடியில் ஒருகோடி டாலர்கள் நஷ்டமேற்பட்டதாம். அமெரிக்காவில் இரண்டு மாகாணங்களில் கோதுமை சாகுபடியில் இரண்டு கோடி டாலர்கள் நஷ்டமாம். காடுகளில் வளரும் விலையுயர்ந்த மரங்கள் காளான் கூட்டத்தினிடைஞ்சலால் அநேக மாய்க் கெட்டுப் போகின்றன வென்று யாதாஸ்திலிருந்து அறியலாம்.




மரத்தின்மேல் காளான்.

கொள்ளைச் செடிகளினுடலும் நூல் தொகுதிபோன்றிருக்கும். சில இடங்களில் நூல்கள் அடர்ந்து நாய்க்குடையிற்காணப்படுவது

போல் நெட்டியாகத் தோன்றலாம். காளான்களின் நூல் தொகுதியைப் பயிர்களின் பல அங்கங்களிலும் பார்க்கலாம். இலைகளிலும், தண்டிலும், பூக்களிலும் நூல் பரவலாம். அங்குமிங்கும் சில இழை நூல்கள் பயிர்களினுள்ளே நுழைந்து சதைப்பாகத்தில் அதிகமாய்ப் பரவலாம். பக்கத்திலுள்ள ஜீவாதார வஸ்துவடங்கிய அறைகளை யொட்டி நூல்கள் வளர்வதால் அவைகளிலுள்ள உணவுப் பொருள்களை எளிதிலடையக் கூடும். கொள்ளைச் செடி பசும்பயிர்களில் பரவுவதால், பயிர்கள் வலிகுன்றி, வளர்ச்சியில்லாமல், வியாதியடைந்தன போல் விளங்குகின்றன. இலைகள் சுருங்கியும், குருத்து வாடியும், தண்டு தவண்டும், பசுமை நிறமாறியும் பயிர்கள் காணப்படலாம். மேலும் விகாரமான புள்ளிகளும், திட்டுகளும் (*Patches*) பல விடங்களில் தோன்றுகின்றன. இவைகள் வியாதியின் குறிகளாவன. ஏதேனுமொரு செடி வியாதியடைந்ததாகக் காணப்படின் அதைப் பிடுங்கி அடக்கம் செய்ய வேண்டும்.



நூல்கள் உள்ளே பரவுதல்.



கட்டையினுள்ளே நூல் பரவுதல்.

இல்லாவிடில் சீக்கிரத்தில் பயிரிலுள்ள பலசெடிகள் வியாதியடைந்து அழியவேண்டி வரும். ஒரு செடியினின்றும் வேறொரு செடிக்கு வியாதி எவ்விதம் பரவக்கூடுமெனச் சிலர் நினைக்கலாம். வியாதியடைந்த செடியின் இலைகளிலும் தண்டிலும் காணப்படும் புள்ளி அல்லது திட்டைச் சுரண்டி அப்பாகத்தைப் பூதக்கண்ணாடியில் பார்ப்போம். நூல்களிலிருந்தும் சந்ததித்தூள்கள் வெளிவருவதைக் காணலாம். இத்தூள்கள் காற்றால் வேறு செடிகளினிடம் சேர்க்கப்படுகின்றன. இலைகளிலோ தண்டிலோ சிறிய புண்ணிருப்பின் சந்ததித் தூள் அதில் தங்கி உள்ளே நுழைந்து செல்லக்கூடிய நூலையுண்டு பண்ணும்.

கொள்ளைச் செடிகள் விளைவிக்கும் நஷ்டத்திற்கு அளவேயில்லை. சில பயிர்கள் நாற்றாயிருக்கும்போது தாக்கப்பட்டு கீழே சாய்ந்து

விடுகின்றன. உருளைக் கிழங்குச் செடியில் இலைகளும் கிழங்குகளும் கெட்டுப் போகின்றன. அமெரிக்காவில் 'துரு' (*Rust*) என்னும் வியாதியால் கோதுமைப் பயிருக்கு நஷ்டம் பலதடவைகளில் ஏற்பட்டது. துருவிற்குக் காரணமான கொள்ளைச் செடியின் வாழ்க்கையைப் பற்றி ஆராய்ச்சிசெய்து வியாதியைத் தடுக்கும் வழியைக் கண்டுபிடித்துள்ளார்கள். துருவையுண்டுபண்ணும் கொள்ளைச் செடி முதலில் கோதுமைச் செடியில் பரந்து வளர்கிறது. இச்செடி நீடித்துத் தங்கவேண்டுமானால் பார்பரி (*Barberry*) யெனப்படும் செடியின் இலைகளில் சிலகாலம் வசித்தல் அவசியமாகிறது. பார்பரியென்னும் செடியில்லாவிடில் துருக்காளான் வாழ்க்கையைப் பூர்த்தி செய்யமுடியாது. ஆகவே பார்பரிச்செடியை யொழிக்கும்முறையைத் தேடிவருகிறார்கள். எங்கேபார்த்தாலும் 'பார்பரியையழியுங்கள்' எனத் தேசவாசிகளுக்கு எடுத்துக் காட்டுகிறார்கள். எங்கே பார்ப்பினும் யாரும் பார்பரிச் செடியைப் பிடுங்குவதற்கான அதிகாரத்தைச் சட்டமூலமாய் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.




இளஞ்செடி சாய்தல்.

வியாதிகளைத் தடுப்பதற்குச் சில உபாயங்களுண்டு. ஆரம்பத்திலேயே துருசுகலந்த நீரைப் பீச்சாங்குழாயால் பயிர்மேல் பீச்சினால் திராக்ஷைபோன்ற செடிகளைத் தப்பிக்கச் செய்யலாம். ஒவ்வொரு பயிர்வகையிலும் பல தினுசுகளிருப்பதை (*Strain*) யாவருமறிந்திருப்பார்கள். நெல்லிலும் பருத்தியிலும் கரும்பிலும் மற்றைப் பயிர்களிலும் பல தினுசுகளுள்ளன. சில தினுசுகள் வியாதியால் எளிதில் பீடிக்கப்படுவதில்லை. இத்தகைய தினுசுகளையே விதைக்காக உபயோகித்தால் நஷ்டமேற்படாதென்று தெரிவித்துவருகிறார்கள். மேலும் வியாதியால் வருந்தாத தினுசை உண்டாக்கக் கூடுமாவென்று ஆராய்ச்சிக்கலாசாலைகளில் கவனித்து வருகிறார்கள்.

பூக்களையுடைய உயர்தரச் செடிகளிலும் சில, கொள்ளைச் செடிகளாக வாழ்நாளைக் கழிக்கின்றன. காடுகளிலும் சாலைகளிலும் உள்ள மரங்களின் இலைகளில் புல்லுருவியும் அதைப் போன்ற



கஸ்கூடா.



கஸ்கூடா உணவெடுத்தல்.

செடிகள் சிலவும் கொத்துக் கொத்தாய்வளர்வதைப் பார்த்திருக்கலாம். இச்செடிகளின் கீழ்ப்பாகம் மரத்தின் கிளைகளினுள்ளே நுழைந்து ஜலம் உப்பு முதலிய பொருள்களை எடுத்துக் கொள்ளும். கஸ்கூடா (*Cuscuta or Dodder*) என்னும் செடி மழைபெய்தவுடன் செடிகளின்மேல் கொடியாய்ப் படரும். இதன் தண்டு மஞ்சளாயிருக்கும்; இலைகளில்லையென்றே சொல்லலாம். எந்தச் செடியைச் சுற்றிக் கொண்டிருக்கிறதோ அதினின்றும் காளானைப் போலவே எல்லா உணவுப் பொருள்களையும் இஃது அபகரித்துக் கொள்கிறது.


4. பாக்டீரியாக்கள் (*Bacteria*)

இவைகள் மிகவும் நுட்பமான செடிகள். பூதக்கண்ணுடியால் பார்த்தாலும் கண்ணுக்குப் புலப்படுவது கஷ்டம். நிலத்திலும், நீரிலும், ஆகாயத்திலும் எங்கும் இவையிருக்கின்றன. பாக்டீரியாக்களில் பசுமை நிறந்தோன்றுவதில்லை. சில பாக்டீரியாக்கள் பூஞ்சக்காளானைப் போன்று தின்பண்டங்கள் செத்த மிருகங்கள் முதலியவற்றையடைந்து அவற்றை மாற்றி உணவை அடைகின்றன. பல பாக்டீரியாக்கள் உயிர்ப் பிராணிகளின் உடலில் வாழ்கின்றன. நம்முடலில் பல பாக்டீரியாக்கள் தண்ணீருடனும் உணவுடனும் செல்லக்கூடும். நம் தேகத்திலும் சதையினைத்தாக்கி உணவையடைகின்றன. அப்போது விஷசம்பந்தமான பொருள்களுண்டாவதால் மனிதனுக்கு வியாதியுண்டாகிறது. வெகு சீக்கிரத்தில் பாக்டீரியா லக்ஷக்கணக்காய் அதிகரிக்கலாம். வாந்திபேதி, பிளேக், பித்தவாதசுரம் ஆகிய பலவியாதிகளால் மனிதன் வருந்துகின்றான். வியாதிக்காரனுடைய மலம், கோழை முதலியவற்றின் மூலமாய்ப் பாக்டீரியா வெளியே வருகின்றது. மற்றவரும் எளிதில் வியாதியால் பீடிக்கப்படுகிறார்கள்.


பாக்டீரியாவாலுண்டாகும் வியாதிகள் தொத்து வியாதிகள். வருஷந்தோறும் நம் நாட்டில் இந்நோய்களால் ஜனங்கள் ஆயிரக்கணக்காய் மடிகிறார்கள். பாக்டீரியாக்கள் நம்மை எல்லாப் பக்கங்களினின்றும் தாக்குகின்றன. இவைகளினின்றும் தப்புவது கடினமே. ஆயினும் தப்பிக்க வழியுண்டு. சூரிய வெளிச்சமும், காற்றோட்டமும் பாக்டீரியாவைக் கொல்லக்கூடும். சுகாதார முறையைக் கைக்கொண்டு ஒவ்வொருவரும் தம் வீட்டைச் சுத்தமாய் வைத்திருப்பதோடு பொது விடங்களும் சுத்தமாயிருக்குமாறு பிறரைத் தூண்டுவாரானால் கொடிய நோய்களை அறவே யொழித்துவிடலாம். அம்மை குத்துதல் (*Vaccination*), இஞ்சக்ஷன் (*Inoculation*) முதலிய சிகிச்சைகள் அபாயத்தைத் தற்சமயம் நீக்கும் வழிகளாகும். தெருக்களும், ஆறுகளும், குளங்களும் சுத்தமாய்ப் பாதுகாக்கப் படின் கொடியநோய்கள் ஒழிந்துபோம்.

5. பூச்சியைக் கொல்லும் செடிகள் (*Insectivorous plants*)

பசுமைநிறத்தோடு கூடிய செடிகள் ஜலம், உப்புகள், கரியமல வாயு முதலியவற்றைக்கொண்டு தமக்குவேண்டிய உணவை உண்டாக்கிக்கொள்கின்றன. இவைகள் வேறு செடிகளையோ பிராணிகளையோ உணவுக்காக நாடுகிறதில்லை. ஆயினும் சில செடிகள் பூச்சிகளைக் கொன்று அவைகளினின்றும் கனப்பொருள்களை (*Proteids*) அடைவதாகத் தெரிகிறது. இச்செடிகளில் பூச்சிகளைக் கவரவும், பிடிக்கவும், கொல்லவும் பல உபாயங்களிருக்கின்றன. டிராஸிரா (*Drosera or Sundew*) என்கிற செடியை நம் மூரில் பார்க்கலாம். இதன் இலைகள் அகப்பைபோன்றிருக்கின்றன. கொத்தாய் அடுக்கப்பட்டிருக்கும் இலைகளின் பத்திரங்களில் அநேகம் கொண்டையோடு கூடிய சிலும்புகளைப் பார்க்கலாம். கொண்டையிலிருந்தும் ரசம் சுரப்பதுண்டு. சிறிய பூச்சியொன்று இலையில் சிலும்பினிடம் தங்கினால் பக்கத்துச் சிலும்புகள் பூச்சியைக் கவிந்துகொண்டு ரசத்தைச் சுரக்கின்றன. பூச்சியிறக்கவும் அதிலுள்ள உணவை இலையெடுத்துக் கொள்ளுகிறது. அமெரிக்காவிலும் வேறு சில இடங்களிலும் 'ஜாடிச்செடிகள்' (*Pitcher plants*) என வழங்கப்படும்



டிராஸிரா.



நெபந்திஸ்.

விநோதமான செடிகளிருக்கின்றன. நெபந்திஸ் (*Nepenthes*) என்னும் செடியில், இலையின் நடுநரம்பு மிகவும் நீண்டு முனையில் ஒரு ஜாடியைத் தாங்குகிறது. ஜாடியின் விளிம்பு வழவழப்பாயிருக்கும். ஜாடியினுள்ளே ரசமிருக்கிறது. சிறிய பூச்சி ஜாடியின் நிறத்தால் கவரப்பட்டு விளிம்பையடைகிறது. நழுவி ஜாடியினுள்ளே ரசத்தில் விழுந்துவிடவே பூச்சி மடியும். அதிலுள்ள உணவுப்பொருளைச் செடி உபயோகிக்கும்.

மேலே கூறப்பட்ட பலவகைச் செடிகளும் மனிதனுக்குப் பல வகைகளில் துன்பத்தைச் செய்து நஷ்டத்தை விளைவிக்கக் கூடிய வை. பெரிய யுத்தத்திலும் இவ்வளவு துன்பமும் உயிர் நஷ்டமும் ஏற்படுமென்று நினைப்பதற்கில்லை. இவற்றால் செடிகள் சாமானிய மானவையல்ல வென்று நாம் கண்டுகொள்ளலாம்.

பிராணிகளுள் கூட்டுவாழ்க்கை

(Association of Animals)

எம். ஏகாம்பரநாத ஐயர்

ஐச்வர்யவான்களான சில மைனர்களை ஆச்ரயித்து முக ஸ்துதியினல் அவர்களுடைய ப்ரீதியை ஸம்பாதித்துச் சுகஜீவனம் செய்துவரும் சிலரை மனிதர்களுள் காணலாம். இவ்வித ஒட்டுணி களுக்கு அகவிலை, வாழ்க்கையின் சிரமம் முதலானவற்றை அறிய வேண்டுவது அநாவசியமல்லவா? ஆச்ரயிக்கும் பிராணிகள் தன்வான் களாகவிருக்கும்வரையில் இவ்வொட்டுணிகளுக்கு ஒரு குறைவு மில்லை. வாழ்க்கையில் இவர்களுடைய வெற்றிக்கு வேண்டிய முக்கிய குணங்கள், தனவான்களைக் கெட்டியாகக் கைப்பற்றிக் கொள்ளும் சக்தியும், அவர்களிடமிருந்து தனத்தை அபகரிக்கும் திறமுமேயாகும்.


மனிதவர்க்கத்துள் உள்ளதுபோல், தாழ்ந்த பிராணிகளுள் ளும் இவ்வித ஒட்டுணிகள் இருக்கின்றன. இவற்றைத் தொத்துப் பிராணிகள் (*Parasites*) என்று கூறலாம். இவைகளால் ஆச்ரயிக்கப் பட்ட பிராணிகளைப் போஷகர்கள் (*Hosts*) என்று சொல்வோம். இவ்விதத் தொத்துப் பிராணிகளுள் பேன் ஒன்றாகும். இப்பிராணி யை அறியாதவர் மிகச் சிலரேயாவர். இதன் போஷகர் மனிதரே யாவர். இதன் வாசஸ்தலம், அழுக்கடைந்த உரோமங்களையுடைய தலையேயாகும். சீலைப்பேன் என்று சொல்லும் ஒரு விதமான பேன் மனிதனுடைய தேகத்திலும் வசிக்கும். இப்பேனு டைய ஆகாரம் மனிதனுடைய இரத்தம். இதன் தேகம் தட்டையாகவும் நிறம் கருமையாகவும் இருப் பதால் மயிருடன் தலையில் ஒட்டி யிருக்கும்போது இதைக் கண்டுபிடிப்பதற்குச் சூக்ஷ்மமான திருஷ்டி வேண்டும். நன்றாக உரோமத்தைப் பற்றிக்கொண்டு கீழே உதிர்ந்துவிடாமல் இருப்பதற்கு இதன் கால் கள் கொக்கிகளைப் போல் அமைந்திருக்கின்றன. பேன் எடுக்கும்போது கூரிய நகங்களால் மயிர்க்கால்களிலிருந்து அவற்றை இழுத்துள்ளோர்க்குப் பேன்களுடைய பற்றுதலின் சக்தி தெரியும். பேனுடைய வாயானது தோலைக் குத்தி இரத்தத்தை



பேன்.

உரிஞ்சுவதற்கு ஏற்றபடி குழல்போல் இருக்கிறது. ஒருவர் தலையிலிருந்து மற்றொருவர் தலைக்குப் பரவுவதற்கேற்றபடி பேனுடைய கால்கள் அமைந்திருக்கின்றன. பேன்களின் முட்டைகளையே ஈர்கள் என்று சொல்கிறோம். இம்முட்டைகளிலிருந்து குஞ்சுகள் பொரித்து ஓட்டுப்பேன்களாகின்றன. கரப்பான்பூச்சி தோலுரிந்து வளர்வது போல் இவ்வோட்டுப் பேன்களும் தோலுரிந்து பெரியனவாகின்றன. இவ்விதமாக எறிந்த சட்டைகளைத்தான் 'சாவட்டைப் பேன்கள்' என்று கூறுகிறோம். பேன்கள் வேர்வையிலிருந்து உண்டாகின்றன வென்பது தப்பெண்ணம். பேன்களுள் ஆண் பெண் என்று இரண்டு ஜாதிகள் இருக்கின்றன. பெண் பேன்கள் முட்டைகளிட்டு, அவற்றை உரோமங்களில் ஒருவகைப் பசையினால் ஒட்டுகின்றன. அம்முட்டைகளிலிருந்து குஞ்சுகள் பொரித்து மூன்று முறைகள் தோலுரித்து, எட்டு அல்லது ஒன்பது நாட்களில் முழுவளர்ச்சியை அடைகின்றன. சாதாரணமாகப் பேன்கள் ஆறு வாரங்கள் ஜீவிப்பதாகக் கூறுகின்றனர்.

பேன்கள் மனிதர்களுடைய இரத்தத்தை உரிஞ்சுவதனால் இவற்றின் கூட்டுவாழ்க்கை அல்லது ஸகவாஸம் மனிதர்களுக்குக் கெடுதலேயாகும். குழந்தைகளைப் பார்த்து, 'சாப்பிடும் சோறெல்லாம் ஈருக்கும் பேனுக்குந்தான்' என்று பெரியோர்கள் சாதாரணமாகச் சொல்வதிலிருந்து இவற்றால் மனிதர்களுக்கு விளையும் தீமை நன்கு தெரிந்தளது.



தெள்ளுப்பூச்சி.

மனிதர்களுடைய தேகத்தின்மேல் உள்ளனபோல், மற்றப் பிராணிகளுடைய தேகத்தின்மேலும் பல தொத்துப்பிராணிகள் வாழ்கின்றன. மாடு, நாய் முதலானவற்றின்மேல் வாழும் உண்ணிப் பூச்சிகளும், எலியின்மேல் வாழும் தெள்ளுப் பூச்சிகளும் இவற்றிற்கு உதாரணமாகும். இம்மாதிரியாகவே நண்டு, மீன், பாம்பு, ஆமை, பக்ஷிகள், நாற்கால் மிருகங்கள் முதலான சகலவிதமான பிராணிகளின்மேலும் வேறு வேறு விதமான தொத்துப் பிராணிகள் வசிக்கின்றன. பேன்களுக்கு இருப்பனபோல் இவ்விதமான தொத்துப் பிராணிகளுக்கெல்லாம், பற்றக் கருவிகள் நன்றாக வளர்ந்தும், ஆகாரத்தைப் போஷகர்களிடமிருந்து உரிஞ்சுவதற்கேற்றபடி வாயமைப் பமைந்தும் இருக்கின்றன.

பிராணிவர்க்கத்திலுள்ளதுபோல், தாவரத்திலும் புல்லுருவி போன்ற தொத்துச் செடிகள் இருக்கின்றன. 'நல்ல மரத்தில் புல்

ஓருவி பாய்ந்ததுபோல்' என்ற பழமொழியிலிருந்து போஷகச் செடிகளுக்கு இவற்றால் உண்டாகும் கெடுதல் நன்கு புலப்படுகிறது.

மேற்கூறிய தொத்துப்பிராணிகள் போஷகர்களின் வெளிப் பாகத்தில் வசிக்கின்றன ; புறப்பாகத்தில் உள்ளனபோல் அநேக தொத்துப்பிராணிகள் தேகத்தினுள்ளேயும் வசிக்கின்றன ; இவற் றிற்கு உதாரணமாகக் கீரைப்புழு (*Round worm*), நாக்குப்பூச்சி (*Thread worm*), நாடாப்புழு (*Tape worm*), கொக்கிப்புழு (*Hook-worm*) முதலானவற்றைக் கூறலாம். இவ்விதமாகத் தேகத்தி னுள்ளே வசிக்கும் பிராணிகளை **அகத்தொத்திகள்** (*Endoparasites*) என்றும், புறத்தில் வாழ்வனவற்றைப் **புறத்தொத்திகள்** (*Ectoparasites*) என்றும் கூறலாம்.


மேற்கூறிய அகத்தொத்திகள் மனிதனுடைய குடலில் வசிக்கின் றன. இவற்றிற்குக் கால்களோ, கண்களோ இல்லை. ஆகாரம் கிடைக்கும் இடத்தைத் தேடிச் செல்லவும், பகைவர்களிடமிருந்து தப்பித்துச் செல்லவும் அல்லவா கால்கள் பிராணிகளுக்கு முக்கிய மாக உதவுகின்றன? இப்படியே, ஆகாரமுள்ள இடத்தைக் கண்டுபிடிக்கவும் பகைவர்களைத் தெரிவிக்கவும் கண்கள் உபயோக மாகின்றன. நன்கு ஜீர்ணிக்கப்பட்ட ஆகாரத்தின் மத்தியிலேயே வசிக்கும் இப்புழுக்களுக்கு, ஆகாரத்தைத் தேடிச் செல்லவேண்டிய அவசியமெங்கே? பகைவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்கிற பயமுமில்லை. 'ஒரு போஷகனிடமிருந்து மற்றொரு போஷகனிடம் செல்லுவதற்குக் கால்களும் கண்களும் அவசிய மில்லையா?' என்று கேட்கக்கூடும். ஆனால் இவ் வகைத்தொத்திகள் வேறு விதங்களில் பரவுகின்றன. நாக்குப்பூச்சி, போஷகர்களுடைய குடலில் முட்டைகளை யிடுகிறது. இம் முட்டைகள் மலத்துடன் சேர்ந்து வெளியே வருகின்றன. இம் முட்டைகள் கலந்துள்ள நீரை யோ, ஆகாரத்தையோ மனிதன் உட்கொண்டால், இவைகள் அவ னுடைய தேகத்தினுள்ளே செல்லும் ; இம் முட்டைகளினின்று புழுக்கள் விருத்தியடைகின்றன. நாடாப்புழு, கொக்கிப்புழு முத லானவைகளுடைய முட்டைகளும் மலத்துடன் வெளியே வரும் ; ஆனால், இம் முட்டைகளிலிருந்து வெளியே வரும் சிறிய புழுக்கள் வேறு விதங்களில் மற்றொரு போஷகனை யடைகின்றன.

மேற்கூறிய கூட்டுவாழ்க்கையில், ஒரு பிராணிக்குமட்டும் நன்மையுண்டாகிறது ; மற்றொரு பிராணிக்குத் தீமையே விளைகிறது. போஷகனுடைய சத்தை உரிஞ்சியே அதிதி வளர்கிறது. ஆனால், சில விதமான கூட்டுவாழ்க்கைகளில் இரு ஜந்துக்களுக்கும் பரஸ்பரமாகப் பிரயோசன முண்டாகிறது. படத்தில் காட்டியுள்ள இரண்டு பிராணிகள் இவ்விதமான வாழ்க்கையை அனுசரிப்பனவாகும்.

படத்தில் காட்டியிருக்கும் **கடல் அனிமோனி** (*Sea-anemone*) என்கிற பிராணி சமுத்திரத்தில் வாழ்கிறது. இடம் விட்டு இடம் நகர்ந்து செல்ல இதனுல் முடியாது. இதன் தேகம் மிருதுவாகவிருக்கும்; பரிமாணத்தில் ஒன்று அல்லது இரண்டு அங்குல நீளமுள்ளதாக இருக்கும்; இதன் அடிப்பாகம் கற்பாறையில் ஒட்டிக்கொண்டிருக்கும்; மேற்பாகத்தின் மத்தியில் வாய் இருக்கிறது; வாயைப் படத்தில் துவாரமாகக் காணலாம்; மேற்பக்கத்தைச் சுற்றிலும் அநேக ஸ்பர்சக்கொம்புகள் (*Tentacles*) இருக்கின்றன; இவைகளைச்சுருக்கவும், நீட்டவும் முடியும்; இவற்றை அசைத்து, சிறு ஜந்துக்கள் ஜலத்துடன் அருகே வந்தால், அவற்றை உட்கொள்ளும். இந்த ஜந்துவுக்குச் சில விஷக்கருவிகள் இருக்கின்றன; அவற்றினுல் சிறு பிராணிகளைக் கொட்டி விஷத்தை அவைகளுள் செலுத்தும். ஒரே இடத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதால், ஆகாரம் இதனிடம் வரும்போதுதானல்லவா, இதனுல் பிடிக்கமுடியும்? இடம் விட்டு இடம் போகாமையால் இதற்குக் கண்கள் காதுகள் முதலான இந்திரியங்கள் இல்லை.




கடலீ அனிமோனீ.



ஸனியாசி நண்டு.

படத்தில் மேற்பாகமாக இரும்பு போன்ற ஒரு பிராணி காட்டப்பட்டிருக்கிறது; இது ஸமுத்ரத்தில் வசிக்கிறது. இதற்கு **ஸன்யாசி நண்டு** (*Hermit-crab*) என்று பெயர்; சாதாரண நண்டு, இரும்பு முதலிய பிராணிகளைப்போலிராமல், இதன் உடலின் பின்பாகம் மிருதுவாக இருக்கும்; இப்படி மிருதுவாக இருப்பதனுல் இதற்குச் சுலபமாகத் தீங்கு நேரிடக்கூடும். ஆகையால் ஓர் இரகசியம்

அவசியமாகிறது. இவ்விஷயத்தில் இப்பிராணி ஒரு விசித்ரமான முறையை அனுசரிக்கிறது: நத்தையினத்தைச் சேர்ந்த அநேகக் கிளிஞ்சற் பிராணிகள் சமுத்திரத்தில் வசிக்கின்றன. அம்மாதிரியான பிராணிகளுடைய கிளிஞ்சல்களில் ஒன்றை இது தன் தேகத்திற்கு ஒரு கவசமாக்கிக்கொள்கிறது. ஸன்யாசி நண்டின் உடற்பாகம் பின்புறமாக வளைந்து இருக்கும்; கடைசியில் சில கொக்கிகள் போன்ற கால்கள் இருக்கின்றன. கொக்கி போன்ற கால்களால் இந்தப் பிராணி, கிளிஞ்சலின் மத்தியிலுள்ள இம் மத்தியஸ்தம்பத்தைப் பற்றிக்கொண்டு அதைத் தன்னுடன் போகுமிடமெல்லாம் தூக்கிச்செல்லும். படத்தில் கீழ்ப்பாகத்தில் ஒரு ஸன்யாசி நண்டு கிளிஞ்சலுடன் காட்டப்பட்டிருக்கிறது.



ஸன்யாசி நண்டும், கடல் அனிமொனீயும்.

இடம் விட்டு இடம் செல்லக்கூடிய மேற்கூறிய ஸன்யாசி நண்டும், நடமாட்டமில்லாத கடல் அனிமொனீயும் ஒன்று சேர்ந்து ஸகவாசம் செய்கின்றன. ஓரிடத்திலேயே இருத்தலைக்காட்டிலும், ஆங்காங்குக் கொண்டுபோகப்பட்டால் கடல் அனிமொனீக்கு ஆகாரம் கிடைப்பதற்கு இடம் அதிகமுண்டல்லவா? ஸன்யாசிநண்டுக்கும் விஷக்கருவிகளையுடைய கடல் அனிமொனீயைத் தன்னுடன் வைத்துக்கொண்டிருந்தால், இரக்ஷகத்திற்கு இடமாகுமல்லவா? ஸன்யாசிநண்டு வசிக்கும் கிளிஞ்சலின்மேல் கடல் அனிமொனீ ஒட்டிக்கொண்டு, இரண்டும் சேர்ந்து வசிக்கின்றன. நடக்கக்கூடிய ஸன்யாசிநண்டு, நடமாட்டமில்லாத கடல் அனிமொனீயைத் தூக்கிக் கொண்டு செல்லுகிறது. ஸன்யாசிநண்டுக்குக் கடல் அனிமொனீயின் விஷக்கருவிகளால் இரக்ஷகமும், கடல் அனிமொனீக்கு இடம் விட்டு இடம் கொண்டுபோகப்படுவதால் அதிக ஆகாரமும் கிடைக்கின்றன. இக்கூட்டுவாழ்க்கையில் இருபிராணிகளும் பிரயோஜனத்தை யடைகின்றன; இவ்வித வாழ்க்கையை ஆகாரமித்ரபாவம் (*Commensalism*) என்று உயிர்நூலோர் கூறுகிறார்கள். ஸன்யாசி நண்டு, கடல் அனிமொனீயுடன் வாழ்வதுபோல் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த அநேகப் பிராணிகள் இவ்விதக் கூட்டுவாழ்க்கை முறையை அநுசரிக்கின்றன.

சில தாவரங்கள், தாழ்ந்த பிராணிவர்க்கத்தைச் சேர்ந்த சில வற்றின் தேகத்தினுள்ளேயே வசித்து ஒன்றற்கொன்று ஆகாரம் சேகரிக்கும் விஷயத்தில் பிரயோஜன மடைகின்றன. இவ்வாழ்க்கை யில் அன்யோன்யமும் பரஸ்பர ஆச்ரயமும் ஆகாரமித்ரபாவத்தை விட அதிகமாக இருக்கின்றன. இந்த விதமான கூட்டுவாழ்க்கையை ஸகஜீவத்வம் (*Symbiosis*) என்று உயிர்நூலோர் கூறுகின்றனர். இதைப்பற்றிப் பின்பு விவரிப்போம்.

நம் ஆகாரப்பொருள்களின் குணதிசயங்கள்

டி. என். எஸ். இராகவாச்சாரி

ஒரு குழந்தை பிறந்து இருபது வயது ஆகிற வரையில் அதன் சரீரம் வளர்ந்து வருகிறது. இதுதான் வளர்ச்சிப் பருவம். அதன் பிறகு சரீர வளர்ச்சி நின்று விடுகிறது. சரீரம் வளர்வதற்கு ஏற்ற உணவுப் பொருள்கள் உட்கொள்ளப் படாவிட்டால், சரியான வளர்ச்சியும், சுகாதார நிலையும் ஏற்படா. ஆகவே நாம் சாப்பிடும் ஆகாரம் எவ்விதமானதாக இருத்தல் வேண்டும் என்று ஒவ்வொரு வரும் அறிந்து கொண்டு அந்தக் கிரமப்படி புசித்தல் அவசியம். நாம் வசிப்பதற்கு ஏற்ற வீடு ஒன்று கட்டுவதாக வைத்துக் கொள்வோம். அதற்கு வேண்டிய அம்சங்கள் என்னவென்றால், செங்கல், மரம், ஓடு, சுண்ணாம்பு முதலிய உயிரில்லாத வஸ்துக் களும், கொத்தன், தச்சன், கூலியாட்கள் முதலிய உயிருள்ள பிராணிகளுமல்லவா? அது போல நமது சரீரமான வீட்டைச் செவ்வனே கட்டி முடிக்க அரிசி கோதுமை முதலிய மாவுப்பொருள் களும், உளுந்து, துவரை முதலிய தசை வளரும் சத்துப் பொருள் களும், நெய், எண்ணெய் முதலிய கொழுப்புப் பொருள்களும், உப் பும் வேண்டும். உயிரில்லாத மேற்கூறிய வஸ்துக்களைத் தவிர, ஜீவ சத்துக்களான விட்டமின் (*Vitamins*) என்று ஆங்கில பாஷையில் வழங்கப்படும் சில கண்ணுக்குப் புலப்படாத பதார்த்தங்களும் அவசியம்.

அரிசி முதலிய பதார்த்தங்களைச் செங்கல், மரம், சுண்ணாம்பு என்பவற்றிற்கும், விட்டமின் என்று சொல்லிய பதார்த்தங்களைத் தச்சன் முதலிய சிற்பிகளுக்கும் ஒப்பிடலாம். தச்சன், கொல்லன், கூலியாட்களென்பவர்களுக்கு வேறு வேறு பெயர்களிட்டுக் கூப்பிடு வது போல, விட்டமின் என்று சொல்லப்படும் ஜீவ சத்துக்களுக்கும் ஏ, பீ, ஸீ, டீ, ஈ, (*A, B, C, D, E*) என்ற பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கொத்தன் செங்கல்களால் சுவர் எழுப்புகிறான்; தச்சன் மரங்களைக் கொண்டு வாயிற்கால், ஜன்னல் முதலியவை களைச் செய்கிறான்; கற்றச்சன் அஸ்தி வாரத்துக்கும், தூண் களுக்கும் வேண்டிய கற்களை உளியால் அடித்து நிருமிக் கிறான். அது போலவே, ஏ (*A*) விட்டமின் என்னும் ஜீவசத்து,

நம்முடைய கண்கள், சுவாசாசயம், இரைப்பை, குடல் முதலிய அவயவங்களை வளரச்செய்யும் சக்தி யுடையது. பீ (*B*) என்பது நமது மூளை, ஈரம்புகள், இரத்தாசயத்தின் தசை முதலியவைகளையும், ஸீ (*C*) என்ற சத்து இரத்தத்தையும், டீ (*D*) என்பது பற்களையும் எலும்புகளையும் முறையே வளரச்செய்யும் திறம் வாய்ந்தவை. ஈ (*E*) என்ற ஜீவசத்து பிரஜோற்பத்தி சம்பந்தமான அவயவங்களைத் திடப்படுத்தும் சக்தியுள்ளது. ஆகவே நமது சரீரமாகிய வீட்டைக் கட்டி முடிக்கச் சரியான உணவுப் பொருள்களும் ஜீவ சத்துக்களும் வேண்டிய அளவு இன்றியமையாதவை. சரியாகச் சுடப்பட்ட கற்களும், முதிர்ந்த மரங்களும், தத்தம் தொழில்களைச் சரிவரச் செய்து முடிக்கும் வல்லமை வாய்ந்த தொழிலாளிகளும் இல்லாமல், ஏதேனும் சிலவற்றிற் குறையுண்டானால், கட்டப்படும் வீடு குறைவுபட்டுச் சீக்கிரத்தில் பழுது அடைவதே போல, நாம் உட்கொள்ளும் உணவில் மேற்கூறிய அம்சங்கள் ஏதேனும் குறைவடைந்தால் சரீரத்தின் அவயவங்களும் மேற்கூறிய குறைவுக் கேற்றவாறு வலிகுறைந்து பிணியின் வாய்ப்படும். ஓர் அவயவம் குறைவடைந்தால், மற்ற அவயவங்களும் சீக்கிரத்தில் பலஹீனப்பட்டு, சரீரம் சவுக்கியம் குறைந்து பிராணபாயமான நோய்க்கு இரையாகும்.

ஆகவே இந்தப் பத்திரிகையைப் படிக்கும் சகோதர சகோதரிகளுக்கு ஆகார விஷயத்தில் விசேஷ அறிவு புகட்டுமாறு ஒவ்வொரு சஞ்சிகையிலும் சில முக்கியமான விஷயங்களைப்பற்றி எழுத முயல்கிறேன். நமது உணவுப்பொருள்களின் சாராம்சங்களையும் தேக வளர்ச்சிக்கேற்ற குணகுணங்களையும் பற்றி இடையிடையே குறிப்பிடுவேன்.

ப்ரோடீன்ஸ் (*Proteins*) என்னும் உணவுப்பொருள் தசையையும், மூளை, பித்த ஈரல், இரத்தாசயம், குண்டிக்காய் முதலிய அவயவங்களையும் வளரச்செய்வதற்கு இன்றியமையாதது. இது முக்கியமாகப் பால், மாமிசம், கோழிமுட்டை, மீன் என்பவைகளிலும், கோதுமை, ஓட்ஸ், வாற்கோதுமை, சோளம், கம்பு, வரகு, பருப்பு வகைகள், அரிசி, காய் கறிகள், பழங்கள் முதலியவைகளிலும் நிரம்பவோ குறைந்தோ இருக்கும்.

உப்புச் சத்துக்கள் (*Mineral Salts*) பற்களையும் எலும்புகளையும் வளரச் செய்யவும், இரத்தத்தைச் சுத்தமாக விருக்கும்படி செய்யவும், இடைவிடாது தேகத்தின் பற்பல பாகங்களுக்கு இரத்தோட்டத்தைச் செய்து வருவதற்கு உதவியாகவும் இருந்து வருகிற பொருள்கள். நாம் உட்கொள்ளும் உணவுப் பொருள்கள் எல்லாவற்றிலும் உப்புச் சத்துகளுண்டு. பழங்களிலும் விசேஷமாக உப்புச் சத்துக்கள் நிரம்பியுள்ளன.

கொழுப்புச் சத்து (*Fats*) உயிர் ஜந்துக்களின் மாமிச பதார்த்தங்களிலும், காய்கறி வகைகளிலும் காணப்படும் வஸ்து. வெண்ணெய், நெய், மீன் எண்ணெய் (*Cod Liver Oil*) என்பவை உயிர் ஜந்துக்களின் மாமிசக் கொழுப்பு வகையைச் சேர்ந்தவை.

மார்வோ (*Marvo*) கோகோஜெம் (*Cocogem*) நல்லெண்ணெய், தேங்கா யெண்ணெய், கடலைக்கொட்டை யெண்ணெய், இலுப்பை யெண்ணெய் என்பவை மரஞ்செடி வர்க்கங்களிலிருந்து கிடைக்கும் கொழுப்புச் சத்துக்கள்.

கார்போ ஹைட்ரேட்ஸ் (*Carbohydrates*): மாவுப் பொருள்களும் சர்க்கரையும் இந்த இனத்தைச் சேர்ந்தவை. கொழுப்புக்களைப் போல இவையும் தேகத்தின் சுக உஷ்ண நிலையைப் பாதுகாக்க அவசியமான பொருள்கள். மாவுப்பொருள்களுக்கு உதாரணம்: அரிசி, கோதுமை, ஓட்ஸ், வாற்கோதுமை, சோளம், கம்பு வரகு, கேழ்வரகு, உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, வள்ளிக் கிழங்கு, டப்பாய் அரிசி (*Tapioca*) முதலியவை. சர்க்கரைப் பொருள்கள் கரும்பு, பீட் ரூட் (*Beet Root*) என்னும் சிவப்புச் சர்க்கரைக் கிழங்கு, பழங்கள் என்பவற்றிலும் வேறு சில செடிகளிலும் விளங்குகின்றன. மேற்கூறிய உணவுப் பதார்த்தங்களுடன் நம் சரீர வளர்ச்சிக்கு ஏராளமான ஜலமும் அவசியம். இது நிற்க; ஏற்கனவே நாம் சொல்லிய ஜீவாதார சத்துக்களான விட்டமின்கள் (*A,B,C,D,E*) அத்தியாவசியமான சிற்பிகள். ஏ, டீ (*A, D*) **ஜீவசத்துக்கள்** வெண்ணெய், நெய், பால், கோழி முட்டையின் மஞ்சள் கரு, மீன் எண்ணெய் என்பவைகளிலும், காரட்ஸ் (மஞ்சள் முள்ளங்கி), தக்காளிப்பழம் (*Tomatoes*), சர்க்கரை வள்ளிக் கிழங்கு, வாழைப்பழம் முதலிய காய்கறிகளிலும் விசேஷமாகவுண்டு.

பீ, ஈ (*B, E*) **ஜீவசத்துக்கள்** அரிசி, கோதுமை முதலிய மாவுப் பொருள்களில் கிடைக்கும்.

ஸீ (*C*) என்ற சத்து பச்சைக் காய்கறிகளில் அதிகம். முட்டைக் கோஸ், மூலைக்கீரை, பசலைக்கீரை முதலியவை உதாரணம்.

ஆகவே சரீரம் சரிவர விருத்தியடைந்து சுகாதார நிலைமை குன்றாமல் இருக்க, இது வரையில் எடுத்துக்காட்டிய உணவுப் பொருள்கள் ஒவ்வொன்றும் வேண்டிய அளவு அமைந்திருக்கும்படி நம்முடைய ஆகாரக் கிரமத்தைத் திட்டம் செய்துவைத்து அதன்படி உட்கொள்ளவேண்டும்.

(தொடரும்)

பண்டைத் தமிழர் காலங்கணித்த வகை

பிரான்சிஸ் கிங்ஸ்பரி

நமது முன்னோர் தமிழகத்தில் எவ்வாறு காலங்களைக் கணித்தனர் என்னும் கேள்விக்கு விடைகாண்பதே இச் சிறு உபந்நியாசத்தின் நோக்கமாம்.

1. நாள்

பூமி தன்னைத்தானே ஒரு முறை சுற்றிமுடியுங் காலம், அஃதாவது பூமி ஒருமுறை அங்கப்பிரதக்ஷிணம் செய்து முடியுங் காலமே ஒரு நாள் ஆகும் என்பர் அறிவுடையோர். இஃது உண்மையேயாயினும் நேரே அனுபவத்திற் கண்ட காரியம் அன்று. பல நியாயங்களைக்கொண்டு அனுமானித்த உண்மையே. ஆயின் நம் கண்ணுக்கண்ட விஷயம், சூரியன் காலையிற் கிழக்கே உதிப்பதும், நாழிகைதோறும் மேல் ஏறுவதும், மத்தியானத்திலே உச்சியில் நிற்பதும், பின் சிறிது சிறிதாய் மேற்கே சாய்வதும், பின் அஸ்தமிப்பதும், அடுத்த நாட்காலையில் மறுபடியும் உதிப்பதுமே. ஆரியர் சூரியோதயம் தொடங்கி அடுத்த சூரியோதயம் வரையும் செல்லும் காலம் ஒருநாள் என்பர். தற்காலத்து ஐரோப்பிய வான சாஸ்திரிகள் சூரியன் உச்சியில் நிற்கும் க்ஷணம் தொடங்கி மறுபடியும் உச்சிக்கு வரும் காலம் ஒருநாள் என்பர். நம் முன்னோராகிய தமிழரோ, இவ் விருவகையிலும் நாளைக் கணியாது ஞாயிறு மேற்கே பட்ட நொடிமுதல் ஞாயிறு மறுபடியும் படும்வரையும் உள்ள பொழுதே ஒருநாள் என்றனர். அஃதாவது சூரியாஸ்தமனம் தொடங்கிச் சூரியாஸ்தமனம் வரையும் உள்ள காலமே ஒருநாள் ஆகும். இஃது எப்படி அறியலாம் எனின், 'இரவும் பகலும்', 'அல்லும் பகலும்', 'கங்குல் பகல்', 'இராப்பகல்' என்கிற சொற்றொடர்களைக் கவனிக்க. பகலும் இரவும், பகலும் அல்லும், பகல் கங்குல், பகல் இரா என்று சொல்ல எளிதில் வராது. அன்றியும்,

> "மாலை யாமம் வைகுறு வென்றூ
> காலை நண்பகல் எற்பா டென்றூ"

என்ற இலக்கணவிளக்கச் சூத்திரத்தையும் பார்க்க. 'இராப்பகல்' எனத் தமிழர் கூற ஆரியரோ 'அஹோராத்ரம்' (அஹஸ் + ராத்ரம்) என்பர். (அஹஸ் = பகல்; ராத்ரம் = இரவு.) இனி, இரவை

மூன்று பொழுதாகவும் பகலை மூன்று பொழுதாகவும் பிரித்தனர் தமிழர். ஆகவே ஒரு நாளைக்குப் பொழுது ஆறும். அவை முற் கூறிய சூத்திரத்திற்கண்டபடி, மாலைப்பொழுது, யாமம், வைகுறு அல்லது வைகறை என இராப்பொழுது மூன்றும், காலைப் பொழுது, நண்பகல், எற்பாடு என்ப் பகற்பொழுது மூன்றுமாக ஆறு பொழுதாகும். ஒவ்வொரு பொழுதுக்கும் நாழிகை பத்து. ஆகவே ஒரு நாளைக்கு நாழிகை அறுபது ஆகும். (தற் காலக் கணக்கின்படி 24 மணி 60 நாழிகை. ஒரு மணிநேரம் $2\frac{1}{2}$ நாழிகை. ஒரு நாழிகை 24 நிமிஷம்.)

2. திங்கள்

திங்கள் என்பது சந்திரனென்பதன் தமிழ். (சந்திரன் என்பது வடமொழி; திங்கள் என்பது தமிழ்மொழி.) ஓர் அமாவாசை கழிந்த கூணம் தொடங்கி அடுத்த அமாவாசை கழியும் வரையும் ஒரு திங்கள் ஆகும். (ஆங்கிலத்திலே *Month* என்ற சொல்லும் *Moon* என்ற சொல்லடியாகப் பிறந்த பதமே.)

"ஐயிரண்டு திங்களா அங்கமெல்லாம் நொந்து பெற்று"

என்ற **பட்டினத்தடிகள்** கூறிய வெண்பாவைக் கவனிக்க. ஒரு திங் களை இரண்டு கூறு ஆக்கி, ஒரு கூற்றை **வளர்பிறை** என்றார்; மறு கூற்றைத் **தேய்பிறை** என்றார். இதனால் தமிழர் மாதம் சாந்திர மாதமே என்பது புலப்படும். ஆயினும் பிற்காலத்துத் தமிழர், சூரியன் ஒரு ராசியிற் பிரவேசித்து மறுராசிக்குப் போகும் காலம் வரையும் ஒரு மாதம் எனக் கணிக்க ஆரம்பித்தனர். ஆகவே சாந்திரமாசம் சௌர மாசம் என இருவகைக் கணிப்பும் பெற் றார் தமிழர்.

3. யாண்டு

பூமி சூரியனை ஒருமுறை பிரதகூணம் பண்ணுங்காலம் ஒரு வருஷமாகும் என்பார் கோள சாஸ்திரிமார். பண்டைத் தமிழரோ மழைகாலந் தொடங்குவது முதல் அடுத்த மழைகாலந் தொடங் கும் வரையும் உள்ள பொழுதே ஓர் யாண்டு என்றனர். யாண்டு என்பது ஆண்டு என மருவிற்று, யானை என்பது ஆனை என மருவி னதுபோல.

"காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனில்" (இலக்கணவிளக்கம்.)

ஓர் யாண்டை ஆறு பெரும் பொழுதாகப் பிரித்தனர் தமிழர்.

1. **கார்ப்பருவம்** : மழைகாலம்; ஆவணியும் புரட்டாசியும்.
2. **கூதிர்ப்பருவம்** : குளிர்காலம்; ஐப்பசியும் கார்த்திகையும்.

ஹீப்ரூ பாஷையில் மிகவும் தொன்மை வாய்ந்தனவாகக் கூறப் படும் புத்தகங்களெல்லாம் கிருஸ்து பிறப்பதற்கு 600 வருடங் களுக்கு முன் எழுதப்பட்டனவாகும். ஜப்பான் தேசத்திலோ இற்றைக்கு 1000 வருடங்களுக்கு மூற்பட்ட காலத்தில் எழுதிய நூல்கள் ஒன்றுமே யில்லையெனக் கூறிவிடலாம். ஆனால், சீனு, கிரீஸ் முதலிய தேசங்களைப் போலவே ஜப்பான் தீவிலும் புத்தகங் கள் எழுத்து வடிவில் தோன்றுவதற்கு நெடுங்காலம் முன்னிருந்தே பொதுப்பாடகர்கள் வாய் மொழியாகவே அறிவைப் பரவச்செய் வதற்குக் காரணர்களாக இருந்து வந்தனர்.

பூர்வ காலத்தில் வட ஆப்பிரிக்காவில் குடியேறி, தமது உழைப் பாலும் சுறுசுறுப்பாலும், உலகப்பிரசித்த யடைந்த **போனீஷியர் கள்** (*Phoenicians*) என்னும் ஜாதியினர், கார்த்தேஸ் என்னும் இடத்தைத் தமது இராஜ்யத்தின் தலைநகராக அமைத்துக்கொண்டு வாணிகத்துறையிலும் நாகரிகச் சிறப்பிலும் மேம்பட்டவர்களாய் விளங்கினர்கள். அவர்களே கிரேக்க நாட்டினருக்கு முதன் முத லாக அக்ஷரங்களைக் கற்பித்தவர்களென்று பெருமை பாராட்டு தற்குரியவராம். அதன் பிறகு, புத்தகம் அமைக்கும் தொழிலைக் கிரேக்கர்கள், எகிப்தியர்களிடமிருந்து அறிந்து கொண்டனர். கிரேக்க பாஷையின் நெடுங்கணக்கு (*Alphabet*) கிருஸ்து ஜனிப்ப தற்கு எட்டு நூற்றாண்டுகளுக்கு முன் ஏற்பட்டதாகும். கிரேக்க இலக்கியங்களை ஆராய்ச்சி செய்திருக்கும் **ஜேவான்** (*Jevon*) என் னும் அறிஞர், அந்நாட்டினர் கி. மு. ஐந்தாவது நூற்றாண்டிலேயே ஓதுவதற்கும் எழுதுவதற்கும் நன்கறிந்திருந்ததாகக் கூறுகிறார். அதுகாலை சியாஸ் (*Chios*) என்னும் தீவில் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டுவதற்காகப் பாடசாலைகளும் இருந்தனவாம். கல்வி யறிவில் லாதவர் கசடரெனக் கருதி ஒதுக்கப்பட்டனர். ஆனால், அக் காலத்தில் மக்களுக்குப் போதிக்கப்பட்ட கல்வி முறையானது, அவர் கள் தமது கணக்குக்களைக் குறித்து வைக்கவும், தமது நண்பர் களுக்கும் உறவினர்களுக்கும் கடிதங்கள் வரையவும் மட்டில் பயனளிக்கக் கூடியதாக இருந்ததே யன்றி, அதுபோன்ற பழைய நாட்களிலேயே கிரேக்கர்கள் புத்தகங்களை ஏராளமாகப் படிக்கும் வழக்கம் பெற்றிருந்தார்களில்லையென்று அவ் வாசிரியர் உரைக்கிறார். புத்தக உருவத்திலும் எழுத்து வடிவிலும் நூல்கள் பெருகிப் பரவுவதற்கு நெடுங்கால முன்பிருந்தே கிரேக்கப் பாடகர் கள், நமது தமிழ் நாட்டுப் பாணர்களைப்போல நாடு முழுவதும் யாத்திரை செய்தவாறே அந் நாட்டுக் காவியங்களைப் பாடி ஜனங் களை மகிழ்வித்து வந்தனர்.

அவர்களை ராப்ஸோடிஸ்ட்ஸ் (*Rhapsodists*) எனப் பெயரிட்டு மக்கள் அழைத்து வந்தனர். தற்காலத்தில் நாடகக் கூட்டத்தார் ஊரூராய்ப் பிரயாணம் செய்வதைப் போல, கிரேக்கப் பாணர்களும் நாடுமுழுவதும் சுற்றியலைந்து அத்தேசத்து ஹோமர் கவியைப் போன்ற புலவர் பெருமக்கள் இயற்றிய அருங் காவியங்களை, வெட்ட வெளிகளிற் பாடி மக்களுக்கின்ப மூட்டி அதனால் தமக்குக் கிடைக்கும் வருமானத்தினின்றும் ஜீவனத்தை நடத்தி வந்தனர்.

அலெக்ஜாந்திரியா நூல் நிலயம்

கலியுணர்விலும் கவிதைச் சுவை நலத்திலும் மிக்க சிறப்புடன் திகழ்ந்த ஏதென்ஸ் நகரத்தின் கீர்த்தியும் பெருமையும் நாளடைவில் அலெக்ஜாந்திரியா நகரம் அடைந்தது. அத்தேசத்தில் டாலமி (*Ptolemy*) என்னும் வமிசத்தைச் சேர்ந்த பெரியார்கள் புத்தகங்களையும் காவிய நூல்களையும் சேகரித்து வைப்பதில் மிகவும் சிரத்தையுள்ளவர்களா யிருந்தனர். அதுகாலை கிரேக்க பாஷையில் வெளியான காவியங்கள், இலக்கியங்கள், உலக நூல்கள் என்பவைகளை ஒன்று தவறுமல் சேமித்து வைக்கவேண்டுமென்ற விஷயமாக அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசையும், கொண்ட ஆவலும் கட்டுக்கடங்காதனவாக இருந்தன. அலெக்ஜாந்திரியாவில் பண்டை நாட்களிலேயே பிரம்மாண்டமானதோர் புத்தகாலயம் நிறுவப் பட்டிருந்தது. பிரஸித்தி பெற்ற அப்புத்தகாலயத்தில் ஏழுலக்ஷத்திற் கதிகமான கிரேக்க நூல்கள் அடங்கியிருந்தனவாம். பிரம்மாண்டமான இப்புத்தகசாலையின் ஒரு பகுதியை கி. மு. 48-ஆம் ஆண்டில் ஜூலியஸ் ஸீஸர் என்ற மன்னன் தீக்கிரையாக்கியதாகக் கூறப்படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றைய தினம் ப்ரிட்டிஷ் மியூஸியத்தில் 40 லக்ஷம் புத்தகங்களை இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. அலெக்ஜாந்திரிய நூல் நிலயத்தின் அலமாரிகளில் ஹோமர் கவியின் 'இலியட்' 'ஒடிஸ்ஸி' என்ற உலகப் பிரசித்தி பெற்ற காவியங்களும், ப்ளேடோ என்பவரால் எழுதப்பட்ட 'குடியரசு' (*Republic*) என்னும் உயர்ந்த அரசியல் நூலும், கூனைபன், ஹேரோடோடஸ், (*Herodotus*) முதலிய அறிவாளிகளின் கிரந்தங்களும், யூரிபிடீஸ் (*Euripides*), ஸோபோக்ளீஸ் (*Sophocles*) என்பவர்களைப் போன்ற கீர்த்திவாய்ந்த நாடகாசிரியர்களின் நாடக நூல்களும், யூக்ளிட் (*Euclid*)

குடியிருந்து வந்தனர். அவர்கள் கடைத்தெருக்களிலும், சந்தைகளிலும் தமது காரியாலயத்தையமைத்துக் கொண்டிருந்தனர். அலெக்ஜாந்தர் சக்ரவர்த்தியின் நாட்களிலேயே புத்தக வியாபாரமென்பது ஒரு நிலையான வருமானத்தையளிக்கும் தொழில்களில் ஒன்றாக விளங்கியது.

பண்டை நாள் புத்தக வியாபாரி முற்றிலும் யோக்கியப் பொறுப்புள்ளவனாக இருக்கவில்லை. அவன் புதியதாகத் தன்கைப் படத் தயாரித்த புத்தகத்தை மிகவும் பழமைவாய்ந்ததென்று பிறர் நம்பும்படி செய்வதற்குத் தன்னுடைய ஜாலங்களை உபயோகித்து வந்தான். கையேட்டுப் பிரதி யொன்றைத் தானியத்தில் சிறிது காலம் புதைத்து வைத்தபின், அதனுடைய நிறம் மாறிப் பாபிரஸைச் செல்லரிக்குந் தறுவாயில், அவன் அதை மிகப் பழைய நூலெனப் புகழ்ந்து விற்று மக்களை ஏமாற்றி வந்தான்.

ராணா ராஜஸிம்ஹன்

கே. ஜி. சங்கர்

ராஜபுத்ரஸ்தானத்தில் மேவாட் ராஜ்யத்தில் ராணா ராஜஸிம்ஹன் (கி. பி. 1653-1680) என்று ஓர் அரசன் இருந்தான். அவன் ஜகத்ஸிம்ஹன் (I) மகன். அவன் தாய் மார்வாட் ராஜ வம்சத்தில் பிறந்தவள். அவன் பட்ட மெய்தி நாலைந்து ஆண்டுகள் சென்றதும் டில்லியில் மிகுந்த குழப்பம் ஏற்பட்டுவிட்டது. அக்காலத்திய பாதுஷா ஷாஜஹானுக்கு வயது முதிர்ந்துவிட்டதால், அவனுடைய நான்கு மக்கள் தாரா, சூஜா, மூரத், அலம்கிர் என்ற ஔரங்ஜேப் என்பவர்கள் தமக்குள் பட்டத்திற்காகச் சண்டையிடலானார்கள். ஹிந்து அரசரின் தலைவனான ராஜ ஸிம்ஹனின் உதவியை நாள் வரும் நாடினார்கள். ராஜபுத்ரரனைவரும் மூத்தவனான தாராவின் சார்பாகவே இருந்தார்கள். ஆனால் கி.பி. 1658-இல் அலம்கிர் தாராவைச் சமூகரென்னுமிடத்தில் போரில் வென்று ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டு தன் தந்தையை மரணம்வரை சிறையில் வைத்தும் தன் தமையன்மார்களைக் கொன்றும் தன் நிலைமையை ஸ்திரப்படுத்திக்கொண்டான்.

பிறகு கி. பி. 1660-இல் மேவாட் ராஜ்யத்தில் ஒரு பெரும் பஞ்சம் ஏற்பட்டது. ஆஷாடம், சிராவணம், பாத்ரபதம் என்ற கார் காலம் முழுவதும் சென்று விட்டது. ஆனால் ஒரு துளி மழைகூடக் கிடையாது. பசி எங்கும் அதிகரித்தது. பசி பொறுக்க முடியாததால், கணவன் மனைவியையும், தந்தை தாய்கள் தங்கள் மக்களையும் மறந்தனர். நதிகளும் ஏரிகளும் வற்றிவிட்டன. வர்ணாசிரம தர்மங்கள் எல்லாம் மறைந்து விட்டன. மனிதர் மரம் மட்டைகளையும், போகப் போக மனிதரையும் தின்பாராயினர். எங்கும் ஆண் பெண் யாவரும் ஆயிரக் கணக்காகப் பசியால் இறக்கலானார்கள். தன் ஜனங்கள் வருந்துவதைக் கண்டு ராஜ ஸிம்ஹன் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்திக்க வழி தேடினான். கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு ஆரவல்லிமலையடிவாரத்தில் ஓர் ஏரி கட்டத்தொடங்கி ஏழாண்டுவரை தன் குடிகளுக்கு வேலை கொடுத்து உணவளித்து வந்தான். ராஜ ஸமுத்ரம் என்ற அந்த ஏரி, தலைநகரான உதயபுரத்திலிருந்து 25 மைல் வடக்கில் 12 மைல் சுற்றளவும் சலவைக் கற்களாலாய படிக்கட்டுகளும் உடையது. அதற்கு நீரளிப்பது கோமதி யென்ற ஜீவநதி. அதற்குத் தென்பக்கத்தில் கோட்டை

மதில்களுடன் கூடிய ராஜ நகர் என்ற ஒரு பட்டினத்தையும் கட்டுவித்தான். அவைகள் இன்றும் அவன் பெயரை நிலை நிறுத்தி விளங்குகின்றன.

இப்படி நாடெங்கும் மறுபடியும் செழித்து வரும்பொழுது, அலம்கிர் ரூப்நகர் ராஜ குமாரியை மணம் புரிய விரும்பி அவளை அழைத்துவர 2000 குதிரைப் படையை அனுப்பினான். அக்பர் காலம் முதல் டில்லிச் சக்ரவர்த்திகள் ராஜ குமாரிகளை மணப்பது வழக்கமாய் விட்டபடியால், அலம்கிர் தன் விருப்பத்திற்குத் தடையொன்றையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், ரூப்நகர் ராஜகுமாரி அவனை மணக்க விருப்பமில்லாதவளாய்த் தன்னைக் காப்பாற்றி அழைத்துப் போக வேண்டுமென்றும், தவறினால் தற்கொலை புரிந்து கொள்வேன் என்றும் ஒரு லிகிதம் எழுதித் தன் குல குரு மூலமாக ராஜவிம்ஹனுக்கு அனுப்பினாள். ராஜ விம்ஹனும் உடனே விரைவாக ரூப் நகர் சென்று சக்ரவர்த்தியின் குதிரைப் படையை முறியடித்து ராஜ குமாரியைக் கைக்கொண்டு அவளைத் தானே மணந்தான்.

பின்னர், அலம்கிர் மார்வாட் அரசன் யசோவந்தவிம்ஹனை விஷம் கொடுத்துக் கொன்று அவன் இளமக்களைக் கைப்பற்ற முயன்றான். ஆனால் துர்க்காதாஸ் என்ற மார்வாட் வீரன் இரு நூற்றைம்பது ரஜபுத்ரருடன் 5000 சக்ரவர்த்திப் படையை எதிர்த்துத் தன் இளவரசனைத் தப்புவித்தான். இளவரசனை அஜித்விம்ஹனுடைய தாய் ஒரு மேவாட் ராஜ குமாரியாதலால், ராணாவைச் சரணடைந்தாள். ராணாவும் அவர்களை வரவேற்று அஜித்விம்ஹனைத் தன் ராஜ்யத்தில் கெல்வாவில் துர்க்காதாவின் கண்பார்வையில் வைத்துக் காப்பாற்றி வந்தான்.

இப்படியிருக்க, அலம்கிர் தான் பட்டத்திற்கு வந்தது முதல் தன் ஹிந்துக் குடிகளை மிகவும் வருத்திவந்தான்; கொடுந்தண்டனைகளாலும், மரணபயத்தினாலும் அவர்களை இஸ்லாம் வகுப்பிற் சேர்க்க முயன்றான். அதனால் பயிரிடும் தொழிலும், கைத்தொழில்களும் குறைந்து நாட்டில் வருமானம் மிகவும் குன்றிவிட்டதால், மாகாணத் தலைவர்களின் வேண்டுகோளால் அலம்கிர் தன் மற்ற முயற்சிகளை நிறுத்திவிட்டு ஹிந்துக்களிடம் ஜிஜியா என்ற ஒரு தலைவரி மாத்திரம் வாங்கி வந்தான். இதைப் பொறுக்கமுடியாமல் மஹாராஷ்டிர அரசரான சிவாஜி அலம்கிருக்கு முக்கியமான கடிதம் ஒன்றை அனுப்பினார். அதில் அவர் அலம்கிரின் முன்னவர்களான அக்பர், ஜஹாங்கிர், ஷாஜஹான் என்னும் மூவரும் மத விஷயங்களில் சமரஸியினால் தங்கள் ராஜ்யத்தைப் பெருக்கிச்